வகியர் தன் வினைபாருக்குள் வருத்தமுத்தொழில்களான
பாவேர்ம்பல்பொருளீட்டல் பரிலோர் தொழிலைச்செய்தல்
இசைய வேதிபருக்கேவல் குயிலவத் தொழிலியற்றல்
அசைவில் காருக வினைகளாக்கல் சூத்திரருக்கரே.

மேலெடுத்து உதகரித்திருக்கும் பன்னிரு பிரம்மாங்களால் அந்தணர்க்குரிய தொழில் இவை யெனவும் அரசருக்குரிய தொழில் இவை யென்வும் வணிக்குக்குரிய தொழிலிவையெனவும் வேளாளருக்குரிய தொழிலிவைபெனவும் முறையே விளக்கப்பட்டிருக்கின்றன.

பிராமணனுக்கன்று பிரமனை யீருணங்களின் விவாக பேதத்தாலுண்டான ஆணுலோம பிரதிலோமாதிய வருணங்களின் பெயர்த்தொகுதிகளைக் குறிக்கும் பிரமாணங்களைப் பிங்கல முதலிய நூல்களினின்றும் காட்டுவாம்.

சூத்திரரின்கீழ் சொல்லப்பட்ட வருணக்கிரமங்களாவன.

(பிங்கல நிகண்டு ஆடவர்வகை)

ஆயுள்வேதியர் பெயர்.—மருத்துவர் பிடகர் மருத்துவர் ஆயுள் வேதியருக்க பிதானமம்மே.

குயவர் பெயர்:—குலாலர் வேட்கோவர் கும்பகாரர் குயவர்.

உப்பமைப் போர்பெயர்:—உமணர் அளவர் உப்பரி உப்பமைப்போர்.

கடிகைமாக்கள் பெயர்:—பெருகம்பீகளே மங்கலப்பாடகர்கடிகை மாக்கள் எட்டருமாகும்.

கம்மாளர்பெயர்:—கம்மியர் பீவனர் ஓவியர் வித்தகர் கம்மாளர் தபதி பீ பொதுப்பெயர் கட்டுரை.

கொல்லர் பெயர்:—கருமர் மனுவர் கம்மியர் கொல்லர்.

தச்சன் பெயர்:—மரவினையாளன் தபதி தச்சன்.

தட்டார் பெயர்:—செங்கொல்லர் பொன்வினை செய்வோர் தட்டார்.

மற்றுந்தட்டார்பெயர்:—அக்கசாலையர் சொர்ன காரருமாகும்.

கன்னர் பெயர்:—கன்னுவர் கஞ்சகார் கன்னர்.

சிற்பாசாரியர் பெயர்:—கல்வினையர் சிற்பாசாரியர் கற்றெழிலோர்.

சுரப்பு தருவியாளர் பெயர்:—குயிலுவர் சுரப்புக் கருவிகொளர் குரியேயர்.

தோற்கருவியாளர்பெயர்:—இயவர் தோற்கருவியினைசைக்கு மாக்கள்

மிலேச்சர் பெயர்:—மிலேச்சர் ஆரியர்.

சோனகர் பெயர்:—யவனர் சோனகர்.

சித்திரக்காரர் பெயர்:—ஓவியர் சித்திரக்காரராகும்.

மூத்தநிகோபபார் பெயர்:—மணிகுயிற்றுநர் முத்தநி கோப்பாரா கும்.

வண்ணர் பெயர்:—காழியர் சீரங் கொல்லியர் வண்ணர்.

மற்றும் வண்ணர் பெயர்:—ஏகாலியர் தூசரென்னுமாகும்.

நாவிதன் பெயர்:—பெருமஞ்சிகனே மயிர்வினைஞனுவிதன்.

மற்றும் நாவிதன் பெயர்:—வனுதி கிரையன் மிந்தலியனுமாகும்.

செக்கான் பெயர்:—சக்கிரிநத்தி செக்கானுகும்.

சங்கறுப்போர்பெயர்:—ஒளிவினை போற்றர், சங்கறுப்போரே.

மீகாமன் பெயர்:—மீகான் மாலுமி மரக்கலன் மீகாமன்.

ஆட்டுவாலிகன் பெயர்:—சாபலனாட்டி வாரகன்றன்பெயர்.

ஊன்விலைஞர் பெயர்:—சூனரேபூன் விலைஞரென்ப.

தோல்வினைஞர் பெயர்:—பரம்பர்தோல் வினைஞர் பெயராகும்.

உறைகாரர் பெயர்:—காரோடருறைகாரர்

நூன்னர் பெயர்:—குயினர் பொல்லர் நூன்னராகும்.

கள்விலைஞர் பெயர்,—பனமுயர் தவசர் படுவர் கள்விலைஞர்.

சண்டாளர் பெயர்:—குணுங்கர் புலைஞர் பீழோரிழிஞர்—ஆணங்கு சண்டாளர்க் கபிதானம்மே.

பாணர் பெயர்:—சென்னியர் வைரியர் செயிரியர் மதங்க-பின்னிசை காரர் பாணரென்ப.

சூத்திரருக்குப்பின் சொல்லப்பட்ட வருணக்கிரமங்களாவன.

திவாகரம் எக்கட்பெயர் தொகு.

மிலேச்சர் பெயர்:—மிலேச்சர் ஆரியர்.

சோனகர் பெயர்:—யவனர் சோனகர்.

மருத்துவர் பெயர்:—ஆயுள்வேதியர் மாமருத்துவர்லோர் மாமரத் திரரே பிடகர் மருத்துவர்.

கைக்கோளர் பெயர்:—தந்துவாயர் காருகர் கைக்கோளர்.

குயவர் பெயர்:—கும்பகாரர் குலாலர் வேட்கோவர் என்றிவ்வை குயவர் மட்பகைஞரென்ப.

உப்பமைப்போர் பெயர்:—உமணர் அளவர் உப்பமைப்போரே.

சித்திரக்காரர் பெயர்:—ஓவியர் சித்திரக்காரராகும்.

கண்ணுளர் பெயர்:—கம்மியர் யவனர் கொல்லர் தபதியர்-அக்கசாலை
யர் சிற்பியர், அதஞ்ஞெடு-வித்தகர் வித்தியர் புணைவர் அறிவ
ரென்-றத்தகு கண்ணுளர் பெயர் எனவறைவார்.

தச்சர் பெயர்:—தபதியர் மரவினைஞர் தச்சரகுமம்.

கன்னர் பெயர்:—கன்னுவர் வஞ்சக்காரர் கன்னர்.

தட்டார் பெயர்:—செங்கொல்லர் தட்டார் பொன்வினை செய்வோர்.

வண்ணர் பெயர்:—ஏகாலியர் தூசர் நரங்கோலியர் காழியர் வண்
ணராகக்கருதுவர்.

உறைகாரர் பெயர்:—காரோருறைகாரர்.

ஊன் விலைஞர் பெயர்:—குனரூன் விலைஞர்.

தோல்வினைஞர் பெயர்:—பதம்பர் தோல்வினைஞர்.

நாவிதர் பெயர்:—பெருமஞ்சிகரே மயிர் வினைஞர் நாவிதர்.

செக்கார் பெயர்:—சக்கிரி நந்திகள் செக்காராகும்.

கள்விலைஞர் பெயர்:—பழையர் தவசர் பலவர்கள்விலைஞர்.

சண்டாளர் பெயர்:—சூனுங்கர் வங்கர் கவுண்டர் மனகதர்-இழி
ஞர் கொலைஞர் புலைஞரென்றுங்-கிளையும் பெயர் சண்டாளர்க்
கெய்தும்.

பாணர் பெயர்:—சென்னியர் வைரியர் சூதர் மாகதர்-இன்னிசை
காரர் மதங்கர்பாணர்.

ஐந்திணையும் அவைகளிற் வசிக்குங் குடிகளின் பிரபாமும்
வருமாறு.

பிங்கலம் திவாகாரம் முதலியவைகளில் சூத்திரருக்குப்பின்
சொல்லப்பட்ட வருணங்களுங் குறிஞ்சி பாலை முல்லை நெய்தல்
மருதம் என்னும் ஐந்திணையில் வசிக்கும் வருணங்களும் தொழிலா
லும் இடத்தாலும் பேதப்பட்டிருப்பினும் ஸ்மிருதிபுராணேதிகாசங்
களில் கூறப்பட்ட சூத்திர அனுலோம பிரதிலோம பிரிவுகளினுட்
பட்டவர்களேயன்றி வேறல்லர்.

பூர்வமிருந்த மேதாவிகளாகிய நூல் வல்லோரும் சுலோகங்களா
லும் ஐந்திணையின் தன்மையை ஐவகையாகவகுத்து அவ்வந்நிலங்க
ளிலுற்பத்தியாகும் பொருட்களைன்சருப்பொருள் என்றழைத்தனர்.
கருப்பொருளாவது உணவு, ஊர், குடி, தெய்வம், தொழில், விலங்கு,
புள், மரம், பறை, யாழ்முதலிய பொருள்கள் ஐந்திணைக்குரியனவாம்.

பிங்கலத்தில் கூறிய ஐந்திணையின் பிரபாவம் வருமாறு.

பிங்கலம் நாங்காவது அனுவகை.

குறிஞ்சிநிலத்தூரின் பெயர்:—குறும்பொறை சிறார் சிறுகுடி குறி
ஞ்சியூர்.

குறிஞ்சி நிலப்பறையின் பெயர்:—தொண்டகம் முருகியம் துடியம்
நிலப்பறை.

குறிஞ்சிநிலமாக்களின் பெயர்:—கானவர் குறவர் சுனிலமாக்கள்.

குறிஞ்சிநிலப் பெண்கள் பெயர்:—குறத்தியர் கொடிச்சியர் மறத்தி
யர் பெண்டிர்.

குறிஞ்சித் தலைமகன் பெயர்:—பொருநன் சிலம்பன் வெற்பன் மலை
மகன்.

குறிஞ்சிக்கடவுளின் பெயர்:—கந்தனம் நிலக் கடவுளாகும்.

பாலைநிலத்தூரின் பெயர்:—முனையிடங் குறும்பு முதுபாலை நிலத்
தூர்.

பாலைத்திணையின் பெயர்:—மறுபுலஞ் செம்புலம் வன்பால் பாலை.

பாலைநிலப்பறையின் பெயர்:—அந்திலைப்பறை துடியாகுமென்ப.

பாலைநிலமாக்கள் பெயர்:—மறவரெயினர் வேடர் கிராதர்—கானவர்
குறவர் புனினர் வேடர்.

பாலைநிலப் பெண்கள் பெயர்:—னெயிற்றியர் பேதையர் மறத்தியர்
பெண்டிர்.

பாலைநிலத் தலைமகன் பெயர்:—விடலையுங்காளையு மீளியுந்தலைமகன்.

பாலைநிலக் கடவுள் பெயர்:—பாலைக்கடவுள் துர்க்கை யென்ப.

பிங்கலம் நாங்காவது அனுவகை முல்லைநிலத்தூரின் பெயர்.

முல்லை நிலத்தின் வேர் பெயர்:—அந்திலைத்தூர்ப்பெயர் பாடியென்ப.

முல்லைநிலப்பறையின் பெயர்—அந்நிலைப்பறையேறு கோள்ப்பம்பை.

முல்லை நிலமாக்கள் பெயர்—இடையரண்டர் பொதுவர் கோபா
லர் குடவர் முதுசர் கோவலரையர், தொறுவர் விந்தர்முல்லை நில
மாக்கள்.

முல்லைநிலப்பெண்டிர் பெயர்:—இடைச்சியர் தோறுத்தியர் பொது
வியர் குடத்தியர்.

முல்லைநிலத் தலைவன் பெயர்:—காளை நாடன் குறும்பொறை
நாடன் தோன்றலண்ணல் முல்லைத்தலைவன்.

முல்லைக்கடவுளின் பெயர்:—திருமால் நிலக்கடவுள் பெயரே.

பிங்கலம் நாங்காவது அனுவகை மருதநிலத்தூரின்பெயர்.

மருத நிலத்தூரின் பெயர்:—மணப்பரம் தண்ணடை மருத
நிலத்தூர்.

மருதநிலப்பறையின் பெயர்:—அரிகினை முரசம்பண்ணை மருதப்பறை.

மருதநிலமாக்களின் பெயர் :—களமருதுழவர்கடைஞர் சிலதர் மள்ளர் மேழியர் மருதமாக்கள்.

மருதநிலப் பெண்கள் பெயர்:—உழத்தியர் கடைசியரர் நிலப்பெண்டிர்.

மருதநிலத் தலைமகன் பெயர் :—மகிழ்நனூரன் கிழவன் றலைமகன்

மருதநிலக் கடவுள் பெயர் :—அந்நிலக் கடவுளமர் பதியே. (இந்திரன்.)

பிங்கலம் நான்காவது அவனிவகை நெய்தனிலத்தினிபெயர்.

நெய்தனிலத்தூரின் பெயர் :—பாக்கம் பட்டினநெய்தனிலத்தூரே.

நெய்தனிலப்பறையின் பெயர் :—சாபறை மீன் கோட்பறை நெய்தற்பறை.

நெய்தனிலமாக்கள் பெயர் :—கடலர் திமிலர் சலவர் நுளையர், பரதவலைபரந்நிலமாக்கள்.

நெய்தனிலப் பெண்கள் பெயர் :—பரத்தியர் நுளைச்சியரந்நிலப்பெண்டிர்.

நெய்தற்றலைமகன் பெயர் :—மெமல்லன் புலம்பன்றன் கடற்சேர்ப்பன்-றுறைவன் கொண்க னெய்தற்றலைமகன்.

நெய்தனிலக் கடவுளின் பெயர் :—அந்நிலக் கடவுள் வருணனுமாம்.

நிவாகரம் மக்கட்பெயர் தொகுதி.

குறிஞ்சிநிலமக்கள் பெயர் :—குறவர் கானவர் குன்றவர் புனவர் இறவுளர் குறிஞ்சிநிலமக்கட் பெயரே.

குறிஞ்சிநிலப் பெண் பெயர் :—கொடிச்சியர் குறத்தியர் குறிஞ்சிநிலப்பெண் பெயர்.

குறிஞ்சிக்கிறைவன் பெயர் :—கானகநாடன் பொருப்பன் பொருநன், வானமீயன் வெற்பன் சிலம்பன், சிறந்த நன்பனென்றிவைமுதலாக், குறிஞ்சிக்கிறைவன் பெயரெனக் கூறுவர்.

இதுவும் டை. டக்கட் பேயர் தொகுதி.

பாலைநிலமக்கள் பெயர் :—மறவரெயினர் பாலைநிலமாக்கள்.

பாலைநிலப் பெண்கள் பெயர் :—மறத்திய ரெயிற்றியர்வன் கட்பிணைக்கள், அனைத்து மன்னிலத்தரிவையர் பெயர்.

பாலைக்கிறைவன் பெயர் :—மீளியுங் காளையும் விடலையு மென்றிவை, பாலைக்கிறைவன் பெயரெனக் கூறுவர்.

முல்லை நிலமக்கட்கு அந்நிலத்தவர்க்கும் பொதுப்பெயர் :—கொல்லருரெயினர் வனச்சர் சவர், சிலவர் கானவர் வாகுலவர் கிராதர், புளினர் மற்றவ்வேடரென்றும், கணியவர் பொதுப்பெயாரதல் வேண்டும்.

(இதுவும்) டை டக்கட் பெயர்த் தொகுதி.

முல்லை நிலமக்கள் பெயர் :—முல்லையாளர் கோவலரிடையர், சொல்லியவண்டர் பொதுவரான் வல்லோர், குடவர் பாலர் தொழுவர் கோவிந்தர், அண்டர் கோபாலராயர் முதர், ஒன்றியமுல்லை நிலத்தவர் பெயரே.

முல்லை நிலமகளிர் பெயர் :—ஆச்சியர் தொறுத்தியர் பொதுவியர் குடத்தியர், வாய்த்த விடைச்சியர் முல்லை நிலமகளிர்.

முல்லை நிலத்தலைமகன் பெயர் :—அண்ணலேறன்றல் சூழும்பொறை நாடன், கானகநாடன் முல்லைத்தலைமகன்.

இதுவும் டை டக்கட் பெயர்த் தொகுதி.

நெய்தனிலமாக்கள் பெயர் :—பரதவர் நுளையர் கடலர் வலையர், சலவர் திமிலர் நெய்தனிலமாக்கள்.

நெய்தனிலப்பெண் பெயர் :—நுளைச்சியர் பரத்தியர், நுரைகடற்பிணைக்கள்.

நெய்தற்றலைமகன் பெயர் :—கொண்கன் றுறைவன் மெல்லன் புலம்பன், றண்கடற் சேர்ப்பனெய்தற்றலைமகன்.

இதுவும் டை டக்கட் பெயர்த் தொகுதி.

மருதநிலமக்கள் பெயர் :—களமர் தொழுவர் மள்ளர் கம்பர், வினைஞருழவர் கடைஞர் மினைஞரென்றிவை, றலைமையை கழனிக்கடைத்தவர் பெயரே.

மருதநிலப்பெண் பெயர் :—உழத்தியர் கடைச்சியராற்றுக் காலாட்டியர், அடுத்த கழனிக்கடைத்த மகளிர்.

மருதநிலத்தலைவன் பெயர் :—ஊரன் மகிழ்நன் கிழவனென்றிவை, சரலி மருதத்தலைவன் பெயரே.

பிங்கலமுதலிய நிகண்டுகளில் கூறிய வருணக் கிரமங்களை முறையே யெடுத்துக்காட்டினும். இனி யவ்வருணங்களின்பெயர்கள் பல்லாயிரவாண்டுகளுக்கு முன்னரே தமிழ் நாடுகளில் வழங்கிவந்தன வென்பதற்குத் தொல்காப்பிய முதலிய நூல்களின் பிரமாணங்களாலிடம் காட்டுவாம்.

தொல்காப்பியமும் அதன் காலமும்.

தொல்காப்பியமென்னும் பேரிலக்கணமானது அகத்திய முனிவர் மாணாக்கர் பன்னிருவரிலொருவராகிய திரணதூமாக்கினி யென்னும் இயற்பெயரினையுடைய தொல்காப்பியமுனிவரர் அருளிச்செய்தது. இஃது-எழுத்து, சொல்-பொருள் என வகுக்கப்பட்டுள்ளது, இவ்விலக்கணம் முதற்சங்கம் அந்தியத்திலும் இடைச்சங்கத்திலும் கடை சங்கத்திலு மிருந்த புலவர்களால் கையாளப்பட்டதாக நச்சினர்க்கினியார் இயற்றிய உரையாலும் அவர் காட்டுஞ்சான்றுகளாலும் மேற்கோளாலும் நன்குவிளங்கும். நச்சினர்க்கினியர்காலமும் பரிமேலழகியார் காலமும்ஒன்றே. இவர்கள் ஆயிரத்திருநூறு வருஷத்திற்குமுன்னிருந்ததாக எண்ணப்பட்டிருக்கின்றது.

தொல்காப்பிய பதிப்புரையில் கூறுவதாவது.

"பராக்கிரம பாண்டியனே வென்று,துலுக்கர் முதல்முதல் மதுரையையாண்ட (850)எண்ணூற்றைம்பது வருடத்தின் மேலாயிற்று. சங்கத்தார் காலத்திற்கும் பராக்கிரமபாண்டியன் காலத்திற்கும் இடையிலே சோமசுந்தரபாண்டியன் முதலாக நாற்பத்திரண்டு அனுலோமபாண்டியர் அரசுசெய்திருக்கின்றனர், ஆதலால் கடைச்சங்கம் ஒழிந்தகாலம் இரண்டாயிரம் வருஷத்திற்குக்குறையாது. முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதியீறாகக் கடைச்சங்கம் இரு இய நாற்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசுபுரிந்தகாலம் இரண்டாயிரம் வருஷம். வெண்டேர்ச்செழியன்முதல் முடத்திருமாறன் ருக இடைச்சங்கம் இரு இய ஐம்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசுபுரிந்தகாலம் (3500) மூவாயிரத்தைஞ்ஞூறு வருஷமுங் காய்சின வழுதிமுதல் கடுங்கோன் வழுதியீறாக முதற்சங்கம் இரு இய எண்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசுபுரிந்தகாலம் நாலாயிரத்தைஞ்ஞூறு (4500) வருஷமுமாம். ஆகவே முதற்சங்கத்திற்குமுன்னரே முதல் நூல் கண்ட ஆசிரியர் அகத்தியனாரிடந் தமிழ் கற்று அச்சங்கத்திற் சூழும் உடனிருந்து தமதுநூல் நிலவச்செய்த திரணதூமாக்கினி முனிவர் தொல்காப்பியம் இயற்றியபின் சென்ற காலம் எவ்விதத்தாலும் பன்னிராயிரம் வருடத்திற்குக்குறையாது. இக்கால விவரணம் விரசோழியப்பதிப்புரையில் விரிவாக ஆலோசித்துவரணத்தோடும் எழுதியிருக்கின்றேன். ஆங்குகண்டுணர்க" என்று யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம்பிள்ளை B. A., B. L. அவர்களால் பதிப்பித்த தொல்காப்பிய பொருளதிகார பதிப்புரையில் கூறப்பட்டிருக்கின்றது. இதனால் அனேக ஆயிரவாண்டுகளுக்கு

முன்னரே தென்மொழியாகிய தமிழ் சிறப்படைந்திருந்ததென்றும் அரசர்களால் ஆதரிக்கப்பட்டு முதல் இடை கடைகளென்னும் மூன்று சங்கங்களிலும் புகழ்பெற்று ஓங்கிவளர்ந்தென்றும் நன்கையறப் புலப்படுகின்றது. இவ்வாறு பன்னீராயிர வருஷங்களின் மேற்பட இலக்கிலக்கணங்களோடு தமிழ்க்கோர் தனிச்சுடர்போலப் பிரகாசித்து வந்த தொல்காப்பியத்திலே மரபியலிலே ஈன்கு வருணங்களையுங் குறித்துக் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும்—

செந்தமிழ் கூறுவது சோதி

கூறுவது பதினெட்டும் பாரதமெழும் தமிழ்நாடு என்னும் மகுடத்தின் கீழ்,

பாரதயுத்தகாலம் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்பு என்பது நமக்குள் வழங்கும் மரபாகும். ஆனால் சமீபகால மேதாவிகள் சிலரும், விதேச வழிநூல் பலரும் நகரின ஆராய்ச்சி முறையிற் பல்லாற்றானும் சோதித்து வருவதில், முற்காட்டிய காலத்தினின்றும் பெரிதும் வேறுபட்டு அபிப்பிராய மூறுகின்றனர். இவ்வபிப்பிராய பேதங்களில் உள்ள தாரதம்மியங்களையெல்லாம் நன்கு பரிசோதித்து, அவற்றிலொன்றும் பொருந்தியதாதாமை காட்டிச் சித்தாரிருக்கும் ஸ்ரீமத் பி. கோபாலாசாரியர்வர்களின் பிரபலமான பதினெருதக்க காரணங்களால், கி. மு. 12-ம் நூற்றாண்டினதுயே பாரதயுத்த காலமென்று, 'படிப்போர் மகிழ்ந்துகவக்கும்படி, இந்தியன் ரெவ்யூ (Indian Review) என்னும் ஆங்கிலப்பத்திரத்திலும், தாம் ஆராய்ந்து வெளியிட்ட புராதன இந்திய வம்சாவளி என்னும் ஆங்கில நூலினுளும் (Chronology of Ancient India) காட்டியிருக்கின்றனர். இவ்வையரவர்களது கொள்கையைச் சரிதவராய்ச்சிவல்லார் பலர் உண்மையுடையதென்று துணிந்திருக்கின்றார். இவ்வாறு, அக்கொள்கை என்றும் அசைவு பெறுத வலிபெறுமாயின், நமக்கு மூப்பத்தொரு நூற்றாண்டு கட்டும் முந்திய பாரத யுத்த காலத்தை யொட்டி, முரஞ்சியூர் முடிநாகராயர், கௌதமனார், வான்மீகையார், மார்க்கண்டேயனார், குமட்டூர்க் கண்ணனார் முதலிய புலவர்கள் தலைச்சங்கத்திருந்து தமிழ்வளர்த்தார்களென்றுமுடிக்கலாம்.

முதற்சங்க காலத்தில் முடிநாகராயர் முதலிய புலவர்களிருந்தார்க ளென்றும் அக்காலமே பாரதப்போர் நடந்தகால மென்றும் அது இற்றைக்கு முவாயிரத்தொரு நூற்றாண்டாகிற தென்றும் கூறுவதால் தொல்காப்பிய பதிப்புரைகாரர் கூறுவதற்கும் ஜுபரவர்கள் கூறுவதற்கும் மிக்க பேதமிருக்கின்றது. இஃது எவ்வாறாயினு

மாகுக, தொல்காப்பிய மெனும் பேரிலக்கணமானது தொல்காப்பிய முனிவரால் பலவாயிரவருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்டதென்னும் இக்காப்பியத்திற்கு உரையாசிரியரானநச்சினார்க்கினியார் கூறும் வருடங்களுக்கு முன்பிருந்தன வென்றும் ஏற்படுவதால் அந்தணர் அரசர்வணிகர் வேளாளர் என்னும் வருணங்களும் ஏனைய வருணங்களுந் தொன்று தொட்டுள்ளன வென்று சங்கையற அங்கை நெல்லியங் கனியேபோல விளங்கும்.

தொல்காப்பியம் மரபியல்.

கூஉசு-வது சூத்திரம்.

அந்தணர்.

நூலே கரகமுக்கோன்மணையே
யாயுங் காலியந்தனர்க்குரிய.

இஃது உயர்திணை கான்கு சாதியும் பற்றியமரபு உணர்த்துவான் முறையானே அந்தணர்க்குரிய மரபுபட்டுவருங் கலப்பை வேறுபாடினர்-ற்று.

(இ-ள்.) முந்நூலுங் குண்டிகையும் முக்கோலும் யாமை மணையும் போல்வன அந்தணர்க்குரிய. ள்-று. ஆயுங்காலை யென்றதனாற் குடையுஞ் செருப்பும் முதலாயினவும் ஒப்பன அறிந்து கொள்க.

உதாரணம் "எறித்தருகதிர் தாங்கி யேந்திய குடைநீழ-லுறித் தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்" எனவும் "தண்டொடு பிடித்த தாழ்கமண்டலத்துப்-படிவவுண்டிப்பார்ப்பன மகனே" எனவும் வரும். இன்னும் ஆயுங்காலை யென்றதனான், ஒரு கோலுடையார் இருவர் உளர், அவர் திறவறத்து நின்றாராகலின் உலகியலின் ஆராய்ப்படாரென்பது. முக்கோலுடையார்...இருவருட் பிச்சை கொள்வானும் பிறாண்டிருந்து தன்துன்பானும் உலகியலின் நீங்காமையின் அவரையே வரைந்து ஓதினனென்பது. மற்று அரசருக்கும் வணிகருக்கும் உரியநூலினை சண்டு வரைந்தோதினதென்னையெனின், ஒரு கோலுடையான் நூல்களிவான் ஆகலின் அவனுஞ் சிறுபான்மை அந்தணன் எனப்படுமென்பது கோடற்குங் கரகமும் மணையும் உண்டையன் என்றற்குமென்பது. நூலினை முற்கூறினான் பிறப்புமுறையானுஞ் சிறப்புமுறையானுமென்பது. இனி குடிமியுங் குசையும் போல்வன கூறிற்றிலன், அது முன்னரும் பின்னரும் வருதலானும் மன்னரும் வணிகரும் பெறுதலானு மென்பது.

ஷ கூஉ-வது சூத்திரம்.

அரசர்.

படையுங் கொடியுங் குடையு முரசு
நடை நவில் புரவியுங்களிறுந் தேரும்
தாருமுடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோலரசர்க்குரிய.

இது முறையானே அரசருக்குரியன கூறுகின்றது.

(இ-ள்.) கொடிப்படையுங் கொடியுங் குடையும் முரசுங் குதிரையும் யானையும் தேருந்தாரும் முடியும் பொருந்துவன பிறவும் அரசருக்குரிய எ-று.

பிறவும் என்றதனால் கவரியும் அரியணையும் அரண் முதலாயினவுங் கொள்க. தெரிவுகொள் செங்கோல் அரசர் என்றதனானே செங்கோல் கொள்ளப்பட்டது. தாரென்றே போர்ப்பூவும் தார்ப்பூவும் அடங்கின. படையென்புழிநடைநவில் புரவியுங்களிறுந் தேரும் அடங்காவோவெனின் அடங்கும். அவைநோக்கிக் கூறினனல்லன். அவை பட்டஞ் சாத்தியவாறல் நோக்கிக் கூறப்பட்டன.

அஃதேற் தேர் கூறியது என்னை யெனின், அதுவும் அவைபோல அரசர்க்கே உரியதென்றற் றென்றற்கும் அது பூண்ட குதிரையும் அவர்க்கே யுரியவென் றளவென்றற்குங் கூறினனென்பது. இக்கருத்திறே போலும் நடைநவில் புரவியென்னச் சிறப்பித்து அதனை முற்கூறிய தென்பது. எல்லாவற்றினுஞ் சிறந்தது ஆதலான் முடிபிற் கூறப்பட்டது. தெரிவுகொள் செங்கோல் அரசரென்பதனான் அரசரெல்லாந் தங்காட்டு நன்றுந்தீதும் ஆராய்ந்து அதற்குத்தக்க தண்டஞ்செய்தற்குரிமையும் அது வெனக்கொள்க.

சுஉஅ. அந்தணாளர்க்குரியவு மரசர்க்
கொன்றியவருஉம் பொருளுமாருளவே.

இது மேற்றந்து ஓர் புறனடை.

(இ-ள்) அந்தணாளர்க்கு உரியவெனமேல் ஓதப்பட்டன வற்றுண்மூந்நூலும் மணையும்போல்வன அரசசாதிக்குரியவாகியும் வரும். ஏ-று பொருளுமாருளவென்றதனான் அந்தணாளர்க்குரியனவற்றுள் வேள்விக்கலப்பை யொன்றி வருதல் பெரும்பான்மையென உணர்க. சண்டு அவற்றை விதந்தோதினான் ஒழிந்தபுலனெறி வழக்கிடை பயிலாமையினென்பது. "அறிவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமுமை வகை மரபினரசர் பக்கமு மிருமூன்று மரபினோனர் பக்கமும்"

பற்றிவாகைப் பொருள் பிறந்தவின் அவற்றைப் புறத்திணையிய லுட் கூறினன். ஆயினும் சண்டுத்தழீஇக் கொள்ளப்படும் மரபுவ கையான் என்பது. என்போல வெனின், "அ-இ-உ அம்மூன்றுஞ் சுட்டு" எனநூன் மரபினுள் ஓதிய மூவகைச் சுட்டினை இடைச் சொல் ஓத்தினுள் ஓதானுயினுன் அதுபோல வென்பது. "கொன்று களம் வேட்ட ஞான்றை" எனவும் "அதெளம் வேட்டவடுபோர்ச்செழிய" எனவும் அர்சர்க்கு வேள்விகூறினவாறு. பிறவும் அன்ன.

சூகூ. ஊரும் பெயரு முடைத்தொழிற் கருவியும்
யாருஞ் சார்த்தி யவையவை பெறுமே.

இது மேற்கூறிய அந்தனர்க்கும் அரசர்க்கும் உரியனவற்றொடு ஒழிந்த சாதியோர்க்கும் ஒப்பன உடன் கூறுகின்றது

(இ-ள்.) நான்கு சாதியாரும்பிறந்த ஊரும் அவர் தம்பெயரும் அவர் சாதிக்கு உரித்தென்றற்கேற்ற கருவியும் யாருஞ் சார்த்தப் பட்டனவை அவை பெறுபடாறும்.

இம்மூன்றும் வரையறுத்துச் சொல்லப்பட்ட எல்லாச் சாதியா ருக்கும் ஒப்பச்செல்லுமென்பதுகருத்து. எற்றிக்கு? இவை சாதி பற்றிவேறுபடாப்பொருளாகலின், ஊரும் பெயரும் என்பன, உறை யூர்ஏணிச்சேரிமுட்டமோசி பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன்கடி யலூருருத்திரங் கண்ணன் என்பன அந்தணர்க்குரியன; உறையூர்ச் சோழன் மதுரைப் பாண்டியன் என்பன அரசர்க்குரியன; காவிரிப் பூம்பட்டினத்துக்காரிக்கண்ணன் மதுரை ஆறலை வாணிகன் இள வேட்டன் என்பன வணிகர்க்குரியன; அம்பர்கிழான்நாகன் வல் லங்கிழான் மாறன் என்பன வேளாளர்க்குரியன. இனி உடைத்தொ ழிற்கருவியென்பன, அந்தணர்க்குச் சுருவையுஞ்சமிதை குறைக் குங்கருவியும் முதலாயின; அரசர்க்குக் குடியுங்கூழும் அமைச்சும் நட்பும் முதலாயின; வணிகர்க்கு காம்பும் மணியும் மருந்தும் முத லாயின; வேளாளர்க்கு நாஞ்சிலும் சகடமும் முதலாயின. பிறவும் அன்ன. அனையெல்லாம் அவரவர் செய்யுட்குரியவென்பது.

சூகூ. தலைமைக் குணச்செரு லுத் தந்நமக்குரிய
நிலைமைக்கேற்ப நிகழ்த்தவென்ப.

இதுவும் அது, (இ-ள்.) அந்நா ருசாதியார் தலைமைக்குணப் படச்சொல்லுந் சொல்லும் அவற்றதற்குரிய நிலைமைக்கேற்ப நிகழ் த்தவும்படும். எ-று. அந்தணர் தலை. குணங் கூறுங்காற் பிரமனே

டுகூறியும் அரசரை மாயவனெடு கூறியும் வணிகரை நிதியின் கிழவ னெடு கூறியும் வேளாண்மாந்தரை வருணனெடு கூறியுந் தலைமைக் குணச் சொல் நிகழ்த்தப்படும். அனையெல்லாம் அவரவர் செய்யு ளுட் கண்டுகொள்க.

சூகூ. இடை யிருவகையோ ரல்லது நாடிற்
படைவகை பெறுமரென்பரால் புலவர்.

மேல்நான்கு வருணத்தாரையும் உடன்கூறி வந்தான் இது முதலாக் கடையும் ஒழித்து இடைநின்ற இருவருணத்தார்க்கும் ஆவதோர் புறனடை கூறுகின்றது. (இ-ள்.) அரசரும் வணிகரும் அல்லது படைப்பகுதிபெறார். எ-று.

படைப்பகுதி யென்பன வேலும் வாளும் வில்லும் முதலா யின. நாடின் என்பதனுன் ஒருசார் அந்தணரும் படைக்குரியரென் பது கொள்க. அவர் இயமங்கியாருந் துரோணனுங் போலும் முதலாயினரெனக் கொள்க. வேளாண்மாந்தர்க்கும் இஃதொக்கும். இவை விகாரமெனவும் எடுத்தோதி, வருணங்கட்கே இஃதியல் பெனவும் கொள்க.

சூகூ. வைகிருள் பெறுமே வணிகர் வாழ்க்கை.

இது வணிகர்க்குரியது கூறுகின்றது.

(இ-ள்.) வணிகர்க்குத் தொழிலாகிய வாணிக வாழ்க்கை உள் ளூறையாகச் செய்யுள் செய்தல் பெரும்பான்மையுமாம் எ-று. அனையும் அவர் செய்யுளில் காணப்படுமாறு அறிந்துகொள்க.

சூகூ. மெய்தெரி கைகிளை வினல் வகையுணவின்
செய்தியும் வரைபா ரப்பரலான.

இதுவும் வணிகர்க்கே உரியதொழில் கூறுகின்றது.

(இ-ள்.) பொருள் தெரிந்த வகையான் எண்வகைக்கூலமுஞ் செய்து விளைத்தலும் அவர் கடன் எ-று. அவையும் அவர் பண்டத் தோடு உபகாரப்படுமாகலின் வரையப்படாதென்ற னென்பது. எண்வகையுணவென்பன பயறும், உழுந்தும், கடுகும், கடலையும் எள்ளும், கொள்ளும், அவரையும், துவரையுமாம்.

சூகூ. கண்ணியுந்தாரு மெண்ணினரான்றே.

இதுவும் அது. இவையும் வணிகர்திறத்தன. எ-று.

கண்ணியென்பன சூடும்பூ, தாரென்பது ஒரு குடிப்பிறந்தார் க்குரித்தெனவரையறுக்கப் படுவதாயிற்று. எண்ணப்படுமென வே அவரவர்க்குரிய வாற்றுற் பலவாகி வரும். அவை வந்தவழிக் கண்டு கொள்க.

சூகூசு. வேளாண் மாந்தர்க் குழுதூணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

(இ-ள்.) இது வேளாண் மாந்தர்க்குக் கூறப்படும் தொழில் கூறுகின்றது. வேளாண்மாந்தர் பலவகைப்பட்ட தொழிலினரேனும் உழுந்தொழிலே பெரும் பான்மைத் தாகலான் அதனையே சிறப்பித்து சொல்லுதன் மரபு, எ-று.

உழுதுண்டு வாழ்வார் என்பது இதன் பொருளாயிற்று. மற்றுப் பார்ப்பியன் முதலாகிய நால்வகைத தொழிலும் வாகையுட் கூறினமையின் இச்சூத்திரமும் மேலைச்சூத்திரங்களும் மிகையாம் பிறவெனின், அற்றன்று; பார்ப்பியனும் அரசியனும் வாணிகத் தொழிலு மாகிப் பொதுப்படநின்ற ஒதலும் வேட்டலும் ஈதலும் இவர்க்கு ஒத்த சிறப்பினவாகலானும் அவருள் வணிகருக்கும் ஒழிந்த வேளாளர்க்கும் ஒத்த செய்தி யெனவாகிய உழவு தொழிலும் நிரைகாத்தலும் வாணிகமுமென்பன அவற்றின் ஒத்த சிறப்பினவற்றி அவ்றுள்ளும் ஒரோ வொன்று ஒரோவருணத்தார்க்கு உரியவாமாகலானும் ஈண்டு அவை விதந்து கூறினனென்பது. நிரைகாவலும் உழவு தொழிலும் வணிகர்க்கும் வேளாயுளர்க்கும் தம்மாறுதல் போலாது வாணிகவாழ்க்கை வேளாண் மாந்தர்க்குச் சிறுவரவிற்றெனவும் உழுதுண்டல் வணிகர்க்குச் சிறுவரவிற தெனவும் எண்வகைக் கூலதொடு பட்டதே பெருவரவிற்றெனவுங் கூறினன் இச்சூத்திரங்களா னெனபது. இதனது பயம்புலனெறிவழக்கினுள் இவர்க்கு இவை சிறந்த மரபு என்றலேயிற்று.

சூகூஎ. வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப்வவர் பெறும்பொருளே,
இது நான்காம் வருணத்தார்க்கோர் புறனடை.

(இ-ள்) வேந்தர் கொடுப்பின் வேளாண்மாந்தர்க்குப் படைக் கலமுங் கண்ணியும் பெறும்பொருளாகச் சொல்லப்படும். எ-று. வேந்துவிடு தொழிலென்பது வேந்தனற் கொடுக்கப்படுதண்டத் தலைமையாகிய சிறப்புக்காரணத்தா னென்றவாறு. அகத்திணையியலுள் "உயர்ந்தோர்க்குரிய வோத்தினை" என்புழிக் கூறப்பட்ட தெனின், வேளாளரை யொழித்து ஒழிந்தோரை நோக்கிற்று அச்சூத்திரமென்பது. மேற்கூறியவற்றையும் மரபுபற்றி ஈண்டு வரையறை கூறுகின்றவாறெனக்கொள்க. அவையும் ஆசிரியர் பாட்டுக்களுட் கண்டுகொள்க.

சூகூஅ. அந்தணாளர்க் கரசுவரைவின்றே

இஃது எல்லாவற்றிலுஞ் சிறுவர விற்றாகி அரசர்க்குரிய தொழில் அந்தணர்க்குரியவாகலின் ஈண்டுப்போதந்து கூறுகின்றது.

(இ-ள்). அரசர் இவ்வழி அந்தணரே அவ்வரசியல் பூண்டு ஓழுகலும் வரையப்படாது, எ-று. மக்களோத்கின்ற மன்னவர்க்குப் பின்னே மறையோரான் அரசு தோற்றப்பட்டாற்போலக் கொள்க.

சூகூக. வில்லும் வேலுங் கழலுங் கண்ணியுந்
தாருமாரமுந்தேரும்வாளு
மன்பெறுமரபினேனோர்க்கு முரிய.

இது முடியுடை வேந்தரல்லாக்குறுநிலமன்னர்க்கு உரியன கூறுகின்றது. (இ-ள்) இவ்வெண்ணப்பட்டனவெல்லாங் குறுநிலமன்னர்க்கு உரியன. எ-று. மன்பெறுமரபின் ஏனோரெனப் படுவார் அரசுபெறுமரபிற்குறு நிலமன்னர்எனக்கொள்க. அவைபெரும் பாணற்றுள்ளும் பிறவற்றுள்ளுங்காண்படும்.

சூசூ அன்னராயினு மிழிந்தோர்க்கில்லை.

இஃது எய்தியதிகந்து படாமைக்காத்தது,

(இ-ள்) மன்னவராபோதும் செல்வத்தராகி இழிகுலத்தோர் நாட்டான்டாராயினும் அவர்க்கு இவைகூறல் அமையாது எ-று. "மன்பெறுமரபினோனோர்" எனவே அரசர் வையெயன்றிக்கீழ் அமையாவாயிற்று.

பன்னிருபாட்டியல்.

இஃது சங்கத்தச்சன்றோர் பலர் இயற்றியபாட்டியன்முனி னறும் முற்காலத்தே செய்யப் பெற்ற இறந்த தால். எழுத்தியல் சொல்லியல் இனவியல் என்னும் மூன்று பகுப்புடையது; இஃது ஏனைய பாட்டியல்களினும் தெளிவாகவும் அழகாகவும் விஷயங்களை எடுத்துரைப்பது. இதனும் வருணக்கிரமத்தைக் கூறுகின்றமை யைக்கவனிப்பாம்.

பன்னிருபாட்டியல் எழுத்தியல் வருணம்.

அந்தணர்.

நறுமலர்திசைமுகனீசனுரண்
னறுமுகன்படைத்தன வந்தணர்சாதி.

அவை:—அகரமுதற்பன்னிருயிரும் கசதநபமவும்,
திருமாலரனே திசைமுகன் குமரன்
மரபிற் படைத்தன மறையுளர் சாதி.

வருணதருப்பணம்

அரசர்.

இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
அன்னருஞ் சிறப்பின் மன்னவர் சாதி.

அவை:—தருமயர.

இந்திர னிரவி சோமனிம் முவர்
தந்த வெழுத்தே யரசர் சாதி

வணிகர்.

திருமிகுநிதிக்கோன் வருணன் படைத்தன
வணிமிகு சிறப்பின் வணிகர் சாதி.

அவை—லவறன.

வருணனிதிக்கோ னென்றிவர் படைத்தன
வசைதீர் சிறப்பின் வணிகர் சாதி.

நந்தீசசாதி.

கூற்றுவன் படைத்தன கூற்றன விரண்டு
மேத்திய மரபிற் குதிரர் ஜாதி.

அவை.—முன,

இயமன் பண்டைத்த விருவகை யெழுத்துந்
தகைமேர் மரபிற் குதிரர் சாதி.

சொல்லியல்.

சசக. பெயர்ப்பொருத்தம்.

என்வகைப்பெயரு நன்னூதல் செப்பிற்
குலங்குடிகோத்திர கலம்பெறு குணமே
மனமேயாணை மன்னிய சிறப்பே
யியற்பெய ரென்றிவை தம்முளியன்ற
சிப்பியற் பெயரெனு மிருநிறத்திற்கு
மயக்கறமொழி முதலெடுக்குஞ் சொல்லுடன்
பொருத்துங்கொள்வர் கருத்துணர்ந்தோரே.

சசச. பார்ப்பார் அரசர் வணிகர் வேளாள ரெனப்
பாற்படுநூற் பெயர்குலப் பெயராகும்.

இனவியல்.

பாப்பொருத்தம்.

அந்தணர்க்குரியது வெண்பா.

சகக. அந்தணர் சாதியாகிய வெள்ளைக்குச்
சந்திரன் றன்னெழி தகைமிகு வியாழன்
கடவுள் காத்திகை முதலேழ்நாளா

மீனங்கடல்நீர் தேனேயோரை
சந்தனம்விரைபூவந்தண் மல்லிகை
வெண்மதிநிறனே வண்ண நிலனே
முல்லையென்னைச் சொல்லினர் புலவர்.

அரசருக்குரியது ஆசியப்பா.

காவலர் சாதியாகிய வகவற்
காகிய கடவுளர் செங்கதிர் செவ்வாய்
நாளைமக முதலனே ழாருஞ்
சிங்கந்தனுவே மேடமோரை.
செஞ்சந்தனம் விரை கழுநீர்பூவே
செம்பிற் நிறனே நன்னிலங் குறிஞ்சி.

வணிகருக்குரியது கலிப்பா.

நெடுநிலைக் கலியே வணிகர் சாதி
கடவுளர் சனிபுதன் குருசுக்ரனே
யதடமுதலாறே யோரை துலாங்குட
மிதுனஞ் சந்தனம் விரைபபூச் சண்பகம்
பொன்னிற நிறனே நன்னில நெய்தல்.

வேளாளர்க்குரியது வஞ்சிப்பா.

வஞ்சிய வேளாண்சாதி வஞ்சி
நாளையவிட்ட முதலேழ்நாளா
மிடபங்கன்னி மகரமோரை
சார்ந்தவிரண்டே தண்ணறுங்கலனை
யோர்ந்தியபோதே யின்னறுநீல
நீல நிறனே நெடுநில மருதம்.

இலக்கணநூல் பாட்டியல்.

வருணப்பொருத்தம் கவி 12.

காலமன் சந்திர னிந்திரன் கண்டன காவலற்கு
மாலயன் சேயான் கண்டன மாமறையோர்க்கு நிதி
கோலவனந்தன் கண்டனவைசற்கு வணிகருக்கு
வேலயன் கண்டன வேளாளருக்கும் விலக்கிலையே.

(இன்னும் சதுர்முகனுக்கு விஷ்ணு பிரமன் சுப்பிரமணியன
இந்நால்வரும், அரசருக்கு சூரியன் சந்திரன் இந்திரன்
இம்மூவரும், வணிகருக்கு சூபேரன் யமன் இவ்விருவரும், வேளாள
ருக்கு வருணனும் அதிதேவதைகளாம்.

ஷை நூல்—ங்க செய்யுள்.

அந்தணற்கு காலாறு அரசற்கிருபதாம்
இந்து விரல் வணிகற் கெண்ணிரண்டாம்—முந்துவிரல்
வேளானற் கீராறும் வெள்ளோலே வேயணிய
தோளாயறி நீ தொகுத்து.

(இ-ள்.) அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், இந்நால்வருக்கும் எழுதவேண்டிய கிருபம் அல்லது ஓலையின் பிரமாணம்வது:—அந்தணர்க்கு இருபத்துநாலு, அரசர்க்கு இருபது, வணிகருக்கு பதினாறு, வேளாளருக்குப் பன்னிரண்டு அங்குல அளவில் முறையே எழுதல்வேண்டும் என்பதாம்.

ஷை நூல் எடு (வது) செய்யுள்.

வேதியன் வேந்தன் வணிகன் வேளாளனெனு முறையே
ஓதுவர் வெண்பா அகவல் கலிவஞ்சி வொத்தவற்றின்
பேதெனு மவ்வகையாலே வருமென்பர் பெய்ததட்டார்
முதலருங் குழற்றும்மரைகையிற் கரிவளையே.

(இதன் கருத்து) அந்தணருக்கு வெண்பாவாலும் அரசருக்கு அகவற் பாவாலும் வணிகருக்கு கலிப்பா வாலும் வேளாளருக்கு வஞ்சிப்பாவாலும் சொல்லவேண்டும் என்பது முறைமையாம்.

சினேந்திரமாலை க்ரண்டப்போழிப்பு.

ஓராசிகன், துலம்.

வேந்தனரியரோடும் வெஞ்சினவேளிர் வேதியரும்
வாய்ந்ததோர் தெண்டென் றோர் வாணியரு—மேந்ரந்
தூலையாழ்குடமுன்றுஞ் சூத்திரன் கிழ்சாதி
கலியேறுடன் மகளாந்தன்.

(இ-ள்.) தனுச மீனம் இவ்விரண்டும் பிராமணன், மேஷம் சிம்மம் இவ்விரண்டும் க்ஷத்திரியன், கடகம் விருச்சிகம் இவ்விரண்டும் வைசியன், மிதுனம் தூலாம் கும்பம் இம்மூன்றும் சூத்திரன். நிஷபம் கன்னி மகரம் இம்மூன்றும் பஞ்சமன்.

ஷை கேரட்கலன் துலம்.

ஆதிக்கன் செவ்வாய்ரக்கோளரம் வணிகன்
மேதையர்சீ வெள்ளியது வேளாள—னேதை
மறைக்குலகோள் மத்தியுஞ் சந்திரனு மற்றைப்
பிறைக்குலக்கோள் கூரியோரொற்று.

(இ-ள்.) சந்திரன் குரு இக்கோளகள் பிராமணசாதி, சூரியன் அங்காரகன் இவ்விருகோளும் க்ஷத்திரியசாதி, புதன் வைசியசாதி சுக்கிரன் சூத்திரசாதி சனியும் பாம்பும் சண்டாளசாதியாம்.

அகஸ்தியமுனிவர் செய்த பஞ்சபட்சி சாஸ்திரம்.

எ-வது அதிகாரம் கூ-வது செய்யுள்.

வல்லூறு பார்ப்பான் வளரக்தைதான் வணிகன்
செல்லாருங்காகஞ் செகத்தரசன்—நல்லாய்கேள்
கோழியாம் வேளாளன் கூறுமயில் சண்டாளன்
ஆழியானூலாய்ந் தறி.

(இதன் கருத்து.)

அந்தணர் வல்லூறு, அரசன் காகம், வணிகன் ஆந்தை, வேளாள னோழி, சண்டாளன் மயில் என்பதாம்.

கம்பராமாயணம்.

திருவபிடேகப் படலம். கூகூ

*அந்தணர் வணிகர் வேளாண் மரபினராயினாட்டுச்
சந்தனிபுயத்து வள்ளற் சடையனே யனைய்சான்றோ
ருய்ந்தன மடியமென்னு முவகைய ருவரிகாண
வந்தனரி ராமன் கோயின் மங்கலத்தரிமை மாக்கள்

காசிகண்டம்.

ஆசாரங் கூறியது.

வேதியர் முதல்மூவர் வேளாளர் கன்னியை விதிமுறை வேட்பின்
மாதர் மென்றுகிலின் மென்றலை பிடித்தல் மறைநெறி வழக்கெனவு

[ரைப்பர்.

(இ-ள்) வேதியர் வேந்தர் வணிகர் இம்மூவரும் வேளாளர் குலத்திற்றோன்றிய கன்னியைவிதிப்படி விவாகஞ்செய்தலில் அழகியமெல்லிய வஸ்திரத்தின் மிருதுவான முன்றானையைக் கையாற்பற்றல் வேதத்திற் கூறிய கிரமமாகு மென்று சொல்லுவர்.

அம்பலவாணக்கவிராயர் பாடிய சதுரகிரி அறப்பளீசுரர் சதகம்.

மறைமோர் சிறப்பு.

ஓராறு தொழிலையுங் கைவிடார் கௌசலித்
தெய்ன்றாலுப்பது புரிவார்
உதயாதி யிற்சென்று நீர்படிகுவார் காலை
மொருமூன்றினுக்கு மேறவா

* கையேட்டுப் பிரதியிலுள்ளது.

வர்ஞழ வரைத்தமது கைவசஞ் செய்வார்கள்
வருமிடம் வரதனிடமும்
மனதையு மறிந்துதவி யொன்றுறுமிட
வளர்ப்பன்று துலேதுலேக்கும்
ஆள்விடுவர் மனிவுருவை வதுவிசா ரித்திவ
ரளவில் பற்பலசரக்கும்
அமைவுறக் கொள்வர்விற் பார்கணக் கதிலுளவு
மறிவிடார் செலவுவரிலோ
ஆவியொத தேமலியி னளவுங் கொடுத்திவ
ரருள்வசியாருமைமதவேள்
ஆவுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (அக)

வேளாளர் சிறப்பு.

யச்ஞதி கருமமுக் தப்பாமல் வேதிய
ரியற்றிநல்லோர் பெறுவதும்
இரக்ஷ்யபாரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண்
டென்றுநல் லோர்பெறுவதும்
வசனஞ் தப்பாது கனதானியந்தேடி
வணிகர்நல் லோர்பெறுவதும்
மற்றுமுள்ள பேரெலா மிடையின்றி டாததிக
வளமைபெற் றோர்பெறுவதும்
திசைதோறு முள்ளபல தேவாலயம் பூசை
செயுமநல் லோர்பெறுவதும்
சீர்கொண்ட செங்குளமே மலி வேளாளர்
செய்யுமேழிப் பெருமைகாண்
வசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற
வண்ணலே பருணமந்தவேள்.
ஆவுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (அச)

உரைபதி சிவாசாரியர்.

திருத்தொண்டர் புராண வரலாறு ரு-வது கவி.

மாறுகொடு பழையனூர் நீலிசெய்த வஞ்சனையில்
வணிகனுயிர்த் தெழுந்ததுதான்
கூறியசொல் பிழைதாது தனித்து சென்றிக்குரிசி
லெழுபது பேரு முழுகிக் கங்கை

தாராய்ந்து காயத்தி யதுசெபிப்பார் நன்று
மிகுதிபூசைகள் பண்ணுவார்
பாகாதி கருமங்கள் மந்த்ரமெனி யாலோப
மின்றியே செய்துவருவார்
பேராசை கொண்டிடார் வைதிகன் மார்க்கமே
பிழையாதிருக்கு மறைபோர்
பெய்யெனப் பெய்யுமுகி லவர்மனை யெவர்களும்
பேசுதற் கரிதரிதுசாண்
ஆழ்ர் நெஞ்சிதல்லமலனே யெனினாயாது
மண்ணிலே பருண்மமதவேள்
ஆவுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (அ

அரசர் சிறப்பு.

மனுநீதி முறைமையும் பரராஜர் கொண்டாட
வெழுதிய ரணசிரமும்
வான்னிய மொதோச சாதன விசேஷமும்
வாங்மதகரீ யேற்றமும்
கனமா மைபச்சரும் மல்லன திர்க்கமும்
கைகண்ட போர்ப்பண்டருரும்
கஜாத பதாதியுக் தாகப்பாகமும்
சிலதேசக்கி ளைவையும்
இனிதா பதிர்த்தா னுபதிக ளொசெய்ய
வினையாத தனைத்தரும்
என்றும் வற்றுதல் தானிய சமுத்திரமு
மேறதமுள குடிவாக்கமும்
அனைதொரு மெய்சவிய் வைவியெனை முடைபடிய
பரனா மருளைமதவேள்
ஆவுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

வைசியர் சிறப்பு.

நீள்கடல் கடந்திவர் மலையாளமும் போவர்
கெடிது தாரந்திரித்து
வினைவுதவி பரதர்கள் கலியாணம் பெருஞ்சே
சீலைவித் தகுபுடியும்

யாறணி செஞ்சடைத் திருவால வங்காட்டப் பரண்டுமுற
நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிரித்தளவிட்டி வளவெனப்பேசலாமோ.

N. B. சண்டி வணிகன் வேறு, வேளாளர் வேறு என்பதைக் கவனிக்க.

திருக்கைவழக்கம்.

நீவிதனக்களஞ்சி நின்ற*வணிகே சனுக்காக்
கோவிய பயங்கொடுத்துங் கை
மாமறை மன்னர் வணிகர் முதலோகத்
தாமலியாமற் கொடுத்துத் தாங்குங் கை.

அதிவீரராம்பாண்டியன் இயற்றிய சூர்மபுராணத்தில்.

வேதியர் முகத்தில், வேந்தர் விறல்கெழு தூணத்தோள் வெற்பின்
தீதறுவணிகர் செம்பொற் குறங்கினிற் சதுர்த்தர் செய்ய
பாதபங்கயத்தி லீண்டிய பதுமன் முளபடைத்த மூவர்
ஓதிய மகங்களியாவு மாற்றுதற்கு ரியராவர்.

(இதன் கருத்து) பிரமனது முகத்திலும் தோளிலும் துடையிலும் பாதத்திலும் முறையே அந்தணர், அரசர், வணிகர்-வேளாளர் உற்பவித்தார்கள். வேளாளர் தவிர மற்ற மூவரும் யாகங்கள் செய்தற்குரியராவர் என்பதாம்.

திருவிளையாடற் புராணம்.

இந்திரன் முடிமேல் வாளேறிந்த படலம் ஹஎ. கவி.

இட்டவன் சிறையை நீக்கியெழிலியை விடாது மாறு
பட்டசிதையனே யாகப்பல் கச்சாதனனுக்கென
நட்டவனொருவேளாளனுன்பினை யென்று தாழ்ந்தான்
மட்டவிழ் தொழுகு நிம்பமாலினனும்.

(இ-ள்) இட்டவன் சிறையை நீக்கி எழிலியை விடாது மாறுபட்டசிதையனே (ஆக-பூட்டிய) வலிய விலங்கினை நீக்கிப் புட்கலாவருத்தமுதலிய மேகங்களை விடாமல் பல்கொண்ட மனத்தையுடையவராகவே உக்கிரகுமாரபாண்டியர் இருக்க, பாகசாதனனுக்கு என்றும் கட்டவன் ஒருவேளாளன் நான்பினை என்று தாழ்ந்தான்-இந்திரனுக்கு எந்நாளும் மிகுந்தவனிய ஒரு வேளாளன் நான்

* சண்டி வணிகன் என்றதும் மேலேய செய்யுளில் குறிக்கப்பட்ட வணிகனேயி யென்க.

பிணையென்று வணங்கினன், அவிழ்ந்து மட்டு ஒழுகு நிம்பம் மாலிகை மார்பினனும், மலர்ந்து தேன்சிந்தும் வேப்பமலர் மாலையை யணிந்த மார்பையுடைய அவ்வுக்கிர குமாரபாண்டியரும்.

இதுவுமது படலம் 58 கவி

இடுக்கண் வந்துயிர்க்கு மூற்றமெய்திலும் வாய்மை காத்து
விடுக்கனோர்தொழுகு நாலாமரபினை யுரையையாத்த
னெடுத்தரை மறைபோற் சூழ்ந்து சிறைக்களத் திட்டயாப்பு
விடுத்தனன் பகடுபோல மீண்டன மேகமெல்லாம்.

(இ-ள்) இடுக்கண் வந்து உயிர்க்கும் ஊற்றம் நேர்ந்திலும்-வறுமைமேலிடலால் (தனது உடம்பிற் கன்றி) உயிருக்கும் இடையூறு வரினும், வாய்மை காத்து விடுகலோந்து ஒழுகும் நாலாம் மரபினன் உரையை-(பிராத்குச் செல்லிய) வாய்ச்சொல்லைக் காத்துக் குற்றங்கனிந்து நல்லொழுக்கத்திற் செலலும் நான்காம் வருணத்தனிய வேளானன் வாய்ச்சோல்லை, ஆத்தன் எடுத்த உரைமாதைபோல் சூழ்ந்து சிவபெருமான் விதந்து கூறிய வேதவாக்கியம் போலச் சிந்தித்து, சிறைக்களந்து இட்டயாப்பு விடுத்தனன்-சிறைக்களத்திற் பூட்டிய விலங்கைத்தறித்து விட்டார், மேகம் எல்லாம் பகடுபோல மீண்டன-புட்கலாவருத்த முதலிய மேகங்களெல்லாம் யானைகள் போல அங்கு நின்றும் திரும்பின.

சண்டி வேளாளனை நான்காம் மரபினன் என்று மேல்காட்டிய நிகண்டாதி திவாகர-ம்மிருதிகளுக்கு ஒப்பகூறி யுள்ளமைக்காண்க.

பிரயோகவிவேக மாயை உற்பத்திகத் (15) செய்யுள்.

செற்போர் புரிவர் தான்மறையாறங்கமுணர்ந்த தொழுகுலத்தோர்
விற்போர் புரிவர் நெடியசிலை யிராமனனைய விறல்வேந்தர்
பொற்போர் புரிவர் பிறர்பொருளுந் தம்போற் பேணிப் புரிவணிகர்
நெற்போர் புரிவரங்கில் வேளான் குலத்தி னெறியினரே.

(இதன் கருத்து.)

அந்தணர்கள் வேதசாஸ்திரங்களை வாசிப்பதிலும் அரசர்கள் வில்வித்தை முதலியவைகளில் பயிலுவதிலும், வணிகர் வாணிபஞ் செய்வதிலும், வேளாளர் உழுந் தொழிலிலும் சிரத்தை யுடையர் என்பதாம்.

ஏழாவது எட்டாவது செய்யுள்.

துலேசரின் சிறப்பு.

கலியிட்ட முறைவேந்தர் கனவேள்வி வளர்ப்பதுவும்
மலியிட்ட பூபத்தரசர் மணிமுடிகள் சூட்டுவதுந்
தலையிட்ட வணிகருபத்தை மிட்டார் படிவதுவும்
நிலையிட்ட வேளாளர் துலையிட்ட நிறாலே.

(இதன் கருத்து) அந்தணர்கள் யாக்கினிவளர்ப் பதும் அரசர்கள் மகுடந்தரித்துக்கொள்வதும் வணிகர் நிதி சேகரிப்பதும் வேளாளர் தாங்கள் தலையினின்று நீர் பாய்ச்சி பயிரிட்டமையினாலே யேயாம்.

தமிழ் மொழிகளைத் தொகுத்துச் சொற்பயனை விளக்கும் நிகண்டம் திவாகரம் முதலியவைகளில் கூறிய வருணக்கிரமங்களின்படி அந்தணர் அரசர் வணிகர் வேளாளராகிய வகுப்பினர் எவ்வாறு வகுக்கப்பட்டிருக்கின்றனரோ அவ்வாறே அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே யேற்பட்டுள்ள பூராணேதிகாசங்களினும், தொல்காப்பியம் பன்னிருபாட்டியல் பெரியபூராணம், கம்பர்ராமாயணம் திருவிளையாடல் பஞ்சபட்சி முதலிய சிறந்த கிரந்தங்களினும் அந்தணர் முன்னும் அவருக்குப் பின்னர் அரசரும் அவருக்குப்பின்னர் வணிகரும் அவருக்குப்பின்னர் வேளாளருமாகிய பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திராகிய நால்வகை வருணத்தாரை வரிசைக்கிரமமாகப் பூர்வமிருந்த மேதாவிகள் தத்தங்கிரந்தங்களில் கூறியுள்ளார்.

இவ்வகுப்பினர்கள் பூர்வந்தொட்டு இற்றையளவைக்குஞ் சேர சோழ பாண்டியர்களாகிய தமிழ் நாடுகளில் வாச பூரம்பரையாக வசித்து வருகின்றனரென்பது பிரத்தியட்சம். இவ்வாறிருக்க ஏர் எழுபது என்னுமோர் நூல் கம்பரால் பாடப்பட்டதென்பதாய் பலரேர் கருதுகின்றனர். இஃது உண்மையாயின் அம்மகாகவியாகிய கம்பர் வணிகர் சார்பாகப் பாடினரா? அல்லது வேளாளர் சார்பாகப்பாடினரா? என்னும் வினா நிகழுதால் வேளாளர் சார்பாகவே பாடினரென முடிவுசெய்யப்படும். ஏற்பவோயின் வடமொழியில் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் பிரயோகத்திற்குத் தென்மொழியில் அந்தணர் அரசர் வணிகர் வேளாளரெனப் பிரயோகஞ் சாலவுமுண்டு. ஆகையால் கம்பரும் மேற்காட்டிய சிறந்த கர்த்தாக்களின் கருத்தை அனுசரித்து வேளாளர் நான்காம் வகுப்பினராகிய சூத்திரரைக்குறித்து ஏர் எழுபதைப் பாடினரெனக் கோடலேவேண்டும்.

உண்மை இவ்வாறிருக்க 1886வது ஆண்டில் அச்சிட்டு வெளிவந்த ஏர் எழுபதின் உண்மைப்பொருளே யுணராமையினாலோ! நான்காம் வகுப்புச்சூத்திரரைக்குறித்ததால் அது இழிவுடைத்தென்றெண்ணியோ! தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தன்பி சண்டப்பிரசண்டன் என்பதற்கிணங்கியோ! மற்று யாது காரணத்தினாலே ஏர் எழுபதென்னும் நூலைக் கம்பர் கவியரசர் சார்பாகப்பாடினரென்று அந்நூலி

அள்ள பாடல்களில் இலக்ஷணைக் குத்திரரென்று பொருள்படுமிடங்களில் அச்செய்யுளின் சொற்களைப்பரட்டி வலிசியரென்று பொருள்படுமாறு உரைபெழுதி யிருக்கின்றனர். அவை வருமாறு.

ஏரெழுபது பாயிரம் 4-வது செய்யுள்.

வேளாளர் சிறப்பு

தொழுங்குலத்திற் பிறந்தாலென் சுடர்முடி மன்னவராகி
எழுங்குலத்திற் பிறந்தாலென்னிவர்க்குப்பின் வணிகரெனுஞ்
சேழுங்குலத்திற் பிறந்தாலென் சிறப்புடையரானாலென்
உழுங்குலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தாரே.

இச்செய்யுளில் தொழுங்குலம், மன்னவர்குலம், வணிகர்குலம், எழுங்குலம், என்ன அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், என்று தொல்காப்பிய முதலிய நூல்களில் கூறியிருக்கும் வரிசைக்கிரமப்படி கூறியிருப்பதை இரண்டாமடியின் பிற்பகுதியிலும் மூன்றாமடியிலும் சொற்களை "இவர்க்குப்பின் வணிகரெனுஞ் சேழுங்குலத்திற் பிறந்தாராய்ச் சிறப்புடையாராய் வாய்மை" என்று புரட்டி வைத்து பொருள்படுமாறு பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

ஷ பாயிரம் கடவுள் செய்யுள்.

இதுவும்

வேதியர் தமேர் குலமும் நீதங்வேந்தர் பெருங்குலமும்
நீதிவளம் படைத்துடையீ நிதிவணிகர் தங்குலமுஞ்
சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில் குலத்தனக்கு நிகர்ண்டாயிற் கூறீரே.

இதிலும் வேதியர்குலம், வேந்தர்குலம், வணிகர்குலம், காராளர் குலமென நான்காக வகுத்தமற்றில் இரண்டாமடிக்கடையில் வணிகர்குலமும்என்பதை "வளத்திற்குலமாம்" என்று புரட்டிக் காராளருக்கு அடைபோகக்கொண்டு பொருள் பதித்துமாறு பதிக்கப்பட்டிருக்கிறது.

பயிர்வளர்த் சிறப்பு கடவுள் செய்யுள்.

சிவனரு மறைவனருக் திருவேல்தர் முடிவனரும்
போவளரும் வணிகருக்கும் பெருகிய மிகவளரும்
ஏர்வளரும் திருவனரு மிசைவளரும் கடன்சுமந்த
பார்வளரும் காரான் பயிர்வளரும் திறத்தாலே.

இச்செய்யுளில் மறையவர், வேந்தர், வணிகர், காராளரென வகுத்துள்ள நான்கினில் இரண்டாமடியில் வணிகர் என்னும் பதத்தை நீக்கி,

"பேர்வளரும் வாணிபத்தும் பெருநிதிய மிகவளரும்"

என்று மாற்றிப்பதிக்கப்பட்டிருக்கிறது.

துலிநீரின் சிறப்பு சுஉ-வது செய்யுள்.

கலியிட்ட மறைவேந்தர் கனல்வேள்வி வளர்ப்பதுவும்
மலியிட்ட புயத்தரசர் மணிமகுடஞ் சூட்டுவதுந்
தலியிட்ட வணிகருபத்தரை பீட்டப்படுவதுவுங்
நிலையிட்ட வேளாளர் துலியிட்ட நீரானே.

இச்செய்யுளில் மறைவேந்தர், புயத்தரசர், வணிகர், வேளாளரென முன்னோர் தொல்களுக்கு மாறுபாடு செய்யாமல் கூறியுள்ளதில் வணிகரென்னும் சொல்லை அறவே நீக்கி (துலியிட்டவணிகர்) என்பதை.

"துலியிட்ட பொருளுன்குந் துலனிட்டப்படுவதுவும்"

எனமாற்றி வேளாளரே மூன்றுகுலத்தவர்போல் காட்டப்பட்டிருக்கின்றது. இதுதான் முழுப்பூசினிக்காயை எலிச்சோற்றில் மறைப்பது.

பயிர்முதற்சிறப்பு ருக-வது செய்யுள்.

அந்தணர்க்கு வேதமுத லரசருக்கு வெற்றிமுதல்
மூன்றியசீர் வணிகருக்கு மூதலாய முதலுல்கில்
வந்தவுயிர் தமக்கெல்லா மந்நாளாக வைத்தமுதல்
செந்தமிழ்க்கு முதலாய் திருவாவர் செயமுதலே.

இச்செய்யுளில் அந்தணர், அரசர், வணிகர், திருவாளர் என்று நான்கு வருணங்களைச் சொல்லியிருக்க சூத்திரரெனப் பொருள்படுவதை மறைத்து வணிகர் என்னுஞ் சொல்லை நீக்கி வேறென்னுஞ் சொல்லை வைத்து

"மூன்றியசீர் வணியர்க்கு மூதலுழவா மூதலுல்கில்"

என்று புரட்டி வணியவேடர்களித்த தமக்கு உழவுத்தொழிலே மூதலென்று காட்டியிருக்கிறது.

இங்ஙனம் எர் எழுபதில் தெடுங்காலமாய்வழங்கிவரும் பாடல்களில் அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் என முறையே வருத்துள்ள இடங்களில் உழுவகுலம் காராளர் திருவாளர் வேளாளர் என்னும் பதங்கள் நான்காங்குலத்தைக் குறிக்கத்தக்கனவாதலானப்பதங்களை வையரெனப் பொருள்படும்படி புரட்டியும் சொற்

களைமாற்றியும் மறைத்தும் அச்சிட்டிருக்கின்றனர். இவர் உத்தேசமெல்லாங்கூடி வைசியரென்றும் கவசத்துள் வேளாளரை நுழைத்து வேளாளரை மூன்றும் பதவியில் சேர்க்க வெடுத்துக்கொண்ட முயற்சிபோலும்; இது சாலவழகுடைத்தாம்!

உழுநர் சிறப்பு கக-வது செய்யுள்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாருந்
தொழுதுண்டு பின்செல்வரென்றே யிதற்றொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றே விவருடனே யியலுமிது
பழுதுண்டோ சுடர்சூழ்ந்த பாரிடத்திற் பிறந்தோர்க்கே.

இச்செய்யுள் உழுநராகிய வேளாளரையே சட்டி நிற்பதென்பதைக் கற்றோரும் மற்றோரும் எளிதினுணரற்பாலது.

இச்செய்யுளில் சற்றடியிரண்டையு மெடுத்துவிட்டுத் தமக்குப் பெருமை தருவதாகக்கருதி கீழுள்ள விவ்விரண்டடிகளைச் சேர்த்துக்கொண்டனர்.

அதாவது:—

"எழுதுண்ட மறைசோழ்ரு லிவரேவள் மள்ளர்க்குமி
பழுதுண்டோ பார்வேந்தர் படைமள்ள ரோப்பாரோ"

இந்த அடிகளில் மள்ளரென்னுஞ்சொல் வேளாள்ருடைய பண்னையாட்களோ காட்டின வென்று கூறுகின்றார். மள்ளர் என்பது உழுநர், போர்வீரர், நன் விரவ்பி பெர்ருஞ்யும்பயப்படாயிருக்கமவர்(உழுநர்)வேறென்னும் வினைஞராகிய வேளாளர் வேறானனும் விபரீதார்த்தஞ் செய்திருக்கின்றார். வேளாளர் சிறப்பைச்சொல்லவந்த ஈர்எழுபதில் இவர்கள் பண்ணையாள் எவ்ளள் முதலியவர்களின் சிறப்பைக் கூறவேண்டுவதில்லை. கூக-வது செய்யுளில் "பற்றுடைய பதினெண்மர்" என்னுஞ் செய்யுட்கிழ் "மூவாறு குடிமக்கள்" வேளாளர்க்குரியரென்று காட்டி மாவாத்திரப்பாட்டில் சொல்லுஞ் சாதிகளில் மள்ளர் என்னுஞ் சொல்லாமையால் சுக வது உண்மை செய்யுளினுள்ள அடிகளைப்புரட்டி மள்ளரைச்சேர்த்து வேளாளர் வேறு, மள்ளர் வேறு, என்று பொருள் பதித்துள்ளமை விபரீதம்!

இங்ஙனம் பொருள்பதித்தல் கல்லிக்கோம்புக்கு வெள்ளிப்பூண்கட்டி பழுது பார்ப்பதுபோல் பொருத்தமில்லாத சில விபரீதங்களைப்புகட்டி யெழுதிய தெத்தன்பைத்தெனின் சோற்காசைக்கொல்லிவை (நெருப்பை) சேர்ந்தால் மூடியதுபோலும் ஆதித்தனெளியை அங்கையால் மறைப்பதுபோலு மிருக்கின்றது.

புத்திமான்களும் தாங்கள் தங்கள் முன்னோர் வழக்கிற்குமாறு படாமல் தாங்கள் நாலாங்குலத்திற் தோன்றிய சற்சூத்திரராகப் பெருமையுற்று வாழ்ந்து காலங்கழித்தனர்கள். இக்காலத்தில்தோன்றிய நூதன செயலுடைய கவிகள் தாங்கள் தாண்டிப் படியேற வேண்டித் தங்களுக்குரிய வேளாளர் என்னும் பதம் வைசியர்களுக்குரிய பெயர்களிலும் ஒன்றாக நிகண்டில் கூறியுள்ளதால் தங்களை வைசியரென்றும், மூவேந்த வேளான் பல்லவதரையன் என்னும் பட்டப்பெயர் அரசரால் தமக்கு அளிக்கப்பட்டதால் அரசரென்றும் வழங்குதலினால் இனி அந்தணரென்றும் தங்கள் மனம்போனவாறு கூறி மகிழ்வார்போலும்!!

அந்தணர் அறுதொழில்களில் ஓதுவித்தல் சிறந்தது-மன்னர் அறுதொழில்களில் உலகோம்பல் சிறந்தது. வைசியர் அறுதொழில்களில் வாணிபம் சிறந்தது. வேளாளர் பத்து தொழில்களில் உழவுத் தொழில் சிறந்தது. சூதல் தான்கு வருணத்தாருக்கும் உரியதாயிருந்தும் அஃது வேளாளருக்கே முக்கியமானது. என்னையெனின் உழவுபயிரிடுவதினால் உற்பத்தியாகும் பதினெண்டங்களைக்கொண்டு,

"அத்தெல்லின் பெரியாரே"

அவனியுயிர் வளர்ப்பாரே" என்றதற்கிணைக்க எழும்புழுதலிய பல ஓவராசகளைப் போலித்தீக்க சகைக்குணமுடையோரென்பொருள் தரவல்ல வேளாளர் என்னும் சிறப்புப்பெயர்பெற்றனர். இவ்வாறே உழுதொழிலுமுடைமையால் வைசியரும் வேளாளரென்னும் பெயர் பெற்றனர் வேளாளர் என்னும் பெயர் வைசியருக்குஞ் சூத்திரருக்கும் பொதுவாகப் பிங்கல முதலிய நிகண்டுகளில் கூறியிருக்கின்றார்களேனும் தமிழ்நாவாட்சியில் பெரும்பான்மையும் வேளாளர் என்னும் பரீக்ஷைசூத்திரரெனப் பொருள்படக் கூறியிருக்கின்றனர். சகைக்குணமுடையாரானலல் வேளாளரென்னும்பெயர் சூத்திரருக்குச் சிறப்பாகவும், பொருளிதற்கு முரிமையுடையாராதலால் வைசியருக்கும் வேளாளரென்னும் பெயர் பொதுவாகவும் அன்மேற் வழங்கினர்.

ஒரு குலத்தின் சிறப்பை எழுபது செய்யுள்களால் சிறப்பித்துப்பாடுவது ஓர் நூல். இஃதே முறையெழுபதென்றும், இலெழுபது என்றும், அலாவெழுபதென்றும், சுட்டி வெழுபதென்றும், வரொழுபதென்றும், எரி எழுபதென்றும் வழங்கப்படும். வேதியர் சிறப்பைக்கூறுவது முறையெழுபது, வேந்தர் சிறப்பைக்கூறுவது இலெழுபது, வைசியர் சிறப்பைக்கூறுவது அலாவெழுபது, செங்

குந்தர் சிறப்பைக்கூறுவது சுட்டி யெழுவது, மறவர்சிறப்பைக்கூறுவது வரொழுபது, உழவரான வேளாளர் சிறப்பைக்கூறுவது எரொழுபது. வேந்தரைப்பாடியவாயால் வேளாளரைப்பாடேனென்று கம்பர் கூறியதாக வேந்தரும் வேளாளரைப்பாடியவாயால் வேந்தரைப்பாடேனென்று வேளாளரும் கூறுகின்றனர். சீராம வேந்தன் மீது பாடிய வாயால் வேளாளரைப்பாடேனென்று கம்பர் கூறினரென்பது ஒருகால் பொருந்தினும் பொருந்தும்.

"அணிவோர்க்கும் தெய்வமிலேமுகப்பைம்பூணிதை" யென்றும் சக்கரவெறியில் என்றும் கூறியுள்ளமையால் அரசனுக்கினியின் பிரகாரம் கம்பர் தமது உருக்கு வேந்தனிய சீராமராஜன்மீது சில்லெழுபது என்னும் நூலை இயற்றியமையொருதலும், வேளாளர்மீது ஏர் எழுபது பாடியதுபொருந்தாதெனின் பொருந்தாது. எங்ஙனமெனின் மகாகவியாகிய கம்பர் சொல்லியம் பொருளியம் கவி சாதுரியமமைத்துடைக்கும் இராமாயணத்தைப் பாடிய வள்ளல் ஏர் சிறப்பு கூறுங்காலையில், உழற்றுணி, முகத்தடி, தகத்தலை, முகந்தாளி, பூட்டாங்கயிறு, புழுதி, எரு, சேறுமுதலிய அற்பகருவிகளின் சிறப்பைக்கூறத்தனியார். ஆனல் எவ்வாறு இவ்வோ எழுபதென்னும் நூல் பிறந்தனதாவெனின் தற்காலத்தில் வைத்தியசாத்திரங்கள் எத்தனையோ சிறந்த குறுமுனிவர்களிய அகஸ்தியர்போல் வாழ்ந்திருவதைப்போல்யாரே ஒருவர் தாம் செய்த நூலுக்குச் சிறப்பெய்துமாறு கம்பர் பேரால் வழங்கியிருக்கலாம். ஆனல் காவற்கூதிலவர் சடையப்பவள்ளலார் பேரில் பாடியிலேயெனின், வென்னெய் நல்லூர் சடையப்ப முதலியார் கம்பருக்குச் செய்த பேருதவியை நோக்கி "செய்யாமற்செய்த வுதவிச்சிறுமையுமானகமுமாற்றலரிது" என்பதையொக்க அவ்வள்ளலைக் கம்பர் காவியத்தில் சிறப்பித்துப்பாடியிருக்கின்றனரேயன்றி வேறல்ல.

பிராமணர்க்குரிய அறுதொழில்களில் வேள்விசெய்தல் வேதமோதல் ஈதலாகிய மூன்றும் க்ஷத்திரியர்க்கு முரியன. இங்ஙன மிருப்பதையுணர்ந்த க்ஷத்திரியர்ப்பிராமணரெனச்சோடல் பொய்யாமா? அங்ஙனஞ்சோடல் சாஸ்திர விரோதமாகவும் அனுபவவிரோதமாகவும்மேற்படும் அன்று? இவ்வாறே வைசியருக்குமுரியதொழிலை உழவுத்தொழில் சூத்திரருக்குண்டி. ஆனதற்றி சூத்திரரை வைசியரெனக் கோடலாகுமா? கொள்ளுதாயின் மூன்றோர் செய்த நூல்களுக்குமாபாடகுமன்றோ. மற்றபடக்கூறுதல்சான்றோர்க்கு அழகாகாதே! சில கனினபுலவர்கள் சொற்புரட்டால் தங்கள் கருத்

தை மேற்கொள்ளலாமென்று தொன்று தொட்டுத் தம்மரபினர்க ளாலே அங்கீகரித்துள்ள தூலின் சொற்களைப்புரட்டி மேற்காட்டி யவாறு சாஸ்திரப்போக்கையும் ஆன்றோர் அனுபவத்தையும் கெடு ப்பது கற்றோருக்கு அழகன்று. இன்னும் புராதனமாய் வழங்கிவரு கின்ற சில ஆதாரங்களைக் காட்டுவாம்

காவிரி நதியானது கட்டில் சங்கம மாகுமிடத்தில் காவிரிப் பூம்பட்டின மிருக்கின்றது. இப்பட்டினமானது ஒரு கால் சோழ ராஜ்ஜியத்திற்கு இராஜதானியாக விருந்தது. இவ்விராஜதானியில் சுமார் (1800) ஆயிரத்தொண்ணூறு வருஷங்களுக்கு முன் கரிகாற் சோழன் இராஜ்ஜிய பாரஞ் செலுத்தியதாக சிலப்பதிகாரம், மணி மேகலை, இலங்கைச் சரித்திரம் முதலிய புராதன நூல்களால் அறி யக்கூடும். கரிகால்வளவன் செங்கோல் செலுத்தி வருங்காலத்திலே வைசிய குலத்தில் உதித்த கோவலன் கண்ணகி என்பார் மனைவி ளின் மனோபாட்டிகளாக வாழ்ந்திருந்தனர். இவர்களுடைய சரி தையைக் கூறுவதே சிலப்பதிகாரம் என்னும் ஓர் சிறந்த தமிழ் காப் பியமாம்:

இக்காப்பியமானது இச்சேரகுல வரசனுகிய இளங் கோ வடிகளால் செய்யப்பட்டுளது. சிலப்பதிகாரத்திலே இந்திரவிழவு ரெடுத்தகாதையிலே காவிரிப்பூம் பட்டினத்தின் விசேஷங்களின் சிறப் பும் அவ்விதிகளில் வசிக்கும் பற்பல வருணங்களின் தொழில் முத லியவைகளின் சிறப்பும் கூறப்பட்டிருக்கின்றது.

இது போலவே மணிமேகலை யென்னும் தமிழ் காப்பியமான து மதுரை கூலவணிகன் சாத்தனாரால் செய்யப்பட்டுளது. இஃது

சிலப்பதிகார கதா நாயகனும் கோவலன் காதல் பரத்தை யாகிய மாதவிமகள் மணிமேகலை யென்பாளின் சரிதையைக் கூறு கின்றது. இம்மணிமேகலையென்னும் காப்பியத்திலும் கச்சிநகர் புக்க காதையிலும் அங்நகர விதிகளையும் அவைகளில் வசிக்கும் வருண களையும் தொழில் முதலியவைகளையும் கூறப்பட்டிருக்கின்றன.

சிலப்பதிகாரம்.

இந்திர விழவூரெடுத்த காதை.

அலைநீராடைமலை முலை யாகத்
காரப்பேரியாற்று மாரிக் கூந்தற்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை

புதையிருட்படா அம்போக நீக்கி
யுதயமால்வரை யுச்சித் தோன்றி
யுலகுவிளங் கவிரொளி மலர்கதிர் பரப்பி
வேயா மண்டமும் வியன்கல விருக்கையு
மான்கட் காலதர் மாலிகை யிடங்களுங்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனரிருக்கையுங்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலக்குநீர் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமுஞ் சுண்ணமுஞ் சந்தமும்
பூவும் புகையு மேவிய விசையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினு மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டு நன்விளைக் காருக நிருக்கையு
மாரமு மகிலுந் தூசுந் துகிரு
மாசறுமுத்து மணியும் பொன்னு
மருங்கல் வெறுக்கையோடளக்கு கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூலவீதியும்
காரியர் கூவியர் கண்ணுடை யாட்டியர்
நீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பன்னிண விலைஞரோ
டோசுநர் * செறிந்த வூன்மலி யிருக்கையுங்
கஞ்ச காரருஞ் செம்புசெய்குநரு
மரங்கொறச்சருங் கருங்கைக் கொல்லருங்
கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரு நன்கலந் தருநரும்
துன்னகாரருந் தோலின் றுன்னரும்
கிழியினுங் கிடையினுந் தொழில் பலபெருக்கிப்
பழுதில் செய்வினைப் பல்கெழு மாக்களுங்
குழலினும் யாழினுங் குரன் முதலேழும்
வழுவின்றிளைத்து வழிந்திறங் காட்டி
மரும் பெறுன் மூரிப் பெரும்பா ணிருக்கையுஞ்

* ஓசுனர் என்னெய் விணைகருமம்.

வருணைதருப்பணம்

சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும்
கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாடமறுகு மறையோர் நிருக்கையும்
வீழ்குடியுழவரொடு விளங்கிய கொள்கை
யாயுள் வேதருங் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையர்
நிருமனிருகியிற்றிர் நிறைந்த கொள்கையொ
டுணிவினோ பொழுகு ரகன் பெரு வீதியுஞ்
சூதர் மாகதர் வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம் பெறு கண்ணுளர்
காவற்கணிகையர் ரட்டர் கூத்தியர்
பூவிலை மடந்தைய ரேவற் சிலதியர்
பயிறெரிற் குயிலுவர் பன்முறைக் கருமியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையுங்
கடும்பரி கட்புநர் களிற்றின் பாகர்
நெடுந்தேருருளர்கடுங்கண் மறவ
ரிருந்து புறஞ்சுற்றிய பெரும்பா யிருக்கையும்.

(இ-ள்.) கடலாகிய ஆடையினையும், மலையாகிய முலையினையும், அம்முலையாசத்துப் பெரியோர்களுகிய ஆரத்தினையும் மார்பாகிய கூந்தலினையுமுடைய இடங்கன்ற பரப்பினையுடைய அரசு கெடித் தலம்வரும் நிலமடந்தை அல்லற்காலப் பசக்து சொரப் பணிந்துப் போர்த்த இருளாகிய படாத்தைத் தன்கதிர்க்கை களாணீக்கி அவி ரொளி உதயமால் வரையுச்சிக்கட் டோன்றி விரித்த கதிர்களைப்பர ப்ப, நிலாமுற்றமும், வேற்றுமைப் பட்ட அணியலம் பெய்த சரக்க றையும், மானின் கண்போலக் கோணஞ்செய்த சாளரங்களையுடைய மானிகை யிடங்களும், புகார்முகப்புக் கங்குலில் தம்மைக்காண் போர் கண்களை மேற்போக விடாமற் றடுக்கும் பவன் தொலையறி யாதமிலேச்சிருக்குமிடங்களும், மாக்கலந்தரும் செல்வப் பொருட் டால் தாம்பிறந்த நிலத்தை விட்டுப் போந்த பரதேசிகள் பலரும் ஒரு நிலத்தாரைப் போலக் கலந்து செறிந்திருக்கும் அலைவாய்க் கரையிருப்பும், தொய்யிற் குழம்பு முதலியவும், எழுதுவண்ணமும் பூசு சண்ணமும், குளிர்ந்த நறிய பசுங்கூட்டும், விடுபூந் தொடைப்

பூக் கட்டுப்பூவென்னும் மூவகைப் பூவகையும், புகையுறுப்பும், கம்மித் பொருத்திய விரையும், இவற்றை விற்பவராய்த் திரிதரு தலைச் செய்யும் கோத் தெருவும், பட்டு நூலாலும் எலிமயி ராலும் பருத்தி நூலாலும் நுண்ணிய தொழில்களை ஊசியாற் பின்னிக்கும் பட்டுச் சாலியிருக்கு மிடங்களும்; சந்தனமும் அகிலும் பட்டிமும் புனலும் குற்றமற்ற முத்தும் ஒழிந்த மணிகளும் பொன்னுமாகிய இவற்றைப் பொற்பணியாடை இலைகங்காண் போர் ஒரெண்ணினும் எண்ணிக் கரைகாணவியலவன் தம்மிடத் தோறும் மயங்கப் பட்டன வற்றையுடைய இடமகன்ற மறுகும்; பகுதி வேறுபட்டுப் பிரித்த முதிரை முதலிய பண்டத்தோடு எண் ணெய்க் கூலமும் நுவித்துயிற்கும் கூலக்கடைத் தெருவும், பிட்டு வாணிகரும், அப்பவாணிகரும், கள்ளை விற்கும் வலைச்சியரும், மீன் விலையையுடையப்பரதவரும்; (பரதவர் பட்டினவர்) உமணரும், உமட் டியருமாய்* இலையமுதிடுவாரும்*அன்றிக்கயிறு திரித்து விற்பாரு மாம்; பச்சிறைச்சி சுட்டுறைச்சி விற்பாருமாம், பஞ்ச பாசம்விற்பா ரும், ஆட்டுவாணிகருடனே பரவருஞ் செறிந்த ஊன்மிக்கஇருப்பிட ங்களும், வெண்கலக் கண்ணரும், செம்புகொட்டிகளும், மரத்தைவெ ட்டுந்தச்சரும், வலியகையையுடைய கொல்லரும், சித்திரகாரிகளும் சிற்பாசாரிகளும், உருக்குத் தட்டாரும், இரத்தினப்பணித்தட்டா ரும், சிப்பியரும், (சிப்பியர் தையற்காரர்.) உறைகாரரும் பரம்பர் முதலாயினரும், கிழிகிடை பென்பவற்றுற் பட்டம் வாடாமாலை பொய்ம் கொண்டை முதலிய உருப்பிறக்குந் தொழில்களை மிகுத்து க்காட்டிக் குற்றமற்ற கைத்தொழிலால் வேறுபட்ட இயல்பை யுடையோரும், துலாக்கருவியாலும் நரப்புக் கருவியாலும் தான் முதலாயுள்ள எழிசையினையுஞ் சுருதிகூட்டி, யென்னுமெழுமூ த்தினையும் மூவகைவண்டியத்தினும் நால்வகை யாழினும் பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவேழு திறத்தையுங் குற்றமின் றாக இசைத்துக் காட்டவல்ல பெறுதற்கரிய இசைமரபறிந்த குழலர் பாணர் முதலாய பெரிய இசைக்காரரிருக்கு மிடங்களும்; ஒழுக்கத்தினுற் சிறியராய்ச் சிறு தொழிலைப் பிறர்க்குச்செய்து அதனி னரும் பொருளை யுண்ணும் கைவினையாளரோடே முற்கூறிய பவனர்முதல் பெரும் பாணரையுள்ளாகோடு குற்றமின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும், இராசபெருந்தெருவும் கொடியணிந்ததெ ருவும் விழாவீதியும், கழுடத்தெருவும், பெரிய குடிப்பிறப்பையு

* இலையமுது - வெற்றிலை.

டைய வாணிகரு மாடமாளிகைத்தெருவும், பஞ்சக்கிராமிகளிருக்கு மிட்டமும், உழவின்மேல் விருப்புங்குடிகளோடும் உழவரோடும் மருத்துவரோலோரும் சோதிடரிலோரும் வேறு வேறுவகைப்படத் தெரிந்த பலமுறைமையோடிருக்கும் இருப்பிடங்களும், முத்துக்கோப்பாரும், தமக்குக் கிறந்த கோட்பாட்டால் அழிவில வினைகளே யறுப்பாரும் வாழ்கின்ற அகன்ற பெரிய வீதியும், இவையல்லாமலும், நின்றேத்துவார், இருந்து ஏத்துவார், வைதாளியாடுவாரென்று சொல்லப்பட்ட இலரோடே கடிகையார், தாம்கொண்ட கோலத்தானும் கூத்தானும் கலம்பெறுஞ் சாந்திக்கூத்தர், கொத்தாடுங் கூத்திகள் அகக்கூத்தாடும் பாணிகளார் அற்றைப் பரிசுகொள்வார்-மடைப்பள்ளியாரடியார் தோற்கருவி யிசைப்பார், பண்டக்கும் உற்சவத்திற்குங் கொட்டுவோர், சாரமாணிகளோடே கிரிக்கும் பரியாசருடனும் கூதர் முதல்வேதாளிகரோடும், காழிகை கணக்கர் முதல் வேழம்பரோடும் எண்ணப்பட்டவிவர்கள் நூற்றெட்டு இனத்தின் வகை தெரிந்த இருப்பிடங்களும், கடிய பரிகளைக்கட்டுவாராயெ அச்சுவாதியர், யானைப்பாகர், தேர்ப்பாகர், சினக்கண்ணையுடைய காலாட்படைத்தலைவர்களென்று கூறப்பட்ட விரர்கள் அரசன் கோயிலைச் சூழவிருக்கும் பெரிய பரிந்த இருப்புக்களும்.

மணிமேகலை.

கச்சிமாநகர்புக்ககாதை.

பன்மீன் விலைஞர் வெள்ளுப்பு பகருநர்
கண்ணெடை யாட்டியர் காழியர் கூவியர்
பைங்கிணை விலைஞர் பாக்கவ் வாசவ
ரென்னுநர் மறுகு மிருங்கோ வேட்களுஞ்
செம்புசெய்க் கருங் கருஞ்சாரமும்
பைம்பொன் செய்நரும் பொன்செய்கொல்லரு
மரங்கோறச்சரு மண்ணீட்டாளரும்
வரந்தர வெழுதிய வோவிய மாக்களுந்
தோலின் முன்னருந் துன்ன னினைஞரு
மாலைக்காரருங் காலக் கணிதரு
நலந்தரு பண்ணுந் திறனும் வாய்ப்ப
நிலங்கலக் கண்ட நிகழுங் காட்டும்
பானொன்றிவர் பலவகை மறுகும்
விலங்கரும் பொருளும் வென்வகி போழ்நரோ

(15) டிலங்குமணி னினைஞரீ இப்மறுகும்
வேத்தியல் பொதுவியல் பென்றிவ்விரண்டின்
கூத்தியல் பறிந்த கூத்திபர் மறுகும்
பால்வேறுக வெண்வகைப்பட்ட
கூலங் குவைஇய கூலமறுகு

(20) மாகதர் சூதர்வே தாளிகர் மறுகும்
போகம் புரக்கும் பொதுவர் பொலிமறுகுங்
கண்ணுழை கல்லா தண்ணுற் கைவினை
வண்ணவறுவையர் வளர்திகழ் மறுகும்
பொன்னை காண்போர் நன்மணிமறுகும்

(25) பன்மணி பகர்வோர் மன்னிய மறுகு
மறையோரருந் தொழில் குறையா மறுகு
மரசியன் மறுகு மன்மச்சியன் மறுகு
மேகப் பொருந்தொழில்செயேனர் மறுகு
மன்றமுங்கலிவுஞ் சந்தியுஞ் சதுக்கமும்

(30) புதுக்கோளியாளையும் பொற்றூர் புரவியுங்
கதிக்குற வடிப்போர் கவிற் பெருவீதியுஞ்
சேணுங் கருவிதாழ்ந்த செய்குன்றமும்
வேணுவா மிருக்கும் விரைமரக்காவும்
வின்னவர் தங்கள் விரும்பிட மறந்து

(35) நன்னுதற் கொத்த நன்னீரிடங்களுஞ்
சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலுங்
கோலக்குயின்ற் கொள்ளை யிடங்களுங்
கண்மெகிழ் வற்றுக் கொண்ட லேடமோ
டந்தரசாரிகளமர்ந்தினி னுறையு

(40) மிந்திர விகாரமென வெழில் பெற்று
நகையற நாதனல்லறம் பகர்வோ
ருறையும் பள்ளியுக் கிறைவனை கல்லாள்.

மேற்காட்டிய சிலப்பதிகாரம் இந்தி விழுமெடுத்த காதையும் மணிமேகலை கச்சிநகர் புக்ககாதையிலும் வருகின்ற வருணங்களின் பெயர்களும் அவைகளின் பொருள்களும் வருமாறு.

1. யவனர்=மிலேச்சர்.
2. காருகர்=சாலியர்.

3. காழியர்=பிட்டுவாணிகர், வண்ணர்
4. கூவியர்=அப்பவாணிகர்
5. கண்ணுடையாட்டியர்=கள்ளும் விற்கும் வலைச்சியர்.
கள் + நெய்தை + ஆட்டியர்.
6. மீன்வலை பரதவர்=மீன்விற்கும் வட்டினர்.
7. வெள்ளுப்பு பகருநர்=உமணர், உமட்டியர், அளவர்,
8. பாசவர்=வெற்றிலை விற்பவர், கயிறுதிரித்து விற்பவர், பச்சையிறைச்சி, சூட்டிறைச்சி, விற்பவர்.
9. வாசவர்=இலவங்கம், ஏலம் கர்ப்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்னும் வாசனை திரவியங்களை விற்பவர்.
10. பல்நிணவிலைஞர்=ஆட்டுவாணிகர்.
11. ஓகார்=பரவர், எண்ணெய் வாணிகர்.
12. கஞ்சக்காரர்=வெண்கலக்கன்னர்.
13. செப்பு செய்குநர்=செம்பு கொட்டிகள்.
14. மரங் கொல்தச்சர்=மரத்தை வெட்டுந்தச்சர்.
15. கருங்கொல்லர்=வலியகையையுடைய கருமார்.
16. கண்கள்விலைஞர்=சித்திரக்காரிகள் (கண்ணிடத்தினை நிலத்தில் நிறுத்துவோர்.)
17. மண்ணிட்டாளர்=சிற்பாசாரிகள், குயவர்,
18. பொன்செய் கொல்லர்=பொருத்தட்டார்.
19. கன்கலம் தருநர்=இரத்தினம் பணித்தட்டார்.
20. அன்னகாரர்=சிப்பியர், தையற்காரர்.
21. தோலின் அல்லர்=உறைகாரர், பறம்பர், சக்கிலியர்.
22. பெரும்பாணர்=தோற்கருவி, நரம்புகருவி முதலிய இசை மரபை யறிந்த சூழலர் பாணர்.
23. தோணிபன் விதி=இராசப் பெருந்தெரு.
24. பெருங்குடி வாணியர்=பெரியகுடி பிறப்பையுடைய வணியர்
25. மறைபோதிருத்தகை=அந்தணரிருப்பிடம்.
26. விற்குடி=உழுவலிரும்புங்குடி, காணியாளர்.
27. உழவர்=வேளாளர்.
28. ஆயுள்வேதர்=மருத்துவ ரூலார்.
29. காலக்கணிதர்=ஒச்சதிடர் ரூலார்.
30. திருமணி குயிற்றுநர்=முத்துமணிசெய்பவர்.

அணிவகை பொழுவர்=அழகுவகைகளை அமைப்பவர் சங்கு அறுப்பார்.

32. சூதர்=கின்னரர் ஏத்துவார்.
33. மாகதர்=இருக்கு வருவார். } ஏற்றல்—அதிகரித்தல்
34. வேதாளிகர்=வைதாளியம்வல்லார். (புகழ்வோர்)
35. கழிகைக்கணக்கர்=கடிகையாளர்.
36. நவம் பெறு கண்ணுளர்=சாந்திக் கூத்தர்.
37. சர்வர் கணிகையர்=சவுத்தாமிய மகளிர்.
38. ஆடற்கூத்தியர்=அரங்கக்கூத்தாடும் பதியிலார்
39. பூவிலைமடந்தையர்=அத்தகப் பரிசங்கொள்வார்
40. ஏவல்கிளையர்=மடைப்பள்ளியாரடியார்.
41. முறைகருளியர்=பண்டங்கும் உரிமைக்கிழங்கு கொட்டுவார்
42. நக்க வேழம்பர்=சாம்பவர்கள், பிரித்தும்-பரியாசகாரர்
43. தமிம்பர் கடவுளர்=அச்சுவாதியர்.
44. கனிற்றிசைப்பார்=பாணப்பாகர்.
45. பெருந்தேர் ஊருநர்=தேர்ப்பாகர்.
46. கழுகுகண் மறவர்=கழுகுகண்ணையுடைய காவற் படைத்தலைவர்.

பெரிய புராணம் திருநாண்மாலை (2ஆ) வது செய்யுள்.

திருமலர்மேல் புராண முரை பதின்மூன்று மிவ்வே
தியரானே வழிப்பட்ட பிராண நிரம்பி
நெறிகாட்டு மன்னை மாத்திர மொன்றதுவே முடியாவன்னர்
குறிகாட்டு மன்னவனைவர் வணிகர் குறைவிலர்
இருமை தெரிகேவினர் பதின்மூவரினிடை
பிரமன் சாலியர் குயவர் தையல் வினையாளர்
பரதவர் சான்றோர் வண்ணர் சிலாதர் கீசர்
பாணரிவரோ டொருவராம் பகருங்காலே.

(இ-ள்.) சொல்லப்பட்டது அடியார் அறுபத்து மூவருள்ளைதிக பிராமணர் வகுப்பை அடியார் புராணம் பதின் மூன்று; பாமரவகுப்பிற்குத் தொண்டுசெய்து முத்திபெற்ற சிவாசாரியர் புராணம் நான்கு, சத்திக்கா நின்றவிரதன்மை யுணர்த்திய மாமாத்திரரென்னும் பிராமண குலத்தடியவர் புராணம் ஒன்று, சைவசிந்தாமணி அடியார் புராணம் ஆறு, குறுநில மன்னர் புராணம் ஐந்து; வைசிய குலத்தராகிய அடியார் புரா

ஐந்து, இம்மை மறுமைக்குமிய நல்லொழுக் கத்தையுடைய வைசமர பினராகிய அடியார் புராணம் பதின் மூன்று, இடையர் குலத்தவராகிய அடியார் புராணம் இரண்டு, சாலியர், குயவர், செக்கார், பரதவர், சான்றார், வண்ணர், வில்லியுண்டபை வேடர், சேர், பாணர், ஆகிய இம்மரபினராகிய அடியார் புராணம் தனித்தனி ஒவ்வொன்று என்க.

திருத்தொண்டர் வருணம்.

பிராமணர்

ஆதிசைவர். ஐ.

கந்தரமூர்த்தி நாயனர்
புகழ்த்துணை நாயனர்
சடைய நாயனர்
இசைஞானியார்

வைதிக பிராமணர். கூ.

குங்குலியக்கல நாயனர்
முருக நாயனர்
உருத்திரபசுபதி நாயனர்
சண்டேசுர நாயனர்
அப்பூதியடி களையனர்
திருநீலகண்ட நாயனர்
நமிநந்தியடி களையனர்
திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர்
சோமாசிமாற நாயனர்
நெற்பூலி நாயனர்
கணநாத நாயனர்
பூசலார் நாயனர்

மாமாத்திரப் பிராமணர். க.

சிறுத்தொண்ட நாயனர்

சைவர். ஙக.

சேரமான் பெருமாணாயனர்
புகழ்ச்சோழ நாயனர்
நெடுமாற நாயனர்
இடங்கழி நாயனர்

மங்கையர்க் காசியார்
கோச்செங்கட் சோழ நாயனர்

தமிழில் வல்லார்.

செம்பியப்பொருமயனர்.
கூற்றுவ நாயனர்.
நரசிங்கமுனையரைய நாயனர்.
ஐயடிகள் காடவர் கோனாயனர்.
கழற்சிங்க நாயனர்.

வைசியர். ஙா.

இயற்பகை நாயனர்
அமர்நீதி நாயனர்
மூர்த்தி நாயனர்
காரைக்காலம்மையார்
கலிக்கம்ப நாயனர்

சூத்திரர். ஙூ.

இசையான்குடிமாற நாயனர்
விறன்மிண்ட நாயனர்
மானக்கஞ்சாற நாயனர்
அரிவாட்டாய நாயனர்
திருநாவுக்கரசு நாயனர்
ஏயர்கோன்கலிக்காம நாயனர்
மூர்க்க நாயனர்
சாக்கிய நாயனர்
சாத்தி நாயனர்
வாயிலார் நாயனர்
முனையடுவார் நாயனர்
செருத்துணை நாயனர்
கோட்புலி நாயனர்.

இடையர் திருமூல நாயனர், ஆனாய நாயனர்.
சாலியர்=நேச நாயனர்.
குயவர்=திருநீலகண்ட நாயனர்.
செக்கார்=கலிய நாயனர்.
பரதவர்=அதிபத்த நாயனர்.
சான்றார்=ஏனாதி நாயனர்.

வண்ணர்=திருக்குலிப்புத் தொண்ட நாயனார்.
வேட்ட=கண்ணப்ப நாயனார்.
நீள=திருநாளைப் போவார் நாயனார்.
பணி=திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்.

வ.சுப்பராம பாண்டியர் அருளிச்செய்த

பிரமோத்தர் காண்டம்.

விபுதி மக்களை யுரைத்த அத்தியாயம் 18-வது செய்யுள்.

பரமசிவத்தை ஆராதிக்கும் அன்பினையும் பரிசுத்த மானசுணத்தினையும் வீபூதியே பூஷணமாக வணிந்து வினங்குந் திருமேனியையுமுடைய வாமதேவமுனிவரானவர் ஆன்றில் வனத்தை யடைந்தபோது அவ்வனத்தின்கண் சஞ்சரிக்கும் கோரருபமுடைய வோர் இராக்கதன் அம்முனிவரைப்பார்த்து கொடிதான கோபத்துடன் போதாதே அங்கனே நில்! நில்! என்றுகொல்லி அவரைப் பிடித்துத் தன்கைகளால் இறக்கினன். அத்தபோதனர் புஜத்தின் அணிந்திருந்த வீபூதியானது அவ்விராக்கதன் தேகத்தில் பட்டவுடனே அவனது கோரருபமும்பாவமுந் தொலைந்து மன்மதனைப் போன்ற அழகிய சரீரத்தைப் பெற்றனன். பெற்றவுடனே அவ்விராக்கதன் அம்மாமுனிவரை பயபக்தியுடன் பணிந்துகைகூப்பிநிற்கையில் நீயாரென்று முனிவர் வினவினர். இவ்வார்த்தையை அவ்வரக்கன் கேட்டவுடனே..துயரோகேட்பீராக இந்தஜன்மத்திற்குமுன் இருபத்தைந்தாம் பிறவியில் இவ்வுலகம் புகழும்படி வாழ்கின்ற தாசபனென்பவனும் இராதனுடன் கொடுமையான பாவங்களைச் செய்யும் மிலேச்சகுருக்கு இறைவனிருக்குதொழிலைச்செய்பவனுமில் இழிதொழிலைச்செய்து கொண்டிருந்தேன். அவ்வாறு வாழுநாளில் உலகுக்கெல்லாம் வருத்தமுண்டாகும்படி கொடுங்கோல் செலுத்தினேன், மயில்போன்ற சாயலையுடைய மாதர்களில்லனத்துக்கு விருப்பமானவர்களெல்லாம் விவாகஞ் செய்துகொண்டு அவர்களை நூறினைந்து சேர்த்து அதன்பின்பு பலநாள சிறையினிட்டதில்லாமற்பித்தி அனைத்து மாதர்களுக்குந் தின்பத்தைச் செய்தேன் என்றனன். அவ்விராக்கதன் மனம்புரிந்த மாதர்களின் ஜாதிப் பெயர்களைச் சொல்லில் 18வது செய்யுள்வருமாறு.

மின்னேர் மொழிந்தர் மோகினி பிரைமுழுந்தகித்
கன்னிமாராச் மாதர் வனிதர் தங்கருபின் நிற்கோர்
தோன்றெறி வெளான் செல்வத் தோளையர்ப்பரிப்பர
வன்னிய வருணத்துள்ள மகளிர் களைந்தது கோடி.

(பொழிப்புரை):—

விவாகஞ் செய்து கொண்டதினத்தில் புனர்ப்பூதேயன்றி மறுபடியும் ஒரு காளாவது அம்மாதரைப் புணரேன், பெருமை மிகுந்த பிராமணகுல மாதர்கள் க்ஷத்திரிய குலமாதர்கள் வைசியகுல மாதர்கள் பழமையான முறைமையை யுடைய சூத்திரகுல மாதர்கள் முதலாக அன்னிய சாதியிலுள்ள மாதர்கள் அனந்தங் கோடி.

19-வது செய்யுள்.

கம்பியமகளிர் குறமடந்தையர் வேடிகாரோட்டக்
கொம்பை வெம்முலையர் குன்றக்கொடிச்சியர் குணங்கமாதர்
தம்பியற் குலால மாதர் மஞ்சிகத்தையாளர்
சம்மையம் பரதமாதர் சூடுதொழிற்புலைய மாதர்.

(பொழிப்புரை):—

(1) கம்மாளகுல மாதர்களும் ஊன் விற்கும் மாதர்களும், காடோர் குலத்திற் பிறந்த இளமையுள்ளதாய் விருப்பத்தைத்தரும் தனமுள்ள மாதர்களும் மலையில்வாழும் குறமாதர்களும், தேர்ல் விளைஞர் மாதர்களும் தம்பியர்தை மாருத குயவர்குல மாதர்களும், காவிதக்குல மாதர்களும் அரையர்குல மாதர்களும், நீசகுல மாதர்களும்.

ஆளர்=வலை வீசுபவர்.
குணங்கர்=தோல் தொழிலர்.
மஞ்சிகர்=நாவிதர்.

பங்கயன் படைத்தவிந்தி வருணத்தின் பகுதிதம்மை
யிங்கியான் கணித்துக் கூறற்கெளி யவன்றவப்பின்னை
மங்கையர் குலங்கடோறு மனத்த மர்வுற்றதன்றித்
தங்கிய காதற்றீரப் பெற்றிலேன் காமந்தன்னால்.

பிரமதேவன் சிருட்டித்த இத்தப் பிரபஞ்சத்தில் சாதிகளை நான் அளவிட்டுச்சொல்ல எனக்கில்ல அதற்கச்சாதிகடோறும் அனந்தமாதர்களை விவாகஞ்செய்ததேயல்லாது காமமிகுதியால் எனக்குண்டாகிய ஆசை நீங்கினேனில்லை என்று முனிவருடன் சொன்னனிராக்கதன்.

மேற்காட்டியபலவாற் பிரமாணங்களால் கல்வினைப் பிரதான வருணங்களும் எண்ண வருணங்களும் பூர்வந்தொட்டிருக்கின்றன வென நிச்சயிக்கக்கூடும்.

சோமசூரியாக்கினி யென்னும் மூக்குலமரபினராகிய சேர, சோழ பாண்டியர்கள் தமிழ்நாடுகளில் அரசு புரிந்த காலந்தொட்டு இற்றை யவரைக்குமுள்ள நகரங்களின் சிறப்பு, வடமொழியிலும் தென் மொழியிலுமுள்ள கிரந்தங்களில் விசேஷமாகக் கூறப்பட்டிருக்கின்றன. தமிழ் வேந்தர் அரசு செய்த காலத்தில் முதன்மை பெற்றும் பெருமையுற்றுமிருந்த நகரங்களாவன—கரூர், உறையூர், காஞ்சிப்பூம் பட்டினம், தஞ்சைநகர், குடந்தைநகர், திருவாரூர், சிதம்பரம், கச்சிநகர், மதுராபுரி, முதலியவைகளாம். இம்மாட்சிமை தங்கிய நகரங்களிலே பூர்வமிருந்தவேந்தர்களால் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயங்களுங் கூடகோபுரங்களும் மாடமாளிகைகளும் அழகமைந்துவிளங்குகின்ற அவ்வாலயாதிகள் மகான்களால் பூசிக்கப்பட்டும் பாடப்பட்டுமிருப்பதற்கு அவர்களால் அருளப்பட்டுள்ள அருள்நூல்களே பிரமாணமாம். தமிழ் வேந்தர்கள் இவ்வகையாகவுள்ள மாட்சிமைபொருந்திய நகரங்களிலிருந்து அரசு நடாத்தியபோது அந்தணர் வீதியென்றும், அரசர் வீதியென்றும், வணிகர் வீதியென்றும், வேளாளர்வீதியென்றும் வகுத்திருந்தனர். இவ்விதிகளே வடமொழி பிரயோகத்தில் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் வீதிகளென்று முறையே வழங்கப்படும். குயவர், கம்மியர், காருகர், சாலியர், இடையர், செக்கார் முதலிய வகுப்பினர் தனித்தனியே வசிக்கும் வீதிகளும் அவ்வவ்வருணங்களின் பெயர்களால் ஆதியில் வழங்கியதுபோலவேதற்போதும்வழங்கிவருகின்றன. சிலப்பதிகாரம் மணிமேகலையென்னுங் காப்பியங்கள் காஞ்சிப்பூம்பட்டினத்தின்வீதிகளையும், கச்சிநகர் வீதிகளையும், கூறுங்கிரமத்தை யொட்டியே பிங்கலம், திவாகரமாகிய நிகண்டுகளும் ஏனைய இதிகாச புராணங்களும் கூறுகின்றன. வருணத்தவர்களின் பெயர்களே பெரும்பாலும் வீதிப்பெயராகக் கூறப்பட்டிருக்கின்றது. இதுபோலவே ஆதிகாலந் தொட்டுள்ள வொவ்வொரு நகரத்திலும் நாட்டிலும் எல்லா வருணங்களும் வசித்து வருதலே இன்றையவரைக்குங் காணலாம். அரசாட்சி மாறுதலால் ஒவ்வொருகாலும் உயர்ந்த நிலைமையிலிருந்தோர் இழிந்த நிலையுற்றிருக்காலும் அம்மரபின் பெயர்க்குரிய பெருமையும் ஆதிக்கங்களும் அழிவுறுதிருத்தலே யின்றும் பிரத்தியட்சமாக யாவரும் காணக்கிடக்கின்றன. இத்தியாதி அமைவுப் பிரமாணங்களால் தமிழ் நாடுகளில் ஆதிதொட்டிருந்த நகரங்களின் வருணபேதங்கள் இன்ன முள்ளனவென்னு சங்கையறக் காட்டப்பட்டது.

உமாபதி சிவாசாரியர் என்பார் சந்தான குரவருளொருவரும், தில்லைவாழந்தணர்களி லொருவருமாகியவர். இவர் சிதம்பரத்தைச் சார்ந்த கொற்றவன்குடியில் சாலிவாகனசகாப்தம் 1235 வருஷத்தில் வசித்திருந்தவர். இக்குரவர் செய்தருளிய சைவசாத்திரங்கள் பல. கோயிற் புராணம் திருத்தொண்டர் புராண சாரமுதலிய நூற்களுமிவரதேயாம். அன்றியும் "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங் குடியாற் கெழுதியகைக் கீட்டுப்—படியின் மிசைப் பெற்றுண் சம்பந்தனுக்குப் பேதமறத்திக்கை செய்து, முத்திக்கொடுக்க முறை." என்னுந் திருமுகத்தை சபாநாயகர் விதித்தருளியபடி பெற்றுண் சம்பந்தனுக்கு முத்தி கொடுத்தருளினர். இவ்விதமகிமை பெருந்திய உமாபதி சிவாசாரியரால் சொல்லப்பட்ட திருத்தொண்டர் புராணசார மென்னுஞ் சேக்கிழார் புராணத்திலே மேற்காட்டிய (உசு) வது செய்யுளிலே திருத்தொண்டர் வருணங்களை வகுத்துக் கூறுவதில் அரசனர்மரபைச்சேர்ந்த அடியார் புராணமித்தனையென்றும், அரசர்மரபைச்சேர்ந்த அடியார்புராணமித்தனையென்றும், வணிகர் மரபைச்சேர்ந்த அடியார் புராணமித்தனை யென்றும், வேளாளர் மரபைச் சேர்ந்த அடியார் புராணமித்தனை யென்றும் முறையே சொன்று வருணங்களையுங் கூறி இவற்றின் பின்னர் ஏனைய வருணத்தவர்களாகிய் இடையர், சாலியர், குயவர், முதலிய அடியார்புராணங்களையுங்கூறியுள்ளார். அன்றியும் இம்முதலுபாயஞ் சேக்கிழார்சுவாமிகள்மீதுவைத்த அன்பின்மிகுதியால் வேளாளர்க்குரியசிவையுஞ்சிறப்பையும் பேரையும்புகழையும் எடுத்துச்சொல்லுகையில் வேளாளர் நான்காங்குலத்தவரென்றே கூறுகின்றாரேயன்றி வணிகர் அல்லது வைசியரென்று அன்னோரைக்குறிக்கவேயில்லை. மேற்புராணம் ஐந்தாவது செய்யுளில்கூறியபடி காஞ்சிபுரியினின்றும் ஓர் வணிகன்யாத்திரை யாக செல்லுகையில் பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் அவ்வணிகன் உயிரிழந்தவிட இவன் பொருட்டிக் கொடுத்த வாக்கு மிறையாமல் தவிவுகொண்டு வேளாளர் எழுபத்துபேரும் திக்குழியில்மூழ்கி திருவாலங்காட்டிலெழுந்தருளிய அண்ணல் திருவடியையடைந்தனரென்று கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு அதிகுறியாகவுள்ள பழையனூர் நீலிகோயிலும் அதற்குரியவைதிகமுமின்றுமிருக்கின்றன. வேளாளர் சார்பாகச் சொல்லப்பட்ட திருக்தை வழக்கத்திலே "நிலதனக்குஞ் நின்றவணிகேசனுக்காக்கோலி பயங்கொடுத்து வை" என்று கூறியிருத்தலால் வணிகரே வைசியரென்றும் வேளாளரே சூத்திரராகிய நான்காம் வருணத்தவரென்றும் வெள்ளிதினிது விளங்கும்.

மூன்றாவது அத்தியாயம்.

மேலுள்ள இரண்டாவது அத்தியாயத்தில் நிகண்டாதிகளில் சொல்லப்பட்ட வருணக் கிரமக்களுக்குரிய பெயர்களையும் அப் பெயர்கள் பன்னூற்களில் வழங்கும் பிரயோகங்களையும் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்கு வருணங்களைக்குறிக்கும் நூற்களிலுள்ள பிரயோகங்களையும் முறையே காட்டினும். இவ் வத்தியாயத்தில் பஞ்சநில மென்னும் ஐந்திணைகளையும் அவற்றில் வாசஞ்செய்யும் மரபினர் இன்னின்னரென்றும் பூர்வமிருந்த மேதா விகளால் சொல்லப்பட்ட நூற்களினின்று விளக்குவாம்.

காடுசார்ந்த பூமியை முல்லை யெனவும், கடலுங்கழியுஞ் சார்ந்த பூமியை நெய்தலெனவும், குன்றுமலைசார்ந்த பூமியைக் குறிஞ்சி யெனவும், நீர்வளம் நிலவளஞ் சார்ந்த பூமியை மருதமெனவும், வெப்பங்கானல் மிகுந்துள்ள வெளியாகிய பூமியைப் பாலையெனவும் வகுத்துள்ளார் டொரியோர். அவை வருமாறு.

முல்லையும் அத்திணைமாக்களும்.

தொல்காப்பியம் அகத்திணையியல் (நு) வது சூத்திரம்.

மாயோன் மேயகாடுறை யுலகமுஞ்
சேயோன்மேய மைவரை யுலகமும்
வேந்தன்மேய தீம்புன லுலகமும்
வருணன்மேய பெருமணலுலகமும்
முல்லைகுறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

(இ-ள்.) கடல் வண்ணன் காதலித்த காடுறையுலகமும் செங் கேழ் முருகன் காதலித்தவன் தங்கியவரைசூழ்உலகமும் இந்திரன் காதலித்த தண்புனல் நாடும் கருங்கடற் கடவுள் காதலித்த நெடுங் கோட்டு எக்கர் நிலனும்: முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.

இந்நான்கு நிலங்களுக்கும் பொதுவாகிய பாலையை நடுநிலைத் திணையென்று கூறுவது சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

புகழேந்திப் புலவர் இரத்தினச் சுருக்கம்.

தினையுந் திணைத்தரியனவும் கூறுவது செய்யுள்.

காடாகுமுல்லைக் கழிநெய்தலாகுங்கல்லாகுறிஞ்சி
நாடாம்மருத நடுவேபாலை யிந்நாடிற் றெய்வம்

காடோர்கரன் வருணன் குகனிந்திரன் கூறுதற்கை
மாடாயர் மீன்புல்லர் குன்றவர்கானவர் மள்ளருமே.

(இ-ள்.) முல்லை நிலங்காடும், நெய்தல் நிலங்கடலும் கழியும், குறிஞ்சி நிலம்மலையும், மருதநிலம் நாடுசேர்ந்த நெல் முதலியவை வினையும் பூமியும், பாலைநிலம் துன்பமும் வெப்பமுந் தரத்தக்க கானல் வீசப்பட்ட வெளியும் ஆம்; இவ்வைந்து நிலங்களுக்கும் தெய்வம் முல்லைக்குத் திருமாலும், நெய்தலுக்கு வருணனும், குறிஞ்சிக்கு முருகக்கடவுளும், மருதத்திற்கு இந்திரனும், பாலைக்குத் துற்கையு மாம். இவ்வைவகை நிலங்களில் வசிக்குங்குடிகள் முல்லையில் இடை யரும் நெய்தலில் பட்டினவரும், குறிஞ்சியில் குறவரும், பாலையில் வேடரும், மருதத்தில் உழவருமேயாம்.

முல்லைத்திணை நடப்போதன்.

முல்லைக்குத் தெய்வம் மாயோன்; உணவு, வரகுஞ் சாமையும், முதிரையும்; மா, உழையும் புல்வாயும் முயலும்; மரம், கொன்றை யுங் குருந்தும்; புள், காவற்கோழியுஞ் சிவலும்; பறை; ஏறுகோட் பறை; செய்தி, கிரைமேய்த்தலும் வரகு முதலியன களைகட்டலுங் கடாவிடுதலும்; யாழ், முல்லையாழ்; பிறவுமென்றதனாற் பூ, முல்லை யும் பிடவுந் தளவுந்தோன்றியும்; நீர், காவன்பாறு; ஊர், பாடியுஞ் சேரியும் பள்ளியும்; தலைமகன், குறும்பொறைநாடன்; தலைமகள் கிழத்தி; மக்கள், இடையர் இடைச்சியர், ஆயர் ஆய்ச்சியர்

காஞ்சிபுராணம் நாட்டுப்படலம் (நகூ) வது.

பெண்ணலங்கனி மிடைக்குலப்பிடி நடைமடவார்
விண்ணலங்கனி மாதரை வெழிலினுக் கென்றா
பண்ணலங்கனி மிடற்றவர் பணைத்த முக்கிளர்த்த
மண்ணிலெல் கனுந்தூக்கி வைத்தெனக்குமிழ் மலரும்.

(இ-ள்.) பெண்களுக்குரிய இலட்சண மிகுந்த இடைக்குலத் தில் தோன்றிய பெண்யானைபோலும் நடையையுடைய ஆய்ச்சியர் இன்னுலினுள்ள அழகுமிக்க அரம்பையரைத் தமது அழகால் வெற்றிகொண்டு பண்ணில் சுவைகனிந்த கண்டத்தையுடைய அவ் வரம்பையாது பருத்த மூக்கினை யரித்து நிலவுலகில் எய்விடத்துத் தூக்கிவைத்தாற்போல குமிழமலர் மலரா நிற்கும். இச்செய்யுள் முல்லைநிலப் பெண்ணின் சிறப்பைக் கூறியது.

திருவேங்கட வெண்பா (ங) வது செய்யுள்.

மாகக்கோலித்திரியும் வையகத்தோர் தம் பிறவி
வேகக்கோர் வந்தமாம் வேங்கடமே—சோகத்
தருமாதரை நட்டான் றண்முல்லையாயர்
தருமாதரை நட்டான் சார்பு.

(இ-ள்.) மயக்கத்தைக் கொண்டு (பல விடங்களிலும்) அலை கின்ற நிலவுலகத்தாருடைய பிறப்பாகிய கடலுக்கு ஓர் மரக்கலம் போன்ற வேங்கடமே (தேவேந்திரனது சுற்றவனென்னும்) பூந் சோலையிலுள்ள பாரிசாத விருட்சத்தைப் பெரிய பூமியிற் கொணர்ந்து நாட்டினவனும் நீர்வளத்தால் சூளிர்ச்சியான முல்லை நிலத்தில் வசிக்கின்ற இடையர் பெற்ற பெண்களை விரும்பிக்கூடினவனுமாகிய திருமால் திருவுளமுவந்து சார்ந்திருக்குமிடமாம், தண்முல்லை ஆயர் என்றமையால் முல்லை நிலத்திற்குரியவர் இடையர் என்று இச்செய்யுள் விளக்குகின்றது.

பேரியபுராணம் ஆனாயநாயனார் சரித்திரம்.

முழவுகாட்டிலே மங்கலவூரிலே ஆயர் குலத்திலே சிவபத்தியிற் சிறந்த ஆனாயனார் கார்காலத்திலே ஓர்நாள் இடையர்கள் பசுவினரைகளைச் சூழ்ந்துகொண்டு செல்ல அவ்வாயர் நாயனார் கையிலே கோலும் வேய்ங்குழலும் கொண்டு நிரைகாக்கும்படி காட்டிற்குச் சென்ற பொழுது அவ்விடத்திலே பரமசிவனைப்போல் நிற்கின்ற கொன்றை விருட்சத்திற்குச் சமீபத்திலே போய் அதைப் பார்த்துக்கொண்டு நின்று, அன்பினாலுருகியிளகிய மனசையுடைய வராகி வேய்ங்குழலிலே இசைதானவிலிதித்தபடி ஸ்ரீபஞ்சாட்சரத்தை வாசித்தார். வாசிக்கவே ஆகிமதுரமாகிய இசை வெள்ளமானது எவ்வுலகப் பட்டவுயிர்களின் செவியினும் புகுந்தது. புகவே சாம அசரம் என்னும் ஆன்மவர்க்க மெல்லாம் ஆனாயனார் வேய்ங்குழல் வாசனையைக்கேட்டு, இசைமயமாயின, இந்நாயனார் உள்ளன்பையும்பத்தியையும் அறிந்த பரமசிவம் பார்வதி தேவியாரோடும் இடபாருடராய் எழுந்தருளி காட்சிகொடுத்து கைலாயபதவியைக் கொடுத்தனர் என்பது இவரது சரித்திரசுருக்கம்.

ஷ ஆனாயநாயனார் சரித்திரம் (ஙக) செய்யுள்.

சேடியிற்றெடு தேனுஞ் செல்லையினில் வெண்கோலு
மேவுமிசை வேய்ங்குழலு மிகவினங்களினே செய்யுங்
காவலுபுல்லையர் கன்றுகடையானினை சூழும்
பூவலத்தார் கோவலனார் நிரைகாக்கப்படும் போந்தார்.

(இ-ள்.) காலில்செருப்பும் கையினில் தடியும் புல்லரிங்குழலும் விளங்கத் தன் ஊழியராகிய மாடுகளை காக்கின்ற இடையரும் தன்னைச்சூழ இடையருக்குத் தலைவரான ஆனாயநாயனார் பசுக்களை மேய்த்து ரசிக்கும் பொருட்டு முல்லைநில மாகிய காட்டுக்குச் சென்றார்.

ஷ நாயனார் (உல) வது செய்யுள்.

எம்மருங்கு நிரைபாப்பி வெடித்த கோனடைப் பொதுவர்
தம்மருங்கு தொழுகினையத் தண்புழில் வருத்தலில்லர்
அம்மருங்கு காழ்த்தசினை யலர்மருங்கு மதுவுண்டு [தார்.
செம்மருந்தன் சுரும்புசுழல் செழுங்கொன்றை மருங்கணைந்

(இ-ள்.) எப்பக்கங்களிலும் பசுநிரைகுழ,கையில் தடியையுடையபொதுவர் தன்னை தொழுது பக்கத்தில்வர, குளிர்ச்சி பொருந்திய முல்லை நிலத்திற்குத் தலைவர் கொன்றை விருக்ஷத்தின் (மருங்கணைந்தார்) = பக்கத்திற்சென்றார்.

கோதுலசதகம் செய்யுள் (கடு) 15.

மண்டலந்தன்னி னிலனேந்துகூறதில் வண்மை பெறுந்
தண்டலை நன்னதி சார்மயிலானிரை தார்குருந்து
விண்டலத்தோர் மகிழ்வேய்ங்குழலோசை விளங்குபைந்தேன்
கொண்டவளந்தரு முல்லைத்தலைவர்கள் கோகுலரே.

(இ-ள்) பஞ்சலிலங்களில் ஒன்றாகிய முல்லையில்வளமையுடையோர், தான்யாறு, மயில், பசுக்கூட்டம், குருந்தமரம், புல்லாங்குழல் ஓசை, தேன்முதலிய பொருள்களின் வளப்பத்தையுடைய முல்லை நிலத்திற்குத்தலைவர்கள் கோகுலத்தவரென்றுசொல்லப்படும் இடையர்களாம்.

நாலாயிரப் பிரபந்தம் பெரியாழ்வாருரைய மேய்ச்சுது
முதலாயிரம் இரண்டாம்பத்து.

பூச்சூட்டுதல் (அ) வது செய்யுள்.

இருட்டிற்பிறந்து போயேழைவல்லாயர்
மருட்டைத்தவிர்ப்பித்து வன்கஞ்சன் மாவப்
புரட்டியக்காலெங்கள் பூம்பட்டுக் கொண்ட [டென்றுன்.
அரட்டன் வந்தப் பூச்சிகாட்டுகின்றனம் மனேய்ப் பூச்சிகாட்

கருத்து—

தேவகியிற்றில் இரவில் பிறந்து ஏழைமதியையுடைய இடையாகளை வஞ்சிக்கும் ஆயர்பாடியில் சென்று அவர்களது மயக்கத்தைத்தவிர்த்து வஞ்சகஞ்னைக் கொன்று, தந்தை பட்டாடையை யெடுத்துக்கொண்டு போன்றவன்வந்து பூச்சிகாட்டுகின்றனன்.

குடிக்கோடேந்த காச்சியார் திருப்பாலை.

(உஅ) வது பாகரம்.

கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாதவாய்க் குலத்தின்முன்னோப்
பிறவிபிறக்கினி புண்ணிய ராமுடையோம்.
குறைவொன்று மில்லாத கோவிந்தா வுன்றன்னை
குறவேல் ரமக்கிவ் கொழிக்க வொழியா
தறியாயின்னைகளேசமன் பினுலுன்றன்னைச்
சிறுபேரழைத்தனவுஞ் சீரியருளாதே
இறைவாநீ தாராய்பறையேலோ ரெம்பாவாய்.

வில்லிபுத்தூரான்வார் பாரதம் சபாபருவம் இராஜ சூயயாகச்சருக்கம்.

(ரமச) வது செய்யுள்:—

பூபாலரைவர்பத்து முற்பூசை பெறுவார், புறங்காணில் வாழ்
கோபாலரோ வென்றிருத்தங்கதிர்த்துக் கொத்தோதினுன்
காபாலிமுனிபாத மெய்காமனிகராள கவினெய்தியேழ்
தீபாலடன்காத புகழ்வீரகப மன்ன சிகபாலனே.

(இதன் கருத்து):—

பூமியைப் பரிபாலனஞ் செய்யும் அரசர்சபையில் அக்கிரகண்
ணிய பூசைபெறுவார் முல்லைநிலமான காட்டில் வாழும் இடைய
ரோவென்று சிசுபாலனுன்வன் மிக்கதேஷாவேசத்துடன் சொன்னு
ன்னன்பதாம்.

ஷை பாரத உத்தியோக பருவம்.

கிருட்டினன் தூதுச் சருக்கம் (ரஉக) செய்யுள்.

புன்பிறப்புடைய பொதுவர் தங்களொடு புறம்பிலானினை புரந்திடு
முன்பிறப்பு முரலோடு கோபியருனைப் பிணித்தது மறந்து நீ
மன்பிறப்பினுயர் குருகுலத்தவர் சம்வாய்மையை தானுமொரு மாசிலா
வென்பிறப்பு முணராமலோசபையிலித்தவாசகமியம்பினாய்(கருத்து)

அற்பபிறப்பையுடைய இடையர்களுடன் முல்லைநிலத்தில் பசு
க்கூட்டங்களே மேய்க்கின்ற உனது பிறப்பையும் இடைச்சிகள் உன்
னையுரலுடன் கட்டியதையும் நீமறந்து குருகுலத்தவர் சொல்லுந்த
மற்றதென்றும் என்வம்சவழியை யுணராமலும் இச்சொல்லிச்சொ
ன்னியென்று தூரியோதனன் சொன்னதென்பதாம்.

ஷை பாரதம்சல்லிய பருவம்.

பதினேட்டாம் போர்ச்சருக்கம்.

(ரஅஅ) வது செய்யுள்

றுத்தநிலநீர் பொக்கவேயிருநிலத்தின் விழ்குருகுலத்தினு
லுறுத்தபினளவுமுயிர்த்துமாயநெறித்துவாசகமுறச்சொல்வான்
குறிப்பினுலவிசயனைக்கொடாருயிர்குதிக்கமாமதிகொருத்தினு
பறத்தினுலடன் மறத்தினீர் மையினியற்பராபரநிகற்பரோ.

(இதன் கருத்து:—பூமியில் விழுந்த துரியோதனனுன்வன்
திருஷ்டனைக் கோபித்துச் சொல்லுவான் குறிப்பினுல் அருச்சுனனை
க்கொண்டென் உயிர்போகத்பித்தாய் தருமமாக யுத்தஞ்செய்யும்
முறைமையை அற்பபூயர் அறிவரோ (என்று சொன்னன் என்ப
தாம்)

ஷை சருக்கம் (ரகக) வது செய்யுள்.

மகத்தபோர்தொறு மெனக்கு நீசெய்பிழைமற்றுனோர் செய்
தினைப்பரோ, குலத்திலே பிழிருவத்தானவர்குறிப்பினதிலை பிறக்
குமோ, சலத்தினுல் வினையியற்றுனர் முடிதரித்தசாவலொடொப்
பரோ, நிலத்தில் வாழ்வார் பெறக்கொடாபினி னினைத்த காரியமுடி
த்திலே.

(கருத்து)—யுத்தம் புரியுந்தோறும் எனக்கு நீ செய்த பிழை
மற்றவர்கள் புரிய நினைப்பார்களோ குலத்திலே பிழிருவத்தானவர்
தன் குறிப்பினுல் காட்டினுலல்லாமல் வேறுவிதத்தால் எவருக்குமுடிக்
கக்கூடுமோ இக்காரியத்தை முடிக்க தூதாயேவினசெய்வோர் முடி
தரித்த அரசர்களுடன் ஒப்பாவாரோ, பூமியில் ஆளப்பட்ட அர
சைப் பாண்டவர்கள் அடையநீ நினைத்தவாறு காரியத்தை முடித்
தாய் என்று துரியோதனன் சொன்னன் என்பதாம்.

பாரதம் ஆதிபருவம் திரௌபதி மாலையிட்ட சருக்கம்.

(ரஉத) வது செய்யுள்.

இத்தக் குறிஞ்சியது குலத்தத்தென்னாங்கிலமெனுமாறு
வந்துறப்பித்துப் பெருவரருடன் வளருன்னமாமாயன்
முத்தக்கஞ்ச மாமலரீர் முடித்தானிலத்து முதலூர்தி
பத்தப்புரத்திலாராம மத்தப்புரத்துக்காராமம்.

(இன்)— இந்த உத்தம புருஷன்யது வம்சமுழுதுக்கும்
ஒரு திலமென்று சொலுமளவு அலக்காரமாய் அக்குலத்தில் வந்

சிலப்பதிகாரத்திலே ஆய்ச்சியர்குரவையில் கூறிய கருத்தை தழுவி இடையர்மீதுபாடிய கோகுலசதகம் கூறுவதைசெய்யுள்.

"தொடுத்த நற்கற்புடைக்கன்ன கைகேள் வன்று யாதனற்
க்கித்து வருகின்றபோதவள் கொய்கைக் கரம்பற்றித்து
விடித்தவள் கூடபதியிலிலாயர் பெண்வெண்ணெய்ப்பக்
கொடுத்தவரம் பெற்றுவாழ் வோர்கள் பாடியிற் கோகுலரே."

பொதுவர் இடையர் ஆயர் கோபாலர் முதலிய பெயர்கள் மு
கீதநிணையில் வசிக்குமிடையரைக் குறிப்பதாக தொல்காப்பியம்
சிலப்பதிகாரம் பெரியபுராணம் நாலாயிரப்பிரபந்தம் முதலிய நிறந்
தூற்களிலும் வடமொழி தென்மொழிபாரதத்திலும் ஆன்றோர் கூற
யிருத்தலையுதகரித்தாம். கோகுலத்தார்மீது அபிர்தவியாரும் ஒள
யாரும் மேற்கூறிய தூற்களுக்கிணங்க பாடியிருக்கின்றனர். அனேக
தூற்முண்டெனுக்குமுன்னிருந்த அறிஞர்களால் ஆக்கப்பட்டதூற்க
றுக்குமாறாக அம்மரபினுதித்தவர்களில் சிலர்தம்மை தோஷியரென்
றும், சிலர் நவகுலசூத்திரியரென்றும்மொழிகின்றனர். இவற்றின்
உண்மை நடியாமல் அன்றோர் கற்புகையோர் சொல்லிக்கொள்ளு
தல் தூற்பிரமாணங்களுக்குப் பொருத்தமாவென்று வியவகரிப்பாம்.

சந்திரவம்சத்தில் வந்த அரசர்களில் யயாதியென்னும் அரசன்
சுக்கிரன் புத்திரியாகிய தெய்வயானியை மணம்புரிந்தான். இவ்விரு
வர்களுக்குப்பது துருவசு வென்னுமிரண்டு புத்திரர் பிறந்தார்கள்.
சன்மத்தை யென்னும் மனைவியின் மூலமாகத்துருகு, அனு, புரு
என்னும் மூன்று புத்திரர் பிறந்தார்கள். இவ்வைந்து புத்திரர்களில்
யதுவம்சத்தில் வந்தவன் வசுதேவன். இவ்வரசனுக்கு மனைவி தேவகி.
தேவகியின் கையுன்வடமதுரையையாண்ட கம்சன். சோதிடநூல்
வல்லோர் தேவகியின் உதரத்தினுற்பவிக்கும் ஏழாங்குழந்தையால்
கம்சனுக்கு ஆபத்து சம்பவிக்குமெனக் கூறியதைக்கேட்ட கம்சன்
தனது சகோதரியின் கர்பத்தில் பிறக்கும் ஆண்சிசுவைக் கொலைபுரி
யும்படி யாக்கொபித்திருந்தான். இவ்வாறிருக்கையில் தேவகியின்
கருப்பத்தில்திருமாலானவர் கிருஷ்ணாவதாரத்தில்தார். யதுகுல
சூத்திரியனுகிய வசுதேவனுக்குத் தேவகிக்குங் கிருஷ்ணன் குமார
னுக அவதரித்தார். அவதரிக்கவே தேவகியாள் சகோதரனாகிய
கம்சனிட்ட கட்டளைக்குப்படபாடி ஆயர்களுக்குத்
தலைவனுகிய நந்தகோபாலன் மாளிகைக்குத் தன்மகவைத்தில் பிறந்த
ஆண்சிசுவை காரிருளில் தாதியின் மூலமாய் அனுப்பிவிட்டு அவ்விட

துருந்த யசோதையின் பெண் சிசுவையுடனே யெடுத்துவரும்படி
தாசியத்துவிட்டாள். கிருஷ்ணன் கம்சனைக்கொலைபுரியும் வரையில்
ஆயர்பாடியில் ஆயர்களுடனிருந்து வளர்ந்துவந்தான். இங்ஙனம்வள
ர்ந்தானுயினும் இவன் யதுவம்சத்திலுற்பவித்த சூத்திரியகுலவச
தேவன் குமாரனைகையால் சூத்திரியகுலவராகிய ருக்குமணியை
விவாகஞ்செய்துகொண்டான். தருமபுத்திரன் சகோதரனுகிய அருச்
சுனனுக்குக் கிருஷ்ணன் தன்சகோதரியாகிய சுபத்திரையை மணம்
புரிவித்தான். அருச்சுனனுக்குஞ் சுபத்திரைக்கும் அபிமன்னன் பிற
ந்தான். அபிமன்னன் யாதவகுலதிலகனுகிய கிருஷ்ணமூர்த்திக்கும்
ருக்மணிக்கும் பிறந்த சுந்தரியென்னும் மாதை மணம்புரிந்தான். இச்
சொயல்களால் கிருஷ்ணன் இடையர்வீட்டில் வளர்ந்தபோதிலும்
தான் அவதரித்த சூத்திரியகுலமாகிய யதுவம்சத்திலேயே பெண்
கொள்ளவும் கொடுக்கவுமிருந்தானென்பது நிச்சயிக்கப்பட்டது.

இங்ஙனம் கிருஷ்ணகாலத்து பாண்டவர் சகாயனை கிருஷ்ண
ரும்நடாதி தருமர் நடத்திய இராசசூயயாகத்திற்கு விஜயஞ்செய்திரு
ந்த காலையில் பிஷ்மராலையும் யாகர்த்தாவையும் பழமையாகிய முனி
வரையும் நோக்கி இந்த யாகத்திற்குப் பலதேயக்களினின்று பருதி
குலத்தரசரும் மதிகுலத்தரசரும் வன்னிகுலத்தரசரும் ஏனையிவர
சர்களும் வீறைந்துள்ளார்கள் இச்சபையில் அக்கிராசனை பெறபவர்
யாரென்று கேட்க, வியாதமுனிவர்தன்னை வந்தடைந்த கிருஷ்ணனை யுடைய
சகாயனுயிருப்பதால் அக்கிராசனையளித்தல் சிறந்ததென்று கூறினார்.
சென்றவிடங்கள்தோறும் பூத்தலைவர்களிலும் சேதிராட்டபதி
யாகிய சிசுபாலன் இம்முனிவர் மொழிந்தமொழியைக்கேட்டு இவர்
கிருஷ்ணரை கள்ளரென்றும் சொல்லி பூபாலர் அனைவரையும்
முதற்பூசைபெறுவதற்கு காரணத்தினவராகிய கோபாலராகிய இவ்
வாசனை அகற்றி அக்கிராசனாசனத்துடன் கிருஷ்ணன் இம்மன
சபையில் சூரியகுலத்தரசரென்ன சந்திரகுலத்தரசரென்ன அக்கினி
குலத்தரசரென்ன இவ்வகையான பேர்பெற்ற வரசர்களிருக்க, இவர்
களைவிட்டு இவ்விடையனுக்கா அக்கிரபூசைகொடுத்தல் என்று மறு
தலித்துக்கூறினன். சபையாரும் பொதுத்தற்கரிய புன்மொழிகளைச்சி
சுபாலன் புகன்றமையாலும் தான்பிறந்தகுலம் யதுகுலமாயிருந்தும்
தன்னை இடைகுல இடையனுகக் கூறியதாலும் கிருஷ்ணன் ஆச்சிச
சுபாலனுடைய தேரிற்பாய்ந்து அவனது உயிரை மாய்த்தான். பாண்டவர்
பொருட்டு அதைசென்ற காலையில் கிருஷ்ணன் ஆயர்குலத்தவன்

அல்லவென்று அறிந்திருந்தும் கிருஷ்ணன்மீதுவைத்த பொறாமை காரணமாக துரியோதனன் சபையில் நிந்தனைசெய்தான். ஆன்றோர் நூலாட்சியில் யாதவகுலம் வேறு எவ்றும், ஆயர்குலம் வேறு என்றும் நன்குவிளக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இடையர் யாதவரெனத் தங்களை வழங்கிவருதல் உபசார வழக்கென்று முன்னமே கூறியுள்ளாம்.

வியாசபாரதம் சபாபர்வம் அத்தியாயம்-37.

நாயமஸ்மீவிஷ்ணீய ஸ்திஷ்டந்விஹம்மஹாத்மஸு।
மஹீபதிஷ்வகௌரவ்ய ராஜவத்பார்த்திவார்ஷணா॥

நாயமர்ஹதிவார்ஷ்ணேய ஸ்திஷ்டந்விஹம்மஹாத்மஸு
மஹீபதிஷ்வகௌரவ்ய ராஜவத்பார்த்திவார்ஷணா.

ஓ குருவம்சத்திற்றோன்றிய தருமபுத்திரரே! இச்சபையில்மஹாத்மாக்களான அரசர்கள் அனேகரிருக்க விருஷ்ணிகுலத்தில் (பொதுவர்குலத்தில்) உதித்தவனுடைய கிருஷ்ணன் அரசர்களோப் பூசிப்பது போல் அர்ச்சிக்கத்தகாதவன் என்பதாம்.

தவஸ்ஜேஷுபுத்ரேஷு ஸம்ஸ்தாஜனார்தனா।
யுகவாயுவம்த்ரஷ்டு ந்வஸ்காரம்கௌரவ்ய ஸ்தா॥

தத்சேதிபுரோப்ராப் தௌ ஸங்கர்ஷண ஜனார்தனௌ
யாதவௌவாயதவீம்த்ரஷ்டும் ஸ்வஸ்காரம்தௌபிதுஸ்ஸதா

சேதிபுரத்தில் யதுவம்சத்திலுதித்த தனது பிதாவின் சகோதரியைப்பார்ப்பதற்கு யது வம்சத்தவரான ஸங்கர்ஷணஜனார்த்தனாகிய பலராமனும் கிருஷ்ணனும் இருவரும் சென்றார்கள் என்பதாம்.

பாரதம் இராசசூயச்சருக்கம்.

யாதவகுலத்திறுக் கிறைவனிய
மாதவனினேயடி வணங்கிமற்றவ
ணூதலர்தாஞ்சொன் பொருந்தபொற்பிரு
ஞாதனிர்வண்ணன் வாழுலகுபோன்றதே.

கிருஷ்ணன் தூதுசருக்கம்.

மாதவனிருந்தகோயில் வந்தடிவணங்கிமன்னன்
ஆதிவராழியங்கைத்தோன்றலே தூளபமாலே
யாதவருலத்தோரேறே யெழுந்தருள்கென்றுனின்றெம்
மேதகுமரசனென்றார் முகந்தனம்மினாலிற்சென்றான்
யாதவர்திலகனானுங்னெனை யிருந்தவப்பாண்டினின்றுமரா
காதலோடெதிர்கொண்டணிநகர் புகுந்துதிர்மணிதேரினின்றிழிந்து
நீதமணியாதனமிசையாருஞ்சிறப்புடனிருந்தபின்றிருமான்றப்பான்
மேதகுமலர்வாய்திறந்துபோய்மீண்டசெயலெலாம்விளித்தெடுத்தனை

இச்செய்யுள்களில் யாதவகுலத்திறுக் கிறைவன் என்றும், யாதவகுலத்தோரேறே யென்றும், யாதவதிலகன் என்றும், வழங்கிவருதல் போலவே "யாதவகுலத்து நெடுமோதவன் மருப்புடையவேனமிருகத்துருவமாய்" என்று அருணகிரிநாதரும் இன்னுமிவை போன்ற பிரயோகங்கள் பல நூற்களிலும் வழங்கிவருதலைக் கண்டு கொள்க.

இடையர் சார்பாகச்சொல்லப்பட்ட கோதலசதகம்.

2-வது செய்யுள்.

அண்டங்களாயிரக்கோடி யீண்டாக்க வலர்ந்தவிதழ்
முண்டகனுதிப்பராபரன் பாரில்முறை நிறுத்த
மண்டலத்தேவிகபால் வசுதேவன் கையாய்க்கப்பெற்ற
கொண்டலேயேந்தி வளர்த்தோர்கள் பாடியில்கோகுலரே.

இச்செய்யுளில் யாதவவம்சத்தானுடைய வசுதேவனுக்கும் தேவகிக்கும் அவதரித்த கண்ணபிரானை வளர்த்தவர்கள் ஆயர்பாடியிலுள்ள பொதுவரென்றதமது நூலேகூறுகின்றது.

தத்தமக்கு முன்னோர் நூற்பிரமாணங்களில் நியாயவாயிலாகவிநித்த நிலைதிறப்பின் பேற்றை யடைவதை விட்டு இக்காலத்தில் தோன்றிய வெடிவேங்கள் ஆதாரமற்ற சொற்களைச்சொல்லியும் புத்தகங்களைஎழுதியும் மயிற்கின்றனர். இவையனைத்தும் நியாயத்திற்கு முன் அக்கினியிற்பட்டகற்பூர பொதிபோலும். பொய்வாதப் பொன்னைப் புடத்திலிட்டால் அதன் பதார்த்தம் வெளிப்படுவதுபோல் இக்குலத்தார் ஒருகால் வைசியரெனவும் மற்றொருகால் க்ஷத்திரியரெனவும் கூறும் கூற்றை நியாய நூற்புடத்திலிட்டுப் பார்க்கையில் அது யதார்த்தத்தில் வெளியாகும்.

முல்லை நிலமாக்களாகிய இடையர்கள் ஆயமாடுகளைப் பரிபாலிப்பதினால் அவர்களுக்குக் கோபாலர் கோவலர் என்னும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

இச்சொற்களை யாதாரமாகக்கொண்டு இடையரும் வைசிய ரெனச்சொல்லத்தலைப்பட்டனர். எங்ஙனமெனில் சூத்திரருக்குச் சிறப்புப்பெயராகிய வேளாளர் என்னும் பதம் நிகண்டில் வைசியருக்குக்கூறியுள்ள பெயர்களோடு கலந்திருப்பதை யனுசரித்து வேளாளர் தாங்கள் சூத்திரரெனப்படாதற்களில் அங்ஙகைக்கனிபோல் சம்மையற விளக்கப்பட்டிருப்பதை அன்னோரில் அறிஞர் பெரும்பான்மையும் ஒப்புக்கொண்டிருந்தும் அவற்றையெல்லாம் புறக்கணித்துவிட்டு வைசியரெனச் சொல்லி வருண சிந்தாமணி முதலியசாம்பிரதாயவிரோத புத்தகங்களைக் கற்பித்ததுபோல் வைசியருக்குக்கூறியுள்ள பெயர்களில் கோவலர் என்னும் பதம்கலந்திருப்பதையாதாரமாகக்கொண்டு இடையரும் வைசியரெனச் சொல்லத்துணிந்தனர்.

"கோக்களைக் காத்தலு மாப்பொருளீட்டலு
மேர்த்தொழின் முன்றாம்வைசியர்தந்தொழிலே."

இந்தச்சூத்திரத்தின் பிரகாரம் வைசியர் தொழிற் பேதத்தால் பூவைசியர் கோவைசியர் தனவைசியரென மூன்று பிரிவினராகக் கூறப்பட்டிருப்பினும் கொள்வக்கொடுக்க வுண்ண உழவு ஒன்றுபட்டிருக்கின்றனர்.

இங்ஙனம் இடையரும் வேளாளரும் வணிகரோடு இல்லை. ஆதலால் பின்னோர் இருவரும் முன்னோர் குலத்தவராகார் இதன் உண்மை யறியாது முல்லை நிலமாக்களும் மருதநிலமாக்களும் வைசியரெனக் கூறல் எள்ளளவும் பொருந்தாது இம்மட்டோ இவர்கள் இந்நிலையிலும் நில்லாது சத்திரியரெனச் சொல்லத்தலைப்பட்டனர். இஃது வான்கோழி மயிலாகப் பிரயத்தனப்பட்டதை யொக்கும்.

குறிஞ்சியும் அத்திணைமாக்களும்.

கருப்பொருள்.

குறிஞ்சிக்குத் தெய்வம் முருகக்கடவுள்; உணா, ஐவகை வித்தினையும் மூங்கிலரிசியும்; மா, புலியும் யானையும் கரடியும் பன்றியும்; மரம், அகிலும் ஆர்முள்தேக்குங்கிலியும் வேங்கையும்; புள், கிளியும் மயிலும்; பறை, முருகியமுழவு தொண்டகப்பறையும்; செய்தி, தேன் அழித்தலும் விழுது அகழ்தலும் தினைமுலியன

வினைத்தலும் கிளிகடிதலும்; யாழ், குறிஞ்சியாழ்; பூ, காந்தளும்வேங்கையுஞ் சூளைக்குலையும்; நீர், அருவியுஞ்சுனையும்; ஊர், சிறுகுடியும் குறிச்சியும்; தலைமகன், சிலம்பன் வெற்பன் பொருப்பன்; தலைமகள், கொடிச்சி குறத்தி; மக்கள், குறவர் இறவுளர் குன்றவர்.

காஞ்சிப்புராணம்.

நாட்டுப்படலம் (கூகூ) வது செய்யுள்.

முருகவேட்கை தாமமோம்புற முளியகில்சந்
தருவவாழைப் பெய்து புன்பயிர் விளைத்துவப்பார்
பெருவளத்துநற் தூர்தொருமிடி பலிபேணும்
பொருவில்வாழ்க் கையர்தஞ் செயல்போன்மெனப் பெருப்பர்.

(இ-ள்.) பெருஞ் செல்வத்தைக் கைவிட்டு வரகுவுஞ் சென்று பிறரிடும் பலியை விரும்பியேற்கும் ஒப்பில்லாத துறவறவாழ்க்கையை யுடையோரைச்சார்ந்த வொக்குமென்று சொல்ல (மலையில் வசிக்கும் குறவர்கள்) முருகக்கடவுளுக்குப் புகைக்குழகவாசகந்தை யோம்பப் புனத்தில் உலர்ந்த அகிற் கட்டைகளையுஞ் சந்தனக்கட்டைகளையும் நிறமமைந்த நிறைந்த தினைப் பேரிட்டுப் புல்லிய தினைமுதலிய புயிர்களை விளைத்து மிடிப்பார்கள்.

கல்லாடம் (முகூ) வது-அகவல்.

குலமுறை கூறி மறுத்தல்.

பெருமறை தாஞ்பெறக் கோன்முறை புரக்கும்
பெருந்தக்க வேந்தனருங்குலப்பாலை
மனந்தோர்க்குமுதுந் தினைச்சோர்க்கெரியும்
புக்குழிப்புக்குழிப் புலன்பெறக் கொக்கு
மலையத்தமிழ்க்கால் வாயிற் புகுந்து
புந்திதழ்த்தாமரைப் புதுமுகையவிழ்ப்ப
வண்டினம் படிந்து மதுக்கவர்ந்துண்டு
சேயிதழ்க்குவளைவாயினை நிரைபுறக்கு
நிலைசேர்காடனீயே யிவளை
மலையுறை பகைத்து வானுறைக் கணக்கும்
புட்குலஞ் சூழ்ந்த பொருப்புடைக் குறவர்தம்
பெருக்தேன்கவருஞ் சிறுகுடிமகளே
நீயேயாய மோடார்ப்ப வரிவளை முரற்கி
மாயா கல்லாம் வளர் காட்டினையே

வருணதருப்பணம்

இவளே-தொண்டகத்துவைப்பத் தொழிற்புனம் வினைந்து
பகட்டினங் கொல்லும் பழிசாட்டவளே
நீயே-எழுநிலை மாடத்தின் முகிலைகளிர்
கடஞ்செயத்தரள வடந்தெறு கயிரோ
இவளே-கடம்பெறு கரிக்குல மடக்கல் புக்குமுத்
தெறித்திடும் முத்தந்திரட்டி வைப்பினளே
நீயே-யணிகெழுகவமணி யுலரெனத் தொடுத்த
பொற்கொடித் தேர்மிசைப் பொலிகுவையன்றே
இவளே-மணிவாய்க்கிள்ளை துணியாத சுற்ற
கெட்டித்தேறு மிப்புனத்தினளே
நீதனித் பெரும்புகழணை குதியாயி
னுரணன்பாற்றத் தேவர் கெட்டோட
வளிசுழல் விசும்பின் இளர்முகட்டணவிக்
கருமுகில் வினைந்து பெருகியபோல
நிலைகெடப்பரந்த கடலெழு விடத்தை
மறித்தவருயிர்பெறக் குறித்தூண்டருளித்
திருக்கனக்கறுத்த வருட்பெரு நாயகன்
கூடல் கூடினர்போல
நாடனியிவள் கனழத்தேர்ணைசயே.

இவ்வகவற்பாவில் தோழியானவள் நாயகனோக்கிநீர் உயர்ந்த குலத்தில் பிறந்தவராகையால் மலை நாகெளில்லவிக்குந் தாழ்ந்தகுலக் குறவருடைய பெண்ணை விரும்பாதே யென்று சொன்னனென்பதாம்.

அச்சுத்திரு ஆணைட-நாட்டுச்சிறப்பு உரு-(வது) செய்யுள்.

தடிமருங்கிற் கொடிச்சியர் தோய்வே
குடிமருங்கிற் பரப்பிச் சுழித்துராய்த்
தொடுபுனைந்த குகன்கழுருந்தூங்
கொடிபுனைந்த குறிஞ்சி கடந்நதே.

(இ-ன்) மலைச்சையை யொத்த இடையினையுடைய குறப் பெண்கள் சரயுநதியில் ஸ்நானஞ்செய்ய ஏலச்செடிகளை அவர் பக்கலில் பரப்பிச் சுழன்று உராய்ந்து வெற்றிக்கொடி புனைந்த குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகவேளே மணஞ்செய்துகொடி-களும் புட்பங்களுங் கொடக் குறிஞ்சி நிலத்தைச் சரயுநதியானது தாண்டிற்று என்பதாம்.

திருவேங்கட வெண்பா (உ)-வது செய்யுள்.

மன்னுகுடிக் குறவர் வாளேர் தலாத்திலைடயே
மின்னுமணி நிறுக்கும் வேங்கடமே—என்னு
ளரவிந்தப் போதகத்தா னன்பாலழைத்த
கரவிந்தப் போதகத்தான் காப்பு.

(இ-ள்.) (குறிஞ்சி நிலத்து) நிலைபெற்ற குடிகளாகிய குறவர் கள் வானத்தில் செல்லுகின்ற (நிறைகோல் வடிவமாய) தலாராசி யினிடத்திலே பிரகாசிக்கின்ற இரத்தினங்களை வைத்து நிறுத்த அளவு அறிதற்கிடமான வேங்கடமே அடியேனுடைய மனமாகிய தாமரை மலரினிடத்தில் எழுந்தருளி யிருப்பவனும் பத்திகொண்டு மன்புகொண்டும் ஆதிமூலமேயென் வழைத்த துதிக்கையையுடைய விந்தியமலையை யொத்த யானையை யுடையவனுமாகிய திருமால் உயிர்களைப் பாதுகாக்குமிடமாம்.

நாலாயிரப் பிரபந்தம்.

பெரியாழ்வார் திருமாலிருஞ்சோலை

நூவது உறுப்பினி நங்கை மலையின் மாட்சி.

மாவலிதன்னுடைய மகன் வாலன் மகளிருந்த
காவலைக் கட்டழித்தருளிக்காகை கருதுமலை
கோவலர் கோவிந்தனைக் குறமாதர்கள் பணிகுறிஞ்சிப்
பாவலிபாடி நடம்பயின் மாலிருஞ் சோலைபதே.

கருத்து:—வாணாசுரன் மகளிருந்த கன்னிகாபுடத்தின் காவலை யழித்துக் கடவுளானவர் விரும்பிய மலையானது, கோவிந்தனைக் குற பெண்கள் வாசஞ் செய்யுங் குறிஞ்சி நிலத்திற்குரிய வீராதத்தைப் பாடி நடனம்புரியும் திருமாலிருஞ்சோலை என்பதாம்.

தொல்காப்பியம் பொருளதிகாரம்.

அகத்திணையில் முகலது பக்கம். (கி-வை-தாமோதரம்பிள்ளைபதிப்பு.)

குன்றக்குறவன் காதல் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் முளைவா ரெயிற்ற
னினையனாயினு நாணம்மினளே.

இங்ஙனம் மேற்காட்டிய நூல்களின் பிரமாணங்களால் குறி
கித் திணைக்குரியோர் குறவரென்றும் இழிகுலத்தாரென்றுங் கு
பிக்கின்றன.

பாலையும் அதற்கிணையாக்கலும்.

கருப்பொருள்.

பாலைக்குந் தெய்வம், துற்கை; உணவு, ஆறலைத்தனவுஞ் சூ
கொண்டனவும்; மா, வலியழித்த யானையும் புலியுஞ் செந்நாயும்
மரம், வற்றின இருப்பையும் ஓமையும் உழிஞையும் ஞெமையும்
புள், கழுகும், பருந்தும்; புலவும்; பறை, சூறை கோட்பறையும்
நிரைகோட்பறையும்; செய்தி, ஏறலிற்றனஞ் சூறைகோடலும்;
யாழ், பாலையாழ்; பூ, மராவும் குராவும் பாதிரியும்; நீர், அறுநீர்ச்
சுனையுஞ் சுனையும்; ஊர், பதியிலி; தலைமகன், மீளி காளை திடலி;
தலைமகள், எயிற்றி பேதை; மக்கள், எயினர், எயிற்றியர் மறவர்
மறத்தியர்.

பாலைநிலத்தில் வசிக்கும் வேடரைப்பற்றிய பிரமாணங்கள் வருமாறு.

பொத்தப்பி ஏழ்மலை உப்பூரிலே வேடர்குலத்திலே
வேடர்களுக்கு அரசனாயும் மானும் அவன் மனைவி தத்தை
என்பவளு மிருந்தார்களா. [illegible]
நிரபாக்கியமின்மையால் குறிஞ்சிநிலத் தடவுளாகிய முருகவேள்
சன்னிதானத்திலேமையில்லாமையும் சேவற்கோழியையுமிட்டு அவனை
வழிபட்டு வந்தார்கள். முருகக்கடவுளின் அருளினாலே தத்தைகருப்
பவதியாகி ஒருபுத்திரனைப் பெற்றாள். காகன் அப்பிள்ளைக்குத் திண்
ணன் என்று பெயரிட்டான். புத்தியது வந்தபோது காகன்
தனது அதிகாரத்தைத் தன் புத்திரன் திண்ணனுக்குக் கொடுத்
தான். இவர் வேட்டைக்கோலம் பூண்டு வேடர்களுடன் வனத்திலே
மனர். அங்கு ஒருபன்றி வெருவா விடு
முந்து விசையுடன் தடியது. திண்ணனர்
ரந்து சென்று அப்பன்றியைப் புடைவா
வெட்டினர். அதன் பின்னர் தண்ணீர்
யாற்றை நோக்கிச் சென்றனர். செல்லு
மலையில் குடிபிதிதேவர் இருக்கிறார்கா
று அக்க விடத்தை நோக்கிச் சென்று
ங்கப் பெருமானைக் கண்டு பத்திரத்தி

ன்னுள்ள குணங்கள் மாறிச் சிவபெருமானிடத்தில் வைத்த அன்
ஓரு சிறிதும் மாறுதலா யிருந்தபோது இவரது பக்தி விசுவா
த்தைச் சிவலிங்கத்தைப் பூசிக்கும் சிவகோசரியாருக்குக் காட்டும்
பொருட்டு சிவபெருமான் சிவலிங்கத்தின் நேத்திரத்தில் உதிரம்
பருகும்படிச் செய்ய, அன்பே உருவாகவமைந்த திண்ணனர்
தற்குப் பலவாறான சிகிச்சைகள் செய்தும் பயன்படாமையால்
வனுக்கு வனிடல் வேண்டும்" என்னும் நினைவு அவருக்கு வரவே
கட்டனே தனது கண்ணை அம்பினால் குத்தி யெடுத்து உதிரம்வரு
மிடத்தில் வைக்க, உதிரம் நின்றது. மற்றுமோர் கண்ணில் அவ்
வாறே யுதிரம் வர அதை நிறுத்த திண்ணனர் தனது மற்றொரு
கண்ணையும் அம்பினால்தோண்டும்படி அம்பை வைத்தமாத்திரத்தில்
"நில்லு கண்ணப்ப னன் அன்புடைய தோன்றல் நில்லு கண்ணப்ப"
என்று அவரது கரத்தைப்பற்றி அவருக்குப் பதவி யளித்தார். இக்
கண்ணப்பர் ஆறு நாளில் சிவத்தியானத்தினின்று பெறுதற்கரிய
பேற்றை யடைந்தார் என்பது சரித்திரச் சுருக்கம்.

பெரிய புராணம்.

கண்ணப்பநாயனர் சரித்திரம் (க) வது செய்யுள்.

குன்றவாதனில் வாழ்வார் கொடுஞ்செவிளுமலியார்த்த
வன்றிறல் வினவின்கோட்டுவார்வலி மருங்குனுங்கப்
பன்றியும் புலியுமெண்குங் கடமையு மானின்பார்வை
அன்றியுழ் பாழைமுன்றி லிவன முணங்குமெங்கும்.

(இ-ள்) உப்பூரில் வாழும் வேடர்களுடைய சாயனது குரைக்
கும் விளமரத்தின் நிழலில் வலியானது தொங்கப் பன்றி, புலி,
கரடி, காட்டுப்பசு, மான் இவைகள் பார்ப்பதுமன்றி கற்பாறையா
கிய முற்றத்தில் மலையில் விளைந்த நெல் உலரும்.

ஷை செய்யுள் (கக)-வது.

ஆறலைத்தண்ணுமம்வேட ரயற்புலங் கவர்ந்துகொண்ட
வேறுபல்லுருவின்மிக்கு விரவுமா னிரைகளன்றி
ஏறுடைவானத்தன்னி லிடிக்குர லெழிலியோடு
மாறுகொண்முழங்குகாட்டு மதக்கைமாகிரைகளொக்கும்.

(இ-ள்) பிரமாணிகளை வழியில் அடித்து அவர்களது பொருள்க்
கவர்ந்து ஜீவிக்கும் வேடர்களுடைய தினைவிளையும் புலங்களை கவர்
ந்துகொண்ட பல உருவங்களையுடைய மான்கூட்டங்களும் மேக

முழக்கம்போல கர்ச்சிக்கும் யானைக் கூட்டங்களும் தினைப்புலத்தில் நிறைந்தன.

ஷ. செய்யுள் (எ)-வது.

மைச்செறிந்தனையமேனி வன்முழின் மறவர்தம்பால்
அச்சமு மருளுமென்று மடைவிலா நுடைவன்மேலார்
பொச்சையி னறவுமூனின் புழுக்கலு முணவுகொள்ளு
நச்சழற் பகழிவேட்க் கதிபதி நாகனென்பான்.

(இ-ள்) கறுத்த மேனியையும் வலிய தொழிலையுமுடைய வேட்டுவர்களிடத்தில் எப்போதும் பயமும் இருளையும் பொருந்தாதவரும் வலிய தோலினை புடையவரும் கள்ளையும் மாமிசத்தையும் உணவாகக்கொள்பவரும் விஷமூட்டிய அம்பையுமுடையவராகிய வேடர் அதிபதியாகிய நாகன் என்பவன்.

காலாயிரபிரபந்தம் பெரியாழ்வார்.

எ-வது அஞ்சன்வண்ணனே. முன்றாம்பத்துபாகம் (உ) வது

பற்று மஞ்சட்டூகிப் பாவைமாரோடு பாடியில்
சிற்றில் சிதைத்தெங்கும் தீமைசெய்து திரியாமே
கற்றுத் தூனிபுடைவேட்டுவர் சேனைடைக் கன்றின்பின்
எற்றுக் தென்பின்னையைப் போக்கினே னெல்லேழலமே.

(இ-ள்) மஞ்சள்பூசிய பெண்களுடன் ஆயர் பாடியில் சிற்றில் விளையாட்டைக் கெடுத்து தீங்குசெய்து திரியாமல் பொய்நிறைந்த வேடர்கள் சஞ்சரிக்கும் பாலைவனத்திலுள்ள கன்றினிடத்தில் உன்னை அனுப்பினேன் இதனால்பாவம்.

அரிச்சந்திரபுராணம் காட்சிச்சிறப்பு.

0 (ஙஎ) வது செய்யுள்.

தேருமா துணராச் சின்வேட் பேய்த்
தேருமாறு முட்டே றறும் பாலையில்
ஊருமா தரியாரையு முந்தி மான்
ஊருமா தனிதா டொழு துற்றதே.

(இ-ள்) தெளியும் வழியறியாத கோபத்தையுடைய வேடர்கள் காலையும் ஜலத்தையும் பருகுதறியக்கூடாத பாலை நிலத்திலுள்ள வேடச்சேரியையும் வேட்டைநாயையும் தள்ளிக்கொண்டு மானை யேறி நடத்துகின்ற அந்த நிலத்துக்குரிய குதிரையினது பாதத்தை வணங்கி சரயு நதியானது போயிற்றென்பதாம்.

ஷ. புராணம் வேட்டஞ்செய் காண்டம்.

(கூ)-வது செய்யுள்.

அந்த வேலை யருஞ்சரம் யாவினும்
கந்தன் மேவு குறிஞ்சிக் கடத்தினும்
குந்தம் வேல்கிலை கூன்குனில் கொரண்டவண
வந்த வேடர் வரவு விளம்புவாம்.

(இ-ள்) (அப்படிக் கொட்டின பம்பைத்தொனி கேட்ட) அப்போதே அருமையான பாலைநிலங்க ளெல்லாவற்றினும் முருகனிருக்கின்ற குறிஞ்சிநிலைக் காட்டினும் நின்ற கையீட்டி, வேல், வில், வினை தடியாகியவைகளைக்கொண்டு அவ்விடத்திற்கு வந்த வேடர்கள்வரு கையைச்சொல்லுகிறோம்.

ஷ. புராணம் வேட்டஞ்செய் காண்டம்.

(ஙகூ)-வது செய்யுள்.

இமைய மந்தரமுதற் றடங்கிரி மிதனிடைப்படி சுரங்களும்
அமையும் வேடுவரன்ன தோர் சமைய மண்டபநிறைந்திருந்த திரிசங்கு மைந்தனவணங்கியே
எமையழைத்த பணிவிடை புனைத்தருள்கவென்று மண்மிசையிறை
[ஞ்சினர்

(இ-ள்) இமையகிரி மந்தரகிரி முதலான பெரிய மலைகளிலும் இந்த மலைகளுக்கு நடுவிலுள்ள பாலைவனங்களிலும் சஞ்சரிக்கின்ற அநேகங் கோடி வேடர்கள் வந்து மேருமலை போல்வதான ஒரு வகைச் சபாமண்டப மிரம்பக் கொலுவிருந்த திரிசங்கு புத்திரனான அரிச்சந்திர மகாராஜனைக் கண்டு வணங்கி எங்களை வரவழைத்த பணிவிடைக்கு உத்தரவு கொடுத்தருளவேணுமென்று பூமியிலே படிய வணங்கினார்கள்.

செய்தல் குறிஞ்சி, பாலை இவ்விலங்களில் வசிக்கும் பரதவர் குறவர், மறவர், இவர்கள் அரசர் காட்டிற்கு வேட்டைக்குப் போகும்போதும் மாற்றரசருடன் போர் புரியும்போதும் படைத்தலைவர்களாயிருப்பர். பூலோகத்து அரசர்கள் இவ்வித ஏற்பாடுடனிருக்கவேண்டுமென்பது புராணங்களினும், இதிகாசங்களினும், காவியங்களினும் ஆங்காங்கு அறிதல் கூடும்.

செய்தலும் அத்திலைபாக்களும்.

செய்தலுக்குத் தெய்வம், வருணன், உணவு, மீன்விலையும் உப்பு விலையும், மீன், உப்பு பதனிடுவோர்; முதலியன சுருவும் மீனுதலி

ன் மாவென்றல் மரபன்று. மரம், புன்னையும் ஞாழலுங் கண்டலும்; புள் அன்னமும் அன்றிலும் முதலியன; பறை, மீன்கோட்பறை; செய்தி மீன்படுத்தலும் உப்புவிளைத்தலும், அவை விற்றலும்; யாழ், நெய்தல்யாழ். பூ, கைதையும் நெய்தலும்; நீர் மணற்கிணறும் உவர்க் குழியும்; ஊர் பட்டினமும் பாக்கமும்; தலைமகன், கொங்கன் சேர்ப் பன் துறைவன்; தலைமகள், நுளைச்சி பரத்தி; மக்கள், பரதர் பரத் தியர் நுளையர் நுளைச்சியர்.

பெரியபுராணம் அதிபத்த நாயனார்.

சோழமண்டலத்திலே நாகப்பட்டணத்திலே சமுத்திரதீரத் திலேயுள்ள நுளைப்பாடியிலே பரதவர்குலத்திலே அதிபத்தநாயனர் என்பவர் ஒருவர் பரதவர்களுக்குத் தலைவராகி ஆவர்கள் வலைப்படு த்துக்குளிக்கும் மீன்குவைகளைப் பெற்று வாழ்வார்.

சிவபத்தியில் சிறந்தவர் ஆதலால் அகப்படும் மீன்களிலே தலை மீனை இது பரம சிவனுக்கு என்று சமுத்திரத்தில் விட்டு வருவார், இங்ஙன மொழுகும் நாட்களில் ஒருநாள் ஒரே மீன் இவருக்குக் கிடைத்தது. இம்மீனையும் கடலில் விட்டார். இவ்வாறுசெ லிதான் ஒவ்வொன்றே கிடைக்க அனைகளைக் கடலில் விட்டுவந்தமையால், இவருக்கும் இவரைச் சார்ந்த மக்கள் பெண்டிர் முதலியவர்களுக் கும் உணவின்றி வருந்தவும் தாம் வருந்தாது பட்ட மீனை பரமசிவ னுக்கென்றே விட்டு மகிழ்வர். இப்படிக்கிருக்க ஒருநாள் விலைமதிப் பில்லாத ஒரு பொன் மீன் வலைபடித்து கரையிலேறியபோது அத னை யெடுத்து பரதவர் அதிபத்த நாயனரிடங் கொடுக்க அதனையும் கடலில் விடுத்தனர். இவரதுபக்தியைக்கண்டு சிவபிரான் காட்சிதந் தருளி தமது அடியார்களுடனிருக்கும்படி அருள் செய்தார் என்பது சரித்திர சுருக்கம்.

அதிபத்த நாயனர் புராணம் (சு)-வது செய்யுள்)

அனையதாகிய வந்நுளைப்பாடி யிலமர்ந்து
மனைவளம் பொலிதுளையர்தங் குலத்தினில் வந்தார்
புனைவிளம்பிறை முடியவரடித் தொண்டு புரியும்
வினைவிளைகிய வதிபத்தரென நிகழ்ந்தோலார்.

(இதன் கருத்து.)

நுளையர் எனில் அமர்ந்து மனைவளப்பமுடைய பரதவர் குலத் தில் வந்தவர் பரமசிவத்திற்குத்தொண்டுபுரியும் அதிபத்தர் என்னும் பெயரையுடைய பெரியவர்.

டி புராணம் (ம) வது செய்யுள்.

ஆங்கவன்பர்தா நுளையர் தந்தலைவராயவர்கள்
ஏங்கு தெண்டிரைக்கடலிடைப் பலபட வியக்கிப்
பாங்கு சூழ்வலைவளைத்து மீன்படித்துமுன்குவிக்கும்
ஓங்கு பல்குவையுலப் பிலவுடையரா யுயர்வார்.

(இதன் கருத்து)

அதிபத்த நாயனர் நுளையருக்குத் தலைவராகி கடலிலே படவு களைத் தள்ளி வலைகளை வீசி மீன்களைப் பிடித்துப் பலகுவையல்க ளாகப் போட்டு அதனால் உயர்வர் என்பதாம்.

நாலடியார் கல்வி (சூ) வது செய்யுள்)

தோணியிலக்குவான்றொல்லை வருணத்து
காணிற்கடைப்பட்டானென்றி கழார்—காண
யவன்றுணையாவாறு போயற்றேதால்கற்ற
மகன்றுணையாகல்ல கொளல்.

(இ-ள்) தொன்று தொட்டுள்ள வருணங்களை நோக்கும்போது படவுகளைத் தள்ளப்பட்ட பரதவர் கடைப்பட்டவராயிருந்தபோதி லும் அவரை யிகழாமல் அன்னோரைத் துணைக்கொண்டு ஆற்றைக்க டத்தல்போல் இலக்கிய விலக்கண நூற்களைக்கற்றவர் எவ்வருணத்தி ராயினும் அவரைத் துணைகொண்டு கல்வியைக் கற்கவேண்டுமென் பதாம்.

நீநவினையாடற் புராணம் நாட்டுப்படலம் கூ-வது செய்யுள்.

தள்ளுசேல்விழி நுளைச்சியர்சுறவோடு மருந்தக்
கள்ளுமாறவுங் கூனலங்காய்தினை யவரை
கொள்ளுமாறவுங் கிழங்குதேன் கொழுஞ்சுவைக்கன்ன
வெள்ளுமாறவுமளப்பன விடைக்கிடைமுற்றம்.

(இ-ள்.) தாவுகின்ற சேலின் பிறழ்ச்சியைப்போலும் பிறழ்ச்சி யையுடைய கண்களையுடைய நெய்தனிலப்பெண்கள் சுறாமீனை உண் ணுதலைகொண்ட கள்ளுக்கு மாறவும் புளியங்காய்க்குச் தினைக்கும் அவரைக்குங்கொள்ளுக்கும் பிரதியாகவும் கிழங்குக்குந்தேனுக்கும் மிக்க சுவையையுடைய கரும்புக்கும் எள்ளுக்கும் பிரதியாகவும் ஆக்கும் பொருள்களைக்கொடை முற்றங்களாம்.

திருவிளையாடற் புராணம்.

வலைவீசிய படலம் 12. கவி.

சூழும்வார்கினரைவையைப் துறைகெழுநாட்டுட்
கிழையார்கலிமுகத்தது கெய்தலங்கிழ்நீ
ராழநீள்கருங்கழியகழ்வளைந்து காரளைந்த
தாழைமூதெயினுடுத்ததோர் தண்டுறைப்பாக்கம்.

(இ-ள்.) சூழ்ந்த பெரிய அலைகளையுடைய வையையின் அழகிய நீர்த்துறை மிக்க பாண்டிநாட்டின் கிழ்பாலுள்ள கடலின் முகத்திலுள்ளதாகிய ஓப்பில்லாத தண்ணிய நீர்த்துறைகள் வாய்ந்த நெய்தனிலத்தாரொன்று, நெய்தனிலத்திலுள்ள கூவல்களமைந்த ஆழ்ந்த நீண்ட பெரிய கழியாகிய அகழியால் சூழப்பட்டு, மேகக்களாளிய தாழையாகிய பெரிய மதிலாற் சூழப்பட்டுள்ளது.

டை. படலம் கச-செய்யுள்.

புலவுமீனுணக்கோசையும் புட்களோப்பிசையும்
விலைபகர்திமிலையுமீன் கொள்கமடலையும்
வலைபெறிந்திமிலவும் வாங்குமாரவமும்
அலைபெறிந்திபரதவர்வாயடைப் பனமாதோ. :

(இ-ள்) புலாலுற்றம் விரும்மீன்களைப் புலர்த்தும் சத்தமும், கவராவருங் காக்கை முதலிய பறவைகளை யோட்டு மோசையும், மீன் விற்கும் ஆரவாரமும், மீன்வாங்கு முழக்கமும், வலைவீசுஞ்சம்பலையும் அவ்வலையை யிழுக்கும் அமலையும், அலைவீசுங் கடலின் வாயை யடைக்கா நிற்கும்.

டை. படலம் கள-வது செய்யுள்.

கொன்று மீன்பகர் பரதவர் குரம்பை கடோறுஞ்
சென்றுதாமிமேற்படர் வனிரைபடுபெயல
மன்றல்வார் குழலுனைச்சியர்மனையின் மீனுணக்கு
முன்றில் சிப்பன கடறிடு முழுமணிக்குப்பை.

(இ-ள்.) பிடித்த மீன்களை விற்கும் பரதவருடைய குடிசைகள் தோறும், கடலில் தோன்றிய பவளம்போய்த் தாமிமேலே படராதின்றன, அக்கடலினலுள் விசம் பருகுந்த முத்தினிராசிகள், வாசமிக்க நீண்ட கூந்தலையுடைய பரதவப்பெண்கள் தத்தம் மீகைகளில் மீனிணையுலர்த்து முற்றத்தில் வீழ்ந்து அதனிரைகளைக் குலைப்பன.

டை. படலம் உடி-வது செய்யுள்.

ஆயபட்டினத்தொருவன் மேலாற்றியதவத்தாற்
றாயவானவர் தம்மினுந்தாயனுப்சிறிது
நீயதினிணைச் செய்தியாற்றிண்டமில்வானர்
மேயசாதியிற் பிறந்துளான் மேம்படுமேனையான்.

(இ-ள்) இவ்வாறு வளம் நிறைந்த அந்தப்பாக்கத்தில், அந்நெய்தனிலத்தலைவனொருவன் முற்பிறப்பிற்செய்த பெருந்தவத்தினாலே, புனிதமுள்ள தேவர்களினும் புனிதமுள்ளவனும், கழிந்தபிறப்பிற் செய்த சிறிதுகொடிய தீவினையின்பகுதியால், திண்ணிய தோணியில் மீன்பிடித்து வாழ்வோர் பிறந்த பரதவகுலத்திற் பிறந்தனன், (இழிகுலத்திற் பிறந்தவனெயினும்) அவர்களுள் மேம்பட்ட அந்தலைவன்.

அரிச்சந்திர புராணம்.

நாட்டுச்சிறப்பு ரு அ-வது செய்யுள்.

கலையளக்குங் கருங்கணுலோச்சியர்
புலையளக்கு நறைக்கும் பொருந்திய
விலையளப்பன வெண்முத்தமேயற
னிலையளக்கும் பரதவர் செய்தலே.

(இ-ள்.) காமநூலே அளவுசெய்து பார்க்கிற கரிய கண்களையுடைய வலைச்சியர்கள் இழிகுணத்தடனே அளவுசெய்து விற்கிறகள்ளுக்குச் சம்மதமாக விலைக்கு அளவு செய்து தொடுப்பவை வெள்ளிய முத்துகளே, தரும நிலையை அளவு செய்திருக்கிற வலையர்களுடைய செய்த நிலத்திலே.

பரிமளகந்தியின் சரித்திர சுருக்கம்.

புரூரவச்சக்கிரவர்த்தியின் வம்சத்தில் வந்த சந்தனுமகாராஜன் கானகத்திற்கு வேட்டைக்குப் போயிறங்கிய பாகசாலையில் தெய்விக பரிமளம்வீச, அப்பரிமளம் எங்கிருந்துவருகின்றதென்று ஆராயுங் காலையில் செய்த நிலத்தலைவனுகிய தாசனிடத்திலுள்ள பரிமளகந்தியைக்கண்டு இப்வாசம் வீசுதற்குக்காரணம் இப்பெண்தானென்று அறிந்து நீயாரென்றுகேட்க அவள் நானுற்ற விலகி என்தந்தை எவ்வழி இக்காந்தியில் படகு ஓட்டுகிறவனென்று சொல்லியதைக் கேட்டவவ்வரசன் இவள்மீது வைத்தகாதலைத் தணியாதவனுய்த் தாசனைக்கண்டு இப்பெண்ணை மணம்புரியவிரும்புகிறேனென, இவனும்

அரசன் கருத்திற்கினங்கி அப்பெண்ணின் வரலாற்றைச் சொன்
தொடங்கினன். எனது பெருமானே ! பரிமளகந்தியென்னும் பெ
ண்ணுவள் இலக்குமிவிலாசம் பொருந்திய சுத்திரியபெண்கே
ன்றி பரதவர்குலத்திற் பிறந்தவளல்லள். வசுவென்னும் சூரியகு
லத்தித்த ஓர் அரசன் தேவேந்திரன் கொடுத்த விமானத்தின்மீ
ஆகாயமார்க்கமாய்ச் செல்லுகையில் தனது மனையியாகிய கிரி
யென்பவளை நினைத்தபோதுண்டாகிய விகாரத்தால் தனது வீரியம்
வெளிப்பட்டுயமுனாநதியில்விழுந்தது. ஓர்கால் ஒருமகரிஷியின்சாப
த்தால் ஒரு தெய்வப்பெண் மீன் உருவாகியிருந்தவள், அவ்வீரியத்
தை இரையாகக்கொள்ள அதனல் கருமுதிர்ந்து வெளிப்படும் சம
யத்தில் அம்மீன் பரதவர் வலையில் அகப்பட அதைத்துண்டிக்க
அதன் வயிற்றில் ஆண்குழந்தை பொன்றும் பெண்குழந்தை பொ
ன்று மிருக்க, இக்குழந்தைகளைச் சேதிமாமர போலுமிய வசுவெ
ன்னும் அரசனுக்குச் சாட்ட, அவ்வரசன் ஆண்குழந்தைக்கு மீனவ
ன் என்று நாமம் சூட்டித் தன்னிடத்தில் வைத்துக்கொண்டார்
இப்பெண்ணை என்னிடங் கொடுத்தார். தாயுமிதலையில் மகத
என்னும்முறைமையால்கானக்குயிலக்காகம்வளர்த்ததுபோல வள
த்தேன் பருவமடைந்தபோது குயில் தன்னினத்தைத் அடைவது
போல தாவலர் குலமாகிய அரசகுலத்தைச் சேர்ந்தாள் என்று பி
தவர் தலைவன் கூறினவுடனே சந்தனுமகாராஜன் பரிமளகந்தியை
மணம் புரிந்துகொண்டு தன்னகரம் அடைந்தான்.

ஆதிபருவம் குருகுலசருக்கம்.

(எகூ-வது) செய்யுள்.

அம்பு வியாசன் மாமனுமரச
னழைப்பணிந்த வயவத்தழகா
னும்பரும் வியக்குங் கினியை முன்னிறுத்தி
யொதிக்கினன் வாய்புதைத்துரைத்தா:
னெம்பெருமானீ கேட்டருளுனக்கே
யிசைத்தமெய்த்தவம் புரியிலனே
வம்பவிழ்மலர் மாதென்பதேயன்றி
வலைஞர்மாமகனெனக்கருதேதல்.

(இ-ள்) நாலாயிருக்கு அதிபதியாகிய தாசன் அரசனதுபாதத்
தில் விழுந்து தேவர்களும் வியக்கும் பரிமளகந்தியை ஓர் பக்கத்
தில் நிறுத்தி வாய்புதைத்து-என் பெருமானே ! என் வார்த்தையைக்

டருளுக; தங்களுக்குகந்தவளாகி மெய்த்தவம்புரியும் பரிமள
யானவள் இலக்குமிபோன்ற சுத்திரியகுலப் பெண்ணேயன்றி
வர் பெண்ணென்றுஎண்ணவேண்டாமென்று செய்தல் தலைவன்
ன்னனென்பதாம்.

ஷை சருக்கம் (ஈரு) செய்யுள்.

வாசவனளித்தவிமான மீதொருவன்
வசுவெனுஞ் சேதிமாமரபோன்
கேசவனைப்போல் விசும்பிடைமேனியாள்
கிரிகையை நினைத்தடல் கெழுமி
சேசமோடிதய முருகும்மகனைத்தினினைவற
விழுந்தவிரியமெய்த்
தேசவனளித்த நதியிடைத்தானந்
திரனெனத்தியதொருபால்.

(இருபத்தாறாந்து).

சேதிவம்ச அரசனிய வசுவென்பவன் விமானத்திற் செல்
லுகையில் தனது காதலிகிரிவகையை நினைக்க வீரியம் வெளிப்பட்டு
யமுனை நதியில் விழுந்தது என்பதாம்.

ஒருமுனிமுனி வாலரமகளொருத்தி
மீனமாயுற்பவித்துழலுங்கா
லிரையெனவதனை விழுங்குமுன் கருக்கொண்
டனிர்முதிர்காலையிலதனைப்
பரதவர் வலையினைப்பற்றியிழுப்ப
பாலகனொருவனுமிவளு
மிருவருமிருந்த மீன்வயிற்றிருந்தார்
யமுனையும்யமனு கேனனே.

ஓர் தெய்வப்பெண்ஓர் முனிவன் சாபத்தான் மீனமாகி யமுனை
நதியிலிருந்தவள் விழுந்த வீரியத்தை இரையாகக் கொண்டனள்
கொள்ளவே அக்கருவானது முதிர்தலின் பரதவர் வலையிலகப்பட்
டது அகப்பட்ட அம்மீன்வயிற்றில் ஓர் ஆண்குழந்தையும் இப்பெ
ண்குழந்தையும் இருந்தார்கள்.

ஷை சருக்கம் (ரூடை) வதுசெய்யுள்.

மானவர் பதியாம் வசுவினுக்கிவரை
மனிழ்வுறக் காட்டலுமகனை
மீனவனெனுப்பேர் கொடுத்தனன்கொண்டு
மெல்லியலிவளை மீண்டளித்தான்

யானுமின்றளவு மென்மகனென்று
மியற்கையாலினிமையின் வளர்த்தேன்
கானமென்குயில் போல்வந்து மீனவுத்தன்
காவலர் குலத்திடை கலந்தாள்.

வசுவென்னும் அரசனுக்கு இக்குழந்தையைக்காட்ட ஆண்குழந்தைக்கு மீனவனென்று பேரிட்டுத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு இப்பெண்ணை யென்னிடங் கொடுத்தான் என்பதாம்.

இப்பாரத செய்யுள்களால் செய்த நிலத்தலைவன் பரிமளகந்தியை வளர்த்தவனென்றும், இம்மாதை சந்திரவம்ச சந்தனுமகாராஜன் மணம்புரிந்தானென்றும் கூறுகின்றதேயன்றி பரதவர்குலத்தில் பெண் கொண்டதாக கூறவில்லை. செய்தற்றிணை வலைஞரை சந்திரகுலமென்று என்னூலினுள் சொல்லியிருக்கலில்லை.

சைவபுராணம் 71-வது அத்தியாயம் 24-வது சுலோகத்தில் பரவன் என்பவன்மச்சம், நீரில், புட்பிக்கும் புட்பம், இவைகளை விற்பிழைப்பானென்றுங் கூறியுள்ளது. இவர்களைப்பட்டினவர் கரையர் செம்படவர் வலையர் என்று கூறுகின்றனர் இவர் கடற்கரையோரத்திலும் நதி தடாகமுதலிய நீரையடுத்த விடங்களிலும் வசிக்கும் பாதும்வசித்தவருகின்றனர்.

மருதநிலமும் அதிலடங்கிய.

மருதநிலமானது மற்றநான்கு நிலங்களோப்பார்க்கிலும் நீர்வளம் நிலவளம் குடிவளங்களில் சிறப்புடையது. பெரும்பாலும் கழனிகளால் சூழப்பட்டதும் எரி குளம் வாவிகளுள்ளது மான்கயால் இதில் கன்னெல், செந்நெல், வெண்ணெல், கதளி, கமுகு, தெங்கு முதலியவைகள் எக்காலமுஞ்செழித்தோங்கி வளர்ந்துள்ளுகின்றன. முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை இந்நிலங்களில் உற்பத்தியாகும் பொருள்கள் பெரும்பாலும்மருதநிலப்பாங்கினள் நகரங்களிலும்பட்டினங்களிலும் விலைப்படுகின்றன. அன்றியும் பற்பலதைத்தொழிற் பொருட்களும் வியாபாரங்களும் பெரிய நகரங்களில் செய்யப்பட்டு வருகின்றன. இம்மருதத் திணையில் வளப்பமுள்ள விடங்களில் பூர்வமிருந்த அரசர்கள்விப்பதற்குரிய நகரங்களை ஏற்படுத்தி அரசுசெய்திருக்கின்றனர். எங்ஙனமெனில் சேரநாட்டிற்குக் கருவூரும், சோழநாட்டிற்கு உறையூரும், பாண்டிநாட்டிற்கு மதுராபுரியும், தொண்டைநாட்டிற்குக்காஞ்சிபுரமும்பிரதானநகரங்களாகவேற்பாடு செய்துசேரசோழ, பாண்டிய, பல்லவ அரசர்கள் முறையே அரசபுரிந்து வந்தனர்.

மருதத்திணையின் ஊர்களுக்குரிய பெயர்களாவன புரி, நகரம், பம், பாக்கம், கோட்டம் முதலியன. இவைகளில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலிய வருணத்தவர்கள் தொன்றுதொன்றி வசித்து வருகின்றனர். ஐந்திணைகளிலும் உற்பத்தியாகும் எவ்வகைப்பொருள்களும் பண்டமாற்றுதற் பொருட்டும் மற்றதிணைகளினின்று குடியேறி யிருப்பினும் அவரவர்களுக்குரிய திணைகளில் வழங்குஞ் சாதிப் பெயருக்கே யுரியராவர்.

கருப்போருள்.

மருதத்திணைக்குத் தெய்வம் இந்திரன். உணவு, செந்நெல்லும் வெண்ணெல்லும்; பூ, எருமையும் நீர்நாயும்; மரம், வஞ்சியும் காஞ்சியும் மருதமும்; புள், தாராவும் நீர்க்கோழியும்; பறை, மணமுழவும் செல்வநிலையும்; செய்தி, நடுதலும் களைகட்டலும் அரிதலும் கட்டலிடுதலும்; யாழ், மருதயாழ்; பூ, தாமரையும் கழுநீரும்; நீர், யாற்றுநீரும் மணற்கிணறும் பொய்கையும்; தலைமகன், ஊரன் மகிழ்நன்; தலைமகன் பெற்றி மனைவி; மக்கள் உழவர் கடைஞர் கம்பளர் கணகர் இளைஞர் தொழுவர் பள்ளர் வினைஞர்; பெண்கள், ஆற்றுக்காலாட்டியர் உழத்தியர் கடைசியர்.

மருதநிலத்திற் குரியாரைக் குறித்து நூற்களில் கூறிய பிரமாணங்கள் வருமாறு.

தொல்காப்பியம் மரபியல் சூத்-வது, குத்திரத்திலேவேளாண்மாந்தருக்கு உழுந்தொழில் சிறப்புடைத்தென்று கூறியதற் கிணங்க வேளாளர் சார்பாகச் சொல்லப்பட்ட ஏர் எழுபதில் உழவு காட்கோடல் சிறப்பு என்னுஞ் செய்யுளில் கூறுவதாவது.

சீர்மங்கலம் பொழியுந் தெண்டிரை நீர்கடல்சூழ்ந்த
பார்மங்கலம் பொழியும் பல்லுயிருஞ் செழித்தோங்குங்
கார்மங்கலம் பொழியும் பருவத்தே காராளர்
ஏர்மங்கலம் பொழிய வினிதழுகாட் கொண்டிடினே.

(இ-ள்) கரிய மேகமானவை மங்கலம் படமழை பெய்யுங் காலத்தின்கண்ணே காராளராகிய வேளாளர் தம்மு ளரால் உழுதொழில் தொடங்குமாறு நன்னாட் கொண்டாராயின் நிலைபெற்று நின்று யாவருக்குஞ் சீராகிய மங்கலத்தை மிகப்பெருக்குந் தெளிந்த அலை நீரையுடைய கடல்சூழ்ந்த விம்மண்ணுலகின் கண்ணே எல்லா வின்

பறவைச்சினங்களும் பெருகும் பல வுயிர்களும் குறைவற மல்கிவள
ரும் என்பதாம்.

ஏர் மங்கலமென்பது மருத நிலமாக்களாகிய களமர் அல்லது
காராளர் மகழ பெய்யும் பருவகாலத்து ஓர் சுபதினத்தில் பொன்
னேர் பூட்டியுழும் காலத்தில் செய்யுஞ் சடங்காம்.

சிலப்பதிகாரம் நாடுகாண்காதை.

கருங்கை வினைஞருங் களமருங்கூடி
யொருங்கு நின்றுர்க்கு மொலியேயன்றியும்
கடிமலர்க ளேந்து முடிகாறழுத்திக்
தொடிவளைத் தோளுமாகமுந் தோய்ந்து
சேறுசெ கோலமொடு வீறுபெறத்தோன்றி
செங்கய னெடுங்கட்சின்மொழிக் கடைசியர்
வெங்கட் டொலிச்சியுமிருந்திற்பாணியும்
கொழுங்கொடி யறுகையுங் குவளையுங்கலந்து
வினைஞருதிர் தொடுத்த விரியல்சூட்டிப்
பாருடைப்பனர் போற்பரிச்சினர் கைதொழ
வேரொடு நின்றே ரேர்மங்கலமும்.

(இ-ள்.) அங்ஙனம் நெற்கொரிதலனே வினைஞருங்களமருங்கூடி
ஒன்றுபட நின்று ஒலிக்கும் ஒலியும் அதுவே யன்றியும் காலையில்
முடிந்த பூக்களோந்து முடிந்த முடியிலே முடியின் நாற்றை நறுக்
கிச் சூடிக்கொண்டு வளைந்த வளையையுடைய தோளும் முலையாக
முத்தோய்ந்து சேறுசெ கோலத்தோடு அழகுபெறத் தோன்றிச் சிவ
ந்த கயல்போலும் பெரிய கண்ணையுஞ் சிறிய மொழியையு முடைய
கடைசியர் கடகமயக்கும் கள்ளையுண்டு தொலைத்தினு ஞ்ண்டான
பண்டிறத்திற் சேர்ந்து பழகிப்போதாத பாட்டும் செந்தெற் கதிரோ
டே அறுகையும் குவளையும் கலந்து தொடுத்த மாலையை மேழி
யிலே சூட்டிப் பானை இரண்டாகப் பிளப்பாரைப் போலப் போற்று
வார் தொழிற்பொன்னேர் பூட்டி நின்றேர் எனைப்பகுதியோர் மகிழ்
லப்பாட்டும். களமர்=உழவர். கருங்கைவினைஞர்=பன்னற் பறையர்.

வேளாளர் சிறப்பையெடுத்துச் சொல்லும் ஏர் எழுபதில் உழவு
காட்கோடல் சிறப்பைக்கூறுந் செய்யுளிலே ஏர் மங்கலம் என்னும்
பதம் வேளாளர்க்குப் பொருத்தமுடையதென்று சங்கையற விளக்
கும்மருதத்திணைக்குரியார் பொன்னேர்பூட்டி எகரப்பாடும் ஏர்மங்

கலமும் உழவர்க்குரியது. உழவர் வேறு வேளாளர் வேறென்றுகூறு
தல் இந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வாற்றானும் பொருத்தாது. ஆகை
யால் மருதத்திணைக்குரியார் வேளாளரே யாவர் என்பது திண்ணம்.

ஏரெழுபது களைகளைதற்சிறப்பு.

(சுரு) வது, செய்யுள்.

வளைகளையு மணிகளையு மலர்களையும் வரும் பலவின்
சுளைகளையுங் கொகைரைக்கே சொரிபோன்னித் திருகாடர்
விளைகளையுண் செஞ்சாலி வேருன்றிக் கோடுகொள்ளக்
களைகளைவ்விடில் வேந்தர் கலிகளைய மாட்டாரே.

(இ-ள்.) சங்குகளையும் முத்துகளையும் பூக்களையும் பலாப்பழத்
தினது சுளைகளையும் வாரிக்கொண்டு இரண்டு கரைக்கண்ணுஞ் சொ
ரிந்து வருங் காவிரி சூழ்ந்த செல்வநாட்டையுடைய வேளாளர்கள்
விளைவினை யுடைத்தாய்க்களை கொண்டெழுந்த செல்லிய நெற்பயிர்
வேரூன்றிச் சுழிகொள்ளும்படி யக்களையைக் களையாவிடின் அர
சர்கள் உலகின்கண்ணுள்ள வறுமையைப் பிறிதொன்றுஞ் களைய
மாட்டார்.

அரிச்சந்திரபுராணம்.

மயானகாண்டம் (உரு) வது செய்யுள்.

ரோளவாளிசேறிகாடனைத்து நிறைமாதவற் குதவியும்
பாராளுநீர்மை தொடர்பற்ற தன்றுபடியாளு மென்றைமுடியில்
காராளரேர்கள் கடவோலை போய்வில் கன்னேசிறாடதனைமேல்
ஆரான் வல்லவமே வனத்திலரவாவிறக்த மகனே.

(இ-ள்.) நீர் நிறைந்த குளங்கள் நெருங்கின கோசலநாடு முழு
வதும் நிறைவான பெரிய தலமுனிருக்கு கெடுத்துவிட்டாலும் உலக
த்தை யாளுவதான சம்பந்தத்தன்மை உனக்கிலாமற் போனதன்றி
ஒன்பிராவைப்போலவே ஒருநாட்டை யரசுசெய் என் பிதாவின் கா
லம்முடிவுபெற்றுல் வேளாளர் எச்சினை யோட்டிய ஓலை ஓபாதிருந்
தாலுனக்கு நேரைகாட்டை கீயல்லது பின்பு இனியாதானுவாய்ஐயோ
வினை இந்தக் காட்டிலே ஓருபாம்பினாலே இறக்குபோனமகனே.

காஞ்சிபுராணம் நாட்டுப்படலம்.

(எகவது) செய்யுள்

கண்ணகன்புனல்முழுது மாக்கிநிலைகொலைவுனை
வண்ணலோர்பகம் பிளப்பவர்போலவிர் மணியின்

வண்ணவண் கடாநிரை நினைவாத்திவன் படையாற்
பண்ணைதோறுங்குழுகர் கம்பலைகளேயெங்கும்.

(இ-ள்.) இடமகன்ற நிலவுலகமுற்றுமாகிய கொடிய கொலைத்தொழிலையுடைய அரசனது பெருமையமைந்த மார்பைப் பிளப்பவர் போல் விளங்கும் நீலமணிபோலும் நிறத்தையுடைய வலிய எருமைக் கடாக்களின் வரிசை வரிசையாகக் கட்டி வலிய கலப்பையால் வயல்கள் தோறும் நின்று உழுகின்றவர்களது ஆரவாரங்களே யெங்கும் நிறைந்து முள்ளன.

எழுபது உழவுசிலப்பு (உல) வது செய்யுள்.

அலகிலாமறைவிளங்குமந்தணராகுதி விளங்கும்
பலசலியாக்தொகை விளங்குபோவலர்தம் பாலிங்கும்
மலர்குலாந்திருவிளங்குமழை விளங்குமனுவிளங்கும்
உலகெலாமொளிவினங்குழுழவருழுமுழவாலே.

(இ-ள்.) பொருட்டிறத்தால் அளவிறந்த கேட்டாதரிறைகளும், பொருளுணருமும்படி விளக்க முறும் அம்மறைகளாற் கூறப்பட்டு அந்தணர்களாற் செய்யப்பட்டு வரும் ஆகுதிகளோடு கூடிய வேள்விகளும் விளக்கமுறும் ; பலகலைகளாலும் பொருட்டெரிதிகளும் விளக்கமுறும் ; புலவர்களது செய்யுள்களும் விளக்கமுறும் மலரின்கண்ணே வாழும் வாழ்க்கையையாகிய திருமகளும் விளக்கமுறுவள் ; மழையும் காலந்தவறுது விளக்கமுறும் ; நீதியுங்கோடாது விளக்கமுறும்; உலக முழுதும் ஒளி பெற்று விளக்கமுறும், அவ்வுழவர்கள் உழுதலைச் செய்யும் உழவுவினையால்.

காஞ்சிபுராணம் நாட்டுப்படலம்.

(உன வது) செய்யுள்

ஓரிடத்தயிர்த்ததன் பறழையோம்புவான்
பாரிடைப்பல்லவினுய்க்கும் பூளைபோற்
காருடற்களமர்களாலு வாரிப்போய்ச்
சிருடைப்பணைதொறு நெதல்செய்வரால்.

(இ-ள்.) ஓரிடத்தில் பெற்ற தனது குட்டிகளை யோம்ப நிலவுலகில் பலவிடங்களிலும் வைக்கும் பூளைபோல கரிய உடலினையுடைய மருதநிலமக்கள் தமது கையால் நீரை வாரிச் சென்று செல்வத்தையுடைய வயல்கள் தோறும் நிறைவார்கள்.

எழுபது நாற்று முடிசமத்தில் சிறப்பு.

(கூக) வது செய்யுள்.

மாணிக்கமுதலைய மணியழுத்திக்தொழில்சமைத்த
ஆணிபொன்முடிவேந்தரணி முடியுமுடியாமோ
பேணிப்பைங்கோலமுடி பெருக்காளர்சமவாரேற்
சேணுயர்க்குர்நிசைப்புறத்துஞ் செங்கோன்மைசெல்லாதே.

(இ-ள்.) பிழை புரிந்தாரும் பிழை புரியாருமாகிய விருவகைத் திறத்தாரிடத்தும் ஒக்கல் பகை முதலிய யாவரையும் ஒப்பவேயோம் புதுமுச்செய்து பகிய வழகினையுடைய நாற்று முடிகளைச் செல்வம் பெருகுதலே யள்வார் தாங்காராயின் மாணிக்க முதலிய மணிகளைப் பதித்து தொழின் முற்றியமைத்த பாற்றயர்ந்த பொன்னுலகமுடியினையுடைய அரசர் அணிகின்ற முடியும் யாவரையும் ஒப்பவோம்பாமையினோர் முடியாஞ் சிறப்பினையுடையவோ? அல்ல. அது வன்றியும் நெடுந்தூர வளவையினுக்கும் பரந்த திசைக்கண்ணும் அம்முடியைத் தாங்கிய வவரது செங்கோல் செல்லுகுந்தன்மை நடவாது.

காஞ்சிபுராணம்.

(எசு) வது செய்யுள்.

களமர்கள்களைகளே பருவங்காட்டவு
மினமயில்வயல்வளங்காண வெய்தியாங்
குளமகிழ்கூர்தரவுழத்திமாரெலாம்
வளமலிபணைதொறும்வந்து முற்றுவார்.

(இ-ள்.) மருத மாக்களாகிய உழவர்கள் களையைக் களையும் பருவங் காட்ட, இளமை வாய்ந்த மயில்கள் வயலின் வளத்தைக் காண வந்தடைந்தாற்போல மருத நிலப்பெண்களாகிய உழத்தியர் மனத்தில் மகிழ்ச்சி மிக வளமையிக்க வயல்தோறும் வந்து சூழ்வார்கள்.

காஞ்சிபுராணம் நாட்டுப்படலம்.

(ஈக) வது செய்யுள்.

நாவலோர்புனைந்தரைக்கு நலமுழுதுமமைத்துவட
நாகஞ் சூழ்பொன்
நாவலோவென வியப்பவளர்செங்கெலிபருவ
நாடிற் றெண்ணீர்

நாவலோ னுனக்கினிப் பப்படியெக்குங்குண்டைக்க
ருழுவர் போல்வார்
நாவலோவெனவினிப் பத்தொழுவரெலாமந்தெய்தி
வினவின் மூள்வார்.

(இ-ள்.) கல்வியில் வல்லோர் புனைந்து கூறும் வண்ணம் முற்றி மனமைந்து வடபாலுள்ள மேருவைக் குழ்ந்து பொன்னிறம் ஊட்டி நாவலந்தீவோவென்று கண்டோர் வியப்புக்கூர வளருஞ் செந்நிறங் கனிந்து பரியும் பருவத்தை யாராய்ந்து தென்னிய நீர் சூழ்ந்த திருநாவலாரனியாகிய ஆருடையபரம்பரை மனங் களிகூர நெல்லுக்குத் குண்டையூர் கிழவரைப்போல நாவலோவென்று அழைக்க மருவில் மாக்க ணெல்லாரும் விரும்பியடைந்து தத்தமக்குரிய நெல்லை தொழிலில் முயல்வராயினர்.

*குண்டையூர்கிழவ னெனினும் திருநாமமுடையவர் சிவபெருமானுந் தேற்றாட்கொண்ட ஆருடைய சம்பிகன் திருவாரூரில் எழுத்தருளியிருக்கும் காலத்தில் பரவைநாச்சியார் திருமனைக்கு வேண்டிய அரிசி முதலிய உபகரணங்களை வேண்டுமளவு கடத்திவருங் கரிகை, மழைவருங்கூர வினைவசத்தினியதனால் இனிப்படி யளந்துவரு நமது வழிபாடு குன்றியதே யென்று சுவலைகூர்ந்தபோது அன்று இரவில் சிவபெருமானுர் கனவில் எழுந்தருளிக் குண்டையூரடங்கத் நெற்குவை தரோம் இனிக் கவலையொழிகவென் றருளினார்; அந் நெற்குவைகளைத்தன் உதியமுத்து ஈர்யனிடத்துச் சென்று பணிந்துகூற அந்நாயனுரும் கண்டறியாதவர்.

ஏழாம்பாடல்.

அறுப்பறுத்தற் சிறப்பு.

(இ) வது செய்யுள்.

தோட்டியல்லுங்குழற்பெரிய பிராட்டிக்கோழிச்சொல்
பாட்டியல்சிற்பெறவளித்த பரம்பரவப்புற முன்னோர்
காட்டியகென் முனையறுத்தார் கினையறுத்தார் கனையறுத்தார்
வேட்டியறுத்தார்மரபோருட்ட வறுத்தாருலகே.

(இ-ள்.) அதனும் மலர்ந்த பூமலை யணிந்த பெரிய பிராட்டியாரையே உமையம்மையாருக்கும் முப்பத்திரண்டு அறமும் வளர்க்கும்படி அக்காலத்து இருநாழி நெல்லிருந்த முதலைப் பாட்டின்கண் ணே நிலபெற வின்றசோன், உரிஞ்சுதலைப் பெறுமாறளித்தருளிய

பெருமானாகிய சிவனுர், திருவுள்ள முவக்கும் வண்ணம் எமக்கட்கு உபகாரவேண்டிப் பயனுணர்த்த வேண்டி, வேளாண் பெரியருள் முன்னோர் பலரும் நெல் முளையைப் பாசவினைப்பிறவிமுளை ஞானவாளை யறுத்தாரும், கட்டளை யிறந்து கனியிழைத்த வினை யறுத்தாரும், திருக்கோயிலைப் பழுது செய்ய வெழுந்த புன் முதலிய கனைகளையுமுளரத்தால் பறித்து அறுத்தாரும், மாலுமினரை யோடி அழுதுட்டி முட்டியவழித்தும் மூட்டியை யறுத்தாருமாக, அவர் மரபின்வந்த பின்னோர் வழுப்பு இவ்வுலகுயிர்கள் அனைத்தினையுமூட்ட வென்முனை யறுத்தார்.

அரிச்சந்திரபுராணம்.

நாட்டுக்கிழவப்பு (கூக) வது செய்யுள்.

முழுவெழும்படிமொய் சிகழ்பிரசுன்
கெழுவெருண்டியலன்ன மிரிந்திடப்
பழவரம்பு புதுக்கிப் பகடேசுர்த்
தழவிரங்குமுழுமொலியோங்குமே.

(இ-ன்.) அப்படி சந்தோஷத்துடனே மருதநிலப் பறையோசை யுண்டாகுவதாக, நெருங்கின இரண்டு நிறுகளினும் கழல்காற்றுத் தோன்றப் பயந்து பக்கங்களினுள்ள அன்னங்கள் பறந்தோட பழைய வரம்புகளைப்புதிய வரம்பாகச் செய்து எருமைக்கடாக்களை யேரிலே பூட்டி உழவர்கள் எல்லிடத்திலும் உழுகிற சத்தங்கள் மிருந்திருக்கும் வயல்களெல்லாம்.

ஏழாம்பாடல் காம்பு திருத்தற் சிறப்பு

(உக) வது செய்யுள்.

மேலிவெட்டி வளர்ப்பித்தி மெய்வரம்பு நிலைநிறுத்திக்
கோலிவெட்டிக்காராளர் குலபத்தரைக் யாத்திலேறி
பாலிவெட்டிக் குறும்பட்டைப் பனைவேந்தர் வாளேந்தி
காலிவெட்டிப் பகையறுத்துக் களிகளைய மாட்டாரே.

(இ-ன்.) வேளாளர்கள் காம்புவரையுள்ள மேடுகளை வெட்டி மனம்பெறும்படி செய்து, சந்தியத்தின் வரம்பு நிலைநிற்கும்படி கரைகளைவெட்டிக் கோலிவினைமொசுகி இவ்வுலகினை யோம்புதல் செய்யாராயின், வின்முயற்சியினையுடைய குறும்பர்கள் அடங்காவர்களது பெருமையகளை யெல்லாமறுத்து, அக்குறும்பர், பறைச்

(இ-ள்.) கையைக் கொட்டிச்சிரித்துக் கல்லியுங் கொடிய பருக்கைக்கல்லையும் பொறுக்கிப் பொய்மையொழிந்த தவமேற்சென்ற பிரகஸ்பதியின் மேனியிற்முக்க னறிந்தார்கள், வினையையொழிக்கும் உத்தமநெறியிற்சென்ற அப்பிரகஸ்பதி இவர்கள் நமது தவத்தினுக் கழிவுசெய்தாரென்று கருதி மனம்வருந்தி இந்த வஞ்சம் பூண்ட கொடியாரைக்கோபித்துப் பார்த்து,

ஷை (எ) வது செய்யுள்.

தொழுந்தொழிற்மறந்து வேடத்தொழிலுழந்தழல் வீர்நீர்மண்
ணுழுந்தொழிலிடைய கீரார் பன்றியினுதரத்தெப்திக்
கொழுந்தழலனைய வேனக்குருவாயாய்த் தந்தைதாயை
யிழந்தலமுறுவினென்ன வீட்டனன் கடியசாபம்.

(இ-ள்.) பெரியாரைக் காணில்வழிபட்டு வணங்குந்தொழிலைக் கைவிட்டு வேட்டுவர்தொழிலை மேற்கொண்டுழல்கின்ற செய்கையை யுடையீர் நீங்கள் பிரகஸ்பதியுழுந் தொழிலையுடைய குலத்திற் பிறந்த தன்மையால் வீராகத்தின் கருப்பத்தையடைந்த முதிர்ந்த கருப்பையொத்த வெய்ய கோபத்தையுடைய பன்றிக்குட்டி களாய்ப் (பிறந்துபோகத்) தந்தைதாயிழந்து வருந்துங்களென்று கடுஞ்சாபம் அருளினர்.

தங்கள் குலத்திற்கு மேற்பட்ட வேதியர் வேந்தர் வணிகராகிய பெரியோரைக்காணில் உபசரித்து வணங்குதல் உங்கள் குலத் திற்குரிய தொழில் என்பார் தொழுந்தொழில்மறந்தெனவும் பாவத் திற்கு அஞ்சாது கல்லெறிதல் வேடர்குலத்திற்குரிய தொழில் என் பார் மறந்து வேடத்தொழிலுழவுதலை எனவும் உங்கள் குலத்திற்குரிய தொழில் உழுதொழிலாதலால் மூக்கால் உழும் இழிபிறப்பையடை யின் என்பார் எனக்குருவாயாய் எனவும் கூறினர்.

வேளாளமரபினராகிய சுகலன்சுகலி என்பவர்களின்புத்திரர்கள் தங்களுக்குரிய மருதநிலத்தில் உழுது பயிர்செய்வதைவிட்டு வேடர் வசிக்கும் பாலைநிலத்திற்குரிய வேட்டுடன்சூடி தவஞ்செய்யும் பெரி யோருக்கு இடுக்கண் புரிந்தமையால் கொடிய சாபத்தை படைத்தார் கள். இச்சரித்திரத்தால் மருதத்தினைக்குரியார் வேளாளரேயாவர்.

திருவினையாடற் புராணம்.

திருநகரப்படலம்.

வேளாளர் வீதி (நச) வது செய்யுள்.

வழுக்கறுவாம்மம் மான்புக்கங்கை தன்மரபிற்றுக்த
விழுக்குடிப்பிறப்பு முவரேவியவினைகேட்டாற்றி
மொழுக்கமுமைச்சாய் வேந்தர்க்குறுதி சூழ்வினையுங்குன்று
விழுக்கறு மேழிச்செல்வர் வளமனையம் பதிற்றும்.

திருப்பதற்குத் தமக்கு ஆனைனவருத்து வளர்த்தக் காகனை வெட்டி வழிகண்டப் பகைகளைக்கடிந்து, அவரால் வினையுற்றன்ப மாகிய கனைகளைக்களைந்து, உயிர்ப்பயிர்களைக் காக்கமாட்டார்.

திருவினையாடற் புராணம்.

பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்தபடலம்.

(ச-வது) செய்யுள்.

சகலனென்றெரு வேளாள னவன்மனை சுகலியென்பா
ளிகலருங்கற்பினுள் பன்னிருமகப்பெற்றுள் செல்வப்
புகலருஞ் செருக்காலன்ன புதல்வரைக் கடியராயி
யகலருங் களிப்பு மீதூரன்பினுல் வளர்க்கு நாளில்.

(இ-ள்.) சுகலனென்னுமொரு வேளாளனுள்ளான் அவனுடைய மனைவி சுகலியென்னும் பெயருடையவள். பகைமையில்லாத கற்பி னையுடைய அந்தச்சகலியென்பவள் பன்னிரண்டு பிள்ளைகளைப்பெற் றாள். பெருஞ்செல்வத்தாலாகிய சொல்லுதற்கரிய இறுமாப்பால் அம் மைந்தர்களைக் குற்றங்கண்டவழி பொறுக்காதவர்களாகி நீங்காத களிப்புமிக்க அன்போடு வளர்க்குங்காலையில்.

ஷை (ஞ) வது செய்யுள்.

தந்தையுந் தாயுமாயத் தறுகண்மிக்குடையராகி
மைந்தரும் வேடரோடு கூடிவெங்கானில்வந்து
வெந்தொழில்வேட்டஞ்செய்வார் வெயில்புகாப்புதற் மெழெய்தி
யைந்தவித்திருந்தநோற்குங் குரவனை யங்குக்கண்டார்.

(இ-ள்.) தமது பிதாவுந் தாயுமிறக்க கொடுந்தொழில் மிகவு முடையவராகி அப்பன்னிரு புதல்வரும் வேடரோடுகலந்து வெம்மை மிக்ககாட்டில்வந்து கொடுந்தொழிலாகிய வேட்டையாடுகின்றவர்கள். சூரியரதனுஞ்செல்லாத அடர்ந்த ஓர் புதரின்கீழ்ச்சென்று ஐம்புலன் களையும் வென்றிருந்து தவஞ்செய்யும் பிரகஸ்பதியைப் புதலின் கீழ்ப்பார்த்தனர்.

ஷை (ஷ) வது செய்யுள்.

கைத்தலம்புடைத்து நக்குக்கல்லும் வெம்பரலும்வாரி
மெய்த்தவன் மெய்யிற்முக்க விகினர் வினையைவெல்லு
முத்தமன் விக்கஞ்செய்தார் தவத்தினுக்குவென்றன்னிச்
சித்தமொந்தினைய வஞ்சத்தியரைச் செயிர்த்து நோக்கா.

(இ-ள்.) குற்றமற்றவாய்மைச் சொல்லின் மாட்சிமையும் கங்கை குலத்தில்வந்த மேன்மைதங்கிய குடிப்பிறப்பும் அந்தணர்முதலிய மூவகை வருணத்தோரும் எனிய தொழில்களைக்கேட்டு முட்டின்றி முடிக்கும் நல்லொழுக்கமும் அரசருக்கு மந்திரித்தொழின்மை பூண்டு பயன்தருஞ்செயல்களை யாராய்ந்துமுடிக்குஞ்செய்கைகளும் குறையாத தவறற்ற மேழியால்வரும் பெரும்செல்வத்தையுடைய வேளாளருடைய விதியின் பொருமைமையச் சொல்லுவாம்.

மூவர் ஆவர்—அந்தணர், அரசர் எனியர் இக்குலத்தோற்றம் கங்கையால் வருதலான் கங்கை தன் மரபின்வந்த எனவும் சகர முதலிய கல்லொழுக்கங்கள் தொன்றுதொட்டிவருதலின் விழுக்குடி எனவும் அந்தணர்முதலிய மூவகை வருணத்தாரையும் தமதி உழுவால் நிலைபெறத்தாங்கி நிறுத்தலின் மூவரேவிய வினைக்கேட்டாற்று மொழுக்கமும் எனவும் கூறினர்.

காஞ்சிபுராணம் நகரப்படலம்.

(ஈசு) வது செய்யுள்.

முருகுயிர்த்தலர்ந்த மலரவன்றனது முகமுதல்
அறுப்பெலாந்தாங்கிச்
சரணமென்றுரைக்கு முறுப்பினுற்றோன்றிச்
சார்ந்துமம் முகமுதலுறுப்பின்
வருமொருமூவர் தங்களையுழுவின் வண்
மையானிலைபெறத்தாங்கு
முரியவேளாண்மை பூண்டபோதமக்கே
யுடையவரிடம் பலவுளவன.

(இ-ள்.) வாசம் விரிமலர்ந்த தாமரைமலரை யிருக்கையாக வுடைய பிரமனது முகமுதலிய அவயவங்களையெல்லாந் தங்கு தலால் அவைகளுக்குச் சரணமென்று சொல்லப்படும் பாதத்தில் பிறந்து சொல்லப்படும் அம்முகமுதலிய அவயவங்களில் தோன்றிப் பிறக்கும் அந்தணர், அரசர், வணிகரென்னும் மூவர்களையும் உழுதல் தொழிலின்பெருமையால் அம்மூவரும் நிலைபெற்று வினங்க அவர்களை யோம்புதலால் உபகாரமென்னுந்தொழில் உரிய ஆதலால் அதனால்வந்த வேளாளர் என்னும் பெயருக்குரியராகி நான்காம் வருணத்தினர் இடங்கள் பல அவ்விடத்திலுள்ளன.

சிலப்பதிகாரம்.

நாகோன்கதை ஈசஅ-வது வரி.

பரப்பு நீர்க்காவிரிப் பாவைதன்புதல்வ
ரிரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
முழவிடை வினைப்போர் பழவிறலூர்களும்
பொங்கழியாலைப் புகையொடு பரந்து
மங்குல்வானத்து மலியிற்றோன்று
மூரிடையிட்ட நாடுடன்கண்டு
காவதமல்லது கடவாராகிப்
பன்னூட்டங்கிற் சென்னுளொருநாள்.

(இ-ள்.) இரப்பவர் சுற்றத்தையும், புரப்பவர் கொற்றத்தையும் தம் உழவினிடத்தே வினைப்போருடைய பழையவலி பொருந்திய ஊர்களுமாகிய இவ்விருவகையூர்களையும் இடையிட்டநாடு, எல்லாங்கண்டு நடக்குங்காதமென்னும் எல்லையல்லது நடந்து தொலைக்க மாட்டாராய்ப் பலநாட்டங்கி நடக்கின்ற நாளிலே ஒருநாள்.

காவிரிப்பாவைதன் புதல்வர்=வங்காபுத்திரர் அல்லது வேளாளர்.

இராமாயணம் பாலகாண்டம்.

நாட்டுப்படலம் (எ) வது செய்யுள்.

பண்கள் வாய்மிழற்று பின்சொற் கடையியர் பரந்து கீண்ட
கண்கை கான்முகம்வாயொக்குங்களை லாற்களையிலாமை
உண்கள் வார்கடைவாய் மள்ளர்களை காலதுலாவிநிற்பார்
பெண்கள்பால்வைத்தநேயம் பிழைப்பரோ நெறியோர்பெற்றால்.

(தாத்பரியம்) மருதநிலவிராகம் பாடும் அந்நிலப்பெண்களினது விசாலமான கண், கால், முகம் வாய்களை யொத்த அல்லி, தாமரை மலர்கள் களையாக விருக்கிறபடியால் மதுபானஞ் செய்யும் மருத நிலமாக்கள்களைகளையாமல் உலாவிநிற்பார் பெண்கள்மீது ஆசை வைத்தவர் பிழைப்பரோ.

பிங்கல நிகண்டு ஒரு செந்நிற பொருள்
செருமலி வீரருந்திண்ணியோரு மருதநிலமாக்களு மள்ளரென்ப.

பெரியபுராணம் திருத்தொண்டர்

புராணவரலாறு சு-வது செய்யுள்.

காராளரணி வயலினுழுது தங்கள்
கையாரநட்ட முடிதிருந்தி லிந்தப்
பாராளுந் திறலாசார் கவித்த வெற்றிப்

பசும்பொன் மணிமுடி திருத்து கலப்பை பூண்ட
வேரா லெண்டிசை வளர்க்கும் புகழ்வேளாள
ரோடிக்குஞ் சிறுகோலாற் றரணி யாளச்
சோருமுடியரச ரிருந்து செங்கோல்
செலுத்துவர் வேளாளர் புகழ்செப்பலாமோ.

(இ-ள்.) வேளாளர்கள் செழுமையுள்ள வயலிலுழுது தங்கள் கையால் நிரம்ப நட்ட நாற்று முடிகளானவை செவ்வையாய் விளையுமானால் இவ்வுலகத்தை யாளவல்ல அரசர்கள் தரித்த வெற்றிபொருந்திய மாற்றுயர்ந்த பொன்னுமாகிய மணிகள் பதித்தமுடியானது செவ்வையாக வீருக்கும் கல்பப்பூண்டு ஏரால் அவ்விடத்திற்குகளெங்கும் புகழைவளர்த்த வேளாளர்கள் உரிவு குண்டைகளை அடித்து ஓட்டுகின்ற சிறிய தாற்றுக்கோலால் இவ்வுலகத்தையானச் சிறப்புள்ள மகுட வர்த்தனர்கள் வீற்றிருந்து செங்கோல்செலுத்துவார்கள் ஆகையால் அவ்வேளாளரதுபுகழை இவ்வளவென்று வரையறுத்துச் சொல்லி முடியுமோ என்பதாம்.

வர் எழுபது நாற்றங்காற்சிறப்பு.

கூக-வது செய்யுள்.

ஏறுவளர்த் திடுமுகிலு மிசைவளர்க்கு மெனவுரைப்பின்
ஆறுவளர்த் திடுவது சென்றலைகடலைத் தானன்றே
வேறுவளர்ப் பனகிடப்ப வேளாளர் விளைவயலின்
நாறுவளர்த் திடலன்றி ஞாலமுயிர் வளராதே.

(இ-ள்) மேகமுங் கைம்மாறு கருதாது, மழைபெய்து இவ்வுலகத்துயிர்களை யோம்பியிசை வளர்க்குமென்று கூறின், அஃதவ்வுயிர்கட்குத் துன்பந்தோன்றவிடியினே வளராகின்றது. ஆயினிவ்வுயிர்களை யாறுபெருக்க முற்று வளர்க்கின்ற தென்னின், அது வளர்ப்பது தான்பெருகிச்சென்று அலைகளையுடைய கடலினை வளர்க்குமவ்வளவினதன்றே, இங்ஙனமாயின், வேறு சில வளர்க்கின்றனவென்று கூறப்படுவன விருப்பினு மதனிடக்க; இனி யவ்வுயிர் தான் வளர்வன வேளாளர்களது விளைவயலின் கண்ணுள்ள நாறுகள் வளர்தலானும் அன்றி வளராவாம். எ-று.

மேற்காட்டிய சிலப்பதிகாரம் காஞ்சிபுராணம், பெரியபுராணம் கம்பராமாயணம் அரிச்சந்திரபுராணம் இவைகளில் ஏர் மங்கலம் உழவர், காராளர், களமர், வேளாளர் முதலிய மொழிகளைப் பிரயோகிக்கப்பட்டிருப்பதுபோல் வேளாளர் சார்பாகச் சொல்லப்பட்ட ஏர் எழுபதென்னும் நூலினும் ஏர்மங்கலம், உழவர், காராளர்

முதலிய மொழிகள் வருஞ் செய்யுட்களையும் முறையே காட்டப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் காட்டப்பட்ட செய்யுட்களாலும் ஆவைகளுக்கு நச்சினக்கினியார் முதலியோர் செய்த வுரையாலும் மருதநிலத்திற்குரியார் வேளாளரென்று சங்கைபறவிளங்குகின்றது. அன்றியும் பன்னிருபாட்டியலில் மருதத்திணைக்குரியார் வேளாளரென்றும் நான்காம்வருணத்தாரென்றும் சூச-நி-ம் பக்கத்திற்காட்டிய சூத்திரத்தாலும் அறியலாம். இவைபோல ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் ஆன்றோர்களா லாக்கப்பட்ட அனேக நிருதங்களில் வேளாளர் நான்காம் வருணத்தவரென்றும் மருதத்திணைக் குரியாரென்றும் வெள்ளிடை மலைபோல் விளக்கப்பட்டிருப்பதை அன்னோ அறிந்திருந்தும் அத்திணைமாக்கள் எங்கள் ஏவலாளிகளென்றும் அத்திணையின் தலைவன் பெயராகிய ஊரன் மகிழன் மகிழ்கன் எங்களுக்குச் சொந்தமென்றும் ஏர் எழுபது முதலிய புத்தகங்களுக்குத் தங்கள் கருத்திற்கிசைந்தவாறு உரை யெழுதியிருக்கின்றனர். அங்ஙனமாயின் முல்லை குறிஞ்சி பாலைநெய்தல் இத்திணைவருக்குரியராகிய இடையர், குறவர், வேடர், பரதவர் முறையே தலைவரும் மக்களும் அவ்வத்திணைக்குரிய வருணத்தவரென்று நூல்களில் வழங்கிவருவதுபோல் மருதத்திணைக்குரியாருக்கும் அவ்வாறு வழங்கிவந்திருக்க நூதனவேடிகள் சிலர், மக்கள் வேறு தலைவன் வேறு என்று கூறுதல் புதுமையிலும் புதுமையே! இங்ஙனம் இவர்கள் கூறுங்கூற்று அறிஞர் அவையின்கண் அங்கீகரிக்கப்படுமென்பதும் படாதென்பதும் இந்நூலில் உ-ம் அத்தியாய முதல் கூ-ம் அத்தியாயம்வரையில் வேளாளரைப்பற்றிய பெரியோர்களால் கூறப்பட்டிருக்கும் பலபாக்களைச் சித்தசமாதானத்தோடு பார்ப்பாராயின்வேளாளர் நான்காங்குலத்தாரென்னும்உண்மையினையறிவார்.

நான்காவது அத்தியாயம்.

வைசியர் அல்லது வணிகர்.

பிரமனது முகந்தோள் தொடைபாதம் இக்கான்கினில் தோன்றி யின்று உதித்த வைசியரைப்பற்றி கூ-ம் பக்கத்தில் கருதில் மிருதிமுதலிய பிரமாணங்களால்காட்டப்பட்டிருக்கிறது. தாளாளர் இப்பர் தருமகிழவர் வேளாளர் இளங்கோக்கள் என்பது வைசியர் பொதுப்பெயர். ஒருகுலத்தினராகிய இவர்கள் தொழில் வேறுபாட்டால் கோவைசியரென்றும், தனவைசியரென்றும், பூவைசியரென்றும் மூவகையாகப் பிரிந்திருக்கின்றனர். இங்ஙனம் பிரிந்திருப்பி

உக-வது செய்யுள்.

முன்னீ ருலக முழுதாண்டமன்னவர்தம்
பின்னனென்று மத்தப்பெயர் விளங்க நன்னிதியஞ்
சூழும் புகார்பத்த னுகந்தை தோன்றுதலால்
வாழுங் கலிமண்டலம்.

ஙல-வது செய்யுள்.

வழங்கு முகிற்போல் வான்மரு வலர்களஞ்ச
முழங்கு முகின்மூரிப் பஞ்ஞாகர் தழங்குமுதற்
றென்னற்குஞ் செம்பியற்குஞ் சேரற்கும் பின்னனென்று
முன்னிற்கும்பந்தன்மூரசு.

எச-வது செய்யுள்.

கனியாருஞ் சோலைக் கடற்புகார் வேந்தன்
முனியா னெவர்க்கு முதலோ னினிதாக
நற்குடி பேராயிரத்தில் நாகநதை பந்நெனன்னு
முற்குடியே முன்றங்குடி.

அ-வது செய்யுள்.

போதுசெறி சோலைப் புகார்வணிகன் பொற்கமலப்
போதுசெறி பூசுரத்தான் பொற்குறங்கி னீரியுடன்
வந்துபுகன் மான்றாய வணிகர் கோன்பந்த னென்றே
யிந்தமையில் கண்மியிலை லென்று.

இச்செய்யுள்களால் பந்தன் என்னும் வணிகன் சேரசோழ பாண்டிய அரசர்க்குப் பின்னன் என்பதனால் வைசியனென்றும் இவர்களுக்குரிய ஆயிரங் கோத்திரத்தில் நாகந்தை கோத்திரத்தையுடையவனென்றும், பிரமனது தலையிலுதித்த மரபில் வந்தவனென்றும், வைசியரில் சிறந்தவனென்றும், விளங்குகின்றது.

இங்ஙனமிருக்க வேளாளர் சார்பாகச்சொல்லப்பட்ட ஏர் எழுபதென்னும் நூற்கு உரையெழுதியவர் வேளாளர் மரபைச் சேர்ந்தவராயிருந்தும் வணிகர் கோத்திர சூத்திரபெயர்களை வைத்துக்கொண்டனையும் நான்காம் வருணத்திற்குரியாரை மூன்றும் வருணத்தாரெனப் பாடல்களை புரட்டி காட்டினமையும் புதுமையிலும் புதுமையாம்.

தொல்காப்பியம் சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய தமிழ் நூல்களில் வணிகரது பிரபாவங்களைச் சிறப்பித்துக்கூறுதலாலும் பிங்கலந்திவாகரம் முதலிய நிகண்டுகளில் அரசர்க்குப்பின் வருத்துள்ள

தாலும் செட்டிகளென்றும் வணிகரென்றும் நகரத்தாரென்றும் அழைத்ததற்குரியவரென்பர் வைசியராம்.

செட்டிகளைப்பற்றி பாடிய கைவளத்தில்.

"பாவாணி ஔவையார் பாமாலை பாடுங்கை" என்றும்,
"மன்னு பஞ்சகாவியங்கள் வாழ்த்துங்கை மின்னுமொழி
லைச் சிலப்பதிகார மியல்பாய் நல்வளை
ஞலமதிலே படைத்த நாயகங்கை" என்றும்,
செட்டிகள் சார்பாகப்பாடிய அம்மானை என்னும் நூலில்
போற்குமொளிர் பெற்கனகப் பொன்னின் படாமனித்தான்
வாக்கருளா லௌவைபுர வஞ்சிக்க விக்குருபிப்
பாக்கியஞ்சேர் நாகந்தைப் பந்தனென்றுரைத்தான் என்றும்,

"தேகபெறுஞ் சீர்சிலப்பதிகாரங் தனக்கே
யோகையுடன் பிழைதீர்ந் தோகையுடன் பாலித்தான்"

என்று கைவளத்திலும் அம்மானை யென்னும் நூலிலும்செட்டிகள் சிறப்பைப் பூர்வநூற்களின் கருத்தைத் தழுவியேபாடியிருக்கின்றனர்.

வைசிய புராணத்தின் உற்பவ சருக்கத்திலே கூறுவதின் சுருக்கம்.

மறைவல்லோராகிய வேதியரும் அவனியை அரசபுரிய வேந்தரையும் வியாபாரஞ் செய்ய வணிகரையும் உழவு நடத்த வேளாளரையும் பிரமனது முகம் தோள்துடை பாதம் இவைகளில் முறையே யுதித்தார்கள், பிரமனது தலையினிடமாக வுதித்த வக்குவமகரிஷியானவர் அக்காலர் அரசர் வேளாளர் என்னும் எல்லருணத்தவர் அவனியெங்கும் பரவத்தன்னுள்ளகிய பயன் இவ்வுலகில் என்னவென்று சிந்தித் தன்தையாகிய பிரமனை நோக்கித் தவஞ்செய்யச் சென்றார். இங்ஙனந் தவஞ்செய்கையில் சுயம்புவெனுமென்னும் அரசன் தேவேந்திரனிடம் வந்து வக்குவ மகரிஷி அக்கினிமயமாய் நின்று தவம் புரிவது உலகத்தில் வியாபாரமின்றி வளப்பமற்றிருக்கின்றதெனவும் போகம் பொருள் துயில் இவையின்மையால் மானுடர் மனுகெரியின்றி ஸ்திரீ புருஷர் இச்சை யற்று விலங்கினங்களைப் போல விருக்கின்றனர் எனவும் வேதத்தமோற்றமுற்றுள்ளதெனவும் சொன்னர். சொல்லவே பிரமன் யாகாக்கினிருத் திட்டஞ்செய்தார். வக்குவ மகரிஷி அக்கினி தேவனை வாழ்த்தி வணங்கி யூழிகாலம்வரையில் நீங்காத புத்திர பேறுதரவேண்டு மென்றும் பிரார்த்திக்க அக்கினி தேவன் எழுத்து இருக்கு வேத மந்திரத்தை

புச்சரித்துத் தருப்பைப் புல்லி முடிந்து ஆயிரம் புத்திரரை யருளு
ம்படி அக்கினி மத்தியில் போட அவ்வக்கினி தாமரை புட்பத்தில்
பொருத்தும்படி செய்ய, விதழ்கள் ஆயிர மிட்ட தருப்பை வழி
யே ஆயிரம் புத்திரர் உதித்திட அக்கினி தேவன் அப்புத்திரர் ஆயி
ரவரையும் வக்குவ மகரிஷியினிட மளித்தார். அதன் பின்னர் வக
குவமகரிஷி அப்புத்திரர் ஆயிரவரையும் பரமேஸ்வரரிட மனுப்பி
போய் அவர்களே அவர் பாதத்தில் பணியும்படி செய்து என் மர
போரைச் சென்மங்கள்தோறுந் துணையாக நின்று அருள்புரிய கிரு
பைசெய்வீர்களென்று விண்ணப் பிக்க அவர் அவ்வாறே அவர்கள்
பக்கலிருந்து ஆதாரிப்போமென்று அனுக்கிரஞ் செய்தார்.

வையபுராணம் உற்பவசருக்கத்திலே மேல்காட்டிய சுருக்க
த்தின் கருத்தமைந்த செய்யுட்கள் வருமாறு.

கை சருக்கம் சு-வது செய்யுள்.

அந்தணர் உற்பத்தி.

அங்கமாறுந் திகழ்வம் புயத்தோனுன் முகத்தீத
துங்கமேவும் மறையோர் தோன்றினர் தோன்றியபின்
வங்கமேவுங் கடல்சூழ் மானிலமே லேழுவகை
தங்கிவாழ் சாதிச்சார் சரங்களுந் தொகுத்தீந்.

எ-வது செய்யுள்.

அரசர் உற்பத்தி.

துட்டரையுநீக்கிச் சுருதிநெறி நீங்காத
சிட்டரையும் வாழ்வு சிறக்கும்படி தெரிந்திட்
டிட்டமுடன் மன்னுண்டி னிதிருக்கு மாறிசைந்து
மட்டவிழ் தார்வேந்தை மருமத்தாலே விதித்தான்.

ஆ-வது செய்யுள்.

வணிகர் வேளாளர் உற்பத்தி.

சோர் புரிநாலுத் தண்டு.கமண்டலமு
மேரார் சிகையுமிலங்க வேழில் வக்குவனுப்
போரானே யூருவினிற்.பெற்றான் பிரமனுயர்
காராளனுனென் கமலப்பத தத்துதித்தான்.

சு வது செய்யுள்.

அந்தணராசர் வேளாள ரென்றுளோர்
வந்துல கெங்கணுமருவ வக்குவன்
வந்தநி லெதுபயன் மற்றி லென்னலே
தானையயிலரஞ்சி நீடவத்திலேயினன்.

கஉ-வது செய்யுள்.

அன்னவன்றவத்தினின்றுங்கனந்தாளகன்றபின்பு
மன்னவசுயம்புவெனுமனுமகவானேபெற்றி
வன்னியாய்த்தவத்துளின்றுன்வக்குவனதனுல்வையத்
துன்னியவளமைநீங்கியிருந்தது சுரற்குவேர்த்தே.

கங-வது செய்யுள்.

போனகமின்மையானும் பொருட்டியினின்மையானு
மானவர்நெறிநில்லாமல்வருணசங்கரமாய்மைந்தர்
பானலங்கண்ணிச்சைப்பயன்பட்டதுகர்வின்பந்
தானமாமிருகமெழுத்தேதனிமறைதிறம்பிற்றுமால்.

சு-வது செய்யுள்.

ஆழிமாலருளம்புயன்றங்கியங்கமைத்தான்
வாழியாயெனவன்னியைவணங்கிவக்குவனு
மூழிகாளினுமெரிவிலாமகவுதவெனவே
யேழுகாவுமேழ்கோடிகாவென்னுமாறெழுந்தான்.

சுஉ-வது செய்யுள்.

இருக்குசுன்மொழித்தாயிரமாகுதியியற்றித்
தருப்பையம்முடிந்தாயிரந்தனியர்தந்திடென
வரிக்கண்ணேயிடவங்கியங்கடவுளுமழகார்
மருக்குலாவியவனசமாமலர்மிசைமருவும்.

சஎ-வது செய்யுள்.

இதழ்களாயிரந்தன்னினுள்ளிட்டபுல்வழியே
புதல்வராயிரம்பெயர்சென்றிடத்திறம்பொலிவு
முதவியேமகிழ்ந்தன்னிதன்னுருவுகொண்டோங்கிச்
சுதரிதோவெனவாங்கினன்றொழுதுவக்குவனும்,

சசு-வது செய்யுள்.

வாங்கிமைந்தராயிரவரைமார்புறத்தழுவி
யோங்குவப்பெனுமுவரியின்மூழ்கிவக்குவனுப்
பாங்குறச்சிவன்மாலயன்பதம்பணிவித்தா
னுங்குகின்றனர்குழுமியாயிரவருமன்பால்.

சஅ-வது செய்யுள்.

புவனநாயகன்போதனுருவில்வருப்புனிதன்
சிவைகரங்குலாமலர்கருதெரிவையைமணஞ்செய்

தவர்கண்மைத்தரிவ்வாயிரம்பெயருமாதலினு
வேர்கள்பூதலத்திருமரபுக்குய்யரென்முன்.

முடிவது செய்யுள்.

என்னவேவக்குவன்முனிறைபதம்பணிந்துபோற்றிச்
சென்மசென்மங்களெல்லாந்தேவரீர்துணையாமென்றே
நன்மையாலின்றேர்வாய்மைகவில்லெனசாரிபாக
ரன்னபோதிவற்குரிமேயண்டையென்றருளிச்செய்தார்.

வைசியபுராணத்திற் கூறியபடி அழற்கடவுளால் அளிக்கப்பட்ட ஆயிரம் புத்திரரும், ஆயிரங்கோத்திரத்தாராகப்பிரிந்து அவனியெங்கும்பல்கிப்பெருகியிருக்கின்றனர். முருகக்கடவுளுக்குச் செட்டியென்னும் பெயரிருப்பதினாலும் வணிகராயெசெட்டிகள் முருகக்கடவுளை பெரும்பாலார் வழிப்பட்டுவருதலாலும் அவரது அருள்பெற்றுமகர்த்தாரென்னுஞ் சிறப்புப்பெயருடன் வாழ்பவர்களே வைசியராம். இச்செட்டிகளுக்குரியதான தசாங்கங்களாவன, கமலகண்டிகை, தோகெருடக்கொடி, தோன்மிமாலை, வைகுண்டவளநாடு, ஜெயவாரணம், பைஞ்சாங்கமுரசு, பம்பைபாதி, கிஷ்கிந்தமலை முதலியன. இச்செட்டிகள்மீது பாவலர்தனசல்பாடப்படும் மங்கலகவி, சரமகவி முதலியவைகளில் தசாங்கங்களை யமைத்துபாடிவருகின்றனர். வடமொழியிலுள்ள புராணங்களினும் உபபுராணங்களினும் வணிகர்க்குரியபுராணம் இதுதானென்றுசொல்வதற்குக்கூடாதாம். ஆனால்சிலப்பதிகாரமுதலியகாவியங்களினும் ஏனையண்டையகாலத்துச்சிறந்தநூற்களினும் வணிகர், செட்டி முதலிய பிரயோகங்கள் மிண்டகாலவழுப்பமாய் வருதலாலும் அருபத்துமூன்று ஈயன்மார்களில் அமர்நீதிமுதலிய ஐவர் வணிகர் மரபினராதலாலும் செட்டி சாதியென வழங்குமவர்களே வைசியரென கூறல் பொருத்தமுடைத்து. செட்டியென பட்டப்பெயருடையார் பல வகுப்பின ரிருக்கின்றனர். நீத்தவாக்கு செட்டி, சக்காரன் செட்டி, பட்டினவச்செட்டி, சாணார்செட்டி, ஓட்டச்செட்டி, உப்பரவச்செட்டி, குறச்செட்டி, முதலிய வகுப்பினர் செட்டியென்னும் பட்டப்பெயர்வைத்து வழங்கிவருதல் வர்த்தகசம்பந்தமாயிருப்பினும் இவர்கள் வைசியர் அல்லர். மேற்சொல்லிய ஜாதிகளில்கோமுட்டி, கவரை, ஓட்டர் உப்பரவர், ஜனப்பர் முதலிய வகுப்பினர் தெலுங்கு பாஷைக்குரியரார்யும் தமிழ்நிகண்டாதிகளில் இப்பெயர்கள் வழங்காமையாலும் இன்ன பிரிவினரென்று துணிந்துகூறுதல் கூடாமையாம். வேளாளன் செக்கான் அல்லது தயிலவினைஞர். சௌண்டிகன் அல்லது சாணான் முதலிய

தப்பினைக்குறித்துச் சூத்திரரின் பின்கூறப்பட்ட வருணகிரமங்
ர் நிகண்டும், பக்கங்களில் கண்டுகொள்க.

பரதர், கோவலர், வேளாளர், மள்ளர், மறவர் இம்மொழிகள்
ரு சொல் பலவகைப் பெயரையுடையன.

பரதர்=வைசியர் சிறப்புப்பெயரில் தனவைசியராம்.
பரதர்=நெய்தலிலத்திற்குரிய மீனவர்.
கோவலர்=வைசியர் சிறப்புப்பெயரில் கோனவசியராம்.
கோவலர்=முல்லை நிலத்திற்குரிய விடையர்.
வேளாளர்=வைசியர் பொதுப்பெயர்.
வேளாளர்=மருதநிலத்திற்குரிய சூத்திரர்சிறப்பு பெயராம்.
மள்ளர்=அரசரின் படைவீரர்.
மள்ளர்=மருதநிலத்திற்குரிய உழவர்.
மறவர்=அரசரின் படைவீரர்.
மறவர்=பாலைநிலத்திற்குரிய வேடர்.

இவற்றின் உண்மையினை அறியார் வேம்பரத்தினை யாலே வைசியர் அல்லாரும் வைசியரெனக் கூறுதல் அறிஞரால் அகற்றிக்கப்படாவாம்.

சூத்திரியர் பரசுராமரால் நிர்மூலமாக்கப்படவில்லை யென்பதை யவரது சரித்திரத்தைக்கொண்டு நிரூபிப்பாம்.

ஸ்ரீமஹாவிஷ்ணு எடுத்த தசாவதாரங்களில் ஒன்று பரசுராம அவதாரம், இவ்வவதாரம் எடுப்பதற்குக் காரணம் சிலர் சூத்திரியருடைய கர்வத்தைப் பங்கஞ்செய்ய வென்பர், சிலர் சூத்திரியர்மண்டையை வேர்க்கோய வென்பர். இங்ஙனங் கூறுவர் கூற்றுபுராணேதிகாசங்களுக்கும் நியாயத்திற்கும் அநுபவத்திற்கும் ஒத்ததாவென்பதைப் பரியாலோசிக்கும்பொருட்டு, வடமொழி தென்மொழியில் வரைந்துள்ள வியாச மஹாபாரதம், விஷ்ணு புராணம், இராமாயணம், கேரள மஹாத்மியம், கேரள உற்பத்தி முதலிய பல மேற்கோள்களினின்று பரசுராமன் சரித்திரத்தை வரையலாயிற்று.

பிரம்மாவின் குமாரன் பிருகு, பிருகுவின் குமாரன் சியவனன், சியவனன் என்பவன் மனுவின் குமாரத்தியாகிய ஆருஷி யாவென்பவளை மணம் புரிந்தான். இவர்களுக்குப் புத்திரன் ஔர்

வன் ஆர்வன் குமாரன் ரிச்சிகன் ரிச்சிகன் குமாரன் ஜமதக்கினி. ஜமதக்கினியின் ஐந்தாவது குமாரன் பரசுராமன். இதன்விபரம் வியாசபாரதம் வனபர்வம் தீர்த்தயாத்திரைச் சருக்கம் 114 - வது அத்தியாயத்திற்காண்க.

கன்னியகுப்ஜம் என்கிற நாட்டிற் கதிபதியாகிய காதியென்னும் இராஜன் உலகத்திற் கீர்த்திப்பெற்று வாழ்ந்தான். ஆனல் கொஞ்சகாலம் பொறுத்துத் தனது இராஜதானியை விட்டு வனத்திற்கேகி அங்கு தனது பத்தினியோடு வாசஞ்செய்கையில், தேவகன்னிகைக்குச் சமதியான ஓர் புத்திரி தனக்குப் பிறந்தாள். பிருகுவின் குமாரனுகிய ரிச்சிகவென்பவன் அக்கன்னிகையைமணம்புரிவதற்குக் காதியிராஜனைக் கேட்டான். அதற்குக் காதி சொன்னது எங்கள் வம்சத்திற்குள்ளாக ஓர் வழக்கமிருக்கின்றது. அது தொன்றுதொட்டு என் முன்னோர்களால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. ஓ பிராமணோத்தமா! எங்கள் குலகன்னிகையை விவாகஞ் செய்ய விரும்பிய மணமகன் சாம்பல் நிறமும் காதுகளில் ஒன்று கறுத்தநிறமுடைய ஆயிரம் போர்ப் பரிகளைப் பரியமாகக் கொடுக்கவேண்டும். இப்பரியத்தைத் தங்களைப்போலொத்த தபோதனரிடம் எதிர்பார்த்தலுங் கூடாது. தபோதிரேஷ்டராகிய உமக்கு எனது கன்னிகையைக் கொடேனென்று மறுக்ஷநாலேவல்லவனல்லன் என்றனன். இதனைக்கேட்ட அம்மகரிஷி உனது இஷ்டப்பிரகாரமே ஆயிர அஸ்வங்களை யளிக்கின்றேன், உமது கன்னிகையை எனக்கு மணம் புரிவிப்பாயாக என்றனர். பின்னர் இப்பிராமணன் வருணபகவானிடஞ் சென்று முற்கூறிய சின்னங்களையுடைய குதிரைகளைத் தனக்குக்கொடுக்கும்படி வேண்டினர். உடனே வருணபகவான் கங்காநதியினின்று அத்தகைய ஆயிரம் கனைமாக்களைக் கொடுத்தான். இதன் பின்னர் கன்னிய குப்ஜமென்னும் நகரில் காதிராஜனுடைய புத்திரியாகிய சத்தியவதிக்கும் ரிச்சிகவுக்கும் கலியாணம் நடந்தது. இவ்விதமாய்க் கலியாணம் நிறைவேறிய பின்னர் ரிச்சிகவின் பிதாவாகிய பிருகு என்பவர் தனது புத்திரனையும் மருமகளையும் பார்க்கவந்தார். வந்தவருக்கு மருமகள் வேண்டிய உபசாரங்கள் செய்து அவரை வணங்கிநின்ற காலையில் அவர் தனது மருமகளைப் பார்த்து பெண்கள்நாயகமே! உனக்கு என்னவரம் வேண்டும் அதைக்கேள் என்றார். அதற்கு அவள் தனக்கும் தன் தாய்க்கும் புத்திராலுக்கிரகம் செய்யவேண்டுமென மொழிந்தனள். அதற்கு

அவர் அங்ஙனமே யாகுகவெனக்கூறி, நீங்கள் இருவரும் ருது காலத்தில் ஸ்நானஞ்செய்து நீ அத்திவிருட்சத்தையும் உன் தாய் மற்றோர் விருட்சத்தையும் தனித்தனி தழுவவேண்டும்; நான் உங்களுக்கு இரண்டுபாத்திரங்களில் சரோன்னம் செய்துவைத்திருக்கின்றேன். அதில் மகத்தான சஞ்ஜீவியின் ரசத்தையும் பிழிந்திருக்கிறேன், அதை நீங்களிருவரும் ஜாக்கிரதையோடு அருந்தவேண்டுமென்று ஆக்கியாபித்து அவ்வருந்தபசி மறைந்தனர். ஆனல் இவ்விருவருக்கும் நியமித்த அன்னத்தையும் மரங்களையும் மாற்றிக்கொண்டனர். கொஞ்சகால் கழிந்தபின்னர்பிருகுமுனிதன் ஆசிரமத்தைவிட்டுத் தன்மருமகளிடம் வந்தபோது அவ்விடம் நேர்ந்த மாறுபட்டை ஞானதிருஷ்டியால் அறிந்துகொண்டனர். அறிந்துகொண்டு தன் மருமகளாகிய சத்தியவதியை நோக்கி, ஓ அழகிய நங்காய்! நீ யுனது தாயின்மோசத்தால் உனக்கு நியமித்த அன்னத்தையும் விருட்சத்தையும்விட்டு உன்தாயுக்கு நியமித்தவைகளைக் கைக்கொண்டாய், ஆகையால் உனக்குப் பிறக்கும் புத்திரன் குலத்தில் பிராமணனுயிருந்தும் செய்கையில் க்ஷத்திரிய தருமத்தை அனுசரித்திருப்பான். உனது தாயுக்குப் பிறக்கும் பின்னை விஸ்வாமித்திரன். அவன் குலத்தில் க்ஷத்திரியனுயிருந்தும் கருமத்தால் பிராமணனுவான். அவனுடைய வல்லமையோ அதிசிரேஷ்டமாயிருக்கும். அவன் நிமோன்களின் நியாயத்தை யநுசரித்து நடப்பான் என, இதைக்கேட்ட சத்தியவதி எனது குமாரன் அங்ஙனம் கருமத்தால் க்ஷத்திரியனுகாதிருக்கக் கடாட்சிக்கவேண்டுமெனப் பன்முறையும் பிரார்த்தித்தனள். இப்போது என் கருவில் இருக்கும் எனது குமாரன் இக்குணம் அமைந்தவனுயிராமல் அவனுடைய புத்திரனுகிய எனது பவுத்திரன் தங்கள் இஷ்டப்பிரகாரம் பிறக்க வேண்டினுள். அவர் அவ்வாறேகிருபை புரிந்தனர். பின்னர் ஜமதக்கினியென்னும் நாமதேயத்தோடு ஓர் புத்திரன் குறித்தகாலத்தில் ஜனித்தான். அப்புத்திரன் பிராமணோத்தமனுவேதத்தில் ஒப்பற்றவல்லவனுனன். ஆனல் அவனுக்கு க்ஷத்திரியதருமம்கற்காமலேயேவாய்த்தது. அவன்ஜபதபநேமேஷ்டகளில்மகா வல்லமைசாலியாகிஎல்லா இருடிகளாலும்மதிக்கவாழ்ந்தான். பிறகு இவன் பிரசேனஜித்து என்னும் இராஜனிடஞ்சென்று அவன்குமாரத்தியாகிய ரேணுகையை விவாகம் புரிந்தான் பின்பு ஜமதக்கினி தன் பத்தினியோடு தனது ஆச்சிரமம் சென்று அநுகூலநாள் தவம்புரிந்து தனது தபோபலத்தால் நான்கு புத்திரர்களைப்

பெற்றான். ஆனால் ஐந்தாவது புத்திரன் மற்றவர்களைப்போலிராமதி
பிருகுவின் வரப்பிரசாதம் பெற்று கருமத்தால் கூத்திரிய குணத்
டைய மஹாவல்லமை சாலியாயிய புருஷருளன். இவன் பேர் பர
ராமன்.

பரசுராமன் எல்லாச் சகோதரர்களிலும் கடையினுயினும் த
தஸ்தில் அவரதனைப் பார்க்கிலும் மேற்பட்டேயிருந்தான். பரிசு
மான் ரிஷி ஆசிரமத்தில் வாழ்ந்திருந்தரேணுகையின் குமாரர்க
பண்டி பலநிகளைச் சேகரிக்கும்பொருட்டு வனஞ்சென்றிரு
காலத்தில்அவர்கள் தாய்ஸ்நானஞ் செய்வதற்கு நர்மதாநதிதீரத்தி
கேகினன். திரும்பிவருகையில் அந்நதியில் மார்த்திகேவதம் என்ன
நாட்டிற் சசனுயிய சித்தரராதன் அல்லது சித்ராங்கதன் மி
அழகிய வாய்ந்த தனது பத்தினியோடு ஜலத்தில் அம்புயத்
தரித்தவண்ணமாய் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்தான். அவ
டைய அழகிய ரூபத்தைக்கண்டு ரேணுகை மதிமயங்கினன். அவ
இக்காமத்தீயை அடக்கக் கூடாதவளாயினமையால் ஜலத்தில் சி
பையிழந்து அச்சத்தோடே ஆஸ்ரமத்திற்குத் திரும்பினன். அ
ஞடைய நாயகன் பிராமணைத் மனைகையால் தன்னருகில்லாதத
காயகி இன்ன நிலையிலிருக்கின்றுளென்றறிந்துகொண்டமதக்கினி
மிக்க கோபாவேசத்தோடு அவளை உற்றுப்பார்க்கையில் அவன் மய
க்குற்று அவளது கற்பின்பிரகாசம் அவ்விடமிருந்து விலகியிருப்ப
தைக்கண்டு ஓ! ஓ! ஈ என்முன் நில்லாதேபோ எனவைதனன். அத்
தருணத்தில் ஜமதக்கினியின் மூத்தகுமாரனுகிய ருமான்வன் வந்தா
ன். பிறகு சுசேஷணனும், அதன்பின்னர் வசுவும், அதற்குப்பின்னர்
விஸ்வாவசுவும் வந்தார்கள். பராக்கிரமசாலியாகிய அத்தபோதனன்,
அவர்களுடைய தாயைக் கொலைபுரிய ஆஜ்ஞாபித்தான். அவர்கள்
ஒன்றும் தோன்றுமல் மறுமொழி கூறுதிருந்தனர். பிறகு அவன்
பிரிய கோபத்தோடு அவர்களைச் சபித்தனன். சாபம் நேர்ந்தமையால்
அவர்கள் சித்தஸ்தலத்தில் மனிதமோற்றமுற்று அப்பிராணிகளைப்
போலவும், தாபரசங்கமத்தைப் போலவும் பகுதி பிருகங்களைப்போல
வுமானுர்கள் கடைசியாகசத்தருபயங்காரனுவனும்பிருத்தியுமான
வனுமாகிய பரசுராமன்வந்தான். ஜமதக்கினி வந்தவனைப்பார்த்தனன்.
அருமைக்குழந்தாய் பச்சாத்தாபமின்றி உன் தாயைக்கொல் என்று
ஆக்ஞாபித்தான். உடனே 'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்ப
தைபோல் வாளால் தாயின் தலையைத் தறித்தனன். ஜமதக்கினியின்
கோபாவேசம் உடனே அடங்கிற்று. தன் புத்திரனிடத்தமிக்ககனி

ந்து என் சொற்றவறுது என்ன ஆஜ்ஞையைச் சிரமிசைக்கொ
டு இவ்வருங்காரியத்தைப் பூர்த்திசெய்த எனது அருந்தபிதோ
வியே! உன்மனதிலுள்ள இக்கடன்களை இப்போதே வெளிப்படுத்து
ன் அவற்றையெல்லாம் உனக்கு ஆகேஷபனையின்றி அருளுகி
றன் என, அதற்கு இராமன் தன் அருமைத்தாயை உயிர்ப்பி
வேண்டும்* அன்றியும் இக்கொடுங் காரியத்தைப்பற்றித்தாங்கள்
லிகொள்ளாதிருக்கவும், நான் என் தாயைக்கொன்றதனுல் நே
ன பாவத்திற்குள்ளாகாத படிக்கும் என் சகோதரர்கள் பழமை
பாலிருக்கவும், என்னை இரவுக்களத்தில் ஒருவரும் வெல்லாதிருக்
வும், நான் சிரஞ்சீவியாய் இருக்கவும் அருளவேண்டுமென்றனன்.
கோரதபம் புரிந்த ஜமதக்கினியோதனதருமமான மிகாரியவற்றை
ல்லாம் அருளினன்.

அதன் பின்னர் ஏல்லோரும்எகருமித்தினராய்க் கொஞ்சகாலம்
கைகும் வாழ்ந்திருந்தார்கள். பின்பு ஜமதக்கினியும் ரேணு
யும் தமது குமாரனுகிய இராமனை, அவன் பாட்டனுகிய பிருகு
னிடமனுப்பி அவனுக்குச் சகல வித்தைகளையும் கற்பித்தார்கள்.
ற்றபின்னர் இராமன் தனது பாட்டனுத்திரவுபடி இமயபர்வதஞ்
ன்ற சங்கு சினை நோக்கி அநேககாலம் தபம்புரிந்தனன். இவ
து தபத்திற்கு மெச்சி சிவபெருமான் பிரசன்னராகி அவன் கோ
ரிவரத்தைக் கொடுத்த பின்னர் இராமன் பற்பலதேசங்களுக்கு கே
ஹிஹுங்காரஞ்செய்து அதிசயங்களைக் கண்டு பரமசிவனைப்போல் மகம்பேரு
பர்வதத்தினருயில் தபம் செய்திருந்தனன். அத்தருணத்தில் அ
ராக்ஷர்களும் தேவர்களுக்கும் விரோத யுத்தம்செய்து சொர்க்கலோ
கத்தினின்று தேவர்கள் துரத்தப்பட்டமையால் தேவர்கள் சிவனி
டஞ்சென்று தங்களுக்கு நேர்ந்த ஆபத்தைக்கூறினர்கள். அம்மகா
தேவன் இராமனை வரவழைத்துத் தேவருக்குச் சகாயமாகப்போக
ச்செய்து அவனுக்கு அசுரரோடு போர்புரியும் ஆர்க்கங்களைத் தெரி
வித்துப்பின்னர் பரசு ஒன்று அளித்தார். இதனுல் அன்றுமுதல்
இவன்பேர் பரசுராமன் என வழங்கற்று.

* தபிப்பு—உயிர்தெழுந்த கூத்திரியகுலமாதாயி ரேணுகையி
டைய உடல் சீசத்துவமடைந்தென்றும் அவளுடைய சிரசுமாத்திரம்
ரேவட்டமுடையதென்றும் பாவித்துஅதை சிலருல்லியவத்ருல்உருவப்படி
த்தி மாரியம்மளை அனேகர் வணங்கிவருகின்றார்கள். பிரார்த்தனைக்காரர்
ன் ரேணுகையின் புத்திரனுகிய பரசுராமன் நிலைசெய்து வைப்பதனுல்,
தும்மாரியைக் கொள்ளைநோய்காலத்தில் மீதிகண்டோதாம் வைத்துக்கொள்
டுவார்கள்.

சிவபெருமான் கொடுத்த பரசைக் கரத்திற்றாங்கி அசுரரோடு போர்புரிந்து அவர்களை முற்றிலும் முறியடித்து ஜெயங்கொண்டு மனன். மகா தேவனும் தேவர்களும் இவனிடத்தில் மிக்க சந்தோஷங்கொண்டு இவன் வேண்டிய வரங்களை யெல்லாங் கொடுத்தார்கள். இவற்றோடு திருப்தியடையாமல், இவன் மறுபடியும் தபசுசெய்ய கேதனன். அனேககாலங் கழித்துச் சிவபிரான் இவன் தபோ பலத்தை மைக்குக் களித்து இவன் நினைத்தபோது வரக்கூடிய மகிமையுள்ள தேரும் பாணமும் அளித்தனர். இவற்றைக் குண்டோதரனிடத்திலும், மகோதரனிடத்திலும் ஒப்புவித்தான். தான்டைந்த வரப்பிரசாதங்கள் யாவும் தன்து பாட்டனாகிய பிருகுமகாரிஷிக்குத் தெரிவித்து அங்கு சிலகாலமிருந்துபின்னர் நருமதை யாற்றங்கரையிலுள்ள ஆச்சிரமத்தில் வாசஞ்செய்துகொண்டிருந்த தனது தாய் தந்தையரிடம் போய்ச் சேர்ந்தான்.

கடலடுத்த நாட்டுக்கதிபதியாகிய கார்த்தவீரியனுடைய பரிவாரமும் பொருந்திய குமாரன் ஒருவன் ஜமதக்கினியின் புத்திரர்களுள் வெளியே போயிருந்தபோது அவ்வாச்சிரமத்திற்கு வேட்டை மாடாக்கமாக வந்தான். அந்த இருடியின் மனைவியாகிய ரேணுகைதனது இல்லத்திற்கு வந்தவனை மரியாதையோடு உபசரித்தழைத்தனள். ஆயினும் புஜபல பராக்கிரமத்தில் கர்வங்கொண்டிருந்தஇவ்வேந்தனும் தன்சமினியங்களுக்கும் காமதேனுவினால் பலவித போஜனபதார்த்தங்களைக்கொண்டு உபசரித்ததில் திருப்தியடையாமல் தானுனுடைய போஜனத்திற்குக் காரணமான காமதேனுவைக் கவர்ந்து சென்றனன். அவனை அவ்வண்ணஞ் செய்யாதிருக்க ஜமதக்கினி மறுத்தான் அன்றியும் அக்காமதேனு அவனைப்பின்றொடராமல்காத்தியதைக்கண்டும் அதை லக்ஷியஞ்செய்யாமல் போனான் ஜமதக்கினியை மரணமுற மூர்ச்சையாக்கி அவ்வாச்சிரமத்திலுள்ள பெருத்த விருக்ஷங்களையும் நாசஞ்செய்தனன். பிறகு பிருகுமகாரிஷி வந்து தனது குமாரனை அரிய மருந்தால் உயிர்ப்பித்தனர். இவ்விஷயங்கள் யாவும் இராமன் வந்தவுடனே ஜமதக்கினி அவனுக்குரைத்தனன். இதைக்கேட்ட இராமன் அதிக கோபாவேசங்கொண்டு யுத்தசன்னத்தனுக்கூரிய ஆயுதங்களைத் தொடுத்த வில்லோடு கார்த்தவீரியார்ச்சுனனிடஞ் சென்று அவனோடு போர்புரிந்து அவனது ஆயிரங்கரங்களையும் அறுத்து அவனை எமபுரமனுப்பிக் காமதேனுவை தந்தையிடம் ஒப்புவித்தனன். பின்னர் இராமனில்லாத சமயத்தில் கார்த்தவீரியார்ச்சுனனுடைய புத்திரர்கள் யாவரும் யுத்தசன்னத்தராய்ச் சத்துருவை ஜெயிக்க ஜமதக்கினியிடம் வந்தார்கள். ஜமதக்கினி விசேஷ பராக்கிரமசாலி யாயினும் யுத்தத்துக்கு ஆயத்தமின்றி தபசு நிலையிலிருந்தபோது அவனை எதிர்த்தார்

அக்காலத்தில் ஜமதக்கினி இராமா! இராமா! எனப் பன்முறை பரிதாபக்குரலோடு கூவினர். கூவியும் கார்த்தவீரியார்ச்சுனன் புத்திரர்கள் அவரை விடாது தங்கள் பாணத்தால் எதைக்கொன்ற பின்னர் தமதிருப்பிடஞ் சென்றார்கள்.

இராமன் யாகத்திற்குரிய சமிதைகளைச் சேகரித்துக்கொண்டு திக்கு வந்தபோது தன் தந்தை மரணமுற்றிருப்பதைக் கண்டு துயரமடைந்து என் அருந்தாய்! நீ மரணமுற்றதற்குக் காரணம் துன்மார்க்கனாகிய கார்த்தவீரியார்ச்சுனனுடைய குமாரர்களா! அவர்கள் காணில்லாத காலயில் உன்னை எவ்விதமாக வதைத்தார்களோ? நீ என்னை நினைத்து எப்படி மனமுருகிப் பதைத்தாயோ! எத்தப் பிராணிகளுக்கும் யாதொரு குற்றமுஞ் செய்யாத உன்னை இவ்விதி எப்படி கிடடியதோ! அந்தோ! அறிவிலேன், பாவிலேன் எனப் பிரலாபித்தான். ஒருவரை எதிர்க்காதவரும், ஒருவருக்குக் குற்றஞ் செய்யாதவருமாகிய உம்மைகொன்ற அப்பாதகர்கள் எந்த முகத்தோடு தங்கள் பந்துமித்திரர்களுக்கு இக்கொடுங் கொலையை உரைப்பார்கள்? என்று இவ்வகையாகப் பலவாறு பிரலாபித்த பின்னர் தனது தந்தையைத் தகனஞ்செய்தான். பின்பு க்ஷத்திரியரை நிர்மூலஞ் செய்திடுவேன் என்று சபதங்கூறி, தன் வரப்பிரசாதத்தால் பெற்ற ஆயுதத்தைக் கையிற்பற்றிக் கார்த்தவீரியனை நேரே தனியே யுத்தத்திற்குச்சென்று கார்த்தவீரியார்ச்சுனனின் குமாரர்களை உயிர்வாங்கினன். பின்னர் அவர்களுடைய க்ஷத்திரியத் தோழர்களையும் முறியடித்தனன். உலகத்திலுள்ள க்ஷத்திரியர்கள்மீது ஏழுதரம் இவ்வகையாய்ப் படையெடுத்துச்சென்று அவர்களைக்கொன்று அவர்களுடைய இரத்தத்தைச் *சமந்த பஞ்சகமென்னும் நாட்டில் ஐந்து ஏரிகளாக்கினன். இவ்வேரிகளின்று பிருகு முதலிய தன் மூதாதைகளுக்கு ஆகுதி கொடுத்தனன். அப்போது ரிச்சீகரென்பவன் பிரசன்னமாய்ப் பரசரா

* சமந்த பஞ்சகம்.

சமந்தர் என்பது-நிலவர்; அல்லது அரசர். பஞ்சகமென்பது புத்தகமும் ஆகவே சமந்த பஞ்சகமென்பதின் பொருள் அரசர் போர்புரியுமிடம். இதனைக் குருக்ஷேத்திரமென்று முறைப்பார். சமந்தபஞ்சகத்தின் விருத்தாந்தம் மஹாபாரதம் ஆதிபருவம் இரண்டாம் அத்தியாயத்தில் பரசுராமன் க்ஷத்திரியர்களைத் திரேதாயுகத்தின் முடிவிலும் துவாபரயுகத்தின் ஆரம்பத்திலும் சோபகவேசத்தினால் கொன்ற இடத்திற்குச் சமந்த பஞ்சகமென்னும் பெயர். இந்த இடத்தில் குருக்ஷேத்திரயுத்தமன்னரும் பாண்டவர்களும் (18) பதினேட்டு அக்ஷரோணி சேனைகளோடு துவாபரயுகமுடிவிலும் கலியுக ஆரம்பத்திலும் யுத்தம்செய்த மைதானமென்று விளங்கும். நிலம் சமந்த பஞ்சகமென்பது அரசர் யுத்தஞ்செய்த இடமென விளங்கும். நிலம் சமந்தர் என்பது சேரமஹாத்திய செய்யுள். இது பொருந்தாது.

மனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்துவிட்டு எகினன். பிற
மகேந்திரகிரியிற் சென்று அங்கே விசேஷதவமும் யாகங்களு
செய்துகொண்டிருந்தான்.

இவன் மகேந்திரபருவதத்திலிருக்குங் காலையில் அனேக
கள் இவனைப் பார்ப்பதுண்டு. அப்போது தன் தாயையும், க
நியர்களையுங்கொன்ற பாபநிவாரணத்திற்காக என்ன செய்யவே
மென்று கேட்டான். அதற்கு அவர்கள் 20-கஜம் அகல
18-கஜம் உயரமுமான ஒரு பலிபீடம் பொன்னுற்செய்து அ
யும் தான் ஜெயித்த காமதேனுவையும் காசிபரிஷிக்குத் தானஞ்செய்
படி சொன்னார்கள். அதேபிரகாரம் ஒரு பலிபீடஞ்செய்து அதை
காசிபரிஷிக்குத் தானஞ் செய்துவிட்டான். இதைக் காசிபரி
பெற்றுப் பிராமணர்களுக்குத் துண்டுதுண்டாகத் தானமா
கொடுத்துவிட்டார். அங்ஙனம் தானம்பெற்ற பிராமணர்கள் க
டவாயனர் என்று அழைக்கப்படுவார்கள்.

திரேதாயுகத்தில் விஷ்ணு அம்சமாக 6-வது அவதாரம் புரி
பரசராமன் வில்வித்தை முதலிய சாத்திரிய தருமங்களில் ம
வில்லவமகாலியாகி, விஷ்ணு தன் மூதாதையர்கிய ரிசிகாவத்
கொடுத்த வில்லையும் சிவபெருமானால் கொடுக்கப்பட்ட பர
யும் பெற்று மகேந்திரகிரியில் வாழ்ந்துகொண்டிருக்குங் காலை
ஸ்ரீராமர் சீதையை மணம்புரிவதற்கு மிதிலைக்குச் சென்று அ
குள்ள வில்லவனோத்துச் சீதையை மணம்புரிந்து திரும்புகையில்
பரசராமன் எதிரே வந்து மறித்துச் சொல்லியதாவது, கம்பராமாய
ணம் பரசராமப்படலம் 33-34-வது கவிகள்.

மூவெழு முறைமை பாரில் முடியுடை வேந்தை யெல்லா
மேவெழு மழுவின் வாயால் வேரறக் களைகட்டன்னர்.
நாவெழு குருதி வெள்ளத் துறையிடை மூதையி னெந்தனூ
காவன கடன்க ணோர்ந்தே னருஞ்சின மடங்கிப் போந்தேன்.

உலகெலீ முனிவர்க் கீந்தேன்
உறுபகை யெறிந்திப் போந்தேன்
அலகில்மா தவங்கள் செய்தேன்
னருவரை யிருந்தே னுண்டைச்
சிலையநீ யிறுத்த வோனை
செலியுறச் சிறி வந்தேன்
மலருவெண் வல்லி யாகில்
வாங்கிடத் தணுவை யென்றான்.

இருபத்தோர்தரம் சுத்திரியரைக்கொன்று அவர்களுடைய
த்தவெள்ளத்தால் எனது தந்தையின் கடன்கழித்து நான் ஜயி
உலகத்தை முனிவர்களுக்குக்கொடுத்து மயேந்திரகிரியில் வசித்
யில், நீ மிதிலையில் வளைத்து ஓடித்த வில்லின் ஓசையைக்கேட்டு
தாவந்தேன். நீ இப்போது என்னிடத்தில் போர்புரியவேண்டும்;
படிச் சம்மதிக்காவிடில் நாரணனுல் என் மூதாதைக்குக் கொடு
பட்ட இந்த வில்லை வளை பார்ப்போம். முன் சொத்தை வில்லை
ஒத்த பராக்கிரமசாலியென்று மதிப்புற்றாய்; இப்போது இந்த
லை வளைப்பாயாகில் என்னோடு எதிர்த்து ஜயித்ததற்குச் சமான
குமென்றான். அவன் இவ்விடப்பிரகாரம் ஸ்ரீராமர் அவ்வில்லைவா
வளைத்துச் சொல்லுவார்.

பூதலத் தரசை யெல்லாம் பொன்றுவித் தனையென்றும்
வேதவித் தாய மேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய்
ஆதலிற் கொல்லைகூ தம்மிது பிழைப்பதன்றால்
பாதிதற் கிலக்கமாவ நியம்புகி னிசைவி னென்றான்." (36)

பூலோகத்திலுள்ள அரசரையெல்லாங் கொன்றுவிட்டேனென்று நீ இறுமாந்திருந்தபோதிலும் நீ சடைமுடி தரித்த பிராமண
ஜாலை உண்ணக்கொல்வது தகுதியல்ல; ஆகிலும் நான் இப்
போது தொடுத்துள்ள அம்பானது பிழைபடத்தக்கது மன்று;
ஆதலால் இதற்கு ஒரு இலக்குச்சிக்கிரதில் காட்டென்றனர்.

எய்தவம் பிழைப்பழி தெய்தி டாமலென்
செய்தவம் யாவையுஞ் சிதைக்க வேயென
கையவ னெகிழ்த்தலுங் கணையுஞ் சென்றவன்
மையறு தவமெலாம் வாரி மீண்டதே. (39)

அந்த அம்பிற்குப் பரசராமன் தன் தவத்தையெல்லாங் கொ
டுக்க அது அனைவரித் திரும்பிற்று; பின்னர் பரசராமன் வலி
குன்றி ஸ்ரீராமரைத்தொழுது தன்னிடம் சென்றான்.

சந்தனுகங்கையைச்சேர்ந்து பேற்றமைந்தன் காங்கேயன் காங
கேயன்பரசராமனிடஞ் வில்வித்தை முதலியபல கலைகளைக்கற்றான்.

தமிழ்ப்பாரதம் ஆதிபருவம் சந்தனுசருக்கம் 55-ஏது கவி.

வேந்தகே ளிவனுன் மதலையே தேவ
விரதனென் றிவன்போர் பல்லோ
ராய்ந்தனுல் வெள்ளங் கடந்தனன் கரைகண்
டருந்ததி பதிதிருவருளாற்

கிறேனென்றனன். அததற்கு அவன் எனது ஐஸ்வரியும் யாவும் பிராமணர்களுக்குத் தத்தஞ் செய்துவிட்டேன். கடற்கரை பரதத்திலுள்ள இந்தப் பூமியையும் அதிலுள்ள பட்டணங்களையும் கரபரிஷிக்குக் கொடுத்துவிட்டேன். இப்போது என்னிட சரீரமும் அம்புகளும் தவிர வேறொன்றும் என்னிடமில்லை. இவற்றில் உனக்கு எது வேண்டுமோ அதைக் கேள் என்றனன். இதைக்கேட்ட துரோணன், ஓ பிருகுகுலசிகாமணியே! நீர் உமது பாணங்களைக் கொடுப்பதன்றி அவற்றை யெய்து வரவழைக்கும் மார்க்கங்களைக் கற்பிக்கவேண்டுகிறே னென்றனன். பரசுராமன் அவ்வாறே சந்தோஷத்தோடு தனது பாணத்தைக்கொடுத்து அபரிமை யுபயோகிக்கும் வழியையும் கற்பித்தான். இதைக் கற்றுத்தெரிந்து துரோணன் பாஞ்சால தேசாதிபதியாகிய துருபதனிடத் சென்றான்.

அச்மகன் என்பவனுடைய புத்திரன் மூலகன். இம்மூலகன், பரசுராமன் பூமியிலுள்ள க்ஷத்திரியர்களை பழிக்கப்படுமளவில் அவனுக்குப் பயந்து பெண்பிள்ளைகளால் சூழப்பட்டு மறைந்திருந்தான். இதனால் இவனுக்கு நாரிகவசனென்றும் பேருண்டாயிற்று. இவனுடைய சந்ததியில், தசரதன், இளம்பிளி, விஸ்வசகன், கட்வாங்கன், திர்க்க, பாகு, இரகு, அஜன், தசரதன், ஸ்ரீராமர் முதலிய க்ஷத்திரியர்கள் உற்பத்தியானார்களென்று விஷ்ணுபுராணம் நாலாம் அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

பவிஷியபுராணத்தில் சகஸ்திரராஜனுடைய பேரப்பிள்ளைகள் ஐந்துபேர் பரசுராமன் கொலைக்குட் படவில்லையென்று கூறப்பட்டிருப்பதினால் கார்த்த வீரியார்ச்சுனனுடைய சந்ததிகளை முற்றிலும் பரசுராமன் நிர்மூலப்படுத்தினனென்றுரைக்கும் கதை பொய்யெனக் கூறப்படும்.

கேரள உற்பத்தியைக்கூறும் திருவனந்தபுரச்சரித்திரம் 23-வது பக்கம்.

முன்ன ருரைத்தவாறு, பரசுராமன் மயேந்திரகிரியிலிருக்கும் போது, இந்நாதேசத்தின் மேற்புறநாட்டில் திடீரென்று சமுத்திரம் பெருக்குற்று கோகரண க்ஷேத்திரமும் இன்னுமனேக சிறந்த ஆலயங்களும் காடு நகரங்களும் சமுத்திரத்தில் முழுகிப்போயின. இப்பரிசுத்த ஸ்தலங்களுக்கு நேர்ந்த ஆபத்தை யுணர்ந்த இருடிகள் பரசுராமனிடம்போய் விண்ணப்பஞ் செய்துக்கொண்டார்கள். பரசுராமன் வருணபகவானுக்குச் சில மந்திர உச்சாடனஞ் செய்து தன்கையிலுள்ள நெய்ப்பெய் சட்டுவத்தை யெறிந்தான். இதனால் சமுத்திரம் கோகர்ணத்திலிருந்து கன்னியாகுமரிவரைக்கும் மேற்

புறத்தில் விலகிப்போயிற்று. பரசுராமன் இந்நாட்டை அறுபத்து நான்கு கிராமங்களாகப்பிரித்துப் பிராமணர்களுக்குக் கொடுத்தான். பின்னர் இதர ஜாதியார்களையும் இதில் குடியேற்றினன். அன்றியும் சேரனும் பழமைபோல் முடி சூட்டப்பட்டான்.

பின்னர் சமுத்திரக் கரையோரத்தில் கொஞ்சகாலம் பரசுராமன் வாழ்ந்திருந்து மறுபடியும் மயேந்திரகிரிக்குச் சென்றான். பரசுராமன் கேரளநாட்டை ஸ்தாபித்த விருத்தாந்தம் யாவும் கேரள உற்பத்தி கேரளமஹாத்மியம் என்னும் புத்தகத்தில் விரிவாய்க் கண்டுகொள்ளலாம்.

பரசுராமன் அநேக பிராமணர்களை வடநாட்டினின்று கேரள நாட்டில் குடியேற்றி அவர்களுக்குள்ளாகத் தலைவர்களையு மேற்படுத்தினன். கோகர்ணமுதல் கன்னியாகுமரிவரைக்கும் அனேக ஆலயங்களைப் புதுப்பித்தான். அவ்வாறு புதுப்பித்த கோயில்கள் ஒவ்வொன்றிற்கும் [illegible] சேர க்ஷேத்திரத்திற்சேர்ந்த பாணுவிக்கிரமனையும் அவனுடைய மூன்று சகோதரர்களையும் வரவழைத்து அவர்களுக்குமேனட்டைக்கொடுத்துப் பாணுவிக்கிரமனைக் கேரளாதிபதி யாக்கினன். இவ்வரசனுக்கு முடிசூட்டித்தனது வாளாயுதத்தைக்கொடுத்தான். பாணுவிக்கிரமனுடைய சகோதரரில் ஒருவனைக் கொல்லநாட்டுக் கதிபதியாக்கினன். ஸ்ரீவர்த்தனபுரத்தில் பாணுவிக்கிரமனுடைய தம்பி குமாரன் ஆதிவிக்கிரமனுக்குப் பரசுராமன் முடிசூட்டி அவனுக்குப் பிரகாசம்பொருந்திய வாளாயுதமும் எட்டுமெத்திரிகளையும் கொடுத்தான். கொல்ல ராஜவம்சத்தில்வந்த உதயவர்மன் விஷயத்தில் பரசுராமன் விசேஷ பிரீதியுடையவனுப் அவனை கேரளாதிபதி யாக்கினன். இவர்களுக்கு வடபெருமாளென்னும் பெயர்வழங்கிற்று. [பெருமான் என்னும் பதம்பெருமாள் என வழங்கிற்று.] பெருமான் என்பது அரசன்.

அரசன் பெயர், திவாகரம், மக்கட்பேர்த் தொகுதி
சூத்- வதுபக்கத்தில் காண்க.

உதயவர்மனுடைய பாத்தியஸ்தனொருவன் கொல்லநாட்டுக் கதிபதியாய்ப் பவுத்த மதத்தைக் கைப்பற்றி அநேக ஆலயங்களை நிர்மித்துத் தனியே வாழ்ந்திருந்தான். இவனுடைய உத்திரகிரியா சடங்கை உதயவர்மனுடைய சந்ததியார் நடத்தினதினால் அந்தச் சந்ததியாரைப் பிராம

னர் புறக்கணித்தார்கள். பிராயச்சித்தஞ் செய்து அவர்களைச் சேர்த்துக்கொள்ள பரசுராமன் நாரதமா முனியோடு ஆலோசித்து இராணிய கர்ப்பாதானஞ் செய்யும்படி உதயவர்மனுக்கு உத்தரவு தந்தனன். மஹாராம்பம் என்னும் சடங்கை நடத்தும்படியாகவும் ஆக்ஞாபித்தான். இதற்குத் திருவனந்தபுரத்து மன்னனாகிய குலசேகரப்பெருமான் வந்திருந்தான். அவனுக்கு முதலாசனங் கொடுத்து இரண்டாவது ஆசனம் உதயவர்மனுக்குக்கொடுத்தான் பரசுராமன். கேரளாதிபதிகளுக்கு யுத்தபயிற்சிக்குரிய அநேக அஸ்திரஸஸ்திரப் பிரயோகமார்க்கங்களைக் கற்பித்தான். பின்னர் அறுபத்து நான்கு கிராமங்களிலுள்ள பிராமணர்கள் ஒன்றுகூடித் தன்னை நிந்திப்பார்களாகில் அப்போது திரிசூரில் பிரசன்னமாவதாக வாக்களித்துப் போனான். இதன் உண்மையைப் பிராமணர் அறியும்பொருட்டு ஒருகால் ஒன்றுகூடி அவனை நினைத்தார்கள்; நினைத்தமாத்திரத்தில் பரசுராமன் பிரசன்னமாகி என்னை யாதுகாரணத்திற்காக வரவழைத்ததென்றான். அதற்கு அவர்கள் காரணங்கூறிமையால் இனி தீக்கள் ஒன்று கூடாமல் போகக்கடவதென்று சபித்துத் தன்னிருப்பிடத்திற்கேகினான்.

பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும், ஆதியில் ஒருவரோடொருவர் கலந்தவர்களாகப் பல புராணங்களும் இதிகாசங்களுமுறையிடுகின்றன. பிறகு இவ்விரண்டு வம்சத்தாரும் தங்களுக்குள்ளாக பகையுண்டாகி பொருவரை யொருவர் கொல்லத் தலைப்பட்டனர்; கார்த்தவீரியன் வம்சத்தில் வந்த க்ஷத்திரியர்கள் பிருகு வம்சத்தைச்சேர்ந்த பிராமணரையும் அவர்கள் பத்தினிமாரதிலுள்ள பிண்டங்களைக் கருவறுத்துக்கொண்டு வந்தார்கள். இதன் விபரம் வியாசமஹாபாரதம், ஆதிபர்வம், சைத்ரராதசருக்கம், 180-வது அத்தியாயத்திற் காணலாம். இதனால் உலகத்திலுள்ள பிராமணர்கள் க்ஷத்திரியர்களால் நிர்மூலமாக்கப்பட்டார்களென்று எண்ணலாமா? இதைப்போலவே பிருகுவம்சத்தில் வந்த பரசுராமனால் கார்த்தவீரியார்ச்சுனனுடைய சுற்றத்தாரைக் கொன்றதனால் உலகிலுள்ள க்ஷத்திரியர் பூண்டற்றனரென் றெண்ணலாமா? எண்ணுவதற்கு இடமில்லையே! க்ஷத்திரியரில்லாமல் பிராமணர்கள் இருக்கமாட்டார்களென்று ஸ்மிருதிகளும் புராணங்களும் கோஷிக்கின்றன. இங்ஙனமிருக்க க்ஷத்திரியரைப் பரசுராமன் நாசஞ் செய்து விட்டானென்றும், ஆகையால் கலியுகத்தில் க்ஷத்திரியர் இடையாதென்றும் சில சாமான்னியப் பிராமணர்களும் விவேகஞ

கூறுகின்றார்கள். இவர்கள் கூற்று தங்களுக்கே கூற்றாய் முடியுமன்றே? எங்ஙனமெனில், கார்த்தவீரியார்ச்சுனன் சந்ததியார்முற்றும் பரசுராமனால் நாசமுறுமையாலும், மூலகன் சந்ததியில் வந்த தசரதர் புத்திரராகிய ஸ்ரீராமருக்கு முன் நில்லாமல் பரசுராமன் தோல்வியடைந்ததனாலும், கார்த்தவீரியனுக்குப் போர்முகத்தில் முதுகுகாட்டி போடியதனாலும், அப்பரசுராமன் க்ஷத்திரியரை முற்றிலும் ஜயிக்கக் கூடியவனன்றென்றும் தெற்றென விளங்குகின்றது. இதுவுமன்றி திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இவைகளில் எண்ணிறந்த க்ஷத்திரியர்கள் விருந்ததாகப் புராணங்களும், இராமாயண பாரத இதிகாசங்களும், ஸ்மிருதியாதி நூல்களும் உரைக்கின்றன.

சீதாபிராட்டியை மணம்புரிய அனேக அரசர் வந்தபோது அவளுடன் பிறந்த வில்லை வளைக்க வேண்டி வெட்கப்போனவர் அனேக க்ஷத்திரியரென்று இராமாயணமும், திரௌபதையை மாலையிடுவதற்கு அனேக க்ஷத்திரியர்கள் வந்தார்களென்றும், அன்றியும் பாரதயுத்தத்தில் அனேக க்ஷத்திரியர்கள் போர்புரிந்தார்களென்றும், அபிமன்னன் மகன் பரிக்ஷித்து சந்ததியில் அனேக அரசர்களிருக்கின்றார்களென்றும் பாரதமும் கூறுகின்றன.

முனிவர்களால் க்ஷத்திரியப் பெண்கள் மூலமாய் உற்பத்தியாக்கப்பட்ட அரசர்கள் காலது வரைக்கும் மலையாள நாடெங்கிலிருப்பதாகவும்தெரியவருகின்றது. இதைத திருவனந்தபுரசரித்திரம் 55-ம் பக்கத்திற் காண்க. இதுவுமன்றி வன்னியினின்று காரணர்த்த கிருஷ்டியாதுண்டான க்ஷத்திரியர்கள் இராஜஸ்தான்முதல் கன்னியாகுமரிவரைக்கும் பரவியிருப்பதாகச் சரித்திரங்கள் முறையிடுகின்றன. இத்தியாதி யியல்புகளால் காலதுவரைக்கும் க்ஷத்திரியர்கள் பூமியிலிருப்பதாக யாவரும் உணரலாம். இந்துபுராண இதிகாசங்களை முற்றிலும் ஆராய்ந்தறியாத சில புறநாட்டுச் சரித்திரக்காரர்களும் உத்தியோகஸ்தர்களும் பொறுமைக்காரர்களும் தமது இஷ்டப்பிரகாரம் சமயோசிதமாகவுரைத்துள்ளவற்றை யறிஞர் மதியார்.

இதனை இன்னும் விளங்கக் கூறுவாம்:—பரசுராமன் கார்த்தவீரியார்ச்சுனன் சந்ததியாரையும் அவர்கள் சிநேகிதர்களிற் சிலரையுங் கொன்றானே யொழிய உலகிலுள்ள க்ஷத்திரியர்யாவரையுங் கொன்றானா? கொன்றதன்மையாயின் திரேதாயுகத்தில் ஸ்ரீராமரை ஜெயிக்காமல் அவர் பாணத்திற் சிலக்காகத் தன் தவத்தையெல்

லாம் சக்தி வலிகுன்றி அவரை வணங்குவானேன்? இவர் விஷ்ணு வம்சம் ஆதலால் இவரை ஜெயிக்க வில்லையெனின், பரசராமன் விஷ்ணு அம்சமல்லவோ? இதுவுமன்றி பிதிவியில் சதாபிராட்டியை மணஞ்செய்வதற்கு எத்தனையோ ராஜர்கள் வந்திருந்தார்கள். இவர் களெல்லாம் க்ஷத்திரியர்களல்லவோ? இந்த க்ஷத்திரியர்கள் கூகை னயக்கண்டு இரவில் காக்கைகள் பயந்தோவெதுபோல், வில்லை வலை க்கப் பயந்தார்களென்று கம்பராமாயணம் கார்முகப்படலம் 28-வது கவி கூறுகின்றது.

மற்காக்கு மணிப்புயத்து மன்னனிவன் மழுவிடையோன்
விற்காக்கும் வாளமருன் மெலிவின்று னெனவிரங்கி
யெற்காக்கு முடிவில்லோர் படையிற்தா ரெனவேந்தர்
அற்காக்கை கூகையைக் கண்டஞ்சினவா மெனலகன்றார்.

ஒருவேளை திரேதாயுகத்திலேயே க்ஷத்திரியர்கள் பூண்டற் றனென் றுரைப்பாராயின், துவர்பரயுகத்தில் முடிவிலே குருக்ஷே த்திரபூமியில், ஐம்பத்தாறு தேசத்தில் வசிக்கும் க்ஷத்திரியர்கள் போர்புரிந்தபோதல்லவோ? பரசராமனால் திரேதாயுகத்திலேயே க்ஷத்திரியர் நிர்மூலமாயின் இத்தனை க்ஷத்திரியவீரர்கள் இவ்வாபர யுகத்தில் எங்கிருந்து முளைத்தார்கள். மேலும் அப்பரவென்னும் பெண்ணினிமித்தம் பரசராமன் பீஷ்மனோடு யுத்தஞ்செய்தபோது அந்த க்ஷத்திரியனை வெல்லத் திறமையில்லாமல் மகேந்திரகிரிக்குப் போய் ஒளிந்தவனை க்ஷத்திரியரை நிர்மூலஞ்செய்த வீரனென் றெ ண்ணலாமா? ஒருவேளை முந்திய யுகங்களில் க்ஷத்திரியர்களிருந்தார் கள். ஆனால் இக்கலியுகத்தி லில்லையென் றுரைப்பாராயின் கலியு கம் பிறந்த முப்பத்தாறுவதுவருஷத்தில் பாண்டவர்கள் பரமபதஞ் சென்றார்களென்றும் அவர்கள் சந்ததியில் பரிட்சித்தும் ஜனமேஜ யனும் அவர் சந்ததியாரும் ஆண்டதாக மஹாபாரதமும் விளக்குகி ன்றது. மேலும் தென்தேசத்திலுள்ள சேரசோழ பாண்டியர்கள் மேற்படி பாரதயுத்தத்தில் போர்புரிந்ததாகவும் பாண்டியன் குமார த்தியாயிய சித்திராங்கதையை அருச்சுனன் கலியாணஞ் செய்ததா கவும் மேற்படி பாரதமே புகலுகின்றது. மேலும் அக்னிகுலத்தில் உதித்த கேளரநிபதியாகிய குலசேகரப்பெருமாள் கலியுகம் பிற ந்த 1860-வது வருஷத்தில் பிறந்தார். இவர் தந்தையின்பேர் க்ஷத் திரிய சிரோன்மணி மஹாராஜா. இவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒரு வர். இவர் க்ஷத்திரியரன்றோ? இவரை க்ஷத்திரியரென்று சொல் லாத வைஷ்ணவப் பிராமணருமுண்டோ?

இத்தியாதி நியாயங்களாலும் பிரமாணங்களாலும் பரசராம ராஸ் க்ஷத்திரியர் அழிக்கப்படவில்லை யென்றும் அவரே க்ஷத்திரிய ராகிய ஸ்ரீராமர் காலத்தேயன் இவர்களால் அபஜெயப்பட்டாரென் றும் சேரவம்ச அரசனுகிய ஆதிவிக்கிரமனுக்கு முடிசூட்டி வாளா யுதம் கொடுத்தாரென்றும் மேற்காட்டிய பிரமாணங்களால் ஸ்தாபி க்கப்பட்டது.

நான்காவது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில் க்ஷத்திரியர் பாதகண்டத்தில் பண்டைகாலத் தொட்டு இவ்வையகமனையில் இருக்கிறார்களென்பது சுருதிஸ்மிருதி முதலிய பிரபல பிரமாணங்களால் ஸ்தாபிக்கப்படும்.

இதுவரையில் "ப்ராம்ஹணேஸ்ய முகமாஸீத்" என்பதாதி சுருதி ப்பிரமாணங்களால் ப்ராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திர ஜங்கிரங் களென்று கூறப்படும் ஜாதிகளின் உற்பத்திக் கிரமங்களும், அவர்க ளின் நெறிமுறைகளும் ஒருவாறு சுருக்கிச் சொல்லப்பட்டன. இனி அந்த ப்ராம்மணரி காண்டு வருணதாருக்குள் ப்ராம்மண க்ஷத்தி ரியர்களே முக்கியமானவர்களென்றும் அவர்களாலேயே தான் உல கம் ரக்ஷிக்கப்படுகிறதென்றும் அவ்விருவரும் எக்காலத்தினுமுள்ள வர்களென்றும் இவர்கள் ஒருவருக்கொருவர் பேசப்பாண்மையி னின்றும் தவறுங்கால் ப்ரஜைகளுக்கு அரிஷ்டங்களும் அநீதிகளும் உண்டாகின்றன வென்றும் ப்ராம்மணக் க்ஷத்திரியருக்கு முக்கிய காரணரென்றும் க்ஷத்திரியர் ப்ராம்மணருக்கு ப்ராணதாரமென் றும் இவ்விருவரும் பரஸ்பர சம்பந்தமுடையவர்களென்றும் விளித்துரைக்கப்படுவதோடு இவர்கள் முக்கியமாய் செய்யவேண்டிய தொழில்கள் க்ஷத்திரிய பதத்தின் விற்பத்தி (ரூட்) இவர்தான் க்ஷத் திரிய ரெனப்படுவோர், என் பதாதிவிஷயங்களோயும், அக்னி மூலோற்ப வர்களே க்ஷத்திரியர்கள் அவ்வக்கினி குலத்தினின்று ரூரிய சந்திர வம்சாதி க்ஷத்திரியர்கள் தோன்றினர்களென்றும் விஷயங் களையும், மஹாபாரத முதலிய ப்ரபலம்பிரமாணவாக்கிய ஜாலங் களோக்(கூட்டம்)கொண்டு நிரூபிக்கப்படுகிறது.

அவைகள் முறையேவருமாறு

மஹாபாரதம் சாந்திபர்வம் 73-ம் அத்தியாயம் 1-3-5-கஸ்லோகம்.

ब्राह्मणानां हि सर्वस्वं क्षत्रियाणां बहुश्रुतं।
एतन्मिथुनमत्यन्तं ब्रह्मक्षत्रमवर्धयत्॥

ராக்ஞாபுரோஹிதஃ கார்யோபவேத்வித்வாம்பஹூச்ருதஃ
உபௌஸனீக்ஷ்யதர்மார்த்தா வப்ரமேயாவஹந்தரம்"

(இ-ள்.) அரசனுக்கு வித்வானுயும் அதேகவிஷயங்களில் பண்பட்டவனுயும் இருக்கிற பிராமணன் மந்திரியாயிருத்தல்வேண்டும்: அரசனும் அவனது புரோகிதரும் (மந்திரியும்) காரியங்களில் அஜாக்கிரதையில்லாதவர்களாய்த் தர்மார்த்தங்களே மென்மேலும் விருத்திக்கிக் கொண்டுவரவேண்டும்.

బ్రహ్మక్షత్రస్యసంతానాత్ ప్రజాసుఖమవాప్నుయాత్ ।
బ్రహ్మక్షత్రంచ సర్వేషాం వర్ణానాం మూలకారణం ॥

ப்ரம்ஹக்ஷத்ரஸ்யஸந்தானத் ப்ரஜாஸுகமவாப்நுயாத்
ப்ரம்ஹக்ஷத்ரஞ்சஸர்வேஷாம்வர்ணாநாம்மூலகாரணம்"

(இ-ள்.) ப்ராம்மண க்ஷத்திரியர்களுடைய வம்சத்தால்தான் பிரஜைகளுக்குச் சுகமுண்டாகிறது ப்ரம்மக்ஷத்திரியர்கள் தான் சர்வ வர்ணங்களுக்கு மூலகாரணம்.

ஷை- அத்தியாயம் 10-சுலோகம்.

అపధ్వస్తాదస్యభూత్వాభజంతి యేబ్రాహ్మణాఃక్షత్రియాస్సంత్యజంతి ॥
అపత్వస్తాదస్యు పூதாபవந்தி
யேப்ராம்ஹ்மணக்ஷத்ரியா: ஸந்த்யஜந்தி"

(இ-ள்.) எந்த அரசர்கள் ப்ராம்மணர்களை யொழித்து அரசபுரிவார்களோ அவ்வரசர்களின் ராஜ்யம் சோரர்களாலும் அக்நிரம்பங்களாலும் நிரம்பப்பெற்றதாகும்.

క్షత్రంవై బ్రహ్మణోయోనిఃయోనిఃక్షత్రస్యవైద్విజాఃక్షత్రమ్వైప

சாந்திபர்வம் 289-ம் அத்தியாயம் 20-வது சுலோகம்.

ప్రతిగ్రహోయాజకశ్చ త్రయో వాథ్యాసనంనృప!
విశేషధర్మావిప్రాణాం రక్షాక్షత్రస్య భోధనా॥

ப்ரதிக்ரஹோயாஜகச்சததைவாத்யாபகம்ந்ருப
விசேஷதர்மாவிப்ராணம் ரக்ஷாக்ஷத்ரஸ்யசோபகா”

(இ-ள்.) ப்ராமணர்களுக்குப் பிரதிக்ரஹம் (தானம்வாங்கிக்கொள்ளுதல்) யாஜகம் (யக்ஞம் செய்வித்தல்) அத்யாபகம் (வேதமோதிவைத்தல் ஆகிய இம்மூன்று கருமங்களும் சிறந்த தர்மங்களாம். க்ஷத்திரியர்களுக்கு ப்ராமணரில் வர்ணங்களை ஆபத்துகளிலிருந்து ரக்ஷித்தல் சிறந்ததர்மமாம்.

க்ஷத்திரியர்.

க்ஷத்ரபதத்திற்கு க்ஷத்ராத்தராய இதில் க்ஷத்ரம் க்ஷதம் என்னும் காயம் த்ராளன்னும் இரக்ஷித்தல் அதாவது காயத்தினின்றும் இரக்ஷித்தல் எனப் பொருள் என்னும் பிரஜைகளுடையதுன்பத்தினின்றும் ரக்ஷிக்கிறது என்பதாம்

ஆதியில் கடவுள் உலகுயிர்களைச் சகல ஆபத்தினின்றும் காப்பாற்றுதற் பொருட்டே க்ஷத்திரியர்களை உண்டாக்கினரென்று மனு 7-வது அத்தியாயம் 3-வது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

అరాజకేలోకేసర్వ్వతోవిద్రుతేభయాత్।
రక్షార్థమస్యసర్వ్వస్య రాజానమసృజత్ప్రభుం॥

அராஜகேலோகேஸர்வ்வதோவித்ருதேபயாத்
ரக்ஷார்த்தமஸ்யஸர்வ்வஸ்ய ராஜானமஸ்ருஜத்ப்ரபு:

க்ஷத்திரியனில்லாமற்போனால் பலமுள்ளவனிடத்தில் பலமில்லாதவர்கள் பயத்தினால் வழிந்துபோவார்கள்; ஆகையினால் இவ்வுலகமெல்லாம் அழியாமலிருக்கும் பொருட்டு சுவாமியானவர் அரசனை யுண்டுபண்ணினர்.

ஆகையால் க்ஷத்திரியன் ஏகலாண்டங்களையும் காப்பாற்றுதல் காரணமாகவே சிருட்டிக்கப்பட்டான். க்ஷத்திரியனெனினும் அரசனெனினும் ராஜாவெனினும் ஒக்கும். இவ்வரசன் சகலாண்டங்களையும் காத்தற்குரிய புஜபல பராக்கிரமசாலியாயிருத்தல் வேண்டும். ஆதலால் இவனைப்பலத்திற்கு ஆதாரஸ்தானமாகிய புஜத்தினின்றும் சிருட்டித்துப் பின் இவன் புஜபலமுடையானேனும் இயற்கையிலேயே சகலாண்டங்களையும் ஏண்டு பரிபாலிக்கும்படியான

ஆதிக்கத்தை யுடையானாயிருத்தல் வேண்டுமாதலால் அத்தகைய தத்துவத்தையும் தொழிலையும் இயற்கையிலேயேயுடைய திக்குப் பாலகரின் அம்சமாகவும் சூரியசந்திர அக்கினி அம்சமாகவும் சிருட்டிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

இதற்குப் பிரமாணம்.

அரசனுவன் இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன், இவர்களின் அம்சங்களினாலேயேயுண்டாக்கப்பட்டானென்று மனு 7-வது அத்தியாயம். 4 வது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

க்ஷத்திரியர் உற்பத்தி.

கற்பாந்த சிருட்டி, பிரளயாந்த சிருட்டி, காரணார்ந்த சிருட்டி, என்னப்பட்ட மூன்றுவித சிருட்டிகளால் க்ஷத்திரியர் சிருட்டிக்கப்பட்டுள்ளதாக மனுவாதி ஸ்மிருதிகளும் புராணேதிகாசங்களும் கூறுகின்றன.

கற்பாந்த சிருட்டிக்குத் திருட்டாந்தம்.

பிரம்மாவானவர் ஆதியில் தன் தோளினின்று க்ஷத்திரியனைப் பிறப்பித்தார். இதற்கு ருகு முதலிய பிரமாணங்களை 5-வது பக்கத்தில் காண்க.

பிரளயாந்த சிருட்டிக்குத் திருட்டாந்தம்.

திருவிளையாடற்புராணம் திருவாலவாய்ப்படலம் 12-வது கவி.

வெள்ளநீர் வறப்பவாதி வேதியன் ஞாலமுன்போல்
உள்ளவா றுதிப்ப நல்கியும் பரோடம்ப மேனைப்
புள்ளொடு விலங்கு நல்கிக்க திருடற் புத்தேண் மூவர்
தள்ளரு மரபின் முன்போற் றமிழ்வேந்தர் தமையுந் தந்தான்.

(இ-ள்.) பிரளய நீர்வற்றிய பின்னர் பிரம்மாவானவர் உலகத்தினைப் பழைமைபோல் விளங்கும்படி சிருட்டித்து, தேவர்களையும் மனிதர்களையும் மற்றைய மிருகங்களையும் படைத்து, பிரகாசம் பொருந்திய தேகத்தினையுடைய (சோம, சூரியாக்கினி என்னும்) மூன்று தேவர்களது நீக்குதற்கரிய பரம்பரையில் முன்னிருந்தது போலவே (பாண்டியன், சோழன், சேரன் முதலிய) தமிழ் நாட்டரசர்களையும் பிறப்பித்தார்.

காரணார்ந்த சிருட்டிக்குத் திருட்டாந்தம்.

மனு 9-வது அத்தியாயம் 321 வது சுலோகம்.

అగ్నేర్భ్యోష్టిబ్రహ్మత్వం క్షత్రమత్వోలోహాముష్టేత్వం।
తేషాంసర్వ్వత్రగం తేజ స్వాసుయోనిషుచామ్యతి॥

அத்பியோக்னிஃப்ரம்மதஃ க்ஷத்ரமச்மதோலோஹமுத்திதஃ
தேஷாம்ஸர்வத்ரகந்தேஜஃ ஸ்வாஸ்யோநிஷுசாம்யதி.

ஜலத்தினின்று அக்கினியும் பிராமண முனிவனிடத்திலிருந்து க்ஷத்திரியனும் கல்லினின்று லோகமும் உண்டாயிற்று.

இதுபோலவே வியாசபாரதம் ஆதிபர்வம் 64-வது அத்தியாயம் வம்சாவதார சருக்கத்திலும் அதற்கிணங்க தமிழ் வில்லிபுத்தூராழ்வார் பாரதம் சம்பவச்சருக்கத்திலும் முனிவரிடத்திலிருந்து க்ஷத்திரியர் காரார்த்தமாக உற்பவித்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதியில் முனிவர்களுடைய வேண்டுகோட்படி இராக்கதர்களைச் சம்மரிக்குமாறு விஷ்ணுகடாக்ஷித்ததால் தசரத சக்ரவர்த்தியெற்றிய யாகத்தினிடமாக ஸ்ரீராமர் முதலிய நான்கு க்ஷத்திரியர் உற்பவித்தார்கள். இஃதன்றியும்,

பாரதம் ஆதிபர்வம் 169-வது அத்தியாயம்.

ஏவமுக்த்வாது யாஜ்ஞ ஹ்ருதேஹவிஷி சம்ஸ்க்ருதே
உத்தஸ்தௌ பாவகாத்தஸ்மாத் குமாரோ தேவஸந்நிபஃ
குமாரீசாபி பாஞ்சாலீ வேதிமத்யாத் ஸமுத்திதா.

ஏவமுக்த்வாது யாஜேன ஹுதேஹவிஷி சம்ஸ்க்ருதே
உத்தஸ்தௌ தௌ பாவகாத்தஸ்மாத் குமாரோ தேவசந்நிபஃ
குமாரீசாபி பாஞ்சாலீ வேதிமத்யாத் ஸமுத்திதா.

யாகசேனன் செய்த யாகாக்கினியில் திருஷ்டத்யுமனனும் துரோபதையும் ஆகிய க்ஷத்திரியனும் க்ஷத்திரிய ஸ்திரீயும் உதித்தார்கள்.

இவ்வாறு உற்பவித்துப் பற்பலதேசங்களையும் அரசாண்டுவந்த க்ஷத்திரியர்களுடைய வம்சங்கள் அந்நாள்தொட்டு இந்நாள்வரையிலும் பூலவிடங்களில் பெருகியிருப்பதைக் கண்ணுற்றும் சில நூதன விவேகிகள் க்ஷத்திரியவம்சம் பரசுராமன்றல் பற்றறக் களையப்பட்டதென்று சொல்லிக்கொள்ளுதல் முற்றிலும் தவறென மேல் அத்தியாயம் 139-வது பக்கத்திலிருந்து நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

க்ஷத்திரியர் பூராதனஸ்தானம்.

க்ஷத்திரிய வம்சத்தவர்கள் பண்டைக்காலந் தொடங்கி வடக்கின் கண்ணே இமாசலமும் தெற்கின் கண்ணே கன்னியாகுமரியும் மேற்கின்கண்ணும் கிழக்கின்கண்ணும் அலையெறிகடல்களால் சூழப்பட்ட பரதகண்டமாகிய இவ்விந்து தேசத்தின் வடபாகத்திலிருந்து பெரும்பாலும் தெற்கே குடியேறினதாக சரித்திரங்களால்

தெரியவருகின்றது. இதுவல்லாமலும் மேற்சொன்ன க்ஷத்திரியரில் சிலர் விந்தியபர்வதத்திற்கும் இமாசலத்திற்கும் இடுத்திருக்கும் பண்டில்குண்டாவென்னப்பட்ட ஸ்தானத்திற்கும் மத்தியில் இராஜாக்கள் வசிக்கும் ஸ்தானமெனப்பொருள்தரத்தக்க இராஜஸ்தானத்திலும் சில காலமாண்டு பின்னர் படிப்படிதென்பாகிசங்களில் பரவினதாகப் பூராணேதிகாசங்களினல்தெரியவருகிறது. இப்படிப் பண்டைக்காலந்தொடங்கி யரசாண்டுவந்த இராஜவம்சத்தவரை இந்து சாஸ்திரங்கள் சூரியகுலமென்றும் சந்திரகுலமென்றும் அக்கினிகுலமென்றும் வகுத்துக் கூறுகின்றன.

இம்முக் குலங்களின் மூலபுருடனாக்குறித்துச் சுருதிஸ்மிருதிபுராணேதிகாசங்கள் பற்பல வாறுகக் கோவித்திருந்தபோதிலும் அக்கினிபுத்திரரான அங்கிரஸ்ஸென்பவரே க்ஷத்திரிய வம்சத்திற்கு மூலபுருடராக விருந்தாரென்பது பின்வரும் பிரமாணத்தால் விளங்குகின்றது.

மகாபாரதம் சாந்தி பர்வம் 296-வது அத்தியாயம்
17-வது சுலோகம்.

மூலகோத்ராணிசத்வாரி ஸமுத்பன்னானிபார்திவ!
அங்கிராஃகச்யபஶ்சைவ வஸிஷ்டோ(அ)ஸ்ருஜச்சவை!
கச்யபோ(அ)ஸ்ருஜதாதித்யாந்யானி ஸமுத்பன்னா நிபார்திவ!

மூலகோத்ராணிசத்வாரி ஸமுத்பன்னானிபார்திவ.
அங்கிராஃகச்யபச் சைவ வஸிஷ்டோ ப்ருகுரேவச
கர்மதோந்யாநி கோத்ராணி ஸமுத்பன்னானிபார்திவ.

இ-ன். பூர்வத்தில் அங்கிரஸ் கச்யப வஸிஷ்ட ப்ருகுவென்கிற நான்கு மூலகோத்திரங்களேதான் உற்பத்தியாயிருந்தன. பின் கர்மத்தால் பற்பல கோத்திரங்களுண்டாயின.

அங்கிரஸ் காசிபர் வஸிஷ்டர் ப்ருகுவென்கின்ற நான்கு மகரிஷிகளைக் சுறிப் பின்னர் கர்மத்தால் பற்பல கோத்திரங்களுண்டாயினவென்றும், சூரிய சந்திரகுலங்களுக்கு மூதலமையானது அக்கிகுலமென்றும் அக்குலத்திலுதித்த அக்கினிபுத்திரரான அங்கிரஸ் க்ஷத்திரியவம்சத்திற்கு மூலபுருடனென்றும், பின்னர் கர்மத்தால் பற்பல கோத்திரங்களுண்டாயினவென்றும் கூறியபிரமாணத்தின்படி அக்கிகுலம்முன்னென்றும் அதன் பின்னர் சூரிய சந்திரகுல முண்டாயிற்றென்றும்

ஏற்படுகின்றது. ஆகையால் இம்முக்குலங்களைக் குறித்து வடமொழி தென்மொழி நிகண்டுகளில் கூறப்பட்டிருக்கும் பிரமாணங்கள் முறையேவருமாறு.

சூரியகுலமுண்டென்பதற்குப் பிரமாணம்.

வால்மீகிராமாயணம் பாலகாண்டம்

70-வது சருக்கம்.

18-வது சுலோகம்.

தவஸ்தேஷாஞ்ஜநிஷ்யந்தி ஸுதாஸ்த்வமரோபமா:।
மநுப்ரஜாபதிர்பூர்வம் யதோ வை மநவ: ஸ்ம்ருதா:॥

விவஸ்வான் காச்யபாஜ்ஜக்ரேமனுர்வைவஸ்வதஸ்மம்ருத:
மநு:ப்ரஜாபதி: பூர்வம் இக்ஷ்வாகுஸ்த்வமநோ:ஸுத:

இ-ள். காசிபருக்கு விவசுவான் (சூரியன்) பிறந்தான். அந்த விவசுவானுக்கு வைவஸ்வதமநுபிறந்தார் இவர் முதலில் பிரஜாபத்தியஞ்செய்தார் இவர் பிள்ளை இட்சுவாகு.

சூரியகுலமுண்டென்பதற்குப் பிரமாணம்.

பாரதம் ஆதிபர்வம் குருகுலச்சருக்கம்.

எங்கண்மாதவனிதயமாமலர்வருமுதயத்
திங்கண்மாமரபினிற்பிறக்கினைபுடன்றிறக்தோ
ரங்கண்மாஞிலத்தரசர் பல்கோடியவ்வரசர்
தங்கண்மாக்கதையான தியன வையிற்சமைக்கேன்.

இ-ள். எங்கள் கடவுளாகிய திருமாலினது இதைய தாமரையில் உதிக்கும்பெருமைபொருந்திய சந்திரவமிசத்திற் பிறந்து சிறந்திபெற்ற பலகோடி அரசர்களது சரித்திரத்தைப் பூமியில் யானறிந்தவகையிற் சொல்லுகின்றேன் என்றும்,

தேவிபாகவதம் பிரதமஸ்கந்தம் 11-வதுஅத்தியாயத்தில் சந்திரனுக்கு குருவினுடைய பாரியையாகிய தாரையினிடத்தில் புதன்பிறந்தான்என்றும் புதனுக்குப் பூரூரவன் பிறந்தான் என்றும் இக்கப் புரூரவம்சத்தில் வந்தவர்கள்தான் பாண்டவர் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

* குரியகுலத்தரசனுடைய சுத்தியும்ன னென்னுமரசன் வேட்டையாடும்பொருட்டு பார்வதி பரமேஸ்வரர்களுடைய ஆசிரமத்திற்குச்செல்ல அவர்களால் பெண்ணாகும்படி சபிக்கப்பட்டான். இந்த சுத்தியும்னனே சசோயென்பவன்.

அக்நிகுலமுண்டென்பதற்குப் பிரமாணம்.

மஹாபாரதம் வனபர்வம் (அதாவது ஆரண்யபர்வம்) 220-வது அத்தியாயம்மார்க்கண்டேய சமிய சருக்கத்திலே அக்கினியினுடைய்பரம்பரையைக்கூறுமிடத்தில் தபனனென்னப்பட்ட அக்கி வர்சத்தாசனுக்குப் புரோகிதனென்றும் உன்மாவென்றும் மநுவென்றும் மூன்றுபிள்ளைகள்பிறந்தார்கள். அவர்களுள் மநுவென்பவன் இராஜிய பரிபாலனஞ்செய்ததாகவும் கூறப்பட்டிருக்கின்றது.

மஹாபாரதம் அநுசாஸநபர்வம் 85-வது அத்தியாயம்104-வது சுலோகம் தொடங்கி குளகமாகக் கூறப்படுகிறது.

ருக்ஷாந்தேர்ணுதஸ்யாபி ப்ராதுராஸம்ஸுயஜ்ஞியே।
புருஷாவபுதாயுத்தா: ஸ்வை: ஸ்வை: ப்ரவர வைர்ருஷை:॥

சுக்ரேஹ்ருதேதஸ்தேனைஸ்மின்னுர ப்ராதுராஸம்ஸ்தவாப்ரோ
புருஷாவபுதாயுத்தா: ஸ்வை: ஸ்வை: ப்ரவர வைர்ருஷை:॥

வருணனால் செய்யப்பட்ட பசுபதி சம்பந்தமான யாகத்தில் (பிரம்மதேவரால்) விரியம் ஓமம் செய்யப்பட்டிருக்குமளவில் அந்த அக்கினியினிடமாகத் திவ்விய சரீரத்தோடுகூடிய மூன்றுபுருஷர்கள் தத்தம் உற்பத்திக்குக் காரணமான குணத்தோடு அவதரித்தவர்களாகத் தோன்றினர்கள்.

ருசிகேவதருக்ஷாயாம் ஸம்காரேப்யோஸிரோபவத்।
ஆங்காரஸம்ஜ்ஞாயாம்வை ரஜஸத்யஜநாதவத்॥
ப்ருகுஸ்த்வேவப்ருகு: பூர்வமங்காரேப்யோங்கிராபவத்
அங்காரஸம்ஜ்ஞாயாச்சைவ கவிர்த்ய பரோபவத்॥

அம்முவர்களில் ஒருவராகிய பிருகு என்பவர் முதலில் அவ்வக்கினியினுடைய பூதகாரத்திலிருந்து தோன்றினமையால் பிருகு என அழைக்கப்பட்டார்.

இரண்டாவது அந்த அக்கினியின் அங்காரத்திலிருந்து அங்கிரஸ் என்பவர் தோன்றினர். மூன்றாவது பிரம்மதேவனுலே யாகம் பண்ணப்பட்ட விரியமானது அக்கினியில் பட்டு அமில்கின்றமையால் அங்கிருந்து கவியெனபவர் உண்டானார்.

மேலும் அத்தியாயம் 124-125-126-வது சுலோகம்.

நிஸாகரே ப்ரஹ்மணஸ்ஸ பரமேஷ்டிஸமுத்தவ:।
ஜ்ரஹ்மாத்மஜோ ருஷிஸ்ரேஷ்டோ வஸிஷ்டோ ஸுமஹாதபா:॥
ஊர்ஜ்ஜாயாமபிஸம்ஜாதோ ரஜோகுணஸமந்வித:।
பிதாமஹஸ்ஸுவர்ச்சஸ்வீ ஸர்வஜ்ஞாநேஷ்வவர்த்ததா॥

தசாஸ்வமருணஞ்யோ தூயங்ஸ்ப்ரஸவக்ஷணே।
அக்னேயஸ்த்வங்கிரஸ்ச்சீமன் கவிர்ப்ராஹ்மோமஹாயசா:॥

ரிஸர்காத்ப்ரஹமணச்சாபி வருணோயாதஸாம்பதி:
ஜக்ராஹதைவப்ருகும் பூர்வமபத்யம் ஸௌர்யவர்ச்சஸம்
நச்வரோங்கிரஸஞ் சாக்னேரபத்யார்த்தம கல்பயத்
பிதாமஹஸ்த்வபத்யம்வைகவிஞ் ஜக்ராஹதத்வவித்.
ததாஸவாருண:க்யாதோப்ருகு:ப்ரஸவகர்மக்ருத்:
ஆக்னேயஸ்த்வங்கிரச்சீமன கவிர்ப்ராஹ்மோமஹாயசா:

பிரமதேவனுலே செய்யப்பட்ட யாகத்திலிருந்து உண்டான மூன்று புருடர்களில் ஒருவராகிய சூரியனுக்கு ஒப்பான பிருகு என்பவனைச் சமுத்திராதிபதியான வருணன் புத்திரனாக அங்கீகரித்தனர். மகாதேவர் அங்கிரஸை அக்கினிக்குப் புத்திரனாக வேற்படுத்தினர். பிரமதேவர் கவியென்பவனைப் புத்திரனாகப் பெற்றனர். அப்பொழுது பிருகு என்பவர் வருணனுக்குப் புத்திரனாக ஆனமையால் அவர் சந்ததியார் வாருணர் (வருணவம்ச பரம்பரையைச்சேர்ந்தவர்) என்பட்டார். ஆங்கிரஸ் அக்கினிக்குப்புத்திரனாக ஆனமையைப்பற்றி அவர் சந்ததியார் ஆக்கினேயர் (அக்கினி குலத்தைச்சேர்ந்தவர்;என்பட்டார்) மகா தீர்த்திபோருந்தியவரி பிரமதேவருக்குத்தன யனுமையால் அவர் சந்ததியார் பிராம்மியர் (பிரம வம்சத்தைச் சேர்ந்தவர்) எனப்பட்டார்.

மே. அத்தியாயம் 129-வது சுலோகம்.

ஆஜ்யாஹுதிரஸாஹுத்ரா வரணாஸ்தேஸ்யதாஸ்ருதா:।
பிருஹஸ்பதிருத்கஸ்ச் பயஸ்யஸ்சாந்தீரவச
தீர்க்கவிரூபஸ்சம்வர்தஸ் ஸுதன்வாசாமஸ்ருத:॥
அஷ்டௌசா சாங்கிரஸ: புத்ரா வருணஸ்தேப்யுதாஹ்ருதா:
ப்ருஹஸ்பதிருத்கயச்ச பயஸ்ய: சாந்திரேவச
தீர்க்கவிரூப: ஸம்வர்த: ஸுதன்வாசாஷ்டமஸ்ம்ருத:

அக்கினியுடைய புத்திராகிய ஆங்கிரஸ்ஸுக்கு பிருகஸ்பதி உதத்தியன் பயஸ்யன் சாந்தி தீரன் விரூபன் சம்வர்த்தன் சுதன்வன் என எட்டுபுத்திரர்கள் பிறந்தார்கள்.

மே. அத்தியாயம் 137-வது சுலோகம்.

ப்ராஹ்மணாங்கிரஸ்ஜீவ: க்ஷத்ரஸ்ஸுஹோத்ரஸ்:।
க்ஷத்ராங்கிரஸாத்ரிஷ்யாஸ்ஸுவ்ரதாவத்ஸனந்வயா:॥

ஜக்ராஹாங்கிரஸம் தேவ: கிதிதஸ்மாத் ஹ்ரோதாசச:
தஸ்மாதாங்கிரஸா: க்ரேயா: ஸர்வஎவததர்ஷயா:

பிரகாசம்பொருந்திய அக்கிதேவன் அங்கிரஸை புத்திரனாக அடைத்தனர். ஆனபற்றி அந்த அங்கிரசுஷ்ஷுடைய வம்சத்தில் தோன்றினவர் அனைவரும் ஆங்கிரஸர் (அக்கினி வம்சத்தவர் அல்லது வன்னியர்) எனப்பட்டார்.

மகாபாரதம் ஆரண்யபர் வம்220-வது அத்தியாயம்.

மார்க்கண்டேய சருக்கம் 5-வது சுலோகம்.

அக்னேஸ்சாபிமநுர்நாம ப்ராஜாபத்யமஜாயத।
சம்புமக்நிமதப்ராஹு: ப்ராஹ்மணாவேதபாரகா:

வேதத்தில் மிகவல்ல பிராமணர்கள் சம்பு என்னப்பட்ட அக்கி புத்திரனுடைய பிரதாபங்களைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

பாரதம் 221-வது அத்தியாயம்

28-வது சுலோகம்.

ஆத்ரேச்சாப்யாத்ரயோ ப்ரஹ்மன்மாநாஸ்ப்ருஜா:
ஆத்ரேயுத்ரஷ்டாமத்வாநாத்ரயார்யநி।
அத்ரேரபீசாப்யத்ரயோஹாதாப்ரம்மர்ஷிமானஸா: ப்ரஜா:
அத்ரே:புத்ராண்ஸ்ரஷ்டுகாமான்ஸ்தானேவாதிமன்யதாயத்

ஆதியில் பிரமாவினிடமாகப் பிறந்த அக்கி வம்சத்தை செல்லாம் மறுபடியும்அத்திரியினிடமாகவும் உற்பவித்தார்கள்.

பாரதம் 222-வது அத்தியாயம் முதல் சுலோகம்.

அக்நேராவிவிதாவம்சா: கீர்த்யந்தேயாஸ்ருஷி:
ரிஷபஸ்துருஷாரவ்ய ஸாத்ரிர்யஸ்யஸுதஸ்மிருத:

அக்நீகாம்விவிதாவம்சாசேர்த்திதாஸ்தேமயாதக
சுருஷுஜன்மதுகேஷாவ்வியசார்த்திகேயஸ்யதீமத:

ஓ! பாபரகிதனுடைய குருகுலக்கொழுந்தே நான் இனி காணும் அக்கினியுடைய பற்பல வம்சங்களைப்பற்றி உனக்கு

விரிவாகச்சொல்லிவைத்தேன்; இப்போது இயான சொருபி யாகிய கார்த்திகேயனுடையசரித்திரத்தையும் உனக்குச்சொல் லுகிறேன் கேள்.

ஸ்ரீபாகவதம் 8-வது ஸ்கந்தம் முதலத்தியாயம்

20-வது சுலோகம்.

ஸ்வாரோசிஷோத்பத்தயஸ்து மநவஸ்தேஷ்வபாத்மஜா:।
ரயஸ்வஸ்ருக்ஸ்ரோசிஷ்மத்ப்ரியவ்ரதோத்தாநவீதிஹோத்ரா:
ஸ்வாரோசிஷோத்விதியஸ்த்துமநூர்க்கே:சுதோபவத்
த்யுமத்சுஷேணோரோசிஷ்மத்பிரமுகாஸ்தஸ்யசாத்மஜா:.

அக்கியின் புத்திரனென்னும் இரண்டாவது மனுவா கிய சுவாரோசிஷ மனுவென்பவன் பிரஜாபாலனம் செய்தா னென்றும் அவருக்குசுசியும்னன் சுஷேணன் ரோசிஷ்மன்முத லானோர் பிள்ளைகளென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இதற்கிணங்க தமிழ்பாகவதம் 10-ஸ்கந்தத்தில் சொல் லப்பட்டுள்ள.

இயம்பிரண்டாஞ்சீர் மனுவினையுணர்க்கிலங்கு மக்கினிமுனமீன்ற
கயத்தகுசுவாரோசிட னவனுலகம் கலையறக்காக்குநன்.

இன். சொல்லப்பட்ட இரண்டாவது மனுவாலவர் பி காசம் பொருந்திய அக்கிதேவன் முன்னொருகாலத்திற் பெற்ற சுவாரோசிட மனு என்னப்பட்டவராம்; இவர் உலகத் தைக் குற்றமறப் பாதுகாத்துவரும் காலிலே. என்று கூறப் பட்டிருத்தினாலும்.

இவையல்லாமலும் ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார் செய்த தாவிடபாரதத்திலே ஆதிபர்வத்திலே திரௌபதிமாலையிட்ட சருக்கத்திலே சுயம்வரமண்டபத்தில் வந்திருந்த அரசர்களை இவர் இன்னர்இவர் இன்னர் என்று செவிலித்தாயர் சோக்கி திரௌபதிக்குக் காட்டிவருமிடத்திலே.

இவன் சல்லியனென்னுமா சான்றவிக்கல்வேன் மன்னற்கேசனாயா
னிவன்றன்பகைவர் யாவரையுமிமையோ ராக்குமெழிலி
னிவன்கெருழலொன்மா பாயிசாழலுகும் புகழ்சோன்.

இன். மிகுதியாகிய பலமுடைய வேலாயுதத்தைத் தாங்கிய அரசர்களுக்குச் சிங்கமொன்றவன் என்று சொல லப்பட்ட இவ்வரசன் சல்லிய மகாராஜன்; தன்னுடைய சத் துருக்கள் யாவரையும் (வீரகவர்க்கம் அனுப்புதலால்) தேவர் களாரும்படிச்செய்யும் (வல்லமையுடைய) இவ்வரசன் அழ கிய நீலனென்னப்பட்டவன்; இவ்வரசன் குளிர்ச்சிபொருந் திய தமிழ்ப்பாஷையில் வல்லவனுகிய பலம்பொருந்திய பாண்டியன்: இவ்வரசன் ஒற்றையாழித்தேரினையுடைய குரு யன்று குலத்துதித்த சோழன்; இந்த ஆசன் சிவந்த அக்கி யினது குலத்தவனுகி பதினன்கு உலகங்களிலுள்ளாரும் புகழும்படியான ஓர் தினையுடைய சோன் என்றும்.

ஷ பாரதம் இராஜசூயச்சருக்கத்திலே அக்கிபூசனை செய்யவேண்டிய காலத்திலே,

பரிதியமதியுவன்னியு முதலாம்பல்வகைக் குலத்தமும்பவித்த
நரபதிகுலாத்தில்யாவரே பெறுவார்கவிலு முற்பூசைமற்றென்னக்
கருதியவக்கனென் மரிலொருவன்கைகண்டையின் திருமகன்றெய்வத்
தருமோமகஞ்செய் புனிதனேகோக்கித் தொன்முனிவ்வாயுகோக்கி.

இன். யாவராலும் நிந்திக்கப்பட்டஅஷ்டவசுக்களில்லருந் வரும் கங்காதேவியின் அழகிய புதல்வரும் ஆகிய வசிட்டமைய யும் தெய்வத்தன்மைபொருந்திய வேதத்திற் பிரதிபாதிக்கப் பட்டபெரிய யாகத்தினைச்செய்யும் பரிசுத்தரான முனிவரை யும் ஏனைய பழமையாகிய முனிவர்களையும் (தருமராசன்)பார் த்து குரியன் சந்திரன் அக்கி முதலாகிய விப்பலகுலத்திலு முதித்த அரசர் கூட்டங்களில் யாவர் முதற்பூசை பெறுதற் குரியார் சொல்லுங்களென்று கேட்டார் என்பதாம்.

ஷ பாரதம் சபாபர்வம் இராஜசூயயாகச் சருக்கம்

15-வது கவி.

தொன்குலத்தோர்குபோன்குலத்தோர்கடப்பாவகம்
பொன்குலத்தோர்கண்முதலோரிருந்தார்கள்பெயர்பெற்றபேர்
வீரவகொலோவாருரார்கொலோசெல்வமிச்சங்கொலோ
தூரம்புரிப்புலிக்கென்றுமுதுவோர்கள்பொதுவோர்கொலோ.

இன். மிகுந்த கீர்த்தியைப்பெற்ற குரிய குலத்தரசர் களும் சந்திரகுலத்தரசர்களும் பிரகாசம் பொருந்திய அக்கி குலத்திலுதித்த அரசர்களுமாகிய பலபேரிருக்க, சமுத்தி ரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தில் எக்காலத்திலும் பெரியவர்களா வார் இடையர்களோ (இவ்விடையர்கள்) பெருமிதமடைத்

தது சவரியத்தினுலா புஜபலத்தினுலா அகண்ட ஐஸ்வரியத் தினுலா (என்று கிருஷ்ணருக்கு முதற்பூசை செய்யும்படிச் சொன்ன வியாசரை நோக்கிச் சிசுபாலன் சொன்னன்) என் பதாம்.

ஷை பாரதம் ஆதிபருவம் சம்பவச்சருக்கம்.

மூக்குலத்தானெ முதன்மையானுய
மிக்குலத்தி வலவாதில்லே மாமகர
சக்குலத்தவ முனியருளிரு விவன்
மெய்க்குலத் தக்தையாம் விழுமுமில்லென்றன்.

இத்யாதிப் பிரமாணங்களால் க்ஷத்திரியவம்சம் சூரிய குலம்சந்திரகுலம் அக்கினிகுலம்என மூக்குலங்களாகப்பிரிக்திருக்கின்றதென்றும் இம்மூக்குலத்தில் அக்கினிகுலமொன்றென்று பாரத பாகவதாதி சமஸ்கிருத காவியங்களிற் கூறப்பட்டுள்ள தற்குத் தமிழில் "செக்கழுலோன் மாபு" "சுடர்ப்பாவகப் போன்றலும்" என்றும், சொற்சருக்கமர்க "வன்னிகுலம்" என்றும் தமிழாசிரியர்களாலேயே தொன்றுதொட்டே வழங்கப்பட்டு வருகின்றதைக்காணலாம்.

ஆயின் மேலே சொல்லப்பட்ட சோம சூரியாக்கி யென்னும் மூக்குலங்களும் புராதனமோ அவாக்காமோ வெனச் சிலருக்குச் சங்கை நிகழுமாதலால் அதைப்பற்றியும் சற்று யோசிப்போம்.

திருவிளையாட்புராணம் திருவாலவாய்ப்படலம்

12-வது கவி.

வெள்ளிர்வறப்பவாதிவேதியன்ஞாலமுன்போல்
உள்ளவாறுதிப்பகல்கியும்பரோடிம்பரேனைப்
புன்வொழுவிலவங்குலங்கிக்திருட்புத்தேண்முவிர்
தன்னருமாபின்முன்போற்றமிழ்வேர்தர்தமையுந்தான்.

இக்கவியில் முன்போலென்றதனுல் பூர்வத்திலேயே மூக்குலங்களும் உண்டென்றும் அம்மாபை பொட்டியே பின்னர் பிரமன் கிருஷ்டித்தானென்றும் விளங்குகின்றது.

இம்மூக்குலங்களும் க்ஷத்திரியர்களுடைய பகுப்பைக் குறிக்கவேண்டி புராணேதிகாசங்களில் வகைப்படுத்தப்பட்டதாகவும் பொதுகோக்காய்ப் பாவிக்குமிடத்தில் இம்மூன்று கியவருப்பும் க்ஷத்திரியரென்னும் ஒரு சாதினையேருமித்

கின்றனரெயாலும் இம்மூன்றின் பூர்வர்களாகிய சோமசூரியாக்கினியென்னும் மூச்சுடரும் க்ஷத்தமக்குரிய தர்மாதிகளில் பெரும்பாலும் தாயகமாகிய ஒன்றிலேயே ஊக்கமுள்ளவராகப் பிரத்தியட்ச பாவனைக்குத்தோன்றுவதுமல்லாமல் சாத்திரசுத்தப்பங்களிலும் இவ்வகையத்தாலும் கூறப்பட்டுள்ளமையாலும், ஆதேயங்களாகிய மூக்குணத்தையும் சோக்குமிடத்தும் கொள்வன சொற்பன போஜனுதிகளில் ஒரு நிலையும் பேதமின்றி மருவி வருகலாலும் பொதுப்பட பாவிப்பாருக்கு மூச்சுடரும் ஒருகுடியென்றும் மூக்குலமும் ஒருகுலமென்றும் தெள்ளிதில்விளங்கும். எங்ஙனமெனில் ஆதிபர்வம் காண்டவதகனச்சருக்கம் 231வது அத்தியாயம் மத்தப்பலன் என்னும் முனிவர் அக்கினிதவனைத் துதிக்கும் சுலோகத்தில்

"அக்கி தேவனுடைய தேவரீரே சூரியனும் சந்திரனும் வாயுவும் இரட்டையாகிய அஸ்வனிதேவதைகளுமாக இருக்கின்றீர்" என்று கூறியுள்ளமையாலும் ஷை வனபர்வத்திலே (ஆரண்யபர்வத்திலே) 3-வது அத்தியாயத்திலே (உயர்ந்த ஆதமார்த்தத்தையுடைய பிரதையின் புத்திரனுக்குத் தௌமியர் சொன்னவாறு) பிரம்மப்புரோக்தமாய்ச் சூரியனுக்குள்ள அஷ்டோத்திரசத (108) காமத்தை வைசம்பாயனர் ஜனமேஜெயனுக்குச் சொல்லிவருங்கால் சூரியனைச் சோமன் என்றும் வன்னியென்றும் கூறப்பட்டிருப்பதாலும் சூரியசந்திராக்கினிகள் மூவரும் ஒரே அம்சமுடையவரென்கிற விடயம் மறுக்கப்படாதொழிந்தமை காரண, அன்றி இம்மூவரும் ஒருவரேயானுலும் பிரகாசதாரதம்மியம்பற்றி மூவராக ஆங்காங்கு பிரித்துரைத்தனரேயன்றி வேறன்று.

இத்தினவனக்கத் தமிழ்ப் பாரதம் ஆதிபர்வம் யயாதிச்சருக்கத்தில் சந்திரன் உற்பத்தியைக்கூறுமிடத்துச்சந்திரனுக்கு பதினுறுகலைகளையுடையவனென்றும், அக்கலைகளேத்தனது தினேதினுலே சூரியனுக்கு முறையே கொடுத்துப் பின் மூன்றாமே பெறுவானென்றும் அன்றியும் அச்சந்திரன் அத்திரிமுனிவரது முகத்திலும், அழகிய அங்கியிடத்திலும் உற்பவித்தவனென்றும், கூறப்பட்டிருக்கிறது.

பத்திரட்டியிலீரண்டொழிந்த பல்கலேயோன்
மித்திரர்க்கவைகொடுத்தும்பின் மீளவுங்கவர்வோன்
அத்திரிப்பெயர்த்தனனம் பகந்தனிலுஞ்
சித்திரக்கணன்முகத்தினும் பிறந்தொளிதிகழ்ந்தோன்.

அன்றியும்மஹ ஆதிபர்வம் காண்டவதகனச்சருக்கத்தில் அருணனென்று சொல்லத்தக்க வெவ்விய அக்நி சோமரூபியாகியும் சூரியன் (தன் தாய்க்மாகிய) அக்நியோடு ஐக்யமானதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது,

"அருணவெங்கணலொன்கனலொடெலந்தான்."

என்று கூறப்பட்டிருப்பதினாலும் சோமசூரியாக்நியென்னப்பட்ட மூன்றும் ஒன்றெனவிளங்குகின்றதுமன்றி சூரியன் சந்திரன் ஆகிய இருகூடருக்கும் அக்நியே மூலதாரமாயிருக்கின்றது.

இம்மூன்றியும் சூரியகுலத்தாசரும் சந்திரகுலத்தாசரும் அக்நிகுலத்தாசரும் ஆகிய மூக்குலத்தாசரும் க்ஷத்திரியரே யாதலால் பரஸ்பர சம்பந்த ஐக்கியமுள்ளவர்கள்.

இதற்குத்திருட்டாந்தம்அக்நிகுலம் அல்லது வன்னிகுலஸ்தனுகிய சோளனுக்கும் சூரியகுலஸ்தனுகிய சோழனுக்கும் சந்திரகுலஸ்தனுகிய பாண்டியனுக்கும் சம்மதருண்டென்பதைப்பின் கூறப்போகிற விஷயங்களால் யூகித்துணரலாம்.*

இப்போது அக்நிவம்சம் என்பதற்கு மேலே தமிழில் நூலாசிரியர்களால் திறப்பாக வழங்கப்படும் வன்னிகுலமென்னும் மொழியானது தன்னுல் சூசிக்கப்படும் பொருள் ஒற்றுமையினாலும் பிரயோகமரபினாலும் பொதுவாய்ச் சிற்சில பிரயோகங்களில் அரசர் அல்லது க்ஷத்திரியர்களையே குறிக்கின்றது. வன்னியகுலம் என்னும் சொற்றொடர் ஆதியில் அக்நியினிடமாக உற்பவித்த அரசகுலத்தவருக்கு வழங்கப்பட்டு பின் அரசருக்குப் பொதுப்பெயராகவும் சிற்சில பிரயோகங்களில் வழங்கப்பட்டு வருகின்றது.

* சிவர்ன்டு உல்லியம் டெய்லர் எழுதிய பாண்டியன் சரித்திரம் இரண்டாவது வால்யம் 55-வது பக்கத்தில்; சோ சோழ பாண்டியர்கள் அக்நிகுலத்திலும் சூரிய குலத்திலும் சந்திரகுலத்திலும் உற்பவித்தார்களென்று புராணங்களில் சொல்லப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் அக்நிகுலத்திலுதித்த சஹோதரத்வமுடையவர்களே என்று கூறப்பட்டிருக்கின்றது.

வன்னியென்னும் பதமானது அக்நிதேவற்கும் அக்நிகுலம், சூரியகுலம், சந்திரகுலம், என்னப்பட்ட முக்குல தாசர்களுக்கும், பொதுவாய் அரசருக்கும் நூலாசிரியாகளால் வழங்கப்பட்டுள்ளதற்கு மேற்கோள்.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம் ஆதிபர்வம் காண்டவ தகனச்சருக்கம் 75-வது கவி.

அன்புடனருந்தியதாமுங்குளிர்ந்தான்வன்னிதன்
வடிவமுங் குளிர்ந்தான்.

கல்லாடபின்னேபாரதம் ஆரண்யபருவம் குமாரசம்பவச் சருக்கம் 8-வது கவி.

கோலவன்னிகைதீதனச்சில
குறித்துமீளவிதுகூறினன்.

இங்கு வன்னியென்பது அக்நிதேவனையுணர்த்திற்று.

வில்லிபுத்தூராழ்வார்-பாரதம் சபாபருவம் இராஜசூயச்சருக்கம் 3-வது கவி.

பருதியுமதியும் வன்னியும் முதலாம்
பலவகைக்குலத்துமுற்பவித்த

என்பதிலும்,

மஹாகவியாகிய கம்பரியற்றிய செம்பொற்சிலையெழுபது 8-வது கவி.

சிலம்பினிற்றிறல்கூர் வன்னியர் சிலையன்றிச்
சிலைமற்றுண்டோ.

என்பதிலும்,

இருவாட்சிப்புலவர் திருவாய்மலர்ந்தருளிய திருக்கை வளத்தில் 1 வது கவிவெண்பா.

"சோரும் வன்னிதலச் செல்வர்முடி தரித்துப்
பாராளச்செங்கோலேப்பற்றுங்கை"

என்பதிலும்,

வன்னியென்பது அக்நிகுலத்தரசரை யுணர்த்திற்று.

கருணாகரத்தொண்டை வன்னியனர் சதகம்.

24-வது கவி.

"எதிர்க்கும்புகழ்க்கச்சியேகாம்பரச் சம்பெனுந்தமிழால்
பொதிக்குப்புலிசொடியான்புகழ்பெற்றபுலமையெல்லாம்
தனைக்குமதனப்புறத்துத்தெரிந்திடுந்தன்மைகண்டேன்
மறைக்குவரோதுங்கருணாகரத்தொண்டை வன்னியனே."

இக்கவியில் சூரியகுலத்தரசனுகிய சோழனுக்கு வன்னிய னென்னும் பெயர் வழங்கியது காண்க.

கடிகை முத்துப்புலவரியற்றிய திக்குவிஜயம்.

"மிரவுதினையுதித்திக்குவிஜயவிலாசம்புரிந்துமேவாரெல்லாம்"
"பரவுவருணராமபாண்டியவன்னியன்புகழைப்பரிந்துகூற" [ன்"
"வேந்தன்வருணராமபாண்டியவன்னியனுக்கேவிஜயஞ்சொன்னே

இக்கவிகளில் பாண்டியனுகிய சந்திரகுலவரசனுக்குவன் னியனென்னும்பெயர் வழங்கியதுணர்க.

கல்லாடம் 40 வது கவி.

* * * * சருமப்பெரும்பயிருலகுபெறவினைக்கு காற்பட்ட வன்னியராக்கிய பெருமான். * * * *

வாதிட்டம் ஐந்தவர் கதை 7 வது கவி.

மைத்தொருபதனராகியமறை தானிறைந்துவிளர்த்ததற்பின்
றந்தையாயிறந்தேகத்தினேற்கவிலத்தல்செய்திக்
கிந்தைசெய்வார்கல்குரவுதீர உயர் வன்னிய ராவோ
மந்தரிலே சந்ருதலிருலதிகல்லேமன்னவராவோம்.

கம்பராமாயணம் உத்தரகாண்டம் இலக்கையெரி யழித்தபடலம் 11 வது கவி.

கொடிமன்னுமாடக்குலமென்னு மயோத்தியெய்திக்
கடிமன்னுவாயிற் கடைகின்றருள்காலநோக்கிப்
படிமன்னி வாழும்பல வன்னியர் மண்டலீகர்
முடிமன்னரெல்லாமுறையே புருக்தேவல்கேட்க.

மேற்கூறிய கவிகள்தோறும் வழங்கிய வன்னியென்னு மொழி அரசனையுணர்த்திற்று.

இதுகாறும் கூத்தநியர் முன்னித திருவிடையால் உற் பவித்தார்களென்றும், இச்சத்திரியர் அக்கி குலிய சந்திரகுலமா கப் பருக்கப்பட்டிள்ளாரென்றும் அக்கினிபுத்திராகிய ஆங் கிரஸனே கூத்தநியருக்கு ஆதியில் மூல புருடராயிருந்தா ரென்றும் அங்காரகன் எனறுமும் வன்னியென்றுமுள்ள ஒரே பொருளைத்தருமாதலால் அக்கி அல்லது வன்னியிடமாகத் தோன்றிய கூத்தநியரை அல்லது அரசரை ஆங்கிரஸனை அல்லது வன்னியனென முன்னோர் கூறியதுபோல பலநூற்க ளிலும் உலகவழக்கிலும் ஆங்கிரஸன்சத்திரியராகிய வன்னி யரை அரசனெனும் அருத்தத்தில் நாவாசரியர்வழங்கிவந்தி ருக்கின்றாரெனன்று நிருபிக்கப்பட்டது.

சேர ராஜ்யத்தின் அரசசத்திரியர்களின் பூர்வோத்தரம்.

பாகவதம், காரதீயம், பவிஷ்யம், ஸ்காந்தம் முதலிய புராணங்கள் அந்தக்கந்பத்தின் விருத்தாந்தங்களைக் கூறும் போது சேர, சோழ, பாண்டிய அரசர்களைப்பற்றி ஆங்கா ங்கு விரித்துரைத்திருக்கின்றன. இப்புராணங்களன்றி இராமா யணம் பாரதம் அரிவம்சம் முதலியவைகளிலும் சேரசோழ பாண்டியவரசர்களின் சரித்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அன்றியும் திரு அவரதி-பேரூர்-சோமகாதேவி மன்னர்கோ வில் முதலிய ஸ்தலபுராணங்களிலும் கேரள மாகாத்மியத்தி லும் கேரள உற்பத்தியிலும் சேர சாஜ்யத்தின் பூர்வோத்தர மும் காஞ்சிமாகாத்மியம் ஆலாலியமாகாத்மியம் முதலியவைக ளில் சேர சோழ பாண்டிய அரசர்களின் பூர்வோத்தரங்களும் கூறப்பட்டிருக்கின்றன. இவையன்றி தேவாரம் திருவாய் மொழி பெரியபுராணம் முதலிய பதி காத்திரங்களிலும்முக் குல வரசர்களின் பக்திசம்பந்தமான விருத்தாந்தங்கள் கூறப் பட்டிருக்கின்றன.

தமிழ்நாடுகளில் சேரநாடு அல்லது கேரளநாடு தென் னிந்தியாவின் தென்பாகத்திலும் மேற்கரையோரத்திலு மிருக்கின்றது. இந்நாட்டின் எல்லையைப்பற்றிக்கூறும் பி மாணம் வருமாறு.

"வடக்குத்தலம் பழனி வாழ்கிழச் செங்கோடு
குடக்குத்திசைக் கோழிகூடாங்—கடற்கரையின்
ஓரமது தெற்காகுமோ ரெண்பதின்காதம்
சேரநாட்டெல்லை யெனச்செப்பு."

என்று ஒருவர் கூறுகின்றனர். மற்றொருவர் வடக்கே பழனியாகவும், கிழக்கே பேரூராகவும் தெற்கே கன்னியாகுமி னியை யடுத்த கடலாகவும மேற்கே அட்டலேபத்த மலைக ளாகவும், சேரநாட்டிற்கு காதபாகெலேகள் கூறி இவற் றிக்கு மத்தியில் ஒன்பதின் காதம் (800 மயில்) விஸ்தாரண முள்ள பூமியிருப்பதாகச் சொல்லுகின்றார். ஆனல் (Dr. A. C. Burnell) பர்னல்துரையவர்கள் மைசூர் கொயம்பத்தூர் சேலம் தென்னாடுகளே தென்மலபார் கொச்சி ஆகிய காடுக ளடங்கியது சேரநாடெனவனை யறுத்துக் கூறுகின்றனர்.

இவ்வனவுப்பாப்புள்ள சோன்ராஜ்யத்திற்குப் பூர்வீகராஜ தானிகள் கரூர், காங்கனபுரம், சேலம், திருவஞ்சிபுரம் முதலியவைகள். கோளகாடு என்பது தமிழில் சோகாடென மறுவியது. இக்காடு கோளன் அல்லது சோன் என்னும் இராஜமோனல் ஆதியில் ஆளப்பட்டமையினல் கோளகாடு அல்லது சோகாடென வழங்கலாயிற்று.

சோன் அக்கி குலத்தானென்றும் அவனல் ஆளப்பட்ட நாட்டைச் சோகாடென்றும் அழைப்பதற்குப் பிரமாணங்கள் விஷ்ணுபுராணம் பாரதம் அரிவம்சம் இராஜன்தான் சரித்திரம் கோள மகாத்மியம் திருவனந்தபுர சரித்திரம் முதலிய புத்தகங்களில் கூறியுள்ளவற்றை ஈண்டு கூடியவரையில் தொகுத்து விளக்குவாம். க்ஷத்திரியர் அல்லது அரசருக்குப் பூர்வந்தொட்டு மூலகாரணமாக வழங்கிவருவது குடிப்பெயரென்றும் கோத்திரப்பெயரென்றும் கூறப்படும்.

இவைகளுக்குப் பிரமாணம் பன்னிரு பாட்டியல் என்னும் புத்தகத்தில்பெயர்பொருத்தம்.

சூத்திரம் 145-146.

"குடிப்பெயராவன கூறுங்காலைச்
சோன் சோழன் பாண்டியனென்றிப்
போல் வனபிறவும் பொருந்தங்கொளலே"
"கோத்திரப்பெயரே கூறுங்காலை
தாதைக்குடிப்பெயரைத் தக்கவயத்தியற்றல்."

என்று கூறியுள்ளபடி குலம் அல்லது கோத்திரம் என்பது மூலபுருஷனை நோக்கி வழங்கும் பிரமாணத்தையனுசரித்து அக்கியிடமாக உற்பத்தியான க்ஷத்திரியர் அக்கி குலத்தாரென்றும் சூரியனிடமாக வுற்பத்தியான க்ஷத்திரியர் சூரியகுலத்தாரென்றும் சக்கிரனிடமாக உற்பத்தியான க்ஷத்திரியர் சக்கிரகுலத்தாரென்றும்வழங்குவார். பின்னர் அச்சக்கதியிலேயே வேறுபுருஷன் பிரக்கியாதி பெற்றிருந்தால் அம்மகாபுருஷனுடைய குலமெனவும் வழங்குவார்கள். சூரிய வம்சத்தில் பிரக்கியாதியடைந்த ரகுவின் பெயரால் ரகுவலமென்றும் காகுத்தன் பேரால் காகுத்தன் குலமென்றும் வழங்கி வருகிறார்கள்.

அக்கிகுலத்தவர் சிலர் சாப்பு, பாத்துவாஜன், கோகான், சோலங்கி பிரமாரா புரியாரா ஆந்திரஸ எனும் மூலபுரு

ஷரை நோக்கி அவர்கள் பெயரால் கோத்திரம் வழங்கி வருகின்றார்கள். சக்திரகுலத்தவர் புரூரவன் குருவென்னும் மூலபுருஷனைநோக்கி அவர்கள் பெயரால் கோத்திரம் வழங்கி வருகின்றார்கள். இக்கோத்திரம் வழங்கிவருதல் போல் குடிப்பெயரும் சோன் குடியென்றும் சோழன் குடியென்றும் பாண்டியன்குடியென்றும் அரச பரம்பரையாரும் ஏனையவருணத்தவரும் தத்தங்குடிப்பெயனாத் தொன்று தொட்டு வழங்கி வருகின்றனர்.

கோன் அக்கிகுலத்தானென்று மேலே காட்டிய பிரமாணங்களால் தன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. இச்சோவானது பூர்வவம்சாவளியினையும் அக்கிய மூலபுருடனை வேறுபடுகின்றது எங்ஙனமெனின்.

கோளன் அல்லது சோன் அக்கியின் பரம்பரையில் வந்தவனென்பதற்கு வம்சாவளிவருமாறு.

பிரம்மரவினிடமாக அக்கியும் அக்கியினிடமாக * சக்திரனும் உற்பத்தியானார்கள். சக்திரன் குமாரன் புதன் புதனுக்கு புரூரவன் புரூரவனுக்கு ஆயு ஆயுவுக்கு ராகுவின்மகளால் நகுஷன, நகுஷனுக்கு யயாதி யாயதிக்கு சுக்கிரன் மகளாகிய தேவயானியால் யதுவும் தூர்வசுவும், விருஷபருவாவின் மகளாகிய சர்மிஷ்டியால் தருகியும் அனுவும் புருவும் ஆகிய ஐவர் புத்திரர் பிறக்கார்கள். இவர்களில் புரு ராஜாதிபதியாகவும் தூர்வசு தென்இராஜ்யத்திற்குச் சிற்றாசனுகவும் ஆனர்கள். அனுவிற்கு மூன்று குமாராகள் பிறந்தார்கள். அவர்களின் சந்ததியில் அங்கன் வங்கன் கலிங்கன் பவுண்டரன் என்னும் குமாரர்கள் பிறந்தார்கள். அவர்கள் பெயரால் அந்நாடுகள் வழங்கப்படுகின்றன. தருவக பாகத்திற்கு வந்த இந்தியாவின் தெற்கு இராச்சியம கலிங்கம் கோளம் சோழம் பாண்டியம எனப் பிரிவுற்றன.

இதற்குப்பிரமாணம் அடியிலகூறிய ஹரிவம்சம் 32-வது அத்தியாயத்தில் 113முதல 122வதுவரையிலுள்ள சுலோகங்களில் காண்க.

இதற்குப் பிரமாணம்.

* (சந்திரன்) "அத்திரிப்பெயரத்தானனம்பகத்தனிலும்
சித்திரக்கனன் முகத்தினும் பிறந்தொளி திகழ்தோன்."

దుర్వసోస్తు ప్రవక్ష్యామి, ద్రుహ్యాన్నాన్నోర్యదోస్తథా।
సుతస్తు దుర్వసోర్వహ్నిర్వహ్నేర్భోజరాట్సుజ॥
గోభానూమ్మమతోరాజా త్రైసానురవరాజిత॥
కరంధకస్తు త్రైసానూ ర్వరుథస్తస్యచాత్మజ॥
ఆవ్లస్త్వవీక్షితోరాజా మరుత్తశ్చకథప్రయా।
అనవర్ధ్యధవక్రాచా యశ్వావిఫల దక్షిణ॥
దుహితాసుతాతాసూ తప్యాస్స్త్రీపృథివీపతేఃి
దక్షిణార్థం ప్రజైదత్తా సంవర్తాయమహాత్మనే॥
దుష్యంతం పారవంచాపి జిథేళ్ళత్రమకల్పయత్।
ఏవంయయాతేశ్శాపేన జరాసంక్రమణేతథా॥
పారవంతుపసోర్వంశ్యం ప్రవిశేన్నృపోత్తమ॥
దుష్యంతస్యతు వాయాదం కరుథామం ప్రజేశ్వర॥
కరుథామాత్తథాదీక్షి చత్వారస్తస్యచాత్మజా॥
పాండ్యశ్చ కేరళశ్చైవ చోళశ్చోర్వరపార్థివ॥
వేసాంజ వదాసీత్తా పాండ్యోపాస్యకేరళా॥

இத்தகுலோகங்களில் துர்வசுக்கு வன்னியும் வன்னிக்கு கோபானுவும் கோபானுக்கு நிவிசானுவும் நிசாசானுவுக்கு கர்த்தமனும் கர்த்தமனுக்கு மருத்தும் பிறந்தார்கள். மருத்து வென்கிற அரசனுக்குப் புத்திரசந்தானமில்லை. ஆனால் சம் மதை யென்கிற வொரு புத்திரி பிறந்தாள். பின்னர் இவ்வர சன் சிறந்த வொரு யாகஞ்செய்து அதில் - ருக்விக்களுக்குத் தன்னு திரவியங்கள் யாவையும் தட்சணையாகக் கொடுத்து விட்டுபின்புலம்வர்த்தவர்என்கிற ருத்துவிக்குக்குத்தட்சணை கொடுக்க பொருள் இல்லாதலைனால் தன்னு புத்திரியாகிய சம் மதையை தட்சணையாகக்கொடுத்தான். அத்தப்புத்திரிபுருத்த வம்சம் (அதாவது சம்வர்த்தருடைய) புரோவ வம்சத்தைச் சேர்ந்தவளானுள். இவ்விருவர்களுக்கும் திஷ்பக்தனென்கிற இராஜகுமாரன் பிறந்தான். இவன் மீமாம்சா சாஸ்திர விதிப் படி மருத்தனைத்தப்பௌத்திரனுனதால் இவனை மருத்தன் விகார புத்திரனுக அங்கீகரித்தான். இத்தகஷ்யத்தனுக்கு கருத் தாமனும் கருத்தாமனுக்கு ஆக்ஷீடனும் பிறந்தார்கள். இத்த ஆக்ஷீடனுக்கு பாண்டியன் கேரளன் சோழன் கலிங்கன் என

நான்குபேர் குமாரருண்டு. இவர்கள் ஆண்டகாட்டிற்குப்பாண் டியரதென்றும் கேளரதென்றும் சோழரதென்றும் கலி ங்கரதென்றும் தத்தம் பெயர்களாலேயே பெயர்கள் வழங்க ப்பட்டு வந்தன.

டாட் இராஜஸ்தான் சரித்திரம், 1-வது அதிகாரத்தில்

"The four grand sons of Dushianta, Kalingar, Keral, Paund, and Chowal gave their names to their countries"

"Of the second, Keral, it is only known that in the list of 36 Royal races in the twelth century the Keral makes one" * * * * *

துஷ்யந்தனுடைய பேரப்பிள்ளைகளாகிய கலிங்கன், கேரளன், பாண்டியன் சோழன் ஆகிய நால்வரும் தம் தம் ஆண் டாராசிபங்களுக்குத் தங்கள் பேரையே கொடுத்தார்கள்.

இரண்டாவது சொல்லப்பட்ட கேரளன் பன்னிரண்டாம் நூற்றாண்டிலுள்ள 36 அக்கிகுல ராஜர்களில் ஒருவர் என்று குமாரபால சரித்திரத்தில் விளம்பியவாறு டாட் என் பவர் தமது ராஜஸ்தான்சரித்திரத்தில் கூறியிருக்கின்றார்.

மேற்கூறிய பிரமாணங்களால் சேரன் அக்கிதுஷ்கரசன் அல்லது வன்னியருஷ்கரசன் என்றும், அவன் தேசத்திற் குச் சேரரதென்றும் விளக்கப்பட்டது. வன்னியின் சக்த தில் வர்த்தமையால் சேரன் சந்ததியார் வன்னியரென்று வழங்குகின்றார்கள்.

அக்கியின் சந்ததியில்வந்த சேரனுக் சிலர் சந்திரனை கோதிச் சந்திரகுலத்தானைனும், சூரிய குலத்தில் உதித்த சுதஷ்ணையினை (பின்னர் சாபத்தால் பெண்ணுருவான ஸ்ரீ) கோத்திச் சூரிய குலத்தானென்றும் சரித்திரக்காரர்கள் பகர்ந் திருக்கின்றார்கள். இமயமலைச் சிகரமுத்துத் நிவா காத்தில் சேக்கனரும், திருவிளையாடற் புராணத்தில் பாண் சோதிமுனிவரும், தமிழ்ப்பாரதத்தில் வில்லிபுத்தூர் ஆழ்வா ரும் சேரனை அக்கிகுலத்தானென்றும், சோழனைச் சூரியகு லத்தானென்றும் பாண்டியனைச் சந்திரகுலத்தானென்றும் கூறியிருக்கின்றனர்.

மேற்கூறியவாறு சேர சோழ பாண்டிய இராஜர்களாகிய தமிழ்காட்டரசர்கள் பரதகண்டத்தின் தென்பாரிசத்தில் திரேதாயுகத்தில் தங்கள் இராச்சிபத்தை நிலைகாட்டினர்கள். திரேதாயுகத்தில் பரசுராமனுக்கும் கார்த்த வீரியார்ச்சுனன் சந்ததியாருக்கும் கடக்த யுத்தத்திற்குப் பின்னிட்டுப் பரசுராமன் கோளகாட்டிற்கு வந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. மேலும் துவாபரயுகத்தின் முடிவிலும் கலியுக ஆரம்பத்திலும் கோளகாடு செழித்திருந்ததாகவும் பாரதயுத்தத்தில் கோளாதிபதி பாண்டவர் பக்கத்தில் யுத்தஞ்செய்ததுமன்றி யுத்தத்தில் போர்புரிந்த பாண்டவ சைன்னியங்களுக்கு உணவு அளித்ததினால்பெருஞ்சோற்றுதியன் என்னும் பெயர் பெற்றதாக அடியிற்கூறிய பிரமாணத்தால் விளங்கும், இத்தியாதி நியாயங்களால் கோளகாடு தொன்றுதொட்டுள்ள காடென்றும் தமிழ் காட்டரசர்களாகிய முக்குல அரசர்களில் சேரன் அக்கிகுலத்தானென்றுநிதரிசனமாகின்றது.

மேலெழுதிய 43-44-வது பக்கத்தில் பிங்கலம் திவாகரம் இவைகளில் சேரன் சோழன் பாண்டியன் என்னும் மூன்று அரசர்களின் பெயர்கள் கூறுஞ் சூத்திரங்களில் சேரன் அக்கி குலத்தானெனவுரிய * "உதியன்" என்றும், சோழன் சூரிய குலத்தானெனவுரிய "சூரிபன்" என்றும், பாண்டியன் சந்திரகுலத்தானெனவுரிய (சந்திரகுல குரு குலத்தானெனப் பொருள்பட) கௌரியனென்றும் விளக்கப்பட்டிருக்கின்றது.

12-ம் திவாகரத்தில் கூறியுள்ள தசாங்கத்தின் பெயர்— "ஆறுமலையும் யானையுங் குதிரையு காடு மூருங் கொடியுமூர சுந்தாருந் தேருந் தசாங்கமெனப்படுமே" என்று வகுக்குள்ளபடி சேரனுக்குரிய தசாங்கங்கள் (1) பொருனையாறு (2) கொல்லிமலை (3) யானை (4) பாட்டலம்பரி (5) வஞ்சிகாடு (6) கருவூர் (7) விற்கொடி (8) முரசு (9) போக்கின்மாலை (10) தேர். (போக்குயென்பது பூனை.)

முன்வைகுந்தை யொக்க பாரத யுத்தத்தில் பாண்டவர்பக்கம் நின்று உதவிபுரிந்த சேரலாதனன் என்னும்

* உதியன் என்னும் பதத்திற்குச் சிலர் அக்கியென்றும் சிலர் அக்கியின் குமாரனை அங்கிசன் புத்திரர் எண்மரில் உதத்தியன் என்னும் பெயரின் திரிபே உதியனெனத் தமிழில் மருவியதென்கிறார்கள்.

பெருஞ்சோற்றுதியனுகிய சேரன்மீது முதற்சங்க புலவர் மூஞ்சியூர் முடிநாக ராயர் பாடிய புறநானூறு 9-வது செய்யுளில் கூறுவதாவது,

"அவிங்குளைப்புரவியையல்லோதெவினை
நிலந்தலைக்கொண்ட பொலம்பூந்தும்பை
ஈனம்பதின்மரும் பொருகளத்தொழியப்
பெருஞ்சோற்று நிகுபதம் வரையாது கொடுத்தோய்.

என்று கூறியதில் இச்சேரனுகிய பெருஞ்சோற்றுதியன் அப்போர் மூண்டுத் தினையும் உணவளிக்குஞ்செயலில் பெற்றமையால பெருஞ்சோற்றுதியன் எனுமப் பெயர் வழங்கப்பட்டது.

அன்றியும் அகநானூற்றில்

"* * * உதியஞ்சேரற் பெருஞ்சோறு கொடுத்தநானாளை"

யென்றும் சிலப்பதிகாரத்தில்

"ஓவாவீ ரம்பதின்மருட னெழுத்த
பேரிற் பெருஞ்சோறு போற்றுது காணிச்சேரன்"

என்றும் பண்டைகாலத்துப் புலவர்கள் பெருஞ்சோற்றுதியனைப் பாடியிருத்தலால் சேரவரசர்கள் பூர்வத்தில் பெருமையுற்றிருந்தனரென்று மேற்காட்டிய பிரமாணங்களால் விளங்குகின்றது.

பாண்டவர்பக்கம் நின்று போர்புரிந்த பெருஞ்சோற்றுதியனுகிய சேரனுக்குப்பின்னர் அனேக சேரர்கள் சேரராஜ்யபரிபாலனஞ்செய்து புரிந்தார்களெனினும் அவர்களது பெயர்களையும் பிரபாவங்களையும் கிரமப்படி கூறுதற்குப் போதிய பூர்வ சரித்திரங்கள் இன்னும் வெளிப்படவில்லை. ஆயினும் கலியுகம் பிறந்த நாலாயிரம் ஆண்டுவரையில் 48 சேரவரசர்கள் அரசுபுரிந்தனரென்று திருவஞ்சைபுர சரித்திரத்தில் வரையப்பட்டிருக்கின்றது. அவைவருமாறு.

1	யதுகுலசேரன்	8	
2	வஜ்சதுக்க சேரன்	9	பலிக்கொடி பரித்த சேரன்
3	மறுமுறை கடந்தியசேரன்	10	எல்லைகரை கண்ட சேரன்
4	வீரபிரதாப சேரன்	11	இராஜ கம்பீர சேரன்
5	விக்கிர மதேஜேவர சேரன்	12	இராஜமார்த்தாண்ட சேரன்
6	சிபுருலாட்சய சேரன்	13	இராஜாஜேஜ்வர சேரன்
7	சாமசார்த்தூல சேரன்	14	இராஜ பிரதாப சேரன்

15	மன்றில் மணியிட்ட சோன்	32	பாஸ்கரபாலு சோன்
16	மும்மூர்த்தி சோன்	33	அட்சயபாத்திர சோன்
17		34	வெதர்மோத்தமராஜ சோன்
18	ஆனந்த குண சோன்	35	சிவகேச சோன்
19	வம்ச மீனாம்ப சோன்	36	சிலோத்பால சோன்
20	மங்கள சரண சோன்	37	தெய்வகுஞ்சர சோன்
21	தகவிஸ்தார சோன்	38	சித்துலருண சோன்
22	வரகுணேற்பால சோன்	39	திரிசேதார சோன்
23	ஆசிரமநிலயிட்ட சோன்	40	திரிதேசாங்க சோன்
24	அதுபுதி சோன்	41	ஆதலைபிதாப சோன்
25	அவர சோன்	42	அகணிதகீர்த்தி பிரதாபசே
26		43	வீராராஜேந்திர சோன் [ன்
27	சிவபாத சேகரசோன்	44	பீமேஸ்வர சோன்
28	திருநீற்று சோன்	45	நிர்பல சோன்
29	எழுநிசா சோன்	46	பஞ்சாட்சர சோன்
30	மெய்ப்பொருள் சோன்	47	காத்த பரண சோன்
31	பாணர்க்குநிதிதந்த சோன்	48	

இப்பெயர்கள் 8 17-26-48-எண்களின் பெயர்கள் பூர்வ ஏட்டுப்பிரதியில் எழுத்துகள் பறைப்பட்டமையால் விடப்பட்டனவென்று கூறியிருக்கின்றது.

இவ்வரசர்களின் பின் சுமார் ஒன்பது நூற்றாண்டுவரையில் ஆண்ட அரசர்களின் சரித்திரங்களும் பெயர்களும் கூறப்படவில்லை. நிமளாம் ஜெபான் முதலிய தேசங்களின் பூர்வ சரித்திரங்களில் அரசர் பெயர்களையும் சரித்திரங்களையும் காலவளவுடன் வரையறுத்திருத்தல்போல் இப்பிரதகண்டத்தில் பெருப்பாலும் இயம்பப்படி கூறியில்லை. ஆனால் பிரபல புகழையும் பேற்றையும் பெற்ற அரசர்களின் பெயர்களைமட்டும் ஒருவாறுகக் காலத்தைக் கணித்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

சேர அரசர் பரம்பரையில்வந்த கூத்திய நிரடவிருத மகாராஜனின் அருமைத் திருக்குமார குலசேகரப் பெருமாள் அல்லது குலசேகர ஆழ்வாரென்பவரும் அழற்குலாதிபா கலியுகாதி 1860-ம் ஆண்டு பிரபவாதி 28-க்குமேல் மாதி புனர்பூசத்தில் திருவஞ்சிக்களத்தில் அவதரித்தாரென்று சரித்திரம் கூறுகின்றது. இவரைக்குன் மனுநீதி கோடாது பிரபலமாக அரசு புரிந்தவர். பின்னர் விஷ்ணுபக்தராய் ஸ்ரீ ராமரின்மீது மாறாத அன்புடையராயிருந்து ஸ்ரீரங்கம் திருவேங்கடம் முதலிய திவ்விய தேசங்களினித்தல வைணவ சேதனர்கள் உய்யும்பொருட்டு அனேக பாசுரங்களைத் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர்.

"செந்தழலோன்" மரபில் அவதரித்த சேரர் குலாதிபதியாகிய குலசேகரப்பெருமாள் திருவாய்மலர்ந்தருளியதிராவிட வேதமாகிய நாலாயிரப் பிரபந்தத்திலே சேரசோழ பாண்டிய வமிசத்தவர் மூக்குலமாய்ப் பிரிவற்றிருந்தபோதிலும் ஒருவம்சத்தவராகக் கருதிக்கூறப்பட்ட பாசுரங்கள் வருமாறு.

க-வது திருவிரியிச் சூடாமணி.

அழகிய மணவாளன் விஷயம் 11-வது பாசுரம்.

"திடர்வினங்கு தனாப்பொன்னி நடுவுபாட்டுத்
திருவரங்கத்தரவணையிற்றுயின்றிகொள்ளுந்
தடல்வினங்குகருமேனி யம்மான்றன்னைக்
கண்ணாரக்கண்டுகேட்கும் காதல்கண்ணுள்
கொண்டவினங்கு விதற்றுனைக்கொற்றவொள்வாட்
கூடலர்கோன் குடைக்குலசேகரன் சொற்செய்த
கண்டவினங்குதமிழ்மாலைபத்தும் வல்லார்
கலந்திகழ் வானவரடிகீழ் நண்ணுவாரே"

உ-வது தேட்டருந்திறல் 10-வது பாசுரம்.

அல்லிமாமலர் மங்கைகாதனரங்கன் மெய்யடியார்கன்தம்
எல்லேயில்லமைத்திரத்தினி லென்று மேவுமனத்தனும்
கோல்லிக்காவலன் கூடலாயன் கோழிகோன் குலசேகரன்
சொல்லினின்றமிழ்மாலைவல்லவர்தொண்டர்தொண்டர்களாவரே.

10-வது அல்லைமேதகு

நிலைலைகாத்திருநித்தசூடுதன்னுள்
திறல்வினங்கு மாருதியோடமர்ந்தான் றன்னை
வெல்லியித் சித்தயர்தன்றன் மகளுத்தோன்றிக்
கதுமுதலாத் தன்னுலகம் புக்கதோரு
சொல்லியலும் படைத்தானைக் கொற்றவொள்வாட்
கோழியர்கோன் கொடைத்துலசேகரன் சொற்செய்த
நல்லியலின் தமிழ்மாலை பத்துமல்லார்
நலந்திகழ் வானவரடிகீழ் நண்ணுவாரே.

இப்பாசுரங்களில் "கூடலர்கோன்" எனபது சுத்திரகுல வசனமென்பதாயும் கோழியர்கோன்என்பது சூரியகுலம் அல்லது சபுதலவசனமென்பதாயும், கோல்லிகாவலன் என்பது அந்தி அல்லது வசனிருஷவசனமென்பதாயும் இருப்பதால்

குலங்களுக்கும் குலசேகரப்பெருமாள் உரிமையுடையவரா யிருத்தலால் கூடலர்கோன் என்றும் கோழியர்கோன் என்றும், கொல்லிநாயகன் என்றும் பதமின்றிக் கூறியுள் ளார். கூடல், பாண்டிபவிராச்சியத்தின் பிரதானகரமாகிய மதுரை. கோழி, சோழவிராச்சியத்தின் பிரதான கரமாகிய உறையூர். கொல்லி, சேரவிராச்சியத்தின் பிரதான கரமா கிய கருவூர்.

இவ்வன்றியும் வன்னிகுலத்தரசரான குலசேகரப்பெரு மாள் சக்திரவம்சமானயது வமசத்தில் திருவவதாரஞ்செய்த கிருஷ்ணமூர்த்தியை "எந்தன் தலைபெருஞ்சுடரே" என்றும் கிருஷ்ணனை வளர்த்த தந்தையாகிய இடையர்குலத்தன்பெற் றபுகழ் கிருஷ்ணனுக்குச் சொந்த தந்தையாகிய "நந்தகோபன் வசுதேவன் பெற்றிலனே" என்றும் 98-வது பக்கத் தில் காட்டியுள்ள மே பெருமாள் பாசுரத்தில் காண்க.

8-வது மண்ணுப்புழ்

கண்ணபுரத்தெரிவிர் காருத்தன் தாலாட்டு 3-வது பாதரம்

கொங்குமலி கருங்குழலாள் கோசலை தன்குலம்தலாய்
தங்குபெரும் புகழ்ச்சனகன் றிருமருகாதாசரதி
கங்கையிலுந் தீர்த்தமலி கணபுரத்தென் கருமணியே
எங்கள்குலத்தினமுதே யிராகவனே தாலேலோ

இப்பாசுரத்தில் சூரியகுலத்தில் அவதரித்த ஸ்ரீ ராமனை யெங்கள் குலத்தின்னமுதே யிராகவனே என்று வன்னி குலத்தில் வந்த குலசேகரப்பெருமாள் தமது பாசுரத்தில் கூறுவதால் சூரியகுலமும் அக்கினிகுலமும் பெயர்மாத்திரை யால் வித்தியாசமேயன்றி யொருகுலமென்றே விளங்கும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன்னர் அரசுபுரிந்த குலசேகரப்பெருமான் அருளிய பாசுரங்களில் முக்குலங்க ளுமொன்று என்று பொருள்படும்படி கூறியிருத்தலையறி யாராகிய கிறிஸ்துமதமதமேதானிகளில் சிலர் வடக்கேயிருந்து வந்த ஆரிய பிராமணர்கள் அக்கினிகுலமென்றும் சூரியகுல மென்றும் சந்திரகுலமென்றும் தென்நாட்டே ஆசனைக் கூறி கட்டுக்கதை கட்டிவிட்டார்களென்று கதந்த கிரந்தங்களில் ஆதாரமின்றிக்கூறியிருக்கின்றனர். இக்கூற்றை நம்பி சில ஆந் திர திராவிட கவிகள் மதிமயங்கினர். ஜாதியபிமானமது ஐ

யாயிரம் வருடங்களுக்கு முற்பட்டே இந்தியாவின் தட்சணபா கமாகிய சேரசோழபாண்டிய விராச்சியங்களில் இருந்தவென் றும் பலவகையான பிரபலபிரமாணங்களைக்கொண்டு நியாய யலாய் நிரூபித்து காட்டினும். தென்மொழியின் உண்மை ணரா புறச்சமய பாதிரிமார் கூறுவதே முக்கிய பிரமாண மாக மதித்து அன்னியரில் பெரும்பாலர் மனக்கிமாறல் வரவர்கள் மதிமயக்கேயன்றி வேறல்ல.

இவ்வாழ்வார் 57-வருஷம் ஜீவதிசையோடிருந்து திரு நெல்வேலியிலுள்ள பிரம்மதேசசந்தானுக்கார் அம்பா சமுத்திரத் தையபிஷேக மன்னர்கோயிலென்னும் திவ்விய க்ஷேத்திரத்திலி ருந்து திருநாட்டுக்கேகினர். இப்பெருமான் எல்லா விஷ்ணு ஆலயங்களிலும் விக்கிரக ரூபமாக வெழுந்தருளி நிருகூத் திரசாத்துமறையாதி உற்சவங்களுங் கண்டருளுவது பிரத்தி யக்ஷம்.

ஷே குலசேகரப்பெருமாள் சம்பந்தமாக பலசாலைகள் மன்னர்கோயிலின் மதில்களிலிருக்கின்றன. இவரிடத்தில் சோழபாண்டிய வரசர் மிக்க மரியாதையோடு அன்பு பாராட் டிவந்தனர். இவ்வரசருக்குப்பின்வந்த சேரர்கள் பெயர்கள் கிரமமாய்ச் சொல்லப்பட்டிலவே.

இற்றைக்கு 1770-வருடங்களுக்கு (கி.பி. 136) முன்னர் சேரராஜியத்தில் வஞ்சிநகரத்திலிருந்து அரசுசெய்த சேலா தன் என்னும் அரசன், இவ்வரசனுக்குப்புத்திரர்செங்குட்டுவன் இளங்கோவென இருவரிருந்தனர். இளங்கோவடிகள் துறவுபூண் டபின்னர் சிலப்பதிகாரம் என்னும் காவியஞ்செய்தவர். இவ ரது தமையன் செங்குட்டுவனென்னும் சேரன் கோவலன் நாயகியாகிய கண்ணகிபார்க்குக் கோயில் கட்டுவித்து திருவி ழாக்கொண்டாடியவன். இவன் வடநாட்டு ஆரிய மன்ன னைச் செயித்துச் சிறைபிடித்தவன் என்று சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

கலியுகாதி 3412-(கி-பி 311) வீரகேரள வம்மானவர் சான்திரவிதிப்படி பிராமண ஆசாரியரால் முடிசூட்டப்பட்டு கிரிகிடாதிபதி குலசேகரப்பெருமாள் என்கிற பட்டங்களை யடைந்தார். இவரால் கலாபுருஷதானமும் இரணியகர் தானமும் செய்யப்பட்டது.

சேரவமச பரம்பரையில் செந்தழலோன் மரபில் திரு வஞ்சிவளநகரில் அரசபுரிந்த சேரமான் பெருமான் சிவபக்தி மேலிட்டு தனது அரசாட்சியையிட்டு துறவுபூண்டு வன் றொண்டரான சுந்தரமூர்த்திநாயனாரோடு தோழமை கொண்டும், இருவரும் மதுரைமுதலிய பல க்ஷேத்திரங்களைத் தரிசித்துப்பின்னர் கயிலைக்கேகி அங்கு இவரால் செய்யப் பட்ட பொன்வண்ணத்தந்தாதி ஆதி உலா இவைகளை அரு கேற்றியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அருணகிரிநாத சுவாமிகள் திருவாவினன் குடியென்கின்ற பழநியில் திருவாய்மலர்ந்தருளிய முதற்பாகம்

94-வது திருப்புகழ்.

காதலிந்துக லாதிமோகம
வேதமந்த்ர சொருபாமோகம
ஞானபண்டிதஸமீகமோகம் வெகுகோடி.
காமசம்புகு மராகமோகம
போக ஜந்திரிபாலாகமோகம
நாகபந்தம யூரா கமோகம பரகுரா.
சீததண்ட விகோத நமோகம
கீத இன்னிளி பாதா கமோகம
தீரசம்பரம வீராகமோகம ம விராஜ.
தீபமங்கள ஜோதிகமோகம
தூய அம்பலலீலா நமோகழு
தேவருஞ்சரி பாரா கமோகம அருள்தாராய்.
ஈதலும்பல கோலாலபூஜையும்
ஓதலுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையு மறவாத.
வந்தலம்புகழ் காவேரியாவினீ
சோழமண்டலமீதே மலேரை
ராஜகெம்பீரனாடாளுராயக வயலூர.
ஆதரம்பயிலாரூர் தோழமை
சேர்தல்கொண்டவரோடே முனிவினில்
ஆடல்வெம்பரியீதேறி பாகயி லேயிலேடி.
ஆதியந்தவுலாவாசபாடிய்
சேரர் கொங்குவைகாவூர் களுடனில்
ஆவினன் குடிவாழ்வான தேவர்கள் பெருமானே.

அருணகிரிநாதசுவாமிகள் பிரபுடதேவ மகாராயர் அரசு செய்தகாலத்தில் இருந்தவர். இவர் சோணாட்டைச்சேர்ந்த பழ

நியில் திருக்கோயில்கொண்டெழுந்தருளிய முருகக்கடவுளுடைய திருப்புகழ்ப்பாடும் இப்பாட்டில் அகிருவத்தால் ணை சேமர னுயனா கடாளும் காயகன் (அரசன்) என்றும் ஆரூர் சுந்தரமூர்த்திநாயனாரை தோழமைகொண்டவர் என்றும் அவருடன் பரமேசுவரி கையிலைக்கேகி அங்கு அதி யுலாவாகபாடியவர் என்றும் அருணகிரிநாத சுவாமிகள் பாடிய திருப்புகழே சோயசான்றும்.

சேரவரசர்களில் குலசேகரப்பெருமாள் விஷ்ணுபக்தி யில் சிறந்து விளங்கினமையாலும் சேரமான்பெருமான் சிவ பக்தியில் சிறந்து விளங்கினமையாலும் இவ்விருவரையும் பெருமாளெனவும், பெருமாளெனவும் பக்தர்கள் வழங் கினர்கள். அன்றியும் அரசன் எனப் பொருள்தரும் பெரு மாள் என் னும் சொல்லானது பெருமான் என மருவியதாகக் கூறுவாருமுளர்.

இக்காயிரூருக்குப் பின் சில நூற்றாண்டுவரையில் வட கோளத்தின் வரலாறு தெரிவரப்படவில்லை. இக்காலங் களில் கடம்ப் அரசர்களின் அதிகாரமும் சளுக்கிய அரசர் களின் அதிகாரமும் வடகோளத்தில் படிப்படியாய்ப் பரவத் தலைப்பட்டது.

கி-பி-731-ல் திருவண்டபுரத்திற்கு அரசனுவர் வி மாதித்தாண்டவர்மன். இவ்வரசன் இவ்விராஜ்ஜியத்தை நெடு காலம் அரசபுரிந்தார். இவ்வரசனுல் இரணிய கர்பதானமும் துலாபுருஷதானமும் நடத்தப்பட்டது. இவ்வரசனுக்குப் பின் ஒருவர் பட்டத்திற்கு வந்து இறந்துவிட்டார். இவ ருக்குப்பின் உதயமார்த்தாண்டவர்மன் அரசபுரிந்தார். இவ் வரசன அரசாட்சியானது இதற்குமுன் ஆண்ட வரசர் களைவிட அதிக சிறப்பாகவும் ஒழுங்காகவும் இருந்தது. கி-பி-825-ல் உதயமார்த்தாண்ட வர்மன் கொல்லத்தில் வாச ஞ்செய்தார். இவர் சோளநாட்டிலுள்ள கற்றளியில் வித்து வான்களை யொன்றுசேர்த்து சோழிட ஆராய்ச்சியில் நூதன விஷயங்களைக் கண்டுபிடித்து புதுவண்டி சாஸ்திரியுக்தமாக சிங்காசனத்தில் (சூளை) ஏறும்படிக்கு படியேற்பாடுசெய்தார்.

கி. பி. 825வது ஆகஸ்டுமீ 15வது கொல்லமாண்டு ஆரம் பம கொல்லம் ஆண்டானது சேரநாட்டிலும் வேய நாடெ

ளிலும் வழங்கப்பட்டு வருகின்றது. திருநெல்வேலி முதலிய விடங்களில் அங்காட்களில் சிலாசாஸனங்களிலும் வழங்கப்பட்டு வந்தது.

உதயமார்த்தாண்டவர்மரான குலசேகரப்பெருமாள் கொல்லம் ஆண்டு 5-ல் (கி-பி 830) பரமபதமடைந்தார். இவ்வாருக்குப்பின்வந்த அரசர்களின்பெயர்கள் இன்னின்னதென்று விளங்கவில்லை.

திருவனந்தபுர விராஜ்ஜியத்தின் சிற்றரசனகிய பந்தலம் ராஜா (Panthalam) பாண்டிய அரசன்கீழ் உதவியாக விருந்தான். அவனது குடும்பம் சேரவரச பரம்பரையின் பெண்களை விவாகம் பண்ணும்படியான சுதந்தரத்தைப்பெற்றான். இந்தச் சிற்றரசன் சேர அரசன் உத்தரவின் மேல் திருவனந்தபுராஜ்யத்தில் குடியேறியதாக கொல்லம் ஆண்டு 79-வது புரட்டாசிமீ 11உ (கி-பி 904)ல் எற்பட்ட தாம்பிரசாஸ்னம் விளக்குகின்றது.

இக்காலத்தில் திருவனந்தபுரம் கொல்லகூடம் இக்காடுகளிலுள்ள படைவீரர்கள் ஒன்றுசேர்ந்து கோளத்திலிருந்து வல்லாளவரசர்களைத் துரத்திவிட்டார்கள். இக்கோள நாடானது பூர்வத்தில் பாசுராமரால் கொடுக்கப்பட்டது.

பெருமாள்பட்டம் அடைந்தவர்களில் கடைசியாக வந்தவர் பாஸ்கரரவிவர்மர் எல்லா பெருமாள் அரசர்களைவிட இவர் ஜனசேமுடையவராயிருந்தார். இவரை விஷ்ணு அவதார புருஷராகப் பெரும்மான்மையார்கள் எண்ணப்பட்டார். அன்றியும் இவரை இன்னும் தெய்வமாக அதேகர் தொழுது வருகின்றனர். இவரது சொரூபத்தையும் இவர் பத்தினியின் சொரூபத்தையும் பஞ்சலோகங்களால் வார்ப்பித்து திருவஞ்சுகளத்தின் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது.

கருவூர் பசுபதிஸ்வர ஆலயத்திலுள்ள சாஸனம்.

கேவர்மென்டாரால் நியமிக்கப்பட்ட E. Hultzsch, Ph. D. ஹல்ஸ் துரையவர்களால் வெளியிடப்பட்ட தென்னிந்தியா ஸாஸனபுத்தகம் 3-வது வாலியம் முதல்பாகம் 20-கெ. 22-வது பக்கம். இச்சாஸனம் இராஜகேசரிவர்மனை முதலாவது குலோதுங்கசோழன் சிம்மாசனமேறிய மூன்றுவது வருஷத்தில் ஏற்பட்டது.

அதி ராஜமண்டலத்தைச்சேர்ந்த வெங்காலன் காட்டிலுள்ள பாக்கூர் என்னுங்கிராமத்தை மேற்காட்டிலிருக்கும் கருவூரின் ஆலயத்திற்காக விடும்படி மேற் சோழனால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கி-பி 1087க்குமேல் குலோத்துங்கசோழன் அரசாட்சியில் கருவூர் பசுபதிஸ்வர ஆலயத்தின் தென்னண்டை மதிலில் வெட்டப்பட்ட ஸாஸனத்தின் விவரம் வருமாறு.

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவளர் திரள்புயத் திருநிலவலையர்தன் மணிப்பூணெனவெனத் தங்கிப் பன்மணிக்கொற்றவெண்குடை நிழற்குலையத்துயிர்களைப் பெற்ற தாயினும் பெண மற்றுள்ள வறைகழலரசர் தன்னடியினி லொதுங்கவுறை பிலத்துடைய் கலியது வொதுங்க முறைமையிலரும்பெறல் ஸைபயீன ஸுளவத்தானமு

2. ஸ்வக்தானியிரும் புவிபுகழ் இராஜராஜனெனும்ரு ளிர் மணிமுடிசூட்டி தன்திருவமக்கனுகிய கங்கைகொண்ட சோழனை எழுயிரியானைச் செனைச் சோழபாண்டிய னென்றிவ்பர் மணிமுடிப்பாண்டி மண்டலங் குடிக்தருளிய் வாட்கைவடிகொண்ட கதிர்வேல்முடிகொன

3. டசோழனைக் கர்காசோழனெனச் சுடர்முடி சூட்டியக்தமில் பெருஞ்சிறப்பருளித்தன் கினைவருலகத்தவற்குரிய வகனிடம் வேறுவேறருளி இகல்வினை விருதொடு மல்லைக்கும் விக்கலனறன்னெடும் வெஞ்சிலைத்தடக்கை மாசாமக்தரைக் கங்கபாடிக்

4. களத்திடைனின்று துங்கபத்திரை புகத்துரக்து அங்கவர் வெங்கைகளுட்டிடை மீண்டவர் வீட்ட தாங்கரும் பெருவலித்தண்டு கெடதாக்கி மாதண்ட காயக்கன சாமுண்டராஜனைச் செற்றவன் சித்தினை பறுத்து மற்றவனெருமகளாகிய விருகய

5. த்தெவி காகலி யென்னுந்தோலையும் சாயலை மூகத்தொடு மூக்கு வெரூக்கி பகைத்தெதிர் மூன்றும் விசையினும் மென்றெறிபொருது பரிபவத்தீர்வெனைக் கருதிய பொருபுனல் கூடல சங்கமத்தர்கவ மல்லன் மக்களாகிய விக்கலன் சிங்கனென்றிவர் தமொடும் மென்னிலசாமத்தனை

குண்டையூர் அங்கன்திருச்சிற்றம்பலமுடையான்னுன. *வான
வன் மூவேந்த வே

19. வளாணும் அதிராசராச வளனாட்டு தெவூர்னாட்டு
பனைக்குடியுடையான் காடன் வீரவிடங்கனை ஜயங்கொண்ட
ட சொழவிழுப்பரையரும் விசையராஜேந்திர வளகாட்டு புவி
யூர் நாட்டுப் பூண்டியுடையான் அத்தாணிச்சியாரோரன முடி
விழுப்பரையனும்ப

20....இராஜேந்திர பட்டரும் இராஜராஜப் பாண்டிகுல
வளனாட்டு உத்தம சொழவளனாட்டு முள்ளிநாட்டு நிகரிலி
சொழனாட்டு மதிமங்கலத்து கொச்சாக்காற்புறத்துயிண்ணவ
நாராயண பட்டனும் விடையில் அதிகாரிகள் உறுப்பக்கொண்
டரனும் இப்படி

21....கத் திருவாய் மொழிக்தருளினபடிக்கு நம்மரியி
லார் வரியிலே இட்டு இறையிலி தெவதானமா திருனமத்துக்
காணியாகத் திருவாசிலே மகாதேவற்கு அவிபெலி
போகத்துக்குச் செப்பிலும் கல்லிலும் வெட்டிக

* 18 வரியில் வானவன் மூவேந்த வேளான் என்பது 12-வது வரியில் கூறிய வேளாளன் மரபு அல்ல. வானவன் என்னும் சொல்லால் சேரனைப்பையான் என்று விளங்குவதேயன்றி வேறல்ல. நமது கருத்திற்கிணங்க "சேந்தமிழ்" தொகுதி 4-பகுதி 5ல் "நன்னன் வேண்மான்" மகடவாயாலாய் கூறியதில் வேளிபர் வேளான் என்பது செந்தழல் பரமஞ்சிய சேரபரம்பரையைச் சேர்ந்தவனென வெளிப்பட்டது.

இதற்கிணங்க இத்துறை அவர்களால் வெளியிடப்பட்ட இரண்டாவது புத்தகம் தெம்பராசனம் 87-ல் 13-வதுவரியில் "மீனவன் மூவேந்தவேளான்" என்னும் சொற்றொடர் பாண்டிய அரசனைக் குறிக்கின்றது.

மூவேந்த வேளான் என்பது அரசன் எனப்பொருள் படும். வேளான் என்னுஞ்சொல்லின் பகுதி வேள், விகுதி ஆன். வேள் என்பதற்கு அருத்தம் குமரன் சளுக்கிய வேந்தன் மன்மதன், இதற்குச் சுத்திரம் பிங்கலம் 4116-வது தாரகாரியும் சளுக்கியர் வேந்தனும் வேனிலானனும் வேளெனவாரும் என்னும் பிரமாணமே சான்றும். வேளான் என்பதை வேளாளன் எனப் பொருள் படுமாவெனின் பொருள்படாது. எங்ஙனமெனின் தொல்காப்பியமரபியலிலே வேளாண் மாந்தர்க்குழுதுணல்ல தில்லெனமொழிப்பிறவகை கிழ்ச்சி என்று கூறியதில் வேளாண் மாந்தர் என்றிருப்பதினாலும் நிகண்டிலும் பிங்கலம் 4115-வது சுத்திரம் சதுர்த்தமும் கொண்டு வள்ளலும் வேளாளர் "என்று கூறியிருப்பதாலும் வேளான் என்பது சளுக்கிய வேந்தனென்றும் வேளாளர் என்பது சுத்திரனென்றும் வெளிப்படையாய் விளங்குகின்றது. இதனையறியாமல் மூவேந்த வேளான் என்பதின் பொருளையும் இதற்கு அடையாகவரும் சொற்களின் பொருளையும் நோக்காது வேளான் வேளாளன் என்பனவற்றை ஒரு பொருள் எனக்கொள்ளுதல் மதியக்கம்.

22. ளான்க இப்படிக்கு அச்சுதன் இராஜ நாராயணன் தொண்டைமான் எழுத்து ளான உத்தம சோழனை இராஜ ராஜ பிரம்மாதிராயன் எழுத்து இப்படிக்கு அரையன் விர ராஜேந்திர ஐ மூரி நாடாழ்வான்

23. எழுத்து இப்படிக்கு வீர ராஜேந்திர மங்கலப் போரையன் எழுத்து இப்படி அதிகாரி கூத்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு ஜயங்கொண்ட சொழ நல்லூரு டையன் உதையதிவாகரன் கூத்தாடுவான் விர ராஜேந்திர மழவராயன் எழு

24. து இப்படிக்கு வானவன் மூவேந்த வேளான் எழுத்து இப்படிக்கு ஜயங்கொண்ட சோழ விழுப்பரையன் எழுத்து இப்படிக்கு அத்தாணி விழுப்பரையன் எழுத்து திரு மந்திர ஓலை எழுத்தும் வானவன்பல்லவரையன் எழுத்து இப்படிக்கு

25. டையதிகாரி உய்யக்கொண்டான் எழுத்து பன் மாவேலைவர ரக்ஷை இதன்மம் நோக்குவான் ஸ்ரீபாதம் என் தலைமேலே

கரு பகபதிஸ்வரர் ஆலயத்திலுள்ள இக்கல்வெட்டானது இராஜ கேசரிவர்மன் சிம்மாசனமேறிய மூன்றுவது ஆண்டின் வடையிலேற்பட்டது. முன்னூற்று முக்கால் கழஞ்சி மஞ்சாடிபொன்னும் மூவாயிரத்தஞ்ஞாற்றுமுப்பத் தொரு கலனே தானி செல்லும் வரியிலாமல் தேவதானமாகக்கொக்கப்பட்டதுமன்றி வெள்ளான் வகையில் இறை முதல் தவிர்க்கப்பட்டதாகத்தெரிவிக்கின்றது.

இராஜ கேசரிவர்மன் தனது தமையனுக்கு ராஜராஜனென்ற பட்டமும் தன் மகனுக்குச் சுத்தர சோழனென்ற பட்டமுங்கொடுத்துச் சிறப்பித்ததுமன்றித் தனது சுற்றத்தார் ஒவ்வொருவருக்கும் சிரத்தமான செல்வத்தையுந் தந்தானென்றும், அவ்வரசனது பகைவனுகிய ஆதவமல்லனையும் விக்கலன் சிங்களன் என்னுமிவனது குமாரர்களையும் அங்கபத்திரவென்னும் நதியின் கூடலிடமான கூடல் சங்கமத்திலே கடந்த யுத்தத்திலே முறிபட்டோடும்படியும், காமன்தர் சிங்களர் கோளர் பாண்டியர் முதலியமன்னவர்களையெறித்து

வேதநெறி வழாது செங்கோல் செலுத்தினனென்றும் தெரிவிக்கின்றது.

கலிங்கத்துப்பரணி இராச பாரம்பரியம் 29-வது செய்யுளில்

"குந்தளவாக்கூடற் சங்கமத்தவென்றவ
சோனபயன் குலயங்காத்தளித்த பின்னே."

என்றும் மெய் பரணிகோவில் பாடியது 7.

தங்கபத்திரிச் செங்களத்திடைச்
சோளசேகரன் வாளெறிந்தபோர்
வெங்கதக்களிற்றின் கடத்தினுல்
வெளியடங்கவே மிச்சவித்ததே.

என்றும் கூறியிருத்தலுங்கொண்டு இச்சாஸனத்திலும் 4-வது 5-வது வரிகளில் காண்க.

இவ்வாலயத்திலிருக்கும் கல்வெட்டால் சோழராஜ்யத்தின் பிரதான நகரமாயிருந்த கருவூரானது இராஜகேசரிவர்மனான குலோத்துங்கசோழன் ஆளுகையின் கீழிருந்ததாகவேற்படுகின்றது. அதிராஜராஜ மண்டலமென்று இவ்விராஜ்யம் வழங்கப்பட்டதாகவும் தெரிகின்றது. இச்சோழன் கி. பி. 1070 ஆண்டுகளுக்குப்பின் சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர்களையும் பராபரிக்கவல்லவனென்று இதனால் விளக்குகின்றது. இதில் குறித்துள்ள நாடுகளுக்கு அதிகாரிகளாகவும், இராஜகாரியதுரந்தர்களாகவுமிருந்த அரச பரம்பரையார் பலரனவன் பல்லவ அரையன், வீர ராஜேந்திர பிரமராயன், வீர ராஜேந்திர மழவராயன், வானவன் மூவேந்த வேளான், வீர ராஜேந்திர மழவராயன் ஜெயங்கொண்ட சோழ விழுப்புனரையன் முதலியவர்களாம். இப்பெயர்கள் சேரசோழ பாண்டிய பல்லவ அரச பரம்பரையாரைக் குறிக்கின்றன. இவர்கள் குலோத்துங்க சோழன் கீழ் இராஜகாரியங்களை நடத்தியவர்களென்றும் இச்சாஸனத்தில் கூறும் நாடுகளுக்கு அதிகாரிகளாயிருந்தார்களென்றும் தெரிவிக்கின்றது. இவர்கள் அக்காலத்தொட்டே இவ்விடங்களில் ஏராளமாயிருக்கின்றனர் என்பதுமுண்மை.

இந்த சாஸனம் 18-வது 23-வது வரிகளில் வரைந்துள்ள மழவராயன், 22-வது வரியிலுள்ள பிரமராயர், 24-வது

வரிகளிலுள்ளவானவன் பல்லவராயன் என்னும்பெயர்கள்தென்னற்காடு, தஞ்சை, திருச்சிராப்பள்ளி முதலிய ஜில்லாக்களிலுள்ள வன்னியர்களால் வழங்கும் பட்டப்பெயர்களாதலால் மேற்பட்டப்பெயரையுடைய இதிற்கூறியகாரியஸ்தர்கள் வன்னியர்களன்றி கோதவல. வானவன் மூவேந்தவேளான், மீனவன் மூவேந்தவேளான் என்னும் பெயர்கள் சேரபாண்டிய ராஜர்களுக்குமிக்கும் சொற்றொடர்களாம். இப்பட்டப்பெயர்களின் காரணாதிகளைப்பற்றி வேறு இடத்தில் விவரிக்கப்படும்.

சேரராஜ்யத்திற்குப் பிரதான நகரமாயிருந்த கருவூர் கி-பி-1070-க்குமேல் குலோத்துங்கசோழன ஆளுகையிலிருந்ததென்று பசுபதீஸ்வர லிங்கத்திலுள்ள வாஸனத்தால் தெரிகின்றது. அக்காலத்தில் சேரருக்குப் பிரதானநகரம் திருவனந்தபுரமென்றும் திருவனந்தபுரத்தின் ஆலயத்தின் பூர்வீகமாயிருந்த கோபுரத்தை மறுபடியும் கி-பி. 1050-ல் ஒரு அரசனால் கட்டப்பட்டதென்றும் சரித்திரம் கூறுவதால் அது முதல் சேர அரசர்க்குப் பிரதான நகரம் திருவனந்தபுரமாம். முதலாவது குலோத்துங்கசோழன் அரசாட்சியின் வல்லமையைச் சோழவரசர்களின் பூர்வோத்திரத்தில் காண்க.

இக்காலத்தில மகமதியர் பாண்டிய ராச்சியத்தில் புகுந்து மதுரைநகரம் பாண்டியனைக் கபிலபாக்கி டில்லிக்குச் சென்றுசேரச்செய்விட்டார்கள். மதுரையானது மகம்மதியர்வசத்தில் வந்துவிட்டது. அக்காலத்தில் சோமசுந்தர் மீனாட்சியென்னும் சொரூபங்களைத் திருவனந்தபுரத்திற்கு மதுரையிலிருந்து மகம்மதியர் கொடுங்கோண்மைக்கு அஞ்சிக்கொண்டு போகப்பட்டது. இதற்குமுன்பாண்டியன் எல்லைசுபக்தமாக விரோதப்பட்டவனாயிருந்தபோதிலும் அதைப் பாராட்டாமல் அச்சொரூபங்களைத் தக்கபடி பாதுகாத்து வந்தான் சேரவரசன்.

ஆதித்தவர்மன் கொல்லம் ஆண்டு 364 (கி-பி 1189) அரசுபுரிந்தகாலத்து பாண்டியராஜனனவன்முன்குடியேறியதுபோல் பாண்டியராஜவம்சத்திற்குரியதாயிருந்த பாத்தியஸ்தனனபூன் சத்தியராஜாவுக்கு திருவனந்தபுராஜ்ஜியத்தில்குடியேறினன்.

ஆதித்தியவர்மன் அரசபுரிக்கபோதுகொல்லம் இராஜ்ய நிபத்திலிருந்து இரண்டு பெண்களை இவ்விராஜா கவிகாரஞ்செய்துகொண்டான்.

வீரமார்தாண்டன் என்னும் சோவரயமார்த்தாண்டன் மகுடாபிஷேகஞ் செய்யுங்காலத்து குலசேகரப்பெருமாள் என்ற அழைக்கப்பட்டார். இவர் 16-வது வயதில் கிம்மாசனமேறி 62-வருஷம் அரசபுரிந்து 78-வது வயதில் பரமபதமடைந்தார். (கி-பி-1444) இவருக்குப்பின் வேணாடு ஆண்ட 14 வருஷம் ஆண்டு 1458-ல் இறந்துவிட்டார். இவருக்குப்பின் ஸ்ரீ வீரமார்த்தாண்டவர்மன். இவரதருளுக்குப்பின் ஆதித்தியவர்மன் பின்னர் இரவிவர்மன் இதன்பின் இரவிவர்ம ஸ்ரீ மார்த்தாண்டவர்மன் பின் ஸ்ரீ வீர ரவிவர்மன் பிறகு மார்த்தாண்டவர்மன் அதனபின் உதயமார்த்தாண்டவர்மன் பின்னர் கோதவர்மன் ஆதித்தியவர்மன் உதயமார்த்தாண்டவர்மன் ஸ்ரீ வீர ரவிவர்மன்மகுடாபிஷேகஞ் செய்தபோது குடிப்பெயராகிய குலசேகரப்பெருமாள் என்று அழைக்கப்பட்டார். இவர் பத்து வருஷ மாகசெய்து கி-பி-1606-ல் இறந்தார். இவர்க்குப்பின் அண்ணி கோதவர்மன் இவர்க்குப்பின் இரவிவர்மன் ஆதித்தியவர்மன் முதலிய ராசர்க்குப்பின் இராமவர்மன் கி-பி-1729-ல் 23-வது வயதில் பட்டமடைந்தார். ஸ்ரீ பத்மநாபதாச வஞ்சிபால மார்த்தாண்டவர்மகுல சேகரப்பெருமாள் என வழைக்கப்பட்டார். இவர் அனேகபுண்ணிய முதலியவை செய்தார்.

இவருக்குப்பின் இராமவர்ம மகாராஜா பட்டத்திலிருந்து வந்தார். இவர் அரசசெய்தகாலத்தில் ஐதர் ஆலி திப்புசுல்தான் இவர்களது கொடுங்கோன்மையும் பயமுறுத்தலும் சேரசோழபாண்டிய முதலிய நாடுகளில் அதிகமாயிருந்தது. சுல்தான் இங்கிலிய கம்பனியாருக்கு இம்மகாராஜா உண்மையான விசுவாசமுள்ளவராயிருந்தமையால் இவரை அக்கம்பனியார் அதிக மரியாதையோடும் அன்போடும், மதித்து மிகுந்த மாப்பாராட்டி வந்தனர். இதனாலே சுல்தானுக்கும் மகாராஜாவிடத்தில் அதிக விசுவாசங்காட்டி வந்தனர். இப்படி அவர்கள் இவருக்கு *வன்னியகுலாதி மதுராராஜா ராமராஜ பஞ்சமாக்ஷீர ஜ என்கிற பட்டத்தை அனுப்பிவைத்துக்

* வன்னியன் என்னும்பிபெயர்சேரவாச பரம்பரையாருக்குப் பூர்வகாலம்முதல்வழங்கப்பட்டு வந்தமையால் வன்னிய சுல்தான் என்னும் பட்டம் பெயர் பெருத்த முடையது. இவ்வண மிருக்க ஆங்கில மன்னிய கல் எள் என வழங்குவது சொற்றிரிபென்க கோடல் வேண்டும்.

கொள்ளும்படி கேட்டபோது ராஜாவவர்கள் முன்னோரால் வழங்கப்பட்ட ஸ்ரீ பத்மநாபதாச வஞ்சிபாலமாவர்ம குலசேகர கிரீடாதிபதி என்னும் பட்டப்பெயருடன் வன்னியகுல்தான் மதுராராஜா ராமராஜா பஞ்சாக்ஷரஜ் என்பதையும் சேர்த்து அழைக்கப்பட்டு வந்தார். இவரதுபேர் காசிராமேஸ்வரம வம்பாயில் யாத்திரைக்காரால் வழங்கப்பட்டு வந்தது. இவர 40-ஆம் அரசபுரிந்து 73-வது வயதில் 1708-ஆம் மாசிமீ 6 சிவராத்திரிதினம் சிவபதமடைந்தார். இவருக்குப்பின் பாலராமவர்மர 16-வயதில் பட்டமடைந்தார். இவர் அரசாட்சி தொடங்கிய காலந்தொட்டு பிற்றைவரையில் ஆங்கிலேயராவ் அபிமானிக்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டுமே வருதல் பிரத்தியட்சம்.

வரபதியாட்கொண்டானென்னும் சேர அரசனைப் பற்றி பாரதப்பாயிரத்தில் கூறுஞ் செய்யுள்களாவன. வில்லிபுத்தூராழ்வார் பாரதப்பாயிரச் செய்யுள்களுமாம்.

119. எங்குமினிசைபரப்பி வருகாலில்
யாழுனைத்த வித்தகாட்டிற்
கொங்கர் குலவரு பதியாட்கொண்டா
னென்றெருவண்மைக் குரிசில்றென்றி
வெங்கலியின் மூழ்காமற் கருடப்பேர்
வெள்ளத்து விழாமலுன்காஞ்
சங்கமென முச்சங்கத் தண்டமிழ்நூல்
கலங்காமற் றலைகண்டானே

120. மற்றவனிப்புவியாளும் வளவனுக்கு முடிகவித்து
வழுதித்தெவ்வைச்
செற்றவனுக் கவனியெல்லாஞ் செங்கோன்மை
நிலையிட்டுச் செல்வமெல்லாம்
கற்றவருக் கிருகையுடைக்கற்பகம்போ
லினிதளித் துக்கமலமாதுங்
கொற்றவையு மனங்களிப்பத் தன்னு
மேருவினுங் கோட்டினானே.

121. தென்னுட்டில் வடகாட்டிற் குடகாட்டிற்
றெவ்வரோடக்
கன்னுட்டி யமர்பொருது கங்கைநீ ருட்டவித்திக்
கடைடன்வேங்கை
யென்னுட்டு மெழுதியவன் றிருமா போர்பெற்ற
புகழ் யாவர்பெற்று

ரண்டுட்டு கொற்றமெல்லாமக்குரிசில்
புகழொடவ தனித்தன்றே.

விலிபுத்தூரார் பாரதம் பாடிய காலத்து அரசுபுரிந்த சேரன் வஞ்சி ஆட்கொண்டானென்றும், இவ்வரசனுக்கு இவர் கனகு மதிக்கப்பெற்று பரிசுவாங்கிற்றென்றும் இச்சேரனைமி வழிருந்திசெய்தானென்றுமிளங்குன்றூர் அறையிடத் தவரசனை பகைவனுகிய பாண்டியனென்று இவனதாட்டை சோழனுக்கொடித்து முடிருட்டினனென்றும் சோழ னது புலிக்கொடியை யெனதுட்டினும் பிரகடித்துட்டி செய்து தனதுபெயரை மேருபர்வதத்தில் நிட்டினுனென்றும் தெரிவிக்கின்றன.

இதனல் சோழனுக்கும் சேரனுக்கும் விரோத கட்புரிமை புண்டென்றும் பாண்டியன் பகைவனுயிருந்தானென்றும் தெரிகின்றது. இம்மூவேந்தர்களும் ஒருகாலத்தில் ஒற்றுமையு டையர்களாயும் ஒருகாலத்தில் பகைமையுடையவர்களாயும் ஒருகாலத்தில் நிகாயமாகச் சோழன் புத்திரன் சேரனுக் கும் பாண்டியன் புத்திரன் சோழனுக்கும் இல்லையென்ன நிகாய பெற்றும் ஒருவருக்கொருவர் பெண்கொடுத்தும் பெண் வாங்கியும் வந்தாகளென்றும் அவர்களாலின் பூர்வ சரித்தி ரங்களும் இதிகாச புராணங்களும் தெரிவிக்கின்றன.

இச்சேராஜ்ஜியத்தைச்சேர்ந்த மலையாளதேசத்தை பரசுராமரால் கடலினின்று விடுவிக்கப்பட்டதினுல் முன்னமே 151 பதகத்தில் குடிதாருகிறைது. இது எழுத்தச்சனினின்று விவரிக்கப்பட்டுள்ளபடி இதற்கு மலையாளம் எனப்பெயர். (மலை ஆளி) இக்காட்டைப் பரசுராமரால் வடகேயிருந்து பிராம ணர்களெல்லாவிதத்தி லழைத்துவரப்பட்டனர். அவர்களும் இப்பு தங்காட்டில் நாகவயத்தார் அல்லது தவுக்க வயத்தார் குடி யேறினர்கள். இந்த நக்வர்க் வயத்தார்தான் சகல- வம்ச திலுள்ள ஸ்பித்துவின் குமாரர்களாயும் பாண்டவர்களுக்கு மாமன். பாட இராஜஸ்தான கர்த்தம் பாலிவனையும் நக்வையும் பற்றிச் சொல்லுமிடத்தில் காண்க.

இம்மலையாளாட்டை யாள்வதற்குப் பரசுராமரால் குடி யேற்றப்பட்ட பிராமணர்கள் இராஜாக்களுடைய கட்டளை நடத்த வேலைமையால் சேரமிழ பாண்டியசோழன் முதை

யேபனிரண்டு (12) வருஷம் ஆளும்படி பரசுராமரால் ஏற்பாடு செய்யப்பட்டது. முதலில்வந்தவர் கேயபெருமாள். இவர்கேய புரதினின்று வந்தமையால் கேயபெருமானென்று அழைக் கப்பட்டார்.

மலையாள காட்டில் அரசுபுரியவந்த சேரன் சேரன்மான் அல்லது கோவபபெருமான் என்று அழைக்கப்பட்டார். இதேபோலவே சோழநாட்டினின்று வந்தவரைச் சோழபபெ ருமான் என்றும் பாண்டியநாட்டினின்று வந்தவரைப் பாண் டிய அல்லது குலசேகரப்பெருமாள் என்றும் அழைக்கப் பட்டனர்.

1. கேயபெருமாள் என்பவர் சேரமான் பெருமாள். இவர் 64-இராமங்களையும் அவைகளிலுள்ள குறைபாகேளையும் திருத்தி சரியாக 12வதும் அரசுசெய்தார். இவரது பிரதான நகரம் அல்லூர். தலையூர் என்னும் இடத்தில் ஓர் அரண்ம னைக் கட்டினர்.

2. இதன்பின்னர் சோழபெருமானே நியமனஞ்செய் யப்பட்டது. இவர் சோழநாடையென்கிற ஓர் அரண்மனைகட்டி பத்துவருஷம் இரண்டு மாசமும் ஆண்டு சோழநாட்டிற்குப் போய்விட்டார்.

3. பரம்பாவென்னுமிடத்தில் பாண்டிய பெருமா னுக்கு முடிசூட்டப்பட்டது. இவர் அவ்விடத்தில் ஓர் கோட் டையமைத்துட்டி 9-வருஷம் ஆளுகைசெய்து பாண்டிய நாட் டிற்குத் திரும்பிபோய்விட்டார். இவ்வகையாக வந்த பெ ருமான்களின் பெயர்கள் வருமாறு.

திருவன் பெருமாள்	இறைபெருமான்
இந்திர பெருமான்	சோம்பன் பெருமான்
ஜய பெருமான்	விஜய பெருமான்
கண்டன பெருமான்	வல்லபப்பெருமாள்
சோட்டிபெருமான்	ஸ்ரீசந்திரபெருமான்
பரதபெருமான்	மல்லன் பெருமான்.

இவருக்குப்பின் வந்தவர் குலசேகரப்பெருமாள். இவர் குடிகளுக்கு அனேக நன்மைசெய்ததனியும் இவர் இல வந்தரியனை அங்காட்டில் குடியேற்றினர். திருகண்ணபு ரம் என்னும் ஊரில் பிராமணர்களுக்குக் கற்பிக்கக் கல்வி சாலை யேற்படுத்தி அதற்கு இனாம் உபாதியாரணம்

சேமித்தார். இவர் மலேயாள நாட்டை 18-வது அரசபுரிந்து பொற்றியோடி பதவி அடைந்தனர்.

இச்சம்பவம் நிகழ்ந்தது கி.பி. 329வருஷமென்று சிலரும் கி.பி. 277 வருஷமென்று சிலரும் கணிக்கின்றனர். இவ்விதமாக பலநாட்டை அரசர் பெருமான் என்னும் பட்டபெயரை வகித்து மலைநாட்டை அரசுசெய்து வந்தனர். இவ்வகையாக அரசுசெய்த அரசசந்தியார் சேராஞ்ஜியத்தில் அந்தொட்டு இக்காள்வரையிலிருந்தின்றனர்.

அதிதேவன் குமாரன் ஆந்திரனென் க்ஷத்திரியருக்கு மூலபுருஷராகவிருந்தாரென்றும் யயாதியின்புத்திரனுனதுருவசுவின் புத்திரன் வன்னியென்றும், இவனது சந்ததியில் வந்தவர்கள் சேரசோழபாண்டிய கலிங்கரென்றும், வன்னியனென்ற மொழி பொதுவாகச் சோழபாண்டியருக்கும் அரசருக்கும் இறப்பக்கச் சேரனுக்கும் நூலாசரிகளால் வழங்கப்பட்டு வந்ததென்றும் முன்னரே பாரதம் அரிவம்ச முதலிய பிரமாணங்களில் விளக்கப்பட்டது.

இச்சேர ராஜ்யம் பல காண்டங்களாகப்பகுப்பட்டு அவைகளில் சேர அரச வம்சத்தார் சிற்றரசர்களாகவிருந்து பேரசரின் ஆணையின்கீழ் ஆண்டுகொண்டுவந்தனர். அன்றியும் பாண்டிய நாட்டினின்றும் சோழ நாட்டினின்றும் அவ்வவ் வரச சந்ததியார் குடியேறியதாக மேலே காட்டப்பட்டது. இச்சந்ததியார்களின் வழிவந்தோர் சமார்தரென்றும், சூரியகுலத்தாரென்றும், சந்திரகுலத்தாரென்றும், வன்னியரென்றும், களுக்கியரென்றும் அழைக்கப்படுகின்றனர். இதுவன்றியும் சேரவரசருக்கு ஒருகால் இராஜதானியிருந்த கருவில் பசுபதீஸ்வரர் ஆலயத்திலுள்ள ஸ்தலசாசனங்களிலும் ஏனையயிடங்களிலுமுள்ள சாசனங்களிலும் சாமந்தர் விலவராயன் வன்னியன் வானவன் பல்லவராயன் முதலிய பேர்கள் சேர அரசரைக்குறிக்கின்றமையால் இவர்களின் வழிவந்தோர் அந்நாள் தொட்டு இக்காள்வரைக்குமிருக்கின்றனரென நிச்சயிக்கப்பட்டது.

ஐந்தாவது அத்தியாயம்.

சோழராஜ்ஜிய வரசர்களின் பூர்வோத்திரம்.

இவ்வத்தியாயத்தில் சோழர் களுக்கியர்களின் பூர்வோத்திரங்களையும் களுக்கிய வம்சமுஞ் சோழ வம்சமும் ஒன்றாகலந்தவற்றையும் சாஸன முதலிய பிரமாணங்களைக்கொண்டு நிரூபிக்கப்படும.

1. மதுராபுரியை ஸ்தாபித்த குலசேகரப்பாண்டியன் புத்திரன்மலயத்துவஜபாண்டியன். இவன்மனைவி காஞ்சனமாலை. போர் சோழன் குமார்த்தியென்று ஸ்தலபுராணத்தில் கூறியிருக்கின்றது. இதனால் சோழராச்சியமும் பாண்டிய ராச்சியத்தைப்போல் பாரதபோர் நடக்கும் முன்னமேயிருந்த பூர்வீகராஜ்ஜியமென்றும், அனேக சோழ அரசர்கள் வம்ச பரம்பரையாக அரசுபுரிந்து வந்தனரென்றும் கண்டு விளங்குகின்றது. இவ்வகையாகவந்த சோழமன்னர்களோடு பல்லவ அரசர்களும் களுக்குவேந்தர்களும் வெகுகாலத்திற்கு முன்பெண்கொள்ளல் கொடுத்தல் முதலியவைகளில் சேர்ந்திருந்தாரென்றும் சோழப் பல்லவரென்றும் பல்லவ சோழரென்றும் சோழ களுக்கியரென்றும் களுக்கிய சோழரென்றும் அழைக்கப்பட்டுவந்தனர். இவ்வம்சங்களின் சரித்திரங்களை நூற்களாலும் பல சாஸனங்களாலும் விளக்கப்பட்டிருப்பதை அறிஞர் அறிவர்.

சாஸனமென்பது கல்லிலும் செம்பிலிலும் அவ்வக்காலத்தில் ஆண்ட அரசர்களின் பெருமைகளையும் வெற்றிகளையும் காலத்தைக் காட்டியும் கட்டளையிலும் காகரம், கிரந்தம், தெலுங்கு தமிழ் முதலிய பாஷைகளின் லிபிகளில் எழுதியிருத்தலாம். எங்ஙனமெனில் தொல்காப்பியம் புறத்திணையியல் 60-வது சூத்திரம்.

* * * * காட்சிகால் கோணீட்டை மகெல்
கிர்த்தகுமாபிற் பெரும்படை வாழ்த்தலெ
நிருமூன்று வகையிற்கல்லொடு புணரச்
சொல்லப்பட்ட வெழுமூன்றி தறைத்தே.

என்று கூறப்பட்டிருக்கின்றது.

இதற்கு நச்சினார்க்கினியர் உரை.

காட்சி—கல்லெழு சுரஞ்சிற்பமென்று சற்காண்டலும் அது கொணர்ந்து செய்வண்ணஞ் செய்து காட்டிப்பின்னர்க்கற் காண்டலும் என இருவகையாம்.

கல்கொள்கல்லறுத்து இற்றதற்குக் கல்கோடலும் நாட்டிய பின்னர் அவன் ஆண்டுவருதற்குக்கல் கோடலும் என இருவகையாம்.

நீர்படை—கண்டு கல்கொண்ட கல்லினை நீர்ப்படுத்து தூய்மை செய்தலும், பின்னர்ப்பெயரும் பீடும் எழுதிக்காட்டியவழி நீராட்டுதலும் என இருவகைப்படும்.

நடுகல்—கல்லினை நடுதலும் அக்கல்லின் கண்மறவனை நடுதலும் என இருவகையாம்.

சிற்பகுமாபிற்பெரும்படை—அவன் செய்த புகழைத் தரும்படி பொறித்தலும் அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ்சிறப்புக்களைப் படைத்தலும், என இருவகையாம்.

வாழ்த்தல்—கல்கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச்செய்து வாழ்த்தலும், பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாகி வாழ்த்தலும் என இருவகையாகும்.

எண்ணு இருமூன்று வகையிற் கல்லொடு புணர—என்று முன்னர்க் கூறப்பட்ட அறுவகையிலக்கணத்தையுடைய கல்லொடு பின்னரும் அறுவகை யிலக்கணத்தையுடையகற்கூட.

இக்கூறப்பட்ட பொதுவிலக் எழுமூன்று அறைத்து இருபத்தொரு அறையினையுடைத்து, என்று கூறியருத்திரத்தானும் உரையாலும் திலகாஸனம் பண்டைக்காலந்தொட்டு பரதகண்டத்தில் இருந்தென்பது இச்சூத்திரத்தால் தெரிய வருகின்றது.

தொல்காப்பியத்தின் காலவளவைபற்றி 56-வது பக்கத்தில் காண்க.

இவ்விலக்கணமானது அனேக ஆயிரம் ஆண்டிற்குமுன்னர் ஏற்பட்டது அக்காலத்திலேயே கருங்கல்லைக்கொண்டுசென்று, அதற்குரியவேலைகளைச் செய்து அவனது கடைசிமகவங்களைச் சிலையில் எழுதிவரும் வழக்கமிருந்தமையின்று இச்சூத்திரத்தால் தெரியவருகின்றது.

சோழவீராசியத்தின் எல்லை.

வெண்பா.

"கடல்கிழக்குத் தெற்குக் கல்பொருவெள்ளாறு
குடதிசையிற் சோட்டைக்கரையாம்—வடதிசையில்
வேணாட்டுப்பெண்ணை யிருபதிற்காற்காதஞ்
சோணாட்டெல்லையெனச் செப்பு."

24-காதம் (240 மைலில்)- பரப்புள்ள சோழ ராஜ்யத்தை ஒவ்வொரு காலத்தில் இராஜதானியாகவிருந்த நகரங்களான உறையூர் புகார் (காவிரிப்பூம்பட்டினம்) கருவூர்-திருவாரூர்-தஞ்சை-கும்பகோணம்-திருச்சேய்ஞலூர் முதலியனவாம். சோழ அரசர்கள் தசாங்கமாவன கோயிலை புனைதி காவிரிநதி-உறையூர்-வெற்றிமுரசு-இசைத்தமிழ்-புலிக்கொடி-பாடலம்புரவி-ஆதிமாலை இவைகள் ஆம்.

சோழ அரசு பரம்பரையாளைச் சுரிபகுலம் அவ்வது சம்புகுலம் (செம்பியர்) என்னு பூர்வத்தொட்டு தமிழ்மொழியில் வல்லவர்களான அவிநர்களால வழங்கப்பட்டு வந்தது, திரிசிரபுர மகாத்மியம் வடமொழியில் ஒன்று சூதபுராணிகராலும் மற்றொன்று கௌதமராலும் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அவைகளில் சூத்முனிவரால் சொல்லப்பட்டபுராணத்தில் கூறும்சோழவரசர்களின் வம்சாவளிவருமாறு.

வடதேசத்தில் விசாலபுரத்தில் சுரிபகுலத்தரசனுகிய பூலோகரதனுடைய குமாரன் * இராஜசூடாமணி என்னும் அரசன், பாஞ்சாலராஜன் புத்திரி இரத்னவல்லியை மணந்து அரியற்றுங்காலையில் பகைஞனுகிய மாகிஷ்மதி துர்ஜனன் எனனும் அரசனல் முறியடிக்கப்பட்டுப் பரிவாரங்களுடன் தென்னுட்டை யடைந்து திரிசிராமலை நாதனைத் தரிசித்து பிற்க சிவபெருமான் ஸ்ரீ சாரமாமுனிவனை விளித்து இவ்வரசன் வாசம்பண்ணு புரி அமைக்க அறுக்ரகம் புரிந்தனர். அவ்வாறே முனிவர் பெருமானும் நிறுமித்து அரசனிருப்பதற்கு வாசபுரி (உறையூர்) எனப் பெயரிட்டு அரசனியிருக்கச்செய்து அவ்வரசனுக்கு முடிசூட்டி அப்பரம்பரையாருக்கு குலகுருவாயுமிருந்தார் என்றுகூறியிருத்தல் புராணக்கூற்று.

இவ்வாறுவின் காலாவது புத்திரன் திருஷ்டின். இவன் பரம்பரையில் 30-வது மன்னனுய் வந்த விசாலன், வைசாலி (விசாலபுரம்) நகரைஸ்தாபித்தவன். இவனுக்குப்பின் 6-வது தலைமுறையில் இவ்விடத்தில் அரசாண்டதாகப் புராணங்கள்

* இராஜசூடாமணி மகாராஜன் சோழ விராஜ்யத்தை ஸ்தாபித்தவன். இவன் தந்தை ஜகாதீனென்னும் இரண்டு சுரவாதிக்க னென்னும் மற்றொரு புராணங்கூறுகின்றது.

கூறுகின்றன. சோழ பரம்பரையில் உள்ள விசாலன் மருத்தன் திருஞ்சயன் முதலிய நாமங்கள் இருஷ்டன் பரம்பரையிலு மிருக்கின்றன.

1 இராஜகுடாமணி
2 திரிசிரசு
3 பரதன்
4 அர்ச்சுனன்
5 விசாலன்
6 சூரவாகித்தன்
7 பூலோகாதன்
8 பிருது
9 பீமன்
10 சங்மித்திரன்
11 மரு
12 அனகன்
13 நரசாமசேகரன்
14 தருஷசேது
15 உதாரன்
16 டரதன்
17 விசாலன்
18 திருஞ்சயன்
19 வசு
20 ஆயுசு
21 பிரபாகரன்
22 திருச்சி
23 பிரசாகன்
24 மருத்தன்
25 சுதரு
26 அங்கதன்
27 அர்சுனவன்
28 வீரசேனன்
29 சங்கணன்
30 இராமன்
31 பிரியவிரதன்
32 பிரபாவன்
33 மரீசி
34 தீர்த்திரதன்
35 ஆசுவீத்தான்
36 சுபி
37 சுகோத்ர
38 சுத்திவர்த்தனி
39 பிரமோதன்
40 சத்தியசேகரன்
41 அரிச்சந்திரன்
42 சுகந்திரகன்
43 பிரதாப ஆதித்தன்
44 பிரதர்த்தனன்
45 இக்ரசேனன்
46 சுரதன்
47 அரிமர்த்தனன்
48 தீதிமான்
49 அருணன்
50 கலர்க்கன்
51 தருமபிருது
52 பிரசங்கன்
53 தருமருட்டன்
54 பாரத்வமன்
55 சரிகாலன்
அல்லது சுத்தரன்

இப்புத்தகத்தில் கரிகாலன்வரையில் தான்வரையப்பட்டிருக்கின்றது. பின்னுள்ளார் வம்சாவளி நூலாணும் செப்பேடுகளுங் கல்வெட்டாணும் கண்டுகொள்க. இச்சோழராச்சியம் மோனூடு, மழவாடு, பருகாடு, தொண்டாடு முதலிய காடெனாகப் பிரிக்கப்பட்டிருந்தது. லெப்பதிகாரத்தில் கூறிய கரிகாலவளவன் புகார் (காவிரிப்பூம்பட்டணம்) என்னும் கரையில் சுமார் 1760-வருஷத்திற்கு முன்னர் அரசுபுரிந்தவனென்று கூறப்பட்டிருக்கின்றது. கரிகாலன் என்னும் பெயரையுடைய சோழவம்சத்தில் பலரிருந்தனரென்று தெரிகின்றது

இச்சோழ பரம்பரையில் புகழ்ச்சோழநாயனர் கோசெங்கட்சோழநாயனர் இடங்கழிநார் என்னும் மூவர் அறுபத்து மூன்று அடியார்களில் சேர்ந்தவர்கள். இவருள் புகழ்ச்சோழநாயனர் உறையூரிலும் கருவூரிலுமிருந்து அரசாண்டு சிவன் டியாரை வழிபட்டு முத்திபெற்றவர்.

அத்திநகர் அல்லது வன்னியகுல க்ஷத்ரிய

ராஜஸ்தான்சரித்திரச்சுருக்கம் முதல்வாலியம் பக்கம் 86-87 இரண்டாவது வாலியம் பக்கம் 406-407. அக்கினி குல அரசர்களின் உற்பத்தி நிமித்தங்களைக் குறித்து கர்னல் டாட் துரையானவர் இத்தேசத்தில் பணைகளில் எழுதிய வடமொழி சொற்றங்களின் ஆதாரங்களைக் கொண்டு விசேஷமாக வெடுத்துக் கூறியிருக்கின்றனர். இவர்கள் கூறிய இரகுவம்சத்தரசர்களின் சரித்திரம் முதல்வாலியம் 87-வதுபக்கத்திலே சொல்லுவதாவது.

இவர்களுடைய பூர்வீக இராவணாதிகளாகிய இரக்கதர்களைச் சம்ஹரித்தும்பொருட்டு விஷ்ணுவானவர் தசரதபுத்திரனாக யாகாக்கினி மூலமாக எவ்வாறு உதித்தனரோ அவ்வாறுகளே அபுபருவதத்தில் (அற்புதபர்வதம்) குடிகொண்டிருந்த இருடிகள் முனிவர்கள் முதலிய தபோதனர்கள் செய்த யாகங்களை அழித்து அவர்களுக்கு அடிக்கடி விக்கங்களை புரிந்து வந்தமையால் அவ்விராக்கதர்களின் கொடுமையைச் சகிக்க முடியாமல் தபோதனர்கள் யாவரு மொருங்குசேர்ந்து திருப்பாற்கடலில் பள்ளிக்கொண்டிருக்கும் திருமாலிடஞ் சென்று முறையிட்டனர். அவரும் மற்ற தேவர்களுடன் ஆலோசித்தபின்னர். அத்தபோதனர்களுக்குத் தாங்கள் அக்கினியின் மூலமாக உதித்து அசுரரை ஜெயிப்பதாக வாக்களித்தனர். அத்தேவர்கள் அளித்த வரத்தின்பிரகாரமே ஸ்ரீவசிஷ்டர் விசுவாமித்திரர் முதலிய முனிசிரேஷ்டர்கள் பரிசுத்த ஷேத்திரமாகிய அபுபருவதத்தைத் தெரிந்து அவ்விடத்தைக் கர்காசுரனால் பீடிக்கப்படுத்தி அனற்குண்டம் ஒன்று புதுப்பித்தார். பின்னர் இந்திரனே புனருப்பவந்து செய்யவேண்டி தபோதனர்களாலே உருவாக்கி வைத்திருந்த சிவதனுவை வாங்கி அதனை அனற்குண்டத்திலிட்டு சஞ்சீவி மந்திரத்தை ஜபித்

நிக்கவே, அவ்வக்கினிக்குண்டத்தினின்று வலக்கையிற் கதை யைத் தாங்கி மார்மார் (கொல்கொல்) என்னுஞ் சப்தத்தோ டு ஒரு உருபையு உற்பவித்தது. இதற்குப் பிரமாரன் (முதல் கொல்பவன்) என்றும் நாமஞ் சூட்டப்பட்டது.

பின்னர் பிரமன் தன் அபிசத்தையே ஓர் உருவாக்கி யவ்வனற்குண்டத்திலிட அதினின்றும் கட்கம் ஒருகையிலும் வேதம் ஒருகையிலுந் தாங்கி யோர் உரு உண்டாயிற்று. இதற்கு (சலு என்னும் அங்கையினாற் செய்யப்பட்ட அங் கத்தையுடைமையால்) சொலாங்கியல்லது சலுகன் என் றும் பெயரிடப்பட்டது.

மூன்றாவது உருத்திர உருவின்மீது கங்காசலத்தைப் பிரோக்ஷித்து அக்கி குண்டத்திலிட்டு மந்திரோச்சாடனஞ் செய்தவுடனே கருநிறமுஞ் கோர உருவமுடையு ஓர் உருவா னது தனுப்பாணியாய் உற்பவித்தது. இதனைப் பிராமணர் கள் வாய்க்காவலிலிருந்தினத்தர்வ இதற்கு (க்ஷத்திரவார்-பூமியின் பிரித்கபாட்டம்) எனப்பொருள் படத்தக்க பிரிதிவிராஜதுவாரன் என்பதன் மருவாகிய "பிரிட் ஹிஹரா" புரி ஹராவென்னும் நாமத்தைக்கொடுத்தார்கள்.

காலாவது உருவானது விஷ்ணு அம்சமாதலால், விட்டு ணுவைப்போல சதுர்ப்புஜத்துடனே சான்கு கரத்திலும் நாலு ஆயுதங்களைத் தாங்கி அந்த அக்கி குண்டத்தினின் றும் எழுந்தது. இதற்குச் சதுராங்கன் அல்லது கோஹரான் எனனும் நாமத்தைச்சூட்டினர்கள். இதற்குச்சிங்கவாகனரூபி யாகிய சத்திதேவி பலவாயுதங்களையும் தந்தாள். இவர் பலகலை மேற்கென்று வெற்றியடைந்தமையால் முனிவர்களுடைய மகோபாவம் கைவல்லியம் அடைந்து சாதேஜிவித்தார்கள்.

இங்ஙனமாகப்பற்பல ஆதாரங்களைக்கொண்டு கர்னல்டா ட்டனையவர்கள் எழுதியதுபோலவே, தென்னிந்தியாவில் வழங் கும் அஷ்டதசபுராணங்களில் பிரமாண்டபுராணத்தும் ஆதி தேவபுராணத்தும் வைகாசபுராணத்தும் அக்கியினின்றும் பற் பல க்ஷத்திரிய வீரர்கள் அயோனி சம்பந்தமாயுதித்து, வேத விரோதிகளாகிய இராக்கதர்களையும் பைசாசர்களையும் சம்ம ரித்து வேத மார்க்கத்தை நிலைநாட்டினர்களென்று கூறப்பட் டிருக்கின்றது. ஆயின் இப்புராணக்கூற்றுகள் சிறிதில் அப்பிர தானமான அம்சங்களில் பேதப்படினும் அக்கிகுலம் உண்டி

அக்கி குலத்தவராகிய வன்னியர் உண்டி என்னும் பிரதான மான அம்சங்களில் ஒருகிலும் பேதமின்றி ஒத்தேயிருக்கின் றன.

இவ்வண்ணமாக வுற்பவித்த நான்கு வர்க்கத்தவர்கள் பிர மாரன் சத்திரியர் அபுகார் உஜின் முதலிய நாடுகளில் குடி புகுந்தனர். சோலாங்கி அல்லது சளுக்கியரின் சத்திரியர் அனவூர் பட்டணத்தில் குடிபுகுந்தனர். புரியாராவுடைய சத்திரியர் நோனுங்கல் மருங்கலத்தில் குடியேறினர்கள்.

இந்நான்கு வம்சங்களின் சாகைகளாவன.

பிரமாரன் சாகை நடு
கோஹரான் சாகை உசு
சலுக்கியர் சாகை பிசு
புரியாராசாகை ஐ

மேற் துணியவர்கள் யெழுதிய சரித்திரத்தில் அவ்வது பக்கத்தில் பிரமாரா கோஹரான் என்னும் அக்கிகுமாருடைய பூர்வ சரித்திரத்தைப்பற்றிக் கூறியிருப்பதுபோலவே சோலாங்கி வம்சத்தவரைப்பற்றிய சரித்திரம் யாதுக்தெரியாமையினால் விரித்துரைக்கக்கூடவில்லையென்கிறார். சாஸ்திர விற்பன்னர் கள் கங்காதிதீர்த்தத்திலேயிருந்த சூரபட்டனத்திலுள்ள இராஜகுமாரர்கள் எவ்வளவு பிரபலமாயிருந்தார்களோ அவ்வ ளவு பிரபலமாய்ச் சோலாங்கி பரம்பரையாருமிருந்தார்க ளென்று கூறியிருக்கின்றனர்.

சோலாங்கி என்கிற சளுக்கிவம்சத்தவர் கோத்திர முதலியவை மாத்வனிசாலைபற்றி பரத்வாஜகோத்திரம் கார் மோகேர்ட்காகாஸ் ஸ்வஸ்வதி ருத்-சாம்வேதம் கபாலீஸ்வர தேவன்-கார்த்து ரிவீஸ்வரா திர்-சார்லஜேஜனர் (மும்புரிரா லார்) காஞ்சிதேவி (காமாட்சிதேவி) மெய்பாலபத்தர்.

சளுக்கியர் வம்சபரம்பரையில் வந்த அரசர்கள் 52-பேர் அயோத்தியில் அரசுபுரிந்தார்கள். அவர்களில் கடைசியில் அரசுபுரிந்த விஜயாதித்தியன்னென்னும் அரசனுனையாகமேரு வென்றி பெறும்பொருட்டுத் தென்பாரிசமாக நல்லசை சேனையுடன் படையெடுத்து ரம்பையாற்றைக்கடந்து செல் லுங்கையில் இவ்வரசன் பகைவனுகிய திரிலோசனப் பல்லவ அரசனுடு எதிர்த்து போர் புரிய அப்போரில் விஜயாதித் தியன் மரணமடைந்தான். இங்ஙனமிருந்த விஜயாதித்தியன்

அருமைப்பத்தினி கருப்பவதியாயிருந்தமையால் தனது பர்த் தாவைக்கொன்ற பகைவனுகிய பல்லவ அரசனுக்குப்பயந்து ஓர் அந்தணனிடம் அடைக்கலம்புகுந்து அவனால் போஷித் கப்பட்டு வருகையில் ஓர் சுபதினத்தில் பாக்கிரமசாலியாகிய ஓர் அருமைப்பான புதல்வனைப்பெற்றாள். இப்புதல்வனுக்கு விஷ்ணு வர்த்தனனென்றும் நாமகரணஞ்சூட்டப்பட்டது; இச்சளுக்கிய இராஜகுமாரன் கல்வி வில்வித்தை முதலியவை களில் பயின்ற பின்னர் தனது பிதாவின் அரசாட்சியைக் கைக்கொள்ளவேண்டுமென்னும் அவா மேற்கொண்டு ரத கஜ துரகபதாதிகளுடன் சென்று பகைவனென்று தன் தக்தை இழந்த ராச்சியத்தைத் தன் வசமாக்கிக்கொண்டான். அதன் பின்பு பல்லவ அரசர்களுக்குப்பிரதான நகரமாகிய காஞ்சிபுர த்தை அரசபுரிக்திருந்த வோர் பல்லவ அரசன் புத்திரியை மணம்புரிந்துகொண்டான். இங்ஙனம் மணம்புரிந்துகொண்ட பல்லவ இராஜகுமாரத்திக்கும் சளுக்கிய வம்சத்தவனுகிய விஷ்ணு வர்த்தனனுக்கும் பிறக்தவன் இரண்டாவது விஜயா தித்தியன், இவனுடைய குமாரன் புலிகேசி வல்லபன். இப்பு கழேச வல்லபர் பவுத்திரர்கள் சத்தியாசிரியன் என்பவனும் குப்ஜவிஷ்ணு வர்த்தனன் என்பவனும் இவ்விருவரும் இரண்டு பிரிவினர்களாகப் பிரிந்து மேற்கு சளுக்கிய வம்சபரம்பரை யாரென்றும் கிழக்கு சளுக்கிய வம்ச பரம்பரையாரென்றும் முறையே யழைக்கப்பட்டார்கள். இவ்விரண்டு பரம்பரையா ருக்கும் இவர்களே மூதாதைபர்களானார்கள்.

இவர்களில் கிழக்கு சளுக்கிய வம்ச பரம்பரைக்கு மூதாதைபான இளைவனுகிய குப்ஜ விஷ்ணுவர்த்தனன் என்னும் அரசன் வெங்கிநாட்டை அரசபுரிக்திருந்த சளாங் கேயன வம்சத்தவராகிய பல்லவ அரசர்களைஜெயித்துக் கீழ்க் கரை யோரத்தில் தனது ராஜ்யத்தை கிலைநாட்டினான். விஷ் ணுவர்த்தனன் பிராமண சமயத்தை யனுட்டித்தவனுகையால் பவுத்தமதத்தை யனுட்டித்திருந்த வெங்கிநாட்டு பல்லவ அர சர்களையும் பிராமண சமயத்தைத்தழுவி நடக்கும்படி செய் தான். வெங்கிநாடு கிருஷ்ணைநதிக்கும் கோதாவரி நதிக்கும் இடையிலுள்ளது. கலிங்கநாடும் இதில் அடங்கியது.

மேற்கூறிய மேற்கு சளுக்கிய வம்ச பரம்பரைக்கு மூதாதையான சத்தியாசிரியன் என்னும் அரசன் கன்னெறி

காட்டையாண்ட அரசனையும் காஞ்சிமாநகரத்தை ஆண்டிரு ந்த பல்லவ அரசர்களையும் ஜெயித்தபின்பு கலிங்கராட்ட ரசனுக்கும் கோசலராட்டரசனுக்கும பயத்தை வருவித் தான். அன்றியும் சோழ விராச்சியத்தையும் ஜெயிக்கப் பிரயத்தனப்பட்டான். கி-பி-610-ம ஆண்டு இவன் வேறுகப்பிரிந்து அரசுசெய்யத்தொடங்கியவன். இவனுக்கு ஸ்ரீபிருதிவி வல்லபனென்றும் வல்லபேந்திரனென்றும் இரண் டாவது புகழேசனென்றும்பெயர்கள் வழங்கிவந்தனவென்று சாளிவாகன சகாப்தம் குருவாரம் ஏற்பட்டசாஸனத்தால் (கி-பி-634) தெரியவருகின்றது. இவ்வரசன் மகா பாக்கிரம சாலியாகையால் இவ்வரசனைப்புகழ்ந்து வித்துவான்களால் பாடப்பட்டுள்ளது. சினேதசத்து யாத்திரைக்காரனை ஹீயு ன்சாங் என்பவனால் இவனது அரசின்பெருமையையும் ராச்சி யத்தையும் புகழ்ந்துரைக்கப்பட்டிருக்கின்றது.

இக்காலத்தில் சளுக்கியருடைய பெரும்பை சோ சோழ பாண்டியகேரளருக்கு அதிபதியாகவிருந்த பல்லவர்களால் குறைவுபட்டது. ஆனால் விஷ்ணுவர்த்தனன் தன்னுடைய பராக்கிரமத்தால் தன்தக்தையின் அரசாட்சியைக் காப்பற்றி பிறகு பல்லவர்களை முறியடித்து அவர்களது பிர தான நகரமாகிய காஞ்சிபுரத்தைப் பிடித்துக்கொண்டான். இவ்வரசன் சேரன் (கேரளன்) சோழன் பாண்டியன் மற்றும் தட்சணதேசத்திலுள்ள இராஜாக்களைக் கீழ்ப்படுதி பிரபல மாக வாசபுரிந்துவந்தான்.

இரண்டாவது விக்கிரமாதித்தியன் பல்லவர்களை யுத்தத் தில் வென்றதாகக் காணப்படுகின்றது. இந்தச் சளுக்கிய வம்சத்தில் வந்த ஆறுவது விக்கிரமாதித்தியன் கன்னடதேச வாச சத்தியாகிய கடம்பராஜ குமாரிஜக்குத் தன்னுடைய குமாரத்தியை விவாகஞ் செய்வித்தான். தான் சோழ வம்ச இராஜகுமாரத்தியை விவாகஞ்செய்துகொண்டான். கடைசி யாக மேற்தப்பக்கமாகச் சென்ற சளுக்கியர் அரசாட்சி கணபதி அரசர்களாலும் மைசூர் இராஜ்ஜியாதிபதிகளாகிய ஹைசாலவல்லாளர்களாலும் முடிவெய்தியது. 1189 வது ஆண்டிற்குப்பின் இவர்களது அரச துறைவுபட்டமையால் சரித்திரமில்லை.

கிழக்குச் சளுக்கியர்

கிழக்குச் சளுக்கிய வரசர்கள், கீழ்க்கடற்கரையில் இவ்வம்சத்தை ஸ்தாபித்தவன் மேற்கூறியவாறு குப்ஜவிஷ்ணுவர்த்தனன். இவன்சகோதரனுடைய சத்தியாசிரியாவைவிட்டுவிட்டு கி. 610-வதுவருஷம்பிரிந்து வெங்கிநாட்டரசர்களாகியசலுங்கேயன் சக்தியாலும், முயற்சித்து இராஜமஹேந்திரத்தைப் பிரதான நகரமாக ஆக்கி கலிங்கதேசத்தைத் தவிர்த்துமுண்டெளாக அரசாட்சி செய்துவந்தார்கள்.

இவர்களது வம்சாவளி வருமாறு.

குப்ஜ விஷ்ணுவர்த்தனன்
இந்திராஜன்
இராஜராஜன விஷ்ணுவர்த்தனன்
மாங்கியாஜன்
மூன்றாவது விஷ்ணுவர்த்தனன்
சக்தி வர்மன்
காலாவது விஷ்ணுவர்த்தனன்
விஜயாதித்திய நரேந்திரமிருகராஜா
கலிவிஷ்ணுவர்த்தனன்
விக்கிரமாதித்திய யுவராஜன்
சளுங்கிய பீமன்
கொல்லாபிகண்டு விஜயாதித்தன்
அம்மாராஜன்
இராஜபீமன்
தானர்ணவன்
சக்திவர்மன்
விமலாதித்தன்

இந்த விமலாதித்தன் சோழ பரம்பரையிலுதித்த சூரிய குலத்தவனாகிய ராஜராஜனின் குமாரத்தியும் இராஜேந்திர சோழன் சகோதரியுமாகிய காத்தவர் வென்னும் இராஜகுமாரத்தியை மணம்புரிந்துகொண்டான். விமலாதித்தனது பூர்வகோத்திரம் அக்கிகாரனாய் உற்பவித்தபோதிலும் கான்கு அக்கி குமாரர்களின் சந்ததிகள் பலவேறுகப் பிரிந்தமையால் அவ்வர்சாகைக்கு அவரவர்கள் மூச்சுடையைப் பிரதானமாகக் கொண்டு சூரியகுலமென்றும், சந்திரகுலமென்றும், அக்கி குலமென்றும் பிரிந்திருக்கின்றனர். சளுக்கிய வம்சத்தவனுடைய

விமலாதித்தனைச் சந்திரகுலமென்றும் சளுக்கியவம்சமென்றும் சாஸனங்களும் நூல்களும் கூறுகின்றன.

முதலாவது குலோதுங்க சோழன் உற்பத்தி.
கலிங்கத்துப்பாணி அவதாரம் 7-வது செய்யுள்
தீங்கனிவி னந்தாழி செம்மலிவனென்றஞ்
செய்ய பிரிந்தழுவியையனிவனென்றுங்
தங்களின் மலிந்திருகுலத்தரசர்தாமுங்
தனித்தனியு வப்பதோர் தவப்பயனு மொத்தே.

ஷை செய்புளால் சளுக்கிய வம்சமும் சோழவம்சமும் கலந்து உற்பவித்தவன் முதலாவது குலோதுங்க சோழனென்று தெரியவருகின்றது. இவன் பாக்கிரமசாலியாயிருந்தமையால் இவனது இராஜ்ஜியம் வடக்கே கஞ்சம்வரையில் பரவியிருந்தது. தென்னிந்தியாவிலுள்ள பல க்ஷேத்திரங்களில் இவனது அரசாட்சிகாலத்தில் ஆங்காங்கு வெட்டப்பட்டசிலாசாஸனங்களால் இவன் 49வது அரசபுரிந்தானென்று தெரியவருகின்றது. இவனது உண்மையான பிதா சளுக்கிய வம்ச விமலாதித்தன். கங்கைகொண்டசோழனென்று புகழும் பண்டிதசோழனால் இவன்சுவீகாரஞ்செய்யப்பட்டானென்றுகூறுகின்றனர்.

பாணி களம்பாடியது 62-63-வது செய்யுள்.

62 பொனகமடக்க வரிசாத்தகுடைப்
பண்டித சோழன்றன்கழலிற்
றெவ்வர்வரிசாத்தமை பாடிச்
சிலையாடிய வலிபாடிச்
எத்தைப்பகலும் வெள்ளணிரா
ணிருகிலப்பாவை தன்கிணிழற்றாய்
கொற்றக்குடையைப் பாடிச்
குலோதுங்க சோழனைப் பாடிச்.

இவ்விரு செய்யுள்களில் பண்டித சோழன் புத்திரன் குலோத்துங்க சோழனென்று கூறியிருப்பினும், இவன்சொந்த தகப்பன் விமலாதித்தன்.

இவனது சேனாதிபதியாகிய கருணாகரத்தொண்டை சோழனென்பவன் கலிங்கதேசஞ் செயித்தவன் என்று அடியிற் காட்டும் பாணியால் விளங்கும்.

கடைநிறப்பு சகாவது.

இலங்கையெறிந்தகருணாகரன்ற
னிகல்வெஞ்சிலையின் வலிகேட்பீர்
கலிங்கமெறிந்த கருணாகரன்றன்
கனப்போர் பாடத்திறமிதே.

இச்செய்யுளால் கலிங்கராட்டை ஜெயித்தவன் கருணாகரச் சோழனென்று தெரிகின்றது.

பாணிகடை நிறப்பு கூடவது செய்யுள்.

காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த
கலவீமடவீர் கழற்சென்னி
காஞ்சியிருக்கக் கலிங்கங் குலைந்த
கனப்போர்பாடத் திறமிதே.

இவன் காஞ்சிபுரத்திலிருந்து கால்வசை சேனையோடு சென்று கலிங்கராட்டை ஜெயித்ததாக விளங்குகின்றது.

கருணாகரதொண்ட வன்னியனுசரதகம் 24-வதாகவியில் "மறைக்குவாலோலுங்க கருணாகரத்தொண்ட வன்னியனே என்றும்" 58-வது செய்யுள்.

அவிக்காதாங்கூபுனிதர்மஞ்சுத்தருள்வன்னியரையம்புகழச்
செவிக்கமுதமென்னக் கேட்டுச் சித்தையுவந்து சீர்தாக்கிப்
புவிக்காயிரம் பொன்னிறைத்திப் பொற்றண்டிகை பூண்டதோடு
கவிக்காயிரம் பொன்னளித்தான் கருணாகரத்தொண்ட வன்னிய

[னே

என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இப்படி குலோதுங்க சோழன் சேனாதிபதிகளிலொருவனாகிய கருணாகரச் சோழன்மீது இச் செய்யுள்கள் செய்யப்பட்டிருக்கவினங்குன்றது.

இக்குலோதுங்க சோழன் கலிங்கராட்டை ஜெயித்து தனது அரசாட்சியின் கீழ்வைத்து அரசபுரிந்ததுமன்றி பாண்டியநாடு சிங்களதீவு கேரள முதலிய காகளை ஜெயித்தாண்டதாக இவரதன அரசாட்சி காலத்திலேற்பட்ட பலசாலனங்கள் வினக்குகின்றன.

இக்குலோதுங்கசோழன் சிம்மாசனமேறிய பதினேராவது ஆண்டில் செங்கல்பட்டு மதுராந்தகம் தாலுக்காவிலுள்ள பெரும்பேறூரிலிருக்கும் சாந்தோன்றீசுவர ஆலயத்தில் எழுதப்பட்ட சிலாசாலனத்தில் கூறுவதாவது:—

அல்ஞ்துரை வெளியிட்ட மூன்றாவது வாலியம்
உடவது பாகம் எனும் கெய்பர் சாலனம்.

* * * * 10 ஒரு தனி மேருவிற் புலிவிலோ யாடவர்

11 கடல்திவாக்திரத்துப்பதியர்விதித்த கலஞ்சோரிகளி துமுறை கிற்ப விலங்கியதன்னவன் கருக்தலே பருக்தலைத்தி டதன் பொன்னகற்புரத்திடைக்கிடப்ப

12 விண்ணுள்பிற்குலப்பிறைபோல் கிற்பினையென்னுஞ் சொல்லைதிர் கொடித்தல்லது தன்கை

13 வில்லைதிர்கோடாவிக்கலன் கல்லதாகங்கிலிதுடங்கி மணலூர் கடிவென துங்கபத்திரையிலும்

14 எங்கணும்பட்ட வெல்களிறும் * * * * * * *

20 கோவிராஜகேசரிவர்மரான உடையார் குலோதுங்க சோழ தேவற்கு யாண்டு பதினெண்ராவது, ஐபங்கொண்ட சோழமண்டலத்து களத்தூர் கோட்டத்து ஸ்ரீ மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி சபையோம் எழுத்து * * * * * என்று இச்சாலனத்திலும் ஏனைய கூடச்சிரங்களிலு மிருக்குஞ் சாலனங்களிலும் இரண்டாவது ராஜேந்திரச் சோழன் எனவழங்கும் முதலாவது குலோதுங்கன் அரசாட்சியின் பெருமையும் அவனது வீரப்பிரதாபங்களையும் வெற்றிகளையும் விசேஷமாக வெடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. இதற்கினங்க.

பாணி களம்யாடியது கூடவது செய்யுள்
இடைக்கப்பொருது மண்ணரித்
தீர்ஞானட்ட பாணிக்கூம்
படைத்தப்பயின்ற மடப்பேய்கள்
பசிதீரோதம் வாரீரே.

ஒடி அவதாரம் உடு செய்யுள்,

பொருதாதிபர் கண்கள் செங்கிலை
போரிலோடிய கால்கள் வெந்தன
விருதாசப யங்கரன் செய்கையில்
வேல் வென்றது கீர்த்தி வெளுத்ததே.

இவ்வகையாகக்குலோதுங்கசோழன் மன்னர்க்கு மன்னனும்ப் பல நாடுகளைச்செயித்து ஏகச் சக்கராதிபதியாக அரசாண்டுவந்தான்.

செந்தமிழ் 4-வது தொகுதி 5-வது பகுதியிலே இராஜ ராஜன் சாஸனம்.

இச்சாஸனம் திருக்கோவலூர் திருவிரட்டானேசுரர்கோவில் கர்ப்பக்கிரகத்தின் தெற்கு, கிழக்கு, வடக்கு முதற்பலகையில் வெட்டியுள்ளது. இது ஓர் அழகான அகவற்பாவால் செய்யப்பட்டிருக்கின்றது. இதிலே இராஜராஜ சோழன் பெருமைமை முதல்வரியில் எடுத்துக் கூறியிருக்கின்றது, இவ்வாசன் பாண்டியனை வளைபுகத்துரத்தியும், கலிங்கத்தை ஜயித்தும், கங்கபாடியக்கைக்கொண்டும் கொங்கவரசனை வெளிப்படுத்தியும், சேரனை மலைனுடு போகவிடித்தும், உதகையை யழித்தும் புலிக்கொடியை யெங்கும் நாட்டினான்" என்று விளக்குகின்றது. இவ்வாசனை மதுபதி, காபதி, அகவபதி, கஜபதி என்றும் இந்திரசமான் ராஜஸர்வஞ்ஞனென்றும் புகழ்ந்திருக்கின்றது. இவ்வரசன் மனைவிஜர் சோன்மகளாம். இரண்டாம் மூன்றும்வரிகளில் திருவிரட்டானத்து வாணரையும் பெண்ணையின் பொலிவையும் வெகு அழகாகச் செய்திருக்கின்றது. இதில் அரசனுட்டியின் ஆண்டு 27 என்று கூறுகிறது.

முதல் வரியின் கடையிலும் இரண்டாம் வரியின் முதலிலும் வருவதாவது

கலிமகற் பிரியத்தையல் நிலைபெறுக், தண்டாவிளக்கு *** தான் திருப்பிப முயங்குக் தெவிவிருப்புடன் வந்து தித்தருளிய மலையர்திருக்குலத்தோ, ன்மையாக தமாகத் தொன்மையிற், குலதெய்வ, என்று வரையப்பட்டதில் சோனது பாய்பனையில் வந்தபெண் இச்சோழன் மனைவியென்று இதனுல் விளக்குகின்றது.

இவனது குமாரர்கள் சோழகங்கன் மும்முடிசோழன் வீரசோழன் விக்கிரமசோழன் என நான்குபுத்திரருண்டு, அன்றியும் அபிமானபுத்திரனுகிய ஆதொண்டைசக்கிரவர்த்தி முதலிய மூவரிருந்தனர்.

E. ஹல்ஸ்துனை யவர்களால் வெளியிடப்பட்ட தென்னிந்தியா ளாஸன புத்தகம் 3-வது வாலியம் முதற்பாகம் 59 பக்கம் 29 கெடிபர் ளாஸனம். இது செங்கல்பட்டு ஜில்லா காஞ்சிபுரம் தாலுக்கா மணிமங்கலத்தில் இராஜகோபால பெருமான் ஆலயத்தின் வெளிப்புற கிழக்குமண்டபத்தின் உட்பிராகாரத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

இச்சாசனம் இராஜேந்திரசோழனுடைய முதலாவதருலோத்துங்கன் சிம்மாசனமேறிய ஆண்டில் ஏற்பட்டது. கி-பி 1068-ஆம்.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருமாதுவியெனு பெருமாதர் இவர் தங் மாதேவியர்களாக மீதொளி வெண்குடையுயர்த்தி தினகலி பெயர்த்து தன்திரிய தாதையாகிய எறிவலி கங்கை கொண்ட சோழனை பொங்கெல் இருமுடி சோழனென்றும் பொருமுரட்டன்திரு

2. த்தம்பியர் தம்முள் வென்றிகொள் மும்முடிசோழனைத் தெம்முனை யிலிறற் சோழபாண்டியனென்றும் கொழிமன்னெடு கழல் வீரசோழனைப்படி புகழ்க்கரிகால சோழனென்றும் பாருதிகாழில் வாள்வலித் தடக்கை மதராத்தகனை

3. சோழகங்கனென்றும் தோள்வலி மெலிகல் பராத்தகதேவனை சோளவயோத்தியா ராஜனென்றும் ஆயிரத்தன் பொடுகருது காதலருள் இத்தலம் புகழ் ராஜேந்திரசோழனை உத்தம சோழனென்றும் தொத்தணி முளைக்கயல்முலங்கல் முடிகொ

4. ண்ட சோழனை இகல் விசையாலய னென்றும் புகர்முகத் தொழயர்களிற்று சோழ கேரளனென்றும் திண்டிறற் கடாரங்கொண்ட சோழனை இனகான் குலத்து திறப்பமர் சோளஞ்ஞக ராஜனென்றும் கனை கடல்படி

5. கொண்ட பலபுகழ் முடிகொண்ட சோழனை சுத்தசோழ னென்றுஞ் செந்தமிழ்ப் பிடகவிரட்டபாடிகொண்ட சோழனை தொல்புவியாளுடையச் சோழகன்னருக்கிய ராஜனென்றும் பின்னுந்தன் காதலர் காலர்தம்மூள் மெதகு கதிராங்கனைகழ

6. ல் மதுராந்தகனை வெல்பண்டச்சோழவல்லபனென்றுமானகிலக்கை யொர்னைச் செவகனை கிருப்பக்கிர சோழனென்றும் பருமணிசுடர் கெடிமகுடஞ் சூட்டிப் படிமிசை கிகழ்தளினுளிகல் வெட்டெழுத்து சென்றெறிண்டிறலிரட்டமண்

7. டலமெய்தி நதிகளுநாடும் பதிகளும் நெகமுழித் தனன் வளவனென்னு மொழிப்பொருள் கேட்டு வெகவெஞ்

சனுக்கி ஆகவமல்லன் பரிவமெனக்கிதென்றெரி விழித்தெ
ழுந்து செப்பருந்திரத்த கொப்பத்த கவையில் சென்றெதி

8. சென்றமர் தடங்கிய பொழுதவன் செஞ்சராமாரி
தன்குஞ்சராமுகத்தினுந்தன் நிருத்தடைமிலுங்குன்றுழப் புய
த்திலுந்தைக்கவுந்தன்னுடன்களிறெறிப தொடிகழல்வீரர்கள்
மடியவும் வலகையாதொருதனிசெகம் பொருபடை

9. வழங்கி மொய்ம்பமர் சனுக்கிதம்பி ஐயிந்தனும்
பொர்ப்புலிக்கெதிரும் தசபன்மனுமான மன்னவரில் மண்டலி
அசொகையநும் ஆகவன்புகழ ஆளும் ஆயையும் தெனிவர்
மட்ட வீழலங்கல் மொட்டையனுக்கிண்டிதல் கன்னிநாளம்
பனுமெனு

10. மிவர் முதலியர் எண்ணிலியனை சாலவிண்ணகத்
தெற்றி வன்னிபிரவனும் வயப்படைத்துத்தனும் கொன்ன
வில்படைக்குண்டமயனும் என்றின்ன வெஞ்சினவனசாசேந
டஞ்சிய சனுக்கி குலகுலேக்து தலைமயிர் விரித்து வெறுதெ
னித்துப்பின்றொற

11. வெக்கிகால்பறித்தேழு மெல்கடல் பாயத்தூரத்
திய பொழுதச் செருக் களத்தவன் விடு சத்தருப் பயந்தான்
மூவைத்திரமுலபராஜாதிபகட்டனை சகேகமுமெட்டுநடை பரி
களுமொட்டகினைதனும்வராகவெல்கொடி முதல் ராஜபரிச்
சத்தும்

12. ஒப்பில் சத்திபவ்வைசாங்கப்பை யென்றிவர்
முதல் தெனியர் சூழாமும் பாலையரீட்டமுமெனீயன பிறவு
முனைவையிற்சொனும் வினைய அபிஷேகம் செய்து கொண்
சைவயிற்பொருப்புடை கடாத்திக் கார்கடலிலங்கையில் விற
ற்படைக் கவிக்கர்ம ம

13. ன்வீரசலாமேகனைக் கடற்களிற்றெடு மகப்படக்க
திர்முடி சூடிதிலங்கையர்க்கிறைவன் மாரபரணர் காதலி
ருவரைக்களத்திடைப் பிடித்து மாப்பெரும் புகழ் மிகவளர்த்த
கொப்பரகேசரிபன்மர்ன உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவற்
குயாண்டுகாலாவ

14. து காள் (அடை)—ஜயங்கொண்ட சோழ மண்
டலத்து செல்வாட்டுக்கோட்டத்து மாகணூர் காட்டு ராஜ
நாராயணனிச் சதுருப் பெதிமங்களத்து மகாஸபையோம் இவ்

வாட்டை ஸிம்ம காயற்று அமரபகூத்து அஷ்டமியும் வியா
ழக்கிழமையும்

15. பெற்ற ரோஹிணிகள் எம்மூர் பிரம்மன்தான
மண்டபத்தே கூட்டக்குறைவறக்கூடியிருந்து எங்களூர்தென்
பிடாகை அமண்பாக்கத்து நில

16. ங்கீழ்பாற்கெல்லை மண்ணிக்காலுக்கு மேற்கும்
தென்பாற்கெல்லை மண்ணிக்காலுக்கு வடக்கும் மெற்பா
ற்கெல்லை.

17. அனைசங்குட்டத்திக்கும் கங்காசியென்னும் புலத்
திர்கும் கிழக்கும் வடபாற்கெல்லை பழுவூர் கக்கப்புத்தேரி
கைக்கு தெ.

18. [illegible]கும் இத்தேவர்கு முன்பு சிலர்லேகை பண்ணின
நிலத்துருக் தற்கும் ஆக இன்நாற்பாற் கெல்லைக்கும் கடவு
பட்ட நி-

19. லமும் ஓடையுமுடைப்பும் மெலோக்கின மரமும்
ஓணைக்கிய கினையும் இன்நாற்பாற் கெல்லைகுட் கடவுபட்ட

20. தெல்லாம் னைனுபதிகள் ஜயங்கொண்ட சோழ
பிரமாதி ராஜர்தாயார் காமவல்லையள் பகக்ஷ்ஸவம்கொண்டு
சுத்திரா

21. நித்தவர் இன்நிலத்துக்கு இறைபிறுத்துகுடுப்
போமாகோம் மகாசபையோங் சபையு

22. ளிருந்து கையிட்டுக் களைப்போகது பணித்த
சாம்பிசெட்டு நாராயணக்கிரமவித்தனும் இராயூர் ச-

23. ந்திர தேவ அத்தாழிகிரமவித்தனும் வலுகின
மாதவக்கிரமவித்தனும் பணிப்பணியால்

24. பணிகேட்டு எழுதினேன் இவ்வூர் ஊர்க்கர்ணத்
தான் அலங்காரன் சிராமநென் இவை என் எழுத்து [=]

மேற்த சனுக்குவேர்தனுடிய ஆகவமல்லனுக்கும் இராஜ
கேசரிவர்மனுன முதலாவது குலோதுங்க சோழனுக்கும் இர
ட்டைமண்டலத்தில் கொப்பத்தகையில் கடந்த யுத்தத்திலே
குலோதுங்க சோழன் வெற்றி படைத்ததையும் சிம்மளத்தர
சனென்று சிறைப்படுத்தியதையும் இச்சாஸனக்தெரிவி
கின்றது. இச்சோழனும் போர்புரியச்சென்ற அரசர்களா
வன இவனது சிறிய தாதையாகிய கங்கைகொண்ட சோழன்

இவன் சகோதரர்கள் மும்முடிசோழன் வீரசோழன் மதுராந்தகன் பராந்தகன் இவனுடைய குமார்கள் இராஜேந்திர சோழன் விசையாலயனென்னும் முடிகொண்ட சோழன் சோழகேரளன் கடாரங்கொண்ட சோழன் சுந்தர சோழன் சோழகன்னகுச்சிராயன் இவன் பதுத்திரர் சோழவல்லபன் கிருபேந்திர சோழன் முதலிய வரசர்கள்.

மேற்த சளுக்குவேந்தனுகிய ஆகவமல்லனெடு வந்த வரசர்கள் இவனது சகோதரன் ஜயசிங்கன் புலிக்கேசி சேனத்தலைவர்கள் தசபன்மன் அசோகையன், ஆரையன், மொட்டையன், கன்னிநுளம்பன், வன்னியரையன், துத்தன், குண்டமயன் முதலிய வரசர்கள்-இக்கல்வெட்டில் இரண்டு வம்ச அரசர்களைக் குறிப்பதால் சோழர் சம்புகுல வரிசரென்றும் சளுக்குவேந்தர் வன்னியினிடமாக உதித்த கான்கு அரசர்களில் ஓர் பிரிவினரென்றும் தெற்றென விளக்குகின்றது. குலோத்துங்கசோழன் கிழக்குசளுக்குவேந்தனுகிய ராஜராஜனுக்கும் ராஜேந்திர சோழனுடைய குமாரத்தி அமங்காதேவிக்கும் உதித்தவன். தந்தை வம்சம்வழங்காமல் தாய்வழியாகிய சோழவம்சமென்றே யழைக்கப்பட்டு வருகின்றது. அக்காலத்திலேயே இருவகையினராகிய அரசர்க்குள் பெண்கொள்ளல் கொடுத்தல் இருந்தல வென்றும் சில நூற்றாண்டுக்குப்பின்னர் ஒரே வகுப்பினராக மதிக்கப்பட்டு வந்தனரென்றும் தெரிகின்றது. இக்கல்வெணமையைப் பின்னர் கூறும் பிரமாணங்களுகன்குணரலாகும்.

ஷை தலையவர்கள் வெளியிடப்பட்ட வாலியம்3-வது 1-வது பாகம் 35ம் நெம்பர் லாஸனம்.

ஷை மணிமங்கலம் ஷை பெருமாள் ஆலயத்தில் உள் பிரகாரத்தின் கீழண்டை மதிலின் வெளிபக்கத்திலுள்ள லாஸனம்.

திரிபுவன சக்கிரவர்த்திபாகிய ராஜராஜன் அரசியற்றிய காலம் கி பி 1132.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும்ஜயமாதும் காமருவிய கலைமாதும் புகழ்மாதும் வைத்து புல்க அருமறை விதிதெறிய

2. னேந்து மறுத்தமிழ்த்தனி தழைப்பவருமுறை உரிமையின மணிமுடி சூடிதிக்கள் வெண்குடைத்திசைக்களிறெடுத்தருளிக்கூடம

3. தானென விளங்கக் கருங்கலிப்பட்டியைச் செங்கோல் தரப்பப் பொருவவியாழி புவிவளர்த்துடன்வர வில்லவர் தெலுங்கர்மீனவர்

4. சிங்களர் பல்லவர் முதலிய பார்த்திவர் பணிய எண்ணருங்கற்பயண்ணகம் புனர்ந்து செம்பொன் வீரசிம்மாசனத்து உலகுடைமுக்

5. கொக்கிழானடிகளோடும் விற்றிருத்தருளிய கோபரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கிரவர்த்திகள் ராஜராஜதேவர்கு யாண்டு அ.

என்று விக்கிரமசோழனுக்குப்பின் வந்த ராஜராஜசோழனைப்பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வசன் கி-பி 1132-ல் அரசாண்டவன். இவனுக்குப் பின்குமார குலோத்துங்கசோழன். குலோத்துங்கன் என்னும் பெயரையுடைய சோழர்கள் பலபேர்கள் அரசுசெய்திருத்தலால் அவர்கள் இன்னரின்னரென்று அடியிற்கூறும் காரணங்களால் அறிந்துகொள்க.

சோழ மன்னருள் பலர் "குலோத்துங்கன்" என்னும் பெயரையுடையவராகத் தெரியலாகும். அப்பலருள் ஒருவன் விசயாலயன் பேரனும் ஆதித்த சோழன் மகனுமாகிய பரகேசரிவர்மன், சங்கராமராகவன், பராந்தகன், வீரநாராயணன் எனப் பலப்பெயர்களால் வழங்கு மியைந்த குலோத்துங்கன் என்பவன். மற்றொருவன் கோப்பரகேசரிவர்மன் இராஜேந்திர சோழன் புத்திரியினுடைய குமாரனும் சளுக்கு வேந்தனுகிய விஷ்ணு வர்த்தனன் குமாரன் ஆகிய உபய குலோத்தமன் என விளங்கிய அபயனுகிய குலோத்துங்கன் ஆவன். வேறொருவன் மேற்கூறிய உபய குலோத்தமனுகிய அபயன் பேரனும் விக்கிரம சோழன் மகனும் ஆகிய குமார குலோத்துங்கன் ஆவன். இன்னும் ஒருவன் இச்சோழர்வழியிற் சங்கமன் எனப்பெயரிய சோழனுக்கு மகனுப்ச் சங்கர சோழனுடன்பிறந்த குமார மதிதரன் எனப்பெயரிய குமார குலோத்துங்கன் ஆவன்.

புகழேந்தி ஒட்டக்கூத்தர் ஆங்காங்கு பாடிய பாடல்கள் பலவற்றுள் குலோத்துங்கன் என்னும் பெயரல்லாமல்

விக்கிரம சோழன், அபயன், உத்துங்கன், சயதுங்கன் கண்டன், மானுபாணன், அகளங்கன்என்பன முதலாகச்சோழர் சிறப்பு பெயரும் பொதுப்பெயரும் பலவாகப்பயில்வன. கண்டன் மானுபாணன் அகளங்கன் என்பன சோழர் பலருக்கும் வழங்கும் பொதுப்பெயர்களாம்.

இக்கால்வரில் அபயகுலோத்துங்கன்மீது ஜெயங்கொண்டான் கலிங்கத்து பரணிபாடினர்.விக்கிரமசோழன்மீது ஒட்டக்கூத்தர்விக்கிரமசோழன் உலாபாடினர். சங்கரசோழனுலா விலே சங்கரசோழனுக்கு முற்பட்ட சோழராஜ பாரம்பரியம் எடுத்தோதியவிடத்து

பரணிகொண்ட விறலோன் என்றும் கூத்தனுலாகூடிய விக்ரம சோழன் என்றும் கூத்தன் உலாமாலைபோடு பிள்ளைத்தமிழ்மாலைபெற்ற சோழன் என்றும் கூத்தனுலாக்கண்ணிகளிலும் பொன்னுபிரஞ் சொரிந்த பூபதி என்றும் கூறியிருத்தலாலும் வீரராசாயண குலோத்துங்கன் கி-பி 900 முதல் 940-ம் ஆண்டுவரையில் அரசாண்டிருத்தலாலும் விக்கிரம சோழன் கி-பி 1118 முதல் 1132-ம் வரையில் அரசாண்டிருத்தலாலும் ஜயங்கொண்டார் பாடியபரணிகொண்டவன் அபயகுலோத்துங்கனும் ஒட்டக்கூத்தர் பாடல் கொண்டவர்கள் விக்கிரமசோழனும் அவன் மகன் குலோத்துங்க சோழனும் அவன் மகன் ராஜராஜ சோழனுமாம். இதனால் குலோத்துங்கன் என்னும் பெயர் சோழவரசர்க்குள் பலருக்கிருந்த போதிலும் அவரவர்கள்மீது பாடப்பட்ட நூல்களாலும் கால வளவாலும் தெரிந்துகொள்க.

திதம்பாம் சாசனம்,

E. ஹல்ஸ் துரையவர்களால்வெளியிடப்பட்ட 3-வது வாலியம் 2-வது பாகம் கெ. 86- காலணம் பக்கம 210.

இச்சாஸனம் கடாலூர் ஆலயம் 2-வது பிரகாரத்தின் மேலண்ணயிலிலில் வெட்டப்பட்டுள்ளது. மூன்றுவது குலோத்துங்கசோழனை இம்மாஸனமேறிய 9-வது ஆண்டிலேற்பட்டது.

ஸ்வஸ்தி ஸ்ரீ உயல்வாய்த்து வளம்பெருகப் பொய்யாத கான்மறையின் செயல் வாய்ப்பத் திருமகளுஞ் ஜயமகளுஞ் சிறந்து வாழவெண்மதி பொற்குடை விளங்கவேல் வேந்தரடி வணங்க மண்மடந்தை மனங்களிப்ப மனுநீதி தழைத்-

2. தொங்கச் சக்காமுஞ் செங்கொலுத்திக்கனைத்துஞ் செல நடப்பக்கற்பகாலம் புவிகாக்கப் பொற்பமைந்த முடி புனைந்து விக்கிரமபாண்டியன் வேண்டவிட்டதண்டால் வீர பாண்டியன் மக்கன்பட ஏழகத்தார்பட மறப்படைபடச் சிங்களப்படை மூக்கறுப்புண்டு அலைகடல்

3. புகவீரபாண்டியனை முதுகிடும்படி தாக்கி மதுரையும் அரசுங்கொண்டு ஜயஸ்தம்பம் கட்டி அம்மதுரையும் அரசும் காடும் அடைத்த பாண்டியற்களித்தருளி மெய்ம்மலர்ந்த வீரக்கொடியுடன் தியாகக்கொடி எடுத்துச் செம்பொன் வீர இமயவனத்துப் புவனமுழுதுடை-

4. யாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் மதுரைகொண்டருளின ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ஒன்பதாவது கான் என்பத்தெட்டினுல் பிரசாதஞ்செய்தருளிவந்த செய்யுப்படிப்படி ஆளுடையார்க்குச் சாத்தியருளத் திருப்பாவித்தாமத்-

5. திருநந்தவனஞ் செய்யவும் இத்திருநந்தவனஞ் செய்கிற திருநந்தவனக்குடிகள் பேர் இருவர்க்கு இலக்கைக்குங் கொற்றுக்கும் திருநந்தவனப்புற இறையிலியாகவும் ராஜராஜ வளநாட்டுக் கீழ்வெங்கை நாட்டு பெருகெல்லூருடையான் திருவேகம்பமுடையான் திருவனந்தீஸ்பரமுடையா—

6. னை கோளராஜன் பெரும்பற்றப்புலியூர் உழைச் சரணன் வடகன் திருநட்டமாடிபேரில் அங்கியகாமகாணத்தால் பலர்பக்கலும் விலைகொண்ட நிலம் இவ்வூர்பிடாலை-கடவாய்ச் சேரியான தில்லைகாயக கல்லூரில் சுந்தரசோழவதிக்கு மேற்கு உத்தம சோழவாய்க்காலுக்குத் தெற்குமுதற்-

7. கண்ணேற்று இரண்டானஞ்சிறைத்துக்கொல்லை நிலம் ஒருமாவும் பிடாகை அச்சேரிச்சாத்தங்குடியான பறிபால குலகாலகல்லூரில் குந்தவைவதிக்குமேற்கு உத்தம சோழ வாய்க்காலுக்குத் தெற்கு காலாங்கண்ணேற்று முதற்சிறைத்து மிருதிக்குறைவு உள்ளடங்கத்தரம் பெற்றநிலம் அரையே மூன்றுமா.

8. முக்காணி அரைக்காணிமுக்கிரிகைக் கீழ்முக்காலே காணுமா அரைக்காணிமுக்கிரிகையும் ஆகக்கொல்லை உட்பட

ஊர்ப்படி நிலம் அரையொலுமா முக்காணி அரைக்காணிமுக் திரிகை கீழ்முக்காலெ காலுமா அரைக்காணிமுக்திரிகைகீழ் ஒன்பதுமாமுக்

9. காணிக்கீழ் முக்காலெமுக்காணியும் திருநக்தவனமும் திருநக்தவனப்புற இறையிலியுமாக ஆளுடையார் தெவதானம் இவ்வூரில் பல வரவையொடுங் கூட்டவும் இவ்விலக்குக்கு இவ்வூர் தண்ட நிச்சயித்த காசில் மடக்கொபாதியால் வந்த காசு ஊரில் கழிக்கவும் இப்படிக்குக் கொயிலில் திருப்

10. பூமண்டபத்துக்கு எமீபத்திலெ திருமாளிகையிலெ கல்வெட்டவும் திருநக்தவனக்குடிகள் பெர் இருவற்குந் திருநக்தவனக்குடிகள் செய்து வருங்குடிமை உள்ளிட்டன கொள்ளாதொழியவும் பெறவெணுமென்று கோளராஜன் நமக்குச் சொன்னமையில் இப்படிசெய்

11. யக்கடவதாகச்சொல்லி இப்படி கனக்கிலும் இட்டுக்கெள்ளுகடவர்களாக வரிக்குக் கூறுசெய்வார்களுக்குஞ் சொன்னேம். இக்கிலம் ஒன்பதாவதுமுதல் பல வரவையொருங்கூட்டித் திருநக்தவனமும் திருநக்தவனக்குடிகள் பெர் இருவற்குங் கிலக்கைக்குங் கொற்றுக்கும் திருநக்தவனப்

12. புற இறையிலியுமாய்நிற்க இப்படிக்குக் கொயிலெ கல்வெட்டவும் பண்ணி இத்திருநக்தவனக்குடிகள் அளக்கக்கடவ திருப்பள்ளித்தாயம் பெர் ஒன்றுக்கு நாலொன்றுக்குக் குறணிகாஞ்சியாக வந்த திருப்பள்ளித்தாயம் திருப்பூமண்டபத்துக்கு முதலாக அளக்கவும் இவர்களைத் திரு

13. நக்தவனக்குடிகள் செய்துவருங்குடிமையுள்ளிட்டன கொள்ளாதொழியவும் பண்ணுவது எழுதினோம் திருமந்திர ஓலைராஜராயண மூவெந்தவெளான் எழுதி விழுப்பாதிராஜரும் நுளம்பாதிராஜரும் பாண்டியராஜரும் களப்பாளராஜரும் கர்நாடராஜரும் இராஜவல்லவப்

14. பல்லவராயரும் வயிராதிராஜரும் எழுத்திட்டுப் புருந்த செய்யும்படிப்படி எழுதியது.

இது சுமார் 720-ஆண்டிற்குமுன் அரசுபுரிந்த மூன்றாவது குலோதுங்கசோழன் பராக்கிரமத்தையும் கோளராயன

தெம்பாத்திற்தருகிலுள்ள கடவாச்சேரியில் திருநக்தவனத்திற்காக விடப்பட்ட நிலத்தையுந் தெரிவிக்கின்றது.

ராஜராராயண மூவேந்த வேளான் விழுப்பாதி ராயர் நுளம்பாதிராயர் பாண்டியராயர் களப்பாளராயர் கர்நாடராயர் இராஜ வல்லப பல்லவராயர் வயிராதிராயர் இப்பெயர்கள் அக்காலத்தில் பிரபல நிலைமையிலிருந்த பல்லவ சோழ சளுக்கிய முதலிய அரசர் பரம்பரையைக் குறிக்கின்றன. இப்பரம்பரையைச் சேர்ந்தோரும் இவைபோன்ற பெயரையுடையோரும் சிதம்பரம் சீர்காழி மாயவரம் கும்பகோணம் முதலிய தாலுக்காகளில் வசிக்கும் சம்புகுலத்தாரென்றும் வன்னிய ரென்றும் வழங்கும் வகுப்பினரால் தற்காலத்தும் வழங்கப்பட்டு வருகின்றது.

மை. வாலியம் 3 வது 1-வது பாகம் 36-ம்
நெப்பர் சாஸனம் 82 பக்கம்.

ராஜகோபால பெருமாள் ஆலயத்தின் மண்டபத்து தென்பக்க மதிலுவிள்ளது. இச்சாசனம்மூன்றாவதுகுலோத்துங்கசோழதேவன் ராஜ்பபாரக்கொடங்கிய 12-வது வருஷத்தில் ஏற்பட்டது. கி பி 1189-வது வருஷம் டிசம்பர்மீ 4வ திங்கட்கிழமை யென்று பிரோபஸ்ஸர் or Professor வில்சன் துரையவர்கள் கணித்திருக்கிறார்.—

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச்சக்காலர்த்திகள் மதுனையும் சுழமும் பாண்டியனை முடித்தலையுங்கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்குயா

2. ண்டு 12-ஆவது தனுகாயிற்று அபரப்ப கூத்து கவமியும் திங்கட்கிழமையும் பெற்ற சித்திரைகாள் ஜயங்கொண்ட சோழமண்டல

3. த்துக்குலோத்துங்க சோழவளகாட்டுக் குன்றத்தூர் காட்டு பணிமங்கலமான பாண்டியனை இருமுடி வெங்கண்ட சோழச் சதுர் வேதி மங்க

4. லத்து மகாலஷ்மியோம் எழுத்து நம்மூர் வண்டுவரை பதி ஏம்பெருமான் கொயில் ஸ்ரீகாரியஞ்செய்யிற காராம் பிச்செட்டிக் கேசவபட்டனும் ஸ்ரீலக்ஷ்மனைக் கண்காணி

5. அட்டமுக்கிதானனும் கண்டு இக்கோயில் திருவாய்க்குலத்து எம்பெருமானுக்கு காராழி அரியால் ஒருநி

குப்போனகம் அழுது செய்தருள இம்மண்டலத்து இக்காட்
டுக்கிழ்மா

6. ங்காட்டு காட்டுத் திருச்சுரத்துக் கண்ணப்பன்தூதி
ஆதிகாயகன் நீல கங்தரையன் வன்னிய காயகன உத்தம
நிதிக் கண்ணப்பன் காரிட்டுக்கொண்டிவிட்டகிலம் இவ்வூர் ஆ

7. * * * லிமெடு பணியறுதி வாய்க்காலுக்குக்
கிழக்குமுதற் கண்ணற்று தெற்கு கண்ணிக்காலுக்கு வடக்கு
கிழக்கு இவ்வாழ்வா திருவினையாட்டத்துக்கு மேற்கு வடக்கு
பெருங்காலுக்கு

8. தெற்கு மத்தியஸ்தம் மணிமங்கலமுடையான்வான
வாரிசனும் மகா ஜனப்பிரியனும் மணிமங்கலமுடையான்
சோம தேவனும் பக்கல் விலைகொண்டு உடைய உறப்போக்
தா

9. னை அலங்காரப்பட்டி குழி கூர இக்குழி அறுநா
றும் இவ்வன்னியனுபன உத்தம நிதிக் கண்ணப்பர் பக்கல்
வேண்டும் பொன்கொண்டு சந்திராத்தவனை செல்வதாக
யிறை

10. யிழிச்சி குடித்தோம் மகா ஸபையோம் ஸபையுள்
கின்று-ஆணைப் புறத்து தொணைப்பட்டன் பணிக்கப்பணி
கேட்டு எழுதினேன் இவ்வூர் கணக்கன்.

11. ஆடவல்லான் சிவவாக்கிய தேவ ராஜ உத்தமபி
பிரியனென் இவை யென்னெழுத்து

குமாரர் குலோத்துங்க சோழன் சிங்காசன மேறிய
12-வது ஆண்டில் 710-வருஷத்திற்குமுன் "தூதி ஆதிகாய
கன் நீலகங்கரையன் வன்னிய நாயனன் உத்தமநிதி கண்ண
ப்பன்" என்பவன் ஓர் சேனாதிபதி. இவ்வன்னியன் தினைக்
தோறும் காஞ்சி அரசி பிரசாதஞ்செய்து எம்பெருமானுக்கு
அமுதுசெய்விக்குப்படி 600-குழி நிலம்வாங்கிவிட்டதை இச்
சாஸனம் தெரிவிக்கின்றது. சென்னையிலும் காஞ்சிபுரம்முத
லிய விடங்களிலும் வசிக்கும் வன்னியர் பல்லவரென வழங்
கும் அரசர் வகுப்பினர்கள். காயகன் என்னும் பட்டப்பெய
ரும் ஏனைய ஆதிக்கங்களும் வழங்கி வருதல் பிரத்தியட்சம்.
இவ்வரச வம்சத்தினர் தொண்டமண்டலத்திலே பல கோட்டங்
களிலுள்ள நாடுகளில் மன்னவேடு (மன்னர்வீடு அரசிருப்பி
டம்) என்னும் கிராமங்களில் வசிக்கின்றனர். சென்னை

இராஜதானியின் ஜனத்தொகையில் 100-க்கு 42-க்கு அதிக
மாகவே வன்னியரிருக்கின்றனர். இவ்வளவு பெருந்தொகை
யினர் காலபேதத்தால் ஏழ்மை நிலைமையில் பெரும்பாலார்
வசித்தபோதிலும் அம்மரபிற்குரிய ஆதிக்கங்கள் மாறுமல்
இன்று மிருக்கின்றன. இவற்றை கியாயவாயிலா பற்றிரி
டத்தில் கிருபிப்பாம். வன்னியர்க்கு காயகன் என்னும் பட்
டப்பெயர் 710-வருஷத்திற்கு முன்னரே யிருந்தென்று இச்
சாஸனத்தால் காட்டப்பட்டது.

E. ஹல்வதங்காயவர்களால் வெளியிடப்பட்ட 3-வது
வாலியம் முதற்பாகம் 12-வது பக்கம் 63 நெம்பர் சாஸனம்.
திருவல்லமென்னும் க்ஷேத்திரத்தில் பிலவநாதேசர் ஆலயத்
தின் மேலண்டை மதிலிலுள்ளது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ விசையகண்ட கோபாலதேவர்க்கு
2. யாண்டு மூன்றுவது முதல் அழகிய பல்லவன்
எதிரிலிசோழச்
3. சம்புராயனென் நம்பற்றுக்கடன்பும் ஆயமும்
4. சொள்ளுமிடத்தில் முற்காலத்தில் இல்லாதொருவா
5. பான செலவனவு மாகாணிவாசியும் காலுமாவா
சிபுங்
6. கழித்துக்கடமையும் ஆயமுங்கொள்ளக்கடவதாகச்
7. சொன்னேம் அழகிய பல்லவன் எதிரிலி
8. சோழசம்புவராயன்.

மை தூவா வெளியிட்ட 3-வது வாலியம் 105-வது
பக்கம் 74 நெம்பர் சாஸனம்.

விஜயகண்டகோபால தேவர்க்குத் திரிபுவன சக்கரவர்த்
தியென்கிற பெயரும் வழங்கியதாக அடியிற்காட்டும் திருமலை
ஸாஸனத்தால் விளங்கும். இது திருமலையின் வன்னக்கிட்டிய
ருகைக்குச் செல்லும் வழியில் இடதுபாரிசச்சுவரில் பதியப்
பட்டிருக்கின்றது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள்
2. ஸ்ரீ ராஜ ராஜ தேவற்கு யாண்டு இருபதாவது
முதல் செயங்கொண்ட
3. சோழமண்டலத்து அத்தமனூர் நாட்டு வீரன் பாக்க
4. த்து இலாலப்பெருமான் மகன் ஆண்டான்கள்

5. பங்களராயர்க்குப் பல குன்றக் கோட்டத்துப்பும்
6. களாட்டி கடவில் * * * க்குன்றத்தூரான ராஜக
7. ம்பிர கல்லூர் இவர்க்குக் காணியாகீழ்
8. கோக்கின னிறும் மேலேக்கின பரமும் கா
9. ற்பாலெல்லையும் விற்றொற்றிப்பரிக்கிரயத
10. தக்கு உரித்தாவதாக குடுத்தோம் அத்திமல்ல
11. ன்சம்புகுலப்பெருமாளான ராஜகம்பிரச்சம்
12. புவராயனென்.

இடவாவியம் 89 பக்கம் 61 கெ. சாஸனம்.

இச்சாஸனம் விழிந்தியூருக்கிற்குச்சமீபத்தில் பொய்கை யென்னுமிடத்தில் பெருமாளாலயத்தின் தென்னண்டை மதில் அடிவாரத்திலுள்ளது. சாலிவாகன சகாப்தம் 1161-ம் ஆண்டில் திரிபுவன சக்கிரவர்த்தியாகிய இராஜ ராஜதேவர் சிம்மாசனமேறிய இருபத்தாலாவது ஆண்டிலேற்பட்டது. இது அழகிய சோழனான எதிரிலி சம்புவராயனுல் புத்தூர் என்னுஞ்சீராமத்தை சோள ராமனிடத்திலிருந்து பொன்னை கொண்டு மண்ணறவிடப்பட்டதாகத் தெரிவிக்கின்றது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகவையாண்டு ஆயிரத்தொருனூற்று பத்தொன்று செல்லாநின்ற ஸ்ரீதிரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்குயாண்டு இருபத்தாலாவது.

2. தைமாஸம் முதல் பொய்கையான ராஜேந்திர சோழ கல்லூர் சித்தினைபெழிமலே மண்டல விண்ணகரான அருளாளப் பெருமாளுக்கு புத்தூர் நற்பாற்கெல்லைக்கு முட் பட்டமேலே.

3. க்கினமாமும் கீழ்நோக்கின கிணறும் நன்செய்புன் செய் நற்பாற்கெல்லையுமுட்பட்ட கடமை குடிமைகளும் ஆயம்பாடிகாவல் சில்வரி எடுத்துக்கோட்டி அரிமுக்கை-

4. யுட்பட்ட பல கெல்லாயங்களும் கார்த்திகை அரிசி கார்த்திகைநிகாசு கார்த்திகைப்பச்சை வேளிப்பயறு தீர்நிலக் காசு தறியிறை தட்டிறை காலகதப்பாட்டம் த
மமடவ

5. ட்டார்ப்பாட்டம் ஆசுவக்கடமை செக்குக்கடமை ஏரிமீன்காசு இனவரி வகைந்த காசுபட்டோலைக்காசு மெய்பெற்பட்ட பலகாசாயம்

6. களும் அத்தாயமும் வெட்டிதனி ஆளுட்பட்ட அனைத்து நெல்லாயங் காசாயங்களும் உட்பட திருவிடையா ட்டமாக மஹிமண்

7. டலத்து ஆயானர் நெறயாமன் கோளன் பக்கல் பொன்னைக்கொண்டு மண்ணறவிட்டேன் விசாசனி ஆய்ம மப்பன் அழகிய

8. சோழனை எதிரிலி சோழ சம்புவராயன்.

இச்சாஸனங்கள் விஜயகண்ட கோபால தேவருடைய மேறிய 3 - 20 - 24-வது ஆண்டுகளில் எழுதப்பட்டன. அழ கிய பல்லவன் எதிரிலி சோழச் சம்புவரையன் என்பவன் விஜ யகண்டகோபால தேவரின் கீழ் சிற்றரசனாயிருந்தவன். பல்ல வன் சோழச்சம்புவராயன் என்னுமொழிகள் முற்காலத்தில் வழங்கியதுபோல் பிற்காலத்திலும் அரசகுப்பானைபோர்த்த வன்னியர்களால் தஞ்சை தென்னாற்காடு முதலிய இல்லாக்க ளில்சிற்சில பாகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

திரிபுவன சக்கரவர்த்தி கி-பி 1265-ஆண்டில் அரசபுரிந் ததாகக் கூறுகிறபடி சாஸனத்தால் விளங்குகின்றது.

விக்கிரமசோழன் குமாரன் இரண்டாவது குலோத்துங்க சோழன் அவன் தமிழ்நாடு முழுமையும் முப்பது வருஷம் அரசபுரிந்தான். இவன் குமாரன் இரண்டாம் இராஜேந்திர சோழன் சிம்மாசனமேறியபின்னர் வடபெண்ணையாற்றின் வடபாலி லுள்ள சோழராட்சியம் ஹொய்சல தேசத்துக்கணபதி அரச களால் பிடிக்கப்பட்டது. 1216-ம்வரு அரசசெய்த இரண் டாவது ராஜராஜ சோழன் காலத்தில் கலிங்கராட்டை பிழந் துவிட்டான். 1242-ம்வரு கோபெருஞ்சிங்கசோழன்குமார் இரு பது வருஷம் அரசபுரிந்தான். இவனுக்குப்பின் விஜயகண்ட கோபால தேவன் அரசசெய்தான். 1286-ம்வரு மதுரைக் கசோழன் அரசசெய்துவந்தான். இச்சோழன்மதுரையைச் சஞ்செய்தமையால் மதுரைக்கொண்டருளிப்பட்டான். இப்பெயர் சோழப் பல்லவராட்டில் செய்கல்பட்டிற்குத் தெற்கில் 10-மயிலிலுள்ள சிறு நகரத்தை மதுராந்தகமென்று சோழன் பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது. இவனது அரசு 1310-ம் வரு மகம்மதிடர் டையெழுச்சி வாயிலிரு

தது. 1347-ம்வுவயாயில் மகம்மதியர் சோழராச்சியத்தைக் கைபற்றியிருந்தனர். பிறகு இக்களால் மகம்மதியர் துரத்தப்பட்டார்கள்.

நாராயண சம்புராயன் 1335-ம் வு வரையில் காஞ்சிபுரத்தை யரசாண்டதாகச் சிலசாஸனங்கள் தெரிவிக்கின்றன. 1356-ம்வுமுதல் 1377-ம்வுவரையில்விஜயகண்டகோபால தேவச்சோழராட்டையுண்டான். இதன்பின்விஜயநகர அரசர் ஆளுகையில்சோழநாடுசேர்க்கப்பட்டது. கடைசியாக16ம்நூற்றாண்டில் அரசுபுரிந்தவன் வீரசேகர சோழன். இத்தச்சோழன் மதுரையைப் பிடித்துக்கொள்ளவே-மதுரையாண்ட பாண்டியன் அச்சுததேவ மகாராயனிடம்போர்முறையிட்டுக்கொண்டான். ராயர் தனது சேனாதிபதி காகம்மராயனை யனுப்பிச் சோழனைத்தாக்கிவிட்டு பாண்டியனுக்குமதுரையைக்கொடுக்கும்படி திட்டஞ்செய்ய அவன் வீரசேகர சோழனைத் தாக்கிவிட்டு தஞ்சைநகரத்தையும்பிடித்துக்கொண்டான். விஜயநகர இராயர் அரசாட்சியில் பல்லவசோழ சளுக்கிய வர்ணிப்பரம் பரையார்சிற்றரசர்களாகவும்ஜமீன்தார்களாகவும் பரிணமிக்கவுமாய்விட்டார்கள்.

மல்லிகார்ச்சுன தேவராயர் அரசுசெய்தகாலத்தில் வேற்பட்ட வில்வனல்லூர் செம்பேட்டிலுள்ள திருஷ்ணதேவ மகாராயர் அரசாட்சியில் ஏற்பட்ட வையிதீஸ்வரன்கோயில் செப்பேட்டிலுள்ள சேர சோழ பாண்டிய பல்லவ சளுக்கிய அரசபரம்பரையின் உண்மைநிலைமை இத்தன்மையதென்றும் பின் கூறப்படும் இவ்விரு லாஸனங்களும் கன்கு விளக்கும். இவற்றை எட்டாவது அத்தியாயத்தில் காண்க.

மனுனீதிகண்ட சோழன்

சோழமண்டலத்திலே சூரியவம்ச சோழவரசர்களுக்கு இராஜதானியாக விருந்த நகரங்கள் ஐந்தினுள் ஒன்று திருவாரூர் என்னும் க்ஷேத்திரமாம். இச்சேத்திரத்தைப் பூர்வத்தில் ஸ்தாபித்தவர் சயம்புமனுப்பெரு தாங்கிய மனைவாகிய மூசுகுந்த சக்கிரவர்த்தியென்று திருவாரூர் புராணங் கூறுகின்றது. இச்சக்கிரவர்த்தி பரம்பரையில் உதித்தவர் மனுநீதி கண்ட சோழர். இவர் மனுநீதி கோடாது அரசுசெய்து வருகாளில் தியாகராஜபெருமான் திருவருளால் இவருக்கு ஓர் அருமை புத்திரர் அவதரித்தார். இப்புத்திரனை அதிக

பட்சத்துடன் வளர்த்து வருகையில் பல கலைகளையும் கரடறக் கற்றும் அறிவொழுக்கங்களில் சிறந்தும் இளவரசு பருவத்தை அடைந்தகாலத்தில் ஓர்தினம் தேர் ஏறி நிகுவாவ வரும்போது பசுவின் இளங்கன்று ஒன்று தேர்க்காலில் அகப்பட்டு அறைபட, அக்கோக் கண்ணுற்ற அக்கன்றின் தாய் ஆறுத்துயரடைந்து தனது அருமை கன்றிற்கு நேரிட்ட ஆபத்தை அரசனுக்கு அறிவிக்கும்படி மணிகண்டவிண்ணகரின் கடைவாயிலில் கட்டியுள்ள ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினுலாட்டஅம்மணியோசையைக்கேட்டுப்புறதினது மந்திரிகள் மூலமாகப் பசுவின் துயரத்தை அறிந்து அரசனுக்கு அறிவிக்க, பெருமான் திருவையாறுதித்த புத்திரபேற்றின் ஆசையை பொழித்து, பசுவுக்கு ஒரு சிறிதும் மாருமல் பசுவின்கன்றைத் தேர்க்காலிலேகொன்ற தன்புத்திரனையிதிவிடுங்கோ அத்தேர்க்காலிலேமேடியும்படியாக்கோ பிக்கபோது மந்திரிகள் அவ்வண்ணஞ்செய்ய வீதி விடங்கன் உடலவெறு உயிரவேறுகப் பிரிந்திறந்தான். அருமைப்புதல்வ னோயழுதமனுநீதிகண்டசோழன் பணிலேலையையும் மனுநீதி வழுவாதிருத்தலையும் அறிந்த தியாகராஜப்பெருமான் ரிஷபாரூடராய் எழுந்தருளி மனுநீதி கண்ட சோழராஜனுக்கு தரிசனத்தந்து பின்னர் பசுவுயிரை உயிர்ப்பித்தாரென்று புராணங்கூறுகின்றது. (அது வருமாறு)

பெரியபுராணம் திருவாரூர் சிறப்பு.

44. ஒருமைந்தன் தன்குலத்துக்குள்ளா னென்பது முணர்ந்தான்
தருமச்சன்மே ராழியுற வூர்ந்தான்றன்னை யீன்றதன்
அருமைத்த வாசாட்சி யிதோ மற்றெளிதோ தான்.

45 தண்ணளி வெண்குடை வேந்தன் செயல்கண்டு தரியாது [ர்
மண்ணவர்கண் மணிபொழிந்தார் வானவர்பூமழைபொழிதார
அண்ணலவன் கன்னெஞ்சே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்க டொழுதின்ருன் வீதி விடங்கப்பெருமான்.

இம்மனுநீதி கண்ட சோழ மரபில் வந்தவராகிய அபயகுலசேகரச்சோழ மகாராஜாவால் திருவாரூரில் அரசு செய்திருக்கையில் கம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையார் திருவருளால் சமயகுரவர் மூவர் அருளிய தேவாரங்களை அப்பூதிஅடிகள சோழ ராஜாவின் வேண்டுகோளின்படி திருமுறைகளாக வகுத்தார்.

உபாபதி சிவாசாரி யருளிச்செய்த
திருமுறை கண்ட பூராணம்.
முதல்செய்யுள்.

உலகமெழிற் தருசைய மீது தோன்றி யோவா
துவரு பொன்னிருழ் சோணாட்டின்
றிலகமென வினங்குமணி மாடலா சூர்த்தியா
ரீசேசப்பதம் பணிந்து செல்கோ வோச்சி
யலகில் புகழ் பெறுராச ராச மன்னனமய
ருஞ்சோன் பாலெய்து மன்ப,
நிலகுமொரு மூவருள் பதிகமொன்றே
யினிதினுரை செய்யவன்பாற்கேட்டு

என்று கூறிய செய்யுளில் அபயகுல சேகர சோழராஜர் திருவாரூரில் அரசு புரிந்தவென்று இதனால் தெரிகின்றது. சோழராபிஷேகித்த அபாய சோழன் அரசுசெலுத்திய காலத்தில் இச்சோழன் அனுமதிபெற்று சேக்கிழார் பெரிய புராணம் பாடிமுடித்து சிதம்பரம் நடராஜர் சன்னிதியில் அரங்கேற்றினரென்று ஷெயார் அருளிச்செய்த செந்திலாண்டவர் புராணம் கூறுகின்றது.

சேக்கிழார் புராணம் 69-கவி.

ஏழிசைத்தொண்டர் புராணத்தை மீதே
வாசித்துப் பொருளருளிச் செய்வீரென்று,
சோழர்பெருமான் முதலாமபரெல்லாஞ் சொல்லக்
கேட்டே குன்றையுளி கன்றுளராகிக்
காழ்சடையாடிபெருந்தகை சீர்த்தாஞ்செயத
வாசகத்தை மேவிவிளக்க விரித்துச்சொல்லச்
சூழிரும் தமிழ்ஞாலத்தி யாரெல்லாஞ் சுருதிமொழி
யிதுவெனக்கை தொழுது கேட்டார்.

இவ்வகையாக பெரியபுராணத்தை அரங்கேற்றிய பின்னர் சேக்கிழார் நாயனார்க்கு அனபாய்ச்சோழன் உத்தமச் சோழப்பல்லவன் என்னும் பட்டத்தைக் கொடுத்தார்.

சேக்கிழார் புராணம் 8-செய்யுள்.

அத்தகைய புகழ்வேளான் மரபிற் சேக்கிழார்
குடியின்வந்தவருண் மொழித் தேவர்க்குரித்
தத்தபரி வனவனுக்தன் செல்கோலோச்சுக்
தலைமையளித்தனர் நயந்தருத் தலது பேரு

முத்தமசோழப்பல்லவன்றனென்று
* முயர்பட்டம்பெருத்திட வாக்கினர்சாட்டி
யித்தலுறை திருமாகேசுரத்திலன்பு
நிறைதலினுன் மறவாத கீலையமிக்கார்.

அன்றியும் இச்சேக்கிழார் சகோதராகிய பாலறுவாயர் என்பார்க்குத் தொண்டைமான் என்னும் பட்டத்தைக் கொடுத்துத் தன் மூதல் மந்திரியாகச் சோழ அரசன் வைத்துக் கொண்டானென ஷெயார் புராணம் 89-வது செய்யுளில் கூறப்பட்டிருக்கின்றது.

ஷ உபாபதி சிவாசாரியாருளிய ஷ
கோயிற் புராணம் பாயிரம் 11-வது செய்யுள்.

ஒன்றிய சீரிரவிகுலமு வந்த குளியலகுய்யத்
தன்று புதித்திரு நீற்றுச் சோழனெனமுடிசூடி
மன்றிடைதீ தாழுதெல்லை வளர்கன கமயமாக்கி
வென்றி புனைய சுபாயன் வினவிய பூங்கழல் போற்றி.

இவ்வகையானே சம்புதுல வாசகர்களின் பக்தியைப்பற்றியும் மனுநீதிகோடாது அரசுசெய்தமையைப் பற்றியும் பூர்வத்தில் ஆன்றோரால் செய்யப்பட்ட பற்பல ஸ்தலபுராணங்களினும் ஏனைய புராணங்களினும் கூறியிருத்தலே அங்காங்கு கண்டு கொள்க.

* சோழப்பல்லவன் என்பது சோழமகாபார்க்குள் வழங்குமோர் பட்டப்பெயராம். இப்பெயரையுடைய அனபாயச்சோழன் பெரிய புராணமியற்றிய வேளாளகுல திலகாகிய சேக்கிழார்க்குஉத்தமன் என்னும்அடையுடன்உத்தமசோழப்பல்லவன்என்றும்உயர்க்கப்பட்ட தன்மை கூறினார். பல்லவன்என்னும்சொல்லில்சோழரும்பல்லவரும் அன்றாயச்சோழன் அருகைக்குமுன்னரே கொள்ளக்கொடுக்க வொன்றுபட்டவர்களென்று விளங்குகின்றது.



* கண்டராதித்தியர் 8-10வது திருவிசைப்பா

வெங்கோல்வேந்தன் றென்னருமிழமுங் கொண்டதற்; செங்கோற்சோழன் கோழிவேந்தன் செம்பியன்பொன்னணிந்த வளிசோல் வயோர்பாடி யாடுமணி நின்லேயம்பலத்து, லெங்கோனீச னெம்மிறையையென்முகொலெய்தவே: சோன்மல்குநில்லை செம் பொன்னம்பலத்தாடதன்னைக், காரார்சோலைக் கோழிவேந்தன் றஞ்சையர் கோன்கலந்த வாரானின் சொற்கண்ட ராதித்தனருந் தமிழ்மாலைவல்லர், பேரானந்தப் பெருமையோடும் பெரின்ப மெய்தவரே.

கண்ட ராதித்திய வர்ம்ர் இயற்றிய திருவிசைப்பாவில் சென்னன் நாட்டையுங் ஈழநாட்டையும் ஜெயித்தவ ரென்றும் கோழி (உரையூர்) வேந்தனென்றும் தஞ்சையர் கோனென்றும் கூறுதலால் இவர் பிரபலமாக சுமார் ஆயிரம்வரு ஷங்களுக்குமுன் அரசசெலுத்தியவரென்பது இவரால் செய்யப்பட்ட இப்பாக்கள் தெரிவிக்கின்றன.

† பல்லவ அரசனுடைய வீரண்டைய தேவன் இரண்டாவது பராந்தகன் குமாரத்தியாகிய குந்தாதேவியை விவாகஞ்செய்துகொண்டான்

‡ தெக்கு கலிங்கத்தை யாண்ட விமலாதித்தியன் சூரியவம்ச ராஜராஜன் குமாரத்தியும் இரஜேந்திர சோழன் மகளுமாகிய குந்தவா (Kundava) என்பவளை விவாகஞ்செய்து கொண்டான்.

§ மேற்கு கலிங்கத்தை யாண்ட ஏழாவது விக்கிரமாதித்தியன் வீரராஜேந்திர தேவசோழன் புதல்வியை விவாகஞ் செய்து கொண்டான். இவ்விவாகத்துக்கு கலிங்கவிக்கிரமனென்றும் இரண்டாவது திரிபுவனமல்லனென்றும் பெயர் வழங்கியதாக சாசனங்கள் தெரிவிக்கின்றன. இச்சிலருக்குவேந்தன் கி பி-1075-1125 வரையில அரசசெலுத்தியவன்.

|| விமலாதித்தியன் குமாரன் முதலாவது இராஜராஜனென்றும் எட்டாவது விக்கிரமாதித்தனனென்றும் அழைக்கப்பட்ட சிலருக்குவேந்தன் இராஜேந்திரசோழன் குமாரத்தியாகிய அமங்காதேவியைவிவாகஞ்செய்துகொண்டான். இவனது குமாரன் இரண்டாவது ராஜேந்திர சோழனென்றும் முதலாவது குலோத்துங்கசோழனென்றும் அழைக்கப்பட்டான். இவன் ராஜேந்திரதேவன், குமாரத்தியாகிய மதுராந்தகியை மணம்புரிந்துகொண்டான். 49-ஆவது அரசியற்றியவன்.

வேள்புலவரசர் அல்லது சளுக்கிய வேந்தர்,

வடக்கே அற்புத பருவதத்திலே மக ரிஷிகள் செய்த வேள்வியினிடமாக (யாகத்தில்) இந்திரன் பிர. மன் உருத்திரன் விஷ்ணு என்னும் நான்கு தேவாம்சமாக நான்கு அக்கி புத்திரர்கள் உதித்தார்களென்று பூர்வ வட மொழி கிரந்தங்களைக்கொண்டு கர்னல் டாட் அவையவர்கள் எழுதியராஜஸ்தான் சரித்திரத்திலுள்ளதைச்சங்கிரகமாக, 203 வது பக்கத்திற்காட்டப்பட்டிருக்கின்றது. அந்நான்கு வன்னி புத்திரர்களில் பிரமனது அம்சமாகிய சொலாங்கி சளுகன் சாளுவன் சளுக்கியன் அல்லது சளுக்கியவேந்தன் என்று வழங்கப்படும் அக்கி குமாரனுடைய வம்சத்தவர் வடதேயிருந்து தெற்கே நோக்கி வந்தார்களென்று முதற் சங்கத்தினுடைசியிலும் இரண்டாஞ் சங்கத்திலும் வழங்கிவருமான பிங்கல முனிவரால செய்யப்பட்ட பிங்கல நிகண்டே போதியசாட்சியம். எங்ஙனமெனின் பிங்கலம் 752-வது சூத்திரம். சளுக்கு வேந்தர்பெயர். வேள்புலவரசர்சளுக்குவேந்தர் 754 குறுநில மன்னர்பெயர். வேளிரென்பதுயாங்கள்மேற்கே. என்றிவைப் பட்டிருத்தலால்வேள்வியினிடமாகவுதித்த சாளுவமன்னர்அல்லது வன்னிமனையின் மரபிர் நீண்ட காலத்திற்குமுன்னரே தென்னாட்டில்வந்து குடியேறினவர்களென்றுகருவதற்கு விளங்குகின்றது. இச்சளுக்கு வேந்தர் வேள்வியினிடமாக உதித்தமையால் (வேள்வி—புலம்—அரசர் என்பன) வேள்புலவரசரெனதென்மொழியில் வழங்கப்பட்டுவருகின்றது. அன்றியும் வேள் என்னும் மொழி வேள்வி சம்பந்தத்தைக் குறிப்பிக்கின்றது. வேள்வியென்பதற்குப் பிரமாணம் பிங்கலம் 4117வது சூத்திரம். அருச்சனை யளித்தலாதி பொழுஞ்சனி—வேள்வியுங் குண்டமும் வேள்வியும் வேள்வி, என்றதனால் வேள்புலவரசர் வேளிர் வேள் என்னும் வன்னிபர் யாகத்தினிடமாக பிரமனது அம்சமாக உதித்த சளுக்கு வேந்தரின் மரபாரென்று நியாயவுயலாய் காட்டப்பட்டது.

வேள் என்னுந் தென்மொழி (வன்னிப்பூக் குமாரனுடைய முந்தை டவனேரி (வேள்வியில வந்த) சளுக்கியர் வேந்தனும் மிமைதனையும் உணர்த்துகின்றது. எங்ஙனமெனின் பிங்கலம் 4116வது சூத்திரம். காரகரியுஞ் சளுக்கியர்வேந்தனும் வேளிரான்னும் வேளென்னலாகும் அன்றியும் பூர்வீசசூரலில்

நீயே, வடபான் முனிவன் தடவினுட்டோன்றிச்
செம்புனைந்தியற்றி சேணெடும் புரிசை
யுவராவீகைத்துவசர் யாண்டு
நாற்பத்தொன்பது வழிமுறைவந்த
வேளிருள் வேளே. புறம் 201.

என்றதனால் வன்னிமன்னர் வடக்கே முனிவரியற்றிய வேள்வியில்வந்தவர்களென்றும் நாற்பத்தொன்பது வழிமுறைவந்த வேளிருள்வேளேயென்றுங் கூறுதலால் சங்கம்மிருந்திருத்தகாலத்தொட்டு தென்னாட்டில் சளுக்கிய வமிசரிருந்தாதாக மேற்காட்டியசெய்யுள்விளக்குகின்றது.

சாளுவ மன்னர்களின் ஆதி சரித்திரத்தை நோக்கும் போது சளுக்கரும் கடம்பரும் குலத்தில் வேறுபட்டவரல்லர். தம்மைப் பிறப்பித்த முனிவரது ஆரீதி புத்திரரென்னும் பெயரும், மானவய கோத்திரமும், முருகக்கடவுளைத் தங்கள் குலதெய்வமாகக் கொள்ளுதலும் இவ்விருவருக்கும் வித்தியாசமின்மையே காணப்படுகின்றது. வேளிர் அல்லது வன்னியர்குலத்தில் பிறந்தவரும் சோன்செங்குட்டுவன் மகனுவியுமாகிய வேண்மாளுக்குச்சோணை யென்னும்பெயர் சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டங் கூறுகின்றது. இதனால் சிலப்பதிகாரஞ்செய்த இளங்கோவடிகளின் தமையன் செங்குட்டுவன்மனைவி வேள்புலவரசரின் (சளுக்கியர்) வம்சத்தவளென்றும் சேரரும் சளுக்கியமன்னரும் பண்டைக்காலத்திலே கலந்தவர்களென்றும் ஏற்படுகின்றது.

வன்னிமினிடமாக உற்பவித்த வேள்புலவரசர் வேளிர் என்னும் சொற்கள் கங்கையினிடமாக உற்பவித்த நான்காங் குலத்தினராகிய வேளாளர் மரபைச்சுட்டிக்கூறுதல் பொருத்தாதேரவெனின் அங்ஙனங் கூறுதற்குப் பூர்வ நூலாட்சியின்மையானும் அம்மரபினர்க்குரிய எழுபதுமுதலிய நூற்களில் அரசருக்குரியசின்னங்கள்கூறுமையானும், பிங்கலமுதலிய நிகண்டுகளில் வேள்புலவரசர் வேளிர்என்னுஞ்சொற்கள்சளுக்குவேந்தர்குறுநிலமன்னரென்னும்பெரிளுத்தருதலானும், நான்காம் வருணத்தார்க்குரியபெயர்களில் வேளாளரென்னுஞ் சொல்லிருதலானும் வேளாளர் சார்பாகச்சொல்லப்பட்ட ஏர் எழுபதில் சூத்திரரெனக்கூறுதலானும் "சதுர்த்தருக்கொடை வள்ளலும், வேளாளர்," என்று பிரமாணமிருத்தலானும் "வே

ளாளரென்பார் கேள்புலவரசர்" வேளிர் என்னுஞ்சொற்களுக் குரியாராகாதென்பதுநின்னம். அன்றியும் சங்கம் மிலேற்றிருக்காலமுதற்கொண்டு வழங்கிவரும் தொல்காப்பியப் பன்னிருபாட்டியல்முதலிய விலக்கணநூல்களிலும் சோழிடதூல்களிலும் வடமொழி தென்மொழி புராணேதிகாசங்களிலும் பெரியபுராண முதலிய பக்தி நூல்களிலும் வேளாளர் கான்மரும்வருணத்தவரென்றே கூறப்பட்டிருக்கின்றது. இதனை உண்மை இரண்டாம் மூன்றும் அத்தியாயங்களில் கூறிய நூல்களிலுள்ள பிரமாணங்களைக் கொண்டு நிருபித்திருத்தலைக் கண்டுகொள்க.

காலம் நாற்றாண்டின் தொடக்கத்தில் கோதாவரிதீரத்தில் கடந்த யுத்தத்தில் சளுக்கிய வேக்கனுடைய விஜயாதித்தியன் திரிலோசன பல்லவனால் கொல்லப்பட்டான். இவ்விஜயாதித்தியன் குமாரன் விஷ்ணுவர்த்தனன். இவன் பல்லவராஜ குமாரத்தியை விவாகம்புரிந்துகொண்டான். இவனது குமாரன் இரண்டாவது விஜயாதித்தன். இவன் வம்ச பரம்பரையில் வந்த விமலாதித்தியன் சோழ அரசனுடைய ராஜராஜரின் குமாரத்தியாகிய குந்தவீ என்பவளை விவாகஞ்செய்துகொண்டான். இவனது குமாரன் முதலாவது ராஜராஜனுடைய எட்டாவது விஷ்ணுவர்த்தனன். இவன் குரியகுல இராஜேந்திரசோழன் குமாரித்தியாகிய அமங்காதேவியை விவாகம்புரிந்துகொண்டான். இவனுடைய குமாரன் முதலாவது குலோத்துங்கன். பல்லவவம்சமும்சளுக்கிய வம்சமும் சோழவம்சமும் ஒன்றுபட்டு அதன் வழியாக உற்பவித்தவன் இராஜகேசரி வர்மனை முதலாவது குலோத்துங்க சோழன்மீது கலிங்கத்துபரணி யெடுத்துக்கொண்டார்பாடினார். அப்பரணியில் காளிக்குக் கூளி கூறியது 54-வது செய்யுளிலே

மறித்தோடி யெவ்வரசுஞ் சரியவென்று
வருமனுக்கைப் பல்லவர்கோன் வளைவேந்த
னெறித்தோடை யிலஞ்சூடைக் களிற்றின்மேற்கொண்
டிரைவேட்ட பெரும்புவிபோலிகின்மேற்செல்ல,

இச்செய்யுளில் பல்லவர்கோன் வளைவேந்தன் என்று கூறியிருப்பதால் சோழஅரசர்களுக்கும் பல்லவஅரசர்களுக்கும் பெயர் ஒன்றெனவிளக்குகின்றது. இக்குலோத்துங்க சோழன் அரசாட்சியிலும் இவனுக்குப்பின் வந்த சோழ அரசர் ஆளுகையிலும் ஏற்பட்டசிலாசாஸனங்கள் முதலியவைகளில் அழகிய பல்லவசம்புவராயன், சம்புகுல பெருமாளான ராஜகெம்பிர சம்புவராயன், இராஜவல்லப பல்லவராயன், நாராயண சம்புவராயன், ஆதிநாயகன் வன்னியநாயன் முதலிய பிரயோகங்களிருக்கின்றன. இவைபோன்ற பெயர்கள் சம்புகுலத்தாரெனவும் பல்லவரெனவும் அழைக்கப்படும் அரசர்வகுப்பினராகிய வன்னியரால் ஆளப்பட்டு வருகின்றன. பல்லவ அரசர்களுக்குப் பிரதான நகரமாயிருந்த காஞ்சிபுரத்தில் வன்னிய வம்சத்தவர்க்கு மகாராட்டராயுள்ள குடும்பத்தார் வீரசம்பு என்னும் பட்டப்பெயரைத் தொன்றுதொட்டு நாளதுவரைக்கும் வழங்கிவருதல் பிரத்தியட்சம்.

அன்றியும் வளவனூர், கண்டன்மங்கலம், வில்லவனல்லூர், பல்லாவரம் பல்லவராயனத்தம், வேளியனூர் முதலிய ஊர்களின் பெயர்கள் சோழ பில்லவ, சளுக்கிய வம்சங்களின் பெயர்களைக் காட்டுதலாலும் அவ்வவ்வூர்களில் சம்புகுலத்தாராகிய வன்னியர்கள் ஆதி தொட்டு பெரும்பான்மையும் வசித்து வருதலாலும் மேற்காட்டிய சிலாசாஸனங்களில் வழங்கிய சம்புவராயன் பல்லவராயன் வன்னியராயன் முதலிய சொற்களின் பிரயோகம் வன்னியர்க்கே சொந்தமென்று நிருபிக்கப்பட்டது.

6-வது அத்தியாயம்.

பாண்டியவமிசீயத்தின் அரசசந்ததியாரின் பூர்வோத்திரம்.

இந்த அத்தியாயத்தில் பாண்டியரும் சோழரும் பெண் கொடுத்தல் கொள்ளல் இவைகளில் கலந்தவர்களென் றும்அவர்களுக்கு வன்னியரென்னும்பெயர் தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருகிறதென்றும் நிரூபிக்கப்படும்.

பாண்டியநாட்டு எல்லைகள்.

வடபரிசத்தில் வெள்ளாறும் தென்பாரிசத்தில் கன்னி யாகுமரியும் கிழ்பாரிசத்தில் (மன்னார்குடாக்கடல் பாக்ஸலை சந்தி) சமுத்திரமும் மேல்பாரிசத்தில் பெருவழிவழுதிக்கா லும எல்லைகளாம்.

அரிவம்சத்திலும்ஏனையபுராணங்களிலும்கூறியபடிகேர னன் அல்லதுசேரன் எவ்வாறுசேரவிராஜ்ஜித்திற்கு ஆதி புருஷனுகவேற்பட்டானோ அவ்வாறுகவேபாண்டியராஜ்ஜியத் திற்குப் பாண்டியனும் ஆதிபுருஷனானன். இப்பாண்டியனும் குருவம்சத்தின் புத்திரனான வன்னியின்வம்சத்தில்வந்தவனென் று முன்னமே அரிவம்சத்தில்காட்டப்பட்டது. ஆதிபாண்டி யன் வழியில் வந்த அனேகபாண்டியர்கள் அரசாண்டபின் னர் குலசேகரபாண்டியன் கடம்பவனத்தை யழித்து மது ரை மாநகரத்தை யுண்டாக்கி அரசுபுரிந்து வந்தானென்று திருவிளையாடற் புராணமும் ஆலாசிய மகாத்மியமும் கூறு கின்றன.

திருவிளையாடற்புராணம் திருநகரங் கண்டபடலம்

2-வது செய்யுள்.

இன்ன நம்புள தேழிசை யேழான் மிடற்றளிகள்
இன்ன நம்பயில் கடம்பமா வனத்தின் கிழ்சார்த்
தென்னர் சேகர னெனுங்குல சேகர னுலக
மன்னர் சேகர னரசு செய்திருப்ப தணைவுர்,

இச்செய்யுள் குலசேகர பாண்டியன் அரசு புரிந்திருந்த நகர மும் மணலூரென்று தெளிவிக்கின்றது.

இப்பாண்டியன் சோமசுந்தர பெருமான் கட்டளைப்படி ஆலயமும் அழகிய கோபுரம் கட்டுவித்து கால்வகை விருத்தி தானையும் ஏனையவருத்தானையும் அந்தகரில்குடியேற்றினா னென்று அடியிற்கூறும் சுலோகம் தெளிவிக்கின்றது.

ஹாலாஸிய மாகாத்மியம் 7-வது அத்தியாயம் பைரவிய சுதம்பவனபுரீகிர்மான 60-61-வது சுலோகம்.

ப்ராஜ்ஞப்ரவ்ருத்தைர்ஹி விதாலோபநாதிச ।
ராயஜாதூ ஸுரைர்ஹ்ருஷ்ட ஸ்வவிஜ்யாவிஜாரதை ॥
ப்ரஜ்ஞபாஹுஜைர்ஜ்ஞேஷ்டை வ்ருஷலைரவரைர்ஜனை ॥
ப்ரதிமானஸமாபூர்ண நிவிஷீக்ருத்யத்புரம்

பரமசிவனுக்கிரகத்தால் குலசேகரப் பாண்டியன் என் னும் அரசன் எல்லாத்தில் விசேஷ ஆவலுடையவனாய் சர்வ வித்தியா பாங்கதர்களான பிராமணர்களாலேயும் மகாபராக்கிரமசாலிகளான க்ஷத்திரியர்களாலேயும் வைசியர் சூத்திரர்களாலேயும் மற்றும் அனுலோம பிரதிலோமாதி அன் னிய ஜாதிகளாலேயும் நிபிடீகரிக்கும்படி மகத்தான பட்ட ணத்தை ஸ்தாபித்தான்

ஷை திருநகரங் கண்டபடலம் 10-வது செய்யுள்.

அருந்தவ நிருக்கை யந்தணருறைவுள தச
ராசனைங்குல வணிகப்
பெருந்தெருல்வேளாளர் பேரஞ்சால்
பெருங்குடி யேனைய கரிதேர்
திருந்திய பரிமா நிலைக்களங் கழகந்திருச்சவை
மாறு தான்குண்டி
யிரந்தவர்க் கருத்து நல்லறச் சாலே
யினையபிறவு நன்கமைத்தான்.

இக்கரில் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலியோர் வசிக்கும் வீதிகளும் யானை தேர் குதிரை யிலைகள் தங்கு தற்குக் கூடாரங்களும் கல்விச்சாலைகளுங் குலசேகர பாண் டியன் செய்வித்தான். இப்பாண்டியனுக்குப் பின்மலையத் துவஜன் என்னும் பெயருடைய பாண்டியன் பட்டத்தி ற்கு வந்தான். இப்மலையத் துவஜன் சூர சேனனென்னுஞ் சோழ ராஜனது புத்திரியாகிய காஞ்சன மாலையை விவாகஞ் செய்து கொண்டான்.

கடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம்.

2. கவி.

1னுவற முவந்ததன் வழிச்செல வடத்தும்
புனிதன்மல யத்துவசன் வென்றிபுனை பூணன்
கனிபழுத மன்னகரு ணைக்குமைபுள் காட்சிக்
கினியன்வட சொற்பட நிழற்கட வினோன்

3. கவி.

வீரவேல் வேல்வடிவன் வேட்கைவினோ தமி
னாமட வார்கன்பதி ஞயில வுள்ளான்
வானெழுகு பாலுயழி வந்தொழுகு சுர
சேனன்மகன் காஞ்சனையை மன்றல்வினை செய்தான்

இதனால் பாண்டியனுஞ் சோழனும் ஆதியிலேயே ஒருவனே டொருவர் கொள்ளக் கொடுக்க விருந்தார்களென்று சாற்படு கின்றது. மலையத்துவஜ பாண்டியனுக்கும் காஞ்சன மாலைக்கும் சோம சுந்தர கடவுள் அருளால் தடாதகைப் பிராட்டியார் அவதரித்து யுக்தவயசில் பாண்டிய ராஜ்ஜியத்தை அரசு புரிந்து வந்தார். பாண்டியன் திருவுருப்பெற்ற சுந்தரேசப்பெருமான் தடாதகைப்பிராட்டியாரை மணம்புரிந்து இகலோகம் பாண்டிய நாட்டை யாண்டார்.

கல்லாடம் 13-வது.

1. மூன்றழலுன் மறை முனிவர் தோய்ந்து.
மறைநீருருத்தலின் மறையோனுகியும்.

மூன்றழல்—(காருக பத்தியம் தக்கணாக்கினியம் ஆகவ நீயம்) என்று மூத்தியினையும்-சான்மறை—(தைத்திரியம் பௌடிகம் அதர்வணம் சாமவேதமென்னு)நான்கு வேதத்தினையுமுடைய முனிவர் தோய்ந்து—முனிவர் மூழ்கும்படி—மறைநீர்- மறையாகின்றநீரை- உருத்தலின்- கொடுத்தலால் மறையோனுகியும் (அம்முனிவர் பால்ள வினாய்க் காயத்திரி யாலாதித்த னுக்க ருத்தியங் கொடுப்பு) வேதியனுகியும்,

2 மீனுங் கொடியும் விருதினை யைத்துக்
தேனுறை தமிழுந் திருவுறைகூடலு
மனத்தலின் மதிக்குல மன்னவ னுகியும்-

மீனும்- மீன்களும்— கொடியும்-கொடிகளும்-விரிதினையைக்தும்- (சூழிஞ்சி முதலாக) விரித்த நிலைமைத்தும்- தேனுறை-தேனினுறைக்த, தமிழும்- இசையும்- திருவுறைகூடலும்- திருமகள் பொருந்திய மதுரையும், மனத்தலின்- பொருந்ததால் மதிக்குலமன்னவனுகியும், (தனக்குரிய கயற்கொடியும் பிற கொடிகளும் பரந்திணையைக்தும், செவிக்கினிமை பொருந்திய விறையனுர் பொருளுந் திருமகள் பொருந்தியமதுரை நகரும்பெற்ற) பாண்டியனுகியும்,

3 கவமணி யெடுத்து நற்புலங் காட்டலின்
வளர்குறி மயங்கா வணிகனுகியும்.

கவமணி -புதுமையாகிய மணிகளை, எடுத்து-(திரையை) யெடுத்து, நற்புலங் காட்டலின்-கல்ல விடங்களைக் காட்டுதலால், வளர்குறி - (கவமணிகளை யெடுத்து அம்மணிகள் பிறர்க்கு கல்ல தானங்களைக் காட்டி) யுண்டாகா கின்ற விலக்கணத்தைச்) சொல்லுதற்கு மயங்கா - மயங்காத, வணிகனுகியும் வணிகனுகியும்,

4 விழைதரு முழவும் வித்து நாறுக்
தழைசலின் வேளாண்டலை வனுகியும்

விழைதரும் - விரும்பப்படும் (உழவுத் தொழிலும் உழுதபின் வித்துக் தொழிலும் வித்தியபின் பயிர்களுண்டாக் தொழிலுக் தன்னுற் றழைதலினால்) உழவும், உழவும், வித்தும் வித்துவ— காறும் நாற்றுவ— தழைதலின், தழையப் பண்ணும் வேளாண்டலை வனுகியும் வேளாண்மையை யுடைய தலைவனுகியும்,

என்றுகூறியதில் சோமசுந்தர கடவுள் அந்தணன், அரசன், வணிகன் வேளாண் சென்கிறவான்கு வருணமாய் நின்று அவ்வவ்வருணத்திற்குரிய ஒழுக்கங்களை அனுட்டித்துக் காட்டினரென்று விளங்கும்

ஷை கல்லாடம்.

மூலமூன்றினைக்த சிலைதூதற்றிருவினை
யருமறை விதிக்கத்திருமணம்புணர்ந்து
மதிக்குலம்வாய்த்த மன்னவனுகி
மேதினிபுரக்கும் விதியுடை கன்னு
னாடு வூர்? நகர்செய்தபெயர்தாடைக்கு
மருட்சுறிறிறுவி யருச்சனைசெய்த
தேவாகாயகன்

என்று கூறியதில் சோம சுந்தர பாண்டியர் அரசுபுரிந்துவருகையில், ஆலயமமைத்து சிவலிங்க ஸ்தாபனஞ்செய்துதாமே அருச்சனை செய்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது.

சோமசுந்தர பாண்டியர்க்கும் தடாதகைப் பிராட்டியாருக்கும் உக்கிரபாண்டியர் அவதரித்தார். இவர்யௌவனபருவத்தையடைந்தபோது இவருக்குத் திருமண முடிக்க வடகாட்டிலே மணலூர் நகரத்திற்கு அரசனுகிய சூரியன் மரபில் தோன்றிய சோமசேகரனென்னுஞ்சோழன் புத்திரியாகியகாந்திமதி

தியை வேண்டிச் சுந்தரபாண்டியர் கட்டளையிட்டனுப்பினர் அவளும் பெண்ணைக்கொடுக்கச் சம்மதித்தாள்.

ஸ்காலாள்ய மகாத்மியம் வசியாதி ஆயுதம்கொடுத்த

16-வது அத்தியாயம் 19-57-சுலோகங்கள்.

ஸுவர்ணலக்ஷணஸம்பன்னா ஸோமஸேகரகன்யகா।
ஸோமஸேகரபூர்வேண ஸுகஶ்லேஷீக்ருதா।
தாராபூர்வாம்ருதீத்யாஸ்ய கன்யகாயாவிதாநதஸ்।
பாணிக்ரஹணகர்மாணி ஸ்வஶுத்ரஸ்யஸமாசரத்।

சோமசேகரனென்கிற சோழன் சர்வ லட்சணத்தோடுங் கூடிய தனது புத்திரியாகிய காந்திமதியைச்சோமசுந்தர பாண்டியரது புத்திரராகிய உக்கிரசேனனுக்குப் பாணிக்கிரகணத்தின் பொருட்டு தனது பத்தினியுடன் தானாவார்த்துக் கொடுத்தார்கள்.

திருவிளையாடல்

உக்கிர குமாரனுக்கு வேல்வளை செண்டுதொடுத்தபடலம்

48-வது செய்யுள்.

இரவிதன் மருமான் சோம சேகரனென் பேர் திங்கள்
மரபினை விளக்கவந்த சுந்தரமாறன் மைந்த
னுரவு நீர் ஞாலத்தாங்கு மூக்கிரவருமற்கின்றென்
குரவலர்க்கோதை மாலைக்கீகொடுத்தனனென நீர்வார்த்தான்.

இதனால் சோமசுந்தர பாண்டியர் புத்திரராகிய உக்கிர பாண்டியர்க்குப் பார்த்திவமன்னரின் புத்திரியாகிய காந்திமதியை விவாகஞ்செய்விக்கப்பட்டதென்று தெரிகின்றது.

4 உக்கிர பாண்டியர்க்குப் பின் வந்தவர்கள்
5 வீரபாண்டியன்
6 அபிஷேக பாண்டியன்
7 விக்கிரம பாண்டியன்

இவன் சமணத்தழுவிய சோழனால் எதிர்க்கப்பட்டான்.

8 இராஜசேகர பாண்டியன்
9 குலோதுங்க பாண்டியன்
10 அனந்தகுண பாண்டியன்

இவ்வரசன் காலத்தில் ஸ்ரீ ராமர் ராவணனைச் ஜெயிக்கும்பொருட்டு மதுரை மார்க்கமாய்ச் சென்றார்.

11 குலபூஷண பாண்டியன்
12 இராஜேந்திர பாண்டியன்

13 இராஜேஸ்வர பாண்டியன்
14 இராஜகேபீர பாண்டியன்
15 பாண்டிய வம்ச பிரதாப பாண்டியன்
16 புருஷத பாண்டியன்
17 பாண்டிய வம்சபதாகை பாண்டியன்
18 சுத்தரேசுவர பாதசேகர பாண்டியன்

இவ்வரசனால் மதுரையில் கோபுரங்களும், ஆலயங்களும் கட்டப்பட்டது.

19 வரகுண பாண்டியன்
20 இராஜ ராஜ பாண்டியன்
21 சுகுண பாண்டியன்
22 சித்திரவிரத பாண்டியன்
23 சித்திரபூஷண பாண்டியன்
24 சித்திரதுவஜ பாண்டியன்
25 சித்திரவர்ம பாண்டியன்
26 சித்திரசேன பாண்டியன்
27 சித்திர விக்கிரம பாண்டியன்
இராஜ மார்த்தாண்டபாண்டியன்
29 இராஜ சுடாமணி பாண்டியன்
30 இராஜ சார்தூல பாண்டியன்
31 தனிராஜ குலோதுங்கபாண்டியன்
32 யாதன பிரவீர பாண்டியன்
33 இராஜகுஞ்சர பாண்டியன்
34 பராஜ பயங்கர பாண்டியன்
35 உக்கிரசேனிப்ராணிடியன்
36. மகாசேனப்பாண்டியன்
37 சதுரஞ்ஜப பாண்டியன்
38 பீரத பாண்டியன்
39 பீம பராக்கிரம பாண்டியன்
40 பிரதாப மார்த்தாண்ட பாண்டியன்
41 விக்ரம குஞ்ஜக பாண்டியன்
42 புத்தகோலாஹல பாண்டியன்
43 அதுல விக்கிரமபாண்டியன்
43 அதுல கீர்த்தி பாண்டியன்
45 *கீர்த்திவிபூஷண பாண்டியன்

*இவ்வரசன்காலத்தில் பிரளயத்தால் மதுரையும்பாண்டியாகமும் அழியப்பட்டது.

* 46 வம்சசேகர பாண்டியன்

திருவிளையாடற்புராணம் திருஆலவாய்ப்படலம்

12-வது கவி.

வெள்ளநீர்வறப்பகாதி வேதியன் ஞாலமுண்போல்
உள்ளோர்வாழநிப்பகல்லி யும்பரோடிழ்பரேனப்
புள்ளொடி விலங்குகல்லே திருடற் புத்தேண்மூவர்
தன்னருமபின்முன்போற் றமிழ்வேந்தர் தமையுந் தந்தான்.

என்று கூறியிருக்கின்றது.

பிறகு முன்போலவே ஈஸ்வரன் சகல ஜனங்களையும் சிருஷ்டித்தார்.

*இவ்வம்சசேகரப்பாண்டியன் மதுராபுரியைவிசாலமாகக்கட்டினான். தமிழ்ச்சங்கம் இவ்வரசன்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

47 வம்ச சூடாமணி பாண்டியன்
48 பிரதாபரூரசேன பாண்டியன்
49 வம்சத்வஜ பாண்டியன்
50 வீரசிரோத்தண்ட பாண்டியன்
51 சகலலக்ஷணாலங்கார பாண்டியன்
52 சேர வம்சாந்தக பாண்டியன்
53 பாண்டியகுலகேசரி பாண்டியன்
54 வம்ச சூடாமணி பாண்டியன்
55 பாண்டவன்வய பாண்டியன்
56 குலதுவஜ பாண்டியன்
57 வம்ச விபூஷண பாண்டியன்
58 சோமசூடாபரணி பாண்டியன்
59 குலசூடாமணி பாண்டியன்
60 இராஜ சூடாமணி பாண்டியன்
61 பூப சூடாபரணி பாண்டியன்
62 சூலேச பாண்டியன்
63 சுரிமர்த்தன பாண்டியன்

இவ்வரசனுக்கு ஸ்ரீ மாணிக்கவாசகர் மந்திரியாக விருந்தார். இவர் திராவிடவேதமாகிய திருவாசகத்தையருளியவர். ஊமைபெண்ணை பேசவித்தவர்.

64 ஜெகந்த பாண்டியன்
65 வீரபாகு பாண்டியன்
66 விக்கிரம பாண்டியன்
67 சுபதி பாண்டியன்
68 குங்கும பாண்டியன்
69 கற்பூர பாண்டியன்
70 காருண்ய பாண்டியன்
71 புருஷோத்தம பாண்டியன்
72 சத்துருசேன பாண்டியன்
73 குப்ஜஅல்லதசுந்தர பாண்டியன்
74 வீரபாண்டியர் சாமான்

ஸ்தலபுராணத்தில் கூறியுள்ள பாண்டியர்கள் செ-மதுரையை ஸ்தாபித்தவன் குலசேகரபாண்டியன். கடைசியானவன் வீரபாண்டிய சோழன். கன்பாண்டியன் அல்லது சுந்தரபாண்டியன் இவன் சோழனோடு போர்புரிந்து சோழராஜ்ஜியத்தைஜெயித்து அவனது குமாரத்தியை விவாகஞ்செய்துகொண்டான். இவனது குமாரன் வீரபாண்டிய சோழன் சோழராட்டையுமாண்டவன். ஸ்தலபுராணத்தில் கூறியுள்ள பாண்டியர்களுக்குப்பிற்பட்ட அரசர்கள் சகல-பாண்டியர்கள். கெல்சன்துரை பெறுதிய மதுரைமானுவல் (சரித்திரம்) கூறிய பாண்டியர் பெயர்கள் வருமாறு.

1 சோழசேகரபாண்டியன்
2 சுற்பூரசுக்திரபாண்டியன்
3 குமாரசேகரபாண்டியன்
4 குமாரசுந்தரபாண்டியன்
5 சுந்தரராஜபாண்டியன்
6 வடுகராஜபாண்டியன்
7 மேருசுந்தர பாண்டியன்

இந்தப் பாண்டியன் சோசோழபாண்டிய நாடெலாம் ஆண்டவன். மூன்று நாடெலாம் அதிபதியாயிருந்தவன்.

8 இந்திரவர்ம பாண்டியன்
9 சந்திரகுலதிப பாண்டியன்
10 மீனசேதன பாண்டியன்
11 * மீனத்துவஜ பாண்டியன்

* இப்பாண்டியன் சோழனுடையகுமார்த்தியைவிவாகஞ் செய்துகொண்டான். சோழனுக்குப்புத்திரன் இல்லைமையால் இம்மீனத்துவஜபாண்டியனது இளையகுமாரன் சோழராட்டை அரசாண்டான்

12 மகரத்துவஜ பாண்டியன்
13 மார்த்தாண்ட பாண்டியன்
14 குலபக்தத பாண்டியன்
15 ருத்ர பாண்டியன்
16 சத்துருபீதிர பாண்டியன்
17 சத்துருசம்ஹார பாண்டியன்
18 வீரகேரி பாண்டியன்
19 வீரபாஹு பாண்டியன்
20 மருடவர்த்தனபாண்டியன்
21 வச்சிரசிம்ம பாண்டியன்
22 வர்மகுலோதய பாண்டியன்
23 அதிவீரராம பாண்டியன்
24 குலசேகர பாண்டியன்
25 சோமசேகர பாண்டியன்
26 சோமசுந்தரபாண்டியன்
27 ராஜராஜ பாண்டியன்
28 ராஜகுஞ்சர பாண்டியன்
29 ராஜசேகர பாண்டியன்
30 ராஜவர்ம பாண்டியன்
31 ராமவர்ம பாண்டியன்
32 வரதராஜ பாண்டியன்
33 குமாரசிம்ம பாண்டியன்
34 வீரசேன பாண்டியன்
35 பிரதாபராஜ பாண்டியன்
36 வீரகுணராஜ பாண்டியன்
37 குமாரசந்திர பாண்டியன்
38 வரதங்கராம பாண்டியன்
39 சந்திரசேகர பாண்டியன்
40 சோமசேகர பாண்டியன்
41 * பராக்கிரம பாண்டியன்

* இவ்வரசன் தன்னுட்டின்மீதுபடையெடுத்துவந்தவருடன் போர்புரிந்து அவர்களைத் துரத்திவிட்டான். பிறகு முஸிஸ்பூர் என்னும் மகமதியராஜன் கி-பி 1311-வது வருஷத்தில் இவ்வரசனை யடித்து துரத்திவிட்டான்.

1558-ம் ஆண்டிற்குப்பின் சந்திரசேகரபாண்டியன் மதுரைநகரத்திற்குச்சிம்மாசனாதிபதியாக வந்தான். அப்போது தஞ்சைநகரையாண்ட வீரசேகர சோழன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து சென்று அகப்பிடித்துக்கொண்டான். பிடித்துக்கொள்ளவே சந்திரசேகரபாண்டியன் விஜயநகரத்தை யடைந்து அச்சுததேவமகாராயருடன் தனக்கு நேரிட்ட ஆபத்தினைச் சொல்லி முறையிட்டனை. அவனை சேனாபதியாகிய நாகம்மநாயகனை அனுப்பி சோழனைத் துரத்திவிட்டு சந்திரசேகரபாண்டியனை சிம்மாசனாதிபதியாகச்செய்யும்படி கட்டளையிட்டனுப்ப அவன் ராயர் உத்தரவுபடி செய்யாமல் தானே சிம்மாசனாதிபதியாகிவிட்டான். இதைக்கேள்வியுற்ற ராயர் நாகம்மநாயகன் குமாரன் விசுவநாதநாயகனைத் திரண்ட சேனையுடன் அனுப்பினான். அவன் தம்தையாகிய நாகம்மநாயகனை முறியடித்து அவனைச் சிறைப்பிடித்து அனுப்பிவிட்டு பேருக்குச் சந்திரசேகரபாண்டியனைச் சிம்மாசனாதிபதியாக வேற்பாடுசெய்தான்.

1563-ம் ஆண்டு விசுவநாத நாயகன் மரணமடைந்தான். அதன்பின்பு அவன் குமாரன் பட்டத்திற்கு வந்தான். இவ

ஏது சக்திபார் 1732-ர் ஆண்டுவரையில் மதுரையை யாண்
டுவந்தனர்.

சந்திரசேகர பாண்டியனுக்குப்பின்னர்மதுரையில்பாண்
டியன் அரசசந்ததியார் பெயர்கள் கேட்டப்படவில்லை.
ஆயினும்,

அதிவீரபாண்டியன்
சுந்தரபாண்டியன்
பெருமாள், சுந்தர பாண்டியன்
சுந்தரபாண்டிய தேவன்
உக்கிரபாண்டியன்
வரகுணபாண்டியன்

இவ்வரசர்களின் பெயர்கள் தென்காசி, கொங்கைகொண்
டசோழபுரம், காஞ்சிபுரம், தாராமங்கலம், பெருந்தலையூர்,
திருப்பரங்குன்றம் முதலிய விடங்களிலுள்ள சாஸனங்கள்
1562-ம் ஆண்டின் பின் மூன்றே யேற்பட்டிருப்பனவற்றிற்
யோகிக்கு மனவில் பாண்டியர் அரசபரம்பரையார் பாண்டிய
காட்டிலும் பற்றவிடங்களிலும் சில பாகங்களுக்குச் சிற்ற
சர்களாக வீருந்தார்களென்று தெரியவருகின்றது.

கி பி 1578-ம் ஆண்டில் வரதுங்க பாண்டியன்
,, 1593-ல் வரதுங்க ராஜபாண்டியன்
,, 1595-ல் அதிவீர பாண்டியன்
,, 1605-ல் வல்லப தேவ பாண்டியன்
,, ஏழாவது அதிவீரபாண்டியன்

இவ்வாண்டுகளில் சாஸனங்கள்முறையே ஏற்பட்டுள்ளன.

இச்சில சாஸனங்கள், காரிவளம், வண்டலூர், குண்ணக்
குடி, திருவுத்திரகோசமங்கை, திருச்சோலக்குடி, குத்தாலம்
இவ்விடங்களிலுள்ளன. இவ்வரசரான பாண்டியர்களில்
ஒருவராகிய வரகுணராம பாண்டியன் பிரபாவத்தைப்பற்றி
கடிகைமுத்துப்புலவர் இக்குவிஜயமென்னு மோர்நூல் செய்தி
ருக்கின்றனர். அது வருமாறு:

கடவுள் வணக்கம்.

விரவுதொழுதெழுவித்தகிக்கு விசயவிலாசம் புரிந்து மேவாரெல்லாம்
பரவுவரகுணராமபாண்டிய னென்னியன் புகழைப்பரிந்துகூற
வரகவிண்ணவவுவியொடு மதியமடி சடிலருமையாண்டேவு
சரசவீதமிருக சுந்தராலிங்கர்பதம் தலைசொண்டேனே.

பாயிரம் முதற்செய்யுள்.

தரியுமையாண் மீனுட்சியம்மை கருணைத்தவப்பேறே
நீயமக னிவனிரியனீக்காதிருக்கு நிலப்பேறே

வரகுண பாண்டியன்மீது செய்தகாதல் பிரபந்தம்
அதியுமை மீனுட்சியம்மை பங்கின்மேவு
சொக்கநாதர் கொடுக்க கடாத்துகின்ற செங்கோலான்.
திக்குவிஜயம் 4-வது.

சொக்கர்கொடுத்த செங்கோன்மைத் தலைப்பாண்டியனே வரகு
ணனைத்
தக்கவிசயத் திறம்பாடித் தமிழாற்றுதிக்க மனத்துணிந்தேன்.

இச்செய்யுள்கள் மலையத்துவஜபாண்டியனுக்கும் சோழ
ன்புத்திரியாகிய காஞ்சனமாலைக்கும் யாகாக்கி மூலமாக ஓர்
பெண்மகவாயுதித்த மீனுட்சி பாண்டியன் அரசாட்சியைக்
கைப்பற்றி யாண்டுவருகையில் சொக்கநாதராகிய சோமசுந்தர
பாண்டியனின்விவாகம் புரிந்தபின்னர் மீனுட்சியால் ஆளப்பட்ட
அரசாட்சியைத்தன்மாயகிரியை சோமசுந்தர கடவுளுக்குஒப்பு
வித்தபின்னர் உக்கிரப்பெருவழுதியென்கிறபாண்டியனைப்பெ
ற்றஅவன்மரபில்வந்தவன்வரகுணராமபாண்டியன் ஆகையால்
சொக்கநாதர்கொடுக்க கடாத்துகின்ற செங்கோலான்றும்
சொக்கர்கொடுத்த செங்கோன்மைத் தலைப் பாண்டியனே
யென்றும் கூறியுள்ளார்.

கடாதகா ஜனனம் 8-வது அத்தியாயம் ஆலாஹியமான்னியம்
23-24-25 சுலோகம்.

கூடயத்வஜஜூ ஜீன சப்ததந்தோ ஃகுதஸ்ய:
சஷ்கமாத்ரபூரிண்யா பூனாசஹாத்ரவதீ ஜா
வீசாயயஜமானேந ஹவிர்விதிகுஹ்யா:
தத்துஜாநிஸவாஜி யாவதாஜீவாஜ்யா
தஸ்யாமூ ஜீவஸ்ருத்யா நுமிவாதீநிஜாஸ்ரய:

மலையத்துவஜ பூபனால் செய்யப்பட்ட புத்ரகாமேஷ்டி
யாகத்தில் எல்லா கர்மங்களுடைய நிறைவையும் குறிக்
கின்றதான பூர்ணாகுதியினால் சொல்லிக்கப்பட்ட அக்கினியின்
அதிசுகள் எக்கிய கர்த்தாவினால் ஹோமம் செய்யப்பட்ட
போது ஆவைகளை அங்கீகரித்துகிவனது ஆக்கினையினால் அவ்
வக்கினியினிடத்திலிருந்தும் சாமளரூபியாயும் கோமளவடிவுடை

யாளாயும் மீனுட்சியின் அம்சத்தைப் பெற்றவளாயும் ஒன்று வபது நிறைந்த பாலிகையாயுருள்ள ஓர்பெண் உற்பவித்தாள்.

மீனுட்சியாகிய தடாதகைப்பிராட்டியார் யாகாக்கினிக்கு மாக வுற்பவித்தாரென்பதற்குச் செய்யுள் திருவிளையாடற் புராணம்.

தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம் 15-வது செய்யுள்.

தொம்முலெரிக் கடவுளேற்றபனெய்த்
தெய்தளி ரெனத்தழல் தொழுத பிருண்டத்
தைதவிழிழிழ்க்கமலப் பொழுதவர்தோர்
மொய்தளிர் விசாக்கொடி முளைத்தெழுவதென்ன.

19-வது செய்யுள்.

தென்னமுதமென்மழலை இத்தவினமூான்
மூன்னெமிதரும்பமுலை மூன்றுடைய தோர்பெண்
பின்னெவென மூகொரு பிராவமொடி ருக்ரு
வென்னரிய பல்லுயிருமெவ்வுலகுமீன்றாள்.

இவ்விதமாக யாககுண்டத்தினின்று மூன்று வயதுடனும் மூன்று வ்தன்னரியத்துடனும் தோன்றிய பெண் மகனைக் கண்டு மலையத்துவசபாண்டியன் மனக்களிக்தான்.

24-வது செய்யுள்.

மகவின்றிப்பலபகல்பான்வருந்தியருந்தவம்
புரிந்தேன் மைந்தற்பேறு
தவவித்தமஞ்செய்தேனதவ
மொருபெண் மகவைத் தந்ததந்தோ
முகவிக்து லேலொடு வருபெண்ணு முலைமூன்றாய்
முகிழ்த்து மாற்றார்
கடகத்தென்னையோ வென்றுவகையினுஞ்
சலியுமெல்லை

இச்சுலோகமும் இச்செய்யுள்களும் தடாதகைப்பிராட்டியாராகிய மீனுட்சி யாகாக்கினியிடமாக உற்பவித்தாரென்று தெற்றென விளக்குகின்றது.

சிவகிரிகாதல்

தென்னவன் வருண ராமச்செம்பொட்டிக்காளை
மன்னவனைத் தன்னருமை மைத்தனெனவே புகல்வோன்
மன்னவனுஞ் செல்வவருண ராமபாண்டிய
தென்னனிருக்குஞ் செழுங்காவில் வந்துளாக

திக்கு விஜயம் 7-வது செய்யுள்.

வேந்தன் வருணராமபாண்டிய
வன்னியனுக்கே விசயஞ் சொன்னேன்
மாந்தரெல்லா மிழிவிசைவளர்த்ததவும்
விசயாமால் வாயாதன்றே.

மெ 9-வது செய்யுள்,

பரிமயிற்குமரனிவனெனப் பகர்வர் படைமுனைச் சமரிலறியலா
மெரியனற் பொறியிலவனுதித்தவ னெழுதிசைக் கடைமார்பனே

சிவகிரி காதல்

வன்னியருல தீபவருண ராமபாண்டிய
மன்னனைத் தென்மலையில் வாழ்வேற்கா சைச்சரிக்கை

மெ காதல்.

வன்னியருல ராஜ வருணராம பாண்டிய
கன்னவகன் வராமல் நங்கை மயக்கிச்சோர்ந்தான்.

இவ்விரண்டு நூல்களில் வருணராமபாண்டியனை வன்னியருல தீபனென்றும், எரிபனற்பொறியில் உதித்தவனென்றும் கூறுதலாலும் ஆதிபாண்டியன் வன்னியின் வழியில் வந்தமையாலும் வன்னியனென்றும் மலையத்துவஜபாண்டியனியற்றிய யாகாக்கினிகுண்டத்து தடாதகைப்பிராட்டியார் உற்பவித்து அவர் மணம் வந்தமையாலும் அனற்பொறியிலுதித்தவனென்றும் கூறினர்.

கல்லாடம் 10-வது அகவலிலோற்பனவன்னியராக்கிய பெருமான் என்றிருத்தல்போல் பாண்டியர்க்கு வன்னியர் என்கிறபிரயோகம் நூல்வழக்கிலும் சாஸனங்களிலுங்காண்க.

மாறன்சடையனென்னுஞ் செழியன் 8-ம் நூற்றாண்டு மத்தியில் அரசுபுரிந்தவர் சைவம் வைஷ்ணவமென்னும் பேதமில்லாதவர்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகையில்

"கெல்வேலிவென்றகின்றசீர் செழியனடியார்க்குமடியேன்"

என்று கூறியதிலுல் செழியன் என்னும் பாண்டியன் அறுபத்துமூன்று சிவனடியார்களிலொருவனென்றும் கெல்வேலியில் நடந்த யுத்தத்தில் வெற்றிபெற்றவனென்றும் விளங்குகின்றது. இந்த யுத்தமானது பல்லவராஜனுடைய நந்திபோத வர்மனுடைய பல்லவமல்லனும் வரகுணனுடைய சேனைத்தலைவன்

உதய சந்திரனென்பவனுக்கும் பாண்டியனெருவனுக்கும் கெல்வேலியில் பெரியதோர் யுத்தம் நிகழ்ந்தாக உதயேந்திர சாஸனத்தால் தெரியவருகின்றது. பல்லவ அரசனுகிய நிருபோதவர்மன் அரசாண்ட காலம் கி பி 710-760-ம் ஆண்டெனப் பல சாஸனங்களால் வரையறுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே கெல்வேலி யுத்தத்தில் வெற்றிபெற்ற பாண்டிய நெடுமாறன் காலமும் அதுவேயாகும். இந்நெடுமாறனைப்பற்றி பெரியாழ்வார் திருமொழி

திருமாலிருஞ்சோலைப் பாசுரத்தில் அருளிய

மன்னர் மறுகமைத்துணன்மார்க் கொருதேரின்மேன்
முன்னங்குன்று மோழை யெழுவித்தவன்மலை
மொன்னலில் கூர்வேற்கோ னெடுமாறன் றென்கூடற்கோன்
தென்னன்கொண்டாடுந் தென்திருமாலிருஞ்சோலையே

இப்பாசுரத்தில் "தென்னன் கொண்டாடுமே" என நிகழ் காலத்தில்கூறப்பட்டிருத்தல் அவ்வரசனர் அவ்வாழ்வார் காலத்திருந்தவரென்பதை விளக்குகின்றது. ஆகவே பெரியாழ்வாரை அபிமானித்தவர் பாண்டிய நெடுமாறனும். இவனது நியும் இப்பாண்டியன் புகழை வேறு நிலயத்தில்கூறியுள்ளனர்.

"பொறிகெழு கெண்டைவட வவாமேல்வைத்துப் பூமியெல்லா
நெறிகெழு செங்கோனடாத்து நெடுமாற னெல்வேலியென்றுன்
"கெல்வேலியொன்னர் போர்வண்ணம்வாட்டிய பூழியன்" என்றும்
வருவனவற்றுற் கண்டுகொள்க

நெடுமாறன் என்னும் பாண்டியனும் பல்லவ நந்திபோதவர்மனும் ஒருகாலத்திலிருந்தவர்களென்றும் நந்திபோதவர்மனுசேனதிபதியாகியஉதயசந்திரனேநிருநெல்வேலியில்நடந்த யுத்தத்தில் பாண்டியன்வென்றமையால் சுந்தரமூர்த்திநாயனர் கெல்வேலிவென்ற நெடுமாறனென்றும் இந்த யுத்தம் சுந்தரமூர்த்தி நாயனர் காலத்திற்குமுன் சுமார் 180-190 வருஷங்களுக்கு முற்பட்டிருக்குமென்றும் காஞ்சிபுரத்தைப் பிரதானகரமாகவுடைய பல்லவ அரசர்கள் பாண்டியநாட்டிலும் பிரவேசித்தார்களென்றும் சாஸனங்களாலும் டாசுரங்களாலும் தெரியவருகின்றன.

E. ஹல்ஸ் துரையவர்கள் வெளியிடப்பட்ட 3-வது வாலியம் 2-வதுபாகம் 88-மெம்பர்சாசனம் (கி பி 1186லுள்ள கவம்பர்மீ 12ல் வியாழக்கிழமை மூன்றுவதுகுலோத்துங்க சோழன் சிம்மாசனமேறிய 19-வது ஆண்டில் அரசன் கட்டளைப்படி ஸ்ரீரங்கம் அரங்கநாத வாலயத்தின் நாலாவதுபிராகாரத்தின் வடவண்டை மதில் வாயில் இடதுபாரிசத்திலுள்ளது.

1. ஹரி உஸ்வஸ்தி புயல்வாய்த்து மண்வளர் புலியணையும் சக்கரமுஞ்செயல்வாய்த்த மதுநூலுஞ் செங்கோலுந் திசை நடக்கக் கொற்றவனுடன் திருமகிழக் கொடுங்கலிகெட

2. க்குளிர் வெண்குடைக் கற்பகாலம் படிகவிக்கக் திரவங் குலமுடி கவித்துத்தகிபாணி விட்டாண்மை செய்து வடமன்னனைத் தறைப்படுத்தி முவ்வாறக் கச்சிபுக்கு முழுகா

3. சையுந் திறை கவர்ந்து தண்டொன்றுல் வழுதி ணமந்தகை மூக்கரித்து தமிழ்மதுரைகொண்டு விக்கிரமபாண்டியற்குக் கொடுத்து மீண்டபின் பரிபவத்தாலெடுத்து வந்து கெட்டு

4. நிலெதிர்த்த வீரபாண்டியனை முடித்தலைகொண்ட மர் முடித்தவன் மடக்கொடியை வளம் எற்றித்திருவிழந்த தென்னவனுஞ்சோறும்வுக்கிறைஞ்சி யரியணையின் கீழிருக்க அவன்முடிமெல

5. டி வைத்துப்படி வழங்கிமுடிவழங்கி பாண்டியற்கு விடைகுடுத்து கொடிவழங்கு வில்லவற்கு கொற்றவர் பெரு திருவழங்கி வீரகோளன் வீரல்தனித்து வெஞ்சுகண்டு வந்திறைஞ்சப் பாரறிய வாழ்வருளி

6. ப்பரி கலத்திலமுளித்துப் பருதிகுல பதியென்னுந் திருநாமம் பரித்த பாண்டியற் கிருகெதியமும் பரிசட்டமுமிலங்கு மணிக்கலனும் சமத்தாற் முடிவாழ வாழத்தாளினசூட்டி வீரக்கொடி யெறித்து வாகை வீரக்கழல் கட்டித்திக் கெட்டுமே

7. வல் கெட்ப்பசக்கரவெற்பில் புகழெறிப்பசெம்பொன் வீரசிம்மாஸனத்துப் புவனமுழுதுடையாரொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகெசரிபன்மரான திருப்புவனச்சக்கரவர்த்திகள் மதுரைகொண்

8. டு பாண்டியன் முடிதலைகொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சொழதேவற்கு யாண்டு பிகூ-ஆவது விருசூசிக காயிற்று அபரபக்ஷத்து பஞ்சமியுஞ் செவ்வாய்க்கிழமையும் பெற்ற பூசத்து நான் * * * *

J A S பர்ஜல்துரையவர்களால் வெளியிடப்பட்டசாஸனபுத்தகம் 10-வதுபக்கம் 18-கெம்பர்சாஸனம்மதுரைஜில்லா

திருமங்கலம் தாலுக்கா விக்கிரமங்கலத்திலே மணிரோ தயா
ஸ்வர் ஆலயத்தின் மதிலின் பின பிராகாரத்திலுள்ளது.

1. ஸவஸ்திஸ்ரீ பூவின் நிறத்திமேவி வீற்றிருப்பமேதினி
மாது நீதியிற் புணர வயப்போர்மடக்தை ஜயப்புய திருப்பமா

2. க் கலிமடக்தை வாக்கினில் விளங்கத் திசையிரு
கான்குமிசை நிலாவெறிப்ப மறைகெறிவளர மனுநெறி திகழ்
அறகெ

3. நிச் சமயங்களாறும் தழைப்பக் கானவேங்கையை
வில்லுடன் தாங்கு மீனங்கன காவனத்து வீற்றிருப்ப

4. எண்கிரிருப்ந்த எழுகடலெழுபொழில் வெண்குடை
கீழற்றச்செங்கோல்கடப்பகொங்கணி கடுங்கெடும்பிலத்தெ

5. ளிப்ப வில்லவர் செம்பியர் விராடர் வாடர் பல்ல
வர் நிறையுடன் முறைமுறை பணிய இருகேமியளவும் ஒரு
கேமி

6. யோங்க இன்னமுதாகிய பூ லீசை ருடக மன்னி
வளர மணிமுடிசூடி வெற்பன யோங்கிய வீர சிம்மாசனத்து
கற்பக கி

7. முற்கிழ் கலிவலோர் புகழ மன்னவர் தேயிர் வணங்
கிறின்றேத்த அன்னமென்னடையவனிமுழுதுடையாரோடும்
வீற்றிருந்தருளி

8. ய கோற்சடைய் பன்மாறன் திரிபுவனச்சக்காவர்த்தி
கள் ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு பிகூவதினெற்ற பவது
தெ(வ்கல்லகாட்டுத்)தே

9. பெட்டினமான விக்கிரம சோழபுரத்து சுகாத்தோம்
இக்காத்து நாயனர் மதுரோதய (ஈஸ்பரமுடையி)னயனர்
(திருப்படிமாற்று)க்கு

10-ப்பித்த கிமுத்தப்களுள்ளிட்டு வேண்டுமவற்றக்குங்
கொடுத்த நிலமாவது ஷி (ஊர்கு)ளத்து (தென்புறக் குழிம
டை...ற

11. குழிநிலம் ஆறுமாவும் பட்டவிர்த்தி நில மூன்று
மாவும் ஆகநிலம் ஒன்பதுமாவும் நீக்கி நாயனர்க்குக்கொடுத்த
நிலம் இருப

12. துமா இன்னிலம் இருபதுமாவுக்கும் கல்வோர்பாதி
நீர்பாய்வதாகவும் முன்முறைமை)ற்கு நீர்பாய்வதாகவும் இவ்
வூர் குழிமடைநீ

13. ர் ஆக நிலம் இருபத்தொன்பதுமாவுக்குமே பாய்
வதாகவும் அப்பால் நீர்பாய்ப்பதாகவும் இன்னிலம் இருபது
மாவுக்கும் கடமைகுடி

14. மைகுடிமை (மா)ய் பெறப்பட்டினவும் ஊராயி
ருப்போமாகவும் இன்னயனருக்கு இன்னிலம் இருபதுமாவு
மிறையிலி தேவதானம்

15. சுந்தாசித்தியவர் வரைசெல்வதாகக் கல்வெட்
டிக் குடுத்தோம் விக்கிரம சோழபுரத்து சுகாத்தோம் இப்ப
டிக்கினை தேவன் பெரியனன மாசாத்துவாய

16. னெழுத்து இப்படிக்கினை நம்பிமுடிவிலா மூத
ல்வனன தனபாலனெழுத்து இப்படிக்கினை பெரியான்சுத்
தனன யனசோழன் எழுத்து இப்படிக்கி

17. வை ஆழ்வானயனன அமரகோன் எழுத்து இப்
படிக்கினை காதனுழ்க்கொண்டானன அளகைவராயன் எழு
த்து இப்படிக்கு இக்கோத்கணக்கு பூவனிராம

18. னன உத்தமபா(ண்டி)யன்எழுத்து இப்படிக்கு
இவ்வெழுத்து வெட்டின இக்கோயில் சிற்பாசாரியன் சி(ய)
னுழ்வ(ா)னன சிவல்லவ ஆசாரி(யன் எழுத்து

மூன்றுவது குலோத்துங்கசோழன் கி.பி 1188-வது
ஆண்டில் அரசுபுரிந்தவன். இச்சோழன் சிம்மாசனமேறிய
19-வது ஆண்டில் இவனது உத்தரவுபிரகாரம் ஸ்ரீரங்கத்தி
லேற்பட்ட சில சாஸனத்தில் தென்னவனையும் சேரனையும்
வென்றதாகவும் திரிபுவன சக்கரவர்த்திகளென்னும் பெயரை
யுடையவனென்றும் இவ்வரசன் ஆளுகையில் பாண்டிய ராஜ்
ஜியத்தில் இவனது ஆக்கினை நடத்தினதாகவும் எழுதப்பட்டிருக்
கின்றது. ஆனால் கி.பி 1263 ஆண்டில் அரசுபுரிந்த குலசேக
சபாண்டிய தேவர் இக்குலோத்துங்க சோழனைப்பார்க்கிலும்
பிரபலப்பட்டவனென்று இப்பாண்டியன் ஆளுகையில் லேற்
பட்ட சாஸனங்கள் தெரிவிக்கின்றன. திருப்பரங்குன்றம்திரு
மங்கல முதலிய ஸ்தலங்களிலுள்ளவைகள் வில்லவர், செம்பி
யர், விராட, வராடர், பல்லவர்முதலியவராசர்கள் நிறையுடன்
முறை முறைபணிபவென்றும் கலிவலவோர் புகழவென்றும்
திரிபுவனசக்கரவர்த்திகள் குலசேகரிதேவர்க்கு எல்லாங்கூறி
ன்றன. இதனால் சோசோழபாண்டிய பல்லவ களுக்கிய அர

சர்களுக்குள் ஒவ்வொருவர் ஓரோர்காலத்தில் மகா பராக்கிரம சாலிகளாக வெழும்பி மற்றைய அரசர்களை அடக்கி ஆள்வ தாக வேற்படுகின்றன, எங்ஙனமெனில் கி பி 710-760 ஆண் டுகளில் அரசுபுரிந்த மாறன் சடையபாண்டியனைப்பற்றி பெரி யோர்களால் முற்கூறப்பட்ட பராக்கங்களேபோதிய சான் றும்.

இக்கெடுமொத்னுக்குப்பின் கி பி 1263-ம் ஆண்டில் பாண் டியராஜ்ஜியத்தை யாஇயற்றிய கோற்சடையபன்மாறன் குல சேகரபாண்டிய தேவராகிய திரிபுவன சக்கிரவர்த்திகள் தமது முத்திரையில் புலி மீன் வில் ஆகிய அரசசின்னங்களைக்காட்டி அதில்தன்பெயரையும்"பாண்டியகுலேந்திரவர்மனு''சமஸ்தலோ கேஸ்வராயா,'என்று வரையப்பட்டிருக்கின்றது, சர் வால்டர் எலியட்துரையவர்களெழுதியதென்னிந்தியா கணயபுத்தகம் 123-232-ம் பக்கங்களில் விரிவாகக் குலசேகர தேவரைக் குறித்து எழுதியிருத்தலைக் கண்டுகொள்க.

ஆசர் அல்லது வன்னியவிழ்பிற்றி இதர நூலாசிரியரு டைய அபிப்பிராயம்வருமாறு.

இந்தியாவின் பூர்வகுடிகளைப்பற்றி எழுதிய ஆபர்ட் துரையும் தமது கிரந்தத்தில் 118-வது பக்கம்.

The existence of these Fire-races, Agnikula or Vahnikula (Vanniyan) in North and South India is a remark able fact."

அக்கிகுலம் அல்லது வன்னிகுலம் அக்கிவம்சத்தவர் இந்தியாவின் வடக்கிலும் தெற்கிலுமிருப்பது பிரசித்தமான உண்மையாம்.

Madura Manual by Mr. Nelson Part II Page 56,
"The Vannias are at the persent time a small and obsure agricultural caste but there is reason to belive that they are the descendants of ancestors who in former times held a good position amongst the tribes of Southern India."

நெல்சன் துரையவர்கள் எழுதிய மதுரைமானுவல், 2-வது பாகம் 56-வது பக்கம்.

"வன்னியர்கள் பிரபலமில்லாத விவசாயம்செய்யும் சாதியாராய்த்தற்காலம் இருப்பினும் தென்னிந்தியாவிலுள்ள சாதிகளில் பூர்வீக காலத்தில் உயர்ந்த அந்தஸ்திலிருந்த மூதாதைகளின் வம்சத்தவரென்று நம்ப இயாயமுண்டு.

R. A. S. Journal vol. 24 states that in the year 3300 of the Kalyuga, a Pandia Princess went over to Ceylon and married its king and was accompanied by sixty bands of vannias.

இராயல் ஏஷியாடிக் ஜர்னலில் 24-வது வால்யத்திலே கலியுகாதி 3300 ஆம் வருஷத்திலே பாண்டிய ராஜகுமாரத்தி 60 வன்னிய கூட்டங்களுடன் இலங்கைக்குப்போய் அத்தே சத்து அரசனை மணம்புரிந்துகொண்டாளென்று சொல்லப் பட்டிருக்கிறது.

1827-ஆம் ஆண்டில் பிரசுரமான இராயல் ஏஷியாடிக் ஜர்னலில் இக்தேச சரித்திர விஷயமான சிலோன் சரித்திர த்தில் எழுதியிருப்பதாவது "அயோத்திக்கரசனுடைய குளக்கே டவனுடைய மருமகனுடைய உக்ரசேனன் சந்ததியில் வந்த மாருதப்பிறவி என்பவன் உக்ரமாசேனனை விவாகம் செய்து கொண்டு அரசாளும் காலத்திலே சிங்கமுகமும் வாலுமுடைய புத்திரனைப்பெற்று அப்புத்திரனை வராஜசிங்கம் என்று நாமகரணம் செய்தார்கள். இப்புத்திரனை விபீஷணர் இலங் கைத்தீவுக்கு அரசனாக நியமனம் பண்ணி, ஸ்ரீராமர் தனக்கு க்கொடுத்த மூத்திரை மோதிரம், கிரீடம், வாள் முதலியவை யும் விரமாகாளி என்னும் தேவதையும் கொடுத்துத் தான் னித்தியப்பதவியடைந்தார். வராஜசிங்கமென்னும் இராஜன் மதுரையையாண்ட பாண்டியன் குமாரத்தியை விவாகம் புரியும்பொருட்டுத் தூது அனுப்ப, அதற்குப் பாண்டியன் இசைந்து தன்குமாரத்தியாகிய சாமதேவியை விவாகம் புரிந்துகொள்ளும்படி அனுப்பியபோது, தன்னிடமிருந்து பலவகை சேனைகளையும், தன் பந்துக்களில் அறுபது (60) வன்னிய ராஜகூட்டங்களையும் அனுப்பிவைத்தான். இலங் கை அரசனாகிய வராஜசிங்கமென்பவன் தன் தகப்பன் ஆ ண்ட அடங்காப்பத்தை இவ்வறுபது கூட்டத்தாராகிய வன் னியர்களுக்கு அரசாளும்படியாகக் கொடுக்க அவர்கள் அதை அரசாண்டுவந்தார்கள். அவ்வரசர்கள் தென்னிந்தியாவிலிருந் தும்மதனை, மைசூர்முதலிய காடுகளிலிருந்து சோமனார்முத லான பலஜாதிகளையும் வரவழைத்து அத்தேசங்களிலிருந்த பல கீழ்மையான ஜாதிகளை ஜெயித்து தாங்கள் கொண்டுவந்த ஜாதிகளை குடி ஏற்றினார்கள். பாண்டியராகிய சில வன்னி

யக்கூட்டத்தார் சில சேனைகளைக்கொண்டு இலங்கைத்தீவு களையோராமையிருந்த அசாரை எல்லாம் ஜெயித்து ஐந்து இடங்களில் ராஜதானியை ஸ்தாபித்து அதற்கு வன்னிகர் டென்று பேர்கொடுத்து இளஞ்சிங்க வாகுவென்பனை அரசனுக்கினர்கள்"

1850-ம் ஷுத்தில் அமரிக்கன் மிசியோன்களால் வெளியிட்ட புவனசாத்திரம் 142-143 பக்கங்களில், வன்னி காட்டைச்சுட்டி "முன்னே இக்காடு பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொரு பகுதியிலும் ஒரு வன்னிமை அல்லது வன்னிச்சியென்பவர்கள் இருந்து அரசுபுண்டுவந்தார்கள். மறுபடி உலாந்தக்காரர் யாழ்ப்பாணத்தைப்பிடித்து ஆண்டபொழுது இந்த வன்னிபரைத் தங்களுக்கு யானைகளை வருஷந்தோறை கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். அப்பொழுது அவர்கள் இல்லையென்று மறுத்தார்கள். அதிலால் உலாந்தக்காரர் அவர்களுடனே போர்பண்ணி ஊரைப்பிடித்துப் பிரதான வன்னிச்சியாகிய மெரியா செம்பேத்தி (Maria Sembatte) என்பவளையும் பிடித்துக் கொளம்புக்கு அனுப்பி சிறைப்படுத்திவைக்க அங்கே அவள் மரித்துவிட்டாள். இதன்பின்னர் இங்கிலீஷ்காரர் உலாந்தக்காரனைத்தூரத்திவிட்டுத்தீவைப்பிடித்து ஆண்டபொழுது வன்னியர் (ஆனைகட்டு-ம்) வருஷமட்டுஞ் சமாதானமாய் வன்னியை ஆண்டுவந்தார்கள். (ஆனாலும் மறுபடி பண்டார வன்னிமையானவன் Pandara Wanniya) கண்டியாருடைய ஒத்தாசையைக்கொண்டு இங்கிலீஷ்காருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி ஒருமுறையிலே வடகாடெலெங்குஞ் சென்று யானையிறவு (Elephant Pass) வரைக்கும் வந்து யாழ்ப்பாணத்துக்குட் செல்லவென்றிருந்தான். வன்னியை இட்டமான காடாக்கித் தான் எல்லாத்துக்குமேலாக இருக்கவேண்டுமென்பதே அவனுடைய நோக்கமாயிருந்தது. ஆனாலுமுயன்ற காரியம் கிறைவேறுமற்போனதால் விட்டுவிட்டான். முல்லைத்தீவில் (Mullativoe) இருந்த குமாரசேகரமுதலியார் (Kumara Sagara Modliar) இத்தருணத்தில் அதிகாரத்தற்றவனியாகக் காணப்பட்டதினால் கொல்லப்பட்டார். வன்னியை புடனே இங்கிலிஷ்காரர் அதற்போர் பண்ணியும் கடைசியில் திரிபோக்கென்னும் கைப்பிடித்தான் (Captain Driberg) பண்டார வன்னிமையுடனே

(ஆனாகூ-ம்) வருஷம் அற்பிலமாதம் (கூக) தேதி போர்பண்ணி அவனுடைய சேனைகளில் அதிகாரைக் கொன்று காற்பத்தாறுபேயரைப் பிடித்து மறியற்படுத்தி அவர்களுடைய ஆயுதங்களையும் மற்றுமுள்ள பொருள்களையும் பறித்துக்கொண்டு போனான். மறுபடி சுவேல் என்னும் லவுற்றினங் கொம்மந்தோர் (Lieutenant Jewell) சத்துருவுக்கு விரோதமாய்ப் போய் அவனை ஆமைகளையும் பிடித்துக் கலகக்காரனைத் தூரத்திவிட்டு வன்னிச் சமாதானத்தை உண்பண்ணினார். (ஆனாகூ-ம்) வருஷந்தொடுதல் (ஆனாவிஅ-ம்) வருஷம்வரையில் வன்னிசாமி கலகம் அடங்கி ஒரு கலக்கட்டரின் விசாரணைக்குக் கிழ்ப்பட்டிருந்தது"

ஜெல்லியம் டெயிலர் துரைசெய்த ஓரியாண்டல் ஸ்மாலிப் கேட்டலாக் 3 வது வால்யூம் 427 வது பக்கம்.

Section 3. An account of Candavarayen and Chenthavarayen, the two sovereigns of the Vanniers, who ruled in the fort of Tiruvidaichuram. This fort was in the district of Chingleput.

காத்தவராயன் சேத்துவராயன் என்னு மரசர்கள் செங்கல்பட்டிற்கு சமீபத்திலுள்ள திருவிடை மீஸ்வரம் என்னுமிறுகரத்தில்பிரபலமாய் இராச்சியபரிபாலனஞ்செய்தார் என்று தெரியவருகிறது.

திருவிடைச்சுரம் என்பது செங்கல்பட்டிற்குச்சமீபமாக தென்பாரிசத்திலுள்ளது. இதில் ஓர் ஆலையும் கோட்டையுமிருக்கின்றன, இக்கோட்டையின் அகல நிகளம் தெற்குவடகாக 1141 அடியும் மேற்கு மேற்காக 1200 அடியும் மதிலின் வெளிப்புறத்து அகலம் 20 அடியும் இம்மதிலைச்சுற்றியுள்ள அகழியின் அகலம் 30 அடியுமாகவிருக்கின்றன. இக்கோட்டை தற்காலம் அழிவுற்றிருந்தபோதிலும் ஆதியில் ஓர் சிறந்த சிறுகரமாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. இச்சிறுகரி லீலையத்தின் திரு இடைச்சுரநாதரைத் திருஞான சம்பந்தர்பாடிய தேவாரமே போதியசான்றும் அதுவுமாம்.

மலைச்சர மதிவன வாழைத்தெங்கயலு
மருவியவ யறனில்வருபுன் றாழித்
தலைச்சாத்துறைவதோர் பிறையுடையண்ணல்
சரிதைகள் பாடுகின்றிருகு சம்பந்தன்

புடைச்சுரத்தருவரைப் பூங்கமழ்சாரற்
புணர்மடை நடையவர் புடையிடையார்ந்த்
விடைச்சுரமேத்திய விடையொடொட
வினைசொலவல்லவர் பிணியிலர்தாமே.

என்று பாடப்பட்டிருக்கின்றது. இவ்வளவுமகிமைபெற்ற க்ஷேத்திரத்திலே ஆதியிலே வம்சபரம்பரையாகச்சிற்றரசர்களால் சிறு ஈகாமாகிய திருவிடைச்சுரத்தை ஆளப்பட்டுவந்தது. இவ்வனம் ஆண்டுவருங்காட்களிலே கி பி 1509-ம்ஆண்டுக்குமேல் கிருஷ்ணதேவ மகாராயர் விஜயநகரராஜ்ஜியததை அரசுபுரிகையில்காங்கவராயன்சேத்துராயன்என்னும்இரண்டு சகோதரர் தங்கள் பழைபகோட்டையைப்பலப்படுத்திஅரசு செய்துவருகையில் இவர்கள் ஷிராயர் அவர்களுக்குச்செலுத்தவேண்டிய பகுதியைச்செலுத்தாமையால் இவ்வன்னியராகியஅரசர்மீதுபடையெடுத்துச்செல்லும்படி படைத்தலைவர்க்குத் திட்டஞ்செய்து அனுப்ப இவர்கள் இச்சிற்றரசர்களைச் செயிப்பதற்குக் கூடாமையாயிருந்தமையால் காத்தவராயன் அபிமானித்திருந்த குப்பிச்சியென்னுஞ் தாசிக்கு காதலைபொன் லஞ்சங்கொடுப்பதாக அவளுக்குச்சொல்லிப்பானையக்காரர் அனுப்பியபடியே அவள் விஷத்தைவைத்துக் காத்தவராயனைக்கொன்று அவனது தலையை அரிந்து பானையக்காரரிடம்சேர்த்துப் பணத்தைப்பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். இதைக் கேள்வியுற்ற அவனது சகோதரன் சேத்துராயன் ஆறுத்துயரடைந்து உக்கிர ஆவேசங்கொண்டு தன் தமையனுக்குச் சதிசெய்த குப்பிச்சியையும் அவளது கூட்டத்தாரையும் மாடுகளைப் பிணைக்கட்டுவதுபோல் அவர்களைக் கட்டி, ஓர் ஏரியில் யாவரையும் வெட்டும்படிசெய்தான். இப்போதும் அவ்வேரியும்குன்றும் செங்கல்பட்டிற்குமேற்கே 10மயிலிலும் பழையசிவரத்திற்கும்பாலாற்றின் தென்பக்கத்திலுமிருக்கின்றன. இவற்றை பிணையேரியென்றும்குப்பிச்சிக்குன்றுஎன்றும் அழைக்கப்பட்டுவருகின்றது. பானையக்காரர்கள் பெருஞ்சேனையோடு வந்து சேத்துராயனிருந்த கோட்டையை யெதிர்த்தார்கள். (26) இருபத்தாறுநாள் இருதிறத்தவருக்கும் யுத்தம் நடந்தது. இரண்டு பக்கங்களிலும் அநேகம்பேர்மாண்டார்கள். கடைசியாகப் பானையக்காரர் கோட்டையைப்பிடித்துக்கொண்டார்கள். அதுமுதல் அணைகுண்டி

ரென்றும் அவர்களது பரம்பரையார் செங்கல்பட்டு ஜில்லாவில் ஏராளமாயிருப்பது பிரத்தியட்சம்.

வால்டர் ஹமில்டன் துரையவர்கள் எழுதிய இந்துஸ்தானத்தை விவரிக்கும் பூகோள சாஸ்திரம் 2-வது வாலியம் 525-வது பக்கம்.

"Wanny—a district in the interior of Ceylon, situated towards Trincomalee, in the north-east quarter. This is a fine flat country.— At different periods its Wannies or princes, taking advantage of the wars between the Candian sovereigns and their European enemies, endeavoured to establish an authority independent of both, but they finally, after their country had been much desolated by all parties, submitted to the Dutch."

"இலங்கைக்கு மத்தியில் வடகிழக்குப் பாரிசத்தில் திருக்கோணைசலத்திற்குப் பக்கத்திலிருக்கிற காடு வன்னி என்று சொல்லப்படும். இது ஒரு சமர்த்தியான சமதரை; அதேமுறை இதிலுள்ள வன்னியர் அல்லது அரசர்கள், கண்டி அரசர்களுக்கும் அவர்கள் சத்துருக்களாகிய ஐரோப்பியர்களுக்கும கட்டயுத்தத்திலே பிரவேசித்து தங்களுடைய அதிகாரத்தை இரண்டிலும்படாமல் தனிபாய் நிலைநாட்டும்படிக் கருதியும், எல்லோராலும தங்கள் காடு கைவிட்டப்பட்டமையால் உலாதக்காரருக்குக் கீழ்ப்படிந்துவிட்டார்கள்."

கனம்பொருந்திய ராபர்ட்டி உர்ரும் F. A. S. என்பவர் இந்துஸ்தானத்தில் பிரித்தானியருடைய இராணுவத்தொழிலைப்பற்றி எழுதிய சரித்திரத்திலே 2-வது வாலியம் 200-வது பக்கத்தில் சொல்வது.

"On which, they moved to intercept their return, and besides other Polygars of less note, were accompanied by vanniah of Sevagherry, a very large Collery Fort, situated at the foot of the hills about 20 miles south of Chevelpetore (March 1757)."

"1757வது மார்ச்சிமீ ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தென்பாரிசத்தில் சுமார் 20-வது மயில தூரத்தில் பலேபடிவாரத்தில் கட்டப்பட்டுள்ள கற்கோட்டையையுடைய சிவகிரி வன்

னியனேடு [இனைப்போல் அவ்வளவாய்ப் பிரயோசனமில்லாத இதர பாளையக்காரரோடும் பின்தொடர்ந்து அரசர்கள் வருகை யைத்தடுக்கும்பொருட்டுச் சென்றார்கள்."

"Sir. J. E. Tennent, (டெனென்ட்) K. C. S. I. L. D. என்பவர் எழுதிய இலங்கைச் சரித்திரம் (2-வது) வால்யம் 569-வது பக்கம்."

"In modern times the Wanny was governed by native princes styled Wannyahs and occasionally by females with the tile of Wunnichees."

"கொஞ்சகாலங்களுக்கு முன்னர் வன்னிகாடானது வன்னி யர் என்னப்பட்ட சுதேச அரசர்களாலும், வன்னிச்சி என்ன ப்பட்ட பெண்ணரசிகளாலும் ஆளப்பட்டது."

J பார்ஜஸ் துரையவர்களால் வெளியிடப்பட்ட சென் னைராஜதானியின் தமிழ் சமஸ்கிருத செப்பேடு சிலாசாசன புத்தகம் 150-வது பக்கம் 11-வது தாம்பரசாஸனம். இது வீர சிங்கராயர் தேவமகாராயர் அசுவமேதயாகத்திலேற்பட்டது. சாலிவாகனன் சகாப்தம் 1351- (கி. பி. 1429).

"சுபஸ்தீமன் மகர்மண்டலேஸ்வரர் அரசர்யவிபாடன் பாஷைக்குத்தப்புவராயகண்டன் கண்டகோடுகொண்டு கொண் டகாடு கொடாதான் உத்தரதட்சண பச்சிம பூருவ சப்தசமு த்திராதிபதி ராஜராஜ பரமேஸ்வர ராஜமார்த்தாண்ட ராஜகெ ம்பீர ராஜகுலதிலக துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் போக க்கவிர்த்தான் அசுரதளவிபாடன் ஜெகதலவிபாடன் சட் கரைகாரன் கலியாணபுரவனுதிசுரவன் ஏகாங்கவீரன் வீரசி னேதன் வீரவல்லாளதேவன் தலைகுத்துகாத்தவன் திரிபுவன ராயன் அஷ்டதிக்கு மனோபயங்கரன் அசுவபதி கெஜபதி சப் தாங்கவயிரி பதினெட்டு எனிஎயர்களை தலைகொண்டகண்டன் நாகலோகபாலன் பூலோகபுரந்தரன் எம்மண்டலமும்கொ ண்ட ராஜமார்த்தாண்டன் வீரலட்சுமி விஜயலட்சுமி வரபுத் திரன் ஸ்ரீவீரசிங்காராயர் தேவமகாராயர் பிருதுவி ராஜ்ஜியம்ப ண்ணியருளானின்ற கலியுகாத்த வரும் 4519-க்குமேல் செ ல்லாநின்ற விகாரிவரு சித்திரைமீ 24உ சோமவாரம் பர்

வபட்சம் ரோணி நட்சத்திரம்பெற்ற இத்தகாள் எழுதி விலை வாங்கி விற்றுகொடுத்துகொண்ட தொண்டமண்டலத்தில் சந்திர கிரி ராஜ்ஜியத்தில் கீழ் கரையான மெய்க்குன்ற வளநாடான மையூர் கோட்டத்தில் ஆரணி ஆற்றின் தென்கரையான திரு வேங்கடமுடையான் திருவிளையாட்டு கிராமமான சதுர்வேத மங்கலத்துக்குப் பிரதிமமான கம்மங்குளத்திற்கு அடுத்த கி ஷ்ணவோடையிலிருக்கும் வன்னியராயர் கோத்திரம் மூக்கா காயகன்குமாரன் முத்தையப்பநாயகன் உள்ளிட்டார் அனை வரும் யாம் எங்கள் காணியாட்சி கிராமமான கிருஷ்ணவோ டைகிராமம் பாதிகொள்வாரோவென்று மொழியும்மொழிகே ட்டும் இதற்கு எதிர்க்கெதிர் மொழிகொடுத்தான் இம்மண்ட லத்தில் இக்கோணத்தில் இந்தகாட்டில் சின்னகாவண மங்கல த்திலிருக்கும் வழித்தியரில் ஆரணிசெட்டியப்பசெட்டி யுள்ளி ட்டாரும் நாங்கள் கொள்வோமென்று பிற்கூற முன்னர் கூறி யமுக்காகாயகன்குமாரன் முத்தையப்பநாயகன் பின்னர்கூறி யசெட்டியப்பசெட்டியும் அவை இருதிறத்தவரும் எம்மிலிசை க்கு தம்மில்பொருந்தி கம்மங்களமன்னு மனிகள் ஊரார்முன் பாக விலையாக நிட்சயித்த பாதிபடாத பழவேர்க்காடு புதுவரா கன் 115. இந்த வராகன் நூற்றிபதினஞ்சுக்கும் 32-அடி கோலால்குழி 4000-க்கு பதிர்குத்குழி 2000-னையம்விலை யாகவிற்று பொருள்கைக்கொண்டோம். இதுவேவிலையாவதா கவும் இதுவே விலைப்பிரமாணமடங்கவும் இருக்காலாவது மூக்காலாவது இதுவே விலையாகதாகவும் இனைக்காணியாட்சி யாய் தாங்கள் சந்திராத்தவரைக்கும் அனுபவித்துக்கொள்ள க்கடவீராகவும் இப்பிரமாணத்திற்கு இக்கக்காணியாட்சித்கு யாதெருகலனுமில்லை கலனுள்ளதாகத் தோற்றப்பட்டால் நாங்களே முன்னின்று கலன்தீர்த்துக்கொடுக்கக்கடவோமாக வும் இப்படிக்குச்சம்மதித்து எங்கள் காணியாட்சியைக்கிரை சாதனம் பண்ணிக்கொடுத்தோம் ஆரணி செட்டியப்பசெட்டி க்கும் முத்தைய நாயகனுள்ளிட்டாருக்கும் இவைகைமத்த கம முத்துகாயகன்குமாரன் முத்தியப்பநாயகன் எழுத்து"

"இதற்கு சாட்சி கம்மங்குளம் வெள்ளசெட்டிநாயகன் பொன்னகிரி பல்லவ முத்தியப்பமுதலியார் பெரியகாமண்ம

வெங்கட்டமுதலியார் இவர்கள்சொல்ல ஊர் கணக்குபெரிய கயனப்பிள்ளை எழுதினசட்டம் சின்னவரம் மூர்த்தியாச்சாரி போட்டவெட்டு வெள்ளைசெட்டிகாயகன்கையெழுத்து பல்ல மூர்த்தியப்பமுதலியார் கையெழுத்து வெங்கடமுதலியார் கையெழுத்து இத்தச்செய்கை முத்தையப்பகாயகன்கை யெழுத்து."

ஷைபுத்தகம் 152-வது பக்கம் 12-கெ. சாஸனம்.

இது சாலிவாகன சகாப்தம் 1377- (கி. பி. 1456)ல் காஞ்சியில் இராஜவல்லபன் அரசுபுரிந்த காலத்திலேற்பட்டது. சரத்தாங்காவென்னும் கிராமத்துக்குருக்கள்மார் சங்கிரசச்சாரியார் உத்தரவுபடி அவர்முன்னிலையில் வன்னிய சின்ன பிள்ளை தந்தி யுள்ளிட்டார்க்கு ஷைகிராமத்தை 750-வராகனுக்குவித்ததைத்தெரிவிக்கின்றது.

இச்சாசனம் வரி23-24-25-ல் வன்னிய சின்னபிள்ளை தந்தி யுள்ளிட்டார்க்கு எழுதிக்கொடுத்த கிரையசாஸனம் எங்கள் கிராம காணியாட்சியான சரத்தாங்கா என்றெழுதப்பட்டிருக்கின்றது.

வன்னியர் 18 கோட்டத்திற்கு அதிபதிகளாயிருந்து கொஞ்சகாலத்திற்கு முன்பு துலுக்கர் அரசாக்க ஆரம்பத்தில் சேதுபதியால் அடக்கப்பட்டார்களென்று சேதுவில் கண்டெடுக்கப்பட்ட செப்பேடு சிலசாதனங்களால் காணலாம். அவை வருமாறு.

1886வது ஜே. பார்ஜசஸ் துரையால் வெளியிடப்பட்ட தூச்சியாலோஜிகல் சர்வே என்னும் புத்தகத்தில் சேதுபதி செப்பேடு சாதனம் 3 - வது 4 - வது 5 - வது 17 - வது பட்டயங்களில்" வன்னியராட்டத்தின்தான்" என்றும் 6-வதில் "வன்னியர் திக்கமென்றும்" 10-வதில் 'வன்னியர்ராட்சதவிற்தன்" என்றும் 27-வது "18 கோட்டத்து வன்னியர்களின்டன்" என்றும், 31-வது பழனிகோவில் பட்டயத்தில் 2-வது தகடு 28-வது வரியில் "18-வன்னியருக்கு எழுபத்தேழு பாளைக்காரருக்கும் தொழைப்பிரவென்" என்றும், கூறப்பட்டிருக்கின்றது.

மேலேகாட்டிய மேற்கோள்களில், இலங்கைச்சரித்திரத்தில், வன்னியர் என்னும் மொழி அரசர்களென்றும், இந்துஸ்தான் சரித்திரத்தில் சிவகிரி வன்னியன் அலது அரசனென்றும், பர்ஜஸ்துரை புத்தகத்தில் மூக்காரயகன் வன்னியராய கோத்திரத்தானென்றும், வன்னிய சின்னபிள்ளை தந்திரி (தலைவன்) என்றும் அசர் அல்லது சிற்றரசரென விளங்கும் பழ பட்டயங்கள்தோறும் வன்னிய மிண்டன், 18-கோட்டத்து வன்னியன் என்று கூறியுள்ளமையால் வன்னியராகிய அக்கினிவம்சத்தவர் பண்டைக்காலந்தொடங்கி அரசபுரிந்து வந்த இராஜ சத்தரியரென்றும் உயர்ந்தநிலைமையை யுடையாரென்றும் பலபிரமாணங்களாலும் பிரத்தியக்ஷானுபவங்களாலும் நிலைநாட்டினேம்.

இது காறும் நாம் வன்னி என்பதனுடைய பொருள் சிறப்பையும், வன்னியர் என்பதனுடைய பரமபரைச் சிறப்பையும் தொன்றுதொட்டு ஆண்டுவரும் ஆட்சியாய்ச் சர்வாங்கீகாரத்தோடு வழங்கப்பட்டுள்ள சாஸ்திரப்பிரமாணங்களைக்கொண்டும் செப்பேடுசிலா சாஸனங்களைக்கொண்டும் நிரூபித்துவந்தோம்.

படையாட்சிகள்.

படையாட்சிகள் என்பதற்கும்பொருள் ரதசஜ துரக பதாதிகளென்கிற நால்வகை சேனைகளுக்கும் ஆண்மையும் யுரிமையு முடையாசரென்றும் சேனுதிபதி சேனைத்தலைவன் என்றுஞ்சொல்லப்படும். இதற்கு நாலாட்சி வருமாறு.

திருவாசகம்

திருப்படையாட்சி.

கண்களிரண்டு மவன்கழல் கண்டுகளிப்பன வாகாதே
காரிகையார்கடம் வார்த்திலென்வாழ்வு கடைப்படுவாகாதே
மண்களில்வந்து பிறந்திடுமாறு மறந்திடுமாகாதே
மாலறியா மலர்ப்பாதமிரண்டும் வணங்குதுமாகாதே
பண்களிகூர்தரு பாடலோடாடல் பயின்றிடுமாகாதே
பாண்டி நன்னுடையான் படையாட்சிகள் பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர் வேதம்லத்து வெளிப்படுமாகாதே
மீன்வலிவீசிய சானலன்வந்து வெளிப்படு மாயிடிலே.

இத்திருவிருத்தற்கு இயற்றமிழாசிரியராகிய
தி. விசாகப்பெருமாளையரவர்களியற்றிய வுரைவருமாறு.

இச்செய்யுள் என்னுதலிற்றோவெனின் படையாட்சிக ளோடு பாசறைக்கட்சென்றதலைவன்சத்தருதலால் அவன்வரு வலெனவுரைத்தபருவமும்வந்தது அவனுய்வருவன்என்றுற்று வித்த பாங்கிகருத்தலிலவி அவன் வெளிப்படின்றனக்குளதாம் போகாகத்தம்பேற்றைக்கூறுதலே யுணர்த்துதலுஞ்சின்று.

(இ-ள்) கலவனுருக் கொடுவலிவிரி மீனிரைப்பத்தித்த சிலையினுக்கலைவனவர்த்து வெளிப்படினுண் டெனினிரண்டு கண்களும், அவன்திருக்குழல்கண்டு களிப்பனவாகிய நிகழ்ச்சி யுளதாகாது. பிரிவதியாதுந்தனதலைவருடன்புணர்ந்து,நிற் குமேனியமாதர் வாழ்வினின்று மென்வாழ்வுகெடைப்படுமாறு மாகாது. இனிமண்ணுலகங்களின்வந்துபிறந்திறுமாறுபிறந்திடு முளதாகாது. திருமாலதியாத்திருமேலர்ப்பாசமிரண்டனையுமவ னைந்துதலென்று சொல்லுஞ் சொல்லிசழுச்சியு முளதாகாது கலிப்பினைமிகத்தரும் பண்ணினிசைப்பொருந்திய பாடலோடா டல் பயின்றிடுமாறுமுளதாகாது, கல்வளமகிழைந்த திருப்பா ண்டியநாடதனையே திருப்படைவீடாகவுடையான்படையாட் சிகள் பாடுதலென்று சொல்லுஞ் சொல்லிசழுச்சியுமுளதாகா தது. இருமலமுடைய பிரளயாகலர் கனிகூரத்தக்கதாக பாம்ம முசதார்ப்புயத்தோடுவந்து வெளிப்படுமாறுவெளிப்படுதலுமுள தாகாது, அண்மையால் சிவபோகமென்று வெளிறுபூத்து கொருபி யாவென் என்பதாம்.

படையாட்சிகள் என்னுஞ்சொல் இக்காலத்தில் மதுரை திருநெல்வேலி தஞ்சைமுதலியவிடங்களில்வசிக்கும் சீசவ குப்பினரில் ஒருசாரார் பட்டப்பெயராகவழங்கிவருகின்றனர். பூர்வத்தல் பாண்டியராஜ்ஜியத்தை அரசபரிபாலித்த அரிமர்த்தன பாண்டியனிடம் மந்திரியாயிருந்தருமாணிக்கவாசகர் தாமிட வேதமாகியதிருவாசகத்திலே படையாட்சிகள்என்னுஞ்சொற் பிரயோகமிருத்தலால் அச்சொல்லெழுத்தமைபார்கள் அக்கால த்திலிருந்தார்களென்றுதெற்றெனவிளங்குகின்றது, அவர்கள் பரம்பரையார்தற்காலத்திலிருப்பதுபோலவாக்கும் பிரித்தியட்

சம். இவர்களைப்படைவீரர்படையாளர் என்றுவ்வாறுகொள் ளினும் அவர்கள் அரசர்வகுப்பினராகிய வன்னியரோவர்;படை யாட்சி யென்றதை ஜாதிப்பெயராக நிகண்டு திவாரங்களில் கூறியில்லை. இப்பட்டப்பெயரை ஜாதிப்பெயராக அன்னியர் கொள்ளுகின்றனர். இதுபிரமாணமாகாது. அருணகிரிநாதர் அருளியதிருப்புழில் கூறியதாவது.

அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளிய திருப்புகழ்
இரண்டாவது பாகம 849-வது செய்யுள் கரூர்

சஞ்சலரித பரகாட்டர்கள்
மந்திரி குமர் படையாட்சிகள்
சங்கடமிபர் தொழுக்கினை முடிசூடித்
தண்டிகை களிறு பரிமேற்றனி
வெண்குடை கிழலிலுல வாக்கன
சம்ப்ரம லிபவ சவுபாக்கிய முடையோராய்க்
குஞ்சமும்விசிற இறுமாப்பொடு
பஞ்சணை மிசையினிசை யாத்திகன்
கொம்புகள் குழலுகன் வெருவாத்திய மியல்தேம்;
கொங்குணி மலிர பெருகாட்டிய
கஞ்சென மனதுமிழ் பார்த்திபர்
கொண்டய னெழுதும் யமகோட்டியை யுனாரே
பஞ்சவர் கொடியவினை தூற்றுவர்
வென்றிட சருவிகலருற்பொருள்
பங்குடையவனிபதி சோத்திட அயலேதோய்ப்;
பண்டையிழ் விதியை நினையாப்பனி
ரண்டுடை வருஷமுறையாப்பல
பண்புடன் மறைவின் முறையாற்றிரு வருளாலே,
வஞ்சன கழுவிரைமீட்டெயில்
முந்துதமுடையமன வாழ்க்கையின்
வந்தபி னுரிமையது கேட்டிட ஏவியாகார்;
மண்கொளவிசையன் விடுதேர்ப்பரி
யுந்தினன் மருகவயலூர்க்குக
* வஞ்சியிலமர் சிறைமீட்டருள் பெருமாளே;

படையாட்சிகள் என்றபிரயோகம் திருவாசகத்திலும் தி ருப்புகழிலுமிருப்பதுபோல் பலபுத்தகங்களிலும் காணலாம்

* வஞ்சிவென்பது கருவூர்

தலிவன் படையாட்சிகளோடு பாசறைக்குச் சென்றனனும் அரசன் முடிசூடினகையில் மந்திரி குமாரன் படையாட்சிகள் முதலியவகுப்பார் தொழும்படியிருந்தானெனவும் பொருள்படும் படையாட்சிகள் அரசர் பரம்பரையாரின் பிரிவினரென்றும் இவர்கள் சேர சோழபாண்டிய காலங்களில் பூர்வமிருந்த வம்சத்தவர்களே இக்காலத்திலும் நடுநின்றார்களென்றும் சேர சோழ பாண்டிய பல்லவ வசனுக்கியமன்னர்களோடு கலந்தவரென்றும் சம்புகுலத்தார் பல்லவர் வன்னியரென்றும் அழைக்கப்பட்டு வருகின்றனர்.

படையாட்சிகள்என்னும்பதத்தைப்பற்றி மெஸ்டர்ஹெஸ் சன்துரை எழுதிய மதுரை மானுயலென்னும் புத்தகத்தில் இரண்டாவது பிரிவில் 56-வது பக்கத்தில் கூறுவதாவது.

"Padaiyatchies, looking to their caste name, would appear to have been employed in former times as Soldiers. The name seems derivable from Padai, a body of troops and atchi, a ruler."

படையாட்சிகள்.

"இவர்களுடைய சாதிப்பெயரை நோக்கு மிடத்து முற்காலத்தில் இவர்கள் சேனவீரர்களாகயிருந்ததாகத் தெரியவருகிறது. படை—சேனை எனவும், ஆட்சி—ஆள்பவர் என்பதே இதனுடைய தாதுவின் பொருளெனத் தோன்றுகின்றது." என்று சொல்லப்பட்டிருப்பதால் படையாட்சிகள் எனபது படையையாள்பவரெனப் பொருளாம்.

தஞ்சாவூர் மானுயல் 191 பக்கம்,

PADEIYATCHI.

This word apparentty a Corruption of 'Padeiyalan,' derived from "Padei (army) with the usual suffix "alan" it means o warrior. The Padeiyatchi muster strongly in the more northern and eastern parts of the delta.

இச்சொல் படை (சேனை) என்ற சொல்லுடன் ஆளன் என்ற பின் அடையோடு சேர்ந்த படையாளன் என்பதின் திரிபே படையாட்சி இதன்பொருள் யுத்தவீரன். படையாட்

சிகள் கொள்ளிடத்திற்கும் காவேரிக்கும் வடக்கிலும் கிழக்கிலும் மத்தியிலும் அதிகமாக வசிக்கிறார்கள்.

கிலேசிழுபது என்னும் நூலுக்கு உரையெழுதிய மு-ரா-ஸ்ரீ பேழைக்குடி நாராயணசாமிஐயர் அவர்கள் 54-வது கவியின் உரையின்கீழ் கூறுவதாவது வேத்தர்கள் பட்டப்பெயர்களாவன சேரனர், சோழனர், பாண்டியனர், உடையார், நயனர், கண்டர், சாமந்தர், பல்லவர், அஞ்சாத சிங்கம் கங்காணமுடையார், மழவர், பொறையர், அரசுபள்ளி, இராயர், படையாட்சியர், நாயகர், கிடாரங்காத்தவர், நீலகங்கரையார், வாளண்டையார், வீரமிண்டர், வல்லரையுடையார், இராஜாளி, சமூகியர், தந்திரியர், இட்டிகள், நாகைகள், பண்டாரத்தார், பூபதிகள், பரமேசுவரனர், காளிங்கராயர், சம்புராயர் முதலியவைகள் என்க. இன்னும் அநந்தம் பட்டப்பெயர்களை அநுபவத்திற்கண்டுணர்க" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. படையாட்சியர் என்பது பட்டப்பெயரேயன்றிச் சாதிப்பெயர் அல்ல. இப்பட்டப் பெயர்களில் பெரும்பாலும் இதில் எழுதப்பட்ட பூர்விக சாஸனங்களில் பல விடங்களில் பிரயோகிக்கப்பட்டிருப்பதைக் கண்டுகொள்க. இப்பட்டப்பெயர்களைவகித்த அரச சந்ததியார் தமிழ்நாடெனிலிருப்பதுபிரத்தியட்சம்.

இதுகாறும் 4 5-6-வது அத்தியாயங்களில் கூறத்திரியரையும் அவர்களதுபிரிவினர்களாகிய சேரசோழ சளுக்கிய பாண்டிய அரசர்களின் வம்சாவளிகளையும். அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் பெண்கொடுத்தல் கொள்ளல் முதலிய ஆசாரங்கள் தொன்றுதொட்டு நடைபெற்று வந்தமையையும் இவ்வம்சத்தவர்கள் தான் வன்னியரென்றும் சம்புகுலத்தாரென்றும் அரசுபள்ளிகளென்றும் பல்லவரென்றும் கூர்த்திரியரென்றும் படையாட்சிகளென்றும் இப்போதுமவழங்கி வருதலை பற்பல சாஸனங்களைக்கொண்டும் பற்பல சிறந்த நூல்களின் பிரமாணங்களைக்கொண்டும் நியாய வாயிலாய் விருத்திக்குக் காட்டினும். இனி வல்லவர்களின் உற்பத்திக் கிரமங்களைக் காட்டுவாம்.

7-வது அத்தியாயம்.

தொண்டமண்டல பல்லவ அரச சத்தியபாரின் பூர்வோத்திரம்.

இவ்வத்தியாயத்தில் பல்லவ அரசர்கள் அக்கினியின் புத்திரனை ஆங்கிரஸர் வம்சத்தில் வந்தவர்களென்று விருபிக்கப்படும்.

தொண்டமண்டலத்தின் எல்லைகளாவன.

ஔவையார் கூறியவெண்பா.

மேற்குப் பவழமலை வேங்கட மேல்வடக்காம்
தார்க்கு முலரியணிழக்குச்—சீர்க்குலவு
தெற்குப்பிணகை திகழிருபதின்காத
நற்றெண்டை நாட்டெல்லை காடு—என்றும்

திருக்கழுக்குன்ற புராணம்.

வண்டாமலர்த்தேன் மாந்து பெண்ணையின் வடபால்வேழங்
கண்டாலுங்கண்டார்க்கும் காதலிலி வளையின்தென்பாற்
றண்டாப் புண்ரிமேல்பாற் பவழமாசைலக்கீழ்பாற்
றொண்டாத் திருநாடென்னு மதன்வளத்தொகுத்துச்சொல்வாம்

என்னும் தொண்டமண்டலத்தின் எல்லைகளை வகுத்துக் கூறுகின்றார். இம்மண்டலத்தை யாதியில் தண்டகன் ஆண்டமையால் தொண்டமண்டலமென்றும் ஆதொண்டை சக்கரவர்த்தி யாண்டமையால் தொண்டைமண்டலமென்றும் கூறுகின்றனர். உமையவள் ஏகம்பருக்குத் தொண்டுபுரிந்தமையால் தொண்டமண்டலமென்றும் சொல்லுகின்றனர். இம்மண்டலத்திற்குப் பிரதான நகரம் காஞ்சிமாநகரம். இந்நகரம் தொன்றுதொட்டிருப்பதாகவும் அதை ஆண்டமன்னர் அனேகரென்றும் அவர்களில் தண்டனென்பான் ஒரையனென்றும்,

காஞ்சிபுராணம் நகரேற்றுபடலம்
முதல்செய்யுள் கூறுகின்றது.

ஆரூடிய வேணிநாதர மர்ந்தசக்தி நகர்த்தலை
வீறுதோற்ற வதிந்து காவல்விளைத்த வேந்தர்களென்னிலார்
கூறுமன்னவர் தம்முளோர்குல மன்னவன்குரு கார்தமை
மீறுசெய்திடு தண்டனென்பவ னேகவாணை செலுத்துநாள்.

காஞ்சியை ஆண்ட தண்டனது அரசாட்சியானது ஓர் முனிவர் சாபத்தால் அழிவற்றுப் பின்னர் கலிகாலவளவனால் காஞ்சிநகர் முற்போலவே ஏற்பட்டதென்று மிக நகரேற்று படலம் 235-வது 266-வது செய்யுள்கள் கூறுகின்றன.

மங்கலநகர் முன்போல வனம்பெறக்காண்பான்முன்னர்ச்
சங்கரிவளர்த்த காலெண்டருமை சரிலைகளும் பொன்னுற்
பொங்கொளி மணிபாற்செய்து புதுக்குபி பின்னர்மாசித்
திங்கள்சேர் மகத்திற்கம்பர் திருநகர் காப்பணட்டான்.

தூல்வழி வீதிபோக்கி கொச்சிவின் னுரஞ்சக்கண்டி
மேல்வன ருலகாணை மேதகு நகரமாக்கி
நால்வகை வருணத்தோறு நான்கு மூவாயிரத்த
சால்புரு குடிகளேற்றித் தாபித்தான் பிறவு மன்னே.

மேலே காட்டிய செய்யுள்களால் காஞ்சிபுரம் தொண்டை நகரமென்று புலப்படுகின்றது.

சிவ எழுபத நகரச் தலத்தின் சிறப்பு.

மெச்சுந்தங்கக் கலிலுலகின்மி னிருந்தலங்கண் மிகவெனினு
மிச்சித்தவர் தங்குறைவேயின் முனிமம்போற் கடிதற்கியலாவே
பச்சைவண்ணத் திருமாலும் பவழவண்ணச் சோதியும்வாழ்
கச்சித்தலத்தைப் புகையுமெனக் கழறத்தலங்கள் காணேமால்.

சுமார் 2000 வருஷத்திற்குமுன் அகஸ்புரித்த போஜராஜன் சரித்திரத்தில் காஞ்சிமாநகரத்தைக் குறித்துச்சோல்லுஞ் சுலோகமாவது.

पुष्पेषु जाती पुरुषेषु विष्णु
र्नारीषु रंभा नगरीषु कांची
नदीषु गंगा नृपतीषु रामः काव्येषु माघः कविकालिदासः॥

புஷ்பேஷு ஜாதி புருஷேஷு விஷ்ணு
நாரீஷு ரம்பா நகரீஷு காஞ்சி
நதீஷு கங்கா நருபதிஷு ராமா
காவ்யேஷு மாகா கவிகாளி தாசா.

புட்பங்களில் சிறந்தது ஜாதிமல்லி, புருஷர்களில் சிறந்தவர் விஷ்ணு, ஸ்திரீகளில் சிறந்தவள் அரம்பை, நகரங்களில் சிறந்தது காஞ்சிபுரம், நதிகளில் சிறந்தது கங்கை, அரசர்களில் சிறந்தவர் ராமர், காவியங்களில் சிறந்தது மாகம் தேவ் கவி காளிதாலினை.

என்று ஓர் வித்வான் மகாகவியாகிய காளிதாஸன் முன் போஜராஜன் சமூகத்தில் கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கின் றது. மேற்காட்டிய செய்யுள்களாலும் சுலோகத்தாலும் அறி யக்கூடிய தென்னவெனின் காஞ்சிமாநகரமானது இரண்டா யிரம்வருடங்களுக்கு முன்னரேகிறப்புற்ற நகரமாயிருந்ததென் பது நன்கு விளங்குகின்றது.

இவ்வளவு பகிமைபெற்ற நகரமானது தூண்டில் பல்லவ அரசர்களால் ஸ்தாபிக்கப்பட்டதென்று பின்னர் காட்டப் படும் பிரமாணங்களால் விதிக்கப்படும்.

பல்லவர் உற்பத்தி.

க்ஷத்திரியர் அக்நி வம்சத்திலும், சூரிய சந்திர வம்சங்க ளிலும் உற்பத்தியானதாகப்பிரமாணங்கள் பலகூறப்பட்டிரு க்கின்றன. அதில் பூர்வத்தில் அக்நிவம்சத்திலுதித்தவர் ஆங் கிரஸ பிருஹஸ்பதி முதலியவர்கள் கிரமமாகப்புத்திரபௌத் திர பாரம்பர்யமாய் விருத்தியடைந்ததாக மஹாபாரதம் ஆதி பர்வம் 67-வது அத்தியாயம் 70 வது சுலோகம் தொடங்கி விச தமாய்க் கூறப்பட்டிருக்கிறது. அதாவது,

भरद्वाजस्य पुत्रौ द्वौ ब्राह्मणौ विद्धि भारत।
आङ्गिरस्यौ मतौ मुख्यौ भरद्वाजकुलोद्भवौ।
ऋग्वेदमनृचां मुख्यं यस्यवाङ्मय्युदाहृतम्।
महर्षिमङ्गिरसमं तेजसा स्वेन वेष्टितम्।
ययातिं नहुषं चैव यं चन्द्रमसि दृष्टवान्।
बृहस्पतिस्तृतीयस्तु द्रोणश्चाप्यमितव्रतः।
यवक्रीतश्चतुर्थस्तु रैभ्यश्च मुनिसत्तमः।
ऐश्वर्यमुपपन्नानां जन्मैश्वरपरंतपः।
अङ्गिरस्यायसाः पुत्राः श्रूयन्ते भरतर्षभ।
देवैर्मखपतौ तस्मिन् बृहस्पतिपुरोगमैः।

ப்ருஹஸ்பதேர்ப் ருஹத்கீர்தேர் தேவர்ஷேர் வித்திபாத
அம்சாத் த்ரோணம் ஸமுத்பந்நம் பாரத்வாஜ மயோநிஜம்
தந்விகாம்ருபசார்த்தாய: ஸர்வாஸ்த்ர விதுத்தம:
மஹாவீர்த்தித் மஹாதேஜா, ஸஜ்ஜேமது நேச்வர:

தநுர்வேதேசவே சேயம் தம்வேத விதோவித;
வரிஷ்டம்தத் த்ரிகர்மாணம் த்ரோணம் த்ரோணமஸ்வ குலவர்
மஹாதேவாந்த கரப்யாச் சகாமாத கரோதாச்ச பாரத [த்தனம்
ஏகத்வ முபத்ந்நாகாம் ஜக்ஞேருர: பரந்தப:
அச்வத்தாமாமஹாவீர்ய: சத்ருபக்ஷக்ஷயாவஹ:
வீர: கமல்பத்ரா:க்ஷ கபிதாவா வீக்ஷாதிப.

இ-ள். உலகமெங்கும் பெருப்புழ் பெற்றவரும், தேவ ருஷியுமான பிருஹஸ்பதியினிடத்திலிருந்து அயோநிஜரான பாரத்வாஜர் தோன்றினர், அந்தப் பாரத்வாஜ மஹாரிஷியி னுடைய அம்சத்திலிருந்தும் த்ரோணாசாரியர் உதித்தனர். இத்த்ரோணாசாரியர் வில்வித்தைக் கற்றவர்களுக்குள் உத்த மர். வில்வளைக்குக்குட் நிறந்தவர். எல்லா சாஸ்திரமுமுண ர்ந்தவர். பெருப்புகழைப் பெற்றவர். மஹாதேஜஸ்ஸுடைய வர். எத்தச் த்ரோணாசார்யரும் வேதத்திலும், ருக்கு யஜு ஸ் முதலிய வேதங்களிலும் மிகச் சமர்த்தரென்னவேண் டுமோ? முனர்க்தோ புகழுவார்களோ? எவரை வரிஷ்டரெனவும், தனது வம்ச(குல)த்தை அபிவிருத்திக்குக் கொண்டுவரவேண் டுமென்கிற ஆசை மேல்பட்டவரெனவும் அறிவாளிகளறிவார் களோ அப்படிப்பட்ட த்ரோ ணாசார்யரிடத்திலிருந்தும், மஹா தேவன் அர்த்தகன் இவர்களுடைய காம குரோதங்களால் ஏகீ பாவத்தை அடைந்திருக்கும்போது மஹா குரோதியும் மஹா பரா க்ரமசாலியுமான பரத்வாஜபுத்திரனும் சத்துருக்களுடைய பக்ஷத்திற்கு நாசத்தை யுண்பெ ண்ணுகிறவனும் தாமரைமலர்போன்ற கண்களையுடையவனு யும், பூமியில் வீரபுருஷரென்கிற புழ்பெற்றவனுமான இருக்கிற அசுவத்தாமாவென்கிற புத்திரன் உண்டானான் என்று கூறி யிருத்தலால் பிருஹஸ்பதியினிடமுதித்திருந்தே பரத்வாஜர் த்ரோணர் அசுவத்தாமா பல்லவ முதலியவர்கள் பாரம்பரை முறைமையாய் ஜனித்தவர்களாகின்றார்களென்பது நிஸ்ஸம்சயமாயிற்றென்க. அங்ஙனமாயின் பிருஹஸ்பதி பகவான் எத்தவம்சத்திலுதித்தவராவரெனின் அக்நிபகவானுக்குப்புத்தி ரரான ஆங்கிரஸரிடத்திலிருந்து உதித்தவரென்பதை யறியாதா ரிராதலால் அந்தப் பிருஹஸ்பதி அக்நிவம்சத்திற்சேர்ந்தவ ரென நுக்வேதங்கூறுகின்றது.

சுருதி "அங்காரவம்சிரோபஸ்தா ரஜாயத்ருஹஸ்பதி ஸ்ஸஹோதரத:" என்றதனால் அங்கார" என்கிற பதம் அக்கிக்குப் பர்யாய வாசகமாம். அந்த அங்கார அக்கிதேவனிடத்திலிருந்து அங்கிரஸ்ஸும், அவரிடத்திலிருந்து பிருஹஸ்பதியும் உண்டானதாக விளக்குகின்றது.

இதுவுமன்றி மஹாபாரதம் அநுசாசநபர்வம் 85-வது அத்தியாயம் 137-வது சுலோகத்திலும் அப்படியே கூறப்பட்டிருக்கிறது. அதாவது,

ஜ்ராஹ்மணிரஸ்ஸுதேவ: ஸ்மிதஸ்தஸ்ய தாரஸ:।
தஸ்மாதாங்கிரஸா ஜ்ஞேயா ஸர்வஎவதபஸ்வின:॥

ஜ்ராஹ்மாங்கிரஸம் தேவ: ஸ்மிதஸ்மாத் தபோதர:
தஸ்மாதாங்கிரஸா: க்ஞேயா: ஸர்வஎவதபஸ்வின:.

இ-ள். சுவாலிகளோடுகூடிய அக்கிப்ரம்மதேவனுடைய அநுக்ரஹத்தால் அங்கிரஸை புத்திரனாக அடைந்தனராதலால் அங்கிரஸருடைய வம்சத்திற்றோன்றியவர் ரிஷிகளும் ஆங்கேயர் (அக்கிவம்சத்திலுண்டானவர்கள்) என அழைக்கப்படுவார்கள், எப்படியும்.

இப்படி அக்கிவம்சத்திலுதித்தவர்களனைவரும் க்ஷத்திரிய ஜாதியாரேதவிர மற்றப்ராம்மணரில் மூன்று வருணத்தாரில் ஏதோ ஒருவருணத்தாரென்று மனதிலுறும் நினைப்பதற்குக் கூட இடமில்லாமலிருக்கும்படி அங்ஙனே விளக்கப்பட்டிருக்கிறது.

மே அத்தியாயம் 178-வது சுலோகம்.

ஸர்வேப்ரஜானாம்பதயஃ ஸர்வேசாபிதபஸ்விநஃ।
ஸ்வர்க்ப்ரசாதாஃகம்ஸோ தாரயிஷ்யந்திஸாம்ப்ரதம்॥

ஸர்வேப்ரஜா காம்பதய: ஸர்வேசாபி தபஸ்விந:
ஸ்வர்த்ப்ரசாதாதிமம் லோகம் தாரயிஷ்யந்தி ஸாம்ப்ரதம்.

இ-ள். அப்படி அக்கிவம்சத்திற்றோன்றியவ ரனைவரும் ப்ரராஜா நாயக (அரச)ராகவே இருப்பார்கள். இந்த அக்கிவம்சத் தரசரனைவரும் மஹா தபஸிகளாயும் ப்ரம்மதேவருடைய அநுக்ரஹத்தால் இந்த லோகத்தைப் பரிபாலனம் செய்யத்தக்க சக்தியுடையவர்களாயுமிருப்பார்கள்.

இதுவுமன்றி "அங்காஜ்ஞிரஸாதஸ்தி" என்று அங்ஙனமே கூறியிருப்பதால் முன் எடுத்துக்காட்டிய சுருதிக்கு இந்த வாக்கியம் உபப்ரமாணமாயிற்றென்க. "அங்காரேப்யோங்கிரஸபவத்" என்றால் அங்கார என்பது வடமொழியில் அக்கியெனப் பொருள்படும். அந்த அங்கார என்னும் பதத்தில் ஐகாரம்வேற்றுமைபேறி நிற்றதால் அந்த ஐகாரம் வேற்றுமைக்குநின்றும் எழுகிற அர்த்தமாம். "அபவத்" என்பது கிரியாபதம். அதற்குஉண்டாகுதல் என்றுபொருள். "அங்கிரா" என்பது காமவாசகம். இதனால் அக்கியினிடத்தினின்று அங்கிரஎன்கிற புருஷர் உண்டானரென்று தாற்பரியம்.

மஹாபாரதம் ஸம்பவகாண்டம் 45-வது அத்தியாயத்தில்

ஸங்காஜ்ஞிரஸ்தஸ்ய வாலகில்யாங்கிரஸோச்சயாத்।

அங்காரேப்யோங்கிரஸ்தாத வாலகில்யா: குசோச்சயாத்.

இ-ள். "அங்கார" என்று சொல்லப்படுகிற அக்கியினிடத்திலுண்டானபடியால் அங்கிரா என்றழைக்கப்பட்டார்.

மஹாபாரதம் அநுசாஸநபர்வம் 85-வது அத்தியாயத்தில் அக்கியினிடத்திலிருந்து அங்கிரஸ பிருஹஸ்பதி, துரோணர், அசுவத்தாமா பல்லவர் முதலிய அரசர்கள் உண்டானதாகச் சொல்லப்பட்டிருப்பதுடன் அப்படி அக்கியினிடத்திலிருந்து உண்டான காரணமும் அதை யநுசரித்த நீண்ட வேள்வியைப்பற்றிய சரித்திரமும் கூறப்பட்டிருக்கிறது. அதை இங்ஙனம் எடுத்தெழுதுவது அவசரமாதலால் அதைவிட்டு இங்குப் பல்லவரசர்களின் வம்சோற்பத்தியைக் குறித்துக் காஞ்சிபுரம் அமராவதி திருச்சினாப்பள்ளிமுதலிய ஸ்தலங்களிலுண்ட காலத்திற்குமுன்னர் பல்லவர் ஆணைகையிலேற்பட்ட வடமொழி சாஸனங்களை முறையே எடுத்துக்காட்டுவாம்.

134-வது பக்கத்தில் வருணனுல்செய்யப்பட்ட பகபதி சம்பந்தமான யாகத்தில் மூன்று புருஷர்கள் உற்பவித்தார்களென்றும் அவர்களில் இரண்டாவது அக்கியின் அங்கத்திலிருந்து ஆங்கிரஸ் உற்பவித்தாரென்றும் இவ்வாங்கிரஸர்

குப் பிரகஸ்பதி முதலிய எட்டுப்புத்திரர்கள்பிறந்தார்களென் றும் மகாபாரதம் அநுசாசனபருவத்தினின்று காட்டப்பட்டிருக்கின்றது. க்ஷத்திரியவம்சத்திற்கு மூலபுருடராகிய ஆங்கிரஸ என்பவரின் புத்திரர் பிரகஸ்பதி, இவர் புத்திரர் சாம்பு. இவர் புத்திரர் பரத்வாஜர். இவர்புத்திரர் துரோணர். இவர்புத்திரர் அசுவத்தாமரென்று நை பாரதம் ஆதிபர்வத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கிணங்க பல்லவ அரசர்களுக்கு இராஜதானியாகிய காஞ்சிபுரத்தில் சுமார் 1400-ஆண்டிகளுக்குமுன் அரசபுரிந்திருந்த இராஜ சிம்மவர்மனால் (தற்காலம் கைலாசநாதர் ஆலயமெனவழங்கும்) இராஜசிம்மபல்லவேஸ்வர மென்னும் ஆலயம் எடுப்பிக்கப்பட்டது. இவ்வாலயத்தின் வெளிப்புறத்தைச்சுற்றியுள்ள சாஸனம் சமஸ்கிருததேவநாகரி லிபியிலிருப்பதைத் தெலுங்கு அட்சரத்தில் இங்கு அச்சிடப்பட்டது.

E. ஹல்ஸ்தரையவர்களால் வெளியிடப்பட்ட முதல் வாலியம் 12-வது பக்கம் 24-நெம்பர் சாஸனம். இவ்வாலயம் கி-பி-550-ம் ஆண்டு அரசுசெய்த களக்கிருஷ்ணவர்மனுடைய முதலாவது திருநிவர்மன் ஆளுகையின் அந்தத்தில் அஸ்திவாரம் போடப்பட்டதென்று கணித்திருக்கின்றனர். இவ்வாலயம் காஞ்சிபுரத்திற்கு மேல்பாரிசத்தில் மேட்டுத்தெருவுக்கு அடுத்துள்ளது. அதிலுள்ள சாஸனம் வருமாறு.

ஸ -1-

.....த்வம் ஜடாதி-
ர்ஸ்ரீலக்ஷ்மி கண்டதாம்ன்ன ஘ணமணிகிரணை: கோணிமானம் ததானா।
நைர்ருத்யா ஸ்தாணுரேதா த்ரிபுவனசரசீபூரணீ வ: புனீயா
நானாவர்ணார்ணவாக்ஷஸ்ருசுசகலவரிஷ்ணு...॥ (1)

.....[ஸ]த்ரதநு முநிரஸாவங்கிராஸ்தஸ்ய ஸோஜ-
ஸ்தஸ்யாஸுஸ்ருக்ரமந்தீ ஸுரருஷிதிபுதா ஸ்தஸ்ய ஸ்ரேயாஸ்ரநூஜ:।
தஸ்மாதுத்ரப்ரபாவாத்தி) புவநமஹிதாத்பப்ருஜந்தா முநீந்த்ரஸ்
ஸ்ரீமாந்பல்லவாநாம் ஜநிநிதிரதுலோ ஭ரத்வாஜநாமா॥ (2)

தஸ்தாத்தோணஸ்ஸராஸார்ங்கபரிமஹிதஸ: பாண்டவாநாம் ஸுகுரூணா-
மஸ்வத்தாமா ததோபூத்ருஷதவ: த்ருதாம் த்ரைர்யஸூநாபஹாரீ।

தஸ்மாத்ஸ: பல்லபாக்ஷ்யாம் ஸுலபஸுநுமதிர்போகிநாம் பார்த்திவாநாம்
பூராணாமாதிபூதோ மநுரிவ ஜயுநாமந்வயஸ்ய கர்தா॥ (3)

ப்ரஹ்மண்யாநாமுதீர்ணப்ரபலகலிமதத்வம்ஸிநாம் ஸத்க்ரியாணாம்
கீர்திராஜாதிபர்ஷத்ஸ்திதிபதுரதியாம் வ்ருத்தஸேவாபராணாம்।
காமாத்யுத்ஸர்பிணாரி ப்ரஸ்ருதிவிஜயிநாம் போதிவித்யாவராணாம்
தீராணாமூர்ஜிதாநாந்ந்ருயவிநயவதாம்வல்லவாநாந்ந்ருபாணாம்॥ (4)

தேஷாம் வம்ஸே ப்ரஸூதோ த்ரகரஸிகபுரோந்ந்ருநாத்ருத்ரதண்டா-
த்ருத்ரஹ்மண்யோ மஹாரோ ஸுஹ இவ பரமாதீச்வராதாத்தஜந்மா।
ஸக்தி[ர]ஸ்தஸ்ய புத்ரோ ஜிதரிபுவிபுலாயாஸிநிர்ஜ்ஜாதஸக்தே
ஸ்ரீமாந்ஸத்யவ்ரதாக்ய: க்ருதஸகலமலோ பூதபூர்ஜ்ஜல்லவாநாம்॥ (5)

கலாஸுகரயோஷிதாம் ரஹஸி ரஞ்ஜநே மந்மத-
ஸ்ரியாபஹ்ருஷ்யேஷிணாம் ஸகலபாலநே வாஸவ।
முநிர்த்விஜகுரர்த்விஜாம் ஹ்ருதயதஸ்காரே மாருத:
ஸ்வதர்மவிநயஸ்ருதாநுஜநதோபஜாதஸ்ரத:॥ (6)

ஸுஸ்யஸ்ரக்ரமுகைர்ஜ்வலாமகரா வாதீ சரீரம் விநா
ஸ்நாத்ரை: ஸுரஸ்ருஷிர்ய்ய ருஷே ரஜ்ஜோஷிஸ்ருக்ருதை:।
தின்னாச்சர்யமிதம் ஸ்ருத: கலியுகே தூரீக்ருதத்ரிஸுதை
ஸோ ஸ்ரோஷீதிதி தாம் சிரஸ்ருதபஸோவிஸ்தாபநம் க்ரீதரத:॥ (7)

யேநேமே நயவிக்ரமாத்ருகமலா ஸ்வயுத்தி ஜரோத்தர்ஜ்ஜிதா
பூர்ஜ்ஜிஷ்ணுபிரதிஸ்ருதாஸ்ருதிபுதா நத்ரோக்ருதோ: பார்த்திவா:।
தாதோபா புயவிக்ரமோ ரணஜயஸ்தாரிம் ஜநாந்ஸ்ஜதத்
பாபாத்ஜோ கலிகாலஜீவுயகரர்ஜ்ஜஸ்தாந்ந ஜீயாத்சிரம்॥ (8)

நயோர்ஜ்ஜிதபராக்ரமார்ஜ்ஜித யஸோவிதஸர்வ்வஜக
ந்ந்ரபேண மாதங்கண்டகம்ப்ரணதராஜாம்ஸுஜாதா।
யாஸ்ஸத்ருசமுத்பஸோ ஭வந்மேதமுத்தாபிதம்
மாரஸ்யஹரஹாஸரூபமதிமாநமர்த்யருத்ருதம்॥ (9)

க்ரோதாஜிஸிம்ஹபல்லபேச்வரே நாகேந்த்ரபோகீபூபாண।
தேவாஸுரேந்த்ர ப்ருந்தவந்திதே ஸ்தாநேஸ்திதோஸ்து ஸங்கரஸ்சிரம்॥ (10)

అవిస్మృత్వ తృణ(కుర్వీరదమునఘుపూరాజసింహోనరాజా
రాజామాజ్ఞ విధేయాకృత సకలదిగంతి రేవ క్షితిభాగా
శైలేశైలాపతీలా మహరతిసృహోరాజ సింహేశ్వరాఖ్యాం
విభ్రత్యర్థంతిహాగ్రేవరచయతుసదా సన్నిధానస్థితాంసః (11)

రాజసింహోరణజయః శ్రీధరస్త్రైలోక్యమాలా
ఏకవీరక్షిరంపాతుశివమూడామణిశ్చహేఁ (12)

பரமசிவனது சிரசினின்று வெளிப்படுகின்ற ஆகாய விஷத்தினுடைய வெந்நியினல் நீலநிறத்தைப் பெற்றவரும், மாலையாக வண்டுகள் சார்ந்திருக்கின்ற மாணிக்கத்தினல் செக்கச்சிறமுடையவளாயும், திரிலோகங்களிலு முள்ள கடாகங்களை நிரப்புகிறவளாயுமுள்ள கங்கை யுன்னைப்பரிசுத்தமாகச்செய்யக்கடவள். 1

பிரம்மாவினிடமாக வுதித்த அங்கிருமாவுனிய ஆங்கிரஸனும் அங்கிரஸனுக்குக்குமாரனும் இந்திரனுக்கு மந்திரியும் தேவர்களுக்குக் குருவுமாகிய பிரஹஸ்பதியும் இவருக்குப் புத்திரனை சமியும், இவருக்குப்புத்திரனுகிய உக்கிரமான பராக்கிரமத்தையுடையவரும், திரிலோகங்களிலும் பூஜிக்கப்பட்டவரும அதிபராக்கிரமத்தை யுடையவருமான * பாத்வாஜமுனி யுதித்தார். இம்முனிவர் பல்லவ வம்சோற்பவத்திற்குக் காரணபூதாரானர். 2

இவரிடத்திலிருந்து பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் குருவாகிய துரோணர் உதித்தார். இவரிடமிருந்து அரசர்களுடைய பராக்கிரமத்தையும் கர்வத்தையுமடக்கிய அசுவத்தாமனும், ஆதியில் பிரம்மாவினிடமாக வுதித்த மனு அரசவம்சத்திற்கு மூலபுருஷராய் எவ்வாறிருந்தாரோ அவ்வாறு ஷே அசுவத்தாமன் புத்திரனுகிய பல்லவனி உலகமுழுவுமையும் அரசாளக்கூடிய ஜெயசாலிகளாயும் பராக்கிரமசாலிகளாயுமுள்ள அரசர்களுக்கு மூலபுருஷனுனன். 3

* வன்னியரில் ஓர் பிரிவினராகிய பல்லவர்கள் கோத்திரம் பரத்வாஜகோத்திரமெனப்படும்.

பல்லவ அரசர்கள் பக்தியுடையவர்களாயும், கலியின்கொடுமையை யடக்கினவர்களாயும், சத்தியசீலராயும், காப்பிரகுணமுடையவர்களாயும், பெரியோர்களை அதிவிநயத்துடன் பூஜிக்கப்பட்டவர்களாயும், திரிவர்க்கசாதன (தர்மார்த்தகாம)சாலிகளாயும் காமக்குரோதமுதலிய சட்குணங்களை அடக்கினவர்களாயும், அஸ்திரப்பிரயோகங்களில் தேர்ச்சிவர்களாயும், இரணக்களத்தில் பிஞ்னிடையாதவர்களாயும், பனுதி தவருதவர்களாயும் இருந்தவர்கள். * 4

பல்லவர்களுக்குள் புராக்தனுகிய மஹாதேவனிடத்திலிருந்து எவ்வாறு குமாரக்கடவுள் உதித்தாரோ அப்போல ரணராகிகவென்னும் பட்டணத்தை ஜெயித்த பல்லவ வம்ச உக்கிரதண்ட மகாராஜாவினிடமிருந்து பல்லவராஜ கீர்த்திப்பிரதாப அத்தியந்த காமன் என்னும் அரசன் உதித்தான். இவ்வரசன் தனது வேலாயுத்தினல் பூமண்டலத்திலுள்ள அனேகசத்துருக்களை காசஞ்செய்தான். மேலும் அவனது இராஜாங்கமுறைமையினல் பெருகயனென்னும் பெயரைப் பெற்றான். சைவ சட்டத்தைத்தழுவி சன்மார்க்கநெறியில் ஒழுகியதால் பாப ரகிதனுனன். 5

அழகில்சிறந்த ஸ்திரீகள் மோகிக்கக்கூடிய மன்மதசொரூபியாயும், திரிவேதபாராயணராயுமுள்ள பிராமணர்களை வர

* இச்சாஸனத்தில் காலவதில்லுகிய தற்கிணங்க பல்லவராகிய வன்னியர் சார்பாகச்சொல்லப்பட்ட சில யெழுபதிலே 52-53-வது பெருந்தன்மையின் சிறப்பைப்பற்றிக் கூறப்படுஞ் செய்யுள் வருமாறு.

கலையான் மிக்கோருலகினிக்குங் கருத்தான் மிக்கோர் கனகமணி
மலையான் மிக்கோர் நிலவு குடை வளத்தான் மிக்கோருரைமாரு
நிலையான் மிக்கோரினி தொங்கு நெரியான் மிக்கோரிகல் வெல்லுஞ்
சிலையான் மிக்கோர் வன்னி மன்னர்க்கெவர்தான் மிக்கோர் வெளிதி
[னே.

ஆக்கமுன்னிடி லுயரறத்தையாக்குவர்
போக்கமுன்னிடிற் பொருக்தாரைப்போக்குவர்
காக்கமுன்னிடிற் கடல்சிலத்தைக் காப்பர்நல்
லூக்கமுன்னிடு குணத்தோர் பண்ணுடரே.

சவஹீ (இந்திரனே) ப்போல இரட்சிப்பவனும் மாதவனே (விஷ்ணுவை) ப்போல் முனிவர்களுடைய பகைவர் இருதயத்தை அழித்தவனும், குபேரனைப்போல கல்லோர்க்குத் திரண்ட ஐஸ்வரியத்தை யளித்தவராய் மிருந்தான். 6

கிரேதாயுகத்தில் தேவதரிசனஞ்செய்தவும், கண்ணுவ ரிஷியையொத்த முனிவரோடு சம்பாஷித்தவும், துஷ்யபுத்தனைப்போல் அரசர்கள் அசரீரிவாக்கை ஆகாசத்தில் கேட்டது ஆச்சரியமன்று, ஆனால் க்ஷத்ரியர்கள் நிறைந்த இக்கலியுகத்தில் ஸ்ரீபான் அசரீரிவாக்கைக்கேட்டதாகும் ஆச்சரியம்.

இராஜதானியினாலும் பராக்கிரமத்தினாலும் அடைந்த செல்வச்செருக்கில் ஆழ்ந்திருக்கும் ராஜர்களுடையகர்வத்தை யடக்கியவனும் கண்ணிமைபொழுதுக்குள் பகைவரது அறிவை யடக்கக்கூடியவனும் புருஷோத்தமனைப்போல் இக்கலியின் தொடையைப் பாபுக்கடலில் மூழ்கிக்கிடக்கும் மானிடரை மீட்பவனுமுள்ள ரணஜெயன் நீடூழிகாலம் ஜெயசாலியாகக் கடவது. 8

இந்த அரசன் தனது பராக்கிரமத்தினாலும் ராஜதந்திரத்தினாலும் எதிர்த்தவர்களைக்கொன்றும், அரசர்களையடக்கியும், உலகமுழுமையும் ஆண்டவருகையில் ஆச்சரியமும் விசாலமான (காஞ்சியில் கைலாசநாதர்கோயிலென வழங்கப்படும்) இச்சிவாலயத்தைக் கட்டினான். இச்சிவாலயமானது அரசனது கீர்த்தியையும் சிவனது நகை (சிரிப்பு) யையு மொத்திருந்தது. (அதாவது அவ்வாலயம் வெண்மைநிறம் பொருந்தியதென்க.) 9

சர்ப்பாபரணராயும் தேவகன்னிகளாலும் பூதகணங்களாலும் பூஜிக்கப்பட்ட சங்கரன் ராஜசிம்ம பல்லவேஸ்வரம் (தற்காலம் கைலாசநாதர் ஆலயம் எனவழங்கும்) இக்ஷேத்திரத்தில் நெடுங்காலம் திருக்கோயில்கொண்டிருப்பாராக. 10

அரசர்க்கரசனுயும் சத்துருக்களாகிய யானைக்கூட்டங்களுக்குச் சிங்கம்போன்றவனுமாகிய ராஜராஜபக்தியுள்ள ராஜசிம்ம பல்லவராஜனுல் கட்டப்பட்ட ராஜசிம்மேஸ்வர மென்

னும் ஆலயத்தின் சிகரமானது மேகத்தை யளாவியும் கைலாசத்தின் அழகை கவர்ந்ததுமாயுள்ளது. இத்தகைய ஆலயத்தில் ரிஷபக்கொடியையுடைய சிவபிரான் வீற்றிருப்பாராக. 11

இரணஜெயசாலியும் ஸ்ரீபரனுயும் சித்திரகார்முகனுயும் ஏகவீரனுயும் சிவசிரோபூஷணனுயுமுள்ள ராஜசிம்மனுகிய பல்லவராஜன் உலகத்தை நெடுங்காலம் பரிபாலிப்பாராக. 12

இச்சாஸனமானது பல்லவ அரசர்களின் வம்சாவளியையும் ராஜசிம்மவர்மன் ராஜசிம்மேஸ்வர ஆலயத்தைக் கட்டிமுடித்தபையும் இவ்வரசனது பிரபாவத்தையும் தெரிவிக்கின்றது. இதுபோலவே பரமேஸ்வர விண்ணகரமென்னும் வைகுண்டபெருமாள் ஆலயமும் ஓர் பல்லவ அரசனுல் கட்டப்பட்டது. இதனுல் காஞ்சிமாநகரம் பூர்வத்தில் மகாமாட்சிமை பெற்றிருந்ததாக விளங்குகின்றது. பல்லவ வம்சத்தவர்களின் பரம்பரையார் இந்நகரத்தின்கண்ணும் ஏனையவிடங்களிலுமிருப்பது பிரத்தியட்சம்.

ஷை தாயவர்களால் வெளியிடப்பட்ட முதல்வாலியம் 32-வது சாஸனம் 26-வதுபக்கம்.

அமராவதியில் அகப்பட்ட பல்லவ அரசர்களின் சிலா சாஸனம் இது சிம்மவர்ம பல்லவஅரசன் ஆளுகையிலேற்பட்டது. இக்நகரத்திற்குப் பூர்வபெயர் தானியகடகமென வழங்கியது. இவ்வரசன் பவுத்தசமயத்தை யனுட்டித்தவனென்று இதனுல் விளங்குகின்றது. இந்நகரம் அதிக பெருமைபொருந்தியிருந்ததென்பது இதிலுள்ள பவுத்த ஆலயத்தில் வெள்ளைக்கற்களில் செய்திருக்குஞ் சித்திரவேலைகளே போதியசாட்சியாம். சென்னையிலே சென்றல்மியூஜமெனப்படும் பலபொருட்காட்சி சாலையிலே உள்புறத்தும் வெளிபுறத்தும் வைத்திருக்கும் அமராவதியின் பவுத்த ஆலயத்தின் வெள்ளைக்கற்களில் அற்புதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளவைகளைப் பிரத்தியட்சமாய்க் காண்பதினுல் தெற்றென விளங்கும்.

శ్రీయంవరాంవ్వీరమాదిశంతు తే భవద్విష(1*) శ్రీభుగ్నపాదపాంసవః(1*)
సురాసురాధీశశిఖామణి ద్విషవ్యతంతరంయే విలసంతిసంతయో 1

బభూవధాతుఃప్రథమోదకల్మషో మువిధికారేద్వాజఇతిశ్రుతీశ్వరః।
తతోంగిరానామగిరాపరోదధిః తత్సన్నిధాపెతిమునిఃనిగద్యతే॥ 2॥
తతస్సుపుత్రాగమపాత్రకృశ్చ ద్రోణాభిధానోమహనీయవీర్యః।
అతఃకాయత్సోప్తతమంత్రాభిషఃంశ్యకృతఃస్తవయస్యహేతోః॥ 3॥
ప్రపాదేనతతశ్శంభో రక్ష్యత్థామేతివిశ్రుతః।
ప్రాదుఃబభూవతేజస్వీ ప్రాతఃభానురివోదయాత్॥ 4॥
కవస్యతస్యస్యకిలాప్సరోవృతా సురేంద్రకన్యామదనితిశ్రుతా।
కచాచిదారణ్యనివాసిమండలం దివృత్తరాత్రాపథంజగామహ॥ 5॥
వేష్టువాతాంబుజవిస్ఫులత్ప్రియా వియోగభీతంకలహంసమండలం।
ఆలోఃభూమావుపవిశ్యసస్మృహం విలోకయంతీమపతిస్థినాన్నపి॥ 6॥
ఉమేవకిర్వంప్రభూవనాత్మనో రీక్ష్యతంకామమివర్షిపేషిణం।
అథోభయంగాఢనిబద్ధభావకం సురాంగనాస్సంమయాంబభూవిరే॥ 7॥
ఆస్తోత్తరాలేసురరాజకన్యా వాధంభువస్సాగరమేఖలాయాం।
సపల్లవోపస్తరణోశయానం పితానుతళ్ళవఇత్యవాదీత్॥ 8॥
మహేంద్రవత్సేతితతఃప్రీతఃశూరస్తతోజాయతసింహవర్మా
తతోర్ధవర్మాతదనుగ్రవర్మా శ్రీసింహవిష్ణోరథనందివర్మా॥ 9॥
ఆసోధాజన్యశ్రీగోవతీ పభా విభాతకల్పాయితశార్వరాస్థితి।
ససింహవర్మాసమభూద్వసుంధ్యే భీయద్విపాస్ఫారదళత్కోజాసై॥ 10॥
ససాగరాంబరాముర్వీ గంగాప్లవాపారిణీం
బభారసుచిరంవీరో మీరుమందరసంనిభాం॥ 11॥

అథకదాచిదమరగిరిశిఖరాయమాణ కరిచరణఃఖరవిదారితకనకకలశ చరణురగఖురముఖసముత్థిత రజస్తాపనీయవితానితనభస్తలఃసకలమండలీసామంతసమరపిరోపరచిత పాణిఘట్టార్వ్యభరోసురద్విపదిగ్విజయార్జితే యశస్థాపనాయసుమేరుశిఖరసుపాలిష్ఠఃకిః

6 காற்றினால் அசைக்கப்பட்ட தடாகத்திலுள்ள தாமரையால் ஆண் அன்னப்பட்சிகளின் அருமைநாயகிகள் மறைவற்றபோது அவரோப் பிரிந்தோமென்று கலங்கியபகுதி களைக்காமத்தினால் தனியென்னும் மாது கண்ணுற்றிருக்குங் காலையில் அசோகவனத்தில் வீற்றிருந்த அசுவத்தாமனென்னும் முனிவர் அவள் அருகில் சென்றார்.

7 பார்வதியானவள் பரமேஸ்வரைக்கண்ணுற்றபோது எவ்வாறு அவள் காமம்அதிகரித்ததோ அவ்வாறு தபோதனர் உடையை அணிந்த மன்மதனுக்குச்சமானமான அவ்விருஷி மதனனென்னும்மாதை பார்த்தபோது அவள்தன் அறிவு மூர்ச்சையானாள். பிறகு தேவகன்னிகைகள் ஒருவர்க்கொருவர் அதிக அன்புடையவர்களாகிய இவ்விருவரையும் ஒருமிக்கச்செய்தார்கள்.

(இவ்விடத்தில் அஸ்வத்தாமனே ருத்திரனுக்கும் அல்லது அக்கினிக்கும் மதனியை சுவஹா அல்லது உமையவட்கும் உவமிக்கின்றார்.)

8 சிறிது காலத்திற்குப்பின்னர் மதனிசமுத்திரத்தால் சூழப்பட்ட பூமண்டலத்தைப் பரிபாலிக்குந்தண்மை வகித்த வனாகிய ஓர்புத்திரனைப்பெற்றாள். பல்லவம்என்னும் தளிர்களில் அச்சிசுவைக்கிடத்தினமையால் பல்லவன் என்னும் பெயரையிட்டு பிதாவானவர்(அஸ்வத்தாமர்)தன்புத்திரனையழைத்தார்.

9 இவனிடமிருந்து பூமிக்கு அதிபதியாகிய மஹேந்திரவர்மன் உதித்தான். இவனிடமிருந்து பராக்கிரமசாலியாகிய சிம்மவர்மன் உதித்தான். இவனிடமிருந்து அர்க்கவர்மனும், இவனுக்குப்பின் உக்கிரவர்மனும், இவனுக்குப்பின் ஸ்ரீ சிம்மவிஷ்ணுவர்மனும், இவனுக்குப்பின் கத்திவர்மனும், இவனிடமிருந்து ஸ்ரீ சிம்மவர்மனும் உதித்தார்கள்.

10 இவ்விசிம்மவர்மனுடைய இருண்டஅரசனையானது அனேக இராஜதுரோகர்களின் முடிகளில்அணிந்திருந்த ஆபரணங்களால் பிரகாசிக்கப்பட்டது. இவனுடைய பிரஜைகள் பதினெட்டுலட்சங் குதிரைகளுக்கும் யானைகளுக்கும் அதிபதியென்று அழைத்தார்கள்.

சமுத்திரத்தை யாடையாகவும் கங்கையை முத்தாரமாகவும் மேருகிரியையும் மந்தரகிரியையும் கர்தனங்களாகவுடைய பூமாதேவியை இமயகாவிரன் மெய்ங்காலஞ் பரிபாலனஞ் செய்தான். ஒருகாலத்தில் இவனுக்குப்பின்னையும் முன்னையும் இருமருங்கும் மண்டலிக அரசர்களும் கப்பங்கட்டும்பாக்கிய அரசர்களும் சூழப்பெற்று தான எல்லாத்திக்குகளையும் ஜெயித்த கீர்த்திபைலோகாட்டும்பொருட்டு மகமேருகிரிகைத்திற்கேகினன். மேருகிரியையொத்த அவனுடையயானைகளதகங்கள் அங்குள்ளபொன்னைப் பிளக்கச்செய்தன. அப்பொன்துண்டுகளின் மீது அவனுடைய குதிரைகள் கடந்ததினால் அவைகளின் குளம்புகளினின்று சிந்தும்பும் பொற்றூளி ஆகாயத்தைக் கூடாரம்போல் கவிழ்த்தது. உலகமுழுமையுஞ் சஞ்சரித்ததினால் தனக்குண்டாகிய இளைப்பைத்தவிர்க்கும் பொருட்டு பொற்சாரலில் வாரும ஸ்ரீ சந்தனவிருட்சத்தின் கிழலில் கொஞ்சகாலமினைப்பாறினன். பிறகு பகீரதி கோதாவரி கிருஷ்ணை முதலிய நதிகளைத்தாண்டிச் சென்றபிறகு பவுத்த குருவுக்குச் சிரேட்டமான ஸ்ரீ தான்னியகடம் என்னும் பட்டணத்தை ஆச்சரியமாகக்கருதி வணக்கத்தோடு அதன் அருகில்சென்று அங்குள்ள தெய்வங்களைப்போற்றினன். அத்தேவதைகள் அந்தநகரத்தைப்பாது காத்துக் கொண்டிருந்தன. அவ்வரசன் அத்தர்மமான நகரமெனறுமிடத்தில் ஸ்மிருதிசமபக்தமான சம்பாஷணைகளைக்கேட்டுக்கொண்டிருந்தான். அதைக்கேட்டபின்பு அவைகளுக்குள் பெரியதேவதையைநமஸ்கரித்து அடியில்லருமாறுபோதத்தைத்தர்ப்பங்கினன். இங்குவிற்றிருக்கும் தேவனே பொன் வெள்ளி முதலிய ஆபரணங்களால் அலங்கரித்து ஓர்உருவமானும் சமர்ப்பிக்கிறேன் என்று சிம்மவர்மன் சொன்னவுடனேசிம்மவர்மனே நீ அவ்விதம் செய்யக்கடவாய் பெருத்தன்மையுடைய பவுத்தருக்கு இச்சேத்திரமேபரிசுத்தமானது சுவாமி உத்தரவுசெய்தபிகாரம் ஜெயஸ்தம்பம் காட்டியபின்பு தான்னியகடம என்னும் பட்டணத்திலுள்ள தேவதைகளைப் போற்றிச்சென்றான்.

மேற்தாட்டிய சாஸனங்கள் அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் பல்லவர் ஆளுகையிலேற்பட்டன. இச்சாஸனங்களில

கூறியிருத்தல்காண்க. மகாபாரதம் ஆதிபருவம் அநுசாஸன பருவம் இவைகளில் பல்லவர் உற்பத்தியைப்பற்றிக் கூறியிருத்தலை 268-முதல் 270 ம் பக்கம்வரையில் காண்க.

மேடவாலீயம் 29-வது பக்கம் 33-நெம்பர் சாஸனம். இது திருசிராப்பள்ளி மலையின்மீது கட்டப்பட்ட ஆலயத்திலுள்ள ஸ்தம்பத்தின் இடதுபக்கத்திலுள்ளது.

காவேரீம்யஸனாதிராம்ய புலினாமாராமமாலாதரா
தேவோத்யஸனபீதிபீய: ப்ரியகணாமப்யேவரஜ்ஜோதி:
ஸாரங்காரிவரஸ்யஸாபிரபிதம் ஹீஜ்யேவமஜ்யேதிகா
நித்யம்லம்பிபல்லவத்வதயதா மேதாம்ப்ரவாணாநதீம:
கணதரநாமவராஜ்யஸ்ய விம்ரோஸவிம்ரிஷ்டாநம்
ப்ரதிதாம்சிராயலோகே பலக்ருஷ்ணேபராவ்ருத்ம:
வீரவிவயஸ்ருஷ்டலா
மாலிவாயம் மஹாமல்லிராஜ்ய
சாரஸ்ருஷ்டமேதத்தோதி
ப்ரதீயமவ்ராங்கராஜ்யோதி:॥
ஸுகாரிணஜனிதா ப்ரத்யஸந்தஸ்ய ஜாதிர்மாமீ:।
தீமதயுவாசாஸ்யஸ்ய வாஸைவராஜ்யம்॥
நிவ்ருத்யவ்யவலா மஹாலய கணதரேத்ர:॥

சோழநாட்டை ஆண்ட பல்லவ அரசனுகிய குணபரன் என்பவனுல் மலையின் உச்சியில் சிவாலயம் ஸ்தாபித்து அதில் சிவலிங்கபிரதிஷ்டை செய்ததாக இச்சாசனம் தெரிவிக்கின்றது. இச்சாஸனத்தால் பல்லவ அரசாங்கம் ஓர்கால் காவேரி நதிக்கரைவரையில் விருந்ததென்று விளங்குகின்றது. இக்குண பரனை சாதுர்மல்லவ புருஷோத்தமன் சக்தியசம்பந்தன் என்றும் கூறுவார்கள். வலதுபக்கத்தின் ஸ்தம்பத்திலுள்ள சாஸனத்தில் இவ்வாசனம் உருவமும் செய்யப்பட்டிருக்கிறது.

பல சாஸனங்களின் கருத்தைத்தழுவி செந்தமிழென்னும் புத்தகத்தில் வெளிவந்த பல்லவ அரசர்களின் சரித்திரம் வருமாறு.

"பல்லவ அரசர்களின் மதம் சைவமும் வைணவமுங்கலப்புண்டிருந்தது. இக்காலத்தே அருக புத்தசமயங்களும் கடமாடின. சினதேயத்து யாத்திரிகனை ஹியூத்ஸாங் என்பவர் கச்சிக்குவந்தகாலத்தில் (அஃதாவது கி. பி. 7ம் சதாப்தம்) அச்சுகர்க்கண் நூறுபோதியார் விகாரங்களும், பிண்டியார் பள்ளிபலவும், சைவ வைஷ்ணவ ஆலயங்களும் இருந்தனவாகச் சொல்லுகின்றார்.

பல்லவம் என்ற தொண்டைமண்டலம் நாறு கோட்டங்களாகவும் எண்ணென்பது காடுகளாகவும் வகுக்கப்பட்டிருந்ததென்றும், ஒருகாலத்தில் அதனெல்லை இருபௌவரும் திருஷ்ணுநதியும் பொன்னியாறுமாக விருந்ததென்றும், பின்னர் எட்டு ஒன்பதாஞ் சதாப்தங்களில் பன்னுட்டாசர்களும் ஒருங்குசேண்டி படையெடுத்து வந்தமையாற் சிதறுண்டபோயிற்றென்றுந் தெரியவருகின்றது. இக்காட்டின் சிறப்பையும் ஊர்களின் வளனையும் எடுத்துரைக்க எம்மால்வதின்று. சோழனுக்குப் புகார்போலவும், பாண்டியனுக்கு கொல்லம் போலவும், (இக்காலத்தார் இவற்றைக்கடலுண்டினென்பர்) பல்லவனுக்கு மாமல்லபுரம் (மகாபலிபுரம்) கூலவாணிகமிறைத்த நகராயிருந்தது. காளடையில், தென்பாண்டிநாட்டை முற்றுண்டதுபோல், இக்கரைக்கடல்கொள்ள மேற்புறத்து கின்ற சிலகட்டிடங்கள்மாத்திரம் மிக்கன.

இனிப் பல்லவசக்கரவர்த்திகளின் அருமைபெருமைமுதலியவற்றைச் சிறிதாராய்வோம். வடபால்களுங்கிய வேந்தர்களும் தென்பால் சோழபாண்டியர்களும் இவர்கட்கு எக்காலத்தும் மாற்றார்களாயிருந்தார்கள். ஆனுல் நமுத்தரசர்களன்பட்டே தோழமைகொண்டிருந்தனர். பல்லவவம்சத்துக்குத்தலைவன் உக்கிரதண்டன் என்றசிலாசாதித்தன்: இவன் "சுமார்" 1400 வருடங்களுக்குமுன்பு இருந்தவன்: வல்லபராஜனை சளுக்கிய வேந்தனென்ற ரணரசிகனுடன் அகேகம் போர்புரிந்தவன்: இவன்றன்மகன் சிங்கவிஷ்ணுவென்ற மாஜசிங்கன்: காஞ்சிநகரில் இப்போது வைகுண்டபெருமாள்கோயில் எனவழங்கும் ராஜசிம்மேச்சரத்தைக்கட்டுவித்தான். இவனுடையமகன்

குணபரன் என்ற மகேந்திரவன்மன்: இவன்காலத்தில் (அஃதாவது கி. பி. 640 ம். ஆண்டில்) பல்லவநாடு தெற்கேதிரிசிரபுரமவரையிற் பரவியிருந்தது. சிராப்பள்ளியில் உச்சிப்பிள்ளையார்கோயில் கட்டியவன் இவனேயென்பர்: இவன் முதலில் விஷ்ணுசமயத்தவனாயிருந்து பின்னர்ச் சைவனானவன்: தென்னிந்தியாவில் கான்குமலைக் கோட்டைகளைக் கட்டினவன் தான். இவன்றன்மகன் நரசிம்மவன்மன்: சளுக்கிய வேந்தனாகிய புலிகேசியை (கி. பி. 610-644) வாதாபியென்ற பாடியில் வென்று, தான் முன்னிழந்த நாடுகளைமீட்டினன்: அது பற்றமுழுவருள் ஒருவரான சிறுத்தொண்டநாயனார் இவ்வாதாபிப்போர்க்களத்திற்பல்லவன் பக்கலின்று போர்புரிந்து வென்றதாகச் சொல்வதுண்டு. இந்த நரசிம்மவன்மன் பரமேச்சுரவன்மன், வல்லவராஜனாகிய விக்கிரமாதித்தனுடன் விளைசெய்து வெற்றியடைந்தவன். இவன்மகன் நரசிம்மவன்மன்:தொடியனாகிய சைவன் விஷ்ணுவெனில் சொல்லுப்பவன்: ஆனால் பிராமணர்களைப் பொதுவாகக் காப்பாற்றிப் பேணிவந்தான்: வைஷ்ணவ ஆழ்வார்களுள் ஒருவரான திருமழிசையார் இருந்தகாலம் இதுவேயாகலாம். இவ்வாழ்வாரைக் கச்சியிலிருக்கவொண்ணாது பல்லவராஜன் வெருட்ட, அவரும் தொண்டைமண்டல நீங்கித் திருக்குடந்தைவந்து சேர்வாராயினர். இவன்றன் மகன் பரமேச்சுரவன்மன்: வைணவ சமயத்தவன்: கச்சிமாகரில் வைகுண்டப்பெருமாள் கோயிலெனவழங்கும் பரமேச்சுரவிண்ணகரத்தைக் கட்டுவித்தான். இவன் அளித்தகன்கொடை எண்ணிலடங்காதனவாகும். இவனுடையமகன் கந்திவன்மன்: பராந்திரமசாலியாகாததால் வல்லபனை விக்கிரமதேவனிடமிருந்தும் முறியடித்துக்கச்சியைக் கைக்கொண்டு, தன்பொன்னும் முத்தும்மணியும் இராஜசிம்மேச்சுரமுதலாய தேவாலயங்களுக்கும் ஓத்தில் வல்லானசதுர்வேதியர்களுக்கும் வழங்கினன்.

விக்கிரமாதித்தன் கச்சிமாகரை விட்டகல, தில்லைச்சிற்றம்பலத்தைப் பொன்னம்பலமாக்கிய ஹிரண்ய வர்மப்பல்லவராயன் வழியிற் றோன்றியவனும், மிக்கபுஜபலபராக்கிரமசாலியும், வீரவைஷ்ணவனுமான கந்திவர்மப்பல்லவமல்லன் சக்கரவர்த்தியானன்: இவன் முடிசூடியகாலம் கி. பி. 710க்குப்பின்னாகலாம். இவன் சோழபாண்டியநாடுகள்; கிடாக்கோணலை பிருதிவிவியாக்கிரகேயும், இன்னும் அநேக அரசர்களையும் தெள்ளாறு, பண்ணைக்குடி, கருவூர்முதலாய போர்க்களங்களிற் றோல்வியடையச்செய்தனன். சந்திக்கலம்பகத்திலும், பாரதவெண்பாவிலும் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளவனும், தெள்ளாறு என்ற படைவிட்டிற் பகைவெறிந்தவனும், நூற்றெட்டுத்திருப்பதிக்குள் ஒன்றான கச்சிபுரவிண்ணகரத்தைக் கட்டுவித்தவனும், இவனுக்குருத்தல்வேண்டும். இவனுடைய முதன்மைபெற்ற சேனாபதி, விடேலவிடுகுடையன்ன உதயசந்திரன் என்பான். பல்லவசக்கரவர்த்திகளிடமிருந்து பொருளைகொண்டுதென்னாட்டரசர் பலர் ஒன்றுகூடித் தொண்டைமண்டலத்திற் படையெடுத்து அறுபுரசுகரை முற்றுகைசெய்ய, அதனைக்கேள்வியுற்ற உதயசந்திரன் விரைந்துசென்று அவர்களையெல்லாம் ஒருங்குசிதறுவித்தான். தனிராமடையாரான திருமங்கையாழ்வார் இக்காலவின்மன் சரித்திரத்தைப் பெரியதிருமொழிப் பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்துட் பரக்கவினக்கியிருக்கின்றார். மேலும் இதுவரையில் வெளிப்பட்டுள்ள கசகுடி, உதயேந்திரம் செப்பேடுகளாலும் இவற்றைத் தெளிவாய்க்கண்டுகொள்க."

இதுகாறும்சோழசோழபாண்டிய பல்லவசளுக்கிய அரசவம்சத்தினர்கள் பூர்வம்தொட்டு பெண்கொடுத்தல் கொள்ளல் முதலியனவகளில் கலந்திருந்தசென்றும், நூற்களின் ஆதாரங்களைக்கொண்டும் அவ்வவ்வரசர்களின் [illegible]சாஸனங்களைக்கொண்டும் இவ்வரச பரம்பரையாக்களுள் வல்லபியென்றும் பல்லவனென்றும் சப்புதலத்தாரென்றும் அரசபள்ளி படையாட்சிகளென்றும் வழங்கிவருகின்றனர்களை இச்சிலக்கப்பட்டது. இதற்கிணங்க தென்னிந்தியாவிலுள்ள தேவாலயங்களிலுள்ள பூர்வசாஸனங்களைக்கொண்டும் அவ்வவ்வரசர் ஆணையிலேற்பட்ட அட்சரபேதங்களைக்கொண்டும் டாக்டர் A. C. பர்னல்துரையவர்கள் வெளிப்படுத்திய தென்னிந்

தியா பாலிபாக்கிபி (South Indian Poleography by Dr. A C. Burnell) என்னும் புத்தகத்தில் 36-வது பக்கத்தில் கூறுவது வருமாறு.

"The name of the family of kings of which inscriptions occur at Seven Pagodas (Mamallaipuram the old port of Congeveram) was Pallava and they appear to have been formidable enough to have been attacked by the Western Chalukyas about middle of the seventh century."

"Of these Pallavas but little is known. The general use of the title Verman is common to them and the Vengi kings and this and some other facts make it most probable that they belong to one family. They had numerous contests and alliances by marriage with the cera, chola and chalukya families but in the XIth century they were feudatories of the cholas and on this account were, apparently, repeatedly attacked by the Western chelukyas."

காஞ்சிபுரத்திற்குக் கரைதுரைபட்டணமா யிருக்கது ஏழுகோயிலென்னும் மகாமல்லிபுரம். இதிலுள்ள சாஸனங்களில் அரசர்கள்பெயர் பல்லவகுடி அல்லது கோத்திரமென்று சொல்லப்படும். ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் மேற்குசளுக்கியர்களால் எதிர்க்கப்பட்டார்கள்.

இந்தப் பல்லவர்களைப்பற்றி மிகவும் சொற்பவிஷயமே தெரிந்திருக்கின்றது. வர்மன் என்னப்பட்டப் பெயரானது இவர்களுக்கும் வெங்கிராஜாக்களுக்கும் சாதாரணமாய் வழங்கப்பட்டிருக்கின்றது; இவற்றாலும் இன்னும் சிலவிஷயங்களாலும் வெகுகாலம் ஒருவம்சத்தவரா யிருக்கலாமென்பதற்கு சேரசோழ சளுக்கியவீம்சத்தாரோடு கலியாணசம்பந்தத்தால் சினேகமும் வேறுவிஷயத்தால் சச்சரவும் உற்றிருந்தார்கள். ஆனல் 11-வது நூற்றாண்டில் இவர்கள் சோழருக்குக் கீழ்ப்பட்டிருந்தனல் அடிக்கடி மேற்கிலை சளுக்கியர்களால் எதிர்க்கப்பட்டார்கள்.

மேலும் மெஸ்டர் கெட்டில் என்பவர் எழுதிய காகவர்மா என்னும் புத்தகம் 21-வது பக்கத்தில் கூறுவதாவது,—

"Mr. Kittle connects it with Pallava and Telugu Palli-The Pallis (a cognate Tamil caste) are now very degraded but they may not have been so always."

"பல்லவர் என்கிற சொல்லைப்பற்றி மெஸ்டர் கெட்டில் செய்த காகவர்மா என்னும் புத்தகத்தில் 21-வது பக்கத்தில் "தெலுங்கர் பள்ளி என்று சொல்லுகிற வார்த்தையோடு பல்லவரென்பதைப் பொருத்துகின்றார்; பள்ளியென்னப்பட்ட சாதாரணவழக்கம்பெயர் இப்போது தாழ்வாகக்கருதப்பட்டிருப்பினும் எப்போதும் அப்பெயர்க்குரியவர்கள் அப்படி இருந்திருக்கமாட்டார்களென்று எண்ண இடமுண்டு."

காஞ்சிமாகரத்தை யிராஜதானியாகவும் மகாபலிபுரத்தைக் கரைதுறை பட்டணமாகவும் மகா பிரபலமாகவும் ஆளுகைசெய்த பல்லவக்ஷத்திரியர்கள் சோழருக்கியருடன்கலந்து பல்லவச் சோழர் சோழப்பல்லவரென்று அழைக்கப்பட்டு பிற்காசர்களாகவும் தற்காலம் பல்லவர் (இப்போது பள்ளியர்என வழங்கப்படுவோர்) தாழ்வாகக் கருதப்படினும் அப்பெயர்க்குரியார் அக்கிலேயி லிருந்திருக்கமாட்டார்களென்றும் பேற்காட்டியபிரமாணங்கள் விளக்குகின்றன. அன்றியும் ஆபர்ட்துரையவர்க ளெழுதிய இந்தியாவின் பூர்வகுடிகளென்னும் புத்தகம் 117-118-வது பக்கங்களில் கூறுவது வருமாறு.

"The Pallis form at this moment on the whole a highly respectable class, living partly as citizens in towns. They belong to the caste of the Vanniyar (வன்னியர்). The word Vanniyan is generally derived from the Sanskrit Vahni, fire, Agni the God of fire, is connected with the regal office, as kings hold in their hands the firewheel or Agneyachakra (அக்னிசக்கரம்)."

பள்ளிகள் (பல்லவர்) தற்காலத்தில் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்தில் மேலானமரியாதையுள்ள கூட்டத்தாராகவே யிருக்கின்றார்கள்; இவர்கள்வன்னியபரம்பரையைச்சேர்த்தவர்கள். வன்னியன் என்னப்பட்ட சொல்லானது வன்னியென்னும் சமஸ்கிர தாதுவடியாகப்பிறந்த உயர்திணை. அக்கியாகிய அழற்கடவுள் அரசசம்பந்தமுடையவரா யிருக்கின்றார், ஏனெனில்

அரசர்கள் தங்கள்கையில் அக்கி (ஆக்கினை) சக்கிரத்தை வைத்திருக்கின்றமையால். பல்லவர் அக்கி சம்பந்தமாய் உதித்தவரென்று மகாபாரதமூலமாகவும் சாஸனங்கள்மூலமாகவும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

C. ஹல்ஸ்துரை யவர்களால் வெளிபிடப்பட்ட முதல் வாலியம் 41-நெம்பர் சாஸனம் 67-வது பக்கம். இச்சாஸனம் மஹாபலிபுரம் கடற்கரைபோரத்திலுள்ள ஆலயத்தின் சுவரத்திலிருக்கின்றது. இவ்வாலயம் க்ஷத்திரியசிம்ம பல்லவனால் கட்டப்பட்டது. இராஜகேசரிவர்மன் சிம்மாஸனமேறிய 26-வது ஆண்டு லேக்கப்பட்டது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச்செல்வியும் தனக்கே உரிமைபூண்டமை மனக்கொளக்காதலுர்ச்சாலை கல மறத்தருளி வெங்கை ஞாடுங்கங்கைபாடியுங் குடமலைகாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசைபுகழ்ந்த ஈழமண்டலமும் இரட்டைபாடியும் ஏழரை இலக்கமுர் திண்டிறல் வென்றித்தண்டாற் கொண்டதன் னெழில்வளருழியுள்ள வெல்லாயாண்டுந்தொழுத விளங்குமயாண்டே செழிபரைதேசுகொள் ஸ்ரீ கோ ராஜ ராஜ ராஜகேசரிவர்மரான ஸ்ரீராஜ ராஜீ தேவற்கு யாண்டு இருபத்தாறாவது ஆயூர் கோட்டத்து ஆமூர்காட்டு நகரமா மல்லபுரத்து நகரத்தாரும் பேரிளமையோரும் இந்நகரத்து ஸ்ரீசயனத்து க்ஷத்திரியசிம்மபல்லவ ஈஸ்வரத்து தேவரும் ராஜசிம்ம பல்லவ ஈஸ்வரத்து தேவருந்தள்ளிகொண்டருளிய தேவரும் உடைபட்டாரத்து பொனனில் இத்தளிகள் பதி பன்சாரிய ப.....ட்டை சு...தேவ கணமிகள் ப..... காங்கள கொண்டுகடவ பொன் பத்தொன்பதின் கழஞ்சி இத் தேவர்களுக்கு" *

இச்சாஸனத்தில் க்ஷத்திரிய சிம்ப பல்லவேஸ்வரமென்று வரையப்பட்டிருக்கின்றது. இவ்வாலயமானது கி-பி 6-ம் நூற்றாண்டின் மத்தியில் அரசுபுரிந்த க்ஷத்திரிய சிம்ம பல்லவ அரசனால் கட்டப்பட்டமையால் இவ்வாறு இவ்வரசன் பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது. இதிலுள்ள கல்வெட்டு இராஜகேசரிவர்மனான முதலாவது குலோத்துங்கசோழன் சிம்மாசனமேறிய 26-வது ஆண்டில் ஏற்பட்டது, இவனது ஆளுகை கி-பி 1064 முதல் 1113-ம்ஆண்டுவரையிலிருந்தென்று இவ்வரசன் ஆளுகையில் பலக்ஷேத்திரங்களில் வரைந்துள்ள சாஸனங்கள் விளக்குகின்றன. இவற்றிலும் ஏனையசாஸனங்களிலும் சேர சோழ பாண்டிய பல்லவரசருக்கிய வம்சபாம்பரையார் அரசரென்றும் வன்னியரென்றும் க்ஷத்திரியரென்றும் வரையப்பட்டிருக்கின்றனர். மேலேகாட்டிய சாஸனத்தில் க்ஷத்திரிய சிம்ம பல்லவ ஈஸ்வரத்து என்றிருத்தலால் க்ஷத்திரியர் என்னும் வடமொழிப்பிரயோகம் பண்டைகாலத்தில் தென்மொழியுடன்சேர்க்கப்பட்டு வழங்கியிருத்தலைப்போல் தற்காலத்திலும் வழங்கப்பட்டுவருகின்றது. இங்ஙனமிருக்க தற்காலத்தின் நூதனவிவேகிகளில்சிலர் க்ஷத்திரியர் என்னும் மொழியை சம்புகுலத்தவராகிய பல்லவர் என்று சொல்லப்படும் வன்னியர் புதுமையாகக் கற்பித்துக்கொண்டனரென்று புகல்கின்றனர். இங்ஙனம்புகல்பவர்கள் வன்னியரின் பூர்வகீலைமையையும் அவர்களது ஆதிக்கங்களையும் ஒருசிறிதும உணராதவராவரென்றும், சாசனமுதலிய ஆராய்ச்சியில்லாதவரென்றும் மதித்தல் வேண்டும். வன்னியர்களில் பெரும்பாலார் பூர்வகீலையிலிருந்து குறைவுபட்டு தற்காலம் ஏழ்மையிலிருத்தலால் அங்ஙனஞ் சொல்லுகின்றரெனின், வறுமை காலபேதத்தால் எவ்வகுப்பினரிடத்திலும் சம்பவிப்பதுசகசம். இதைக்கருதி ஒரு வன் அவர்களைக் குறைவாகக்கூறுதல் பேதமையாம். இஃது இவ்வாறிருக்க இக்காட்டில்வழங்கும் பூர்வநூல்களின் உண்மையையறியாத ஆங்கிலேயபண்டிதர்களில் சிலர் ஆராய்ச்சியின்மையும் பொறுமையுமுள்ள பிறர் கூறும் வாய்மொழியே பெரிய பிரமாணமாகக்கொண்டு தங்களால் ஆங்கிலேயபாஷையில் எழுதப்பட்ட நூல்களில் இந்தியாவிலுள்ள சமயங்களையும் ஜாதிகளையும் குறித்து நூற்பிரயோகங்களுக்குமாறுகத் தங்கள் இஷ்டம்போலெழுதியிருக்கின்றனர். இவ்விதமெழுதிய ஆங்கிலேயர்கூற்றையே பெரிய பிரமாணமாக மதித்துப்பேசுபவர்

* இக்கல்வெட்டின் எழுத்துகள் கடல்தண்ணீரால் அழித்து மறைந்து போயிற்று.

சிலர். ஜாதியேற்பாடானது சேரசோழ பாண்டியராகேளில் அனேகவாயிரவருஷங்களுக்குமுன்னரே மூதன்மையாய் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனப் பிரிவற்றிருக்கின்றன வென்று தென்மொழி வடமொழி நிரந்தங்களிலிருந்து நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

பிஷப் கால்வெள்ட் துரையவர்கள் தாமெழுதிய திராவிடன் நிராமர் என்னும் புத்தகத்தில் 115-வது பக்கத்தில் வடபாலிருந்து தென்பால் ஏகிய ஆரியகுருமார்கள் தமிழ்நாட்டரசர்களாகிய சேரசோழ பாண்டிய அரையர்கட்கு முறையே அக்நி சூரிய சந்திர குலத்தவரெனக் கற்பித்தனரென்கிறார். இவர் கூற்று எவ்வளவு யோயமுடைத்தெனத் தர்க்கிப்பாம். இவர் சொல்வதுபோல் தென்னாட்டில் சாதிபேதமே கிடையாதா? அரசர்களுக்குள் முக்குலப்பிரிவினைகளிலையா? இங்ஙனமாயின் இரண்டாம் ஊழியின் துஷ்மியந்தன் பௌத்திரனாகிய ஆகரீடனுக்கு பாண்டியன் கேதின் சோழன் கலிங்கன் என நான்குபுத்திரர்கள் பிறந்தார்களென்றும் அவர்கள்பெயர்களாலேயே பாண்டியநாடு சேரநாடு சோழநாடு கலிங்கநாடென அவர்கள்வழங்கி அந்நாடுகளைக் கட்டியாண்டனரென்றும் அரிவம்சம 32-வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இஃதறிந்தால் 176-வதுபக்கத்தில் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும் 12000-ஆண்டுகளுக்குமுன் வரையப்பட்ட தொல்காப்பியம் பொருளதிகாரம்கற்பியல் 145-வது சூத்திரத்திலே,

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்ன
ரையர்யார்த்தனர் தாணமென்ப.

(இ-ள்) ஆதியூழி கழிந்த முறையே அக்காலத்து அந்தம் தொடங்கி இரண்டாம் ஊழிமுதலாகப் பொய்யும் வழுவும் சிறந்து தோன்றிய பிற்காலத்தே இருடிகள் மேலோர் காணமும் கீழோர்காணமும் வேறுபடக் காணங்கள்கட்டினரென்று கூறுவர். மேனூலையவர்கள் இச்சூத்திரத்தைப் பிரமாணமாகக்கொண்டு எழுதினமையின் 144-வது சூத்திரத்திலே,

மேலோர் மூவர்க்கும் புனர்த்தகாணங்
கீழோர்க்கதிய காலமுமுண்டே."

இது முதலூழியில் வேளாளர்க்குரியதோர் இலக்கண கூறுகின்றது.

"(இ-ள்) வேதநூல்தான் அந்தணர் அரசர் வணிகரென்னும் மூவர்க்கு முரியவாகக் கூறியகாரணம் அந்தணர் முதலியோர்க்கும் மக்ட்கொடைக்குரிய வேளாண்மாந்தர்க்கும் தந்திரமந்திர வகையான் உரித்தாகிய காலமும் உள, எ-று."

"எனவே முற்காலத்து நான்குவருணத்தார்க்கும் காணம் (தொழில்) ஒன்றாய் நிகழ்ந்ததென்பதாம். அது இரண்டாம் ஊழிதொடங்கி வேளாளர்க்குத் தவிர்ந்தது எனினும் ஊழிதொடங்கி வேளாளர்க்குத் தவிர்ந்தது எனினும் முதனூலாசிரியர் கூறியமுறையே காரணம் ஒன்றுகச்செய்யுள் செய்தாரென்பதனாலுங் கூறியவாறுயிற்று. உதாரணம் இக்காலத்தின்று" என்று கூறப்பட்டிருக்கின்றது. இவ்விருசூத்திரங்களால் அறியக்கூடியது இரண்டாம் யுகத்தின் முதலில் வடபாகத்தினின்றுவந்த ஆரிய இருடிகள் முதல் மூன்று வருணங்களுக்குத் தொழிலேயேற்படுத்தி வேளாளர்க்கு ஏற்பாடுசெய்யவில்லை யென்றும் முதல் யுகத்தில் நான்குவருணத்தார்க்கும் தொழில் ஒன்றாயிருந்தனென்றும் விளங்குகின்றது. தொழில் ஒன்றாயிருப்பினும் ஜாதிபிரிவுகளிருந்தனவென்று ஏற்படுகின்றது. ஆகையால் இந்தியாவில் சாதிபேதமும் சமயபேதமும் எப்பக்கத்திலும் பல்லாயிரம் வருடங்களாக வுள்ளனவென அங்கை கெலிக்கனிபோல் சங்கையறவிளக்கப்பட்டிருக்கின்றன. இதனை மேனூலையவர்களும் அவரது சார்பாரும் உணர்வாராக. மேலும் மேனூலையவர்கள் தமது நூலில் தமிழ்நாட்டரசருக்கு முக்குலகற்பிதம் ஆரியகுருமார் செய்தது கிறுஸ்துபிறப்பதற்கு ஆறும் நூற்றாண்டிலென்கிறார். இங்ஙனமாயின் இதுவும் இற்றைக்கு 2500 வருடங்களாகின்றன. இவர் கொள்கையின்படி இது அற்பகாலமாகுமா? ஊழிகாலமாக தமிழ்நாட்டரசர் முக்குலத்தினராகவருக்கப்பட்டிள்ளாரென மேனூற்பிரமாணங்களானும் சாஸனங்களானும் அறிந்து கொள்வாராக.

திருமயிலை.

நந்திபோத்தவர்மன் என்றும் பல்லவ மல்லனென்றும் கூறப்படும் பல்லவ அரசன் கி-பி-710-760-ஆண்டுகளில

அரசுசெலுத்தியவன். இவ்வரசனது வல்லமையைப்பற்றிப் பற்பல சாஸனங்களில் கூறியிருப்பினும் இவனது சகோதரனுல் இவன்மீது பாடப்பட்ட நந்திக்கலம்பகத்தில் இவ்வரசனது பிரபாவத்தை விசேஷமெடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

நந்திக்கலம்பகம் 81வது செய்யுள்.

கொம்புயர்வாஇபைபோனிஞசமெதிர்
வந்ததந்திருலவீராகமழியத்
தம்பியெண்ணமெல்லாம் பழுதாகவென்
றதலைமானவீரத்துவன்
செம்பியர்தென்னர் சேரொதிர்வந்து
மாயச்செருவென்ற பாரின்முடிமேல்
வம்புயர்தொண்டைதாருட்டமாதர்
வளைகொண்டதென்வண்ணமே.

இச்செய்யுள் நந்திவர்ம பல்லவன் சோசோழ பாண்டிய அரசர்களை மேற்கொண்டவனென்று தெரிவிக்கின்றது.

முதலாவது நேரிசை ஆசிரியப்பா.

ஒருபெருங்கடவுளோப் பரவுதுமெங்கோன்
மல்லைவேந்தன் மயிலைகாவலன்
பல்லவர்தோன்றல் பைந்தார்நந்திக்கு
வடவரையளவுந் தென்பொதியளவும்
விடமுடம்மங்கல விசையமுகடப்ப
ஒருபெருதனிக் குடைநீழ
லரசுவீற்றிருக்குவலே கோவெனவே.

இது பல்லவ வம்சத்திலுதித்த நந்திவர்மனுவன் மகாமல்லைபுரத்திற்கும் திருமயிலைக்கும் அரசனென்றும் வடபாலு இமாசலமுதல் தென்பால் பொதிகைவரையில் அரசுசெலுத்தினனென்றும் விளக்கின்றது. மயிலை காவலன் என்பதினுல் திருமைலாப்பூர் பல்லவ அரசர் ஆளுகையிலுள்ள நகரங்களிலொன்று என்றும் பின்னர் காட்டும் பிரமாணத்தால் நெடுங்காலமாயிதை யரசுசெலுத்தி வந்தனரென்றும் தெரியவருகின்றது, அன்றியும் திருமயிலையிலுள்ள சிவக்ஷேத்திரத்தைப்பற்றி அடியார்கள் பாடியிருக்கின்றமையாலும் திருஞானசம்பந்தர் பூம்பாவையென்னும் ஓர் செட்டிப்பெண் மரித்தபின்னர் அம்

மாதின் சாம்பரையும் என்பையும் அவள் தந்தை மயிலையாருக்குக்காட்டித் தன் குமாரத்தியை உயிர்ப்பிக்கவேண்டி அவர் கபாலீஸ்வரர் திருவருள் மகிமையினுல் உயிர்ப்பித்தமையினலும் இச்சேத்திரம் சிறப்புற்றிருக்கின்றது.

திருஞானசம்பந்தர் திருவாய்மலர்ந்த திருமயிலை பூம்பாவை திருப்பதிகம்.

கானமர்சோலை காபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவை பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம்பந்தத் தவரோடும்வாழ்வாரே.

இவ்வகையாகப் பாடப்பெற்ற நகரமானது தொன்றுதொட்டு பல்லவ அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இங்ஙனம் வரும்காட்களிலே உலக ரட்சகரென்று கருதும் கிறிஸ்துவின் சீடர்கள் பன்னிருவரி லொருவராகியும் இந்தியாவின் அப்போஸ்தலராயுமுள்ள தோமாஸ் (St. Thomas) மயிலாப்பூரில் வசித்ததாக டாக்டர். கென்னெட் (Dr. Kennet) துரை அவர்கள் பற்பல ஆதாரங்களைக்கொண்டு 1882ஆம் வெளிபிட்ட புஸ்தகம 4-வது பக்கத்திலே,

DR. KENNET S. THOMAS, THE APOSTLE OF INDIA.

A crowd having rushed upon him with stones, one at last thrust him through with a lance on the 21st December 68 A. D., at a spot in the neighbourhood of Mailpur, still venerated as St. Thomas' Mount. "That it is really the place," observes Bishop Heber. "I see no good reason for doubting; there is as fair historical evidence as the case requires, that S. Thomas' preached the Gospel in India, and was martyred at a place called Mailapur.

"மைலாபூர்க்கு அடுத்தவிடத்தில் கி-பி-68-ம்வருஷம் டிசம்பர்மீ 21ஆ ஜனக்கூட்டங்கள் S. தோமாஸ்மீது கற்களெறிந்து கடைசியாக ஒருவன் குந்தத்தினுல் அவரைக்குத்தினன். அந்தவிடம் பின்னரும் பரிசுத்தமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. பிஷப் எப்பர் (Heber) என்பவர் அதேயிட

மென்றும் இதைச் சந்தேகிப்பதற்குச் சரியான காரணந்தோன்றவில்லை யென்றும் இதற்குப் போதுமான சரித்திர சாட்சியிருக்கிறதென்றும் St. தோமாஸ் இந்தியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கஞ்செய்தாரென்றும் மதாபிமானத்தை முன்னிட்டு கொல்லப்பட்டாரென்றும்" கூறுகின்றார்.

டாக்டர் கென்னெட்துரை அவர்கள் எழுதியபுத்தகம் 20-வது 21-வது பக்கங்களில்,

"கிரிக் தத்தின் இவ்விரண்டுபாஷைகளிலுள்ள St தோமாஸ் ஜீவகாலசரிதங்களில் (Gondapharas) கந்தப்பராஜா என்னும் அரசன் பெயர்சொல்லப்பட்டிருக்கின்றது. இவர்இந்தியாவின் கரையோரமாய்ச் செல்லுகையில் கந்தபராஜாவைச்சந்தித்தார். அவ்வரசன் கிறுஸ்துசமயத்தைஅனுட்டிக்கசெய்யப்பட்டான் என்றும் 1837மஞ்சு பதிப்பிக்கப்பட்ட தென்னிந்தியா கிறிஸ்டியன் ரிபாசிட்டரி பத்திரிகையின் முதல்வாலியம் 263-266-பக்கங்களில் லத்தின்பாஷையிலிருந்து மொழிபெயர்த்துள்ள தமிழ்எழுத்துப்பிரதியில் மயிலே அரசனுக்குக் கந்தப்பராஜா வென்னும் தமிழ் பெயரிருப்பது ஒரு தூதனப்பொருத்தம்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

ராபர்ட் சூயல் எழுதிய தென்னிந்தியா ஆர்க்கியலோஜிகல் சர்வே இரண்டாவது வாலியம் 211-வது பக்கத்திலே,

குண்டூர்க்குச்சமீபத்திலும ஏனையவிடங்களிலும்கண்டெடுக்கப்பட்ட பல்லவஅரசர்களின் பூர்வ(4-5-6-வது நூற்றாண்டுகளில்ஏற்பட்ட)சாஸனங்களில்விஜயகந்தவர்மன்இவன்குமாரன்விஜயபுத்தவர்மன்என்றும் பரத்வாஜகோத்திரத்தானென்றும் புலிக்கொடியையுடையானென்றும் (பர்ணல்பாலியாபிரபி பக்கம் 106)சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும்முதலாவது ஸ்கந்தவர்மன் இவன் குமாரன் வீரவர்மன் இவன்குமாரன் இரண்டாவது ஸ்கந்தவர்மன் இவன்குமாரர்கள் முதலாவது சிம்மவர்மன், விஷ்ணுகோபவர்மன், சிம்மவர்மன் இவன் குமாரன் மூன்றாவது ஸ்கந்தவர்மன் இவன்குமாரன் கந்திவர்மன் என்றிருக்கின்றது. ஸ்கந்தவர்மன் என்பது தமிழில் கந்தப்பராஜா வென வழங்கும். கி-பி-68-ஆண்டு சமயசம்பந்தமாய்க் கொல்

லப்பட்ட கிறுஸ்துவின் சீடராகிய (St. Thomas) தோமாஸ் என்பவர் திருமயிலையில் வசித்தகாலம் கந்தப்பராஜா (கந்தவர்மன்) என்னும் ஓர் பல்லவ அரசன் அக்காலில் அரசுபுரிந்திருந்தகாலமென்று டாக்டர் கென்னெட்துரை யவர்கள் எழுதியபுத்தகத்தில் பூர்வத்தில் ஐரோப்பாவிலிருந்து மொராக்கோ போலோ பெர்சியாஸ்முதலியகிருஸ்துயாத்திரைசாலிகள் திருமயிலாப்பூர்க்கு அப்போஸ்தலர் St. தோமாஸ் சமாதியைத் தரிசிக்க வந்தவர்களும் எனையோர்களும் St. தோமாஸையும் கந்தப்பராஜாவையும் குறித்துப் பேசியிருப்பதைக் காணலாம். கந்திக்கலம்பகத்தில் மயிலே காவலன் என்று பல்லவ அரசனைச் சொல்லிருப்பதுபோல் பல்லவஅரசனுகிய கந்தப்பராஜாவைப்பற்றியும் யாத்திரைக்காரர்கள் சரித்திரங்களிலெழுதியிருக்கின்றனர். ஸ்கந்தவர்மனென்னும் பெயர் பல்லவ அரசர்களுக்குள் வழங்கிவந்ததாக சாஸனங்களில் வரையப்பட்டிருப்பதினலும் இவ்வகைபேயருடைய கந்தப்பராஜா (ஸ்கந்தவர்மன்) வென்னுமோர் அரசன் S. தோமாஸ்காலத்தில் திருமயிலையில் அரசாண்டானென்றும் இவனுக்குப்பின் பல்லவ அரசர்கள் அரசுபுரிந்தனரென்றும் அவர்களில் கந்திக்கலம்பகத்தில் சொல்லப்பட்ட கந்திவர்மனெருவனென்றும் ஸ்திரப்படுத்தப்பட்டது.

ஆங்கிலேயர் சென்னையில் செண்டுஜார்ஜிகோட்டையைக் கட்டுதற்கு முன்னமே மைலாப்பூர் அல்லது செண்டுதோமில் போர்ச்சிகேர்சாதியார் சந்திரகிரி அரசன் அனுமதியின்மீது குடியேறி வர்த்தகஞ்செய்துவந்தனர். சென்னையிலும் செண்டுதோமிலும் வலங்கையிடங்கைசாதிகளில் கட்சிபேதத்தால்கலகங்கள் 1707-ல் விசேஷமாய் நடந்தன. இது(Madras in the olden time) மதராஸ் பூர்வகால சரித்திரம் 21-வது அதிகாரத்தில் விஸ்தாரமாய்க்கூறப்பட்டிருக்கின்றது. இக்கலகம் நடந்த நெடுங்காலத்திற்குப் பின்னர் பல்லவ அரச பரம்பரையில் வந்தவரும் மகா காட்டாண்மைக்குரியவருமாகிய ஒருவர் தொன்றுதொட்டு வன்னியர் ஆதீனத்திலுள்ள காபாலீஸ்வர கோபுர சுதந்தரத்தை வெகுஜன வன்னியர்களின் அனு

மதியின்றி யிசகசியத்தில் வேளாளரில் ஒருவருக்கு விற்று விட்டார். இவ்வனம் விற்றது நியாயவிரோதமென்று வன்னியர் ஒன்றுசேர்ந்து கோர்ட்டில் வியாஜியம் தொடுத்தார்கள். வன்னியமரபார் யாவருக்கு மூரிய சுதந்தரத்தை யொருவர் விற்றது சட்டவிரோதமென்று ஹைகோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பு மயிலை தென்னண்டை மாடவீதியிலுள்ள வன்னியர் சத்திரத்தில் தெரிசனைகளிருந்த பாலசன்னியாசி யவர்களிடமிருந்தது. இச்சன்னியாசி தம்மரபார் தொன்றுதொட்டு நடத்திவந்த கபாலீஸ்வரகோபுர திபாராதனைகயிங்கரியத்திற்கும் சத்திரமாமத்திற்கும் சுமார் 4000-ரூபாயை காலுடாஸ்டிகள் பார்வையில் அத்தொகையின் வட்டியிலிருந்துநடத்திவரும்படி உயில்எழுதிவைத்திருக்கின்றனர். காஞ்சிபுரத்தில் பல்லவகோபுரம் வன்னியர்க்குரியதுபோல் திருமயிலைகோபுர சுதந்தரமும் வன்னியாக்குரியது. இதனால் திருமயிலையில் அரசுபுரிந்துவந்த பல்லவ அரசர்களின் பாம்பரையார் இன்று மிருக்கின்றனர் என்றும் தம்மூன்னோரால்ஏற்படுத்தப்பட்ட கோயில் சுதந்தரத்தையும் கயிங்கரியத்தையும் வழாது நடத்திவருகின்றன ரென்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

இதுகாறும் பல்லவர் உற்பத்திக்கிரமங்களையும் அவர்களது வம்சாவளி அரசாட்சியின் பிரபல்லியமுதலியவைகளையும் அவர்கள்தான் பளிகளென வழங்கும் வன்னியர்களென்பதையும் மஹாபாரதத்தாலும், அப்பல்லவ அரசர்களால் ஏற்பட்ட சாஸனங்களாலும், ஆங்கிலேயபண்டிதர்களின் அபிப்பிராயங்களாலும் ஏனையபிரமாணங்களாலும் நிரூபித்துக்காட்டினும். இனி எட்டாவது அத்தியாயத்தில் கவுடதேசத்தினின்று தென்பால்வந்த இரணிவர்ம பல்லவ சோழனைப்பற்றியும் இவனது வம்சத்தவரைப்பற்றியும் திருமங்கையாழ்வார் திருநாவுக்கரசு சுந்தரமூர்த்தி நாயனர் முதலியவர்கள் திருவாய்மலர்ந்தருளிய பாசுரங்களாலும் ஏனைய பிரமாணங்களாலும் நிரூபிப்பாம்.

எட்டாவது அத்தியாயம்.

தென்னாட்டு பல்லவ வம்சத்திற்கு மூலபுருஷராகிய இரணிய வர்ம சோழச்சக்கிரவர்த்திகின் சரித்திரச்சுருக்கம்.

கவுடதேசத்தின் அதிபனாகிய கவுடேசனென்னும் அரசனுக்கு இரண்டு மனைவிகளுண்டு. அவ்விருவருள் மூத்தமனைவிக்குச் சரீரமுழுதும் சிங்கவர்ணமான வோர் குமாரன் பிறந்தான். இளையமனைவியிடத்தில் இராஜலட்சணம்அமைந்த விரண்டு புத்திரர் பிறந்தனர். இவர்களில் மூத்தமனைவியினகுமாரன்பெயர் சிங்கவர்மனென்றும் இளையமனைவியின்குமாரர்கள் பெயர் வேதவர்மன் சுமதிவர்மனென்றுஞ் சொல்லுவார்கள். இவர்களுக்கு வேதவித்திப்படி கூடத்திரிய தருமத்திற்குரிய உபநயனமுதலியகிரியைகளைச்செய்தபின்னர்பலதேசங்களிலுஞ்சுற்றுபயின்றுவரும் காட்களில்ஒரு சிங்கவர்மன் சரீரத்தின் தன்மையானது அரசுசெலுத்தற்குரிமையின்றி யிருத்தலைநோக்கி இவ்விராஜ்யபத்தைத் தனது சகோதரர் அரசுபுரிதல் உத்தமமென்றும் பெருந்தவம் புரிந்து சித்தத்தை யொடுக்குத லுறுதியென்று முணர்ந்து தனது தந்தையின் மலரடியை வணங்கி மன்னவனேயினது அருமையுடைய அடியேன் அட்டதிக்குகளிலுமுள்ள புனிததீர்த்தங்களில் ஸ்நானஞ்செயது பரமசிவத்தைத் தொழுதுவர விடைதரல்வேண்டுமென விண்ணப்பஞ் செய்தான். இம்மொழியைக்கேட்டவரசன் தானும் மூப்படைந்தவன் தினது சகோதரர்களும் இளமையுடையவர்கள் நீதபசுசெய்யும் போதல் அரசநீதிச்சுப் பொருத்தாது என்று கூற, இதைக்கேட்ட சிங்கவர்மன் நீதிமார்க்கம் கடத்தற்குத் தபசு உரிமையுடைய தென்றனன். அதைச் செவியுற்றவரசன் பிரியத்தாமின்றி மவுனமாயிருந்தான். இங்ஙனம் அரசனிருக்கவைபே அறுமதியாகக்கொண்டு சிங்கவர்மர் அன்று இரவே தனியே புறப்பட்டு ஊரெல்லையைக் கடந்து கங்கை முகத்துவாரத்தில்தீர்த்தமாடிக் காசிகேஷத்திரத்தில் சிலகாள்வசித்து அதன் பின்னர்வங்கம், சாவகம், ஒட்டியம், தெலுங்குமுதலிய தேசங்களிலுள்ள கூடத்திரங்களைத் தரிசித்தும் தீவியாதிகளில் நீராடியும் செற்குநோக்கிச் செல்லும்போது காட்டில்

வில்லேந்தியோடும் ஓர் வேடனைக்கண்டார். ஒடுகிறவனையழைத்துத் தன்னருகிலிருத்தி யிப்பெருமரக்காட்டிலும் மலையிலும் யாதாவது புதுமையுளதாவென வினவ, அவ்வேடனும் வணங்கி சுவஸ்திசொல்லித்தச்சொல்வான் தேவரீர் இக்காடுகளிலும் மலைகளிலும் பலவகையான அதிசயங்களுண்டு. அவ்வதிசயங்களைச்சொல்லியபின்னர் ஒழியாத வோசையமிகுந்த ஒருபக்கத்து ஆற்றங்கரையிலே மாவடி விருக்ஷத்தின்கீழ் நீங்காமல் ஒரு தேவர் இருப்பார். அவருக்கு அருகாக ஒரு கிணற்றுக்குள்ளே ஒரு கிளைவழியாக ஒரு பச்சைப்பாவை வந்து இருபோழ்தும் அத்தெய்வத்தைப் பார்த்துக்கொண்டு பல புட்பங்களையும் அத்தேவர்மீது போட்டுப்பூசித்துச் செல்லும் என்றனன்.

கோயிற் புராணம் இரண்டாவன்மச்சருக்கம்

21-வது செய்யுள்

ஒவிடவிலோசையொரு பாலெழுந்திப்பாண்
மாவடி விடாதவொரு தேவருளம்மாடே
கூவன்முழையால்வழி குலாவியோருபச்சைப்
பாவையிருபோதும் விரிபோது பயில் விக்கும்

இச்செய்யுள் திருக்கம்பாநதி தீரத்தில்மாவடி விருட்சத்தின்கீழ் எழுந்தருளிய ஏகம்பரைக்காமாட்சியம்மன் பூசித்ததாகத் தெரிவிக்கின்றது.

இங்ஙனம் வேடன் சொல்லியபின்னர் அரசன் அம்மாவடித் தேவரைக்கண்டு தரிசிக்க வழிக்காட்டென்றுசொல்ல, வேடன் அரசரைச் சுவடி மறைத்த மார்க்கமாய்க்கொண்டு போய் இவர்தான் நான் கூறியதேவர் என்று காட்ட கவுடதேசத்து அரசகுமாரரும் ஸ்ரீகாஞ்சி திருவேகம்பரைப் பூசித்து வருகையில் ஒருநாள் வேடனையழைத்துக் கடற்கரைவழியாகப் பூமிபிரதக்ஷணம் பண்ணுவதே யெனக்குச்சுவாசம் என்றும், யான் அமியாவழியைக் காண்பிப்பது உனது கடனென்றுஞ் சிங்கவர்மன்தனதுஎண்ணத்தைச்சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட வேடன் அடியேன்முன்போய் வழிகளைப் பார்த்தறிந்து பின் அழைத்துப்போவதாய்ச்சொல்லி அதுவரையில் இங்கிருக்கும்படிபணிந்து விடைபெற்றுச்சென்றான்.

அவ்வேடனுனவன் காடுமலைகளைக்கடந்து தில்லைவனம் வந்து அங்கு நிகழும் அதிசயங்களைக் கண்டவண்ணமே திரும்பிவந்து சிங்கவர்மர்க்குச்சொன்னன். அத்தில்லைவனத்தில் பொற்றாமரை தீர்த்தருகே புளிசாதப்முள்ள ஓர்முனிவர் அங்கு உறங்கியிருந்தனர். அவரைக்கண்டு அச்சமுற்று ஒடுந்தூரமானக்காட்டைக்கடந்து விரைவில் வந்தேன் என்றான்வேடன். இவன் சொல்லியவைகளைக்கேட்டவுடனே அவ்வாசிரியரைக் கண்டுதரிசித்து கற்பேறுபெற வேண்டுமென்னும் அவாவினால் சிங்கவர்மர் அப்புலியைக்காட்டுவாயாகவென்று கேட்க வேடனுஞ் சம்மதித்தான். காமாட்சிபால் பூசிக்கப்பட்டவேகம்பரை நமஸ்கரித்து விடைபெற்று வேடனுடன் சென்றார். செல்லுகையில் வேடன் அவரது கரத்தைப்பற்றிக்கொண்டு காகினியும்கதிரினையுங்கடந்துசித்தத்தைச்சிவமாக்குந் தில்லைவனத்தின் எல்லையையணுகியபோது வேடன் சிங்கவர்மரைக் கைபற்றிக்கொண்டு செல்லுகையில் சித்திரப்பதுமைபோலுறங்கும் புலியருகிலுள்ள முனிவரைக்காட்டினான். இராஜகுமாரர் வியாக்கிரமபாத முனிவர் திருவடியிலிருக்கும் பரிசைக்கண்ணுற்று அம்முனிவர் அருகில்செல்ல அஞ்சி நீங்காதசிவானுபோகத்தை நீக்குதல்கூடாதென்று நினைத்து அங்கனேகின்று வேடனைத்தன்னூர்க்குப்போகும்படி விடைகொடுத்து அனுப்பிவிட்டு அஞ்சாமல் அம்முனிவரது ஸ்ரீபொற்பாதத்தைநமஸ்கரித்துக் கைகூப்பியவண்ணமே தனிபேணின்றிருந்தார் சிங்கவர்மர். திருவடியிலிருந்தமுனிவர் சமாதி நீங்கியபின்னர் எதிரில் நிற்கும் கவுடதேசவிராஜகுமாரரைப்பார்த்து அவரது மனோநிட்சயத்தையும் வரலாற்றையும் ஞானத்தால் அறிந்து இவன்கடலால் சூழப்பட்டவுலகுக்கு வேந்தனுவான் கவுடதேசத்திலுள்ளவன் சூரியவம்சத்தில் ஐந்தாவதுமனுவெனத்தெளிந்து அம்மனுவுக்கு மூன்றுபுதல்வருளர். அவர்களில் மூன்றினவன் இவனென்று அறிந்து, அம்மகாமுனிவர் எதிரில்லைகூபித்திருக்கும் இராஜகுமாரனைப்பார்த்து அதிகஅன்புடன் சிங்கவர்மனே யென்று அழைத்தபோது அவர் ஏகாங்கமாக நமஸ்கரித்துக் கண்ணீர்சிந்தும்படி நிற்க அவரைநோக்கி வியாக்கிரமபாதர் நீ தனியேவந்தகாரியத்தைப்பகர்வாயென்று அரு

விடபோது அடியேன் கவுடதேச மனுவின்புத்திரன் எனக்கு சகோதரர் இருவருளர் தேவரீர் கடாட்சத்தாலே நீடித்துவரும பிறவித்துன்பம்நீங்க உமது திருவடியைச்சேர்ந்து தவஞ்செய் வதற்குவந்தேனென்றார். முனிவர் அதனைக்கேட்டு கிலேபெற்ற மனுவழியிற்செல்கோல்செலுத்தும் முறைமையுணக்கிருக்க நீத பகுசெய்தல்தகாதெனவுரைத்தார். அதனைச்செவியுற்ற அரசர் குமாரர் அடியேன்சரீரவடிவு குற்றமுடைத்து அரசாளுதற்கு தியனல்லன் சமுசாரசாகரத்தில் ஆழாமல் அருட்கரை காணு ம்படி கடாட்சித்தருளுமெனக்கூறியபோது இவனதுசரீரகும் நம் நீங்குமாயின் அகுசெலுத்த மனமுடையனென்றுயோசி த்துப் பொற்சபையில் எழுந்தருளிய அகதிகுத்தர் திருவுள் புரிவாராகில் அன்புகிறைந்தநிருபேணி நித்தியகைவேத்தியங் கள் நிரபியலோபமினறி, கடத்தற்கு இவனே யுரியனென்று அறிந்து நிங்கவர்மரை யிங்கனே கர்மவருமளவும் நிற்கும்படி சொல்லிவிட்டு பதஞ்சலிமாமுனிவரிடஞ்சென்று அவருக்குச் நிங்கவர்மர் மனதுகுறையைக கூறிபபின்னர் இருவரும் கவ கசபவாசலினின்று கமல்கரித்து இறைவனேகோக்கிச்சிங்கம் போல விளங்கும் கவுடதேசத்து இராஜகுமாரன் இருவர்த் னன் அவனது சரீரப்பழது நீங்கும்படி செய்து அடிமையெகா ண்டருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்கள். இறைவ ரும் திருவுளமுவந்து புண்டரீகப்பொய்கையில் ஸ்நானஞ்செ ய்வித்து அவனே கம்கதிரில் அழைத்து வாருங்களென்று அரு ளிபபடியே அவ்வாறபொற்றாமரைப்பொய்கையில் ஸ்நானம் பண்ணும்படி சொல்லியவாறே நிங்கவர்மன் ஸ்நானஞ்செய்து எழுந்தபோது (இரணியம்) பொற்சொரூபமாகச் சரீரத்தை பு டையனுருத்தலேக்கண்டு ஆச்சரியப்பட்டு புகழ்ந்து இரணிய தன்மையாய் விளக்கினமையால் இரணியவர்மனென்னும் பெயர் வியாக்கிரமபாதமுனிவர் கொடுத்தார். கொடுத்தபின் னர் இரணியவர்மர்க்கு வலச்செவியில் பஞ்சாட்சர வுபதேசம் பண்ணி அவரைக்கொண்டுபோய்சிதம்பரகாவர் சன்னிதியிலே கடேசரைப்பணியும்படி செய்வித்தார். நிதம்பரகாதரும் இர ணியவர்மர்காணும்படியாசூரந்தத்திருகடனங்காட்டினர் இர ணியவர்மர் அதைக்கண்டு உள்ளமுருகி கடுகடுங்கி மயிர்சிலிர்

த்தச் சென்னியில் கங்குவித்துப்பூமியில் விழுந்தெழுந்து பல கைகயாகத்தோத்திரஞ்செய்தார்.

நிதம்பாகாதர் இரணியவர்மனே உன் அன்பின் வாய் மைகையுவந்தோம் வியாக்கிரமபாத முனிவருக்கும் பதஞ்சலி முனிவருக்கும் எங்கும் நில்லாவாழ்நாளருக்கும் ஊழியஞ் செய்யக்கட்டாயென்று அருளிச்செய்தார். அதன்பின்னர் வியாக்கிரபாத முனிவர் தமது பன்னசச்சாலேக்குப்போய்த் தமது பத்தினியைநோக்கி யிவ்விரணியவர்மன் பெருமற்பெற் றப்பிள்ளை யிவனே ரட்சித்துக்கொள்ளென்று கூறினர். அங் ஙனங் கூறியதைக்கேட்ட இரணியவர்மரும் அவ்வம்மனியின் பாதாரவிந்தங்களே வணங்கிப்போற்ற அவரும், மன்றுள்நீங் காத கடேசர் நமக்களித்த பிள்ளையென வளர்த்துக்கொண் டார்கள்.

இங்ஙனம் நிகழும் நாட்களிலே கவுடபூமியில் அரசுபுரி ந்துவந்தமனு எவ்வாறு மனுநீதிகோடாது அரசுபுரிந்துவந்தன தோ அவ்வாறே எண்ணிக்கொண்டு மனுநீதி நடத்தினும்போல தனது குமாரன் நிங்கவர்மனேக்கொண்டு நடத்தும்படி வசிட் டமுனிவனிரப்பார்த்துச் சொன்னன் மனுவென்னும் அரசன். சொல்லியபின்னர் அம்முனிவர் அனுமதிபெற்றுப்போக வனு டம்பவிட்டு புழ்உடம்பை யடைந்தார். அம்மனு அடைந் தபின்னர் அவ்வரசனுக்குச் செய்யவேண்டிய வெல்லாக்கிரி கைகளையுஞ் செய்துமுடித்தபின்பு குமாரர் இருவரும் வசிட்ட முனிவரைநோக்கி எங்கள் பிதா கேட்டுக்கொண்டவண்ணம் செய்தருள்வீராகவென்று பிரார்த்திக்க வசிட்டமுனிவரும் நீங்கள் சுமாதானமாக யாம்வருமளவு மிருங்களென்றுசெல்லி விட்டு அங்க வங்க கலிங்க மூதலிய தேயங்களில் சென்று நிங் கவர்மனே விசாரித்துங் காணமையால் தெற்கு நோக்கித் தில் லேவனம்வந்து சேர்ந்தார் வசிட்டர். இதனையறிந்த வியாக்கி ரமபாதர் இரணியவர்மனே யழைப்பித்து வசிட்டமுனிவர் அங் குவிஜயஞ்செய்திருக்கின்றனர். அவரிடம்போய் க்ஷேமகதனே விசாரித்திரும்; இதற்குள் பூசைமுடித்துக்கொண்டு வருகிறே னென்று சொல்லி யனுப்பிவிட்டு அதன்பின் பதஞ்சலி முனி

வரை அழைத்துக்கொண்டு வசிட்டமுனிவரிடம் வந்தசேர்ந் தார்கள்.

இவர்களுக்கு முன்சென்ற இரணியவர்மர் வசிட்டமுனி வரை நமஸ்கரித்தபோது இங்ஙவர்முனிருந்து இரணியவர்மனு யிருப்பதை முனிவர் அறிந்திருந்தும் யாதொருஆசீர்வாதமுஞ் செய்யாமலும் தனது தந்தையின் க்ஷேமத்தை விசாரிக்கை யில் பிரியத்திரமின்றியும் விசனக்குறியைக்காட்ட அத்தரு ணத்தில் முனிவர்கள் இருவரும் அவ்விடம் வந்தார்கள். தவ முனிவர்கள் தம்மில் கூடியிருந்தபிறகு இரணியவர்மர் தனது தந்தையின்மீது வைத்திருந்த பாசத்தினால் மனக்தளர்ந்து அதிகதுக்கத்துடன் வந்து நமஸ்கரிக்க விபாக்கியாபாதர் அவ ரையெடுத்து மார்போடணைத்துக் காயம் நிலையாமையைப் பற்றிப் பல நீதிகியாயங்களை யெடுத்துச்சொல்லி இரணியவர் மர் பிதா மீதுற்ற துயரத்தை நிவர்த்திசெய்தனர். இதன்பின் னர் வசிட்டமுனிவரானவர் கவுடதேசத்தரசன் தனது பிரா னன் நீங்குந்தருணத்தில் தனது குமாரன் இங்ஙவர்மனை யழைத்து இராஜியத்தைக்கொடுத்து அரசுசெலுத்துப்படி செய்தல் தங்கள் கடமையென்று கூறி பிராணனை விட்டார். ஆகையால் இரணியவர்மனைச் சிம்மாசனத்தில்வைத்து அரசு செலுத்தும்படியைக் அழைத்துபோவதற்கு வந்தோம். என்று கூறினர். கூறியதுடன் இரணியவர்மன் விருப்பத்தை வினவி யபோது தங்களிட மிருந்து தங்களுக்குப் பணிவிடைசெய்த லே எனது விருப்பமென்று கூற நீ மாயூரதேசம் வேண் டுமென்பாயாகில் வசிட்டமுனிவருடன் சென்று உனது தந்தை அரசபுரிந்த கவுடதேசத்திலிருந்து இராசவஸ்திர மான மணிமுடி முதலானதாபதிகளையும் மற்றுமுள்ள இரா ஜபோகத்திற்குரிய வேனையபொருட்களையும் மந்திரிகள் ஸ்தி யப்பெண்கள் இன்னம் வரப்பிரியமுள்ளவர்களையும் கைக்கொ ண்டு கடகேவருவாயாகவென்று வியாக்கிரமபாதர் விளம்பினர். இவையன்றியும் மூவாயிரம் பிரமவிருடிகளையு முன்னுடன் அழைத்துவரும்படி விடைகொடுத்தனுப்பினர்.

இரணியவர்மர் இவ்வுத்திரவுகளைப் பெற்றுக்கொண்டு வசி ட்டமுனிவருடன் நிவிரகதியாகச்சென்று கவுடதேசத்தை

அடைந்தார். அடைந்தபின்னர் சிலகாள் தங்கி அங்குள்ள சித்துமித்திரர்கள் யாவரும் மனங் களிப்படைந்திருக்கையில் ஓர்தினம் பிரதான மந்திரிப்பைப்பார்த்து, எனது இங்ஙவர்ம ான குற்றத்தைப்போக்கிக் கணகமயமாக்கிய வியாக்கிர மபாதரைச்சேவிக்க நீங்களும் எனது சகோதரர் முதலானவர் களும் வரக்கூடுமானால் வரலாமென்று சொன்னவளவில் யாவ ரும் மனக்களிப்புடன் இரணியவர்மருடன் பிரயாணப்படச் சித்தமானார்கள். பிரயாணமாகுஞ் சுத்தகினத்தை அங்கர் முழுதும் முரசுமூலமாக அறிக்கைசெய்தவுடன் மந்திரிபிரதா னிகளும் காவ்வகைச்சேனைகளும் இரணியவர்மரின் சிறியதா யார்சகோதரர்குமாரர் குமாரத்திகள் ஐவகைசுற்றம் முதலான வர்களும் அத்தனர் அக்ஷோகயத்திலுள்ள மூவாயிரம் பிரமரிஷி களும் இரணியவர்மருடன் பிரயாணமானார்கள். அன்றியும் அளவுகடந்தபொன்திரவியங்களையும் வஸ்திரனங்களையும் யா னைகள்ஒட்டகங்கள் கதறுங்கள்மீதுபோட்டுக்கொண்டு தட்ச ணதேசம் நோக்கி காடுமலை நதிமுதலியவைகளைக்கடந்து தில் லையணுகி வடமேற்குமூலையில் தங்கி பிரமரிஷிகளாகிய அந்த னர்மூவாயிரவரை யெண்ணுகையில் ஒருவர்குறைந்தையால் இரணியவர்மர் மனக்கிலேசமுற்றிருக்கையில் கடேசப்பெரு மான் தேவர்கள் கேட்கும்படி இரணியவர்மனே, அந்த பிரம ரிஷிகளெல்லா மெமக்கொப்பானவர்கள் யாரும் அவ்விரிஷி களுக்கொப்பாவோம் ஆதலால் காமும் அவர்களுள் ஒருவராக் கொள்ளவேண்டுமென்று அருள்செய்தார். பின்னர் வியாக்கி ரமபாதரும் பதஞ்சலிமுனிவரும் மற்றுமுள்ளாரும் இரணிய வர்மரை ஆசீர்வாதஞ்செய்து ஆசிரமத்தில் மூவாயிரவரும ானோரும் நில்லையபலத்தைச் சூழ்ந்திருந்தார்கள்.

இரணியவர்மரானவர் சிதம்பரத்திற்குக் கீழ்திசையில் கொற்றவன்குடி யென்னுமிடத்தில் தமமைச்சூழ்ந்து வந்தகால் வகைச்சேனைகளுக்கும் படைவீடுஅமைத்தி அம்மாளிகையில் வசித்தார்கள். இவ்வகையாக விரணியவர்மரும் மற்றுமுள்ள பெரியோரும் சிதம்பரதாதருக்கு அருகாகவாழும்நாட்களிலே ஓர்தினம் வியாக்கிரமபாதர் கவுடதேசத்தரசன் குமாரர் மூவ

ருள் முற்றினவனுகிய இரணியவர்மன் இத்தேசத்தைச் சிவாக் கினியின் பெருமையால் செங்கோல்செலுத்தக்கடவன் இவ னது சகோதரர் இருவரும் தங்கள் கவுடதேசத்திற்கு அர சராகக்கடவரென்று அவ்விடம் விஜயஞ்செய்திருந்த யாவ ரும் கேட்கும்படி விரித்துரைத்தார். உரைத்தமாத்திரத்தில் தில்லைமூவாயிரவரும் மற்றுமுள்ள ரிஷிகளும் மிக கல்லதென்று சொன்னார்கள். அதனபின்னர் கீர்த்திப்பிரதாபனுன இரணியவர்மருக்கு இராஜகுலத்திற்குரிய வியாகஞ்செய்வித்து நிதம்பராதருக்குச் சமீபமானவிடத்திலே யோர் அபிஷேக மண்டபங்கட்டுவித்தார். அத்தமண்டபத்தில் தருப்பைமாலை கள், மாவிலைத்தோரணங்கள், தூண்டாவிளக்குகள், கனகதின் காதனம், அட்டமங்கலத்திரவியங்கள், நெய், பொரி, தருப்பை முதலியவைகளும், கால்வகை புட்பங்களும், குர்ப்பமுதலிய கலசங்களும் வைத்து ஓர் இரவு அநுஷ்டாசக்கிரதியம் விளங் கப்பண்ணினார்கள். உதயகாலக்கிரியைகள் முடிந்த பின்னர் சோதிடர்குறித்த சுபமுகூர்த்தத்தில் மங்களார்த்தமா யிருக்கின்ற நவரத்தினங்களிழைத்த பீடத்தின்மேல் அபிஷேகம் பண்ணுதற்காம் பரியமான மகதத்தான் மணிமகுடம், ஆத்திமாலை, பனைமுத்தி கட்கம், வாள் வியாக்கிரமபாதர் கையினல் கொடுக்கப்பெற்று, அம்மண்டபத்தின் சிங்காதனத்திலிருந்தபின்னர், பல்லாண்டு வாழ்கவென அரசர்க்கு ஆசிகூறி, எழுந்திட்டார்கள். சிலதை களிகூர்ந்து இரணியவர்மர் சக்கிரவர்த்தியெனச்சக்கரவர்த்தி கரிக்க, அருட்பிதாவாகிய வியாக்கிரமபாதர் எதிழுழிக்கொண்டு ஆசீர்வாதஞ்செய்து அறிவுக்கறிவான வியாக்கிரமபுரத்தைக் காத்தளிப்பாயாகவென்று பழைய வெற்றிப்புலிக்கொடியைக் கைத்தலத்தில் திருவுளம்பற்றிக்கொடுத்தார். இதன்பின்னர் பிரதட்சணமாக அழைத்துப்போய் ஆசுத்திரத்தஞ்செய்யும் சன்னிதியிலே கால்கரிக்கச்செய்த தம்பிரானர் திருப்பாதங் கள் இரண்டினையுமெடுத்து இரணியவர்மனின் சிரசில் வியா க்கிரமபாதமுனிவர் தரித்தார்.

இரணியவர்ம சக்கிரவர்த்திக்கு விதிப்படி அபிஷேகஞ் செய்து முடிசூட்டிக் கொடிமுதலிவைகளை வியாக்கிரமபாதர் கொடுத்த செய்யுள் வருமாறு.

கோயிற்புராணம் திருவிழா சருக்கம்.

(5) காலேதொடங்கிநடந்து சடங்குகணித்தோதும்
வேலையின்மங்கலநீடபிடேகம்வியந்தாடி
மூலமுயங்கியமாமுடிதார்முதுவான்பெற்றங்
கேலவிருந்தபினிட்டனரான்டொன்றிரண்டென்று.

(6) சித்தைமகிழ்ந்தெதிர்வந்தனைதன்றயன்செய்யத்
தக்கைமகிழ்ந்ததழீஇவனராசிகடாகல்லிப்
புத்தியிலங்குபுலிப்பதிகாரவல்புரப்பாயென்
றத்தமின்முந்து * புலிக்கொடியங்கையசத்தும்.

இச்செய்யுளில் புலிப்பதிகாரியவியாக்கிரமபுரத்தையும் முந்துபுலிக்கொடியென்றமையால் சக்கிரவர்த்தி வம்சத்திற் குப் பாரம்பரியமாயுள்ள பழைய்புலிக்கொடியையும் அவரது கரத்தில் கொடுத்து அரசுசெலுத்தும்படி திருவுளம் பற்றினர் என்று கூறப்பட்டிருக்கிறது.

* இப்புலிக்கொடி சில்லவருக்குரியது, அன்றியும் வர்ம னென்னும் பட்டப்பெயரும் பல்லவருக்குரியது. இவ்விரு முறைகளும் பின்னர் கூறும் சந்ததிமுறையாலும் இரணிய வர்மன் பல்லவராஜனென விளங்கும்.

(7) போதகவென்றுவலஞ்சொடுபுக்கரணம்பிக்காடு
காதன்முனம்மலர்சிந்திவணங்கயந்தண்ணல்
பாதமிரண்டுமெடுத்தவன்முச்சிபரிப்பித்தா
னேதமெழுந்தெனயாவருமோகையுறைத்தார்கள்.

இதில் அண்ணல்பாதம் இரண்டுமெடுத்து வியாக்கிரமபா தர் சக்கிரவர்த்தியின் சிரசில் தரிப்பித்தார் என்றுகூறியதும் இனங்க தற்காலம் பித்தாபுரத்தில்வசிக்கும் இவரது வம்சதா ராகிய பல்லவராசாவர்களுக்கு அக்கால்தொட்டு இக்கால்வரை யில் முடிசூட்டல் என்னும் இவ்வைதிகம் நடத்தப்பட்டுவரு வது பிரத்தியட்சானுபவம்.

(8) சதில்பெருந்தானென்னவைதின்னவையிப்பார்மே
லாதினிலொன்றுகொளஞ்சிலொன்றுகொளாதத்தாவிப்
பேறுபிறந்தடியேன்மரபோர்கள்பிழைத்தாலுங்
கூறுமன்புகொடுத்தடிமைப்பணிகொள்ளென்றான்.

இரணியவர்ம சக்கிரவர்த்தியானவர் தனது ஐசுவரியமும் பூமியில் வரும் திரவியத்தில் ஆறில் ஒன்றும் நடேசபெருமானுகிய தேவரீர்க்கென்றும் தன்வம்சத்தில் வந்தவர்கள் குற்றங்கள் செய்தாலும் பொறுத்துப் பத்தியையுண்டாக்கி அடிமைத்தொழில் கொண்டருள்வீரென்றுப்பிரார்த்தித்தொண்டாரென்பதை இச்செய்யுள் தெரிவிக்கின்றது.

(9) அண்ணலமவ்வகைசெய்குவமென்றருள்செய்போதிற்
கண்ணமர்தாரைகள்காரைகிர்ப்பக்கரைவுற்றங்
கெண்ணருமின்னருகொய்திறைஞ்சியெழுஞ்சேவைத்
தின்னியனன்முனிகொண்டுவிடையானடிசேர்வித்தான்.

(10) அங்கும்வணங்கிவணக்கருமாலையைமேல்சொன்று
மங்கலமாகுழ்வாமாமுனிதானேவிச்
சங்கவியங்கண்முழங்கவலங்கொடுதார்மார்பன்
பொங்கியபங்கயமாதமர்கோயிலினுட்புக்கான்.

(11) தார்புனையாரணிசெம்பியனெம்பியிதரனல்கும்
பாரும்தாரும்மதாகவெறுவணிதார்பட்டம்
போர்தருசாமரைதோகைகணின்குடைபொற்பீடம்
தேரணிமாவயமாதியிதிகன்சேர்வித்தான்.

(12) வென்றிடுதொழுதம்பியர்வந்தடிமேல்வீழ்வுற்
றன்றவர்சென்றபின்மன்றம்வணங்கியவன்றன்னை
முன்றெழுதக்தணர்வந்தனமாலிகைமுற்செய்வா
னின்றருசென்றவையெங்குமிலங்கவெடுப்பித்தான்.

(13) எழிலைமாளிகைசூளிகைசாளரமோர்சீர்
வாழ்மதிரேணவாயில்கடோணிமாவீதி
சூழ்வுறமேருவினேர்பலகோவியசோழேசன்
முழ்வடன்மாதவர்யாரையுமீள்குடிசார்வித்தான்.

இரணியவர்ம சக்கிரவர்த்தியானவர் மஞ்சாபிஷேகமாரூடின்னர் பிரதட்சணம்வந்து திருவாலிகையில் புகுந்தார். இதன்பின்பு தனது கோதரரை யழைத்து உங்களுக்குரிய தேசம் கவுடம், விடும் கவுடகமே யாகக்கடவீரென்று ஆக்கியாபித்து ஆபாணமும்மாலையும் சோடிக்கப்பட்டங்கட்டிப்பொருந்தி வீசும்உபயசாமரையும்பிலிக்குடைதவளச்சத்திரப்பொற்பீடம் தோரணயானைகன் குதிரைகள் பதாதிகள் முதலான

வைகளையுங் கொடுத்து சிதம்பரகாதருடைய ஆசுத்தக்கூத்தை த்தரிசித்தபின்பு அவருக்குவிடைகொடுத்தனுப்பிவிட்டு தில்லை மூவாயிரவர்க்குத் திருமாளிகைகட்டுவித்து ஏழ்நிலைமாளிகைகள், கீழைத்தோர் நிறைந்தபெரியவீதிகள் முதலியவைகளையேற்படுத்தி அத்தணர் முதலியவர்களைக் குடியேற்றுவித்தார். நடேசப்பெருமானுக்குக் கனகமயமான கோபுரமதில் மண்டபங்களையும் கட்டுவித்தார்.

இதுகாறும் கூறிய இரணியவர்ம சக்கிரவர்த்தியின் சரித்திரத்தால் சிதம்பரக்ஷேத்திரத்தைக் கட்டுவித்தவர் கவுடதேசத்தினின்றுவந்த சக்கிரவர்த்தி யென்று கோயிற்புராணம் நன்கு விளக்குகின்றது. இவர் வருகைக்குமுன்னர் சிதம்பரம் தில்லைவனமாயிருந்தது. இதுபோலவே காஞ்சிமாநகரமுங் காடாயிருந்தென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விருநகரங்களும் இரணியவர்மர் வந்தபின்பே அரசர்கள் வசிக்கும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் சிவாலய விஷ்ணுவாலயங்களு முண்டாயின. இரணியவர்ம சக்கிரவர்த்தி கவுட தேசத்தினின்று வந்தகாலமும் நகரமும் க்ஷேத்திரங்களு மேற்பட்டகாலமும் வரையறுத்துக்கூறுதல் கூடாதாயினும் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்னர் நகரங்களும் ஆலயங்களும் மாடமாளிகை கூடகோபுரங்களும் அந்நகரங்களில் பல்லவச் சோழவரசர்கள் வம்சபரம்பரையாக அரசபுரிந்துவந்தனரென்று புராணங்களாலும் சாஸனங்களாலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும் தேவார திருவாசகங்கள் காலாயிரபிரபந்த முதலிய திராவிட வேதங்களை யருளிய நால்வராசாரியர்களும் ஆழ்வாராதிகளும் சிதம்பரம், காஞ்சிபுரம்முதலிய க்ஷேத்திரங்களைப்பாடியுள்ளமையாலும் அவர்கள் திருவாய்மலர்ந்த பாட்டுகளில் பல்லவசோழ அரசர்களைப்பற்றி ஆங்காங்குகூறியிருக்கின்றமையாலும் அவ்வடியார் காலவையறை சுமார் இரண்டாயிரம் (2000) வருடங்களுக்கு முன்பின்னாகவிருத்தலாலும் பல்லவசோழ வரசர்களே ஆதியில் காஞ்சிபுரம் சிதம்பரம் முதலிய நகரங்களைக் கட்டி பிரபலமாக அரசுபுரிந்தனரென்பது நிச்சயம்.

பல்லவச்சோழராகிய இரணியவர்ம சக்கிரவர்த்தி வம் சத்தின்வழி வந்தோரும் அவர்கு பந்துவர்க்கத்தோரும் காஞ் சிபுரம் சிதம்பரம் மயிலே முதலிய நகரங்களைக்கட்டியாண்டார் களென்று பெரியார் திருவாய் மலர்ந்த பிரபந்தங்களைக்கொண் டு கிருபிப்பாம்.

திருமங்கையாழ்வார் திருச்சித்திரகூடம்
கோவிந்தராஜன்மீது பாடியது.

3-வது பாசுரம்.

வெம்புனைத்துப்புனற்கேழலொன்றுவி
ரிநீர்மூதுவேள்னமுன்பீக்கழுத்த
வம்புண்பொழில்குழலகன்றெடுத்தா
னடிப்போதினைவரன்விருப்போடியப்பீர்
பைம்பொன்னுமுத்துமணியுங்கொணர்ந்து
படைமன்னவன்பல்லவர்கோன்பணிந்த
செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்திலங்கு
திருசித்திரகூடஞ்சென்றுசேர்மின்களே.

இப்பாசுரத்தில் பைம்பொன்னும் முத்தும் மணியும் கொ ண்டுவந்து பண்டமன்னவனுடைய பல்லவர்கோன் பணிந்த திரு சித்திரகூடம் என்று கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் ஆழ்வார்கூறியதில் படைமன்னன் பல்லவர்கோன் என்பன சிதம்பரசேஷத்திரத்தைக் கட்டுவித்த இரணியவர்மசோழன் சந் ததியில்வந்த அரசனென விளங்குகின்றது. இவ்வம்சத்தில்வந் தபல்லவச்சோழ பரம்பரையார் சிதம்பரத்திற்குத் திப்பாசித் திலுள்ள பித்தர்புரத்தில் தங்காலம்வசித்து வருகின்றனர். இவ ர்களுக்குப்பூர்வத்தில் இரணியவர்ம சக்கிரவர்த்திக்கு கடத்த மரியாதைகளும் அபிஷேகமும்பஞ்சாட்சரபடியில் இப்போதும் நடத்தப்பட்டுவருகின்றது. அரசாங்கமாறுதலால் இவ்வம்சத் தவர்களின்செல்வமும் ஏடும் மாறுபட்டிருப்பினும் பூர்வ ஜதி கம்குறையின்றிநடத்துவருகின்றது. இவ்வுண்மையையுணராத வர் பல்லவச்சோழ பரம்பரையார் மறைந்துவிட்டனென்று மதிமயக்கால் மனம்போனவாறு பகர்கின்றனர். சிதம்பரசேஷத் திரத்தைக் கட்டுவித்த இரணியவர்மசோழன் சந்ததியார் பெ

பித்தர்புரத்தில் இக்காலத்து மிருக்கின்றனென வ்தாபிக்கப் பட்டது.

தொண்டமண்டலத்தில் காஞ்சிமாநகரமானது ஆதியில் பல்லவ அரசர்களுக்குப்பிரதானநகரமாயிருந்தென்றும் அவ் வரசர்களாலே கொல்ல விஷ்ணுவாலய மூதலியனைகள் கட் டப்பட்டதென்றும் முன்னமே கிருபிக்கப்பட்டிருக்கின்றது. இம்மகாகேஷத்திரத்தில் பல்லவ அரசர்கள்பெயர் மறைபடா மற்காட்டுதற்குப் பல்லவகோபுரம் ஆயிரக்கல்மண்டபம் இரா ஜசிம்மேஸ்வரம் (ராஜசிம்மபல்லவாசுரதர்கோயில்) வைகுண்டபெருமா ளாலயம் (பரமேஸ்வரவிண்ணகரம்) முதலிய பலவாலயங்கள் பல்லவர்களால் நிர்மைக்கப்பட்டுள்ளன.

நிராவிடவேதமாகிய காலாயிரப்பிரபந்தம்
திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய
வேதங்களின் சாரமாகிய பெரியதிருமொழி.

9-வது சொல்லுவன்

பல்லவனுஞ் சோழனுமென்பார் அனுகூலவிருத்திகளைப் பண்ணுகிற பரமேச்சுர விண்ணகரத்தை யனுபவித்துப்பேசு கிறார்.

மூதலாவதுபாசுரம்.

சொல்லுவன் சொற்பொருள் தானைவையாய்ச்
சுலையுரெலிஞாற்றமுந் தோற்றமுமாய்
சொல்லுவன் சொற்பொருள் தானைவையாய்
நல்லான் காணன் நான்முகனுக்கிடந்தான்
தடஞ்சுழ்ந்தழகாயகச்சி
பல்லவன் வில்லவனென்று லகிற்பலராய்ப
பலவேத்தர் வணங்குகழற்
பல்லவன் மல்லயர்கோன் பணிந்த
பரமேச்சுரவிண்ணகமதுவே.

இப்பாசுரத்தில் பல்லவன் வில்லவன் என்றும் பல்லவன் மல்லயர்கோன் என்றும் பலவேத்தர் வணங்குகழல் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. கச்சிப்பல்லவன் வில்லவன் என்றமை யால் காஞ்சிமாநகரத்தையாளும் பல்லவச்சோழன் என்றும்

சேரனென்றும் பல்லவ அரசனைச் சோழனுகவும் சேரனுகவுங் கூறினர். பல்லவன் மல்லயர்கோன்என்பது மகாமல்லபுரத்திற்கு(மாவலிபுரத்திற்கு) அரசனென்றும் பலவேந்தர்வணங்குகழல் என்றமையால் இப்பல்லவஅரசன் திருமங்கையாழ்வார்காலத்து பலவேந்தர்களைச் செயித்து அவர்களையடக்கியாளுகை செய்தவனுகியும் அவர்களால் வணக்கப்பட்டவனுமாகிய மூடிமன்னன் என்று விளங்கின்றது. இம்மூடிமன்னன் ஆளுகையில் காஞ்சிமாநகரம் மிக்க சிறப்புடையதாயிருந்ததென்பது இப்பாகுரத்தால் விளங்குகின்றது.

மகாமல்லபுரம் பல்லவ அரசர்களுக்குக் கடல்துறை பட்டணமாயிருந்தது.இப்பட்டணத்தில் மலைக்குகளுள்ள கருங்கற்களில் அநேக அற்புதமான வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றது இவ்வளவு சிறப்புற்ற நகரமானது கடலால் அழியப்பட்டது.

கார்மன்னுநீள்விசும்புங்கடலுஞ்சுடரு
நிலனும்மலையுந்தன்னுருத்தித்
தார்மன்னுதாமரைக்கண்ணிடந்
தடமாமதில்சூழ்ந்தழகாயகச்சி
வர்மன்னுதென்னவனைமுனையிற்செருவில்
றிறல்வாட்டியதிண்சிலைகோன்
பார்மன்னுபல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகாமிதலே.

இப்பாகரத்தில் தென்னவனுகிய பாண்டியனை யுத்தத்தில் வென்றவன் பல்லவர்கோன் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதனால் பாண்டியநாடு வரையில் பல்லவர் ஒருக்கால் படையெடுத்துச்சென்றனரென தெரியவருகின்றது. இப்புத்தகம் 240-வது பக்கத்தில் நெடுமாறன் என்னும் பாண்டியனைக்குறித்துச்சொல்லியதைப் பார்க்கவும்.

ஸ்ரீ விண்ணகரப்பதிகம் 6-வது பாகம்.

திண்படைக்கோளரியினுருவாய்த்
திறலோன்கலஞ்செருவிலீடழித்துட்
புண்படப்பொழ்ந்தபிரான்றிடம்
பொருமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி

வெண்குடைநீழற்செங்கோனடப்ப
விடைவேல்கொடிவேற்படைமுன்னுயர்த்த
பண்புடைபல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகாமதுவே.

இப்பாகுரத்தில் விடைவேல்கொடிவேற் படையையுடைய பல்லவர்கோன் என்றமையினுல் பல்லவஅரசர்களுக்கு ரிஷபக்கொடியும் வேற்கொடியு முடையவர்களென்று இதனுல்தெரிகின்றது. வேற்கொடியை மீன்கொடியென கூறுவாருமுளர்.

வேந்தர் சார்த்திச்சொல்லப்பட்ட சிலையெழுபது.

50-வது செய்யுள் புகழ்ச்சிநிறப்பு.

வளமருவுமங்கையர்கோன்சொலத்தகு
பல்லவராயன்மரபிற்றோன்றிக்
களமருவுவேலையுடையகண்ணுதல்
கச்சியின்வாழ்காம்பரேறற்
குணமருவுமன்பினாயொளிர்மகுட
மணிபொற்றேருதவிமேனின்
தனமருவுதாமரைபோன்றுகவனியர்
கண்டத்தபுகழ்சாற்றற்பாற்றே.

(கருத்து) ஆதியில் இவ்வன்னிபர்கள் திருமங்கையாழ்வாரால் சொல்லிய பல்லவராயன் வம்சத்தில் தோன்றினவர்களாகி யேகாம்பரநாதர்க்குக் கிரீடம் தேர் முதலிவைகளைக்கொடுத்துப் புகழ்பெற்றதை யிவ்வளவென அளவிடக்கூடாதென்பதாம். இச்செய்யுளில் சொல்லியதற்கிணங்க,

இரட்டைப்புலவர்களுடைய
ஏகாம்பரநாதர் தெய்வீகவுலாவிலே

கலிவெண்பா 61.

சம்புருவத்தொருவன் சாற்றுமைக்காமென்றளித்த
செம்பொன்மகுடஞ் சேர்வித்து தம்போ.

ஸ்ரீ உலா 102-வது.

வடித்தசுடர்வேற்சம்பன் வாழ்மல்லிகாதன்
கொடுத்தகிருத்தேர்மேற்கொண்டு முடித்தஞ்தி.

ஷை. உலா 146-வது.

செம்பதுமைக்கேள்வன் திருமல்லிநாதனுயர்
சம்புபதிகல்குத்தடக்கோபோல் கம்பரே.

ஷை. உலா 151-வது.

வெஞ்சமரில்தத்துபரிபல்லவன்சம்புகுலப்பெருமான்
வைத்ததுலாபாரமண்டபத்தும்.

என்று கூறப்பட்டிருக்கின்றது.

சம்புகுலமெனினும செம்பியர்குலமெனினும் பல்லவர் குலமெனினும் பொருள் ஒன்றேயாம்.

இவ்விரட்டைப்புலவர் செய்த ஷைஉலாவைக் காஞ்சி புரத்தில் ஏகாம்பரசெம்பியன் அரசியற்றிய காலத்தில் அரங் கேற்றியதாக தொண்டமண்டல சதகத்தில் கூறப்பட்டிருக் கின்றது.

ஷை சதகம் 89-வது செய்யுள்.

மேதைப்புலவரெண்ணேகாம்பரச்சம்புமெச்சகெடுங்
காதைப்புலவரிரட்டையர்பாடுங்கல்லம்பகமும்
மோதக்கரிபுல்லேகம்பவாணருலாவுமந்த
மாதைப்பணிலும்பாரரட்டிங்கொண்டமண்டலமே.

காஞ்சிமாநகரத்திலே யுள்ள பாமேச்சுரவிண்ணகரத்தை ப்பற்றித் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனஞ் செய்த பாசுரங்களில் சொல்லிய பல்லவராயன் வம்சத்தில் வந்தவன் ஏகாம்பரச்செம்பியன். இவ்வாசனது பிரபாவத்தை இரட் டையர் அவனது சமுகத்திற் அரங்கேற்றிய உலாவென்று ஷைசெய்யுளில் ஏகாம்பரச்சம்பு மெச்சுங்கெடுங்காதைப் புல வர் இரட்டையர்பாடும் கல்லேகம்பவாணர் உலாவெனக்கூறி யிருக்கின்றது. சிலையெழுபதிலும் பல்லவராயன் வம்சத்தில் வந்த ஏகாம்பரச்செம்பியனையே ஒளிர்மகுடம்மணிப்பொன் தேர் உதவியவனென்று கூறப்பட்டிருக்கின்றது அன்றியும் பல்ல வராயன் கோவையிலும் "எறிக்கும்புகழ்காஞ்சி யேகாம்பரச்ச ம்பனெண்டிசையும் பொறிக்கும்புலிக்கொடியான்" என்றுகூ றியிருக்கின்றது ஷைதிருமங்கையாழ்வார்பிரபந்தம், இரட்டை யர் உலா, தொண்டமண்டலசதகம், சிலையெழுபது என்னும்

நூற்களில் பல்லவராயர்கள் காஞ்சிமாநகரிலுள்ள சிவாலயம் விஷ்ணுவாலயங்களுக்கு அநேகதிருப்பணிகளும் கயிங்கரியங்க ளுஞ்செய்வித்தார்களென்றுமேலே உதகரித்தசெய்யுள்களால் நன்குவினங்கும்.

திருகாவுக்கரசு நாயனர் சரித்திரகருக்கம்.

இந்நாயனர்காலத்தில் பல்லவசோழர் அரசாட்சிபிரபல மாக விருந்ததாக அவரது சரித்திரத்தால் தெரிகின்றது.

வேளாளகுலதிலகரான திருநாவுக்கரசு நாயனர் சைவ சமயத்தைவிட்டு சமணசமயத்தைக் கைக்கொண்டமையால் இவருக்குச் சூலைநோயுண்டாயிற்று. இந்நோயால் துன்பத்தை யனுபவிக்கும்போது இவர் சமயத்தவர்களாகிய சமண குருமார்கள் இவருக்குப் பலவகையான சிகிச்சைகளைச்செய் தும் நோய் தொலையவில்லை. இச்சூலைநோயானது தனது சகோதரிபாகிய திலகவதியாரால் நிவர்த்தியாகுமென்று நிச்ச யித்து கடலருகிற்கு வடகரையிலுள்ள திருவதிகை க்ஷேத்திர த்திலபரமசிவத்திற்குத் தொண்டுபூண்டிருப்பதையறிந்து அச் சேத்திரத்திற்குச் சென்று சகோதரியாரைவணங்கித் தனக்கு நேரிட்டிருக்கும் நோயின் கொடுமைபைச்சொல்லியபின்னர் திலகவதியார் தமது சகோதரருக்கு ஸ்ரீ பஞ்சாட்சரத்தை யோதி விபூதிகொடுத்தவுடனே சூலைநோய் நீங்கிற்று. நீங்க வே சமணமார்க்கத்தைவிட்டு முன்போலவேசைவசமயத்தை யனுட்டித்து, சகோதரியார் கட்டளைப்படி சிவசின்னங்களைத் தரித்துக்கொண்டு தேவாரப்பதிகங்களால்திருவீரட்டானேச் சுவரைப் பாடினர். இதையறிந்த சமணகுருவர்கள் இவர்கா லத்தில் பிரபலமாக அரசுபுரிந்திருந்த பல்லவ அரசனிடத் தில் போய்ச்சொன்னர்கள்.

திருநாவுக்கரசு நாயனர் புராணம்
84-வது செய்யுள்.

சொன்னவண்ணமேசெய்வதுணர்ந்தமன்னியோர்
முன்னர்சூழ்ந்தென்று முறைப்படவோமென மூயன்றே
யின்னதன்மையிலிருட் குழாஞ்செல்வதுபோல
மன்னனிய பல்லவனரில் வந்தணைந்தார்.

ஷை88-வது செய்யுள்.

விரையலங்கற் பல்லவனுமதுகேட்டு வெகுண்டெழுந்து
புரையுடையமணத்தினராய்ப் போவதற்குப் பொய்ப்பிணிகொண்
டுரைசிறக்க சமயத்தை யிழித்தொழியப்பெறுவதுவே
சரையிறவத்தீரதனக்கென் செய்வதெனக்கனன்றான்

பல்லவ அரசனிடத்தில் சமணர்கள் சொன்னவுடனே சைவசமயத்திற்குப்போய்ச்சேர்வதற்கு வியாதியென்று சாக்குசொல்லிப்போய்விட்டவனே யென்னசெய்வதென்ற அரசன் கோபித்துக்கேட்டபோது, அவர்கள் இன்னிவிதமான தண்டனைகள் செய்யவேண்டுமெனச்சொல்ல அரசனும் அவற்றிற்கிணங்கி அவைபோல் கொடியதண்டனைகளைச்செய்வித்தான். பரமசிவத்தின் திருவருளால் அத்தண்டியதண்டனைகள் திருநாவுக்கரசுநாயனரை யழுஞ்செய்யவில்லை. செய்யாமையால் மறுபடியும் பல்லவ அரசனிடத்தில் சமணர்கள் முறையிட்டார்கள்

பல்லவனுமதுகேட்டப்பாங்கிருந்தபாயுக்கை
வல்லமணர்தமைநோக்கி மற்றவனைச்செய்வதினிச்
சொல்லுமெனவதற்றூற்று தமக்குறுதியறியாத
புல்லறிவோரஞ்சாது நீற்றறையிலிடப்புகன்றார்.

முறையிட்டவுடனே பல்லவ அரசன் மற்றும் செய்யவேண்டியதென்னவென வினவ அவர்கள் நீற்றறை (கண்ணுப்புசுமுங்காளவாய்)யில் வைத்துப்படிசெல்லவே அரசனும் அதவகையாகச்செய்யும்படி திட்டஞ்செய்தான். திருநாவுக்கரசுநாயனரை அதுபோல சமணர்கள் செய்தசமயத்தில் பின்வரும் தேவாரப்பதிகத்தைப் பாடினார்.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனிலு
மூசிவண்டறைபொய்கையும்போன்றதே
யீசனெங்கையினையடிநீழலே.
யிறகிற்றீயினண் பாலிற்படெய்போன்
மறையின்னுளன் மாமணிசோதியான்
உறவுகோனட் டனர்வுயற்றிஞண்
முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே.

என்று அதிற்றறையினின்று பாடியபோது பரமேஸ்வரன் திருவருள்நோக்கால் அது ஒருதண்மையும் திருநாவுக்கரசுநாயனரைச் செய்யவில்லை.

ஷை புராணம் 145-வது செய்யுள்.

புல்லறிவிற்சமணர்க்காய்ப் பொல்லாங்குபுரிந்தொழுகும்
பல்லவனுக்தன்னுடைய பழவினைப்பாசம்பறிய
அல்லலொழிந்தங்கெய்தி யாண்டவரசனைப்பணிந்து
வல்லமணர்தமைநீத்து மழவிடையோன்முளைடைந்தான்,

இவ்வகையான மகத்துவங்களைப் பிரத்தியட்சத்தில் கண்கறித்த பல்லவச்சோழ சமணமதத்தை வெறுத்து சைவசமயத்தைத்தழுவி பரமசிவத்தின் திருவடியைச் சேர்ந்தானென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இவரது சரித்திரத்தால் பல்லவ அரசன் சமணமதத்தையனுட்டித்திருந்தானென்றுதெரிகின்றது. திருப்பாதிரிபுலியூர்திருவதிகை திருவிரட்டானம் முதலிய விடங்களுக்கிடையேசமணவிக்கிரங்களை யிப்போதுங்காணலாம். காஞ்சிமாநகரமானது பல்லவசோழ அரசர்களுக்குப்பிரதானகரமாயிருந்தபோது அதற்குக்கீழ்ப்பட்டதிருமலிபாடலிபுரம்(மாபலிபுரம்) முதலியநகரங்களிலுமிருந்தவர்கள் அரசன் எவ்வழி அவ்வழி குடியென்பதுபோல் ஒருகால் சமணசமயத்தையும் ஒருகால் சைவவிஷ்ணு சமயங்களையுந்தழுவீருந்தார்கள். இக்காலத்திலும் ஆங்கிலேயர் அரசாட்சியில்பலசமயங்களிருப்பதுபோல் அக்காலத்தும்சமயங்களிருந்தன. பூர்வத்திலே இச்சமயங்களைத்தழுவினர்களின் சந்ததியாரும் இக்காலத்து மிருக்கின்றனர்.

ஐயடிகள் காடவர்கோன் காயினர்

இந்தநாயனர் காஞ்சிபுரத்திலே பல்லவ அரசர்குலத்திலே பிறந்து வளர்ந்து அவ்விடத்தில் அரசுசெலுத்தியவர் இவர் எவ்வுயிர்களும் இம்மை மறுமை யின்பங்களையும்முத்தியையும் அடைதல்வேண்டுமென விருப்பிப்பிறதேசங்களையும் தமக்கு ஆதினப்படுத்தி சைவசமயத்தழைத்தோங்கவும் அரசர்கள் பணிசெய்யவும் அரசியற்றினர். இலகாலஞ்சென்றபின்னர் அரசுபுரிதல்துன்பமெனக்கருதி அதனைவெறுத்து இராஜ்யபாரத்தைத்தன் புத்திரன்மேல் ஏற்றிச் சிதம்பரமுதலிய சிவக்ஷேத்திரங்களுக்குச்சென்று திருப்பணிசெய்து ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் திருவெண்பா பாடி திருத்தொண்டுபுரிந்து சிவபதச்தையடைந்தார்.

டியார்புராணம் முதலாவது செய்யுள்

வையமிகழ்பல்லவர்தங்குலம்பின்வழித்தோன்றி
வெய்யகலியும்பகையும்மிகையொழுரும்வகையடக்கி
செய்யசடையவர் சைவத்திருநெறியாலரசளிப்பார்
ஐயடிகணீ யாலடிப்படுத்துஞ்செங்கோலார்.

இப்பல்லவஅரசர் சிதம்பரத்தில் பதியவெண்பா வருமாறு

ஓடுகின்றதீர்மையொழிதலுமேயுற்றருங்
கோடுகின்றார்சூம்புங்குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற்றம்பலமேகண்ணுமுணன்னெஞ்சே
இல்லச்சிற்றம்பலமேசேர்.

என்றுபாடினார்.

இதுபோலவே யேனையசிவஷேத்திரங்களையும் பாடியிருக்கின்றனர்.

கழற்சிங்கநாயனர் புராணம் முதலாவது செய்யுள்.

படிமிசைகிழந்ததொல்லைபல்லவகுலத்துவந்தார்
கடிமதின்முன்னஞ்செறுதலங்கைவார்சடையார்செய்ய
அடிமலரின்றிவேருன்றறிவினுட்குறியாநீண்மக்
கொடிமிசைநடுத்தானைமன்னர்கோகழற்சிங்கரென்பார்

காடவர்குரிசிலாங்கழற்பெருஞ்சிங்கர்தாமு
மாடகமேருவில்லாருருவிலுலமரிற்சென்று
கூடலர்மூவெயிலன்சாயவடபுலங்கவர்ந்துகொண்டு
நாடருநெறியில்லைநன்னெறிவளர்க்குகாலில்.

காடர்வகுலத்திலே தோன்றிய பல்லவஅரசனுடைய கழற்சிங்கநாயனர் பரமசிவனது திருவருள்வலிமையினால் வடபுலத்து அரசர்களைப்போரில் வென்று அவர்களது காகெளைக்கவர்ந்து எங்குஞ்சைவசமயந்தழைத்தோங்கும்படி அரசாண்டார்.

பல்லவஅரசர் தொன்றுதொட்டுள்ளசம்பிரதாயத்தினின்று வந்து சிதம்பரசேஷத்திரத்தைக்கட்டுவித்த இரணியவர்மச்சக்கிரவர்த்தியின் பரம்பரையில்வந்தமையாலும் தொல்லைபல்லவர்குலமென்றும் காடவர் குரிசிலென்றுங்கூறியுள்ளார். கௌடதேசத்தாரை கௌடர், காடவர், கௌலவண்டர் எனக்கூறுதலுண்டு.

சுந்தரமூர்த்திநாயனர் பல்லவ அரசரைப்பற்றி சொல்லிய தேவாரமும் அவரதுகாலநிரணயமும்

சுந்தரமூர்த்திநாயனர் "மூலமான திருத்தொண்டத்தொகைக்கு முதலடியார்" யிருப்பர் என்று சேக்கிழார்பெரிய புராணத்தில் கூறியிருப்பதால் இவரே மற்றவடியார்களுக்குப் பிற்பட்டவரெனத்தெளிவாகும். இவர்காஞ்சிபுரம் விஜயஞ் செய்து அங்குள்ள சிவஷேத்திரங்களைத்தரிசித்து தேவாரப்பதிகங்களைப்பாடியிருக்கின்றனர். அவைகளில் திருவேகம்பம் திருமேற்றளிஷேத்திரத்தைப்பற்றி பாடும் பதிகத்திலே.

10-வது தேவாரம்

பாரூர்பல்லவனூர்மதிட்காஞ்சிமாநகர்வாய்ச்
சீரூரும்புறவிற்றிருமேற்றளிச்சிவனே
யாரூரானடியானடித்தொண்டனூரன்சொன்ன
சீரூர்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே.

இத்தேவாரத்தில் பாரூர் பல்லவன் ஊர் மதில் காஞ்சிமாநகர் என்று கூறியிருத்தலால் சுந்தரமூர்த்திநாயனர் வர்த்தகாலத்தில் காஞ்சிமாநகரம் பல்லவர் ஆளுகையிலிருந்தென்று விளங்குகின்றது. இக்காயனர்க்குப்பின் காஞ்சிமாநகரத்தைப்பல்லவஅரசர்கள் ஏறக்குறைய 250 வரும் அரசபுரிந்தனர். இதன் பின்னர் முதல்வது குலோத்துங்கனுடைய இராஜகேசரிவர்மனால் காஞ்சீபுரம் ஜெயிக்கப்பட்டு இவனது ஆளுகையின் கீழ் பல்லவஅரசாட்சிமாறிவிட்டது. இவ்வரசன் காலத்திலும் இவனுக்குப்பின்வந்த அரசர்காலங்களிலும் ஏற்பட்ட சாஸனங்களினால் ஷைமாறுதல் கன்று விளங்கும், பின்னர் பல்லவ அரசபரம்பரையார் சோழப்பல்லவரென்றும் சம்புகுலப்பல்லவரென்றும் வழங்கிசிற்றரசர்களாயிருந்தார்களென்று ஷாசனங்களால் புலப்படும்.

பின்வருவது செந்தமிழிலுள்ளது.

"சேரமான் பெருமாள் நாயனர்வன்றொண்டர்பெருமை கேட்டு, இவரை நாடிச்சேர்ந்து இவருக்குத்திருப்பணிகள் செய்து காலும் இவருடன் திவ்யதேசயாத்திரைசெய்துவருங்கால், இருவருமாய்ப் பாண்டிநாட்டு இராஜதானியாகிய மது

ரைமாகசஞ்சார்த்தார். அப்பொழுது அவ்விடத்துத்தன் மாமனாகிய பாண்டியன் மனைக்கு வந்திருந்த சோழராஜனும், பாண்டியனும் காபஞரையும் சேரமானையும் எதிர்கொண்டு அழைத்துவந்து உபசரித்தார்கள். அக்காலத்து மதுரையிலாணை கொண்டிருந்த அரசன் வரகுணபாண்டியன் என்று.

திருவிளையாடர் புராணம் விறகுவிற்றபடலம் 2-வதுசெய்யுள்.

மன்றலந்தெரியன்மார்பன்வரகுணன்செங்கோலோச்சிப்
பொன்றலங்காலலானிற்பொலியுநானேமநாத
னென்றெருவிறல் யாழ்ப்பாணன் வடபுலத்திருந்தும்போந்து
வென்றிகொள் விருதினேடும் விஞ்சைசூழ்மதுரைசார்ந்தான்

என்னும் திருவிளையாடற் புராணச் செய்யுளால் தெரியவருகிறது. இப்பாட்டிற் கூறியிருக்கும் பானபத்திரரே சோமசுந்தரக்கடவுளிடம் திருமுகம் பெற்றுச் சேரமான் பெருமாள் நாயனாரை நாடிப்பரிசுபெற்றவர். சேரமான் பெருமாளோடும் பலபகிகளைத் தரிசித்து அவருடன் மேல்கட்டுக்குச்சென்று அவ்வாசனால் வெகுமதிக்கப்பட்டுத் திருப்பித்திருவாரூர் சென்றடைந்தார். கொஞ்சகாலத்துக்குப்பின் சுந்தரமூர்த்திகள்கைலாசநாதன் திருவடியடைய இச்சித்தவெள்ளானையின் மேல்ஏறி, சேரமான்பெருமாளோடுஇவ்வுலகைநீத்தார். இவ்வாறுசெய்து போந்த இம்மகான்காலம் இன்னதென்றுநிர்ணயிக்கச்சற்று முயல்வோம். சுந்தரமூர்த்திகள் தம்காலத்தின் அரசுவளமைபைக்குறித்து,

பெரியபுராணம், கழறிற்றிலூர்ப்பூசனம் 91-வது கவி

தென்னர்கோன்மகளாரைத்திருவேட்முன்னரே
தொன்மதுரைநகரின்கணினிருந்தசோழனார்
அன்னவர்களுடன்கூடவேயவருங்கூடி
மன்னுதிருவாலவாய்மணிக்கோவில்வந்தணைந்தார்.

கோயிலபத்து 4-வது தேவாரம்

கருமையார்தருமஞர்தமர்நம்மைக்கட்டியகட்டறுப்பிப்பானை
யருமையார்தன்னுலகந்தருவானேமண்ணுலகங்காவல்பூண்ட
வரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடாமன்னவரை மறுக்குஞ்செ
[ய்யும்
பெருமையாற்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானேப்பெற்றுமன்றே

என்று தம்தேவாரத்தக்கூறியிருப்பதைக்கொண்டு, அக்காலத்துப் பல்லவராஜர்களுடைய அரசாட்சிதளர்வடைய ஆரம்பித்துவிட்டதென்று அறிபலாம். பல்லவசார்வபௌமத்துவம் குன்றவே சோழர்களும் பாண்டியர்களும் தலையெடுக்கத்தணிக்தார்கள் என்பது உதயேந்திரம் சாஸனத்தால் தெரியவருகிறது அச்சாஸனப்படி திரமிள அரசர்கள் தம்முளொத்துப் பல்லவஅரசன்மீது படையெடுத்துச்சென்றதாகவும் அப்பொழுது உதயசந்திரன் என்னும் படைத்தலைவன் அவர்களோடு நிம்பவனம், சூதவனம், அழுந்தூர், மண்ணைமுதலானவிடங்களிற் பொருந்தான் என்றும் கூறியிருக்கிறது. பின்னும் இரண்டாம் பிருதிவிபதியின் சாஸனத்தில் (உதயேந்திரம் சாசனம்) தன்பாட்டனாகிய முதற்பிருதிவிபதி வரகுணனோடு வேமபில் அல்லதுவைம்பல்குழி (இஃதுஅதன்றிபாயிருக்கலாம்) என்னுமிடத்துப்பொருத்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறான்.

இவ்வரகுணன் சாஸனம் ஒன்று திருச்சிராப்பள்ளிகோயிலில் மாறஞ்சடையனென்னும் பாண்டியவரசன் காலத்தில் வரையப்பட்டிருக்கிறது 9 இவ்வரகுணனும் மாறஞ்சடையனும் சமகாலத்தவர்களென்பது இதனால் ஏற்படுகிறதுமன்றி, வரகுணன் மாறஞ்சடையனுக்கினியவனும் அவனுக்கேதோ உறவுமுடையவனுமாவனென்பதும் தோன்றுகிறது. இம்மாறஞ்சடையான் வென்றபோர்களைக்குறித்து பாக்களாகப் பலரும்பாடி இருநூறாண்டுகளிற் பரிவேள்வாழ்ந்து இப்பொழுது இத்தாண்கள் பரிதியப்பத்தினருகிலிருக்கும் செந்தலையென்னுமிராமத்துப் பிடாரிகோயிலிலிருக்கிறது. அதில் இவ்வரசன் அழுந்தூரிலும் மணலூரிலும் போர்புரிந்தானென்று சொல்லியிருக்கிறது. 10 ஆகவே உதயேந்திரம் சாஸனத்திற் கூறியசண்டைகளிற் சில

(9) கிரிஸ்டியன் காலேஜ் மாகசின். மேமீ 1905 வரு

(10) " * * உலகுதார்—தோழாதிமாவழுந்தச்செங்குருதி
மண்பறந்தலூழ்த்தியுரென்னுமூர்" என்றும்,
" * * * விழிகட்பேய்ப்—புண்ணைநேந்துகையும்பப் போர்மணலூர்
வென்றதே, மண்ணைநேந்தசீர்மாறன்வான்." என்றும்எழுதியுள்ளன

வரகுணன், மாறஞ்சடையர்களாலும் செய்யப்பட்டன வெனவே, இரண்டு சாஸனத்தில் கூறிய சண்டைகள் ஒன்றுதான் என்றுதுணியலாம் அப்படித்துணியக் காணமுமூன்று. பெரியபுராணத்துட் கூறியவாறு சோழன் பாண்டியன்பெண்ணை மணந்து இருவரும் ஒன்றுகூடிப் பல்லவ சார்வபௌமத்தைத் தாக்கி வாதினமடைய எத்தனித்ததாகத் தோற்றுகிறது. இவ்வாறு பாண்டியன்பெண்ணைச்சோழனொருவன் அக்காலத்துக்கவியானம்செய்துகொண்டானென்பது கீழேகொடுத்திருக்கும் திருச்செந்துறைச் சாஸனத்தின் முற்பகுதியால் தெரியவரும். 11 வரகுணன்காலம் மேற்கூறியசாஸனங்களால் உத்தேசம் கி.பி. 850 என்று கொள்ளலாம்; அப்போது அரசாண்டசோழவரசன் விஜயாலயனுயிருத்தல்வேண்டும். ஏனெனில் இரண்டாம் பிருதிவிபதியில் சார்வபௌம சக்கிரவர்த்தியாகிய முதற்பராந்தகன் 9-வது நூற்றாண்டின்முதலில் அரசாளத்தொடங்கினனென்றல் இவன்பாட்டனாகிய விஜயாலயன் உத்தேசம் கி. பி. 850-ல் இருந்திருக்கக்கூடும். இவ்விஜயாலயன் ஒரு பரகேசரிவர்மன் என்பது "பெரிய லேய்டன்" சாஸனத்தால் விளங்கும். திருச்செந்துறையிலுள்ள சாஸனத்துப்பரகேசரியைவிஜயாலயன் என்று கொண்டால், 12 "சோழபெருமானடிகள்மகனர்—" ஆதித்தனும் "தென்னவனிளங்கோவேள்"—வரகுணனுமாவர்கள் (மாறன்சடையன் பெரியவனுயிருக்கவரகுணன் இளங்கோவேளென்றேசொல்லத்தக்கான்). பல்லவராஜன்மேல் ஓட்டையெடுத்துச்சென்ற திரிபுள அரசர்கள் விஜயாலயன், மாறஞ்சடையன் இவர்கள் இருவர்களாகிய வரகுணனும் (ஒருகால்) ஆதித்தனுமாயிருக்கலாம். இக்காலமுதற்றான் சோழர்கள்சார்வபௌமத்துவத்தையடைந்தார்கள். பல்லவர்களைத் தம்மடிப்படி படித்தாழிடனும் தம்

அன்றுமுதல்.

(11) ஸ்வஸ்திஸ்ரீகோ (ஒ) பரகேசரிபன்மர்க்குயான்றொடை-ஆவது இவ்வாண்டு சோழபெருமானடிகள் மகனர் அரிகுலகேசரியார் தேவியார் தென்னவனிளங்கோவேளார் மகளார் பூதி ஆதிச்சபிடாரியார் பிரமதேயம் ஈசானமங்கலத்து திருச்செந்துறை தாம் எடுப்பிச்ச கற்றளி பெருமானடிகளுக்கு * *. .

(12) இவனபெயருகு ஏற்ப இச்சாஸனத்துக்கூறு தென்னவனிளங்கோவேளின் பெண்பெயரிலும் ஆதித்தனென்னும் பெயர்வருதலும்காண்க.

அவர்கள் கிழிருச்கவில்லை. பாண்டியரும் சோழரும் அக்காலத்து அக்கியோன்னியமாயிருந்தார்கள் என்பதற்குச்சான்று பாண்டியர்களில் மாறன்சடையன்சாஸனம் திருமாலிருஞ்சோலைமலையுள்ளசெந்தலை, திருப்பரங்குன்றம், திருக்கோவிணம், கர்த்தமலை குடுமியான்மலை முதலிய விடங்களிற் காணப்படுகின்றன. பாண்டியர்களையும் சிக்கிரமே சோழர்கள் அடிப்படுத்திஞர் என்பது சொல்லவேண்டுவதில்லை.

மேற்கூறியவைகளைக்கொண்டு சுந்தரமூர்த்திகள்பல்லவசக்கரவர்த்திகள் நாளர்பலையண்டதகாலமுமசோழபாண்டியர்கள் தம்முள் ஒத்திருந்து பல்லவ சார்வபௌமத்தினின்றும் விடுவித்துக்கொண்டகாலமும், வரகுணன் ஆண்டகாலமும் ஒன்றே என்று பெறுதலின், இவைவெல்லாம் கடந்தது உத்தேசம் கி.பி. 850 என்றும் ஒருவாறுஸ்தாபிக்கலாம். இதுகிற்க,

திருவிடைமருதூர்ச்சாஸனம்ஒன்றில் வன்றொண்டன் என்கிறபெயர் சாமானியமனிதன் ஒருவன்முதல் ராஜராஜன் காலத்துச்சரித்திருந்தான் என்று தெரியவருகிறது. இதுவன்றி இவ்வரசனே இக்காயனுர் விக்கிரகத்துக்குப் பலகன்கொடைகள் அளித்திருக்கிறன். இவைகளால் இக்காயனுர்பெயர்இவன் காலத்துக்கு முற்பட்டே, பூஜிக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டது என்றவற்படுகிறது. இவ்வாறு சுந்தரசாரணமாக மூன்று தான்கு தலைமுறையாகவேண்டும். அப்படியே மூன்றுதான்கு தலைமுறைதான் ஆயிருக்கிறது என்பதுமேற்கூறியவைகளால் நன்குவிளங்கும்.

இக்காயனுர் காலத்திருந்தவர் காரிங்கமூனையரையர். திருவாலூர்ச் சாஸனத்திற்கூறிய காரிம்மவர்மன் கன்னரதேவன் 17-வது ஆண்டிலிருந்தான்; அதாவது கி. பி. 947 கி. பி. 954-க்கு சரியான 875 சகவருஷத்திலிருந்த மூனையதியரையன்குலமாணிக்கன் இராமதேவனை மூற்கூறிய காரிங்கமூனைய

ரையனாகிய மலமாணிக்கன் இராமனுக்கு மூன்றுதலைமுறைமுன் னவராயிருக்கவேண்டும் (சுக்தரர்காலம் 850 -கி.பி. என்று கொள்ளின், 9[illegible]கி. பி. க்கும் கடப்பட்ட 100 வருஷம் மூன்றுதலைமுறையாதல் பற்றி இத்துணிவுகொள்ளப்பட்டது) இம்மூன்றரையரையர்கள் மேற்சொன்னபடி இராமன் நரசிம்மன் என்னும் பெயர், மூன்றையே தரித்துவந்ததாக ஊகிக்கின், குல மாணிக்கன் இராமனுக்கு மூன்றுதலைமுறையின் முன்னே னும் நரசிங்கனென்னும் பெயரையையுடையவனுமாவன். ஒரு க்கால் இவன்தான் நரசிங்கமுனையரையராயனராயிருப்பானே வென்றுஞ் சங்கிக்கலாம்

[illegible]யர் விறன்மிண்டர் மானக்கஞ்சாறர், ஏயர்கோன்கலிக்காமர் பெருமிழலைக்குறும்பர், கோட்புலி (இவர் இருபுதல்வியர்சிங் கடி, வனப்பகை) சடையனர், இசைஞானியர் எனவேஇவர்கள் காலமும் சற்றேறக்குறைய 9-வதுநூற்றாண்டின் நடுவாயிருத் தல்வேண்டும்."

பல்லவர் (வன்னியர்) உற்பத்தியும் அவர்களின் வம்சா வளிமுதலியவையும் இன்னின்ன அரசர்கள் இன்னின்ன ஆண்டுகளில் அரசபுரிந்தன என்றும் வடமொழி தென் மொழி முதலிய பிரமாணங்களாலும் சாஸனங்களாலும் மேலே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வனம் நிரூபிக்கப் பட்டவைகளில் சிவனடியார்கள் அறுபத்து மூவரில் வன் றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனார் அடியார்களுக்கெ ல்லாம் கடையிலிருந்தவரென்று அவர் திருவாய்மலர்ந்தை ளிய திருத்தொண்டத் தொகையே போதியேசாட்சியாம். இந்தநாயனர் திருவொற்றியூரை விட்டு திருமூல்லைவாயில் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து, தேவாரப்பதிகங்கள் ஓதி காஞ்சீமாநகரத்திற்கு விஜயஞ்செய்து திருவேகம்பம்திரு மேற்றளிக்ஷேத்திரத்தைப்பற்றி பாடியபதிகத்திலே "பாரூர் பல்லவனார் மதில் காஞ்சீமாநகர்" என்று அருளியிருக்கின் றமையால் அவர்காலத்திற்கு அநேகநூற்றாண்டுகளுக்குமுன் னரே காஞ்சீமாநகரமானது பல்லவ அரசர்களால் ஆளப்ப

ட்டு மாட்சிமை பொருந்தியிருந்ததென்று தெரியவருகின்றது. பல்லவ அரசர்களின் வம்சத்தவர் அக்காள்தெலுகு இக்காள் காறுமிருக்கின்றனர். அவ்வரசர்களால் கட்டப்பட்ட ஆலயங் களும் கோபுரங்களும் குன்றுமேலிட்ட தீபம்போல் விளங்கு கின்றன. காஞ்சிபல்லவ (பள்ளி) கோபுரமானது வன்னியர் ஆட்சியிலிருப்பது உலகப்பிரசித்தம். பல்லவர் மூலத்தவரென வழங்குமமரபார்தொண்டமண்டலத்திலேயுள்ள நாடுகளை களில்வசித்திருக்கின்றனர். இவர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு மன்னவேடென்று சொல்லப்படும். இவ்வன்னியும் சுந்தரமூர்த் தியனர் திம்பாக்ஷேத்திரத்திலே அருளியதெவராத்திலே "மண் ணுலகம் காவல்பூண்டவருமையால் பல்லவர்க்குத்திறைகொ டாதமன்னவரை" என்று கூறியிருப்பதால் சோழபாண்டியநா டுகள் பல்லவ அரசர் ஆளுகையின் கீழிருந்ததென்றும் னர் மேற்கூறிய சாஸனங்களின்படிசோழபாண்டியஅரசர்கள் பலலவர் ஆளுகையிலிருந்து விலகிக்கொண்டார்களென்றும் தெரியவருகின்றது. சுந்தரமூர்த்திநாயனர் காலத்திற்குப்பின் சிலநூற்றாண்டுவரையில் தொண்டமண்டலம் பல்லவர் ஆட்சியிலிருந்தது. சளுக்கியவம்சத்து அரசனுக்கும் சோழன் புத்திரிக்கும் உற்பவித்த இராஜகேசரிவர்மனை முதலாவது குலோத்துங்கசோழன் அதிகாரத்திற்குட்பட்டு தொண்டம ண்டலமென்றும் பெயர்நீங்கி ஜயங்கொண்ட சோழமண்ட லமென்று அழைக்கப்பட்டுவந்தது. இக்காலத்தில் பல்லவ அ சர்களுக்குள் மூடிமன்னராயும் குறுநிலமன்னராயுமிருந்தவ ர்கள் சோழபல்லவ[illegible]ய இராஜகேசரிவர்மன் ஆட்சிக் குட்பட்டு சிற்றரசர்களாயும் இராஜநிர்வாகிகளாயும் காணியா ட்சிக்காராயுமாய்விட்டனர். ஜயங்கொண்டசோழமண்டலமா னது சிலநூற்றாண்டுவரையில் சோழபல்லவர் ஆளுகையில் மகாமெப்புற்று கான்குமண்டலங்களையும் தனக்குக்கீழ்ப்படித் தியிருந்தது. பல்லவர்களின் ஆளுகையெவ்வாறு குறைவுபட் டுவந்ததோ அவ்வாறே சம்புகுலப்பல்லவர் ஆளுகையும் குறை வுபட்டு ஆந்திர அரசர் ஆளுகையின்கீழ் கி. பி. 1459 முதல் கி. பி. 1600 வரையிலிருந்ததென்று திருநெல்வேலி மதுரை

திரிச்சுளாப்பள்ளி செங்கல்பட்டு முலகிய ஜில்லாக்களிலுள்ள விசாலமான நகரில் கூறியிருக்கிற மல்லிகார்சுன தேவமகாராயர்கிருஷ்ணதேவராயர்சதாசிவதேவமகாராயர்முதலியவர்கள் அரசியற்றினார்களென்றும் அவர்கள் ஆளுகையின்கீழ்ப்பு குலப்பல்லவர்கள் சிற்றரசர்களாயும் இராஜநிர்வாகிகளாயுமிருந்தார்களென்றுந்தெரியவருகின்றது. எங்கள்மெனின் கிருஷ்ண தேவமகாராயர்ஆளுகையில் 255-256-வதுபக்கத்தில்கூறியகாக்தவராயன்சேக்குராயன் என்னுங்குறுநிலமன்னர் ஷைர்யர் அவர்களுக்குச்செலுத்தவேண்டிய திறையைச்செலுத்தாமையினால் அவர்கள்மீது படையெடுத்து ஜெயித்ததாகச்சொல்லப்பட்டிருக்கிறது ஷைராயர்கள் ஆளுகையில் எற்பட்ட வில்லவனல்லூர், வைத்தில்வரன்கோவில் தாம்பரசாலைனங்களில் கூறியிருப்பதைப்பார்த்தால் சம்புகுலப்பல்லவராயிய வன்னியர்நிலமைகன்குவினங்கும். இச்சாசனங்கள், இவ்வத்தியாயத்தின் முடிவில் காணலாம்.

திருவண்ணுமலை வல்லாளமகாராஜன்

சோராமீடு அரசனுடைய வல்லாளமகாராஜன் தொண்டமண்டலத்திலே திருவண்ணுமலை க்ஷேத்திரத்திலே அரசியற்றினனென்று அச்சேத்திரமான் மியங்கூறுகின்றது.

கொங்குராட்டின் சிறப்புவருமாறு

பேருர்புராணம் திருநாட்டுப்படலம் 3-வது செய்யுள்.

பரிதியொருவெண்குடைநிழற்கவரிவிரும்
முருகெழுகனற்புகல்வனுண்டவொருதேர்
விருடருயிர்த்தவர்களாண்டவிருநாட்டின்
குருவெனவினங்கியதுகொங்குவளநாடு.

இ-ள் சூரியசந்திரர்கள் பிரகாசிக்க அன்னோருக்குப் பிரகாசத்தை கல்கிய அக்கிருமாகனால் ஆளப்பட்டுள்ள சிறப்பினால் சூரியகுலத்தவரும் சந்திரகுலத்தவரும் ஆண்ட நாவலும் நாட்டிற்கும் குருவைப்போலும் சிரேட்டமுடையது வளமைபெற்றகொங்குவளநாடு.

இச்செய்யுளில் கனற்புகல்வனென்றமையால் வல்லாளமகாராஜனும் அக்கிருலத்தவனென்றும் சோநாட்டரசனென்றும் பின்வரும் பிரமாணத்தால் விளங்கும்.

அருணசலபுராணம் பாயிரம் 23-வது செய்யுள்

அங்கிதலமோங்கவருவல்லாள
பூபன்றனரியதொண்டுக்
துங்கமிருத்தீர்த்தமுடன்திருமலையை
வலம்புரியுஞ்சுடரோன்பெறும்
பொங்குபிரதத்தெனுமினீர்த்த
வாறுபுளகாதியாவு
மிங்கிதஞ்சேர்வடகலையிலிருத்தனைத்
தென்கலையாலியம்பலுற்றேன்.

(இ-ள்) உலகின்கண் ஓங்குமுக்குல வேந்தருள் அக்கிருலோத்துங்கனென்று வழங்குஞ் சோருலாதிபனுகிய வல்லாளராஜனுக்குப் பின்னோகளிக்கி முத்தியளித்ததும், அத்தலத்திலோங்குதீர்த்தங்களின் பெருமையும், அவ்வருணசலத்தை வலஞ்செய்பவர்கள், பெறும்பேறும், கதிரவனுடைய கர்வத்தையடக்கி முத்தியளித்த வாறும், பிரதாபம்பொருந்திய பிரதத்தனென்னும் வேந்தனது சரிதையும், பாவம் தீர்த்தசரிதையும், புழுகுபூசையாக விருந்து மூன்றுலோகங்களிலுஞ் சஞ்சரித்துவந்த புளகாதிபனென்னும் அரக்கனுடைய சரிதமும் இங்கிதமிருந்த வடமொழியிலிருந்ததைத் தென்மொழியாகிய தமிழினற் சொல்லத்தொடங்கினேன். —எ-று

இச்செய்யுள் வல்லாளபூபன் அக்கிருலோத்துங்கனென தெரிவிக்கின்றது.

ஷைபுராணம் வல்லாளமகாராஜன்சருக்கம் 3-வது செய்யுள்.

இத்தகைசிறப்பினவித்திருநகருக்
கிறைவன்வல்லாளனென்றிசைக்குஞ்
சத்தியமொழியானற்குணமுடையான்
தன்னுயிர்மன்னுயிராகப்
பத்தியாய்காலும்பாதுகாத்திடுவோன்
பகருஞ்சோனற்குலத்தோன்
அத்தனுடியைவித்தமுந்துதித்தே
யவர்திருப்பணிசெயவந்தோன்.

திருவண்ணுமலை (அருணசலம்) என்னும் நகருக்கு அரசனுகியவல்லாளமகாராஜன் சோனற்குலத்தோனென்று இச்செய்யுள் தெரிவிக்கின்றது.

பிழை சருக்கம் 19-வதுசெய்யுள்.

தலத்தின்மேன்மகிமையுற்றதாபதர்புகழுமாளவம்
புலத்தினேவெம்றமோனர்புகலுமூவகையுள்வன்னி
குலத்தினில்வருமன்னரின்கோதிலாத்தருமக்கேட்டக்
கலத்தினேயறியவக்தோம்மின்றிடாயெனவுரைப்பான்.

(இ-ள்) புவனத்தின் கண்மகிமைபொருந்திய முனிவர்களும் புகழத்தக்க ஐம்புலனுகர்ச்சிகளையும் வென்று மெய்யுணர்ச்சி பெற்ற புண்ணியர்களால் சொல்லப்பட்ட சோமசூரியாக்கினி யென்னுமுக்குலத்தாசருள் அக்கினி (வன்னி) குலத்திலுதித்த அரசே! நின்குற்றமற்ற மகதானத்தின் பெருமைபைக்கே ள்வியுற்று அதை அறியும் பொருட்டு வந்தோம்ஆதலால் உன் கருத்தை வெளியிடுவாயென்று காதமுனிவர்கேட்க அரசன் சொல்லுவான்.

வல்லாளமகார ஜனை அக்கிகுலமென்றும் சேரன்சற்குல மென்றும்வன்னிகுலமென்றும்மைசெய்யுள்கூறுகின்றன. வல் லாளமகாராஜனுக்குச் சகலசம்பத்திருந்தும் "மக்கட்பேற்றில் பெறும்பேறில்லை" என்றதற்கிணங்க தனக்கோருமகவில்லா மல் வருந்தியிருப்பதைச்சோதிக்கும்பொருட்டு சிவபெருமான் சங்கமராய் வேடம்பூண்டு வதைசெய்யுங்காமதேனுவை மாற்று தல் செய்பவர் விலைமாதர் அவர்களில்ஒருவரைத்தருவித்துக் கொடுக்கும்படி வல்லாளமகாராஜனை வினவ, அவ்வாறே அர சன் மந்திரிமுகாந்தியோருக்குக்கட்டளையிட்டனுப்ப அவர்கள் தேடிய தாசிகள் இல்லக்தோறும் சங்கமரிருப்பதால் விலை மாதர் கிடைப்பது கூடாமையென்று சொல்ல அரசன் மனக்கலக்கமுற்று யாதுஞ்செய்தற்கு அறியாதும் தன்மனைவியர் களிலொருவரை சங்கமரிடம் சக்தோஷமாய்ச் செல்லும்படி கட்டளையிட்டவண்ணமே அம்மாது சிரோமணிஜங்கமரிடம் போனகாலையில் அவர் யோகநித்திரையிலிருப்பதைக் கண்டு அரசன் கொண்டவாய்மைக்குத் தவறுதல்வரக்கூடாதென்று ஆங்குமடந்தை சாந்தமாய் மேல்விழுந்து தழுவ அப்பரமசிவம் மூழ்தைவடிவாகி அழுவதானர். பரமசிவத்தின் செயலே யறிந்த அரசன் ஆண்டவன்திருவிளையாடலென்று உணர்ந்துதன்னி

ருகரங்களாலும் குழந்தையையெடுத்து அணைத்து முத்தமி ட்டு உச்சிமோந்து பேரானந்தங்கொண்டிருக்கையில் சிவபெ ருமான் மாயமாய் மறைந்தார். மறையவே எங்களுக்கென்ன கதியென்று மனிவியரும் தானும்துன்பக்கடலில் அழுந்தினர் கள். பின்னும் அரசன் பரமபரனே அடியேன் செங்கோலை ஏற்றுக்கொள்ளும்படி ஓர் புதல்வனே கடாக்ஷித்தருளுமென்று தொழுதனன்.

கந்தமன்னுகேண்மோசதமக்கியாமேயானேம்
கந்தத்தினுமுனக்கேயதைவிதிமுடிப்போமென்று
சந்திரசேகரனர்வாழ்த்திச்சார்த்தனர்கயிலேபின்னர்
பந்தமாயுலகைவேர்த்தன் பண்புடனண்டுவாழ்ந்தான்

அரசே; யாம் உனக்குப் பிள்ளையாய் தோன்றினபடி யால் உன் அந்தியத்தில் வேதவிதியிற்கூறிய சடங்குகளைச்செ ய்துவருவோம் என்றுசிவபெருமான்கூறிச்சென்றனர், வல்லாள மகாராஜன் அருணையம்பதி ஆண்டு வாழ்ந்துவந்தா னென்று புராணங்கூறுகின்றது. இவ்வரசனால் ஓர் கோபுரம் திருவண் ணுமலையில் கட்டப்பட்டு வல்லாளமகாராஜன் கோபுரமென அழைக்கப்படுகின்றது. திருவண்ணுமலைபுற்சவங்களில் வல் லாளராஜனுக்கு விதிப்படி ஈஸ்வரன் கருமஞ்செய்கிறவோர் உற்சவம் அவ்வரசன் மரபினராகியவன்னியரால் நடத்தப்பட் டுவருகின்றது.

இத்தலத்தலம் திருவண்ணுமலையில் தைமீ சுக்கிரவா ரம் பிரதமைதிதி புஷ்பாகர்ஷணம் இவைகூடிய சுபதினத்தில் நடத்தப்பட்டுவருகிறது. வைமீ சுக்கிரவாரம் சந்திரசேகரசு வாமி ஈசானியதீர்த்தத்திற்கு உற்சவகோலமாய்ச்சென்றுபகல் 12 மணிக்குத்தீர்த்தவாரியாகி அவ்விடம் செட்டிகள் மண்ட பத்தில் அபிஷேகஆராதனை நடத்தப்பட்டு கேளிக்கையுடன் சுவாமிசுமார் இரவு8மணிக்கு மண்டபத்தைவிட்டெழுந்தருளி மேளவாத்தியங்களுடன் புறப்பாடாகிவரும்போது முசாபர்ப்ப் காளவிற்கருகில் போஸ்ட்ஆபீஸ் சந்திப்பில் வைமீ தேவஸ்தா னம் அங்கசாலிசிப்பந்தியொருவன் தடியில் இழுவோலையைக்கா ட்டி நடக்கும்பலில் சாஷ்டாங்கஞ்செய்து கீழேவிழ, கோயில் அதிகாரி

கள் விசாரித்து ஓலைவாசிக்கும் கணக்கப்பிள்ளைக்குப்பட்டு பரிவட்டம் கட்டியோலையவாசிக்கும்படிசெய்வார்கள். வாசித்தானபிறகு சுவாமிகோவிலுக்குள்சேர்வார்.

வல்லாளமகாராஜன் கொங்குநாட்டரசமரபைச்சேர்ந்தவனென்றும் வன்னியகுலத்தவனென்றும் திருவண்ணுமலையில் அரசுபுரிகையில் கோபுரமுதலிய கயிற்கரியங்களைச்செய்தவனென்றும் இவ்வரசன் விரசோற்சம் அடைந்ததை, ஒவ்வொரு மாசத்தில் ஓர் உற்சவம் பிரதிவருஷம் நடத்தப்பட்டுவருகிறதென்றும் மேற்கூறிய பிரமாணங்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

முடிமன்னர்குறுநிலமன்னர்

பிராமணரிகன்கு வருணக்களில் க்ஷத்திரியர்க்குள்சோமகுரியாக்கினியென்று மூன்றுபிரிவினராக விரிப்பினும் இவர்கள் ஒருகுலமென்று இப்புத்தகத்தில் 169 170-வது பக்கங்களில் கன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. க்ஷத்திரியர்கள் ராஜா மகாராஜா சக்கிரவர்த்தியெனமுவகையாகப்பகுக்கப்பட்டுள்ளார். இப்பகுப்புக்களோப்பற்றி 172-ம் பக்கத்தில்காட்டியவாசிஷ்டத்தில் "உயர் வண்ணபராவோமர்த்த நிலைசற்றுதலினுல் அதிகநிலைமன்னராவோம் அதுவுஞ்சிறிதாம் புவியனைத்துக்கரசர்சர்வோம்" என்றும்கம்பராமாயணத்தில் "படிமன்னிவாழும்பலவன்னியர் மண்டலீகர் முடிமன்னரெல்லரும்" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது இவற்றில் ராஜா (வன்னியர்) மகாராஜா (அதிகநிலைமன்னர் சக்கிரவர்த்தி புவியனைத்துக்குமரசன்) வன்னியர் மண்டலீகர்முடிமன்னர் இம்மொழிகளும் ராஜா மகாராஜாசக்கிரவர்த்தியென்னும் பொருளையுதரும். இந்த மூன்று பிரிவுகளும் குறுநிலமன்னர், முடிமன்னர் என்கிற பகுப்பிலடங்கும். இவற்றின் பேதங்களை 59 63-வது பக்கங்களில் காட்டியதொல்காப்பியசூத்திரங்களால்தெளிந்துகொள்க. இவர்களில்க்ஷத்திரியகுலகுறுநிலமன்னன் தனதுபராக்கிரமத்தினுலும்ஜெபத்தினுலும் முடிமன்னன் ஆகல் கூடும் இவ்விதத்தன்மையில்லாதவோர்முடிமன்னன் குறுநிலமன்னனுதல்கூடும். இவர்கள் தங்கள் நிலையில்உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் க்ஷத்திரிய குலத்தவர் (அரசர்)சேயாவர். பிங்கலநிகண்டிலும் இலாகாரத்திலும் குறும்பர் புரோசர் குறுநிலமன்னர் வேளிர் முதலியசொற்கள் இந்நாளைக்குறித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

தொண்டமண்டலத்திலே யேகாக்கிராதிபதிகளாகப் பூர்வத்திலே ஆளுஞ்செய்த பல்லவ அரசர் தொண்டமண்டலத்தைமிருபத்துநாலு கோட்டகங்களாகவகுத்து ஒவ்வொரு கோட்டத்திலும் சிற்றரசர் (குறுநிலமன்னரே குறும்பரென மருவியது) முடிமன்னரின் கட்டளைக்குட்பட்டு கோட்டத்தில் அடங்கியிருக்கவே அரசுபுரிந்து வந்தனர். தற்காலம் ஆங்கிலேயர் ஆளுகையில் இராஜதானி ஜில்லா தாலுக்காவெனவகுத்துள்ளதுபோல் செங்கொண்ட சோழமண்டல விக்கிரம தொண்டவளாடி காஞ்சிதேசத்தில் புழற்கோட்டம் கையாறுகாட்டில்" என்று செப்பேட்டிலிருத்தலாலும் இதுபோல் பூர்வசாசனங்களிலெல்லாம் இன்னமண்டலம் இன்னகோட்டம் இன்னகாடென்று வரைந்திருத்தலாலும் தொண்டமண்டலமானது இருபத்துநாலு கோட்டங்களாகவகுத்து ஒவ்வொரு நிலும் குறும்பர் அரசுபுரிந்து வந்தனர். இக்கோட்டங்கள் தற்காலம் அழிவுற்றிருப்பினும் அவைகள் இன்றுசொன்பதற்கு அறிகுறிகள் அவ்வக்கோட்டங்களிலிருக்கின்றன. உண்மையிவ்வாறிருக்க, குறும்பாயெகுறுவேமன்னவரை யோர்வகை காட்டுமுறட்டி சாதியென்றும் குறும்பிடையரென்றும் ஆங்கிலேயபுத்தகங்களில் "TheCurumber a pastoral and half savage tribe" என்று எழுதப்பட்டிருக்கிறது. குறும்பரேமேய்க்குமு இடையரே குறும்பிடையர் அல்லது குறும்பரென்றகாலம் வழங்குதலுண்டு

முதலாவது தலோத்துங்கசோழன் அபிமானபுத்திரனுமிரண்டாஞ்சக்கிரவர்த்தி 11-வதுநூற்றண்டின் தொடக்கத்தில் பல்லவசோழ அரசர்களின் இராஜதானியாயிய காஞ்சிபுரத்தைக்கைப்பற்றியபின்னர் இருபத்துநாலு கோட்டங்களினுள்ள குறுநிலமன்னர் (குறும்பர்) எல்லோரும் சக்கிரவர்த்தியின் ஆக்கினைக்குக்கீழ்ப்படியாமல் எதிர்த்திருந்தனர். எங்ஙனமென்னில் சென்னைத்துவடமேற்குப்பாகத்திலுள்ள புழற்கோட்டத்திலிருந்த குறுநிலமன்னர் இதைண்டை சக்கிரவர்த்தி

யின் கட்டளைக்கு அடங்காமையால் அவர்களைச்செயிப்பதற்கு நால்வகைச்சேனைகளோடு படையெடுத்து வந்து அவர்களுடன் போர்புரியுமபோது அபஜெயப்பட்டு திரும்பிவருகையில் வடதிருமுல்லைவாயிலென்னும் க்ஷேத்திரத்தில் தங்கினன். அன்றிரவுமாசிலாமணீஸ்வர் அவன்சொற்பனத்தில்தோற்றி நீ மறுபடியும் இன்னபக்கமாய்ப் புழங்கோட்டத்திற்குப் போவாயானல் உனக்கு ஜெயமுண்டாகுமென்று அருளியபடி சென்று, குறுநிலமன்னரைஜெயித்ததாக அவ்வாலயமான்மியத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதற்கு அபிருதியாக சிவாலயத்தின் மூன்பக்கத்திலுள்ள ரிஷபம்புழற்கோட்டத்தின்பக்கமாகமுகமும் சிவலிங்கத்தின் எதிரில் வாலுமாகத்திரும்பியிருக்கின்றது. ரிஷபம்காண்பிக்கும் பக்கமாய்ப்போவாயானல் நீ வெற்றிபெறுவாயென்று ஈஸ்வரர் சொற்பனத்தில் சாதித்தவண்ணமே சக்கிரவர்த்திபோய் வெற்றியடைந்தான். இப்போதும் அவ்வாலயத்தின் ரிஷபம் புழற்கோட்டத்தின் பக்கமாய்த் திரும்பியிருத்தலேபிரமாணமாம். இச்சேத்திரம் அடியார்களால் பாடல்பெற்றுள்ளது. இதனுல் குறும்பர் குறுநிலமன்னர் புரோசர் வேளிர் என்னும் மொழிகள் சிற்றரசர்களையே குறிக்கின்றன. இம்மொழிகளாலகித்த சிற்றரசர்கள் சேர சோழ பாண்டிய பல்லவஅரசர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களேயன்றி வேறல்லவென்று விளக்கப்பட்டது.

கொடிபிருதுகள்

சேர சோழ பாண்டிய பல்லவ அரசர்களின் வம்சத்தவர்களாகிய சம்புரைதத்தார், பல்லவர், அரசுபள்ளி படையாட்சிகளெனவழங்கும், வன்னியர் விற்கொடி புலிக்கொடி மீனக்கொடி ரிஷபக்கொடி பன்றிக்கொடிமுதலியவைகளை யிக்காலத்தும் முடைத்தாயிருக்கின்றனர். பிரின்சுகளும் பலபிரமாணங்களாலும் பிரத்தியட்சானுபவங்களாலும் கண்குவிளங்கும்.

மேற்கூறிய அரசர்களில் யாரேனும் பற்றஅரசர்களைஜெயித்து ஆளுகைசெய்தால் அவர்களது கொடிபிருது முதலிய

வைகளைத்தழத்தியும் சமயாகவும் நூல்களிலும் சாஸனங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

களிற்றுப்பரணி கடவுள் வாழ்த்து
18-வது செய்யுள்.

தேழன்மேறிகலேயாளிவீணைசில
கெண்டையென்றினையபல்கொடித்
தாழமேருவிலுயர்த்தசெம்பியர்
தனிப்புலிக்கொடிதழைக்கவே.

கருத்து. பன்றி மேறி மான் சிங்கம் மீன வில் மீன் முதலிய கொடிகளைத்தாழ்த்தி சம்புகுலத்தாராகிய சோழனுடைய புலிக்கொடியை மேருவில் தழைக்கச்செய்தானென்பதாம்.

திருவிளையாடற் புராணம் திருமணப்படலம்
18-வது செய்யுள்.

மீனவன் கொடியுங்கான வெம்புலிக் கொடியுஞ் செம்பொன்
மானவிற்கொடியும் வண்ணமயிற்றழை க்காதெதோட்டுப்
பானலங்கருங்கட் செவ்வாய் வெண்ணகைப் பரிதோணிபத்
தேனலும்பலங்கல் வேய்ந்த செல்வியோர் மருங்கிற்செல்ல.

கருத்து மீனக்கொடியும் புலிக்கொடியும் விற்கொடியும் மயிலிறகால் அமைத்த புஞ்சக்காதுகளும் தாடாதகை பிராட்டியார் தேரின் இரண்டு பக்கங்களிலும் செல்ல.

புலிக்கொடி சோழனுக்குரியது விற்கொடிசோனுக்குரியது.
திவ்ப்பதிகாரம் ஆய்யர்குரவை.

[illegible]லெழுதிய மீனக் கெற்றியி
னயலெழுதிய புலியும் வில்லு
காவலந் தன்பொழின் மன்ன
னேவல் கேட்பிபாரசாலன்ட.
[illegible]டைப் பாண்டியன் கோயில்.

(இ-ள்.) இமயமெற்றியில்தான் எழுதிய கயலுக்கு அயல் எழுதிய புலியையும் வில்லையுமுடைய செம்பியன் சோன் என்னும் மன்னரும் காவலந்திவின் கண் மன்னரும் மற்றுமுள்ள குறுநிலமன்னரும் தன் ஏவல்கேட்டு ஒழுக நிலமுழுது

மாண்டழுத்துமாலே பொருந்திய வெண்கொற்றக்குடையையுடைய பாண்டியன் கோமிற்கண்ணே

திக்குவிஜயம் 290-வது செய்யுள்.
மதுராபுரி ஜயத்துவசத்தின் சிறப்பு.

மனுபதியாஞ் சோழனுடன் வருணபாண்டியனும் வச்சிரபோற் புலிக்கொடியு மாபதேதமும் மினிதுவகைக்கண்டு மீனங் சூடத்தை யபிக்ருமித்து கலிமாலியனுங்கொள்ளுமாக்காலம் வருமே.

(இ-ள்.) வருணராமபாண்டியனுடன் சோழராஜனும் வச்சிரபோற் சோழனுக்குரிய புலிக்கொடியும் பாண்டியனுக்குரிய மீனக்கொடியும் பிடித்து வருவதைக்கண்டு ஆகாசத்திலுள்ள மீனராசியானது குற்பராகிமித் சேர்ந்தது. கலியையுடைய சக்கிரனுனவன் மாலைக்கொண்டு இராக்காலத்தில் வரும் என்பதாம்.

வெகிரிகாதல்.

சக்கிரகலியின் மானைத்தாவிப் பிடிப்பதுபோல்
வச்சிரபுலிக்கொடியும் வருணகை மீதோங்க.

(இ-ள்) சக்கிரகலியிலுள்ள (களங்கமாகிய) மானைத்தாவிப்பிடிப்பதுபோல் புலிக்கொடியானது பாண்டியன் எதிரில் ஓங்கும் என்பதாம்.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம் பூமிரம்
21-வது செய்யுள்.

தென்னட்டில்லடாட்டிக்குடகாட்டிற்றெவ்வரோட்க
கன்னட்டியமர்பொருதகங்கைகீருட்டுவித்தக்கண்டன்வேங்கை
யென்னட்டமெழுதியவன்றிருமாபோர்பெற்றபுகழ்பாவர்பெற்ற
நன்னட்டுக்கொற்றமெல்லாமக்குரிசில்புகழ்பாடவதிற்றன்றே.

(இ-ள்.) தெற்கு வடக்கு மிழக்கு மேற்கு என்று சொல்லப்பட்ட காற்றிசையிலுமுள்ள சத்துருக்கள் புறங்கொடுத்தோடும்படி யுத்தஞ்செய்து தன் எல்லைக்கல்லை காற்புதைத்தும், காட்டுக் கண்டன் என்னப்பட்ட சோழனுக்குக் கங்காசலத்தால் மகுடாபிஷேகஞ்செய்வித்து அவனது புலிக்கொடியை

எத்த காட்டிலும் எழுதிய சேராஜன் வம்சத்தார் பெற்ற புகழைப்போல் எத்த அரசர்கள் பெற்றார்கள். அத்த காட்டின் அரசியல்லனமையெல்லாம் அத்த அரசன் புகழோடுண்டாயிற்று என்பதாம்.

கிலேபெழுபது கொடிநிறப்பு
61-வது செய்யுள்.

"சுடர்க்கொடியைவனக்கொடியுத்துகளில்வெற்றிப்புலிக்கொடியும்
அடற்புலிமுன்றினுத்தாமேயாசியற்றும்படிதாவக்,
கடற்புவியினிரக்தாருங்கருனைபுரிதாவேபோல்,
இடர்பகையிலாதுவன்னியெல்லுயிரும்வளர்ப்பாரே.

(இ-ள்.) கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் வன்னியர்கள் அக்கினிக்கொடியும், பஞ்சவன்னப்பிருதும், வெற்றியைத் தராகின்ற புலிக்கொடியும், கெருங்கியநூல்லு உலகத்திலுள்ள தாமே அரசபுரியும்படி தாவாகிக்க, எப்பொழுதும் அருளோடும் அன்புபாராட்டும் தலைப்போலும், எத்த உயிரையும்கிருமைபகைமையில்லாதவளரும்படிசெய்கிறார்கள் என்று, சுடர்க்கொடி எனவேசுடர் என்பது ஒளி, நுவரினவேலில்லை எனிற்கொடியும் ஐவனக்கொடி எனவே, வளம்-நலம் அதிலுடைய மச்சமென, மச்சக்கொடியும், ஐ-அழகு புலிமூன்றென வேமலையமானும், சோழனும், பாண்டியனும் மூன்றுட்டையும் குறிப்பானுணர்த்து மென்னும் கருத்தால் சக்கிலிக்கொடியும் பஞ்சவன்னப்பிருதுமென கேரிற் கூறாது சுடர்க்கொடியும் ஐவனக்கொடியுமெனக்கூறினரென வுணர்க. அவற்றுள் சேரனுக்கு வில்லுக்கொடியும், சோழனுக்குப் புலிக்கொடியும், பாண்டியனுக்கு மீனக்கொடியும் ஆம்."

அன்மியும் கதர் விக்கிரமங்கல முதலிய வலையங்களிலெழுதப்பட்டுள்ள சாலைகளிலே

"கூம் ஈதிலைதோறும் சினப்புலிசெலுத்தி"

"நெடியும் புலியுமிலைதோறும்செலுத்தி" என்று சிறுபாணாற்றுப்படையிலும்

"கானலேங்கைவில் லுடன்றூர்ந்து மீனக்கானகாசனத்து விற்பிருப்ப"

"கனகமேருவில் கயல்வினையாட" என்று மதிக்குலபாண்டியனைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கின்றது.

மேற்காட்டிய செய்யுள்களிலும் சாஸனங்களிலுமுள்ள வில் புலி மீன் முதலிய கொடிகள் மூ மரபைச்சேர்ந்த வன்னியரின் சுதந்தரத்திலிருக்கின்றன. சம்புகுலத்தார், பல்லவர் அசுபள்ளி, படையாட்சிகள் வன்னிபரென வழங்கும் அரசவகுப்பினரின் பூர்வநிலைமையானது ஆந்த அசாட்சியிலும், மகமதிய அசாட்சியிலும் மாறிவிட்டது. மாறிவிடவே தங்கள் முன்னோர் பூர்வநிலைமையையும் அவர்களதுகொடி பிருதுகளையுமின்னவையென்று தெரிந்துகொள்ளும் பொருட்டு கிலநூற்றாண்டுகளுக்குமுன் காஞ்சிபுரத்திலே பூர்வ அரசபரம்பரையைச்சார்ந்தவரும் வீரசம்பு எனப்பட்டபெயருடையவருமாகிய வேளார் மகாராட்டாண்மைக்காரர் அவர்களால் ஒண்டி புலிக்கார் (கோக்கர்) என்று சொல்லப்படுவோருக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்தாள் தொட்டு இந்தாள்காறும் வன்னியர் வசிக்குமிடங்களுக்குச் சென்று அவர்களது முன்னோர்களின் சிறும் சிறப்பையும் பேரும் புகழையும் புகழ்ந்தும் பிருது கொடி முதலியவைகளைக் காண்பித்தும் ஜீவித்து வருகிலையாவரும் அறிவார்.

இவர்கள் பலதுண்புங்களாகப்பிரிந்து ஒவ்வொரு ஜில்லாக்களிலுமிருக்கின்றனர். ஒவ்வொருவரும் தங்கள் முன்னோர்காலத்திலே காஞ்சிமகாராட்டு வீரசம்புவன்பவரால்செப்பேடு ஒன்று கொடுக்கப்பட்டதாகசுறுவர். ஆனால் இவர்களுக்கு பூர்வம் எப்பட்டசெப்பேடு ஒன்றே. அதைப்பலவேறு செப்பேடுகளாக அப்போதைக்கப்போது தங்களிஷ்டம்போல், எழுதிவைத்திருக்கின்றனர். வன்னிபர் அன்றியின்னம் சிற்சிலசாதிகளிடத்தும் இவர்கள் யாசிக்கின்றனர். இதுகாறும்தமிழ்நாட்டரசருக்குரிய கொடிகளைப்பற்றி பூர்வசெய்புட்களாலும் சாஸனங்களாலும் ருபித்துக்காட்டப்பட்டது. அன்றியும் சம்புகுலத்தார் (செம்பியர்)பல்லவர் படையாட்சிகள் வன்னியர் என்னும் சொற்களின் பிரயோகங்கள் ஆழ்வார் அடியார்முதலியவர்கள் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்தாலும் தேவாரதிருவாசகத்தாலும்

மூடி மரபின் செங்கோல் செலுத்திய காலங்களிலேற்பட்ட ஆலயாதி சாஸனங்களாலும் மேலே கண்குளங்கப்பட்டிருக்கின்றது.

1897ஆவு புதுவை கெவர்ன்மென்டிற்கு வில்லனல்லூரின் மடாலய தம்பிரபட்டயத்தின் நகல் அனுப்பும்படி பணி செய்து கொண்டதின்பின் அவர்களாலனுப்பப்பட்டது. அதவறுமாறு.

Bibliotheque Publique,
de Pondichery.
No. 21.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்:

வில்லவனல்லூர் அக்கினிவம்ச

க்ஷத்திரியராகிய வன்னியர் மடாலய

பூர்வசரித்திரம்.

சுபரிபவமாண்டலத்திலே சுவர்ணகிரியாய்வியாடன் பாலைக்குத் தப்புவராத கண்டன்முவராய்கண்டன்கண்ட காடுகொண்டுகொண்டகாடு கொடாதான், துடிக்கர்களவிபாடன் துடிக்கர் மோகத்தவிர்த்தோன், எட்டியர் தளவிபாடன், ஒட்டியர் கோட்டகத்தவிர்த்தோன், பின்மண்டலமுங்கொண்ட ராஜராஜனான், ராஜபரமேஸ்வரன், ராஜமார்த்தாண்டன் ராஜேஸ்வரன், புயங்கன், ராஜகம்பிரான், ராக்கனத்தம்பிரான் இந்திரதுரக்கான், அல்லவழி கஜபதிதுரந்தரன் அஷ்டமணைசை ராயன் அசுராணவிருது ரோபாலன், கோதண்டராமன், கலியுகராயன் கண்ணன்வாளுக்கு வீமன் கோளுக்கு அபிமன்னன், குணத்திற்குத் தருமன் அழகுக்குத் அங்கன் அமர்தகற்கு அரிச்சந்திரன் ஆண்மைக்கு அனுமான் ஆத்மோக்ஷத்துச் சுகரிபன், குடைக்குக் கான்ன செலவத்திற்கு அளகேசன் பலத்திற்கு வாயுபவான் உலகுக்குக்

கதிரோன், உலாவும் உலகமெல்லாம் படைக்கனிஞைத்தரு ளிய வீராதிவீரவன்னியப் பிரதாபன், கிருஷ்ணதேவமஹா ராயர், அச்சுததேவ மஹா ராயர், புஜபலதேவ மஹா ராயர், திருமலைதேவ மஹா ராயர், சதாசிவதேவ மஹா ராயர், ராமதேவ மஹா ராயர், பிரவிடதேவ மஹா ராயர், மல்லிகார்ச்சுன தேவமஹா ராயர், பிரிதிவி ராச்சியபரிபாலனம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் கூ.ாகூயிக இதற்குமேல் நின்ற ஆங்கிரசவருஷத்து மிதுனமாசத்து பூர்வபட்சத்து அஷ்டமியும் பூசட்டாதி நட்சத்திரமும் பெற்றசோமவார நாள் வடகரை விருதப்பசங்கன் வளநாட்டுக்கு மேற்கு நாடு இருங்கோள், பாண்டியவளநாடு தொண்டமண்டலம் சோழமண்டலம் பாண்டியமண்டலம் கொங்குமண்டலம் இந்த நாலுமண்டலத்திற்கு அழகான் தொண்டளைநாட்டுக்கழகான வில்லவனல்லூர் திருக்காமேஸ் வர்குயிலாரம்மை அவர்கள் *சங்கிதியாகிய வில்லவனல்லூ ரிலே அத்தத்தலாதிக்கு மடாலயங்கள் உண்டாகின்றன. மகத் குவாலயபூசைமாத்திரமிருக்கின்றது, தென்தேசத்தில் மதுர

* வஸ்பன்னூடர் தங்கள் பேரும் பிரதாபமும் உண்டாகவே ண்டுமென்று மடங்கள் கட்டியிருக்கிறார்கள் காம் இராயரைப் போய்க்கண்டு மடங்கட்ட உத்திரவு பெற்று வருவோமென்று திருவக்கரை வல்ல வாட்டுபழவராய பண்டாரத்தார் கருத்தரா யனூர் பண்டாரத்தார் சின்னகுமாரகாயனூர்பண்டாரத்தார் சித தம்பரம் மழவராய பண்டாரத்தார் கச்சிராயர் பெரியண்ண காயனூர் காண்டவராயனூர் சடையப்பகாயனூர் அழகுசிங்கரா யனூர் மெய்யோகராயனூர் பண்டாரத்தார் இவர்களும்

சிலைஎழுபதுவிற்பிடிச் சிறப்பு 6-வது செய்யுள்

* மிடிகாரக்கப்புலவருக்கு மிகுபொருளீந்திடு வர்த்தம்
அடியிரக்கத்தொடு பணிவார்க்கரசதருங்கொடையோளர்
படிபுரக்கவலதரித்த பண்ணூடர் காத்தமை விற்
பிடியுரத்தினுலண்ரே பெருஞால முழுமுறலே

இச்சாஸனத்தில் கூயிகதிறதினங்க இச்செய்யுளிலும் பண்ணூடர் என்றசொல்லுக்குரியார் வன்னியராம்.

* கன்டன்மார் தத்திரியர் படையாஷ்யார் என்னும் பல பட்டப் பெயர் பெற்றசோம சூரிய; அக்கினிவர்ச பண்டை ர்ளஉறவின் முறையிலே அனைவரும் போய் இராஜ வன்னிய இராஜஸ்ரீமல்லிகார்ச்சுன தேவமஹா ராயரைக்கண்டு பேச அப்போது இராயரும் சிம்மாசனம் விட்டு இறங்கி எதிர வம்ச த்தாசென்றுதெரிந்து தேவாலய பூஜையிருக்கபடத்தருமம் பெக்கேனென்று இராயரும் கேட்கஅப்போது நாயனூர் பண் டாரத்தார் பாண்டிய மண்டலம் சோழமண்டலம் முதலிய மற்றமண்டலங்களில் குருமடங்கட்டியிருக்க தொண்டமண்ட லத்திலேயும் இருக்கவேண்டுமென்றார். இராயரும்சந்தோஷித் தவுங்களுக்கு இடமில்லாமற் போமோவென்று தானத்தாரை யழைத்து நாயனூர் பண்டாரத்தார் அவர்களுக்கு இடம்விடப் போமென்று சொல்ல அப்போது தானத்தார் ஆதிக முதலி யார் திருநாவகத்தொண்ட முதலியார் கம்பித் திருஞானப் பண்டிதர் மற்றும் முற்றுற்றுடையீர் கம்பிக்குருக்கள் வயி த்தியநாதகுருக்கள் கோவில் கணக்கு சேமக்கணக்கு மற்று மூண்டான தானத்தார் தவத்தாருங்கூடி கெவி சித்திலிங்க தேவர் முனையதேவர் தம்பிரானர்திருமடத்தில் காணிபான தெற்குத் தெருவில் தேரோடுமவீதியில் தென் சாலில் பாலையர்மடத்திற்குகிழக்கு அம்பலத்தாடும் ஐயர் மடத்திற்கு மேற்கு சட்டையர்மடத்திற்கு வடக்குஅடி கிழக்கு மேற்கு (எடு) தெற்கு வடக்கு அடி (அடு) அடி ஒன்றுக்குப்பொன் ஒன்றாக (எடு) பொன்னுக்குக் கிரையங் கொண்டு கல்லில் பேர்வெட்டிகட்டு கிணறு கட்டி மடங்கட்டி

கத்திக்கலம்பகம் 10-வது செய்யுள்

* கோதைசோரிசொரிகொங்கைவிம்மல்விம்முறுமுலவற்
சோதிவெஞ்சில்லெனுமருங்கிற்றுவளினியுந்துவள்கண்டாய்
காதலிதேற்பரைட நத்திக்கண்டன் கச்சிவளநாட்டு
மாதரிவரோவிருக்கின்றவாவிமற்றென்மடநெஞ்சே

இச்சாஸனத்திற் சொல்லிருப்பதற்கினங்க திகலம்பக் கத்திலும் ஏனையதாற்காலிலும் கண்டனென்னும் பட்டப்பெ யர் வன்னியருக்குவழங்கப்பட்டு வருகின்றது.

தாம்பர சாசனமாக பட்டயமெழுதி காலுமண்டலம் (குசு) தேசமும் குருமூர்த்தமாய்க் கொண்டாடச் சொல்லி மதுரை மடபிச்சை முட்டியும் திருவிளக்குந்திருத்தவனப்பன்னிவிடையும் திருமாலையும் உபயமும் மகேஸ்வர பூஜையும் பண்ணி கடத்தி வரசிலாகதி சக்காவர்த்தியோதிவர குருவை மடத்தில் வைத்து அந்தந்தச்சர்மைப் பண்ணுடரும் காயினர் பண்டாரத்தார் அனைவரும் வம்சதருமக் கீர்த்திக்காக மடத்திற்குக் கட்டளையிட்டது உபய முகூர்த்தத்திற்குப்பணம் ஒன்றும் சுயமரம் காட்டி மாலைசூடுங்கலியாணத்திற்குப் பொன்பத்தும் கத்திகாட்டிக் கலியாணஞ்செய்பவருக்குப்பணம் பத்தும் மற்ற முகூர்த்தங்களுக்கெல்லாம் மாப்பிள்ளைவீட்டார் பணம் ஒன்றும், பெண்வீட்டார் பணம் ஒன்றும், பெண்தத்தபணம் ஒன்றும் மாதாபிதாகுருபாதபூஜை வரும்படிகளும் மடத்தில் சேரவேண்டியது. தண்டிகைகுணர்கள் பத்துபணமும் குதிரை மேல் குடைபெற்ற அல்வபதிகள் அஞ்சுபணமும் ஜாதியில் குற்றுகுற்றஞ்செய்பவர் அபராதபணமும் மன்னவேமிராமத்தார் அரிவாளுக்கு ஆறுபடிதானியமும் களைவெட்டுக்குப்பதக்கு தானியமும் ஏருக்குமுக்குறுணி தானியமும் பேர்ருக்குப் பத்துபணமும் கிம்ஹாருக்கு அஞ்சுபணமுங்கொடுக்கவேண்டியது. ஆறுபாதி அற்றவர்சொத்தை மடத்தில் சேர்த்து மடத்தாரல் சவாட்சனை பெறவேண்டியது. இவ்வரும்படிகள் மடத்திற்குச்சேருகிறபடியால் செந்தூரத்திலர்தம் கோபி திருமணி திருநீற்றிட்ட பேர்களும் சந்திரசூரியருள்ள காலவரைக்கும் கடத்திவருவீர்களாகவும், இந்த மடாலயதருமநிதி தங்கரமல் கொடுத்தபேர்கள் மாதாப்பிதாக்களை மிட்சித்து சிவலயம் பிரமாலயப்பூதானம் கோதானம் கன்னிகாதானம் செய்தபலனைப் பெறுவார்கள். ஸ்ரீமது வில்லவனல்லூரிலே திருக்காமேஸ்வரர் குயிலாரம்மை குமாரசாமி சக்திதானம் விளங்குவதுபோல் விளங்குவார்கள். மடத்திற்கு அனுப்பக்கட்டளையிட்டதை அனுப்பாவிடில் மடத்து சுவாமியாரால் அனுப்பாபட்டபணிவிடைசெயியால் எழுந்தருளின உடனேகூடிமுன்னேபோய்காண்பித்துக்கொண்டுவந்தவர்களுக்கு விதிவிட்டு

காப்பாடு போஜனம் அமைத்து தருமத்திற்குண்டான வரும்படிகளைக் கொடுத்தனுப்பிவைக்கவேண்டியது. தருமபரிபாலனான சொபாக்கிய ஸ்ரீமாணிக்கரான வேள்வியிற் பிறக்தோர்களான ஐம்புகுலத்தவரான குமாரசாமியார் படைத்தலவரான அகர்கள் மாபரான ஆஸ்தான பத்தாளன சிற்பசபனியரான சாத்தமரியுடைய கலிகையை மணஞ்செய்தவரான வாடாமலையும் வன்னத்தடக்கும் மாலையும் தரித்தவரான வாசமிகுத்த குவளைமாலையும் பிடாக்கொடியும் முப்பத்திரண்டு விருதும் பெற்றவர்களான முன்னூல்மார்பும் புலிக்கொடியும் பெற்றவரான கையாதாட்டுக்குச் சப்தபதிகளான சோணாடு காத்தவரான மன்றையோர் மகனுக்கு உயிர் கொடுத்தவரான வல்லாளுடைய மகுடந்துணித்தவரான வாதாபியை வேரு வன்னிய குலாதிபரான செங்கையில் வில்லும் இடுகழுகும் எடுத்தவரான ஏடிவாழும் வீரபரிதலதுஷ்ட நிக்கண்ட விர்ப்பன்ன உத்தண்ட கோதண்ட விக்கிரமார்த்தாண்டரான ஆனைவேரும் மனமொத்து இந்த காரியம்தட்டுதலே பண்ணுவதல்லவென்று மடத்து தருமம் விளங்கத்தக்கதாக பார்க்கவும் யாதாமொருவர் அதடவிகடம்பண்ணினால் கங்கைக்கரையில் காராம்பசுவை கொன்றபாவத்திற்போக்கடவர்; தங்களுடைய மாதாபிதாக்களைக் கொன்றதோஷத்திலேயும்தெய்வீராமணரைக்கொன்ற பாவத்திலேயும் போகக்கடவர். தருமம் விளங்கக்குலம் விளங்கும்; குலம் விளங்கப்பெருமையும் செல்வமும் புகழையும் அடைவார்கள்.

இருக்கிறபடி:

Pour extrait.

Pour extrait conforme á l'ouvrage paru á Madras et deposé á la Bibliotheque publique.

Pondichery le 13 Décembre 1893.

Le Bibliothécaire,

A. Rathinassamy Pillay.

லவத்திஸ்வரன் கோயில் வன்னியர் மடாலய

தருமசாலனத்தின் விவரம் வருமாறு

சுபஸ்ரீமன் பலராமண்டலேஸ்வரன் [illegible] புரியாய விபாடன் பாஷைக்குத்தப்புவாதகண்டன் கண்ட[illegible]மிகொண்டிகொண்டகாடி கொடாதான் பதினெட்டுக்கோட்டுந்து வன்னியராய கண்டன் அஷ்டதிக்கு மஞ்சுகரபயங்கரன்சமரில் மார்த்தாண்டன் இராஜகெம்பிரன் கவசக்கரவர்த்திகளில்அசுவபதி கெஜபதி நரபதி கவகோடிநாராயணன் பூர்வதக்ஷண பஸ்சிம உத்திரசப்தசமுத்திராதிபதிஎழுமூம் குணபள்ளமுங்கொண்டு கெஜவேட்டையும் அசுவவேட்டையும் யம்மண்டலமுங்கொண்டு ஈழக்துறைகண்டருளிய இராஜாதிராஜன் ராஜகெம்பிரன் ராஜகுலத்துக்கு ராஜமணிவிளக்கு இராஜபரிகேசரி சோழசிங்கசித்தாருணன் இளமுடிகொண்டெதிர்த்தசாளுவன் ஒட்டியதளவிபாடன் ஒட்டியமோகத்தவிழான் கொங்குமண்டலம்குலும்பறுத்து அழியாவிராணமழித்தவிராடகெடி வன்னியமிண்டன்ரணமன்னியப்பிரியன் கோஷடத்து வன்னியராய கோலாகலன் இளவரசுமணவாளன் கண்டியபிரதாபன் கட்டாரிவல்லவன் சங்கேதசாஹித்யவித்தியாவிஞேதன் ரணமுகசித்தவீரன் கைகமுகச்சந்திரேர்தயன் மத்தகஜவிரன்சுத்தபரிபாலன் மகாகாளிகூளி கணங்கள் கைகூப்பும் மணவாளகெம்பிரன் எதிர்த்தோரைனமடக்கும்வேங்கைவரிப்புலியாளேன் தேன்பாயும் வளநாடன் கொங்கர்குலாதிபன் நித்தியகல்யாண வேந்தாதிபன் பூலோகதேசாதிபதிகளில் ஸ்ரீயமஸ்குலதீப காரணன் சிவசமயபரிபாலன் சிவபூசாதுரந்தரதிபகாருணஸ்ஷேடமிக்கி ரகஷிஷ்டபரிபாலகரான வில்லுக்கு அருச்சுனன் வீரவாளுக்குச்சகாதேவன்மல்லுக்குப்பீமன் வல்லபற்கு நகுலன்கோபத்திற்குக்காலாக்கினி குளிர்ச்சிக்குப்பூரணசந்திரன் ரூபத்திற் காமராஜன் கொடைக்குக்கர்ணன் ஆக்ஞைக்குச் சுக்ரீவன் கேள்விக்கு முகுருந்தன் இபபடி பூலோகதேவேந்திரனை புஜ பல தேவமகாராயர் அச்சுததேவமகாராயர் திருஷ்ணதேவமகாராயர் இவர்கள் பிரதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியருளினின்ற சகாப்தம் ஆடுமாண்டு இதன்மேற் செல்வானின்ற கார் முகிலு ஸைமீ[illegible]லீல செல்வாய்க்கிழமை காள் சங்கமிருத்தி

கழும் மேவு ஞாயிற்றுப்பூர்வபட்சத்தில் ஏகாதசியும் திருவோண நக்ஷத்திரமும் சேர்ந்தகார்த்திகைசோமவாரகாளில் சோழமண்டலத்திற்குத்தெற்குவடக்கு இராஜாதிராஜன்ராஜவளநாடு வழுத்தலம்பட்டுச் சாவடிதிருவாலியவதாரமான சடாயுபுரி வேதபுரி கச்சபுரி ஆதித்தபுரி ஆதியான திருப்புள்ளிருக்கும் வேளூரில் கவியுகலக்தராய்ப் தெய்வீகவயித்தியரா யெழுந்தருளிய தம்பிரானுர் சன்னிதியில் அந்த அந்தசாதிக்குச் சிவாலயமும் மடாலயமும் உண்டானபடியினலே பண்ணுட்டார்தங்கள் மரபிற்பேரும் பிரதாபமுமாகவேண்டுமென்று தொண்டமண்டலம் சோழகனர் காலக்கத்தோழவுடையார் மழவராயராயகர் பருவூர்கச்சிராயராயனூர்இராவுத்தமிண்டராயனூர் ஊத்தங்கால் வன்னிய நாயனூர் சமுஷ்டியார் பாஞ்சாலராயனூர் வாண்டையார் கோங்குடையார் பெண்ணேணக்கராசோழராயனூர் சென்னிராய கவுண்டர் * சோமக்கவுண்டர் செங்கழுநீர்க்கவுண்டர்

வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதம்

உத்தியோகபர்வம் படைபெழுச்சிசருக்கம் 17வதுசெய்யுள்

* கவிஞர்கோன் சோமதத்தன் தெளிசென் காம்பீலீசன்
தெவ்ர்கர்கோன் போஜராஜன் கேயன்றிகதபூபன்
வலங்கொள்வேற் கவுண்டாரசன் மாலவன் வளவன் சேரன்
நலங்கு கீரேர்கணீசனெனும் படைவேந்தர் தொக்கார்

பாலபரனந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

ஞானகும்மி 17வது

காத்தவராய கவுண்டனுக்குத் திசை காவலுமற்ற மீசாரணையும் பார்த்து விருது [illegible]கைவிருதிக்கப்படி நிலைக்குமோ ஞானப்பெ

[ண்ணே

இச்செப்பேட்டில் சொல்லியுள்ள கவுண்டனென்னும் பட்டப்பெயரானது கவுடதேசத்திலினறு வந்த அரசவம்சத்தவரைக் கவுண்டனென்றும் காடவனென்றும் நாற்களிலும் சாஸனங்களிலும் அனுபவத்திலும் வன்னியரால் வழங்கப்பட்டவருகிறது. ஷைகும்மியில் காத்தவராய கவுண்டன் என்பதுஞானசம்பந்தமானபொருளாயினும் அரசன் என்னும் பிரயோகத்திலுள்ளது. இதுபோலவே ஷைகும்மியில் பார்ப்பான் செட்டி சாணான் முதலிய பிரயோகங்களிருக்கின்றன.

வேட்டிக்கவுண்டர் வீரிருண்டிக்கவுண்டர் ரஸிம்மக்கவுண்டர் ஸனகாயக்கவுண்டர் இவர்களனைவரும் கூடிச்சன்னிதியில் மேலேத்தெருவிதியில் தென்சருவில்லுக்தகோபாவன் மடத்துக் குழிழக்கு மலைமான்மட்டத்துக்கு மேற்குழிக்கு மேற்குஅடி (நூறு) தெற்குமடக்குஅடி (உலரு) தூகஅடி (நூளரு) அடிஎன்று க்குப்பொன் க (நிரை)பொய்னு (ரு) பணம் ஸ்தலத்துக்கு வேல் பின்னோகையிற் கத்தினையமாய்க்கொண்டு கல்லுவெட்டிபோ வைத்துனைநுகட்டிவைத்துத்தாண்டவராயபண்டாரத்துக்குத் பிரசாதனமாகப் பட்டயம் பண்ணிக்கொடுத்து கல்லுமண்டலம் தாம் ஐம்பத்தாறு தேசத்திலும் கொண்டாடச்சொல்லி மகாம டலம்ம பிச்சைமுட்டியும் திருவினைக்குந்திருத்தவன பணிவி டையும் திருமாலே யுபயமும் மகேஸ்வரபூசையும் பண்ணிவைத் சொல்லிபம்முடையசுத்தியார்தாமுண்டலம் ஐம்பத்தாறுதே சத்திலுள்ள உறவின்முறையாரெவரேனுக்கும் இச்சித்தும்பல னுமுண்டாகவேண்டுமென்று வாண்டையார் அஞ்சாதசிங்கம் சிலம்பரையர் குலோபாடையாச்சி காளிங்கராயர் கருப்புடையார் இவர்களனைவோரும் மற்றுமுண்டான பன்னாட்டாருங் கட் டளையிட்டதருமம் காணிக்கப்பட்ட பெண்ணாடகமான்குழல் ஓலைகொண்ட சோழபுரம் சென்னிபாண்டார் கோவில் குழுமூரைச்சுற்றுத்த பதினேழுபத்து பருவூரைச்சுற்றுத்த பதி ரண்டுபத்து வன்னியரும் ஆத்திகாடு சேலைமேமனிபுன்சிமை வஞ்சிகாடு மேனிசிமை பூவனிகாடு மூலக்காசிமை அந்தச் சிமை பண்ணாட்டாரனைவருங்கூடவகுத்துவருவுவர்த்தனை யாகக்கட்டளையிட்டது தலைகட்டுக்கு ஒருகலியாணத்தில்மாப் பிள்ளை வீட்டுக்காரர்ஒருபணம்பெண்வீட்டுக்காரர் ஒருபணம் தண்டிகைநுகைகள் பத்துபணம் குதிரைக்குடைபெற்ற அகவ பதிகள் ஐந்துபணம் சாதியிற் குற்றங்குறைந்து செய்தவர் அப ராதபணமும் மடத்துக்குச்சிலவுபடியால் திருவுதிருநாமம் இடப்பட்டபேர்கள் சக்கரவர்த்தி சூரியருன்னதாண்வராயர்கும்மடத் திவருவர்களாகவும் இந்த மடாலிய தருமத்தை விசாரித்து பண்டாரமவர்களுக்கு இருத்தாளவும் படிசெலவுகொடுத்து உபசாரமாய் வருவுவர்த்தனைதாம்பூலம்கொடுத்த பேர்கண்மை

தாபிதக்கனை இட்டித்து இவ்வாலயம் பிரம்மாலயம் பூதானம் கோதானம் கன்னியதானம் செய்தப்பலனைப்பெறுவார்கள் மேற்படிதானமீ தலைச்செல்வர்ய்க்கிழமை உதயத்துக்குத் திரா வினேர்த்த சுவாமியையும் தாயம்மையையும் முத்துக்குமார சாமியையும் சேவித்தபலனைப்பெறுவார்கள் தருமவர்த்தனை யைக்கொடாதவர் பாவப்பலனை பெறுவார்கள்.

சுமார் 400 வருஷத்திற்குமுன்னர் அரசிற்றியமல்லிகார் ச்சுனதேவ மகாராயர் கிருஷ்ணதேவ மகாராயர்கள் காலத்தில் ஏற்பட்ட ஷ்ரி சாஸனங்களில்சம்புகுலபல்லவர்களால் வழங் கப்பட்ட பட்டப்பெயர்களாவன. மழவராயர் பண்டாரத்தார் காயனர் தக்ஷிரி சமுஷ்டியார் வாண்டையார் வாளண்டையார் அஞ்சாத சிங்கம் காயகர் சச்சிராயர் கண்டன் கவுண்டன் (கவுடன் திரிபு) படையாகி முதலிய பெயர்கள் வழங்கியதாக மேலேசாஸனங்களிலிருத்தல்போல்வன்னியாரல்தற்காலமும் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் கண்டன் என்பது எஜ மான் காயகன் என்னும் பொருளையும் கவுண்டன் என பது தேசத்தைத் தழுவியபட்டப் பெயரையும் குறிக்கின் றன. கவுண்டன் எனனும் பட்டப் பெயர்வேளாளர் முத லிய இல வ்ருப்பினர்களால் வழங்கப்பட்டாலும் அரசர் வகு ப்பினர்கள் பூர்வசிராட்டி வழங்கி வருதலே மேல்காட்டிய சாஸனங்களும் செய்யுள்களும் வன்னியரையேகட்டி கின் றன. பண்ணாடர்எல்லும் பிரயோகம் சாஸனங்களிலுமிலே யெழுபதினுயிருத்தல் போல் ஆறும் நூற்றாண்டின் ஆரம்பத் திலேற்பட்ட வேர்சாஸனத்தில் காஞ்சிபுரம்ராஜவர்மன் கா கதத்தன் ரிவிக்ரமன் விக்கிரமன் முதலியபெயர்கள் பண் ணாட்டி அரசர்கள் என்று சமஸ்கிருதைபவர்களால் வெளிட ப்பட்ட தென்னிந்தியா பூர்வலம்சசாலனை புத்தகம் 2-வது வாலியம் 226-வது பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

மண்டலம் கோட்டம் காடு

தற்காலம் ராஜதானி ஜில்லா தாலுக்கா வெனவழங் குவதுபோல் தமிழ்நாட்டரசர் ஆளுகையில் சோழமண்டலம் சோழமண்டலம் பாண்டிமண்டலம தொண்டைமண்டலமென வழங்கப்பட்டுவந்தன. ஒவ்வொருமண்டலத்திற்குக் கோட்

டங்க னித்தனியென்றும் கோட்டங்களில் அடங்கியதாகெ னித்தனியென்றும் தமிழ் காட்டரசர்களால் பகுக்கப்பட்டிரு க்கது. இவ்வனம்பகுக்கப்பட்டவை பின்னர் எடுத்துக்காட்டும் சாஸனங்களிலுள்ள பிரயோகங்களால் விளக்கப்படும்.

எழுபது பாயிரம் 4-வது செய்யுள்.

சோழமண்டலச் சிறப்பு.

சுழமண்டலமுதலெனவுலகத்
தெண்ணுமண்டலத்தெறிபடைவேந்தர்
தாழுமண்டலஞ்செம்பியன்மாபினேர்
தாமெலாம்பிறந்தினியபல்வனத்தின்
வாழுமண்டலங்கணகமுமணிகளும்
வாம்பிக்காவிரிகுரம்பினிற்கொழிக்குஞ்
சோழமண்டலமிதற்கினேயாமெனச்
சொல்லுமண்டலஞ்சொல்வதற்கில்லையே.

இச்செய்யுளில் சுழமண்டலமுதலென * * * ஏண்ணு மண்டலமென்றமையால், பாண்டிமண்டலம், சோமண்ட லம், தொண்டைமண்டலமென்று சொல்லப்பட்ட மண்டலங்க ளுக்குள் சம்புகுலமரபினர் கெடிக்குஞ் சோழமண்டலத்திற் கொப்பாகிய மண்டலமில்லையென்று கூறப்பட்டிருக்கின் றது.

மூடி பாயிரம் 5-வது
சோழராஜன்சிறப்பு.

முடியுடையமன்னவரின்முலகம்படைத்துடைய
கொடியுடையமன்னவரிற்குலவுமுதற்பெயருடையான்
இடியுடையவொலிகெழுநீரொழுபத்தொன்பதாரட்டுக்
குடியுடையான் சென்னிபிறசென்னுடையரர்கூறிரே.

வில் புலி மீன் என்னும் கொடிகளை முறையேயுடைய சேரன் சோழன் பாண்டியன் வகித்த தமிழ்வேந்தர்களில் செ ன்னியென்று சொல்லப்பட்ட சோழராஜன் 79 காட்டுக்கு டைய (வேளாள) க்குடியையுடையவனும்.

சோழமண்டலமானது 79 காடுகளாகப் பிரிக்கப்பட்டிருப் பதாயும் செம்பியன் மாதேவியென்றமையால் ஒவ்வொருகாட்

டிலும் சம்புகுலமரபாரும், உழுவர் குடிமரபாரும், ஏனையமர பாரும் வசித்தற்குரியராகளாகுமேயன்றி வேளாளர் மாத்தி ரம் வசித்தற்குரிய காடல்லவென்று இச்செய்யுள் விளக்குகின் றது. அன்றியும் சோழமண்டலமானது (79) எழுபத்தொன் பது காடுகளாகவகுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றது. இவ் வனமிருக்க மற்றோர் செய்யுள்கூறுவதாவது.

கோட்டமோரிருபானுன்குகூறாடெழுபத்தொன்பான்
றேட்டெழிலாயிரத்தத்தொளாயிரத்தமாகுந்
தாட்டெழுகோத்திரங்கள்சகத்திரம்பன்னிரண்டாம்
காட்டில்வேளாளர்தம்மைகவின்றிடவடங்காலக்கம்

தொண்டமண்டலமானது இருபத்துநான்கு (24) கோட் டங்களும் (79) எழுபத்தொன்பது காடுகளும் ஆயிரத்துத் தொளாயிரம் (1900) கத்தங்களும் (12000) பன்னீராயிரம் வேளாளக் (குடிகள்) கோத்திரங்களுமுடையதென்பதாம்.

சோழமண்டலத்தின்பரப்பு (24) இருபத்துநாற்காதமை ன்றும் தொண்டலமண்டலத்தின் பரப்பு (20) இருபதின்கா தமென்றும் ஒவ்வொருமண்டலத்தின் அளவைகூறுதலாலும் இவ்விருமண்டலங்களின் எல்லைகளை வெவ்வேறுகவகுத்துச் சொல்லுதலாலும்இவ்விருமண்டலங்களும் ஒன்றுகமாட்டாது ஏழெழுபது என்னுந்நூலில் சோழமண்டலம்(79)எழுபத்தொ ன்பது காடுகளென்று கூறுதலால் இவ்விருமண்டலங்களும் வெவ்வேறென்று தெற்றெனவிளங்குகின்றன. இவ்வனமிருக்க ஏழெழுபதைப்பாடியதாகக்கூறும் கம்பர் சோழமண்டலத்தைக் குறித்துப்பாடினரா தொண்டமண்டலத்தைக் குறித்துப்பா டினரா? என்பதின் உண்மைவிளங்கவில்லை. 11-ம் நூற்றா ண்டு முடிவிலும் 12-ம் நூற்றாண்டின் முதலிலும் அரசுபுரிந்த ராஜேந்திரசோழன் காலத்திலும் முதலாவது குலோத்துங் கசோழன் காலத்திலும் கம்பர் இருந்ததாகச் சொல்லப்பட்டி ருக்கின்றது. இச்சோழன்கால்த்தில் ஏற்பட்ட சாசனங்களில் ஜெயங்கொண்ட சோழ மண்டலமென்று கூறப்பட்டிருக் கின்றது.

முதலாவது குலோத்துங்கச்சோழன் அபிமானபுத்திரரு மெழுதொண்டச் சக்கரவர்த்தி என்பவன் கி.பி.1079-ம் ஆண

முதல் 1113-ம் ஆண்டுவரையில் இருந்தவன். இவன், காஞ்சி புரத்தையரசாண்ட பல்லவர்களே ஜெயித்ததாகக்கூறப்பட்டிருக்கின்றது. உண்மையில்லாதிருக்க 1798-ம் வருஷம்கலேக்டர் பிளேஸ்துரையவர்கள்பிலபாத்தியதையைப்பற்றி அவ்வவ்விடங்களிலுள்ள குடிகளைவிசாரிக்கப் போன்போது காஞ்சிபுரத்திலேவேளாளமாபினர்களுக்குக் குருவாயிய ஞானப்பிரகாச சுவாமிமடத்துப்பண்டார சந்நிதியாரிடம் ஷைமாபினர் அத்தரையை அழைத்துக்கொண்டுபோய் விசாரித்தபோது அவரிடமிருந்துகாட்டிய ஓர் ஓலைச்சுவடியிலே ஆதொண்ட சக்கிரவர்த்தியால் வேளாளரைத்தொண்டமண்டலத்தில் குடியேற்றப் பட்டதென்றும் அவனுல் அவர்களுக்கு பிரமதாயத்தியைக் கொடுக்கப்பட்ட தென்றும் ஷை மண்டலத்தைச் சேர்ந்த 24 கோட்டங்களிலடங்கிய 79 காதேனுக்குரியவர்கள் வேளாள ரென்றும் எழுதிவைத்திருந்ததைக் காண்பித்தார். இது ஏறக்குறைய 110 வருஷத்துக்குமுன்னடத்தது. அவர்காண்பித்த ஓலைச்சுவடியானது 79 காதேனில் உள்ள கத்தங்களில் வசிக்கும் வேளாளமாபினர் தங்கள் குருவுக்குச்செலுத்தவேண்டிய குருக்காணிக்கை இவ்வளவென்றும் குறித்துக்காட்டப்பட்ட காதேனின்பெயர்களையும் கத்தங்களின் பெயர்களையும் குறித்திருக்கும் வழக்கமிருக்க வேண்டுமேயன்றி வேறல்ல. இப்படிக்கிருக்க தொண்டமண்டலத்தைச் சேர்ந்தகோட்டங்களும் காதேனும் வேளாளருக்கே பிலகுதக்கம் ஷைவக்கிரவர்த்தியால்விடப்பட்டதென்று (Mirasi Rite) மிராசிரைட் என்றபுஸ்தகத்தில் 229-வது பக்கமுதல் 250-வது பக்கம்வரையில்லிகையெழுதிவைத்திருப்பதை நோக்குங்கால் அதிசயிக்கத்தக்கதாயிருக்கின்றது. இதுமுற்றும் சம்பந்தக்கதல்ல.

இத்தொண்டமண்டலமானது பல்லவ, சோழர்கள் ஆளுகையிலே 24 கோட்டங்களாகவும் 79 காதேனாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொருகோட்டத்துக்கு காதேன் இத்தனை யென்றும் ஒவ்வொருநாட்டுக்குக் கிராமங்கள் இத்தனையென்றும் பூர்வத்தில் ஆளுகைசெய்த பல்லவ சோழ அரசர்களால் ஏற்படுத்தப்பட்டது. அவற்றில் பிராமணர்வசிக்கும் கிராமங்களுக்கு அக்கிரகாரமென்றும், சூத்திரியர் அல்லது அரசர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு (மன்னர்வீடு) மன்னவேடு என்றும் வேளாளர் வசிக்கும் கிராமங்களுக்கு சத்தமென்றும் பெயர்வழங்கப்பட்டுவருகின்றது. இக்கிராமங்கள்இன்னின்றுருக்குரியதென்று அறிந்துகொள்வதற்கு அநுகூலியாக அவ்வக்கிராமங்களிலுள்ள எல்லைக்கற்களேபோதியசாக்ஷியாம்.

அத்தனர் வசிக்கும் அக்கிராமத்தின் எல்லைக்கற்களில் வாமன ரூபமாகியபிராமண உருவமுங்குடையும், அரசர் (மன்னியர்) வசிக்கும்கிராமங்களின் எல்லைக்கற்களில் ஆஞ்நாசக்கரமும், வேளாளரான சூத்திரர்வசிக்கும் கிராமங்களின் எல்லைக்கற்களில் குலமும் மேழியும் எழுதப்பட்டிருப்பதைப்பிரத்தியக்ஷத்தில் காணலாம். அரசாங்கமாறுதலினுலும் காலவித்தியாசத்தினுலும் ஸ்தூலரூபலேமை மாறுபட்டிருந்தபோதிலும் மேற்படி எல்லைக்கற்கள் நான்குவகையில் பழமைபடியே யிருக்கின்றன.

இவ்வகையானகிராமங்களடங்கிய காதேனையும் காதேனடங்கிய கோட்டங்களையும் பற்றிச்சாசனங்களில்கூறும் பிராமணங்கள்வருமாறு:—

1 "ஆழ்ஞ்கோட்டத்து ஆழர்காட்டு கூர மாமல்லபுரத்து கூரத்தோம்"

2 "ஜெயங்கொண்ட சோழமண்டலத்து பலகுன்றக்கோட்டத்து மண்ணடகுளகாட்டு முருகமங்கலப்பத்து சம்புகுலப்பெருமாள்"

3 "ஜெயங்கொண்ட சோழமண்டலத்து கமன்னூர் காட்டு வீரசோழ பாக்கத்து இலாளப்பெருமான்" (இளையபெருமாள்.)

4 "தொண்டமண்டலத்து படைவீட்டிராச்சியம் காட்டவர் வலங்கையும் இடங்கையும் மஹா ஜனமும்"

5 "ஜெயங்கொண்ட சோழமண்டலத்து கூரம் காஞ்சி" ..... வீராம்ப பிரமராயர் எழுத்து"

6 "ஜயங்கொண்ட சோழமண்டலத்து கலியூர்கோட்டத்து கனியூர் உக்கலாகிய"

7 "அதிராஜமண்டலத்து வெங்கலாட்டுப் பாக்கூர்வெள்ளான்"

8 "ஜயங்கொண்ட சோழமண்டலத்து செங்காட்டுக்கோட்டத்து மாகனூர்நாட்டு மங்கலமான"

9 "ஜயங்கொண்ட சோழமண்டலத்து குலோத்துங்க சோழ வளநாட்டுக் குன்றத்தூர் நாட்டு மணிமங்கல மாலை பாண்டியனை இருபணிவென்கண்ட சோழச்சதுர்வேதி மங்கலத்து மஹா சபையோம்"

10 "பவேர்கோட்டத்து காரை நாட்டுவெண்ணி பேடாகிய ரணவிக்ரம சதுர்வேதி மங்கலத்து சபையோம்"

11 "ஜயங்கொண்ட சோழமண்டலத்து பவேர் கோட்டகத்து மீயாறு நாட்டுத்திக்காவி வல்லகத்து சபையோம், அரைசூறுநட்டான் ராயிரவன் பல்லவனை உத்தம சோழப் பல்லவராயன்"

12 ஜயங்கொண்ட சோழமண்டலத்து களத்தூர் நாட்டு சோழ கோளகல்லூரிலிருக்கு * * பள்ளிச்செல்வன் * * * குலோத்துங்கச் சோழவராயன் வைத்த திருக்காவிளக்கு.

திருவல்லம் வில்வாதேஸ்வர ஆலயம் மஹா மண்டபத்தின் வடவண்டை மதிலிலுள்ள சாஸனத்திலே கூறுவதாவது.

13 "கோப்பரகேசரிவர்மரான உடையார் ஸ்ரீ அதிராஜேந்திர தேவர்க்கு யாண்டு மூன்றாவது.....அதிகாரிகள் சோழ மண்டலத்து குலாசனிவளநாட்டு புறக்கிளியூர் நாட்டு பூலாங்குடையார் பூசர் ஆதித்தன் தேவனாரான ராஜராஜேந்திர * மூவேந்தவேளாரும்...சேனாபதி உய்யக்கொண்டார் வளநாட்டு திரைமூர்நாட்டு கோட்டார்பழூர்ன் ராஜராஜன் பரிருப்பராக்கதனான வீரசோழ இளங்கோ.....ம் எயில் கோட்டகத்து எயில்நாட்டு காஞ்சி

* மூவேந்த வேளார் என்பது குலோத்துங்கசோழனின் பட்டப்பெயர் 190-வது பக்கத்தில் பார்க்க.

அதிகாரிகள் ராஜராஜேந்திர மூவேந்த வேளார் எலபுர வரிஞ்சைக்களத்து கூறு சோழமண்டலத்து ஜயந்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு இளையான் குடியான் வீதியன் திருமாலிருஞ் சோலையான குவலயதிவாகர மூவேந்தவேளானும் புரவரிஞ்சைக்களம் ஜயங்கொண்ட சோழமண்டலத்து புடைக்கோட்டத்து ஆதிராட்டு அயண்டபூர்க்க கிழான்கண்ட கிருணிக்தானை செம்பியன் பல்லவவரையனும் பழையூர் கோட்டத்து கோளூர் நீலிராஜகேசரி கலலூர்தழுவு பெர்சாசெரி திருச்சிற்றம்பலமுடையானை கிருபசிகாமணி மூவேந்த வேளானும், ஊற்றுக்காட்டுக் கோட்டத்து குன்றநாட்டு மாதூர்மங்கலங் கிழாக்கணவதி பிச்சனை வில்லவன் மூவேந்தவேளானும் ராஜேந்திர சோழவளநாட்டு பொய்கைப்பாக்கத்து குளமுழான் ஏறன் ஈசாங்கி சேகரனை சயதுங்கமூவேந்த வேளானும் முகவெட்டி பையூர் கோட்டத்து ஆரணி நிலை மும்முடிசோழ கல்லூர் நீலையூர்கிழவன் நாகநாராயணனை ராஜநாராயண மூவேந்த வேளானும், புலியூர்க் கோட்டத்து மாங்காடு நாட்டு செம்பரம்பாக்கிழான் நாராயணன் முடிகொண்ட சோழப் பல்லவவரையனும்செங்காட்டுக்கோட்டத்துமாகனூர் நாட்டு கித்தகைதை கல்லூர் ஆதிமங்கலங்கிழான் பிச்சன் அம்பலக்கூத்தனான ஆதிராஜேந்திரத் தமிழதரையனும் ஏயிற்கோட்டத்து எயில்நாட்டு காஞ்சிபுரம் உண்டையான் கருமாணிக்கன் சோமனை சோழராஜமூவேந்த வேளானும் இருந்து நிமந்தஞ்செய்தபடி..... என்று இவ்வகையாகச்சொல்லப்பட்ட சாஸனமானது கி. பி. 1131-ஆண்டில் அதிராஜேந்திர தேவர் அரசுசெய்த காலத்திலேற்பட்டது, இற்றைக்கு 775 வருடமாகின்றது.

இதிற்சொல்லிய கோட்டங்களுக்கும் நாடுகளுக்கும் அதிகாரிகள் பெரும்பாலும் அரசபரம்பரையாராவர். அரசகுடும்பத்தாராகிய பல்லவ, வில்லவ, சோழ, சளுக்கிய பரம்பரையார்

ராஜ அதிகாரிகளாகவும் பிற்றரசர்களாகவு மிருந்தார்களென்று இவைகளால் தெரிபவருகின்றது.

'சளுக்கியவேக்தனுசிய விமலாதித்தனுக்கும் சோழவம்ச ராஜ ராஜாவின் குமாரத்திக்கும் உற்பவித்த குலோத்துங்கச்சோழன் மகா பிரபலமாக அரசு புரிந்தகாலத்தில் சோழ கேரள மண்டல மென்றும் அதிராஜமண்டலமென்றும்ஜயங் கொண்ட சோழ மண்டலமென்றும் அழைக்கப் பட்டதாக இவ்வரசன் ஆளுகையிலேற்பட்ட சாஸனங்கள் தெரிவித்கின்றன.

தொண்டமண்டலத்திலுள்ள கோட்டங்களையும் நாடுகளையும் குலோத்துங்கசோழன்கைப்பற்றிக் கொண்டபடியினால் ஜயங்கொண்டசோழமண்டல மென்று கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும் வீரசிங்கமகாராயர்தேவமகாராயர் சகாப்தம் (1349) (கி-பி-1427) (1351,)கி-பி-1529,இச்சாஸ்பபரம்செய்த இவ்வாண்டுகளிலேற்பட்ட சாசனங்களிலும் ஜயங்கொண்ட தொண்டமண்டல சத்திரகிரிராஜ்ஜியத்தில்புழற்கோட்டத்தில் ஆரணி ஆற்றின் தென்கரையான.....வெள்ளோடையிலிருக்கும் வன்னியராஜ கோத்திரம் ஆண்டியப்பராயகன் குமாரன் முத்துராயகன் என்றும் ஜயங்கொண்ட தொண்ட மண்டலத்தில் சத்திரகிரி ராஜ்பத்தில் மேற்க்குன்ற வளநாடான புழற்கோட்டத்தில் * * * கிருஷ்ணவுடையிலிருக்கும் வன்னியராஜ கோத்திரம் மூக்காராயகன் குமாரன் முத்தியப்பராயகன் என்றும் ஜயங்கொண்ட தொண்டமண்டலவிக்கிரமதொண்டை வளநாட்டில் காஞ்சிதேசத்தில் பாலகோட்டத்தில் கையாற்றுநாட்டில் * * * வன்னிய இன்னப்பிள்ளை தத்திரியர் என்றும் முறையே எழுதப்பட்டுள்ளது.

இச்செப்பேடு சாசனங்கள் சென்னை மியூஜியம் லிபொருட் காக்ஷி சாலையிலிருக்கின்றன.

இதுகாறும் கூறிய 24-கோட்டங்களும் 79-நாடுகளும் உடையது தொண்டமண்டலம் என்றும் சோழமண்டலம் வேறென்றும் நிரூபிக்கப்பட்டது.

சேர, சோழ, பாண்டி, தொண்டமண்டலங்களைக் கட்டியாண்ட அரசர்களில் யாதேனும் அதிபராக்கிரமசாலிகளாயும் தக்கீர சாலிகளாயுமிருந்து மற்றமண்டலங்களைச்செயித்து ஆளும்படியான நிறமைவகித்த அரசர்கள் ஆண்டமண்டலத்தை ஜயங்கொண்ட மண்டலமென்று கூறப்பட்டிருக்கின்றது.

தொண்டமண்டலத்துக்குப் பிரதான நகரமாகிய காஞ்சீபுரம் மற்றைய நாடுகளுக்கு மதுராந்தகமென்று அழைக்கப்பட்டு வருகின்றது. சோழப்பல்லவர் அருகுன்றி ஆந்திர அரசர் ஆளுகையில் சிற்றரசராயிருந்த பின்னர் மகமதியர் ஆங்கிலேயர் ஆளுகையில் சப்புருலத்தவர் வரை மண்டலத்து 79-நாடுகளிலுள்ள மன்னவேடு கிராமங்களில் வசிக்கும் வன்னியர்களுக்கு காஞ்சிமாநகரத்தில் பல்லவ அரசருடம்பத்தார் ஒருவர்க்கு வீரசம்பு என்னும் பட்டப்பெயரும் மகாராட்டாண்மை அதிகாரமும் பண்டைகாலந்தொட்டு இக்காலத்தும் உள்ளன. இவ்வீரசம்பு மகாராட்டார் மற்றைய நாடுகளிலுள்ள நாட்டாண்மைக்காருக்கு மேலான அதிகாரத்தையுடையவர். இக்குடும்பத்தவர் காலமேதத்தால் ஏழ்மையிலிருந்தாலும் இவர்களுக்குப் பூர்வமாயுள்ள சகலமரியாதைகளும் குறைவின்றிநடத்தப்பட்டுவருகின்றன. "ஊற்றுக்காட்டுகோட்டம் குன்றநாடு" இக்காடுவன்னியர் நாட்டாண்மையின்கீழ் வன்னியர் வசிக்கும் கிராமங்கள் அனைத்தும் அடங்கியிருக்கின்றன.

"களத்தூர்கோட்டம் சேழநாடான தென்னார்" இக்காட்டில் வன்னியருக்கே நாட்டாண்மை யிருந்துவருகின்றது. இதை இரண்டாயிரப்பத்து நாடென்று சொல்லப்படுகின்றது. செம்பூர்கோட்டம் அணைக்கட்டுநாடு இதைஆயிரப்பத்துநாடென்று வழங்கப்படுகின்றது. செங்காட்டுகோட்டம் முதூர் நாடு. இக்காடு மூன்றாறு கிராமங்களுக்குத் தலைமையாயிருக்கின்றது. இவைபோலவே ஒவ்வொரு கோட்டங்களில் அடங்கிய நாடுகளும் நாடுகளுக்குப் பிழப்பட்ட வன்னியர் வசிக்கும் மன்னவேடு கிராமங்களுமிருக்கின்றன. வன்னியருக்கு மகாநாடென்றும் நாடென்றும் எவ்வாறிருக்கின்றனவோ அவ்வாறே வணிகருக்கும் வேளாளருக்கும் ஏனோர்க்கு

க்கும் காடென்றும் மகர்காடென்றும் நகரமென்றும் தற்கால த்துமிருக்கின்றன. இவ்வருணபேதங்கள் பண்டைக்காலத்தின் நிலைமைக்கும் தற்கால நிலைமைக்கும் மாறுபட்டிருப்பினும் பூர்வத்திலேற்பட்ட நூல்களில் கூறியுள்ள வருணங்களின் பெயர்கள் மாறுபடவில்லை. சிலவருணத்தவர் தத்தமக்குரிய நூல் களில் தொன்றுதொட்டு வழங்கும் சாதிப்பெயர்களைப்புரட்டி அபார்த்தஞ்செய்து அக்கினயச்சீலையால் பறைப்பதுபோல் மறைக்கின்றனர். இங்ஙனம் மறைப்போர் தற்கால அரசாங்கம் காகரிகம் முதலியனவைகளை மூன்னிட்டேயன்றி வேறல்ல. இது காறும் மேலேகூறிய பிரமாணங்களாலும் அனுபவங்களாலும் கோட்டங்களும் காடுகளும் வேளாளருக்குரிய தென்பதும் வேளாளர் அல்லாத வேறொருக்கு இல்லை யென்பதும் சொல்லிக்கொள்ளுதல் முற்றும் தவறும். யுத்தத்தினாலும் பஞ்சத்தினாலும் தேசங்களில் குடிவளம் குறைவு படுதல் சகசம். குடிவளங்குறைவுபட்ட காலத்தில் அன்னியதாகங களிலிருந்து குடிகளைத்தருவித்து தேசத்தை சேமப்படுத்துகிற வழக்கம் இக்காலத்தும் எக்காலத்துமுண்டு. ஆதொண்டச் சக்கிரவர்த்தி காஞ்சியை யாண்டகாலத்தில் அன்னியதாகங களிலிருந்து பயிரிடுங் குடிகளைத் தருவித்திருக்கலாம். இவ்விதத் தருவித்த குடிகளுக்கே நிலச்சுதந்தரம் விடப்பட்டதென்பதும் ஏனையோருக்கில்லை யென்பதும் சக்கிரவர்த்தி அரசாட்சிக்கு முன்னும் பின்னுமேற்பட்ட சிலாசாஸனங்கள் கண்ணாடிபோல் விளக்குகின்றன. நிலபாத்தியதையைப்பற்றி விசாரணைசெய்யும்படி அரசாங்கத்தாரால் அனுப்பப்பட்டகலெக்டர் பிளேஸ்துரையவர்களுக்குக்காஞ்சிபுரம் ஞானப்பிரகாசப்பண்டாரசன்னிதியவர்கள் காண்பித்தவோலைச்சுவடியிலுள்ளதையே யுண்மையென்று கம்பிமீராசு சைட் என்னுமுத்தகத்தில் வேளாளருக்குப் பெருமை தோன்றும்படி தீர்மானமெழுதி யிருத்தலோசிக்குமளவில் ஆங்கிலேயர் ஆளுகையின் தொடக்கத்தில் அன்னோர் ஆகாமினறி தத்தமிஷ்டம்போல்மிதுரை யவர்களுக்குச் சொல்லிய கதையேயன்றி வேறல்ல. இதனால் கோட்டம் காடென்பதும்மிராசுபாத்தியதையென்பதும் ஸ்ரீ தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலியோருக்கு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

ஒருதேசமானது பண்டலம் கோட்டம் காடு நாடும் எனப்பிரிக்கப்படுவது தேசத்தை ஆளும் அரசர்களாலல்லது குடிகளாலல்ல. ஆதிவில்வட்சட்டினகன் வந்தபல்லவர்கள் தென்தேசத்தின்மீது படையெடுத்துச்சென்று சோழ இராயரை ஜெயித்துத்தங்கள் அரசாட்சியைத் தொண்டமண்டலத்தில் ஸ்தாபித்துக் காஞ்சிமாநகரத்தைப் பிரதான நகரமாக்கினார்கள். இப்பல்லவ அரசர் ஆளுகையில்தான் கோட்டங்கள் ஏற்பட்டன. இதற்போக 1886 ஆம் பர்ஜசஸ்துரையவர்களால் வெளியிடப்பட்ட ஆர்க்கியாலோஜிகல் சர்வே என்னும் புத்தகத்தில் சேஷபிரசெப்பேடு சாஸனத்தில் 17-வதுபட்டயத்தில் 27-வது வரியில் "18-கோட்டத்து வன்னியர் மின்டன்" என்பதில் வன்னியர்தான் கோட்டத்திற்கு அதிபதிகளென உள்ளவ்வகை கெல்லிக்கரியெனவிளங்கும். இதுபோலவே கோட்டங்களுக்கு அதிகாரிகள்வன்னியரெனவனேகசாசனங்களில்வரையப்பட்டிருக்கின்றது. மேற்கூறியவற்றில் பிரதான கோட்டம் சென்னையை யடுத்த புலற்கோட்டம் அல்லது புழற்கோட்டம். கோட்டம் என்பதுகோட்டையெனப் பொருள்படும். இக்கோட்டைகளில் நிற்றாசர்கள் வசித்துவந்தார்கள். காஞ்சியையாண்ட பல்லவராஜனுக்கு மேம்பட்டிகோட்டங்களுக்கு அதிபதிகளாகிய இருபத்துநான்குநிற்றாசர்கள் பகுதிகட்டளையுண்டு. நிற்றாசர்களுக்குக் குறும்பர்(குறுநிலமன்னர்) வன்னியர் புரோசர், நீடூர், *வேளார் சாமகர் என்னும் பெயர்கள்வழங்குவதுண்டு.

எங்நுன்னமெனிலமெரும்பற்றபுலியூர் கம்பியியற்றிவதிருவாலாயுடையார் திருவிளையாடற்புராணம் பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த திருவிளையாடலில் 16-17-18-19-வது செய்யுள்களில் "சேனையோட்டும் சாமகர்" "வன்னியத்தலைவர்" "பன்றிக்குறும்பர் பன்னிருவர்" "வன்னியராகி" என்கிற சொற்பிரயோகங்கள் முறையே வருகின்றன. இம்மொழிகள் வன்னியர்கள் சேனைத்தலைவர்கள் மந்திரிகள் நிற்றாசர்கள் என்னும் பொருளிலும் வழங்கும். ஞானவாசிட்டம் அபிநதர் கந்த 7-வதுசெய்யுள் "கல்குரவுநீரையா வன்னியராவோ மந்திரிலசற்றுதனிலை கிலீலடன்னராவோம்".

* மீவன்னியில் உயர்ந்தவரைப்பிரதானம்.

இங்குவன்னியர் எல்லும் சொல்நிற்றரசர் சாமந்தர் என்பொருள்படும்.

கட்டாலம் 41-வது அகவல்.

கருமுகில்கவரிக்கதழ்கட்பிறழெயிற்
றரிதருகுட்டியாயபன்னிரண்டினைச்
செங்கோன்முனையிட்டருணிசேக்கெச்
சொலிசனவெண்ணும்படர்கோக்காட்டுத்
தருமப்பெரும்பயிருலருபெறவிளைக்கு
நாற்படைவன்னியராட்சியபெருமான்.

இங்கு வன்னியரென்பது இரதகஜ துரகபதாதிகளாகிய நால்வகைசேனைகளையுடைய அரசரென்றும் சேனைத்தலைவரென்றும் பொருள்படும்.

அருணாசலப்புராணம் வல்லாளமகாராஜா சருக்கம்
19-வது செய்யுள்

" மூவகையுள்வன்னிகுலத்தினில் வருமன்னு "

இங்கு வன்னிகுலம் என்பது அரசர்வகுப்புகள்முன்றில் அங்கிகுலமெனப்பொருள்படும்.

இப்புத்தகம் 161-62-வது பக்கங்களில் வன்னியென்பது அரசருக்குப்பொதுவாயும் சிறப்பாயும் தூலாசரியர்களால் வழங்கப்பட்டுள்ளவைகளைக்கண்டுகொள்க.

பன்மிக்குறும்பர்பன்னிருவர், இங்கு குறும்பரென்பதுசிற்றரசர் எனப்பொருள்படும். பிற்பலகல்லெடு 753-வதுசூத்திரம் "குறும்பர் புரோசர் குறுநிலமன்னர்" என்றுகூறியிருத்தலால் குறும்பர் என்பது கோட்டங்களுக்கு அதிபதிகளாயிய பல்லவர் வன்னியர் என்றேபொருள்படும். உண்மையிவ்வாறிருக்க ஆங்கிலேயபண்டிதர்களில் சிலர் ஆதாரமின்றி அநுபவமில்லாதார் வெற்றுரையே சத்தம்பத்தங்களில் மனம்போனவாறு வரைந்திருக்கின்றனர்.

மேற்கூறிய சிற்றரசர்கள்பல்லவமரபினரே. காம்முன்னர் கூறியவாறு பல்லவ அரசாட்சி சளுக்கியவேந்தரால் மாறுபட்டது. ஆயினும்சிற்றரசர்கள்சிலகட்டங்களிலிருந்துதங்கள் ஆதி

கையைச்செலுத்திக்கொண்டு சளுக்கியஅரசர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தனர். சளுக்கிய அரசாட்சிதாழ்வுற்றகாலத்தில்சிற்றரசர்களாகிய பல்லவர்களின் கொடுங்கோன்மை அதிகரிக்கத் தலைப்பட்டது. இக்கொடுங்கோன்மையில் அதிகரித்தவன்புயற்கோட்டத்துப் பல்லவராயன். இச்சுறுநிலமன்னனை அடக்கும்பொருட்டுஇராஜகேசரிவர்மனைகுலோத்துங்கசோழனது தாதிக்கு உதித்தவனும் சேனாதிபதியுமாகிய ஆதொண்டனென்பவன் தன்சேனைகளோடு புயற்கோட்டத்துப் பல்லவராயனை எதிர்த்தான். அப்போது அவனுடையசேனையில்முக்காற்பங்கு மடிந்துபோயிற்று. பிறகுசென்னைக்கு வடமேற்குப் பக்கத்தில் 8-மையில் தூரத்திலுள்ளசோழன்பேடு என்னுமிடத்தில் அடைக்கலம் புகுந்தான். அன்று இரவு சொற்பனத்தில் சிவபிரான் தோன்றிச்சொன்னதாவது "நீ உன்சைனியத்தோடு யானைமீது ஏறி யுத்தத்திற்குச்செல் அப்போது உன் யானைக்காலில்முல்லைக்கொடி சுற்றிக்கொள்ளும் அதையுன் வாளால் அறுக்கையில் யானைக்கு இரத்தம் வடியும் நீ அதைப் பரிசோதிக்கையில் ஓர்இலிங்கம்தோன்றும்" என்றனர். அவ்வாறுசேர்ந்ததினால் ஆதொண்டன் தைரியங்கொண்டு புயற்கோட்டத்துப் பல்லவனைச்செயித்தான். பின்னர்முல்லைக்கொடிக்குள்கண்ட ஸ்வாமிக்குப்பணிந்து அவருக்குக்கோயிற்கட்டி கோயிலில் பல்லவக்கோட்டத்திலிவைத்திருந்த இரண்டெருக்கன்தூணைநோட்டினான். சுவாமிபெயர் மாலைமணியீஸ்வரர், அம்மன்பெயர்சுவர்ணாம்பிகை. ஊர்பெயர் திருமுல்லைவாயில். இச்சரித்திரம் அக்கோயிலிலுள்ள சின்னங்களால்நன்குவிளங்கும். ஆதொண்டனுக்குத்தொண்டமண்டலமென வழங்கிற்று. ஆதொண்டனுக்குத்தொண்டமான் சக்கிரவர்த்தியென்னும் பெயருமுண்டு. தாதிக்கு ஆண்பால்தாசன் தேவஅடியாளுக்கு தேவஅடியான். தாசன் என்பதற்குப் பிரதிபதமதொண்டனஅடியான். தொண்டமான் தாதிவயிற்றுப் பிள்ளையாகையால் தொண்டன் என அழைக்கப்பட்டான் என்கிறவாருமுளர். அவனால் ஜெயிக்கப்பட்டகாட்டுக்குத் தொண்டகாடென்று வழங்கிற்று.

டாக்டர் ஆப்பர்ட்டரை 1888-89-வது ஆண்டில் இந்து தேச பூர்வீக குடிகள் மீது எழுதியபுத்தகம் 227-28-வது பக்கங்களிலும் டெயிலர்துரை யெழுதிய கேட்லாக் புத்தகம் 3-வது வாலியம் 426-27-வது பக்கங்களிலும் எழுதியுள்ளதாவது:—

The Madras Journal of literature & Science
for the Session 1888-89.
On the Original inhabitants of Bharatavarsa or India.
BY
Dr. Gustav Oppert. Pages 227-228 & also See Taylor's
Catalogue Raisonne Vol. III, pp. 426-427.

"As Kulottunga observed how thinly the land was inhabited, he despatched his minister with money to other Countries to induce people to immigrate into the newly-acquired district. The minister accordingly returned with many boys and girls of various Castes, and the King ordered them to be married. This done he placed Adonda on the throne at Kanci. Kulothunga then asked the minister to propose a suitable name for the country. In spite of the high position which Adonda had meanwhile secured, the minister still despised him on account of his illegitimate birth. He suggested therefore that the new territory should be called Tondamandalam (the district of slaves) and the King without any suspicion named it so."

"ஆதொண்டனால் ஜெயிக்கப்பட்ட காட்டில் கொஞ்சம் குடிகள் வாழ்ந்திருக்கபடியால் குலோத்துங்கசோழன் தன் மந்திரியினிடத்தில் பணங்கொடுத்து அனுப்பிபதால் தொண்டை சோழ பாண்டியகாடுகளினின்று பல ஜாதிப்பிள்ளைகளையும் பெண் களையும் கொண்டுவந்து இக்கப்புதுகாட்டில் குடியேற்றுவித்தான். இப்பெண்களும் பிள்ளைகளும் அரசன் ஆஜ்ஞைபால் மணம் செய்துகொண்டார். இதன்பின்னர் அரசன் ஆதொண்டனைக்காஞ்சிபுரத்திற்கு அரசனுக்குவித்தது (இருக்கும். பிற காட்டினின்றும் விலைகொடுத்து கொண்டுவந்து உறைவிடத்தைக்காட்டியபடியால் வேளாளரில் பெருக்குடிகளானவரையில்

கொண்டைகட்டிகள் கொண்டுவிட்டனர் என்றும் ஒருசாரார் கூறுகின்றனர்.) பின்னர் குலோத்துங்கன் அந்நாட்டிற்கு என் னபெயரிட்டாலுமெனத் தம்மந்திரிவினவினான். அவ்வமைச்ச னே ஆதொண்டன் இதற்கிடையில் உயர்ந்த அந்தஸ்தினை யடைந்திருந்தபோதிலும் அவன் தாயினிற்றுப்பிள்ளையாகையால் அவனை யின்னம் அவமதித்தேவந்தான். ஆதலால் புதியநாட்டிக்கு அடிமைஅல்லது அடியான் நாடு எனப்பொருள்பட தொண்டன் மண்டலமெனப் பெயரிட்டான். அரசனும் அங்கேயமின்றி அந்நாட்டிற்கு அப்பெயரையே யிட்டான்." அன்றியும் ஆதொண்டன் ஜெயித்த நாட்டிலுள்ள காட்டைத் திருத்திப் பயிரிடுவதற்குச்சோழதேசத்தினின்றும் தொண்டைதேசத்தினின் றும் அடிமைகளாகக் குடியேற்றப்பெற்ற வேளாளர் வசித்த நாடாகையால்தொண்ட நாடென அழைக்கப்பட்ட தென்ற லும் அமையும். சிலர் ஏகம்பருக்குக் காடாட்சிதொண்டு புரிந் தமையால்தொண்டநாடென்றும் சிலர் தொண்டகன் ஆண்டநா டாகையால் தொண்டகநாடென்றும் தொண்டநாடென்றும் வழ ங்கியதென்கிறார்கள். முன்னரே இந்நாட்டில் சோழகுடிகள் வாழ்ந்திருந்தபோதிலும் வேளாளர்கள் குடியேற்றப்பெற்றபடி யாலும் குடியேறிய வேளாளர்களால் முற்றிலும் தொண்ட நாடு திருத்தப்பட்டதெனபது பொருந்தாது. இவ்வேளாளர் களால் கோட்டங்களேற்பட்டனவென்பது வெற்றுரை. இவ் வேளாளர்களுக்குத் தாங்கள் குடியிருந்த தொண்டைநாட்டிலும் சோழநாட்டிலும் பிழைப்புக்கு இடமில்லாமற்தொண்ட நாட் டில் குடியேறியதாகவிளங்கும். தொண்டநாட்டில் சிற்சில பாக தத்தில் காடு காம்பு திருத்தி நிலவளமாக்கியபடியால் அக்கிரா மத்திற்குமுன்னோர் வழக்கத்தையனுசரித்து நத்தம் என்னும் பெயர் வழங்கி யுழுவச்சின்னமாகிய கலப்பையையும் சூலத்தை யும் எல்லைக்கற்களில் பூர்வபல்லவராயர் வழக்கத்தை யனுசரி த்து ஆதொண்டன் ஏற்படுத்தி யிருக்கலாம். இங்ஙனம்குடியே றிய வேளாளர்கள் பூர்வீகப்பல்லவ குடிகளுக்கு எஜமானர்க ளாகி நிலச்சுதந்தரம்பெற்றனர் என்பதனையுணரலாம். ஏற் குமாயின் பல்லவர்வழிக்கும்பிராயங்களுக்கு மன்னவேடு என்று

அழைக்கப்பட்டி அவ்வெல்லைகற்களுக்குஆக்ஞாசக்கிரம் போட்டிருப்பானேன்? இவ்வாறே வேதியர்வசிக்கும் அக்கிராரங்களின் எல்லை கற்களுக்குப்பிராமணவாமனரூபமும் குடையும் வரைந்திருப்பானேன்? இச்சின்னங்களுடைய கிராமங்களில் வேதியர் வேந்தர் வேளாளர் வசித்துவந்தனர். அக்கிராமங்கள் காளத்திவரையில் பைமாஷ்கணக்கில் அக்கிராரம் மன்னவேடு நத்தம் என வழங்கிவருதலைக்காணலாம். ஆனால் இப்போது ஆங்கிலேய அரசாட்சியில்மன்னவேட்டுக்கிராமத்தில் வேளாளரும் வேளாளர் கிராமத்தில் வன்னியரும் பார்ப்பார்கிராமத்தில் அன்னியரும் குடியேறத்தலைதடுமாற்ற முற்றது. இத்தியாதி கிபாயங்களால் தொண்டைநாட்டிலுள்ள கோட்டங்களுக்குக் குறுநிலமன்னராயிருந்த வன்னியருக்கு நிலபாத்தியதையில்லையென்பதும் அவர்கள் வேளாளருக்குக்கீழ்க்குடிகளென்பதும் இது சம்பந்தமாய் மிராசிரைட் என்னும் புத்தகத்திலும் செங்கல்பட்டு மானுவலென்னும் புத்தகத்திலும் எழுதியவிஷயங்கள் முரண்பட்டொழியும். இத்தொண்டன் குலோத்துங்கசோழன் வைப்பாட்டியாகிய நாகரத்தினமென்னும் தாசியிற்றுப் பிள்ளையாதலால் "அவன் தாசன் அல்லதுதொண்டன் என்னும்அநுத்தமதருமபெயர்ஏற்றுள்ளபோலும், தொண்டனுல் ஜெயிக்கப்பட்ட பல்லவர்கள் யாவரும் தொண்டர்களாவர்களா? (அடிமைகளாவார்களா?) ஆனுல்கொண்டு விடப்பட்ட தளுவர் சோழியராகிய வேளாளருக்குப்பல்லவர் (வன்னியர்) யாவரும் அடிமைகளென்று கண்மூடித்தனமாய்ச் சொல்லுதலும் எழுதலும் உண்மையறியா மதியீனமே. தற்காலம் பல்லவர்களில் சிலர்வறுமையால் நிலங்களைவிற்றுக் கீழ்க்குடிகளாக விருக்கின்றனர். பல்லவர் அரசாட்சி செல்லுகையில் வேளாளர் அவர்களுக்குக் கீழ்க்குடிகளும் அடிமைகளுமாயிருந்தனர். வேளாளர் எக்காலமும் பயிரிடும் குடிகளாகையால் அரசுபுரிந்த பல்லவர்கள் இவர்களுக்கு அடிமையெனக் கூறுதல் எவ்வாற்றலும் பொருந்தாது.

இதுகாறும் சோழ சோழ பாண்டிய பல்லவகளுக்கிய அரசர் பரம்பரையைப்பற்றி வடமொழி தென்மொழி பிரமாணங்

களானும் சாம்பிரதாய வாற்றலும் ஐதிகப்பிரமாணத்தானும் ஐயந்திரிபறமேலே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வரசர்கள் பூர்வத்திலேயே பொருவருக்கொருவர் பெண்கொள்ளல் கொடுத்தல் முதலியவைகளில் கலந்திருந்தார்களென்றும் இவ்வரசபரம்பரையாரைச் சம்புகுலத்தவர், வன்னியர், பல்லவர், அரசுவள்ளிகள், படையாட்சிகளென்று அழைக்கப்பட்டு வருகின்றனரென்றும் பிரத்தியட்ச பிரமாணங்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இவர்களில் சேரன் சந்தியார் திருவனந்தபுரம் இதைச்சேர்ந்த ஏனைநாடுகளிலும் சாமந்தர் வில்லவராயன் வானவன் வன்னியன் பல்லவராயன்முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றனர். சோழ அரசபரம்பரையாரோடு பல்லவ களும் கலந்த அரசர்களும் கலந்துபல்லவச்சோழர் (இப்பல்லவர்சோழச்சளுக்கியரென வழங்கிவந்தனர். தற்காலமவழங்குவதுபோல் பூர்வமேற்பட்ட பற்பலசாஸனங்களில் பல்லவசம்புவராயன், சம்புவராயன், பல்லவராயன் வன்னியராயன் காயகன் முதலிய பிரயோகங்களிருக்கின்றன. இவ்வகையானவர்களில் சம்புகுலத்தானுகிய ஸ்ரீசேகரசோழன் 1558ம் வருடம்வரையில் தஞ்சையில் அரசியற்றினனென்று சரித்திரங்கூறுகின்றது. இவ்வரசனது பரம்பரையார் தஞ்சை திருச்சினுபள்ளி முதலிய ஜில்லாக்களில் அதிகமாகவசித்து வருதல் பிரத்தியட்சம். அரியலூர் சமஸ்தானத்தைச்சேர்ந்த அரசகுடும்பத்தவருக்குமானங்காத்த மழவவொப்பில்லாத விஜயரங்கன் என்னுமபட்டப்பெயர் பூர்வந்தொட்டுவழங்கப்பட்டு வருகின்றது. இங்ஙனமவழங்கப்படுவதற்கிணங்க அரியலூரிலுள்ள விஷ்ணு ஆலயத்தின் பொருட்டு வரிவசூல் செய்யுமபடி சாலிவாகனசகாப்தம 1652 ல் ஏற்பட்ட சாஸனத்தில் அங்கப்பமழவராயனென்றும் நிலசம்மந்தமாகக்கண்ணுசாரியென்னும் ஓர்தட்டான்கிமித்தம் ஏற்பட்டசாஸனத்திலே சாலிவாகனசகாப்தம் 1431 ல் குமார விஜயாங்கப்பமழவராயரென்றும் எழுதப்பட்டிருக்கின்றது. இலையன்நியும் வயித்தீஸ்வரன கோயிலின் திருக்குளத்தின் வடபக்கத்திலுள்ள நாற்கல்பண்டபத்தின சம்பந்தல அரியலூர் துரையவர்களின்உருவமும் அவரதுகையிங்கரியமும்

வரையப்பட்டிருக்கின்றது. இதனால் அரியலூர் சமஸ்தானத்தைச்சேர்ந்தவர்கள் ஷை சம்புகுலத்தவரென்றும் சோழ வருப்பைச்சேர்ந்தவர்களென்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

அரியலூர் அரசபரம்பரையின் தெருங்கிய சுற்றத்தாராகிய உடையாரபாளையம் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்களைக் கச்சிக்கலியாணதோழவாகவென்றுதொன்றுதொட்டு அழைக்கப்பட்டுவருகின்றது. உடையார்பாளையத்தையபித்தது ஜெயங்கொண்டசோழபுரம். இதையபித்தகுகைகொண்டசோழபுரம். இதுபத்தாம் நூற்றாண்டில் சோழஅரசர்களுக்குப்பிரதானகரமாயிருந்தது. இதில் 176 அடியுயரமுள்ள ஓர்கோபுரம் சம்புகுலமன்னரால் கட்டப்பட்டது. இராஜகேசரிவர்மனுகியமூதலாவதுகுலோத்துங்கசோழனுல பல்லவசோழர்களாண்டுவந்த காஞ்சிமாநகரம் ஜெயிக்கப்பட்டது. இதன்பின்னர் காஞ்சிபுரத்திலிருந்து பல்லவச்சோழபரம்பரையார் உடையார்பாளையத்தில் குடிபேயறியிருக்கவேண்டுமென்று, பின்வரும் விஷயங்களால் விளக்கப்படும். இவ்வுடையார் பாளையஅரசகும்பத்தார் வழங்கும் பட்டப்பெயரால்காஞ்சிபுரந்தை ஆண்டவர்களென்றும் வரதராஜபெருமாள் ஆலயத்தில் இவர்கள் பெயரால் உற்சவம் தற்போதும் நடத்தப்பட்டுவருவதாலும் காஞ்சியிலுள்ள ஆலயங்கள் பெரும்பாலும் அப்பல்லவர்களால் கட்டப்பட்டிருத்தலாலும் ஒருக்கால் பல்லவர்கள் ஆளுகை திருச்சிராபள்ளிவரையிலிருந்தபோதினும் இவர்கள் காஞ்சிமாநகரத்திலிருந்துவந்த பல்லவச்சோழர்களென்று நிருபிக்கப் பலபிரமாணங்களுண்டு. இவ்வரசபரம்பரையார்க்கு ஸ்ரீரங்கத்தில்கட்டிக்கும மரியாதையினுலும் காஞ்சிமாநகரைவிட்டு உடையார்பாளையம் போனபின்பு இவர்கள் குலதெய்வமாக பூசித்துவந்த சொன்னகாமாட்சியம்மனையும் ஏகாம்பரநாதரையும் வரதராஜபெருமானையும் வருஷந்தோறும் காஞ்சிபுரத்திலிருந்து ஏறப்பண்ணியுடையார் பாளையம் வரையிலும்போய்வரும்வழக்கத்தினுலும் இதற்கு அதிகமாக ஆங்காங்கு மண்டபங்களிருத்தலாலும் உடையார்பாளையத்திலுள்ள அரசகுப்பினர்கள் காஞ்சிபுரத்தினின்று போனவர்களென்றுரைக்கப்படுகின்றது.

அன்றியும் உடையாரென்னுஞ் சொல்முதலாவது குலோத்துங்கனுக்கும் இவன் பின் வந்த அரசர்களுக்கும் சாஸனங்களில் பிரயோகித்திருப்பதினுலும் ஷை குலோத்துங்கன் மீது பாடிய

கலிங்கத்துப் பரணி

காளிக்குக் கூளிபாடியது 53-54-செய்யுள்.

தொண்டையர்க்கரசின்முன்வருஞ்சுரவி
துங்கவேள்கொடியுயர்த்கோன்
வண்டையர்க்கரசு பல்லவர்க்கரசு
மால்களிற்றின்மிசைகொள்ளவே.

மறித்தோடியெவ்வரசுஞ்சரியவென்று
வருமனுக்கைப் பல்லவர்கோன்வளைவேந்த
னெறித்தோடையிலங்குநடைக்களிற்றின்மேற்கொண்
டிரைவேட்டபெரும்புலிபோலிகன்மேற்செல்ல.

"பல்லவர்க்கரசு" "பல்லவர்கோன்" என்று கூறியிருக்கின்றமையால் பல்லவச்சோழர்களும்சோழப்பல்லவர்களும் ஒன்றுபட்டிருந்தவர்களென்று தெற்றெனவிளங்குகின்றது; இவர்களது பந்துக்கள்கீட்டலங்குடி கல்லகாயகடிரம் பருவூர்பிச்சவரம் (பித்தர்புரம்) முதலிய விடங்களிலும் ஏனைய விடங்களிலு மிருக்கின்றனர். இவர்களது அரசு தறுகியபின்னரும் ஆந்திர அரசர் ஆளுகையிலும் ஆங்கிலேயர் ஆளுகையின் மூன்னரும் பிரபலமாயிருந்தவர்கள். அவ்வளவிலேயில் தற்காலமில்லாவிடினும் அவர்களுக்குரிய ஜாதிகமும் அவரவர்கள் கோத்திரப்பெயர் முதலியவேல மருமமிருக்கின்றன.

பாண்டியவம்மிசத்தில் சந்திரசேகர பாண்டியனுக்குப் பின்னர் அதிவீராமபாண்டியன் சுந்தரபாண்டியன் முதலிய பெயர்கள் கி-பி. 1578 முதல் 1623-ம் ஆவு வரையில் சாஸனங்களில் அரசுபுரிந்திருந்தவர்களென்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. இப்பாண்டிய அரசர்களில் ஒருவனுகிய சிவகிரிவரகுணபாண்டியன் மீது கடிகைமுத்துப் புலவரால் திக்குவிஜயமென்னும்பிரபந்தமும் சிவகிரிகாதலும் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளிலும் கல்லாடத்திலும் கெல்சன்மானுவல் இவற்

கைகரித்திரமுதலியவைகளிலும் வன்னியன்என்னும் பிரயோகம் பாண்டியஅரசரைக்குறிக்கின்றதென்பதைஆராவது அத்தியாயத்தில் பார்க்கவும். 1767ம்ஆண்டு கர்னல்காம்பல் துரை அவர்கள் சிவகிரிக்குச்சென்றபோது அது இருபதினாயிரம்ஜனத்தொகையடங்கியதென்றும் பலமானகோட்டையுடைய தென்றும் திருநெல்வேலி சரித்திரத்தில் சொல்லப்படுகின்றது. இதனால் பாண்டியவம்சம் பூர்வகாலந்தொட்டு இக்காள்வரையிலிருக்கின்றதென்றும் இவ்வம்சத்தவர் சேர சோழராடுகளிலும் இலங்கையிலும் ஏராளமாயிருக்கின்றார்களென்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

திருநெல்வேலிஜில்லாவிலுள்ளஜமீன்தார்களுக்குள் ஏழாயிரம் பண்ணை ஜமீன்தாரவர்கள் பூர்வ அரசர் பரம்பரையைச்சேர்ந்தவர். மற்ற ஜமீன்தார்களுக்குள் சுபகாரியங்கள் நடத்தப்படுமானால் இவருக்குத்தாம்பூலம்வைத்து மரியாதைசெய்து உத்தரவுபெற்றுக் கலியாணம் நடத்திவந்தார்கள். இவ்வழக்கம் காலபேதத்தால் தற்காலம் முன்போல நடவாவிட்டாலும் ஏறக்குறைய மற்றஜமீன்தாரிகள் மரியாதைசெய்து வருகின்றனர். இதனால்ஏழாயிரம் பண்ணை அரசகும்பத்தார் பூர்வம் பிரபலமாயிருந்தவர்களென்று தெரியவருகின்றது. கேரளன்மாஹாத்மியம் மதவர் சரித்திரம் சொல்லுமிடத்தில் இராமராகபுரம் சேதுபதி அவர்களுடைய சமஸ்தான சபைக்கு ஜமீன்தாரிகள் போவார்களானில் அவருக்குத் தீர்க்கதண்டநமஸ்காரஞ்செய்துஎழுந்து துட்காரமல்கைகட்டி நிற்கவேண்டுமென்றும்அவரிஏழாயிரம்பண்ணைமுதலிய அரசர்கள் போவாராகில் கைசேதுமறி அவர்களுக்குயாதொரு மரியாதையுஞ்செய்கிறதில்லைசேதுபதியவர்களே அவர்களுக்கு மரியாதை செய்யவேண்டியதென்றும்எழுதப்பட்டிருக்கின்றது. இதனால் மதவர்வேறுஎன்றும் சிவகிரி ஏழாயிரம்பண்ணை குடும்பத்தவர்கள்வேறு என்றும் விளங்குகின்றது

அரியலூர் உடையார் பாளையம் கடலங்குடி பருவூர் பிச்சவரம் முதலிய விடங்களிலுள்ளவர்கள் பூர்வ தமிழ் கூட்டு அரசபரம்பரைச் சேர்ந்தவர்களென்றும் சம்புவரையரென்றும் பல்லவச்சோழரென்றும் வன்னியரென்றும் தற்காலத்தி

லும் அழைக்கப்பட்டு வருகின்றார்களென்றும் இவர்கள் ஒருவர்க்கொருவர் பெண்கொள்ளல் கொடுத்தல் முதலியவைகளில் கலந்திருக்கின்றன என்றும் மேலே நிரூபித்தாம். இங்ஙனமிருப்ப திருநெல்வேலிமானுவல் எழுதிய லூயிஸ்மூர் (Lewis Moore) துரையவர்கள் அரியலூர் உடையார் பாளையம் ஜமீன்தார்களைக் கள்ளஜாதியென்று யாதொரு ஆதாரங்காட்டாமல் அனுபவமில்லார் சொல்லிக்கொண்டு வரைந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

Mannal of the Trichinopoly District Page 260.

"The Zemindars of Ariyalur and Udaiyarpolayam however are Kallars by caste and till they received their present sanads held their estates as arasukavalgars* * * their presnt estates were handed over to them on Zamindari tenure"

திருநெல்வேலி ஜில்லா மானுவல் என்னும் புத்தகம் 260-வது பக்கத்தில் "ஆயினும் அரியலூர் உடையார்பாளையம்ஜமீன்தார்கள்கள்ளர்மரபைச்சேர்ந்தவர்கள். அவர்கள் இப்போது கொடுத்துள்ள சங்கத் பெறும்பரிபத்தம் தங்கள் சொத்துகளை அரசுகாவல் சுதந்தரத்தில் அனுபவித்து வந்தார்கள் * * * அவரவர்கள் பூஸ்திதிஅவர்களுக்கு ஜமீன்தாரி சுதந்தரத்தில் ஒப்புவிக்கப்பட்டது."

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆந்திர அரசர் ஆளுகையிலும் மகமதியர் ஆளுகையிலும் இவ்வரசவகுப்பினர் தொரசராயிருந்து பாளையப்பட்டனென்றும் அரசுகாவலென்றும் அழைக்கப்பட்டு வந்தனர்.

இவர்களுடைய செல்வாக்கும் பெருமையும் மகம்மதியர் ஆளுகையிலும் ஈஸ்திந்தியர் ஆளுகையிலும் குறைவுபட்டதற்குப் பலகாரணங்களிருக்கின்றன. அவையனைத்தும்சரித்திரங்களில் தெளிந்து கொள்க. இவர்களே கள்ள ஜாதியென்று கற்பித்து இவர்களது பூர்வோத்திரமுள்ளபடியின்னதென்று அறியாமல் எழுதியதேயன்றி வேறில்லை. ஆனால் இவ்விரு ஜமீன்தார்களும் தங்களே யிவ்வகையாக வெழுதியிருத்தலே அறியார் போலும்.

ஒன்பதாவது அத்தியாயம்.

இவ்வத்தியாயத்தில் க்ஷத்திரிய ஸ்தானத்தை வகிப்பதற்கு ஆவல்கொண்ட சில ஜாதியாரைப் பற்றியும் வலங்கை யென்னும் தொழிலைப்பற்றியும் பூர்வசாலைங்களிலுள்ளதையும் ஆசார்யரின் ஒருசென்பதையும் சென்னபிரிபோர்ட்டுகளின் முரண்க்ளையும் முறையேகூறுவாம்.

தென் தேசத்திலே தமிழ்நாடுகளில் தொன்றுதொட்டு வசிப்பவர்களும், பிங்கலமுதலிய நிகண்டு திவாகரங்களிலும் ஏனையநூல்களிலும் கூறப்பட்டுள்ள ஜாதியார்களில் அடங்காதவர்களும் தமிழ் தாயகங்களுக்கு யாதொரு சம்பந்தமில்லாத குஜராத்தியம் மாடம் தெலுங்கமுதலிய தேயங்களிலிருந்து தமிழ்நாடுகளில் குடியேறியவர்களும் க்ஷத்திரியரெனச் சொல்லிக்கொள்கின்றனர். இவர்களில் வடநாடுகளிலிருந்து குடியேறிய ஜாதிகளைப்பற்றி அவ்வந்நாடுகளில் வழங்கும் பாஷைகளிலுள்ள நூல்களில் அவர்கள் சொல்லிக்கொள்ளுதல்போல் இருக்கின்றதோ அல்லது வேறுவகையாக இருக்கின்றதோ என்பதின் உண்மைதெரியவில்லை. ஆனல் மாட்டியர் குஜராத்தியர் பொந்திலியர் தெலுங்கர் கன்னடர் எனக்கூறுதலால் இன்ன ஜாதியாரெனன்று வரையில் அறிதல் கூடாமை. எங்ஙனமெனின் கவரை என்று சொல்லும் ஓர்வகையினர் வையசெனன்றும் க்ஷத்திரியரென்றும் தாதனமாக அங்கோரால் வெளியிடப்பட்ட புத்தகங்களில் வரையப்பட்டிருகின்றது. இதுபோல் பட்டுநூல் ஜாதியாரும் பகர்கின்றனர். ஆகையால் இவ்வகையாகப்பலரும் ஜாதிகளின் உண்மை விளக்காமையால் அற்றை நீக்கித் தமிழ்நாடுகளில் தொன்றுதொட்டு வசிக்கும் ஜாதிகளுக்குறித்து நிகண்டுமுதலிய நூல்களில் வரைந்திருக்கும் வருணங்களில் க்ஷத்திரியரெனப் பூர்வநூலாட்சிக்குமாறுசிலவருப்பினர் சொல்லிக்கொள்ளுதல் பொருந்துமாபொருந்தாதா வென்பதைப்பற்றி யியாயவாயலாய்ச்சிர்துக்கிப்பார்ப்பாம். இங்ஙனம் சொல்லிக்கொள்பவர்களில் நூல்வழக்குக்கு மேலிடாதமாக வேளாளர்களையெல்லாம்க்ஷத்திரியரெனவும் வெளியிட்ட புத்தகங்களிலுள்ளவை வருமாறு.

வேளாளர் க்ஷத்திரரா? வைசியரா? க்ஷத்திரியரா?

தொல்காப்பியமும் பொருளதிகாரம்

புறத்திணையியல் 75-வ்து சூத்திரம்

"அறுவகைப்பட்டபார்ப்பனபக்கமு
மைவகைமரபினரசர்பக்கமு
மிருமூன்றுமரபினேனோர்பக்கமும்"

(இ.ள்) அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும்=ஆறுகூற்றிலுட்பட்ட பார்ப்பிபற் கூறும்: ஆறுபார்ப்பிலென்னுவகையெனைதனுண் அவை தலையிடை கடையென ஒன்றும் மூன்றுப்பதினெட்டாம் என்றுகொள்க; அவை ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் கொடுத்தல் கோடல் என ஆறும்.

ஐவகைமரபின் அரசர்பக்கமும்=ஓதல் ஈதல் வேட்டல் காத்தல் தண்டஞ்செய்தல் என்னும் ஐவகையிலக்கணத்தையுடைய அரசர்பக்கமும்: வகையென்றதனுன் முற்கூறியமூவரும் பொதுவும் பிற்கூறுமிரண்டுஞ் சிறப்புமாதல் கொள்க பார்ப்பார்க்குரியவாக விதந்தவேள்வி பொழிந்தவேள்விகளுள் இராசசூயமும் அசுவமேதவேள்வியும் பிறவென அரசர்க்குரிய வேள்வியாம்.

இருமூன்றுமரபின் ஏனோர் பக்கமும்=ஓதலும் வேட்டலும் ஈதலும் உழவும் கிரையோம்பலும் வாணிகமுமாகிய அறுவகை இலக்கணத்தையுடைய வணிகர் பக்கமும், வேதம் ஒழிந்தன ஓதலும் ஈதலும் உழவும் கிரையோம்பலும் வாணிகமும் வழிபாடுமாகிய அறுவகை இலக்கணத்தையுடைய வேளாளர் பக்கமும்: வணிகரையும் வேளாளரையும் வேறுகூறுது இருமூன்றுமரபினேனோரெனக் கூட்டலுமாதினர் வழிபாடும் வேள்வியும் ஒழிந்தொழிலை இருவருக்கு மொத்தலின். இனிவேளாளர்க்கு வழிபாடுகொள்ளாது பெண்கோட்டலைப்பற்றி வேட்டல் உளதென்று வேட்டலைக்கூட்டி ஆறென்பாருமுளர். வழிபாடு இருவகை வேளாளர்க்கு உரித்து. இனிவேட்டலைக்கட்டுவோர் அரசரும் சிறப்பெய்தாத வேளாளர்க்கே வழிபாடு உரித்தென்பர். பக்கமென்பதனுன் வணிகர்க்கு வேளாளர்க் கன்னியர் கட்டோன்றினுரையும் அடக்குக.

மேல்காட்டிய தொல்காப்பிய சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் செய்தவுரையிலே அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனப்பிரிவுடைய நான்கு வருணங்களின் தொழில்களின் இலக்கணங்களைக் கூறியதற்கிணங்க தொல்காப்பியச் சண்முகபாயிருவிருத்தியென்னும் நூல் வேளாளர் மாபினரான அரசஞ் சண்முகனாரால் செய்யப்பட்டு 1905-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது. இந்நூலில் 36-வதுபக்கத்தில் கூறுவதாவது:—

இனி மலையினீங்கை வேளாளர்க்கு நிலத்தினீங்கை யரசருக்கும் பூவினீங்கை யந்தணருக்குந் தூலாக்கோலினீங்கை வணிகருக்கு முவமமாதலி னபமுறையானே வித்தினீமுன்னர்ப்பெற்றுப் பின்னரீயு நிலன்போல விறைப்பொருண் முதலாயின முன்னர்ப்பெற்றுப் பின்னரீயு மரசரீகையினு முன்னொன்றும் பெறுமற் றுலாக் கோல்போல வீயும் வணிகரீகை நிறத்தையு, முன்னர்ப்பெறுவிடினும் பிறர்மாட்டுப்பெற்ற வூதியப் பொருளன்றி முதற்பொருளீபாத வவரீண்டையினுமுன்னை முற்றக்கொடுக்கு மந்தணரீகைநிறத்தமையு, முன்னை முற்றக்கொடுப்பினுஞ் சிறிதளவினவாதலு முறுப்பினீயியாமையுடைய வவ்வீகையினு முடனும் பொருந்து முணவு மொருங்கே வேண்டினும் வரையாது முற்றக்கொடுக்கும் வேளாளரீகை நிறத்தமையுமுணர்ப்படும் உடல்கொடுப்போர் வேளாளே யாதலி னவரேயுயிருங்கொடுப்போரென்பது போதரும். இவ்வாறே யோதலினும் வேட்டலினும் வேறுபாடு மேற்கூறியவாற்றா லுணர்க.

இனி யுயிர்க்கொடைவேளாளர்க்கே யுரிமையுடைமையோர்க்கங்ஙனமாகையு மென்னையெனி, னந்தணரறனெரியி னீயலகிற் குணர்த்து மோனுதலாலு மரச ரூலகினேப்புரப்போனுதலாலும் வணிகனவ்வாசனுக்கும் படைக்குழ் வேண்டினவாணிகமுறையிற் கொணர்க்களிப்போனுதலாலு மவருயிர்ஆறப்பினவரனேயதால் வல்லாரு நீதிவல்லாரும் வாணிகம்வல்லாரும் பிறில்வழி யுலகிற்குப் பெருந்தீங்குபயத்தலி னவரொருதலேயாகவுயிர்க்கொடைக்குரியரல்ல. வேளாளருயிர்ஆறப்பினவர் புதல்வர்முதலாக சுற்றத்தார் தெகோட்பழக்கம் வேண்

டாமையே யுழவு கடாத்துவா ராதலி னுலகிற்குத் தீங்கின்மையானக்கொடையவர்க்கே யுரிமையாயிற்றென்பது.

"வேளாள மாபினரான அரசஞ் சண்முகனார்தொல்காப்பியத்துக்கும் ஏனையநூற்களுக்கும் மாறுபடாமல் தன்குலத்தாரைநான்காங்குலத்தினரென்றே விளக்கியிருக்கின்றனர். இஃது தொன்றுதொட்டு யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட உண்மை.

இவ்வுண்மைஇங்ஙனமிருக்கவருணசிந்தாமணியென்னும் மருடம்புனைந்து 1901-ம் ஆண்டில் வெளிவந்த புத்தகம் 505-வது பக்கத்தில் கூறுவதாவது "வேளாளரைச்சிலநூல்களைய தென்றும் சிலநூல்சூத்திரரென்றும் கூறுகின்றன." இவ்விரண்டினுள் எதைப்பிரமாணமாகக் கொள்வதெனின் வேதங்களில்வையெனக்கூறுதலால் அதையேபிரமாணமாகக் கொள்ளவேண்டுமென்றும் "506-ல்பெரியபுராணத்திற்புரட்டு சேக்கிழார் வேளாளர்தானே அங்ஙனமிருக்கவும் வேளாளரைப் பெரியபுராணத்தில், சூத்திரனெக் கூறியிருக்கின்றரே யெனில் அவர்தமிழ்வேதமாகிய தேவாரங்களையே பிரமாணமாகக் கொண்டுபுராணஞ்செய்ய வந்தவராதலின், அவ்வேதவாக்கியத்துக்கு மாறாக வேளாளரைச் சூத்திரனெக் கூறாரென்பது நுணிபாம்."

507ல் "அங்ஙனமாயின், வாயிலார்புராணத்தில் தொண்டைமீடிய சூத்திரத்தொல்குலம் என்றும் இளையான் குடிமாறனாயனார் புராணத்தில் நம்புவாய்மை யினீடி சூத்திரகுலம் என்றும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் காலாங்குலத்திற்பெருகுலமுடையார் என்றுங்கூறியிருக்கின்றதே யெனின் இவையெல்லாம் பிற்காலத்தில் வந்த அழுக்காறுடையு ஜிழிகுலத்தாரால் புரட்டப்பட்டனவெனக்கொள்க."

அன்றியும் 509-வது பக்கத்தில் "தேவாரத்தில் புரட்டு என்றும் 510-ல் திருஞானசம்பந்தரில் புரட்டு என்றும் 511-ல் திருவினாயாட்டினிற் புரட்டு என்றும் 516-ல் திகண்டில்புரட்டு" என்றும் எழுதி அவ்வந்நூல்களிலுள்ள சிற்சில பாடல்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அவையனைத்தும் நன்கு எடுத்துகாட்

தல் அருவசியம். அனேக ஆயிரமாண்டுகளுக்கு முன்னர்பெரியோர்களாற் செய்யப்பட்ட தொல்காப்பிய முதலிய நூற்களில் வேளாளர்களின் பெருந்தன்மையும் நாகரிகமும் விசேடஞ்சொல்லப்பட்டு அவர்கள் கான்கரம் வருணத்தவரென்று சர்வசுவிபரீத மறவரையப்பட்டிருக்கின்றது. இவ்வுண்மை சித்தசமாதானத்துடன் நன்கு ஆராயாமல் இவையெல்லாம் பிற்காலத்தில் வந்தகுழுக்காறுடைய இழிகுலத்தாரால் புரட்டப்பட்டனவென்று கூறுகின்றார். இவர் கூறியபடி உமாபதிசிவாச்சாரியாரும் பாஞ்சோதி முனிவரும் பிங்கல நிகண்டு முதலிய நூல்களைச் செய்தோரும் பன்னிருபாட்டியல் தொல்காப்பிய முதலிய விளக்கணநூல்களையியற்றியோரும் ஏனைப்பெரியோரும் இழிகுலத்தார்போலும். வருணசிந்தாமணியார் பிற்கால மென்றமையால் யாருக்கு எதற்குப்பிற்காலமென்பதை ஐயந்திரிபற அவர் கூறாமல் விட்டார். வேளாளர்பரபாரிடம் அன்னியர் அழுக்காறுடைமைக்குக் காரணமென்னையோ அறியோம். அழுக்காறுடையாரென்று தாவித்தல்தாயைப்பழித்தலொக்கும். பெரியோரால் மதிக்கப்பட்ட நான்காங்குலத்தையொழித்தூற்றுதற்குச் சொற்சமில்லாத மூன்றாம் குலத்தில் புகுதல் குலமில்லாதார் செய்கையென அறிஞர் கொள்வர்.

சிந்தாமணி 514-515-வது பக்கங்களில் ஆலய்யமான்மியத்திலிருந்து மூன்று சுலோகங்களையும் அவற்றின் அருத்தங்களையும் எழுதி "இச்சுலோகங்கள் எங்கேனும் பிணைப்புட்டவன் சூத்திரனென்று கூறுகின்றனவா? ஆங்ஙனமிருப்ப வேதவாக்கியத்திற்கு விரோதமாய்வேளாளனேகாலாம் வருணத்தானுகிய சூத்திரனென்று பாஞ்சோதி முனிவர் கூறியது புரட்டன்றே" என்றுவருணசிந்தாமணி செய்தார் கூறுகின்றார். அங்ஙனமாயின் இவர் எடுத்துக்காட்டிய சுலோகங்களில் பிணைப்பட்டவன் பிரமாதிபதி எகபிரன் ஓல்வியழுடையவன் என்றுசொல்லுகின்றதையன்றி வணிகனென்றாவது வைசியனென்றாவது கூறப்படவில்லையே. இவ்வாறிருக்க இவர் வைசியன் என்று அச்சுலோகங்களில் எவ்வகையாகப் பொருள் கொண்டனரோ அறியக்கூடவில்லை இவ்வகையாகப்

பொருள்கொண்டவர் புரட்டரா? பாஞ்சோதிமுனிவரே புரட்டரா? திருவிளையாடற் புராணம் கூறப்படலத்திலே * * * "கங்கை தன் மாபின் வந்த விழுக்குடிப்பிறப்பு மூவரோவியவினை கேட்டாற்றும்" என்ற செய்யுளைப் புரட்டென்கிறார். அவ்வன்மாயின் பாஞ்சோதி முனிவரிருந்த காலத்திற்கு அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே யுள்ள தொல்காப்பியம் பன்னிருபாட்டியல் சிலப்பதிகாரம் முதலிய பண்டைகாலத்து நூற்களில் வேளாளரைச் சூத்திரரென்று கூறுவானேன். தொல்காப்பியம் மரபியலில் "வைசிகன்பெறுமேவாணிகவாழ்க்கை" என்றும் "வேளாண்மாந்தர்க் குழுந்துணல்லதில்லென மொழிப" என்றும் பன்னிருபாட்டியலில் "பார்ப்பார் அரசர் வணிகர் வேளாளரென்பப் பாற்படு நான்கினுட்பெயராகும்" என்றும் "துகடீர்மாபிற் சூத்திர ஜாதி" என்றும் சிலப்பதிகாரத்தில் விழுக்குடியுழுவரென்றும் "பழம்புனற்கால் விரிப்பாவை தன்புதல்வர்" என்றும் இன்னனைய பெண்ணிறந்த பண்டைகால புத்தகங்களில் வேளாளரைச் சூத்திரரென்றே கூறப்பட்டிருக்கின்றனர். இங்ஙனங்கூறப்பட்டவர்கள் நூற்புரட்டரோ வருணசிந்தாமணி செய்தவர் நூற்புரட்டரா? வென்பதை அஞ்ஞர்கள் சிந்தித்துப் பார்ப்பாரில் உண்மை விளங்காமல் போகாது.

ஸ்ரீமான் கனகசபைபிள்ளையவர்களால் வெளியிடப்பட்ட "The Tamils 1800 years ago"

1800-வருடங்களுக்கு முன்திய தமிழர்கள் என்னும் புத்தகமானது சிலப்பதிகாரத்திலுள்ள காதையைக் குறிப்பதாயினும் அந்நூல் பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் கடைசங்ககாலத்தில் இயற்றப்பட்டது. அக்காலத்திலிருந்த தமிழர்களின் கல்வி நாகரிகமுதலியவைகளைப் பற்றியும் அரசர்கள் நீதி நியாயங்களைக் குறித்தும் கூறவந்த புத்தகத்திலே 113-வது பக்கத்திலே தமிழ் நாட்டிலுள்ள சோ சோழ பாண்டியர்களும் அனேகசிற்றரசர்களும் வேளாளர் சூத்திரரென்றும் சொல்வதோடு அரசாயிருந்த வேளாளர்கள் க்ஷத்திரியரென்றும் நிரூபிக்கவேண்டுமென்று கூறுகின்றனர்.

Page 113. The Chera Chola and Pondya Kings and most of the petty chiefs of Tamil nkam belonged to the tribe of Vellalas Page 116-" Here he does not say that the Vellalas are Sudras and that those Vellalas who were kings should be honored as kshatriyas"

மே பிள்ளையவர்கள் சிலப்பதிகாரத்தின் காதையையும் அக்கால ராகரீகத்தையுங் கூறவந்தவர் சேர சோழ பாண்டிய அரசர்களை வேளாளரென்கின்றார். சிலப்பதிகார காதைகளில் வேளாள மாபார் சேர சோழ பாண்டியரென்றேனும் க்ஷத்திரிய ரென்றேனும் கூறவில்லையே ஆனால் வேளாரை "பாப்பு நீர் காவிரி தன்புதல்வர்" "விழுக்குடி உழவர்" முதலிய சொற்பிரயோகங்கள் வேளாளரைச் சுட்டிக்காட்டுகின்றனவே யன்றி அரசர் என்னும் பொருளில் வரவில்லை. இங்ஙனமிருக்க பிள்ளையவர்கள் அவாந்தரமாய் என்ன ஆதாரத்தைக் கொண்டு வேளாளர் சேர சோழ பாண்டிய வம்சமென்றும் க்ஷத்திரியரென்றும் வரைந்தனரோ? ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னராயுள்ள தொல்காப்பிய முதலிய நூல்களில் வேளாளர் சூத்திரரென்று கூறியிருக்க 50-60-வருஷங்களுக்குமுன் ஆங்கிலேய பண்டிதர்களால் அரசரென்று வரையப்பட்ட புத்தகங்களைப் பிரமாணமாக வெடுத்துக் காட்டுகின்றனர். வேளாளர் வைசியரெனக்கற்பிக்க வந்த வருணநிர்ணயிக்காரரும் ஆங்கிலேயபண்டிதர்களால் செய்யப்பட்ட புத்தகங்களிலிருந்து வேளாளர் வைசியரென்றுகூறுவதாகச் சிலபிரமாணங்களெடுத்துக் காட்டுகின்றனர். வேளாளர் சான்காங் குலத்தவராகிய சூத்திரரென்று ஆங்கிலேய சாஸ்திரியாலேயே சொல்லப்பட்ட பிரமாணம் விருவாறு.

Madura Manual by Nelson M. A. Part 11-ch 11-Page-36.

It appears that in Ceylon there are noble classes the Bramins the Kshatriyas and the Vacsyas, and that the Vellalans are undoubedly the first of the Sudras or Servile caste, though their claim to pre-emi-nence has often been disputed by the Chalias or weavers ofgoldand silver theard.

பிராமணர் க்ஷத்திரியர் வைசியரென்னும் கயரவமுள்ள வகுப்புகள் சிங்களத் தீவிலிருக்கின்றதாகத் தெரியவருகின்

றது. பொன் வெள்ளியாலாகிய பூநூலையுடைய சாலியர்களால் அவர்கள் அடிக்கடி வாதாடி அக்கிரியாமலிருந்த போதிலும் தொழும் சாதிகள் அல்லது சூத்திரஜாதிகளில் வேளாளர் சந்தேகமில்லாமல் முதன்மை பெற்றவர்களாக விருக்கின்றனர்.

வேளாளர் சதுர்த்தரென்றும் சூத்திரரென்றும் கான்காம் குலதிலகரென்றும் சைவவைணவ பதி நூல்களிலும் பொது நூல்களிலும் சிறப்பு நூல்களிலும் ஏராளமாகப் பிரயோகங்களிருக்கின்றன வென்று 56-வது பக்கமுதல் 91-வது பக்கம் வரையிலும் 119-வது பக்கமுதல் 131-வது பக்கம் வரையில் அங்ஙன கெல்லிக்கனிபோல சங்கையறக் காட்டப்பட்டிருக்கின்றது.

மேலும் அந்நூலையாக்கியோரும் அச்சிட்டோரும் உரையிட்டோரும் பெரும்பான்மையும் வேளாள மரபினர்களே. இவற்றையெல்லாம் அம்மரபோரும் ஏனைய அறிஞரும் அக்கிரித்திருக்க தற்காலந்தோன்றிய சிலஹீனப் புலவர்கள் பெரியோர்வாக்கைப் பழித்து, அவர்கள் கான்காம் குலத்தினரென்பதை யொழித்துத் தாங்கள் சூத்திரர் அல்லவையிரென்று பொய்நூலிபற்றித்தாம் மகிழ்ந்ததுமன்றித் தம்மினத்தாரையும் தம்மனை சாட்சிக்கு விரோதமாக கமபித் தொலைக்கச் செய்கனர்கள். ஆனால் அமரபிலுள்ள அனேக அறிஞர்கள் வைசிபரென நூதனமாக வெளிவந்த புத்தகங்களை, அக்கிரிக்காமல் பெரிய புராண மூதலிய பதிநூல்களை புரட்டென்று கூறுவதற்காக விசனிக்கின்றனர்.

இமமட்டோடில்லாமல் தாங்கள் க்ஷத்திரியரென்று சில பிரயோசனமற்ற சொற்களையும் தங்கள் வாக்கைகொண்டே ஆங்கிலேய பண்டிதர்களால் எழுதப்பட்ட புத்தகங்களிலுள்ள சில சொற்றொடர்களையும் பிரமாணமாக்கொண்டு மண்குதிரையை கமபி ஆற்றிலிழந்தவனைப்போல் பூர்வகாலத்தமிழர்களைப்பற்றிக் கூறவந்தவர்போல் கடைத்து வேளாளர்களுக்குப் பெருமையுண்டாக்க வேண்டுமென்னும் கருத்தையுட்கொண்டு ஆங்கிலேய பாஷையில் ஓர்புத்தகம் எழுதி அதில் வே

ளாளர்களே சேர சோழ பாண்டியரென்றும் அவர்களையே க்ஷத்திரியரென்றும் கவரப்படத்தவேண்டுமென்றும் அப்புத்தகத்தின் தூர்மூலியில் வரைத்துமகிழ்ந்து பறைந்தனர்.

சனர்த்தராய வேளாளர் அரசருக்குச் செய்த உதவிக்கும் அவர்களது கல்வியின் திறத்திற்கும் புத்திசாலித்தனத்திற்கும் மெச்சி அனபாயச்சோழன் (228-ம் பக்கத்தில் பார்க்கவும்) சேக்கிழாருக்கு மந்திரித்துவம்கொடுத்தது மன்றி உத்தமச் சோழப் பல்லவனென்னும் பட்டமும் கொடுத்துக் கவரப்படுத்தினர். இதனால் அவர் அரசராய் விட்டனரோ? ஆயின் அவர் பரமசிவத்தின் அருளால் ஆக்கிய பெரியபுராணத்தில் தம்மரபில் தோன்றிய பதினாமூன்று (13) நாயன்மார்களை அரசரென்றும் இளங்கோக்களென்றும் வைசியரென்றும் வரையாது பூவலூரலாட்டுக்கு விரோதமின்றி உண்மைக்குத் தாரமாக அவர்களை கான்சாம குலத்தவரென்றே வெளியிட்டிருக்கின்றனர்.

தலையினிழிந்த மயிரனையர் மாந்தர்
கிலையினிழிந்தக் கடை

என்று முன்னோர் கூறியதற்கிணங்க இப்பொழுது வேளாளர் மரபிற்றோன்றிய சிலதூதன விச்சுகின் சூத்திரரென்று சொல்லுதல் அவமதிப்பென்று எண்ணி வைசியரென்றும் க்ஷத்திரியரென்றும் சொல்வதோடி எழுதியதால் தங்கள் சொந்த நிலைகுலைத்து தங்கள் குலதிற்குரிய பெருமையை அழித்து வைசியரென்றும் க்ஷத்திரியரென்றும் ஒரு நிலையில்லாதபடி இழிவுசீதேடி வைத்தனர். புரட்டோதப் பொய்ப்புடத்திலிட்டால் அதன் சொக்கவருணம் வெளிப்படுமோபோல் அன்னோர் தாங்களே தீயாயக்கினியிலிட்டால் அவர்கள் சொக்க சூத்திரவருணம் தோன்றுமல் மறைவுபடாது.

சானரும் கழுதியாலயமும்.

1897-ம் மேமீ 14உ மதுரைஜில்லா கழுதிராமத்தினுள்ள மீனுட்சிசுந்தரேஸ்வரா ஆலயத்தில் சாணர்கள் அக்கிரமமாகப்பிரவேசித்து அசுத்தப்படுத்தினர்களென்று ஜெகோஷில்பரம்பரை டிரஸ்டியாயெ இராமசாதுரம்மாளா அவர்கள் மது

ரைகிழ்க்கோர்ட்டில் விபாஜிபக்தொடுத்தார். அத்தியாயியம் 1902-ம் பிப்பரவரிமீ 7-ந்தில் சாணர்கள் மெ கோயிலில் அக்கிரமமாகப்பிரவேசித்து வழக்கத்திற்குவிரோதமென்றும் அக்குற்றத்திற்காக அவர்கள் 500 ரூ கொடுத்து அதனையைக்கொண்டு மெ ஆலயத்திற்குக் குடபாபிஷேகஞ்செய்து பரிசுத்தப்படுத்தபடி தீர்ப்பளித்தார். இத்தீர்ப்பைச்சாணர்கள் அங்கேரியாமல் ஐகோர்ட்டில் அபீல்செய்தார்கள். ஐகோர்ட்ஜேட்களிழ்க்கோர்ட்டுதீர்ப்பைப்பரிசோதித்து 1902-ம் பிப்பரவரிமீ 14உ கீழ்க்கோர்ட்டு தீர்ப்பையே யூர்ஜிதஞ்செய்தார்கள். இத்தீர்பானத்தை 1902-ம்பிப்பரவரிமீ 15உ வெளியாகிய சென்னை டயஸ்பத்திரிகையில் பிசுரித்த தீர்மானத்தின் காப்பி அடியில் அச்சிட்டப்பட்டிருக்கின்றது.

(Before Mr. Justice Benson and Mr. Justice Moore.)

Friday, 14th February.

The Shanars and the Kamudi Temple.

Mr. Justice Benson delivered to-day the judgment of the above Bench who heard the appeal of the Shanars of Kamudi (Madura District) in the matter of their alleged right to worship at the Shiva temple of that place.

The Rajah of Ramnad, as hereditary trustee of the temple of Meenakshi Sundraswarar at Kamudi brought a suit in the Court of the Subordinate Judge of Madura for the purpose of obtaining a decree to restrain the Shanar community of the locality and the neighbourhood from entering and worshipping at that temple. On the 14th of May, 1897, Iru[illegible] Nadar and certain others, who were defendants in the suit, forcibly entered the temple proceeding to the inner shrine against the rules of religion and custom, and continued to assert their rights of worship which the plaintiff questioned and which he brought before the Courts for adjudication. The plaintiff and his community denied the right defendants asserted it with equal vehemence and the suit was regarded as a test suit by both the communities. The Sub-Judge decreed against the Shanars and awarded Rs. 500 to the plaintiff against the cost of the purification ceremony, as the temple had been polluted by the entry of the Shanars. The Shanars appealed against

this decision of the Sub-Judge. The main question argued in the appeal was whether local custom and usage permitted the worship of the appellants in that temple and what their social status was. On the question whether the Shanars were, as a class, prohibited by custom, from entering the temple, a great mass of oral evidence was recorded by the Subordinate Judge, the plaintiff calling no less than 34 witnesses and the defendants 24. As was to be expected, the evidence of the defence was in direct conflict with that of the plaintiff. But their Lordships, upon the consideration of the whole evidence, had no hesitation in agreeing with the conclusion of the Subordinate Judge that the evidence let in by the plaintiff on that branch of the case was more reliable trustworthy than that adduced by the defendants. Their Lordships referred at some length to the evidence of certain Brahman witnesses on the side of the plaintiff, whose social position, and special means of knowledge in regard to local custom commanded respect and credibility. As Brahmans, they were above both the contending parties and it was immaterial to them which of the lower classes succeeded in the suit. Their independent and impartial evidence as to local usage and established custom showed that the Shanars, who had now assumed the honorific title of Nadars, were prohibited from entering the temple and, that if they entered, their entry polluted the temple. The evidence let in by the defedendants in respect to that matter was that of persons who were under pecuniary obligations to them or otherwise under their pay and control. It was remarkable that, though they were respectable and independant members amongst the Shanar community, none could have spoken to any such usage in their favour, if it really existed, they were not called to speak to it. Instead of calling such men, the defendants had chosen to rely on the vague assertions of men whose evidence was not reliable. Their Lordships were satisfied that the evidence as to custom conclusively established that the Nadars had no right whatever to enter this temple, and that the pretensions they had raised could not be recognised. That being their main conclusion, they had no difficulty in deciding about certain other collateral matters raised by them. It was the contention of the Shanars that at similar temples of Shiva worship in Tanjore, Coimbatore and elsewere, their right to worship had been conceded Their

ordships were, however, satisfied that in the Madura district, owever, no such local custom prevailed in favour of the Shaars. As regards the social status of the Shanars, there was sort of proof that they were the descendants of the Kshariya race, and that they could trace their pedigree to the ndyan and Chola race of Kings Pretensions like these had ought upon them well-merited ridicule. The Shanars were, m time immemorial, engaged in the cultivation of palmyra lms, and in the manufacture of intoxicating liquors, an occuion which, according to the Shastras, disqualified a man m worshipping at Shiva temples. Through that was their editary caste occupation, they had, by their education, instry and frugality, risen to high social positions, and now l the fild in commerce. They monopolised all the wealth trade of the country; and naturally, with their rise in the al scale, they sought to elevate themselves in the matter of gious worship. But in their efforts to attain to positions of lity with other classes, they should not invade the rights he classes who were superior to them. They could rise on r own lines, and their efforts made in an unoffensive manner ld command the sympathy of all right-thinking men and ld also receive the protection of the Court, if necessary. r Lordships, in the end, confirmed the finding of the Subdate Judge that the Shanars had no right to enter and hip at the plaint temple, and also confirmed the award of 00 against the cost of the purification ceremony of the le which had been polluted by their entry.

இராமநாதபுரம் ராஜா அவர்கள் மை. கமுதிகோயமத்திலு
மீனுட்சிசுக்திசோஸ்வர ஆலயத்திற்குப்பரம்பரையானதரு
க்காவானபடியினல் அவ்வூரிலும் வெளியூர்களிலுமுள்ள
ார்கள் அவ்வாலயத்திற்குள் பிரவேசிக்காதபடிக்கு மது
ப்ஜட்ஜினிடத்தில் உத்தரவுபெறும் பொருட்டுவியாஜி
ாடுத்தார். 1897வும் மேமீ 14உ இருளப்பகாடானும்
மும் இலசாணர்களும் பலாத்காரமாய் ஆகமத்திற்கும் வழ
ற்கும் விரோதமாய்க் கோயிலுக்குள் பிரவேசித்து மூல
ஸ்தத்திற்குப்போய்த் தங்களுக்கும் கோயிலுக்குள் நுழை
ஜிக்குஞ் சுதந்தரமுண்டென்று சாதித்தார்கள். அதற்கு

ராஜாவும் அவருடைய கட்சிக்காரர்களும் சாணார்களுக்கு யாதொருசுதந்தரமில்லையென்று தடுத்து இதைக்கோட்டிற்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். எவ்வே இருகட்சிக்காரும் கேஸ் எவ்விதமுடிவாகுமோவென்றிருந்தார்கள். ஏனெனில் தீர்ப்பு எப்படிசெய்யப்படுமேல அப்படியே அவர்கள் சுதந்தரமும் நிலைநாட்டப்படுமென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். கடையாக ஜட்ஜி அவர்கள் சாணார்கள் கோயிலுக்குள்ளே பிரவேசிக்கக் கூடாதென்று தீர்ப்பளித்ததுமன்றி கோயிலை கும்பாபிஷேகஞ்செய்து பரிசுத்தப்படுத்துவதற்காக இராஜா அவர்களுக்கு ஐந்நூறு (500) கூ கொடுக்குமபடி யுத்தரவு அளித்தார். ஏனெனில சாணார்கள் மூலஸ்தானத்திற்குப் பிரவேசித்ததினால் அந்த.விடம் அசுத்தமாய்விட்டதென்று அதன் பொருட்டு அந்த ரூபாய்கொடுக்கப்பட்டது. கீழ்கோர்ட்டு தீர்மானத்தைச் சாணார்கள் அங்கிகரியாமல் ஐகோர்ட்டிற்கு அப்பில் செய்தார்கள். இந்த அபீலில் முக்கியமான கேள்விகள் என்னவென்றால் சாணர்வகுப்பினர்கள் வழக்கத்திற்கு விரோதமாய் மேடி கோயிலில் பிரவேசிப்பதைத் தடுக்கப்பட்டதுண்டா? அவர்கள் அச்சுதாவது என்ன? என்னும் இவ்விஷயத்திற்கு கீழ்கோர்ட்டு ஜட்ஜினால் அனேக சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்யப்பட்டது. இதில் வாதிதரப்பில் 34-சாட்சிகளுக்குக் குறையாமலும் பிரதிவாதி தரப்பில் 24-சாட்சிகளுக்குக் குறையாமலும் கொண்டுவரப்பட்டது. பிரதிவாதியின் வாக்குமூலம் வாதியின் வாக்குமூலத்திற்கு சரிவிரோதமாகவே யிருந்தது. இது எதிர்பாக்கத்தக்கதேயாயினும் நியாதிபதிகள் இருகட்சிக்காரர்களுடைய வாக்குமூலங்களைச் சீர்தூக்கிப்பார்த்துப் பிரதிவாதிகளால் ருஜிக்கப்பட்ட சாட்சிகளைப் பார்க்கிலும் இந்த கேஸ்தரப்பில் வாதியால் கொண்டுவரப்பட்ட சாட்சிமிகவும் கம்பிக்கையுள்ளதென்றும் உண்மைக்குத் தாமானதென்றும் கீழ்கோர்ட்டு ஜட்ஜி தீர்மானத்தோடு தாங்கள் கலப்பதற்குத் தங்களுக்கு யாதொரு சந்தேகமுமிலலையென்றார். அவ்வூர் வழக்கத்தையும் சாதியேற்பாட்டையும் ஒன்றுசேர்ந்த வாதி சாட்சிகளில் ஓர் பிராமணர் சாட்சிவிஷயமாக ஜட்ஜிகள் கொஞ்சம் ஆலோசிக்கத்

தலைப்பட்டனர். ஏனெனில் அவர்களுக்கு அச்சாட்சியில் நம்பிக்கையுண்டாவதற்குக் காரணம் அவர்மரியாதையும் சவரதேமும் வகித்தவர். இந்த வியாஜியத்தில இருகட்சிக்காரர்களுக்கும் பிராமணர்கள் மேலான ஜாதியாராயிருந்தபடியினால் இந்த வியாஜியத்தில் யார் ஜெயித்தாலும் தங்களுக்கு அதனால் யாதொரு பிரயோசனமுமில்லை.

மேடி பிராமணர்கள் அவ்வூரிலுள்ள வழக்கத்தின் சம்பந்தமாகவும் நடவடிக்கையின் சமபந்தமாகவும் ஒருவர் தயவு தாட்சிண்ணியத்தை யெதிர்பாராமலும் பட்சபாதமில்லாமலும் கொடுத்த வாக்குமூலம் தற்காலம கவுமாய் காடாரெனனும் பட்டப்பெயரைவகித்த சாணர்கள் கோயிலுக்குள் பிரவேசிக்காமல தடுக்கப்பட்டுள்ளார்களென்றும் அபபடி அவர்கள் பிரவேசிப்பார்களாலுல் அகக்கோயில அசுசதப்படுமென்றும் விளக்கியது. இது சமபந்தமாக பிரதிவாதிகளால கொண்டுவரப்பட்ட சாட்சிகள் சாணரிடத்தில் பொருள் எதிர்பார்த்தவர்களாயும் அவர்களிடதது ஊழியக்காரர்களாயு மிருந்தாகள். சாணர் வகுபபினர்களுக்குள் உண்மையாக தங்களினத்தார் இக்கோயிலுக்குள் பிரவேசிக்கும் வழக்கமிருக்கும் பட்சத்தில் அவர்கள் தங்கள் ஜாதிபாருக்கு அனுக்கூலமாகப் பேசக்கூடிய கவரமுடையாதினமும் உள்ளவர்களிருந்தபோதிலும அவர்களைச் சாட்சிக்கு வரவழைக்கவில்லை. பிரதிவாதிகள் அத்தகைய சாட்சிகளைக் கோர்ட்டுக் கொண்டுவராமல் கொஞ்சமேனும் நம்புவதற்கு இடமில்லாத சாட்சிகளைக்கொண்டி வந்தனர். நியாயாதிபதிகள் அவ்வூர்வழக்கத்தை யனுசரித்து காடார்கள் கோயிலுக்குள் பிரவேசிப்பது கூடாதமையெனறு தீர்மானித்தார்கள். அன்றியும் தாங்கள் மேலுக்கு உயர்ந்தோர்களென்று சுதாய்புகொண்டிவந்த மார்க்கத்தை நம்பத்தகுந்தலல். சாணர்களால் கொண்டுவரப்பட்ட இன்னம் இதாசமத்துவம் காட்டுதற்குரிய விஷயங்களைத் தீர்மானிப்பதற்கு ஜட்சிகளுக்கு யாதொரு சங்கடமுமில்லை. அதாவது தஞ்சாவூரிலும கொயம்பத்தூரிலும இல்லாமிதர சிலஸ்தலங்களிலுமுள்ள சிவபிரானைப் பூசிப்பதற்குத் தங்களினத்தார்கள் சுதந்தரம வகித்துள்ளாரெனனும் அத்தகைய விடங்களில் தங்கள் மரபார்கள் பூசிப்பதற்கு அங்கீகரித்துள்ளாரென்றும் வாதித்தார்கள். ஆனபோதிலும் நியாதிபதிகள் மதுரை ஜில்லாவில் சாணர்களுக்குக் கோயிலுகுள் பிரவேசிக்கும் அத்தகையவழக்கம கிடையாதென ஜட்ஜிள் தீர்த்தியாய் விளக்கப்பட்டார்கள்.

மற்ற ஜாதியார்களுக்குள் சாணார்கள் அத்தன்மை கோக்குமிடத்தில் அவர்கள் க்ஷத்திரிய வம்சத்தவர்களென்றும் பாண்டிய சோழ அரசர்களின் பரம்பரையாரென்றும் காட்டுதற்கு யாதொரு அத்தாட்சியுமில்லை. தங்களால் கொண்டுவரப்பட்ட மேற்காட்டிய தப்பு விஷயங்கள் அவமதிப்புக்கு இடமாயிற்று. தொன்றுதொட்டு சாணார்கள் பனமரங்களை வளர்த்து அவற்றினின்று பயக்கத்தைத்தரும் கள்ளிறக்கி வந்தார்கள். இத்தொழில செய்யும சாணர்கள் சான்றிதழ்பிரமாணப் பிரகாரம் சிவாலயங்களுக்குள் பிரவேசித்து வணங்குதற்கு அபாத்திரராணர்கள். இததொழில்சாணர்களுடைய பரம்பரைச்சாதித் தொழிலாயிருந்த போதிலும் அவர்கள் தங்களுடைய கல்வியினாலும முயற்சியினாலும தனத்தினாலும உயர்ந்த அந்தஸ்திற்கு வந்து வாத்தகத்தைக் கைப்பற்றியுள்ளார். அத்தேயத்திலுள்ள ஐஸ்வரியத்தையும வர்த்தகத்தையும் தங்களே சுதந்தரப்படுத்தக்கொண்டார்கள். தங்கள் அந்தஸ்துசெல்வத்தினால் உயர்த்தப்பட்ட படியினால மதசம்மந்தமான தேவாலயபூசனையிலும் தங்களுக்குத் தாங்களே உயர்த்திகொள்ளப்பார்த்தார்கள் ஆனால இதரசாதியார்க்குள்ள அந்தஸ்தைத்தாங்களும்சமமாய் அடையும் படியாகச்செய்த முயற்சியில் தங்களுக்குமேலான சாதியாக்குள்ள சுதந்தரதஷதைக் கைப்பற்றக்கூடாது. தங்களினததார்களுக்குள்ளவேயுயரவத்தனிக்கலாம். இதாளுக்குத் துணபம விளைவிக்காமல் இதுசம்பந்தமாகச் செய்யும முற்சிக்காக நியாயவாதி களும பரிதாபப் படுவதுமன்றி வேணடுமானால் கோர்ட்டாருடைய பாதுகாப்பும் பெறக்கூடும். கடைசியாகச் சாணர்கள் வீதிகளுடைய கோயிலுக்குள் பிரவேசிப்பதற்கும் அவ்விடத்தில் சுவாமியை வணங்குவதற்கும் சுதந்தரமில்லை யென்றும் அவர்கள் அக்கோயிலிலபிரவேசித்தினால் ஆலயம் அசுத்தப்பட்டதைச் சுதத்தப்படுத்துவதற்கு பிரதிவாதிகளாகிய சாணர்கள் ஐந்நூறு(500)ரூபாய் கொடுக்க வேண்டுமெனக்கீழ்க்கோர்ட்டு மதுரை ஜட்ஜி செய்த தீர்மானத்தை ஐகோர்ட்டு ஜட்ஜிகளாகிய மிஸ்டர் பெலையன துரையும்மிஸ்டர் மூர்துரையும் ஊர்ஜிதஞ்செய்தார்கள்.

மேற்காட்டிய தீர்மானத்தில் காடான் என்னும்பட்டப் பெயர் கவரமான பட்டப்பெடரெனக் கூறியிருக்கின்றது. காடான் என்னும் பெயர் காரணத்தை யனுசரித்து இடப் பட்டப்பெயர். எங்ஙனமெனில் காடான் என்னும் எதிர்மறை வினையாலணையும் பெயர்கடை என்னும் வினையடியாகப் பிறந்தபெயர். இதற்கு உடன்பாட்டு வினையாலணையும் பெயர் காவோன் எதிர்மறை காடான் காவோன் அல்லது கடபவன் என்பதற்குப் பொருள் கிட்டுபவன் கெருக்குபவன். காடான் என்பதற்கு கெருகாதவன் விரும்பாதவன். இவர்களையேன் கெருங்காதவனென்று அழைப்பானேனெனில் இவர்கள் பஞ்சமாபாதகத்தொழிற்களில் ஒன்றுகியமயக்கத்தைத்தரும் கள் விறக்கும் பாவத்தொழில செய்கின்றமையால்கிராமத்தில் கெருங்காதவன் என்னும் அருத்தத்தைத் தாக்கூடிய காடான் என்னும்பட்டப்பெயர் பெற்றனர் இதற்கிணங்கமலையாளத்திலுள்ள(தீயர்) சாணரை தங்களுக்கு மேலான சாதியார்களுக்கு சமீபத்தில்வரக்கூடாது. இவர்கள்வருமபோது மேலோர் இவர்களைக்கண்டு கைதட்டுவார், அச்சைகை கண்டு விலகிநிற்கும வழக்கம் இன்றும் கடைபெற்று வருகின்றது.

சென்னை வெரிங்குளன்னும் பண்டிதர் எழுதிய புஸ்தகத்திலே 15-வது செக்கிஷன் 18-வது பக்கத்திலே தியரைப்பற்றி சொல்வதாவது,

"They are despised race and are not allowed to come within Sixteen feet of their Superiors in caste."

தங்களுக்கு மேலான ஜாதிகளிடத்தில் (16) பதினாறு அடிக்கு அப்புறம் விலகியிருக்க வேணடுமென்றும் அவ்வளவுக்குள் அவர்கள் வரக்கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது

இக்காடான் என்னும் பட்டப்பெயர்க் கிணங்க கிராமாணி யன் என்னும் பட்டப்பெயரும் பெற்றுள்ளார், ஏனெனில் பனை தென்னை சீமை இம்மரக்கள் அடர்ந்துள்ள மேலோர் வசிக்கும் கிராமங்களுக்குப் புறம்பாகச்சாணரப் பெண்டை யென்னுமிடத்திலபெரும்பாலும் வசிக்கின்றனர். இதற்கிணங்க சாணர விகற்பவினவிடை யென்னும் புத்தகத்திலே கவிவர் அகவலிலே "தாவிரிப்பூம் பட்டினத்திற் கள்ளிலனர் சேரியில் சான்றோ (சாணர) குத்தினில உறுவைவளர்த்தனள்" என்று கூறப்பட்டிருக்கின்றது. இதனல் கிராமத்திற்கு அண்ணியமாயுள்ள சாணரப் பெண்டை கள்ளிலனர்சேரி யென்று ஏற்படுகின்றது. இவர்கள் மேலோர் கிராமத்திற்கு அண்ணியமாயிருத்தலால் கிராமணியரென்று கூறப்படுகின்றனர். கிராம: அக்ர: என்னும் இரண்டுவடமொழிகள், இவைகளிற்க சத்திபாகப்புணர்ந்து கிராமக்ர: எனத்தற் புருஷ ஸமாஸமாகித்தல்

ழில் கிராமான்னியன் எனத்திரியும், அன்றியும் தஞ்சாவூர்தஞ்சை, புதச்சேரிபுதுவை சென்னப்பட்டணம சென்னீர் எனறு (" மருவினமெருகுதி மபங்கியன்மொழியும உரியவையுளவே புணர்கிலேச்சுட்டே " என்னும தொலகாப்பியச் சூத்திரத்தள் கிலே என்றதனால் தோன்றல் திரிதல் கெடுதல் எனனுப்மூவித விகாரங்களும இலக்கணத்தோடு பொருந்தாதுகிறைதகதுமாகி வருதல் போலக்கிரா மன்னியன் கிராமான்னியர் கிராமானனியர்கள் என்பன கிராமணி கிராமணிகள் என ஆண்ரேர் ஆட்சியில கட்டுண்டு உலகவழக்கின கண்ணுள்ள இயலபு வழக்கு மரூஉ மொழியாக வழங்குகின்றது."

அன்றியும் காடான் என்னும் மொழியானது சோனுக்கு குடகாடன் என்றும சோழனுக்கு புனனாடன் என்றும் நூல்களில் வழங்கப்பட்டு வருகிறதேயன்றி காடான் என்னும் பிரயோகமில்லை. காடன் என்பதை காடான் என்பதோடி சாணார்கள் பொருத்து கின்றார்கள். "காடான்" என்னுஞ்சொல அரசனென்று எவ்வாற்றானும் பொருள் கூறுதல் அமையாது. காடான் என்னுஞ் சொல்காட்டையுடையவன் காட்டிலுள்ளவன் என்னும் பொருளைத் தருதலால் இடத்திற் கேற்றவாறு அமைத்துக்கொள்ள வேண்டியது. அவ்வளவேயன்றி அரசன் என்னும் பொருளை அதுவுண்டும் பயவாது. சாணார் வகுப்பினர் க்ஷத்திரிய சனக்கூறி வெளிவருதற்கு முன்னர் சோலி வேளார்க ளென்று புத்தகங்களிலும சாஸனங்களிலுங் காணப்படுகின்றது.

காட்டான் என்னும் பட்டபெயரானது அரசன் என்னும் பொருளைத்தரும் கவரப்பட்டப்பெயர் அல்லவென்றும் அவர்கள கிராமத்திற்கு அன்னியரென்றும் "கிராமான்னியர்" என்னும் சொற் பிரயோகம உலகவழக்கம முதலியவைகளைக் கொண்டும் நிரூபித்தாம்.

கழுதியாலியகேசு மூடிவானகிலகாலம் கழித்தபின்னர் திருநெல்வேலி ஜில்லாவில ஓர் கிராமத்திலேஓர்சாணன் செய்த குற்றத்திற்காக அவ்வூர் கிராம முனிஷிப் அவனைத்தொழுக்கட்டையில் மாட்டுபடி தண்டனை விதித்தார். அத்தண்டனைச் சாணாரபரபாருக்குரியதல்லவென்றுதாங்கள் மேலானசாதியைச் சார்ந்தவர்களென்றும் சென்னை ஐகோர்ட்டு வரையில் அபீல்செய்தும் அனுக்கூலப்படாமல் கிராம முனிஷிப் செய்த தண்டனையும் தீர்ப்பையும் ஐகோர்ட்டாகள் ரத்துசெய்துவிட்டார்கள். இக்கேஸின் வரலாற்றை அக்

காலத்தில் ஆதிமுதல் அக்தம்வரையில் இங்கிலீஷ் தமிழ்பத்திரிகைகளில் விவரமாயெழுதப்பட்டிருக்கின்றது.

திருவண்ணாமலை கீழண்டைமாடவீதியில் சுமார் 70-வருடங்களுக்கு முன்னர் சாணர மரபினரால் காட்டப்பட்டவோர் விசாலனத்திலே சாணர் மரபாரைச் சோலிவேளாளர்களென்று வரையப்பட்டிருக்கின்றது. இம்மரபார் தற்காலம் அச்சிட்டிருக்கும் புத்தகங்களில் சூரியகுலசத்திரகுலமென்னும் பிரஸ்தாப அக்கல்வெட்டிலில்லை. ஆனல்சோலி வேளாளர் என்றுஅக்கல்வெட்டில் வரையப்பட்டிருக்கின்றது. தென்னை, பனைமுதலிய சோலைகளில் கள்ளிறக்குவதால்சோலி வேளர்களென்று விசாலனம காட்டினர்கள். அம்மட்டோடு இவ்வாமல் பின்வந்த நூதனவிவேகிகள் ஆதாமின்றி காற்றை காகதத்திலிட்டதுபோல சான்றுன் பொழியைக்கொண்டு சதந்திரியமனப் பலபுத்தகங்கள் வெளியிட்டனர். அவை அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளன. காம மேல்காட்டிய நியாயங்களால் அவர்கள்சத்திரியருமன்று வேளாளருமன்று ஆனல பிங்கலம் திவாகரமுதலிய நூலகளில் கூறியுள்ளதுபோல சூத்திரருக்குக் கீழானவராவார். இப்புத்தகம் 51-ம்துபக்கத்திலுகாண்க.

* *

இடையர்

"பொதுவர் ஆயர்என வழங்கும் இடையர்களால் ஓர்புத்தகம் 1889வது அச்சிடப்பட்டிருக்கின்றது. அதற்கு யதுவம்ச ஸ்தாகளில குலகாயம் என்றுபெயர். அப்புத்தகம முதல பக்கத்திலே

"காம வசிக்கும் இப்பரதகண்டத்தின் வடதிசையில் யமுனை நதியின் வடதீரத்தில் நிற்கும் ஆயர்பாடி யென்னும் சேக்குலப்பெரும் தாரண்யத்தில் அவாபரயுகத்தின் முடிவில நம குலோத்காரகாலை ஸ்ரீகண்ணபிரான் திருவவதாரஞ்செய்த போது * * * என்று எழுதப்பட்டிருக்கின்றது."

இடையர் சார்பாகச் சொல்லப்பட்ட
கோகுலசதகம் 3-வது செய்யுள்.

பழைப்னே யெட்டக்கரத்தானைத் தன்பதம் பற்றினருக்
கிழையானை யானைமுன்னே யெதிர்வானை யெழிற்கருனை
மழையரனை ரோகணிப்பா லுதித்தானை மலிந்தவொரு
குழையானை யேந்திவளர்த்தோர்கள் பாடியிற்கோகுலரே.

இதில் கிருஷ்ணனே இடையர் வளர்த்தார்களென்று கூறுகின்றதேயன்றி ஆயர்குலத்தில் அவதரித்தாரென்று கூறவில்லை. இங்ஙனமிருக்க யதுவம்சத்தவர்களென்று சொலவதற்குயாதொரு ஆதாரமுமிதில்கூறவில்லை. இப்புத்தகம் 92-வது பக்கமுதல் 104-வது பக்கமவரையிலுள்ள விஷயங்களைக் கவனிக்கின் அவர்கள் சத்திரியருமன்று கோவைசியருமன்று என்னும் உண்மை விளங்கும்.

பரதவர்

இம்மரபாரால் பிரசுரிக்கப்பட்ட

ஒரு விளம்பரத்தில் சொல்லுவதாவது.

சூரியகுல க்ஷத்திரிய வம்சத்திலுதரான ஏகசக்ரேஸ்வரரிலிருந்து மருதமுனியின் புத்திர சிகாமணியாகிய ஸ்ரீபருவதராஜ மஹா ராஜவம்ச மரபினர் யாவரும் ஒருங்கு சேர்ந்து என்று எழுதப்பட்டிருக்கின்றது. நெய்தலிலமாக்களாகிய பரதவரைப்பற்றி யெங்களும் சூரியகுல மென்றுவது பர்வத மஹாராஜவம்சமென்றுவது பூர்வமிருந்த மேதாவிகளால் கூறப்பட்டிருக்கின்றதா? பெரியபுராணம் திருவிளையாடற் புராணம் விலிவிபுதகுராழ்வார்பாரதம் முதலியவைகளில் கூறும் பிரமாணங்களை இப்புத்தகம் 112-வதுபக்கமுதல் 113-வதுபக்கமவரையிலுமுள்ளவைகளால் அவர்கள் அரசசந்ததியாரென்றேனும் நுளையரா வரென்றும் தெளிந்துகொள்ளலாம். இவ்வாறுமுனனோர் மூலாட்சிக்கு விரோதமாய் சத்திரியரெனக்கூறுமதமிழ்காட்டாருள் மேல்காட்டியவரன்றி ஏனைய அண்ணிய காட்டாரைப்பற்றி இங்கு பிரஸ்தாபிப்பது அனுவசியமென விட்டனம்.

வலங்கை இடங்கை கட்சிபேதங்கள்.

இக்கட்சி பேதங்கள் இன்னகாரணத்திற்காக இன்ன காலத்திலுண்டான தென்று வரையறுத்துக்கூறுதற்குக் கூடாதாயினும் பின்வரும சாஸனங்களேற்பட்ட காலங்களுக்கு முன்னரே இப்பேதங்களிருந்ததாக நிச்சயிக்காலம். E. ஹுலஸ்துரையவர்கள் வெளியிட்ட 3-வது வாலியம் 1-வது பிரிவு 115-வது பக்கம் 57-ஏ. சாஸனம். இதுதிருவல்லம் பில்வகாதேஸ்வராலயம் மகாமண்டபத்தின் வடவண்டை மதிலுள்ளது. இச்சாஸனம் 800-வருஷங்களுக்குமுன்னா அரசபுரிந்த அதிராஜேந்திரதேவன்சிமாசன மேறிய ஏழாவது ஆண்டிலேற் பட்டது.

8. * * * * கங்கை கொண்ட சோழனிலிருந்து திருவல்லமுடையார் தேவதானமான ஊர்கள் கணக்கு கேட்டு இதேவர் தேவதானமான ஊர்களில் ஊர்க்கழஞ்சு சுங்குமா.

9. கச்சாணமும் மீன்பாட்டமும் தட்டார் பாட்டமுன்னிட்ட கீழிறைப்பாட்டமும் தறிபுடவையும் வெளிக்கரசும் தண்டலிற் கடமையும்.

10. வலங்கை இடங்கை மகன்மையும் உள்ளிட்ட அந்தராயத்துக்கு ஆயிரக்கலத்துவாயிருபுத்தைஞ்சு காசாகக்கொண்டு, வருகிறபடி சக்கிரவர்த்திகள் * * *

மேற் துரையவர்கள் வெளியிட்ட மூன்றுவது வாலியம் 110-வது பக்கம் 81-நெம்பர் சாஸனம் இது தொண்டமண்டலத்தைச் சேர்ந்த படைவீடு (படைவேட்டு ராஜியம்) சோமகாதேஸ்வர வாலயத்தின் கீழண்டை மதிலுள்ளது.

சாஸனம்.

சுபமஸ்து ஸ்வத்தி ஸ்ரீமன் மஹா, மண்டலேஸ்வரன் அரிராயவி, பாடன் பாஷைக்குத்தப்புவரா, ய கண்டன் மூவராய கண்டன் கண்ட நாடுகொண்டு, கொண்டநாடு கொடாதான் பூர்வதட்சண பச்சிம உத்தரஸ, முத்திராதிபதி ஸ்ரீமன் மாசாதி ராசராச ப, மேஸ்வர ஸ்ரீவீரப்பிரதாப கஜவேட்டை, கண்டருளிய பிரபுட இமமடி, தேவராய மகாராயர் பிரதிவி, ராச்சியமபூண்ணி அருளாநின்ற, சகாப்தம் கூகாஎகன்மேல் செ, ல்லா நின்ற சுக்கில வருஷம் சிம்ம, காயற்று பூர்வபட்சத்து திரியோ, தசியும் சனிவாரமும் சூயு, ஷமான யோகமும் பெற்ற உத், திராட்டத்து நாள் தொண்டை மண்டலத்து படைவீட்டு, ராஜியமிகாட்டவா வலங்கையு, ம் இடங்கையும் மஹாஜனமும், ராஜ கம்பீரன் மலைக்க, டைக்க முருகமங்கலப்பற்று, மருதாச படைவீடு உடையார், சோம காதேஸ்வர கயினர் கோயிலி, லே நிறைவற குறைவற.

இச்சாஸனம் அழியப்பட்டு முடிவு தெரியாமலிருக்கின்றது. இது 463-ஆண்டுகளுக்குமுன் அரசுபுரிந்த பிரபுட இம்மடிதேவராய மகாராயர்காலத்தி லுண்டானது. மேற்காட்டிய சாஸனங்களில் வலங்கை யிடங்கை பேதங்கள் வரைந்திருப்பனபோல் இன்னும் சில சாஸனங்களிலும் வரைந்திருக்கின்றன. பருதூர் முதலியவிடங்களிலுள்ள சில சாஸனங்களில்

வலங்கைவரியும் இடங்கைவரியும் (வன்னியர்)இனவரியும் கழித்துக்கொடுத்து என்று எழுதப்பட்டிருக்கின்றது. இதனால் அரசவருப்பினராகிய வன்னியர் இருகட்சிகளுக்கும் பொதுவான்வர்களென்று இனவரியும் என்பதனால்தெரிகின்றது. இத்தகைய ஓர்காலத்தில் புதுவைகவர்மெண்டில் வன்னியர் பொதுவென்று செய்த நிர்மானமே சான்றும்.

வலங்கை இடங்கை கட்சிபேதங்கள்உண்டானதற்கு முக்கிய காரணகர்த்தாக்களாயிருந்த சாதியாராகிய வேளாளரும் கம்மாளருமாம். இதற்குப் பிரமாணம் வருமாறு.

தொண்ட மண்டல சதகம்.

குழுவார் குடிமக்களான கண்ணுளார் தும்படக்கி
யெழுவா யமைந்த மனுநீதிபாற் பதினெண்மரபு
முழுவாணரித்துக் கிடத்துவிடாம லுலகுக்கெல்லாம்
வழுவாதமைக்கவும வல்லது நீ தொண்டமண்டலமே.

இதில் கண்ணுளர் குறும்படக்கி யென்றமையால் வேளாளர்க்கும் கம்மாளர்க்கும் விரோதம் இச்சதகம் பாடுபதற்கு முன்னமே யிருந்ததென்று இதனாலேற்படுகின்றது. அன்றியும் மற்றொரு பாட்டில

தொண்டமண்டல வரிசைமுவாறு குடிமக்கள்
சுருதிகள் முதலாகவே
தங்கமிகு நாவிதன் குயவன் வண்ணு ரோலே
சொன்னபடி யெழுதுமோச்சன்
கண்டகம்மாளர் வகையைவர் * * *
பதினெண்பர் குடிமக்களெனவருங் காரானர்
பணிசெய்து பலமுறையும் * * *

இப்பாட்டில் கம்மாளர் ஐவர் என்பது கருமான் கன்னன் தச்சன் தட்டான் சிற்பி இவர்களும் ஏனையோரும் வேளாளர்க்குத் தொழில் புரிபவரென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படிஇனெட்டு ஜாதிகளில் பறையனைச் சேர்க்காமல் விட்டதற்குக் காரணம் தெரியவில்லை.

திருக்கை வழக்கத்தில்
வீறுபெரும் பறையன் வீயாமலோர் கலத்திற்
சோறுபிசைந்துண்ட சுடர்மணிக்கை.

என்று சொல்லியிருப்பதால் பறையர்தங்களைச் சேர்த்தா ரென்று ஒரு பாட்டில் அவர்களைச்சேர்க்கவில்லை போலும்.

கம்மாளர் குறும்படக்கி யென்றும் கருதிதோன்றியதால் மூதல் கம்மாளரும் மற்றவர்களும் வேளாளர்க்குப் பணிசெய்வரென்றும் சொல்லப்பட்டிருத்தலால் கம்மாளர் வேளாளரை விரோதிப்பதற்கிடமுண்டாயிற் றென்று விளக்குகின்றது.

இராமாயணம் பாடிய கம்பர் அரியம் செய்யுள்களுக்கு ஒரு செய்யுள் எடையப்பர் முதலியாரைப் பற்றிப் பாடியிருத்தல்போல் ஏரெழுபது என்னும் நூலைப்பாடிய தாகக்கூறும் கம்பர் ஏழுபதுசெய்யுள்களில் ஏழுசெய்யுள் கம்மாளைப் புகழ்ந்து பாடியசெய்யுள்களை வேளாளர் கம்மாளரை விரோதிப்பதற் கேதுவாகுமென கிக்சயப்படுத்தலாம்.

அச்செய்யுள்கள் வருமாறு.

பாராது முழுவாலும் பயிராக்கி யுயிர்வளர்க்கும்
போரார் தம்மாலே பிறருடைய பெருமையெல்லா
மோலெண் டிசைவளர்க்கு மெழுபத்தொன்பது காட்டிற்
காராளர் பெருமையெல்லாங் கம்மாளர் கைத்தொழிலே.

பாரின் வளம்பயின்ற வாரம்பரந்த புகழ்பெருக்காளர்
ஏரின் வளமிக்க வளமெவ்வள வுண்டவ்வளவுங்
காரின் வளமனைய கொடைக்கம்மாளர் கைத்தொழிலின்
சீரின் வளமல்லாத சிறப்புண்டோ செப்பீரே.

வண்டோரும் பொழிற்கங்கை வாளர்கண் முகத்துக்
கொண்டாடிக் கொண்டமுடி கொடுத்தாரே யெங்குமணங்
கண்டாரே கலியுகத்திற் கண்ணுளர் தம்மையல்லா
துண்டாகிற் பிறருளரோ வுளதாகிலுரையீரே.

காதலால் நிதிவழங்குங் கண்ணுளர் கைத்தொழிலி
னேதலால் வளவியதோ ரோங்கியதோ குலசத்துக்
கோதிலா வினைவயலைக் கொழுவாலுங் கருவாளு
மூதலா லவர்பெருமை யாருரைக்க வல்லாரே.

பண்ணனை வேழிசைக்கும் படையான வாளினர்க்கு
மென்னனை லெழுத்திறுக்கு மியலான வுயிர்களுக்கும்
மன்னுறு மன்னவற்கும் வாழ்தொண்ட காட்டார்க்கு
கன்னுளர் கைத்தொழிலிற்போ லுண்டாகிற் காட்டீரே.

கலியிட்ட கண்ணுளர் கைத்தொழிலி
னிலையிட்டு முடிப்பாரா ரித்தருமாதான் பணிம்
மலையிட்ட கருவினா முயர்கருவி விழாமே
தலையிட்ட செம்பியனுக் தலைசாக்க மாட்டானே.

அன்னையென முதலாய வம்புவியில் யாவர்க்கு
முன்னையும் முட்டுவதும் பெருக்காள முழுவலே

மன்னியசீர் முதலாய வழிவந்த தொல்குலத்தோர்
கன்னிமுதற் றிருவாளர் கண்ணுளர் தம்மாலே.

இச்செய்யுள்கள் கம்பரால் செய்யப்பட்டனவென்று கம்மாளரும், கம்பரால் செய்யப்பட்டதல்லவென்று வேளாளரும் உரைக்கின்றனர். ஆனால் இவைகள் கம்பரல்லா தவேறயாரோனுஞ்செய்ததாகக்கொள்ளினும் கம்மாளருடையபகைத்தொழிற் கருவியல்லாமல்பயிர்த்தொழில் கடவாதெனத்துணிவு. "அக்கெல்லின் பொலிவால் அவனியுயிர்கள் காக்கப்படுவது" முன்மையே. ஏங்ஙனேத்தவிர யாதொரு காரியமும் கடவாதென்று மனப்பால்குடிக்கும் கம்மியர் பெருமைபாராட்டி. பேசுதலைக் கேட்கும் வேளாளர்கள் இயற்கையில் பகைமை கொள்ளுதல் கூடும். கம்மியர் கருவியில்லாமல் அனேக காரியங்கள் நடந்திருக்கின்றன. விநாயகர் ஒரு கொம்பை யொடித்து எழுதியதும் யாதொரு கருவியில்லாமலும் மல்லத்தம புரத்தில் கம்மியர் கருவி பயன்படாததும் இவைபோன்ற அனேகதிருஷ்டாந்தங்களிருக்கின்றன. அன்றியும்யாதொருவன்தனக்குவேண்டிய சொருபத்தைத்தன்னிடத்திலிருந்தியவண்ணம் பொன் வெள்ளி செம்பு கல் மரம் முதலியவைகளில் செய்துகொடுவென்று கம்மியரிடம் வந்து சொன்னபிறகே நூலைப் போல் முடித்துக்கொடுக்கின்றார்கள். யார்யார்க்கு என்னென்ன வகைவேண்டுமோ அவர்கள் இஷ்டப்படி அன்ன அன்ன வகைசெய்துகொடுத்தல் பிரத்தியட்சம். எங்களையன்றியுலகில் யாதொரு காரியமும கடவாதென்று கம்மியர் பெருமையாய்ப் பேசிவருதலும் சகசம். அவர்கள் செய்யும் கருவிகளின் பெருமையையும் அவைகளின் உபயோகங்களையும் எடுத்து கூறுவதால் பிறருக்கு வருத்தமுண்டாதலுஞ் சகசம். இவ்வகையாக துவேஷமுண்டாதற்குவேளாண்மாகசேமுகியகாரணராயிருக்கினறார்களென்று வேளார்சார்பாக செல்லப்பட்ட செய்யுள்கள்விளக்குகின்றன. எங்குமெனின் "கருநிரைமுதல்.....கண்டகம்மானவகையையர்.....காரளாபணிசெய்பல்" என்றும "குழுவார்குடிமகளான கண்ணுர்குறுபடக்கி" என்றும "பற்றுடைய பதினெண்மர்" என்றும் இவ்வகையாகவே வேளாளர்கம்மியரைக்கேவலமாய்க்கூறியிருக்கின்றனர். தொண்டமண்டல சதகத்திலே படிக்காசுபுலவர் குழுவார்குடிமகளான கண்ணுளர் குறும்படக்கி யென்று கூறியதின் வாலாறு விசாரிக்குங்கால் ஏழெழுபதினுள் பலமாறு பாடிவேளச்செய்வித்துச் சூததிரென்று குடிப்பழித்துத் திரிந்த கண்ணுளைப் பிற்காலத்திருந்த அரசனொருவன் மாபலிபுரத்தில் கிறைட்டுத்தின

னுக. ஆங்கவர்கள் மிலிந்தவேலைகள் செய்தாசனை மகிழ்வித்துச்சிலைமீண்டு வேளாளர்களுடைய குடிமக்களில் ஒருவராக வணங்கினர்களென்று வெளிப்பட்டது என்று ஏழெழுபது மூதவுரை 31-வது பக்கத்திலே வரைந்திருக்கின்றது. இதில் குடிபழித்துத் திரிந்த கண்ணுளரை அரசனொருவன் சிறைப்படுத்தியதாகக் கூறுதலால் அரசன் அவர்களே படக்கினனென்று ஏற்படுமேயன்றி வேளாளர் எவ்வாற்றானும் அடக்கினதாக வேற்படாது. மாபலிபுரத்தில் கல்லில் செய்திருக்குஞ் சித்திரவேலைகளும் அங்குள்ள தூலங்களும் பல்லவச்சோழ வரசர்காலத்து வேற்பட்டன வென்று பலபிரமாணங்களிருக்கின்றன. ஆனால் இக்கதை யெவ்வளவுண்மையுடையதென்று வினங்கவிலலை. கண்ணுளர் தங்கள் பெருமைகளைச் சொல்லிக்கொள்ளுதலே முன்னிட்டுவேளாளர் பேச்சை நம்பிச் சிறைப்படுத்தியது நீதியன்று. சித்திரவேலைகளால்அரசனேமகிழ்வித்து சிறைமீட்சப்பட்டனரென்பதினுல் அவர்களின் வேலையின்திறத்தைவிசேஷப்படுத்தியதென்க. மற்செய்யுள்களில்கண்ணுளர்பெருமையையும் வேளாளர்பெருமையையும் கூறுதலால்பயிர்த்தொழிகள் பரிருண்டாதற்கு மூலிய காரணமாயிருக்கலாமும் இக்கருவிகளைச்செய்வார் கண்ணுளராதலாலும் ஒருகால் அவர்களையும் சிறப்பித்துக் கம்பர் பாடியிருக்கலாம். இங்ஙனம் பாரிருந்தல் "மற்றொன்று விரித்தல் மாறுகொளக்கூறல்முதலிய வழுவமைதியின் 59-வது பக்கத்திலே" 19-வது செய்யுளில் "இலரேவல் மன்னர்க்கும் * * * பணடமன்ன தொப்பரோ" என்பது வழுவில் அமையாதோ, இது எவ்வாறயினுமாகுக. மேலே செய்யுள்களாலும் நடையாலும் வேளாளர்க்கும் கண்ணுளர்க்கும் கம்பர்காலத்திற்குப் பின்னர் பகைமை யுண்டாயிருந்தென்று ஏற்படுகின்றது. சுமார் ஆயிரம் வருடங்களுக்குமுன்னர் அரசபுரிந்த குலோத்துங்க பல்லவச்சோழன காலத்தில் கம்மியிருந்தனரென்று நிச்சயிக்கலாம், குலோத்துங்கச்சோழனுக்குப் பின்னர்வந்த அரசர்களிலொருவனுயிய பரகேசரிவர்மனுயிய அதிராஜேந்திரதேவர் அபிஷேகம்பொறு திருவல்லம் ஆலயத்தில் ஏற்பட்ட சிலாசாலனத்தில் "வலங்கை யிடங்கை மகங்மையும்" என்றிருத்தலாலும் இது எல்லாறு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டதாதலாலும் ஏழெழுபதில் பதினெண்மர் வேளாளர் குடிமக்களென்பதினாலும் படிக்காசு புலவர் கம்மாளர் குறும்படக்கி என்று கூறியிருத்தலாலும் வலங்கை யிடங்கையென்னும் கட்சிபேதம் கம்பர் காலத்திற்குப் பின்பு ஏற்பட்ட தென்று வேறு பிரமாணங்களால்

ஸ்திரப்படுத்தலாம். கம்மியர்க்கும் வேளாளர்க்கும் நீண்ட காலத்திற்கு முன்னரே பகைமையுண்டா யிருந்தென்று மேற்காட்டிய பிரமாணங்களே சான்றுபகர்கின்றன. இவ்விருவகுப்பினர்களுக்குள் கட்சிபேதங்கள் அதிகரித்து தத்தமபக்கங்களில் சிலசாதிகளைச் சேர்த்துக்கொண்டு தத்தமதொழிற்களின் பெருமையையே விசேடமாய்ப்பேசி கலகஞ்செய்து சண்டையிட்டனர்கள். இக்கலகத்திற்குத் தலைமையாயிருந்த இரண்டு கட்சிக்காரரும் ஆதியில் காஞ்சியில் அரசபுரிந்தபோர அரசனிடம் போய் அறிவிக்க அவ்வரசன் அவ்வழக்காரிருவரைத் தனது வலது புறமாகவும் இடதுபுறமாகவும் நிற்கவைத்துத் தீர்மானஞ் சொன்னமையே வலங்கை பிரிவென்றும் இடங்கை பிரிவென்றும் வழங்கலாயிற்று என்று முன்னோர் கூறுகின்றனர்.

இப்பேதங்கள் காஞ்சிபுரத்தில் கிளம்பினதாக அனுமானிப்பதற்குச்சில ஆதாரங்களிருக்கின்றன. எங்ஙனமெனில் வலங்கையார் கோயில் இடங்கையார் கோயில் வலங்கை மண்டபம் இடங்கைமண்டபம் வலங்கைதாசி இடங்கைதாசி இவ்வுபேதல பணிசெய்வோன் நாவிதன் முதலிய பேதங்களிருந்து வருகின்றன.

சாஸனங்களில் வலங்கை இடங்கை ஜாதிகளென்று சொல்லப்படுகின்றதே யன்றி யின்னின்ன ஜாதிகளென்று குறிப்பிடவில்லை. ஆந்திர அரசர்களாகிய தெலுங்கர் காலத்திலும் மேன்மேலும் கலகங்கள் பெருகியதாகத் தெரிகின்றது. வேளாளர் சார்பாகக் கவரைநாயருஞ் சேர்ந்திருப்பதினால், ஆங்கிலேயர் சென்னைக்கு வந்த காலதிலும் தற்குப் பின்னிட்டும் அதிகமாக இவ்விருகட்சி கலகங்களுமிருந்ததாகச் சரித்திரத்தால் தெரியவருகின்றது. கி-பி-1707லுள்ள சென்னை சரித்திரம் Madras in the olden times' என்னும் புத்தகம் 20-வது அத்தியாயத்தில் சென்னை மைலாப்பூர் முதலிய விடங்களில் இக்கட்சிகளால்பெருங்கலகங்கள் நடந்ததாகக்கூறப்பட்டிருக்கின்றது. சிதம்பரம் காஞ்சி கூடலூர்முதலிய விடங்களிலும் அக்காலத்தில் கலகங்கள் நடந்தன. இங்ஙனம் நடந்தவலங்கை இடங்கை கலகங்கள் 1858லுத்திற்குப்பின்னர் அரசாங்கத்தில்ஏற்பட்ட பினல்கோட் என்னுஞ்சட்டம் ஆசாரத்திற்குவாவே கொஞ்சங்கொஞ்சமாய்அடங்கிப்போயிற்று. அடங்கியபோதிலும் அவ்வாவிகளால் ஒதுக்கப்பட்ட கணிகைமாதராகிய தாசிகள் இப்பேதத்தைப்பாராட்டுகின்றனர். எங்ஙனமெனில் இருவகைக்ட்சிகளைச்சேர்ந்தபிரபுக்கள் வீடுகளில் சுபகாரியங்களுக்குவெவ்வேறத்தாசிகளும் தாசிகச்சேரியில் விஜயஞ்செய்த பிரபுவம்சத்தவர்களுக்கு இடங்கை தாசிமரியாதை செய்யாமலும் வலங்கை தாசிவீடுகளுக்கு பிரபுவிற்கு மரியாதை செய்யாமலும் இருக்கின்றனர். இங்ஙனம் அவமதிக்கும் தாசிகள் இனவகைகளென் இன்ன இன்ன தலையுடையவன் என்னும் பேதங்களைப்பராட்டாமல் பொதுவாகப்பதிக்கும் பொருட்பெண்டாகிய தாசிகள் ஒரு சபையில் புருஷர்களுக்கு ஒருவர்க்கு மரியாதைகாட்டலும் மற்றொருவர்க்குக் காட்டாமலிருத்தலும் பெருத்த வெட்கமாம். தாசிகளும் இவ்விருகட்சிகளிலிசைந்த புத்தியான்கள் இழிகுலமென்று எண்ணி நீக்கி வருகின்றனர்.

மேல்கா[illegible]செய்யுள்களின் கருத்தால் வேளாளரும் கம்மாளருமே இக்கட்சிக்குக் காரணகர்த்தாக்களாயிருந்தார்களென்று தெளிவிப்படுகின்றது.

பேச்சல் ரிபோர்டுகளின் முடிவு.

இந்தியாவிலேயுள்ள ஜனங்களின் தொகை இவ்வளவென்று தெரிந்துகொள்ளும்பொருட்டு ஆங்கிலேய கவர்ன்மெண்டாரால் 1871-வருஷம் முதற்கொண்டு பத்துவருஷத்திற்கு ஒருமுறை கணக்கெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாய்க்கணக்கெடுக்கும் சென்சஸ் கமிஷனரியின் ஜனசங்கையாகிய சென்சஸ் ரிபோர்டுகள் 1871-81-91-1901-வருடங்களிலெழுதிவிடப்பட்டிருக்கின்றது. இவைகளில் ஒன்றிலகுறையிருப்பதுபோல் மற்றொன்றிலாது. எங்ஙனமெனில் 1871-லவனரியின் ஜனத்தொகை 30½-லட்சமென்றும் 1891-ல் 20-லட்சமென்றும் ஜாதியை உட்பிரிவுகளில் வகுப்பினருக்குச் சமயசம்பந்தமில்லாத வகுப்பினைச் சேர்த்தும் சம்பந்தமுள்ளதை நீக்கியும் எழுதப்பட்டிருக்கின்றது. இங்ஙனமெழுதுவதை நூலிழைக்கு சமபிரதாயம் ஐதிகம் முதலியவை எனத்தழுவியவைகளில்லை யென்று பின்வரும் விஷயங்களால் கண்டுகொள்ளலாம்.

1891-ஆம் வருடத்திலே வெளியாகிய சென்சஸ் எண்ணப்பட்ட ஜனசங்கை பிரிபோர்ட்டில் சென்சஸ் சூப்பரின்டெனிடெண்டு ஆகிய கனம் ஸ்டூவர்ட் துரையவர்கள் எழுதிய ஜாதிகளுடைய விருதாதர்ம அனேக பாகங்களில் வபரிதபபட்டு சாஸ்திரத்திற்கும் சாமபிரதாயத்திற்கும் ஐதிகத்திற்கும் ஆலோசாசாரத்திற்கும் முரண்படுகின்றமையால் இக்காடு சலஸ்டிகாரர்களுக்கும் புரபபாபிய இஸ்பிசாரிணியில் முழுதும் வஞ்சிக்கப்பட்ட ஜாதி தலைவர்களாகிய பெரியோர்களையும் பொய்ப்பொருக்களால் பூர்வபரம்பரைமரியாதைக்கு

பிருக்கிற விஷயத்தின் ஆபாசங்களில்லாவண்ணியபரைப்பற்றி கூறி யிருப்பதைமட்டும் நாம் இங்குநிலதிருஷ்டாந்தங்களால் மறுக் கத்துணிந்தாம்:—

"வண்ணியர் அல்லது பண்டையாட்சிகள் இந்தியா தென்பா கத்திலுமசேலத்திலும் வடஆர்க்காடு தென்ஆர்க்காடு மதுரை முதலானவிடங்களிலும்ஏராளமாயிருப்பதாகவும், பள்ளிகளும் பள்ளர்களும் வார்த்தை மயக்கத்தால் ஒன்றேயென்று சொல் லுவதற்குச் சக்கேமில்லாவிடினும் அவ்விரண்டு சாதியும் தற் காலம் வெவ்வேறு சாதிகளாக்கேயிருக்கின்றன" வென்றும் மூன்னுக்குப்பின் மலேயுடைகூறுகின்றார். "காலம் வெவ் வேறு சாதியாக விருந்தால் மற்றெந்த காலத்தில் ஒரேசாதி யாக விருந்தன! அதற்கு ஆதாரம் ஒன்றும் காட்டினரில்லை. வாக்கிய ஐக்கியத்தாலென்ன காயும் காயனும் ஒன்றென்றெண் ணலாமா? வாக்கிய ஐக்கியத்தால் சந்தேகித்தல கூடுமேயல்லா மல் நிச்சயமென்று சாதித்தல் கூடாது. சந்தேகநிலையுடை யார்க்கு ஆதன்று. "வண்ணி என்பது அக்கினி என்றும் வண் ணியர் அக்கினி குலத்தாரென்று பிராமணர்களால் வண்ணியர் அபிஷ்டத்தைப் பூரணமாக்கும்படி வண்ணியர் அக்கினிகுலத் தாரென்று சொல்லப்பட்டதாய்த் தோன்றுகின்றது. இந்த சாத்திரங்களெல்லாம் யாரால் கூறப்பட்டனவோ? இந்துக்களுக்கெல்லாம் குருவிடமாயிருப்பார் யாரோ? யாருடைய போதனாவலத்தால் தொன்று தொட்டிதனது காறும் உள்ள இந்துக்கள் ஒழுகுகின்றார்களோ? சாதி உற்பத்தி, சாதியின் உயர்வுதாழ்வு, சாதியின் சம்மர்ணம் முதலியன பா ருக்குள் அல்லது எமதத்தவருகுள் வழங்கப்பட்டு வருகின் றனவென்பதை யெவ்வாரை அறிவார்? இத்தேசத்திலும் இந்து மதத்திலுமே இச்சாதிபேதம புழங்குவதாயின் இந்த நாட்டுக்கு வழிகாட்டியது எது? வழிகாட்டுவார் யாவர்? பிராமண ரேயன்றே? அதப்பிராமணரே மற்றெல்லாஜாதிக்கும்தலைவ ராயிருப்ப அச்சாதியார் ஆதிஷ்டப்படி ஏன் நீசாயமிருப்பின் அவர்களையும் உயர்த்திக் கூறப்படாது. பிடாஷ்டங்களெல்லாம் குரு பொதுவேட அனேரே? மூன்று ஜாதியாருக்கும் குருவா யிய பிராமண ஒருஜாதியையுமட்டும் உயர்த்திக்கூறவேண்டிய தனுவியமாதலால் துரையவர்கள் கொண்ட கருத்து தவறென் றும் உணரத்தலைப்.

"பண்டையாட்சி என்பது இராணுவவீரனைப் பொருள் படுமேன்றும் அப்பதம் கொஞ்சகாலத்திற்கு முன் உற்பவித்த

தென்றும்" கூறும் துரையவர்களே "பள்ளிகள் ஓர்காலத்தில் சுயாதினர்களாயும் பூமியுடையவர்களாயும் இருந்ததை ஒப்பத்தக்கதே"யென்றும் சொல்லுவதுடன் "இவர்கள் அந் நிலைமையை உத்தேசித்தே தங்களை சுதந்திரியரென ஆசை கொண்டு இருக்கிறார்கள்" வென்றும், "சுதந்திரிய னென்பத தற்கு வேறு விதமாயுள் சொன்னுலொழிய இவர்கள் சுதந்திரி யர்க" ளென்கிறார். சுதந்திரிய னென்பதற்கு உண்மைப்பொ ருள்தான் யாதென்று துரை அறிவார்? சுதந்திரியர் என்பத தற்கு தூத்திரன், வேளாளர் எனபதே பொருளாம். ஆயின் ஆதாதினர்களும் கைக்கோல்லர்கள் யாவர்? சுயாதினர்களும் சாயுதாலுடையவர்களும் பிராம்மணசாதிகளும் இணைபிரிக் ஞமாயிருப்பவர்களென்பார்? இத்தகையமேனமையை வண்ணி யர்கள் பெற்றிருந்தார்களென்று கூறியதுரையவர்கள் வண்ணி யர்கள் சுதந்திரியர் ஆகமாட்டார்களென்று கூறுவதற்கு எப்படி மனங்கொண்டனரோயாமறியோம். சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளைபோல் கேட்டதைச் சொன்னுர் போலும். மேலும் "பலவகுலத்துப்பின் பள்ளிகள் வேளாளருக்குப் பிரிந்தெழுவினிகளாஞர்கள்" என்று துரையவர்கள் கூறுகிறார். பல்லவர்களுக்குமுன்னும் பல்லவர்காலத்திலும் இவர்கள் சுயாதினர்களாக விருந்தார்களென்பது துரையவர் கள் செலவின் அருத்தபத்தி பிரமாணத்தால் விளங்குகிறது. பிராமணருக்குள் அனேக பிரிவுகளிருத்தல் போலவே ஏனைய ஜாதியாருக்குள்ளும் பலபிரிவுகளிருத்தல் கூடும் அதனல் அச் சாதிக்கு இழுக்கென்னே? பிவண்ணியர்கள் சுதந்திரியரேயாத லால் அவர்கள் ஆதியில் சத்தேய மதத்தினரேயாம். அதற்கு பூசை இரவல் ஆரூசங்களைவத்து காளிக்கு இரவுபூசை பிலேடி அக்கினி குலோற்பவர்களாதலால் தங்குலத்துறித்த திரௌபதி (காளி-துர்க்கை) முதலிய தேவாலயங்களுக்கு பூசையாதி உரிமைத தொழிலும் நமதாகவேண்டுமாம். இதவ னறி பண்டையாட்சி-சாயகர-கண்டர்-முதலிய தமிழ்ப்பதங்கள் புராதனமாகவே தமிழுனாடான காலத்திலேயே உண்டென்ப தற்கு அழகிதாட்டப்படும் கல்லெட்டுமுதலியவற்றிலும் சங்க நூல்களிலும்மன்குளைக்கும்.

அவர்களுக்கு பிரமாணம்வருமாறு:—1500-வருடங்களுக் கிதமுன் எப்பட்டகல்லாடம் எனும் நூலில் 40-வது அதி லலில் "காப்பாட வண்ணிபரசுயே பெருமான்" எனவும் வி ல்லிபுத்தூராழ்வார் பாரதம் சபாபருவமே இராஜசூயச் சருக்கம்

111-வது கவி. (167-பக்கம்.)

"பருதியமதியும் வெரீஇயுந் முதலாம்
பல்வகைக் குலத்தை யூர்பவித்த"

சம்பரியற்றிய செம்பொற்சிலை வெழுபது 3-வது கவி. (171-பக்கம்.)

"இலங்கினித்திறங்கூர் வன்னியர் செல்லன்றிச்
சிலம்பு முண்டோ"

வரிட்டம் அரிகேசரிக்கை 7-வது கவி. (172-பக்கம்)

* * * * "திக்தைசெய்வார் கல்குரவு தீரடியர் வன்னியாரோ
மத்தவிலைச்சுரவிலுறை கிலேமன்னவரோலோம்"

கம்பராமாயணம் உத்தரகாண்டம் இலங்கையை யழித்தபடலம்.

* * * * 11-வது கவி (172-பக்கம்.)

"படிமன்னிவாழும் பலவன்னியர்மண்டலீகர்
முடிமன்னரெல்லாமுறையே புகுந்தேவல்கேட்க."

மேற்கூறிய கவிகள்போலும் வழங்கிய வழனியர் என்னும் மொழி அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னமே தமிழில் வழங்கப்பட்டு வருகின்றது. அன்றியும்:—

வன்னியர் என்னும் பதம் செப்பேடுகளிலும் சிலாசாசனங்களிலும் வழங்கிவருவதற்குப் பிரமாணம்:—

A. D. 1189, E Hultzsch, Ph. D ஹல்ட்ஸுவென்பவர்கள் வெளியிட்ட புத்தகம் 3-வது வால்யூம் 2-வது பாகம் 99-வது பக்கம் 52-வது சிலாசாஸனம் ஆறுவது வரியில்:—

தானி ஆதிநாயகன் நீலகங்கரையன் வன்னிய நாயனை உத்தமசிகாமணிப்பன். (223-பக்கம்.)

J. A. S. Burgess, C. I. E. LL.D. பர்ஜஸ் துரையவர்கள் வெளியிட்ட புத்தகம் 1-வதுவாலியூம் 152-பக்கம் கெ.12செப்பெடு சாஸனம் வரி 24. 25. 26. சாலிவாகன சகாப்தம் 1277 (கி-பி-1456). காஞ்சிபுரியையாண்ட இராஜவீரிலய அரசன்காலத்தில் ஏற்பட்ட செப்பேடு சாஸனம் வருமாறு.

(259-60 பக்கங்கள்.)

வன்னிய ரென்னுஞ்சேனை தலைவர்.

ஜெ. துரையவர்கள் செப்பேடு சாஸனம்:—

ஜெ. துரையவர்கள் வெளியிட்ட புத்தகம் 1-வது வாலியம் 150-பக்கம் No. செப்பேடுசாஸனமவரி 23. 24. 25. 26. சாலிவாகன சகாப்தம் 1351 (கி. பி. 1429). வீரபுக்க தேவமகாராயர் தாமப்பசாதனம்,

வன்னிய ராஜகோத்திரம் மூக்காரியகன் குமாரன் முத்தியப்ப நாயகனை உள்ளிட்டார் அவரவரும் நாம் எங்கள் காணியாட்சி திருவண்ணாமலை.

ஜெ. துரையவர்கள் வெளியிட்ட புத்தகம் 1-வது வாலியம் No. 10, செப்பேடு சாஸனம் 24, 25, 26-வது வரிகளில் "வன்னியராஜ கோத்திரம் மூன்டியப்பநாயகன் குமாரன் முத்து நாயகன் உள்ளிட்டார் யாவரும் நாம் எங்கள் காணியாட்சி நாமமான வெள்ளோடை" என்பதில் வன்னியர் அரசகுலம் சத்தாசென ருஜுவாகின்றது.

படையாட்சி யென்னும் பட்டப்பெயர் அரசகுலத்தினர்க்கு அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னமே வழங்கி வருகின்றதென்பதற்குப் பிரமாணம் வருமாறு:—

மதுரையில் அரசபுரிந்த அரிமர்த்தன பாண்டியன்குமார் 2000 வருடத்திற்கு முன்னிருந்தவன். இப்பாண்டியனுக்கு மந்திரியாகிய மாணிக்கவாசகர் திருவாய்மலர்ந்த திராவிடவேத மென்னும் திருவாசகத்தில் திருப்படையாட்சி. 1-வது கவி.

(இப்புத்தகம் 261-பக்கம்)

"பாண்டி நன்னாடுடையான் படையாட்சிகள் பாதமலராகவே" யென்பதினாலும் அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்த திருப்புகழ் கருவூர் 489-வது பாட்டு. (263-பக்கம்)

"சந்ததசரித பராக்ரமர்கள் மந்திரிகுமார் படையாட்சிகள் - முழுமுடி"

என்பதினாலும் படையாட்சி யென்னும் பட்டப்பெயர் வன்னியருக்குள் நீண்டகாலமாய்வழங்கிவருகின்றதென்பதை மேற்காட்டிய பிரமாணங்களால் அறிந்துகொள்ளலாம்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேபரத கண்டத்தில் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரராகிய அந்தணர் அரசர் வணிகர் வேளாள ரென்கிற முதல் நான்கு வருணபேதங்களும் பின்னர் அவற்றினின்று அநுலோம பிரதிலோம முகமியவருணபேதங்களும் பிறந்தனவென்று பூர்வமிருந்த மகரிஷிகளாலும் மாகான்களாலும் அடியார் ஆழ்வாராதிகளாலும் அருளப்பட்ட சுருதி ஸ்மிருதி பதிசாத்திர முதலிய வடமொழி தென்மொழி பிரமாணங்களைக்கொண்டும் வங்க செப்பேடு சிலாசாஸனங்களைக்கொண்டும் கியாயவாயிலாய் இந்நூலில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வனம் முன்னோர் நூல்வழி நிரூபிக்கப்பட்ட வருணபேதங்களில் சிலவருப்பினர் தாம் பிற

க்த சொந்த ஜாதியைவிட்டு வேறுஜாதியாரெனச் சொல்லத் தலைப்பட்டதோவெனைக்கு முள்ளார். எங்ஙனமெனில் பிராமணர் அல்லாதார் பிராமண மெனறும், க்ஷத்திரியர் அல்லாதார் க்ஷத்திரிய ரென்றும் வைசியர் அல்லாதார் வைசியரென்றும் சூத்திரர் அல்லாதார் சூத்திரரென்றும் முறைபிறழ்ந்து பூர்வநூலாட்சிக்கு முற்றும் விரோதமாகவ் சொல்லிக்கொள்வதோடும் பெரியோர்களையும் அவர்கள் நூல்களையும்பழித்தும் அவர்கள் நூல்களை புரட்டியும் வரைந்துள்ளார். இவற்றின் உண்மையினை யுள்ளவாறு உணர்ந்தார் ஈங்கலாத உணராத மேதினியுடையாரும் அறிவாளரும் அறியுமாறு கரு வருணங்களையும் பிரதிஷ்பித்துக்காட்டுமே சாதிக்கண்ணறுடியாயிய விந்நூலினை சென்மொழியிலுள்ள பிங்கலிவாகாதி நிகண்டுகளில் கூறப்படும் வருணபேதங்களே பெரும்பாலும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வுண்மை சொல்லப்பட்ட வருணபேதங்களையும் அவர்கள் இன்னின்னுரென்பதையும் கைக்கண்ணாடி போல இந்நூலில்காட்டியுள்ளதை ஆன்றோரும் அறிவாளரும் மேதினியுடையாரும் தத்தம் மனோசாட்சிக்கு மாறுபடாமல் உண்மை யிதுவென்றும், உண்மை அல்லாதிதுவென்றும் சீர் தூக்கிப்பார்த்து உலகையெய்துவர். அல்லாதார் நிந்தாஸ்துதி யெய்துவர். பெரியோர்களால் கூறப்பட்ட நூல்களின் வருணக்ரமங்களை யொருதிறமுணராதவர்களும் பொருளையே பூஷணமாகப் பூண்டாரும் நியாயபரரையை விட்டகன்றாரும் இந்நூலினைச் சித்த சுவாதீனத்தோடும் ஆழ்ந்தயோசனையோடும் பார்ப்பாரில் சாதியேற்பாடானது தமிழ்வழங்கும் நாடுகளில் உயிர்க்கணக்கான வீருஷங்களுக்கு முன்னிருந்ததென்று எளிதில் அறிவர். நூல்வழிவிட்டு வேறுவழிசெல்ல எத்தனிப்பவர்களுக்கும் சாதி யேற்பாடு கேண்டகோலமாய்த் தென்னாட்டிலும் வடகாட்டிலுமுள்ளதென்று அறியாத அன்னிய நாட்டவருக்கும் இந்நூல் வழிகாட்டியாய் நிற்பதோடு அவரவருக்குரிய ஜாதியை சந்தேகநிவாரணம் செய்வதற்கு ஓர் கருவியாகும்.

முற்றிற்று.

வருணதருப்பணம்

அநுபந்தம்.

இவ்வருணதருப்பணத்தை விரைவில், அச்சிட்டு வெளிப்படுத்தும்படி, எம்மைப் பல்காலும் நண்பர்கள் தூண்டினதாலும், யாம் பல புராணங்களிலும் அப்போதைக்கப்போது கண்டு சோதித்துணர்ந்த சில அரிய விஷயங்களைப் பிறர்த்தெழுதிவைத்த ஏடுகள் பலவகையாய்ச் சிதறித்தருணத்திற் கதப்பட்டாமல் மறைவெய்தி இருந்தமையாலும், காலஹரணமாய் விடுமென வெண்ணி அப்போதகப்பட்ட பிரமாணங்களைக்கொண்டு இந்நூலைப் பூர்த்திசெய்தாம். இங்ஙனம் இதனைப் பூர்த்திசெய்த பின்னர் அவற்றிற் சில வகப்பட்டமையால் அவற்றையும் இவ்வநுபந்தத்தில் தீட்டலானினேம். இதனை வாசிக்கும் விவேகிகள் ஒத்த சந்தர்ப்பங்களில் கூட்டி வாசித்துக்கொள்ளும்படி பிரார்த்திக்கின்றோம்.

இப்பரதகண்ட வாசிகளாயிய நம்மனோர் தொன்று தொட்டுபாரம்பரியமாய் பலிஷ்டப் பிரமாணமாய்க்கொண்டுள்ள பதினெண் புராணங்களில் ஒன்றுயிய மச்சபுராணத்திலே 48-வது அத்தியாயத்திலே தூண்டீரன் என்னும் ஆங்கிரேடனுக்குப் பாண்டியன், கேரளன், சோழன், பல்கு என நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஹரிவம்சத்தில் கூறப்பட்டுள்ள 'கோலன்' அல்லது கலிங்கன் என்னப்பட்டவனே இப்புராணத்தில் பல்கு என்று கூறப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. எங்ஙனமெனின், மேற்சொன்ன நான்கு புத்திரர்கள் பெயராலும் வழங்கப்பட்ட நாடுகள் பரதகண்டத்தின் தென் பாரிசத்தில் உள்ளனவென்று வைடி மச்சபுராணமே கூறுகின்றமையாலும், வைடி புராணம் 195-வது அத்தியாயத்திலே ஆங்கிரசுவின் கோத்திரத்தில் உதித்த அரசர்களின் பிரவரங்கூறுமிடத்து அக்கினி என்னும் ஓர் அரசனைக்கூறி அதற்கு அடுத்து * பாண்டி என்னும் ஓர் அரசனையும் கூறியுள்ளது. இப்பாண்டியின் வம்சத்தினரே பாண்டியர் என்பதற்கு வடமொழி இலக்கணம் செய்த பாணினி முனிவரும் 'பாண்டியி' என்னும் மொழிக்குப் பகுப்பிலக்கணங் கூறுங்கால் பாண்டியர் பாண்டுவின் வம்சத்தில் வந்தவரென்று கூறியிருக்கின்றமையாலும், மேற்கூறிய அக்கினி பாண்டுமுதலிய நால்வரும் செங்கிரம்பொருந்திய செக்கனல் வம்சத்தில் உதித்தவரெனவும், விசேஷமாக இப்பாண்டுவின் வம்சத்தினரைப் பாண்டியர் எனவும், அவர் மதுரையை ஆண்டவர் எனவும் வைடி புராணத்தில் கூறியிருப்பதாலும் எனக்கு இங்ஙனம் மச்ச

* இதன் பாடத்தில் கூறப்பட்ட பாண்டிராஜனன்று.

புராணத்தில் ஆண்டிரன் பல்கு என்னப்பட்டவர்களும் அக்கினி புராணம் 276 - வது அத்தியாயத்திலே முறையே கொண்டிரன் என்னும் பெயரிட்டழைத்திருப்பது மல்லாமல் அன்றேர் நாட்டையும் பல்குநாடு மகாபலநாடு என்று சிறப்பித்திருக்கின்றது. பல்கு + நாடு பல்காடு பாலக்காடு எனச்சிதைந்தும், கோல + நாடு கோல நாடு கோலங்கோடு எனச் சிதைந்தும், மகா + அபலே மகாபலநாடு எனச் சிதைந்தும் வந்திருக்கக்கூடும்; ஏனெனில் பல்கு என்பது பன்றி எனவடபாஷையில் பொருள்படுகின்றமையாலும், இக்காட்டின் அரசசின்னமாக நாணயத்திலும் கொடியிலும் பன்றியுருவமிருத்தலாலும், எங்க. கோலநாடு இதுமலையாள பாஷையில் கோலகம் என்னப்பட்ட அரசன் அரண்மனையை யொட்டியேனும், அல்லது சமஸ்கிரதப்படி கோலம் பன்றி எனப் பொருள்தரத்தக்க விஷயத்தில் கோலன் பன்றியை (முன் சொன்னபடி) கொடியிலும் முத்திரித்த நாணயத்திலும் உடையவன் என்னும் பொருளை யொட்டியேனும் வந்திருத்தல்கூடும். ஆகையால் பல்குநாடு என்பதும் கோலநாடு என்பதும் ஒன்றேயெனத் தணிதற்பாற்று. மேலும் இக்நாடு அக்கினி புராணத்தில் மகாபல நாடு என வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. எங்ஙனமெனில் (மகா + அபலே + நாடு) அதாவது மகா = (அழகிற்) சிறந்த = அபலே = ஸ்திரீகள் வசிக்கின்ற நாடு = வர் என்பதனாலேயும் மருமக்கத்தாயம்பற்றி மாந்தர்தாயபாகத்தினராட்சி சிறப்புற்றிருப்பதனாலேயும், அழகிற் சிறப்புற்றிருப்பதனாலேயும் அந்நாட்டு அபலைகள் சிறப்புடையவர் அல்லது சிறந்தவர் எனக்கூறப்பட்டனர். இதுபோலவே வேங்கன் நாடு என்பதும் வேங்கையை முத்திரையிலும் துவஜத்திலும் உடைய வன் வேங்கையன், இது வேங்கன் என மருவி அவன் நாட்டில் அமர்ந்தது. ஆதலால் பாத்மபுராணத்தில் கூறியபடி சேரமான் ஆண்ட ஆக்கினேய கண்டத்தில் இதுவும் ஓர் பாகமாதலால் அவ் வேந்தற்குரிய பெயர்களைக்கொண்டு கோலநாடு எனவும் தோலங் கோடு எனவும் வேங்கநாடு எனவும் பல்குநாடு எனவும் இப்பிரதேசங்கள் பெயர் பெற்றிருத்தல் கூடும்.

பாத்மபுராணம் உத்தரகாண்டம் 111 - வது அத்தியாயத்திலே விஷ்ணுதாச சோமயிருபதி சம்வாதத்திலே சோழன் சக்கிரவர்த்தியாயிருந்தா னென்றும் அவன் ஆஜ்ஞையில் அநந்தசயனமும் அவன் இராஜ்ஜியத்தில் அடங்கியிருந்ததாயும் அவன் மருமகனே அவ்விடத்திற்கு முதல் அரசனுக்கினான் என்றும் அதுதொடங்கி அங்கு மருமக்கதாயம் ஏற்பட்டதெனவும் கூறப்பட்டிருக்கின்றது. இதுவும் ஓர் மகாபுராண பிரமாணம்.

ஆக்னேயபுராணம் 132-வது அத்தியாயத்திலே சூரியன் முதலிய ஏழுகிரஹங்களின் வம்சாவளியைக் கூறிவருமிடத்து "ஸ்ரீக்ஷ்ரா வருணம்" என்று இரண்டு வம்சங்களைக் கூறுகால் அக்கினிவம்சத்

தில் உதித்த க்ஷத்திரியர்கள் முவர் என்றும் இதற்கு மூன்றுவதாகிய 135 வது அத்தியாயத்திலே பாதகண்டத்தை (மிளகு) வடபெண்ணை முதல்குமரி தென்னைதென்கோடிவரையில் வகுத்து இதனை ஆக்கினேயர் கண்டமெனவும், பெண்ணையினின்றும் விந்தியபர்வதம்வரையில் சௌர (சூரிய) கண்டமெனவும், விந்திய பர்வதத்தினின்றும் இமோத்பர்வதம்வரையில் சௌமிய (சந்திர) கண்டமெனவும் பிரித்து அதின் மேற்சொன்ன ஆக்கினேய கண்டத்தின் அரசர்களைக் கூறுங்கால் சேரசோழபாண்டியர்கள் முவரையே அரசரெனக் கூறப்பட்டிருக்கிறது. இதுமட்டோ! மேலே ஆக்கினேயபுராணம் 132-வது அத்தியாயத்தில் காயகர் எனனும் கோத்திரப்பெயர் கூறியுள்ளதுபோல பாத்மோத்தர புராணமும் கூறுகின்றது.

இதுபோலவே இன்னும் வன்னி வம்சத்தைப்பற்றிக் கூறும் புராணங்கள் பிராமம் - வராஹ்வியம் - மஹாசிவபுராணம் - தேவீபாகவதம் ஸ்ரீபாகவதம் முதலியன. புராணங்கள் யாவையும் யயாதியின் புத்திரனுகிய துருவசு மஹாராஜாவின் வம்சத்தைப்பற்றிக் கூறுமிடத்து அவ்வம்சம் வன்னி சம்பு சுஜி பாண்டு என்னும் பெயர்கொண்ட க்ஷத்திரிய பூபதிகளால் புகழடைத்திருந்த தென்று சிற்சில வேறுபாடுகளுடன் கூறுகின்றன. இந்த வன்னி என்னும் அரசன் பெயரை எடுத்து சிறப்பித்துச் சொல்லாத (சந்திரவமிசத்தைப் பற்றிக்கூறும்) புராணம் ஒன்றேனுங்கிடையாது. இவ்வன்னி என்னுமரசன் அக்கினியேதானும் அவதரித்தனனென்றும், அக்கினியினின்றும் உதித்தன னென்றும் இவன்வம்சத்தார் ஆக்கினேயர், வஹ்நிஜர், (வன்னியர்) ஆங்கிரசர், சேரர், சோழர், பாண்டியர், மாவலர், கோலர், கோவலர், கொண்டிரர், (கவுண்டர்) ஆண்டிரர், பல்காடர், பல்குவினர் எனப்பல பெயர்களுடனே புராணங்களில் விவகரிக்கப்படுகின்றனர். ... ஆனால் இவ்வரசரைக் கூறுமிடத்துப் புராணங்களில் சிற்சில வேறுபாடுகளேனும் இருத்தல் என் எனில் இத்தகைய வேறுபாடுகள் சூரியவம்சத்திலும், சந்திரவம்சத்திலும், யதுவம்சத்திலுமே யிருப்பதாயினும், ஒரு ராமசரித்திரமே வால்மீகத்தில் ஒருவாறும், பாரதத்தில் ஒருவாறும், பாத்மத்தில் ஒருவாறும், அக்கினி புராணத்தில் ஒருவாறும், ஸ்ரீபாகவதத்தில் ஒருவாறும் இருப்பதற்கு யாதுசமாதானமோ அதுவே இதற்கும் சமாதானமாம். இவ்வேற்றுமை கற்பபேதத்தாலாயதென்பது கற்றோர்கள் துணிபு.

க்ஷத்திரியர் என்னப்பட்ட பதம் வடகாட்டிலுள்ள ஆரியர்களுக்கே யுரியதென்றும், தென்னாட்டிலுள்ள திராவிடருக்கு உரியதலை வென்றும் ஆகையால் தென்னாட்டை அரசாண்ட சேரசோழ பாண்டியர்களையும் அவர் வம்சவழிவந்த ஏனையோரையும் க்ஷத்திரியர் எனல் ஆகாது என்றும் சிற்சில பண்டித சிரோமணிகள் அபிப்பிராயங் கொள்கின்றனர். இவ்வபிப்பிராயம் காரணமாகவும், பரசுராமர் க்ஷத்திரியப் பூண்டை முற்றும் சம்மரித்து

விட்டனரென்னும் புராணக்கூற்று காரணமாகவும், இக்காட்டில் க்ஷத்திரியரே கிடையார்கள் என அபிப்பிராயங் கொண்டுள்ளாரும் உளர். இவர்கள் அபிப்பிராயங்கள் நியாயத்திற்கு நில்லா. எங்ஙனமெனின், பரசராமரால் க்ஷத்திரியவம்சம் முற்றுமே சம்மரிக்கப்பட்டில்லை யென்றும் பரசராம ஆட்சிக்குப் பின்னரும் பல க்ஷத்திரியர்கள் இருந்தார்களென்றும் அப்பரசராமரே ஒரு க்ஷத்திரியனுக்கு முன்னிற்காமல் யுத்த முகத்தில் புறங்கொடுத்தோடினரென்றும், இன்னதோர் காரணத்தால் "இனி க்ஷத்திரியருக்கு வில்வித்தை கற்பிக்கோம்"என்று விரதங்கொண்டிருந்த அப்பரசராமரிடமே கர்ணன் தன் மரபை மறைக்கும்பொருட்டு வில்வித்தை கற்றதால் அவனுக்கு வித்தை யுத்தமுகத்தில் பலிக்கா தொழியுமாறு சாபம் கொடுத்தாரும் அப்பரசராமரே என்றும் முன்னரே 149 - வது பக்கத்தில் காட்டியுள்ளமையால் க்ஷத்திரியப்பூண்டு இந்நாட்டில் கிடையாதென்பார் கூற்று முற்றும் பிழைபடுள்ள தென்றே பசுமரத்தாணி போல் நாட்டற்பாற்று. வடமொழியில் க்ஷத்திரியரென்னும் பதம் யோகபதமா அல்லது ரூடபதமா வென்பதனை ஆராயுமிடத்துப் பிரஜைகட்கு ஆபத்தினின்றும் காப்பவன் என்னும் பொருளையே தனக்குள் அடக்கியுள்ளமையால் ஆம்; அது யோகபதமேயாம். இதற்கு நேரான திராவிடமொழி காவலரே என்பதே. காவலன் என்பதும் "குடிகளைத் துன்பத்தினின்றும் காப்பவன்" என்னும் பொருளைத் தனக்குள் அடக்கியுள்ளமையால் இதுவுங் காரணப் பெயரேயாம். வடநாட்டார், யாருக்கு என்ன காரணத்தால் க்ஷத்திரியரென் னப் பெயரிட்டனரோ, அவருக்கு அன்னகாரணத்தால் திராவிடரும் காவலன் எனப் பெயரிட்டன ரென்பது ஸ்பஷ்டம். இதனால் க்ஷத்திரியன் என்பதும் காவலனென்பதும் ஒரு சார்பாராயே குறிக்கின்ற சத்தபேதமுடைய இரண்டு பதா காமங்களேயாதலால் இவற்றற்குப் பொருட்பேதங்கிடையாது. ஆகையால் க்ஷத்திரிய ரென்பதும் காவலரென்பதும் ஒருசாராரேயாம். தென்னாட்டில் அரசபுரிந்த சேர சோழ பாண்டியரும், அவர்கள் சந்ததியாரும் காவலரென தமிழ் நூல்களில் ஏராளமான பிரயோகங்களிருத்தலால் வன்னிமரபினர் யாவரும் காவலர் அல்லது க்ஷத்திரியரேயாவர்.

மேலும் வடபாலகத்தில் வடநாட்டில் வழங்கிவரும் மச்சம், கூர்மம், ஆக்நேயம், பாத்மம், பிராமம், வாயவ்யம், மகாசிவபுராணம், தேவிபாகவதம், ஸ்ரீபாகவதம், பாரதம் முதலிய புராணேதிகாசங்களில் கூறப்பட்டுள்ள சூரியசந்திர அக்கினிவம்ச க்ஷத்திரிய சந்ததியரே சேரசோழ பாண்டியரென முன்னரே நிருபித்துள்ளமையால் சேரசோழபாண்டியர்களும் க்ஷத்திரியரேயன்றி வேறல்லர்.

சில சாதார் தற்கலமுள்ள க்ஷத்திரியர்கள் சாத்திரப்படி ஒழுக்க ஆசாரங்களில் ஒரு சிறிதும் தவறுதலின்றி ஒழுகுகிறதேனரார் ஒழுக்க ஆசாரங்களில் வழுவிடப்பவர்களேயும் எவ்வளவு க்ஷத்தி

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
4	14	அபருதேயம் ...	அபௌருஷேயம்
,,	32	காதலாகமலம் ...	காதலாமலகம்
7	5	வாணிட ...	வாணிட
9	1	விதினற்று ...	விதிஞற்று
,,	22	வல்லோ ...	வல்லோர்
,,	19	பராணமுதலியவைகளிலு ...	புராணமுதலியவைகளிலு
,,	,,	புத்திரோற்பதி ...	புத்திரோற்பத்தி
,,	21	சொல்லிய ...	சொல்லிய
12	2	அரசருக்குசகுடைய ...	அரசருக்குடைய
13	2	தோட்டம் தோட்டம் ...	தோட்டம்
,,	17	குண்டகோள ...	குண்டகோள
27	23	தக்கிற ...	தக்கின
30	24	அணுலோபம ...	அனுலோம
31	23	குறவ ...	குறவன்
35	6	ஜாதின் ...	ஜாதின்
,,	9	வைசய ...	வைசிய
,,	24	பிறற்ற ...	பிறந்த
,,	25	சண்டால ...	சண்டாள
36	17	பூதத்திலிம் ...	பாதத்திலும்
38	16	பாரசாஸ்மிருதி ...	பராசரஸ்மிருதி
,,	12	பிரகரணம் ...	பிரகாணம்
,,	24	பிரம்மனே ...	பிரம்மணனே
39	2	உத்தம ...	உத்தம
,,	9	கூத்திய ...	கூத்திரிய
,,	10	வைசியலுக்கும்பிற ...	வைசியலுக்குபிற
,,	20	ஜாதிகளை ...	ஜாதிகளை
,,	21	கூறம்பட்ட ...	கூறப்பட்ட
,,	22	தணைப்படி ...	தணைக்கப்படி
,,	26	பிராங்மன ...	பிராமண
,,	26	என்பவலு ...	என்பவனு
43	17	நிறப்பு ...	நிறப்பு
,,	29	சேரவஷ ...	சேரலன்
45	4	காளர் ...	காளர
,,	9	பெதுப்பே ...	பொதுப்பே

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
,,	16	சூடாமனி	சூடாமணி
,,	29	நிவாகத்தில்	நிவாகரத்தில்
,,	5	குரியென்று	குரியதென்று
,,	30	வோட்டல்	மேட்டல்
49	22	ஆடர்	ஆடவர்
,,	4	பெயராதல்	பெயராதல்
56	11	ன்னிருக்க	முன்னிருக்க
57	26	உட்பி	கட்கு
,,	30	புலவர்களிரு	புலவர்களிரு
61	6	மாறர்	மறர்
62	10	பிரவெனின்	பிறவெனின்
,,	17	வேளாயுளர்	வேளாளர்
65	9	சிகைக்கறு	சிக்கற்று
,,	27	மினறும்	மிறனும்
72	6	மக்களின்	மெய்க்களின்
,,	10	பூமா	பூமாலை
77	5	யாடே	பாடே
,,	30	அறுபவி	அறுபவலி
78	9	ஆயிரத்தொண்	ஆயிரத்தென்
83	19	வேணு	வேலை
85	32	திரவென்	திரவென்
86	3	சொக்கார்	செக்கர்
,,	29	சுத்தியர்	சுத்திரியர்
88	6	பிரமோத்தர	பிரமோத்தர
92	19	நூகும	நுலகமு
,,	32	வேம்பா	வெம்பா
94	17	ஞர்	காயனர்
95	19	ஒன்முயி	ஒன்முயி
96	14	சொத்தேநா	சொறித்தேநா
97	20	குலத்தாரான	குலத்தாரானை
99	9	ஆயினும்	ஆயினும்
,,	33	முல்லியன	முதலியன
111	5	வண	வண்
123	7	மரிய	மாரிய
128	7	பொருமை	பெருமை
130	3	சோடி	சோடி
131	26	ஈன்காவது	ஈன்றாவது
133	9	தெனம்	தெனவு
133	20	என்பன்	என்பன
136	28	வேழில்	வெழில்
,,	10	ஆதாரி	ஆசாரி
,,	5	நிகப்பெய	நிறப்புப்பெ

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
,,	10	ராமாம்	ராம்
141	6	நிருக்கி	திருக்கி
145	32	அத்தியா	அத்தியாய
146	26	மூமை	மூறை
149	8	காபதி	காபதி
,,	9	மனேச்சனன்	மனேச்சனன்
,,	23	கடவாதை	கடவதை
150	1	அதற்கு	அதற்கு
152	27	மூன	மூல
155	12	லங்கிரக்காளென்று	லங்கிரக்கனென்று
156	13	த்பல்	த்தல்
,,	17	கூத்திரிய	கூத்திரிய
160	6	வில்லிபித்தா	வில்லிபுத்தா
,,	8	காரார்த்த	காரணர்த்த
174	31	ருல	ருகுல
180	21	பெருப்பாறு	பெரும்பாறு
186	23	பெரும்மல்	பெரும்பான
198	18	விருத்தி	விருத்தி
203	33	மத்திரதை	மத்திரத்தை
205	30	ஏனையாரகளேனை	ஏனையாரகளேனை
206	25	பான	யான
211	30	செய்கை	செய்கை
228	8	ரமய	ரமய
,,	23	சொல்	சொல
236	25	யேழான்	யெழான்
246	25	வொழுக	வொழுக
252	,,	பெயையும்	பெயரையும்
,,	13	நாளய	நாளய
,,	35	மூதனை	மூதாளை
253	8	தேசுத்து	தேசத்து
255	35	ன்றிருகு	ன்முருகு
256	18	கொபிய்ப	கொப்ப
258	35	னகுமுதல் அனைகுண்டிரை	இத்தரசர்களின்
261	10	அசர்	அரசர்
275	21	நாலவதில்	நாலாவதில்
275	27	தொங்குகெரி	தோங்குகெரி
,,	28	வெனி	தெனி
,,	30	முன்னடி	முன்னிடி
288	6	சானம்	சாமனம்
289	23	இன்றுரெனி	இன்றனரே
290	28	ஆண்டின	ஆண்டன
296	20	முதய	முதலிய

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
,,	22	பிதெலாரும், சாவனக்க	
,,	,,	ளாலும், அபிப்பிராயங்க	நாறும்
,,	24	ளாலும், பிரமாணங்களா	
,,	,,	லும்	
304	2	வொகதெரி	... வெகதெரி
307	13	பிருந்தென்று	... பிருந்தென்று
314	5	நீரதனை	.. நீரதனை
315	4	வர்சர	... வரினை
,,	19	அரயாட்சி	... அரசாட்சி
317	4	பிருக்வர்	.. பிருக்வர்
318	6	வினோயாடர்	... வினோயாடத்
,,	31	மறக்குஞ்	.. மறக்குஞ்
320	21	மாவர்ர்	மானர்

நியரெனல்கூடும் என்கின்றனர். ஒழுக்காசாராதிகள் காலங்தோறும் இடங்தோறும் பற்பலவாருய்ப் பேதப்பட்டிருப்பதினுலேயே அன்னேர் பாரம்பரையைச்சந்தேகித்தல்கூடாது. எனெனில் ஒழுக்கம்முதலியன காலதேசவர்த்தமானுதிகளே ஒட்டியே நிகழ்வது. எங்ஙன மெனின், கால்வருணத்தினும் மேல்வருணத்தினராகியவரும் மூப்புரிநூலோர் இருபிறப்பாளர் என்னும் காரணப்பெயரெய்தியவருமாகிய பிராமணரே சிற்சில காலங்களில் தத்தம் ஒழுக்கம் குலைந்து நிரிந்துள்ளார். இதனுல் அவர்கள் பிராமணராகாரோ. ஆசாரம் ஒழுங்கியதால் சத்திரியரல்லரென்றும் பிராமணர் அல்லரெனறும் கோடல் பொருந்தாதென்பதற்குப் பிரமாணம்.

திருவினையாடற்புராணம்

உலவாக்கிழியருளிய படலம் 3-வது கவி.

அறவோரெல்லா நிரப்பெய்தியாகங்கிடந்தநூலன்றி
ம்மறைநூல்முழுமுனிவேள்வியினேர்வேள்வியென்புலத்தி
னுறைவோர்வேள்வியிழந்திழிந்ததொழில்செய்தாற்றுயிர்வளர்ப்
புறரடனேர்தார்பகியாலேபுழுங்கியொழிந்ததுடியெல்லாம். [பான்

இக்கவியில் "அறவோரெல்லாம் நிரப்பெய்தியாகங் கிடந்தநூலன்றி மறைநூல்முழுமுனிவேள்வியினேர்வேள்வி" அந்தணரெல்லோரும் வறுமையால் தங்கள் ஆசந்தையிட்டு நீங்கக்கூடாத உபநிதமின்றியும் வேதபாராயணமின்றியும் இழிதொழில் செய்யத்தலைப்பட்டனரென்று கூறப்பட்டிருக்கின்றது. முப்புரிநூலோர் வேள்வியாளர் என்னும் சிறப்புப் பேருற்று அந்தணரே உபநிதமின்றி இழிதொழில் செய்தனரென்றல் முப்புரிநூலோரென்னும் சிறப்புப்பெயர் எய்தாத அரசவகுப்பினர் வறுமையினுலும் வேற்றரசர் படையெழுச்சியினுலும் தத்தம்நிலபலம் செல்வம்முதலியவைகளை இழந்தவர்கள் என்னுங்கிலையில் இருப்பார்களென்பதை கற்றோரும் மற்றோரும் உணராதிரார். இதுவல்லாமலும் ஒப்பஞ்சகாலத்தில் கௌசிகமுனிவர் ஓர் புலையன் பதப்படுத்திவைத்திருந்த நாய் மாமிசத்தை இரவிற் திருடியுண்டதைக் கண்ட அக்காதகனுக்கு "ஒழுக்கந்தருமினு முயிரைக்காக்குதலொழுக்கலனென முனியறையக் காதகன்" என்பதாய்ச் சமாதனம் கூறியபின்,

அப்பெருஞ்சுணங்கினனங்கியூட்டியே
கைப்படுத்தருந்தி நீர்மாந்திக்காரணன்
செப்பரும்பசியினேதகர்த்து வையியே
இப்பகிவருவதே னென்றுகோக்கினன்.

என்று மஹாபாரதம் சாந்திபர்வம் ஆசாரநிலை சருக்கத்தில் 195-வது கவிமுதல் 208-வது கவிவரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

ற்கு (பிராமண ஆசாரத்திற்கு) முற்றும் விரோதமாய் நடந்துவருகின்றனர். இவ்வனம் நடப்பவர்களைப் பிராம்மரல்லவென யாரேனுங் கொள்வதுண்டோ? இதுபோலவே க்ஷத்திரியரில் அநேகர் பரசுராமனுடைய கோபமைக்குஞ்சி க்ஷத்திரியகுலத்தை நீத்தாரும் கார்கஷம்பூண்டாரும் கங்கணதாரியு மானுரென்றும் இதிகாசாதிகள் முறையிடுகின்றன. பூர்வமிருந்த பிராமணர்களின் நிலைமையைப்பற்றியும் க்ஷத்திரியர்களி னிலைமையைப்பற்றியும் கூறும் பிரமாணங்கள் பலவாறுகளிருப்பினும் 'அவைகளுக்கொப்ப தற்காலத்திலும் அந்தணர், அரசர் முதலியவர் 'தத்தம் வருணக்கிரம தருமங்களினின்று பிறழ்ந்து நடக்கின்றனர். இங்ஙனம் நடத்தல் காலபேதமென்று அறிவுடையோர் கூறுவர். இதற்கிணங்க "குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடையெலிந்தோருர் கண்ணிலு கண்ணுவர்" என்றும்,

"பொன்னெடு மணியிண்டானுற் புலியதனுக்கினஞ்சென்று
தன்னையும் புகழ்ந்து கொண்டுசாதியில் மணமுஞ்செய்வார்
மன்னராயிருந்தபோர்கள் எகைகெட்டுப்போவராயின்
பின்னையுமாரேவென்று பேசுவாரேசுவாரே."

என்று கூறியிருத்தலால் அரசவுருப்பினராகிய வண்ணியரினர் வறுமையால் ஆசாரமும் ஒழுக்கமும் நீத்திருக்கின்றனர். வறுமையினுலும் ஆபத்தினுலும் தகுதமக்குரிய தொழில்களை விட்டு "இழிந்த தொழில் செய்தாற்று தவிர்வலர்ப்பாரெனன்று" முற்கூறிப்போந்த பிரமாணத்திற்கிணங்க வண்ணியரும் பிராமணரும் சேவல தொழில்செய்து ஒழுக்கத்தினின்று வழுவின் அவர்களைப் பிராமணரல்லரென்றும் க்ஷத்திரியரல்லரென்றும் அறிஞர் கொள்ளார். ஆதலால் வண்ணியருள் காலபேதத்தால் ஒழுக்கம் குறைந்திருப்பினும் அவர்கள் குலம் மாறுபடாது. எல்லாறு பிராமணர்களு ஆபத்காலத்தினும், வறுமையுற்ற காலத்தினும் வேறுதொழில் செய்யினும் அவர்கள் பிராமணரே யாதல்போல் வண்ணியர்தமது அரசு இழந்து வறுமையால் வேறு தொழில் செய்யினும் அவர்கள் அரசவருப்பினரேயாவர்.

12012